# 1  எதிர்காலத்தை அறிவது எப்படி?



1

இன்றைய சம்பவங்களை சுட்டிக்காட்டும் கடந்தகால சொப்பனம்.


2

ஒரு மறதி எண்ணம் கொண்ட தத்துவமேதை ஒருவர், தன்னை முழுமையாய் அறிந்துகொள்வதில் ஆர்வம் கொண்டிருந்தார். ஒரு நாள் பிரயாணத்தில் வண்டி நடத்துனர் அவரிடம் சென்று, பயணச் சீட்டை கேட்டார். அந்த தத்துவமேதை. தன் ஆடையின் பையில் தேடியும், கண்டபிடிக்க முடியவில்லை. திரும்ப திரும்ப ஆராய்ந்தார். உடனே வண்டி நடத்துனர் அவரிடம் அன்புடன், ஐயா, அதை பொருட்படுத்தாமல் நீங்கள் எப்போது கண்டு பிடிக்கிறீர்களோ அப்போது எங்கள் கம்பெனிக்கு தபாலில் அனுப்பி வையுங்கள். நிச்சயம் அது உங்களிடம் இருக்கிறது என்பதை அறிகிறேன் என்றார் அந்த தத்துவமேதை, திகில் அடைந்தவராய் நீ புரியமலிருக்கிறாய், அதை நான் இப்போது கண்டு பிடிக்க வேண்டும், என் என்றால் அதை வைத்துதான் நான் எங்கே பயணம் செய்து கொண்டிருக்கிறேன் என்பதை அறிய வேண்டும் என்றார். லட்சோப லட்ச மக்கள் உலக முழுவதும் இன்று கேட்பது, உலகத்தில் நாம் எங்கெ போய் கொண்டு இருக்கிறாய். எதிர்காலம் புரியாத ஒன்றாய் தோன்றுகிறது என்று குழம்பிக்கொண்டிருக்கிறது என்று ஆச்சரியப்படுகிறார்கள். 2500 ஆண்டுகளுக்கு முன் உலக சரித்திரத்தைக் குறித்து விளக்கவுரையாக ராஜாவுக்கு சொப்பனத்தில் கொடுக்கப்பட்டது.



3

(வீடியோ 10 வினாடிகள்)
ஒவ்வொரு இரவும் பல முறைகள் நமக்கு சொப்பனங்கள் வரும் என விஞ்ஞானிகள் சொல்கின்றனர். ஆனால் நம்முடைய எல்லா சொப்பனங்களையும் நாம் நினைவிற்கொள்வதில்லை.


4

மிகவும் குறிப்பிடதக்க சொப்பணம் - எழுதப்பட்ட இச்சரித்திரம் பாபிலோன்எனும் ராஜ்யத்தில், அதுவும் 2600 ஆண்டுகளுக்கு முன் நடந்தவை.

# 1 எதிர்காலத்தை அறிவது எப்படி?



5

வேதாகமத்தில் தானியேல் என்கிற புத்தகத்தில் 2ம் அதிகாரம் ஒரு கதை சொல்லுகிறது.

வல்லமையான ஒரு ராஜா நேபுகாத்நேசர் என்பவர் ஒரு சொப்பனம் கண்டார். அதை திரும்ப அவரால் நினைவுகொள்ள முடியவில்லை.


அது ஒரு சாதாரண கனவு அல்ல. அது ஆச்சரியமானது. மறக்கப்பட்ட கனவிற்கு (சொப்பனம்) ஒரு முடிவான முக்கியமான விளக்கம் அறிய வாஞ்சித்தான்.


6

உலக சரித்திரத்தின் குறிப்பை சொப்பனத்தின் மூலம் தேவன் அவனுக்கு கொடுத்தார். நேபுகாத்நேசர் எனும் ராஜாவின் நாட்களிலிருந்து இந்த உலகத்தின் முடிவு வரைக்கும் உள்ளவர்களுக்கு (குறிப்பாக ஐரோப்பாவும். மத்திய கிழக்கு பகுதிகள்) இக்குறிப்பு கொடுக்கப்பட்டது.


7

எதிர்கால சம்பவத்தை நம்மோடு கொண்ட தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.
அறியப்பட்ட நாகரிக உலக ராஜ்யங்களில் மிகவும் உயர்ந்த, பெரிய ராஜ்யம் அதுவும் முதன்மையான ராஜ்யம் பாபிலோன் ராஜ்யம். - அது மிகவும் வல்லமையான ராஜாவை உடைய ராஜ்யம். - தேசங்களின் ராணி என இந்த ராஜ்யம் நிலைநிற்கும் வரை அதன் தலைவர்களான மனிதர்கள் தனித்து. விசையோடு தற்காத்து தனது எல்லா எதிரிகளையும் ஒவ்வொருவராக தாழ்த்தி போட்டனர்.


8

நேபுகாத்நேசர் - ராஜா தன்னுடைய 2ம் ஆண்டு ஆட்சியின்போது, தன் ராஜ்யம் இன்னும் எவ்வளவு நாட்கள் நிலைக்கும் என ஆச்சரியப்படலானான். தங்கள் எதிர்காலத்தை அறிய ஆசைப்பட்ட மற்ற ஆட்சியாளர்களைப்போல் இவனும், எதிர்காலத்தை அறிய ஆசித்தான்.

அன்றைய இரவு, தேவன் பரலோகனத்திலிருந்து கீழே உற்று நோக்கினார். இந்த சுய அதிகாரமுள்ள மனிதன் தன் எதிர்காலத்தை பார்க்க, கடவுள் தமது தயையினால் இவனை தெரிந்துக் கொண்டார்.

# 1 □ எதிர்காலத்தை அறிவது எப்படி?



9

ராஜா தன்னுடைய உறக்கத்திலிருந்து எழும்பி கலங்கினான். அவன் கண்ட சொப்பனம் ஒரு முக்கியத்துவம் நிறைந்த அனுபவமாக கண்டான். ஆனால் அதை அவனால் திரும்ப எண்ணிபார்க்க முடியாததாக இருந்தது. சொப்பனத்தின் மேல் பாபிலோனியர்கள் அதிக முக்கியத்துவமும், இடமும் கொடுத்தனர். அந்த ராஜா அதை அறியவும், அதன் விளக்கம் என்ன என்பதை அறியவும் ஆசித்தான்.



10

அந்த ராஜாவுக்கு சாஸ்திரிகளும், ஜோசியர்களும், சூனியக்காரர்களும், கல்தேயர்களும் இருந்தார்கள்.

இவைகள் எல்லாம் என்ன என்று ராஜாவுக்கு இவர்களால் சொல்ல முடியும் என்று எண்ணினபடியால் மிகவும் துரிதமாக ராஜ சமூகத்தில் அழைக்கப்பட்டார்கள். அப்படி அவர்கள் வந்து, ராஜாவுக்கு முன் நின்றபோது அவர்களைப் பார்த்து ராஜா சொன்னது:




11


(வசனம்: தானியேல் 2:3)

...ஒரு சொப்பனம் கண்டேன். அந்தச் சொப்பனத்தை அறிய வேண்டுமென்று என் ஆவி கலங்கியிருக்கிறது. தானியேல் 2:3.



12

எதிர்காலத்தில் நடப்பதை முன்சொல்லத் தெரியும் என பாவானை காட்டுபவராக அந்த மனிதர்கள் இருந்தனர். -சொப்பனத்தின் உண்மை அர்த்தம் சொல்ல தெரியாமல் தாங்களாக யூகித்து விளக்கம் சொல்ல முயற்சித்தனர். யூகித்து விளக்கம் சொல்ல முயற்சித்தனர். நேரத்தை கழித்தனர். கடைசியாக அவர்கள் சொன்னது.




13

(வசனம் : தானியேல் 2:4)

.... ராஜாவே நீர் என்றும் வாழ்க, சொப்பனத்தை உமது அடியாருக்குச் சொல்லும், அப்பொழுது அதின் அர்த்தத்தை விடுவிப்போம்.

பெருமை நிறைந்த மன்னன் - அவர்களின் சுய எண்ணத்தையும் அவர்களின் காலதாமதத்தையும் அறிந்து கோபம் கொண்டான். ராஜா சொன்னான்.

# 1 எதிர்காலத்தை அறிவது எப்படி?



14

(வசனம்: தானியேல் 2:5, 6)
ராஜா, கல்தேயருக்கு பிரதியுத்தரமாக
என்னிடத்திலிருந்து பிறக்கிற தீர்மானம் உறுதியானது:



15

நீங்கள் சொப்பனத்தையும், அதின் அர்த்தத்தையும்
எனக்கு அறிவிக்காமற் போனால் துண்டித்துப்
போடப்படுவீர்கள்.



16

உங்கள் வீடுகள் எருக்களங்களாக்கப்படும்.



17

சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும்
தெரிவித்தீர்களேயாகில், என்னிடத்தில்
வெகுமதிகளையும்,



18

பரிசுகளையும் மிகுந்த கனத்தையும் பெறுவீர்கள்,
ஆகையால் சொப்பனத்தையும் அதன் அர்தத்தையும்
எனக்குத் தெரிவியுங்கள். வசனம் 4-6.


19


மீண்டும் அவர்கள், ராஜாவிடம் - சொப்பனத்தின்
அர்த்தம் சொல்ல கடினப்பட்டார்கள்.
அவர்கள் ஏமாற்றுக்காரர்கள் என ராஜா
அறிந்துகொண்டார்.
மீண்டும் அவர்களை பயமுறுத்தினான், கடைசியாக
அவர்கள் தங்களின் அறியாமையையும்
இயலாமையையும் வெளிப்படுத்தினர்.



20

(வசனம்: தானியேல் 2:10, 11.)
கல்தேயர் ராஜ சமுகத்தில் பிரதியுத்ரமாக: ராஜா
கேட்கும் காரியத்தை அறிவிக்கத்தக்க மனுஷன் பூமியில்
ஒருவனும் இல்லை.

# 1 ▯ எதிர்காலத்தை அறிவது எப்படி?



21

ஆகையால் மகத்துவமும் வல்லமையுமான எந்த ராஜாவும் இப்படிப்பட்ட காரியத்தை ஒரு சாஸ்திரியினிடத்திலாவது, ஜோசியனிடத்திலாவது கல்தேயனிடத்திலாவது கேட்டதில்லை.




22

மாம்சமாயிருக்கிறவர்களோடே வாசம் பண்ணாத தேவர்களேயொழிய ராஜ சமூகத்தில் அதை அறிவிக்கத்தக்கவர் ஒருவருமில்லை.
தானியேல் 2:10, 11.



23

வேதாகமம் சொல்லுகிறது. ராஜா உக்கிரங்கொண்டு, எல்லா ஞானிகளையும் கொலை செய்யும்படி கட்டளையிட்டான்.


24

ராஜா தனது சொப்பனத்திற்கான விளக்கத்தை ஞானிகளிடம் கேட்டபோது, தானியேலும், அவனுடைய மூன்று எபிரெய நண்பர்களும் அந்த கல்தேய ஞானிகளோடே இல்லை. ராஜாவின் தலையாரிகள் தானியேலை கொலை செய்ய வந்தபோது, அவன் அதிசயத்து, தனக்கு நேரத்தை அனுமதிக்கவும், சொப்பனத்தின் விளக்கத்தை ராஜாவுக்கு அறிவிக்க, தேவ ஆலோசனையும் ஞானிகளோடே இல்லை. ராஜாவின் தலையாரிகள் தானியேலை கொலை செய்ய வந்த போது, அவன் அதிசயத்து, தனக்கு நேரத்தை அனுமதிக்கவும், சொப்பனத்தின் விளக்கத்தை ராஜாவுக்கு அறிவிக்க, தேவ ஆலோசனையும் ஞானத்தையும் கேட்க தவணை கொடுக்க விண்ணப்பம் பண்ணினான்.


25

ராஜா, தனிப்பட்ட முறையில் தானியேல் என்னும் வாலிபனுக்கு மதிப்பு கொடுத்து சிருஷ்டிப்பின் தேவனிடம் பேச காலத்தை அனுமதித்தான்.
தானியேலின் தோளின்மேல் பொறுப்பான ஒரு காரியம் இருந்தத.
தன் வாழ்வு மட்டுமல்லாது, நண்பர்களின் வாழ்க்கையும், மூன்று எபிரெய நண்பர்களின் வாழ்க்கையும் காப்பாற்றும் பொறுப்பு தானியேலை சார்ந்ததாக இருந்தது.
தானியேல் தன் இல்லம் சென்று சூழ்நிலையை தன் நண்பர்களிடம் கூறினான்.

# 1  எதிர்காலத்தை அறிவது எப்படி?


26

அவர்கள் எல்லோரும், பாபிலோனின் மற்ற ஞானிகளோடு கூட அழியாதபடிக்கு மறை பொருளை உணர்த்தும்படி, பரலோகத்தின் தேவனை நோக்கி இரக்கம் கேட்டார்கள்.
அது எப்படிப்பட்ட ஜெப கூட்டமாக இருந்திருக்கும்? மரண சாசனத்தின் முன்பாக இருக்கும் நான்கு எபிரெய நண்பர்களும் சொப்பனத்திற்கான மறைபொருளை, அந்நிய ராஜாவுக்கு உணர்த்துவதற்காக தேவனிடம் மன்றாடினார்கள். (வசனம் 16-18)


27

வேதாகமம் சொல்லுகிறது. இராக்காலத்தில் தரிசனத்திலே தானியேலுக்கு மறைப்பொருள் வெளிப்படுத்தப்பட்டது.
பரலோகத்தின் தேவன், அவர்களின் ஜெபத்தை கேட்டார்.
பரலோகத்தின் தேவனால் தானியேல் ஆசீர்வதிக்கப்பட்டு சொன்னது.



28

(வசனம்: தானியேல் 2:23)
என் பிதாக்களின் தேவனே, நீர் எனக்க ஞானமும் வல்லமையும் கெடுத்தீர். உம்மை துதித்துப் புகழ்கிறேன்.



29

உம்மிடத்தில் வேண்டிக் கொண்டதை இப்பொழுது எனக்கு அறிவித்து ராஜாவின் காரியத்தை எங்களுக்க தெரிவித்தீர். வசனம் 23.

தானியேலுக்கும் அவருடைய மூன்று எபிரெய நண்பர்களுக்கும் எப்படிப்பட்ட மன எழுச்சி-இருந்திருக்கும் என நினைக்கிறீர்கள் நண்பர்களே!

வேதாகமம் கூறுகிறது, கொலை செய்ய கட்டளையிடப்பட்ட ஆரியோகினிடத்தில் தானியேல் ஓடிப்போய்.



30

(வசனம்: தானியேல் 2:24).
பின்பு தானியேல் பாபிலோனின் ஞானிகளை அழிக்க ராஜா கட்டளையிட்ட ஆரியோகினிடத்தில் போய் - சொன்னது.




31

பாபிலோனின் ஞானிகளை அழிக்காதேயும், என்னை ராஜாவின் முன்பாக அழைத்துக் கொண்டு போம், ராஜாவுக்கு அர்த்தத்தை தெரிவிப்பேன்.
தானியேல் 2:24. என்.ஐ.வி



32

தானியேல் ராஜாவின் முன்பாக வந்தார், நேபுகாத்நேசார், தானியேலிடமி நான் கண்ட சொப்பனத்தையும், அதன் அர்த்தத்தையும் நீ எனக்கு அறிவிக்க கூடுமோ? ராஜாவுக்கு தானியேல் எப்படி பதிலை கொடத்தார் என்பதை பார்ப்போம்.



33

(வசனம்: தானியேல் 2:27, 28)
ராஜா கேட்கிற மறைபொருளை ராஜாவுக்கத் தெரிவிக்க ஞானிகளாலும், ஜோசியராலும், சாஸ்திரிகளாலும், குறி சொல்லுகிறவர்களாலும் கூடாது.



34

மறைபொருள்களை வெளிப்படுத்துகிற பரலோகத்திலிருக்கிற தேவன் கடைசி நாட்களில் சம்பவிப்பதை ராஜாவாகிய நேபுகாத்நேசாருக்குத் தெரிவித்திருக்கிறார்...
வசனங்கள்: 27, 28. ராஜா கேட்கிற மறைபொருளை ராஜாவுக்கத் தெரிவிக்க ஞானிகளாலும், ஜோசியராலும், சாஸ்திரிகளாலும், குறி சொல்லுகிறவர்களாலும் கூடாது.



35

இப்படிப்பட்ட அறிவிற்கு, தானியேல் தனக்கென்று மதிப்பை எடுத்துக்கொள்ளவில்லை என்பதை பார்க்கிறோம்.
தேவன் மாத்திரம் எதிர்காலத்தை பற்றிய மறைபொருளை வெளிப்படுத்த முடியம் என்பதை தானியேல் அறிந்திருந்தார்.



36

(வசனம்: ஏசாயா 46:9, 10)
சந்தேகத்திற்கு இடமில்லை. அவர் ஏசாயா 46ம் அதிகாரம் 9, 10 வசனங்களை படித்திருக்கிறார்.
... நானே தேவன், வேறொருவரும் இல்லை, நானே தேவன் எனக்குச் சமானமில்லை.



37

அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற் கொண்டும் இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகால முதற்கொண்டும் அறிவிக்கிறேன்.

1 எதிர்காலத்தை அறிவது எப்படி?

# 1  எதிர்காலத்தை அறிவது எப்படி?



38

இந்த ஞானம் தேவனால் வந்தது. இச்சூழ்நிலையை, 2,600 ஆண்டுகளுக்கு முன் இருந்த நேபுகாத்நேசார் இராஜா, மற்றும் நமக்கும் உலக சரித்திரத்தில் குறிப்புடன் காட்டுகிறார்.
முதலாவதாக, ராஜா கண்ட சொப்பனத்தின் பின்னணியை தானியேல் இங்கு கொடுக்கிறார்.




39

(வசனம்: தானியேல் 2:29).
ராஜாவே, உம்முடைய படுக்கையின் மேல் நீர் படுத்திருக்கையில், இனிமேல் சம்பவிக்கப் போகிறதென்ன என்கிற நினைவுகள் உமக்குள் எழும்பிற்று.





40

அப்பொழுதே மறைபொருள்களை வெளிப்படுத்துகிறவர் சம்பவிக்கப் போகிறதை உமக்குத் தெரிவித்தார்.
(இனிமேல் வரும் நாட்களில்)
தானியேல் 2:29.




41

(வசனம் தானியேல் 2:31)
அடுத்ததாக, தானியேல் சொப்பனத்தை சொல்லுகிறார்.
ராஜாவே, நிர் ஒரு பெரிய சிலையைக் கண்டீர்.




42

அந்தப் பெரிய சிலை மிகுந்த பிரகாசமுள்ளதாயிருந்தது. அது உமக்கு எதிரே நின்றது. அதின் ரூபம் பயங்கரமாயிருந்தது. வசனம் 31.




43

(வீடியோ 9 நொடிகள்)
ராஜா எழுச்சியோடு சொல்லுவதை உங்களால் கேட்க முடிகிறதா? ஆம். ஆம் அப்படிதான். எல்லாவற்றிற்கும் மேலாக உயர் கோபுரத்தைவிட உயர்வான சிலை. தானியேல் விளக்கின சொப்பனம், சந்தேகத்திற்கு இடமின்றி நேபுகாத்நேசார் கண்ட அதே சொப்பனமாகதான் இருந்தது.




44

(வசனம் தானியேல் 2:32, 33)
தொடர்ந்து தானியேல்,
அந்தச் சிலையின் தலை பசும் பொன்னும், அதின் மார்பும் அதின் புயங்களும் வெள்ளியும், அதின் வயிறும் அதின் தொடையும் வெண்கலமும்.

# 1 □ எதிர்காலத்தை அறிவது எப்படி?



45

அதின் கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் பாதி இரும்பும் பாதி களிமண்ணுமாயிருந்தது?




46

(வீடியோ 14 வினாடிகள்)
தான் கண்ட சொப்பனத்தின்... உண்மையான அந்த சிலையின் பகுதிகளை தானியேல் விளக்கும்போது நேபுகாதநேசார் கவனித்து ஆச்சரியப்பட்டார்.
தலை வெளிச்சமாக பிரகாசிக்கிற பொன்னாக இருந்தது.
அந்த புயமும், மார்பும் துலக்கப்பட்ட வெள்ளி போன்றிருக்கிறது.
வயிறும், தொடையும் வெண்கலம் போன்றிருக்கிறது.
கால்கள் இரும்பும், அதின் பாதங்கள் இரும்பும் பாதி களிமண்ணும் கலந்திருந்தன.



47

(வசனம் தானியேல் 2:34, 25)
நீர் பார்த்துக் கொண்டிருக்கும் போதே, கையால் பெயர்க்கப்படாத ஒரு கல் பெயர்ந்து வந்தது.




48

அது அந்தச் சிலையை இரும்பும் களிமண்ணுமாகிய அதின் பாதங்களில் மோதி, அவைகளை நொறுக்கிப்போட்டது.



49

அப்பொழுது, அந்த இரும்பும் களிமண்ணும் வெண்கலமும் வெள்ளியும் பொன்னும் ஏகமாய் நொறுங்குண்டு,



50

கோடை காலத்தில் போரடிக்கிற களத்திலிருந்து பறந்து போகிற பதரைப் போலாயிற்று, அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துக் கொண்ட போயிற்று.

# 1  எதிர்காலத்தை அறிவது எப்படி?



51

(வீடியோ 9 வினாடிகள்) ராஜா பார்த்துக் கொண்டிருந்தபோது ஒரு கல் வேகமாய் உருண்டு வந்து, வேறெங்கும் மோதாது, காலின் அடிபாகத்தை மோதியது.
அவைகளுக்கு ஒரு இடமும் கிடையாதபடி காற்று அவைகளை அடித்துகொண்டு போகும் அளவுக்கு அச்சிலை நொறுங்கியது.



52

(வசனம் தானியேல் 2:35)
சிலையை மோதின கல்லோவென்றால், ஒரு பெரிய பர்வதமாகி பூமியெல்லாம் நிரப்பிற்று?
தானியேல் 2:29, 35.



53

(வீடியோ 8 வினாடிகள்).
ஆம், கையால் பெயர்க்கப்படாத கல்லோவென்றால், அந்த சிலையை நொறுக்கி, ஒரு பெரிய பர்வதமாகி பூமியெல்லாம் நிரப்பிற்று.
அந்த முழு விளக்கங்களும், ராஜாவினால் கண்ட சொப்பனமாக இருந்தது.
தன்னால் கண்ட அந்த சொப்பனத்தின் ஒவ்வொரு பகுதியும் எப்படி தெளிவாக இந்த இளம் வாலிபனால், சொல்ல முடிந்தது என ராஜாவாகிய நேபுகாத்நேசார் ஆச்சரியப்பட்டார்.
ராஜாவுக்கு சொல்லப்பட்டவைகள், தானியேலுக்கு எந்த மனிதனாலும் வெளியாக்கப்பட்டவைகள் அல்ல, பிறர் கண்ட சொப்பனத்தை, வேறு எந்த மனிதனாலும் சொல்ல முடியாது, ஒரு காரியம் முற்றிலும் உண்மை. இது தெய்வீகத்தின் மூலாதாரமாகவே வந்தவைகள்.


54

ராஜாவுக்கு ஆச்சரியமாயிற்று, இந்த சொப்பனத்தை வைத்த அவன் என்ன செய்ய முடியும். நமக்கும் இப்படிப்பட்ட எண்ணம் ஏற்படலாம். நேபுகாத்நேசாரின் சொப்பனம், பூமியிலுள்ள எல்லா தேசங்களுக்கும், எழும்பி, விழுந்து போகும் எனும் முக்கிய கருத்துடையதான முன்னுரைக்கப்பட்ட ஒன்றாகும்.


55

ராஜாவுக்கு ஆச்சரியமாயிற்று, இந்த சொப்பனத்தை வைத்த அவன் என்ன செய்ய முடியும். நமக்கும் இப்படிப்பட்ட எண்ணம் ஏற்படலாம். நேபுகாத்நேசாரின் சொப்பனம், பூமியிலுள்ள எல்லா தேசங்களுக்கும், எழும்பி, விழுந்து போகும் எனும் முக்கிய கருத்துடையதான முன்னுரைக்கப்பட்ட ஒன்றாகும்.



56

கிறிஸ்துவுக்கு 600 ஆண்டுகளுக்க முன்னான சரித்திரத்தின் முக்கியமான காரியங்களே, தேவன் ஒருசில வார்த்தைகளில் விவரிக்கிறார். கடைசியாக தானியேல் சொப்பனத்தின் முக்கிய பகுதியை விவரிக்கிளார்



57

(வசனம் - தானியேல் 2:38)
ராஜாவை நோக்கியபடியே, தானியேல் சொன்னது: பொன்னான அந்த தலை நீரே வசனம் 38.
தூய்மையான பொன்னகரியான தேசம் அது தான் தலைமையிலான பாபிலோன் தேசம்.
இந்த வார்த்தைகளை கேட்ட ராஜாவின் முகத்தில் திருப்திகரமான முகமலர்ச்சி ஒன்று கடந்துபோனது.


58

இராணுவ முற்றுகைகளிலும், சிற்ப சாஸ்திரத்திலும் எவரும் பாபிலோனை முந்த முடியாது.
பாபிலோன் ராஜ்யம் பொன்னான தலை எனும் அடையாள தோற்றத்திற்கு பொருத்தாமனது என்று சரித்திர நிபுணர்களும் உறுதி கூறுகின்றனர்.


59

பழமை வாய்ந்த எளிய பட்டணத்தினை குறித்து சரித்திர ஆசான் விவரிப்பதை பாருங்கள்: பாபிலோன் ராஜ்யதின் கட்டிடங்கள் அளவிற்கு மிஞ்சின தங்கம் பயன்படுத்தப்பட்டவைகள் என ஒப்பனையாக கூறப்படுகிறது.



60

கிழக்கு பகுதியில் அமைந்துள்ள தோட்டம் பூரணமான சதுர அமைப்புக் கொண்டு சுற்றிலும் குழிகளும். அகழிகளும் கொண்டதாகவும் இருந்தது.

1 □ எதிர்காலத்தை அறிவது எப்படி?


61

இரண்டு ராஜமாளிகைகளும்... ஒன்றுக்கு மேல் ஒன்றாக எழுப்பப்பட்ட கட்டிடத்தின் மேல் தொங்கும் தோட்டங்களும், கதவுகள் அனைத்தும் வெண்கலத்தால் ஆனதுமாக இருந்தது.


62


மேன்மையும், நிகரற்ற கெம்பீரமும் கொண்ட ராணியான அவள் பாதத்தை முழு உலகமும் பணிந்து இருக்கும்.


63


பொன்னான தலை என்று வர்ணிக்கப்பட்ட இராஜ்யம் தகுதியான தலைமையும், உயர்ந்து நிற்கும் பட்டணமாகும் உரியாஸ்மித். தானியேல் வெளிப்படுத்தின விசேஷம் தீர்க்கதரிசனங்கள். பக்கங்கள் 33, 34.


64

நம்ப முடியாத பாபிலோனின் தொங்கும் தோட்டங்கள், பண்டைய நாகரிக உலகின் ஏழு அதிசயங்களில் ஒன்றாகும்.


65

பாபிலோனில் தன் பெயரை காட்டவும் அரசியலில் அறிவு படைத்தவர் என்பதை காட்டவும் நினைத்திருந்தால், சொப்பனத்தின் விளக்கத்தை சொல்லாமல் நிறுத்தி இருப்பார். ஆனால் தானியேல் வைத்திருந்த சத்திய செய்தி உலகத்திற்கு தேவனால் வெளிப்படுத்தப்பட்டது. அச்செய்தி அவனுடைய காலத்திற்கு மட்டுமல்ல, உலக சரித்திரத்தின் முடிவில் உள்ள எல்லோருக்கும் பொருத்தமானதாக இருக்கிறது.


66

(வசனம் - தானியேல் 2:39)
தானியேல் மிக தாழ்மையோடும், தைரியத்தோடும் ராஜாவுக்கு தெரிவித்துக் காட்டினார்.
உமக்குப் பிறகு உமக்குக் கீழ்த்தரமான வேறொரு ராஜ்யம் தோன்றும். தானியேல் 2:39


67

தானியேலிடமிருந்து கேட்ட வார்த்தைகளினால் ராஜாவின் திருப்தியான சிரித்த உணர்வுகள் சீக்கிரத்தில் துவண்டு போயின.
உலகத்தை ஆட்சி செய்ய எந்த தேசத்திற்கும் விட்டுக் கொடுக்க எண்ணமில்லாத பெருமை வாய்ந்த ராஜ்யமாக பாபிலோன் இருந்தது.



68

நேபுகாத்நேசாரை பற்றி, தொல்பொருள் ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்த கல்வெட்டுகளில் எழுதப்பட்டவைகள்.



69

என் ஆளுகையை என்றென்றைக்கும் நிலைத்து நிற்க கூடியதாய் பெருகச் செய்து, உறுதிப்படுத்தி பாபிலோன் மற்றும் இஸ்கிலாவையும் பலப்படுத்துவேன் (அ) பாதுகாப்பு செய்வேன்.



70

(வசனம் - தானியேல் 4:30)
வேதாகமம் கூறுகிறது பெருமை நிறைந்த நேபுகாத்நேசார் பேசி, சொன்னது: இது மகா பாபிலோன் அல்லவா.



71

இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால், என் மகிமைப் பிரதாபத்துக்கென்று, ராஜ்யத்துக்கு அரண்மனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா? தானியேல் 4:30.
பொன்னான இராஜ்யமான பாபிலோனுக்கு பின்பு வேறொரு ராஜ்யம் தோன்றும்.
இப்படி நடப்பவைகளை தானியேல் பார்த்து கொண்டிருந்தார்.



72

(வீடியோ 13 வினாடி) நேபுகாத்நேசரின் பேரனும், கர்வமும், பெருமையும் கொண்ட பெல்ஷாத்சாரின் ஆளுகையின்போது கோரேஸ், மேதிய நாட்டு மன்னன் பாபிலோனின் மீது முற்றுகையிட்டான்.



73

கி.மு.539 அக்டோபர் 13ல், பொன்னகரியான ராஜ்யம் பாபிலோன் தன் மகிமையை இழந்து முடிவுக்கு வந்தது.

1  எதிர்காலத்தை அறிவது எப்படி?




74

அப்பட்டணம் எப்படி? யாரால்? எடுத்துக் கொள்ளப்படும் என்று தீர்க்கதரிசனத்தின் மூலம் தேவன் எப்படி உரைத்துள்ளார் என்பதை பாருங்கள். பாபிலோன் விழுகைக்கு கிட்டத்தட்ட 200 ஆண்டுகளுக்கு முன் சொல்லப்பட்டபடி நடந்தது.




75

(வசனம் - ஏசாயா 45:1)
தேவன், ஏசாயா தீர்க்கதரிசியின் மூலம் சொன்னது: கர்த்தராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேஸ், அவன் வலது கையை பிடித்து அவனுக்கு முன்னாக தோற்கடிக்கப்பட்ட ராஜ்யத்தை வைத்தார்.




76

ராஜாக்களின் இடைக்கட்டுகளை அவிழ்க்கும்படிக்கும், அவனுக்கு முன்பாக வாசல்கள் பூட்டப்படாதிருக்கவும் செய்தார்.
ஏசாயா 45:1.




77

கோரேஸ் - அவன் பிறப்பதற்கு சுமார் 150 வருஷங்களுக்கு முன், கோரேஸ் எனும் மேதியனால் இப்படி நடக்கும் என தேவன் முன்னமே சொல்லி வைத்திருந்தார்.




78

(வீடியோ 8 வினாடி) கோரேஸினால் உடைக்கப்பட முடியாத உயர்ந்த கடினமான, தடிப்பான மதில்கள் அவைகள். எனவே வேறு வழியை தேடினான்.
- பட்டணத்தின் வழியை தன்னுடைய இராணுவம் கண்டுபிடித்து போகும் வரை, பட்டணத்தின் மையத்தின் செல்லும் திசை திருப்பினான். அதன் மூலம் ஆற்றுப்படுக்கையின் வழியாக அவன் இராணுவம் செல்ல வழி உண்டானது.
- சிலரின் தவறான, ராஜ அஜாக்கிரதையால் மிகவும் உறுதியான வெண்கல உட்கதவுகள் பாதுகாக்கப் படாதபடியாய் திறக்கப்பட்ட நிலையாய் இருந்தது.



79

எருசலேம் நகரை முற்றுகையிட்டு, ராஜா நேபுகாத்நேசரால் கைப்பற்றி வந்த பொற்றபாத்திரங்களில் ராஜாவும், உயர் அதிகாரிகளும் திராட்சை இரசம் குடித்த பின் மதியிழந்த நிலையில், கோரேஸின் போர் வீரர்கள் பட்டணத்திற்குள் நுழைந்து ராஜாவையும், அவன் உயர்குல மக்களையும் கொன்றனர்.


80

தானியேல் முன்னுரைத்தப்படி, பாபிலோன் என்னும் பொன்னகரி - ராஜ்யத்திற்கு பின் வேறொரு கீழ்த்தரமான ராஜ்யம் எழும்பும். அதனை வெளிக்காட்ட அதன் புயமும் மார்பும் வெள்ளியானது என குறிக்கப்பட்டது.



81

மகிமையான பாபிலோன் ராஜ்யத்திற்கு பின் எழும்பும் கீழ்த்தரமான ராஜ்யமான மேதியாவும், பெர்சியாவும் இணைந்த அரசாங்கமாகும்.
ஆனல் அது மத்திய கிழக்கு பகுதியை 2 நூற்றாண்டுகள் ஆட்சி செய்தது.
தானியேல் அந்த ராஜ்யத்தின் (வெள்ளி) காலத்தின் வரையறையையும் முன்னுரைத்தார்.



82

(வசனம் - தானியேல் 2:39)
.... பின்பு பூமியெல்லாம் ஆண்டுக்கொள்ளும் வெண்கலமான மூன்றாம் ராஜ்யம் ஒன்று எழும்பும்.
தானியேல் 2:39 என்.ஐ.வி.
இது நடந்ததா? ஆம் நடந்தது.


83

முன்னுரைக்கப்பட்ட உலோக சிலை, வயிறும் தொடையும் வெண்கலமானது, நிறைவேற்றமானது எப்பொழுது என்றால், இளம் தலைவனான மகா அலெக்சாண்டர் என்பவரால் மூன்றாம் தரியு என்ற பெர்சியா மன்னனை அர்பெலா யுத்தத்தில் கி.மு.331ம் ஆண்டு தோற்கடித்தார், மூன்றாம் உலக ராஜ்யமான கிரேக்கம் வந்தது.


84

உலகம் அறிந்துகொள்ளும் வண்ணம் பரந்த சாம்ராஜ்யங்களில் மிக முக்கியமான ஆளுகை செய்த இளம் அலெக்சாண்டா தன் 25 வயதில் ஆளுகை செய்தான்.



85

கிரேக்க சரித்திரக்காரர் ஏரியன் அலெக்சாண்டர் பற்றி சொன்னது: இவரின் பெயர் போய் சேராத மக்களோ, பட்டணமோ, தேசமோ இல்லை என நம்புகிறேன்.

1  எதிர்காலத்தை அறிவது எப்படி?



86


இவனுடைய பிறப்பிலும் செயல்பாடுகளிலும், தெய்வீகத்தின் கரம் இருப்பதாக எனக்கு தோன்றுகிறது. -சரித்திர நூலகம், புத்தகம் 16, அதிகாரம் 12.


87

நேபுகாத்நேசாருக்கு கொடுக்கப்பட்ட சொப்பனத்தில் மூன்றாவது உலோகமான வெண்கலம் கிரேக்க காலாட்படையின் போரா யுதங்கள் வெங்கலமாக இருந்தது.


88

காய்ச்சலினால் தனது 33வது பிறந்த நாளுக்கு முன் அலெக்சாண்டர் மரித்துப் போனார்.
கடைசியாக, இவருடைய ராஜ்யமும் பெலவீனமடைந்தது.



89

ஜுன் 22, கி.பி.168-ம் ஆண்டு 144 வருஷங்கள் அலெக்சாண்டரின் மரணத்திற்கு பின் இவருடைய இராஜ்யம், பிட்னா யுத்தத்தில் முடிவுக்கு வந்தது. ரோம் சரித்திரம், புத்தகம் 3, அதிகாரம் 10.



90

பழமையான ராஜ்யங்களில் மிகவும் கொடூரமான ஒன்றாக இருந்தது.
ஒன்றுக்குப் பின் ஒன்றாக நான்கு ராஜ்யங்கள், கடவுள் முன்னுரைத்தப்படி இருப்பதை நீங்கள் நினைத்துப் பாருங்கள்.



91

நாம் பார்க்கும் உண்மை, கால்கள்-இரும்பு எனும் நான்காம் உலக ராஜ்யம் இரக்கமற்ற, அழிக்கக்கூடிய வல்லமை யுடைதாய் இருந்தது.



92

(வசனம் - தானியேல் 2:40)
நான்காவது ராஜ்யம் இரும்பைப் போல உராமாயிருக்கும். (தானியேல் 2:40)


93

இம்மன்னர்கள் தன்னிச்சையாக ஆட்சி செய்யது இவன் தங்களை கடவுள்கள் என்றும், கீழ்ப்படிந்து ஆராதனை செய்யும்படி எல்லாரையும் கட்டாயப்படுத்தியது.
ரோம ராஜ்யம் அரசாட்சி செய்யும் நேரத்தில் இரண்டு வித பெரிய முக்கியமான சம்பவங்கள் நடந்தது.


94

1. பெத்லகேமில் இயேசுகிறிஸ்து பிறந்தார்.
பெத்லகேமில் பிறந்துள்ள 2 வயது நிறைந்த ஆண் பிள்ளைகளை கொலை செய்வதற்கான கட்டளை ரோம ஆளுநரால் போடப்பட்டது.
இயேசுவை கொலை செய்ததாக நம்பினான்.


95

2. ரோம அதிகாரத்தின் கீழ், யூதேயாவில் இயேசுகிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டது.
இயேசுவை குற்றப்படுத்த ரோம ஆளுநர் அனுமதித்தான்.
கிறிஸ்துவை சிலுவையில் அறைந்தது. ரோம சேவகர்கள் மற்றும் அவரின் கல்லறைக்கு முத்திரை வைத்து, உள்ளே அவரை பத்திரப்படுத்த நினைத்தும் ரோமர்கள்.
இப்பொழுது தீர்க்கதரிசனத்தின் வழிமுறை மாற்றப்படுகிறது.
எந்த ஒரு தனி சாம்ராஜ்யமும் ரோம ராஜ்யத்தை பின்பற்றவில்லை.



96

(வசனம் தானியேல் 2:41, 43)
நீர் இரும்பைக் களிமண்ணோட கலந்ததாகக் கண்டீரே, என தானியேல் எழுதினார்.



97

இரும்புக்கு ஒப்பிடப்பட்ட ரோம ராஜ்யம் பிரிக்கப்படும்.



98

ஆகையால் மக்கள் ஒன்றோடொன்று கலவாதிருப்பார்கள்.

# 1 எதிர்காலத்தை அறிவது எப்படி?



99

இரும்புக்கு ஒப்பிடப்பட்ட ரோம ராஜ்யம் பிரிக்கப்படும். தானியேல் 2:41,43.


100

மற்றொரு வார்த்தையில், தீர்க்கதரிசி முன்னுரைத்தது, 5ம் உலக சாமராஜ்யம் எழும்போது ஆனால் இரும்புக்கு ஒப்பிடப்பட்ட ரோம ராஜ்யம் பிரிக்கப்படும்.




101

(வீடியோ 3 வினாடிகள்) ரோம் பல ராஜ்யங்களாய் பிரிக்கப்பட்டது.


102


இரும்பும், பலமுமான ரோம ராஜ்யம் கிட்டதட்ட 600 ஆண்டுகளாய் ஆட்சி செய்து, பல பகுதிகளாக பிரிக்கப்பட்டது.


103

டான்பீகமான, அரசாங்க கெடுதிகள், அநீதி, நெறிதவறிய காரணங்களால் ரோம தனது உயர்வான, நிலையை இழந்து வலுவான பலாத்காரமாக பண்பற்ற இளமான காட்டுமிராண்டி இனத்தால் சாம்ராஜ்யமானது, கிறிஸ்துவுக்கு பின் 351-476 வரை தாக்கப்பட்டது.


104

அகுஸ்துராயர் சக்கரவர்த்தி நீங்க, ரோம் பல பகுதிகளாக பிரிக்கப்பட்டது அது தான் பாதம், கால்விரல்கள், களிமண்ணும், இரும்பும் என பிரதிபலித்தது அந்த சிலையியல்.



105

(வசனம் - தானியேல் 2:43)
நீர் இரும்பைக் களிமண்ணோடே கலந்ததாகக் கண்டீரே, அவர்கள் மற்ற மனுஷரோட சம்பந்தங் கலப்பார்கள்.



106

ஆகிலும், இதோ, களிமண்ணோடே இரும்பு கலாவததுபோல அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொள்ளாதிருப்பார்ள். தானியேல் 2:43.
இன்று ஐரோப்பாவில் அமைந்துள்ள தேசங்கள் அடிதளமான படிவம் தான் பிரிக்கப்பட்ட பிரதிபலித்து காட்டும், இரும்பும், களிமண்ணும் என்பது.



107

(வீடியோ 6 வினாடி) பல சரித்திர நிபுணர்கள் பட்டியலிட்டுள்ள 10 பண்பற்ற இனமான நாடுகள். அவைகள் பின்வருவன.
அல்மேனி-ஜெர்மன்ஸ், பர்கண்டியன்ஸ்-ஸ்விஸ், ∴பிராக்ஸ்-பிரெஞ்ச், லம்பார்ட்ஸ்-இட்டாலி, சேக்ஸ்ன்-ஆங்கிலேயர்.



108

(வீடியோ 6 வினாடிகள்)
சுவி-போர்ச்சுக்கீஸ், விசிகாத்ஸ்-ஸ்பேனிஷ், ஹெருளி-ஆஸ்ட்ரகாத், வாண்டல்ஸ் ஆகிய மூன்றும் இப்பொழுது அணைந்த அல்லது தங்களை சுற்றியுள்ள மற்ற நாடகளோடு ஒன்றாக கலந்திருக்கின்றன.


109

இந்த ராஜ்யங்கள் தேவன் கூறிய வண்ணம் ஒரு பேரரசாக ஒரு நாளும் இனைய மாட்டார்கள்.



110

ஐரோப்பா - பிரிக்கப்பட்டவைகள் - அவர்கள் இனி ஒன்றோடு ஒன்று சேருவதில்லை.
ஐரோப்பா சந்தையும், பொதுவான செலாவணியும் கொண்டு வந்தும் அவைக்ள இன்னும் பிரிக்கப்பட்ட நிலைதான்.



111

அவர் சொல்வது, இன்னும் அவர்கள் மற்ற மனுஷரோடோ சம்பந்தங்கலப்பார்கள்.
மறுவார்த்தையில் அரச பரம்பரையில் விவாக சம்பந்த உறவு கொள்வார்கள்.


112


டென்மார்க் ராஜ மாளிகையில், அரச பரம்பரை குடும்பங்கள் - ஐரோப்பாவில் குடும்ப மரங்கள் படம் போன்று சித்திரம் தீட்டப்பட்டுள்ளது. அவர்கள் எல்லோரும் உறவுக்காரர்கள். ஏதாவது யுத்தங்கள் வந்தால் அதை தளர்த்திவிடும் நம்பிக்கை அவர்களுக்கு உண்டு.
நல்லது. ஆனால் இந்த வேலை நடைபெறாது.


113

ஒருவரோடொருவர் சேருவதில்லை. பல யுத்தங்கள் ஐரோப்பாவில் நடைபெறுவது உண்மையாகவே, குடும்பங்களில் வரும் சிறுசிறு சண்டைகள் தான். தேவன் ஏற்கனவே முன்னுரைத்துள்ளார். அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொள்ளாதிருப்பார்கள். எப்படி களிமண்ணும், இரும்பும் ஒன்றோடு ஒன்று ஒட்டாதோ, இதுவும் முடியாது. ரோம சாம்ராஜயத்தோடு திரும்ப ஒட்டிக்கொள்ள அவர்களுக்கு சிரமமாயிற்று.


114

திரும்ப ஐரோப்பாவுடன் ஒட்டிக்கொள்ள தேசங்கள் பலமுறை முயற்சித்தார்கள் என்பதை சிந்தனை செய். உலக தலைவர்கள் பிரிக்கப்பட்ட ஐரோப்பாவை இணைக்க பாடுபட்டார்களா? என்ன நடந்தது.



115

சால்மேன் தோற்கடிப்பு, ஐந்தாம் சார்லஸ் தோற்கடிப்பு, பதினாலாம் லூயிஸ் தோற்கடிப்பு, நெப்போலியன்-தோல்வி, வில்லியம் கெய்ஸர் தோல்வி, ஹிட்லர் தோல்வி.
நெப்போலியன் பிரான்ஸின் வீரமிக்க போாவீரன் 1800 ஆண்டின் முற்பகுதியில் எல்பா தீவில் நாடு கடத்தப்பட்ட நிலையில் தேவன் தன் வல்லமைக்கு மேற்பட்டவர் என உணர்ந்தால் எல்லாருக்கும் தேவன் மேலானவர்.

# 1  எதிர்காலத்தை அறிவது எப்படி?





116

கடவுள் சொன்னது: அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொள்ளாதிருப்பார்கள்.
உலக ஆளுநர்கள் எல்லாருக்கும் பொருத்தாமான வாசகம் இது.
கடவுள் சொன்னது போலவே, அவர்கள் ஒருவரோடொருவர் ஒட்டிக் கொள்ளதிருப்பார்கள்.
ஆனால் மனிதர்கள் ஐரோப்பா நாடுகளை ஒன்றாக இணைக்க முயற்சிக்கிறார்கள்.
அவர்கள் ஒன்றாக இருக்கலாம், ஆனால் ஒன்றாக ஒட்டிக்கொள்ள முடியாது.



117

(வீடியோ 12 வினாடிகள்)
இந்த தீர்க்கதரிசனத்தின் திருப்பத்தால் நேபுகாத்நேசார் குழப்பமடைந்து போனார்.
நான்கு பெரிய உலக சாம்ராஜ்யங்களின் முடிவை கடவுள் முன்னதாகவே அறிவித்துவிட்டார்.

அவர் முன்னுரைத்தபடி, ரோம் நாடுகளினால் மேற்கொள்ளப்படும். அதில் மேற்கு ஐரோப்பாவிலிருந்து ஏழு பிரதிநிதியாகும். இன்று அவைகளில் சில உறுதியாகவும், சில பெலவீனமாகவும் இருக்கிறது. ஆனாலும் எல்லாம் பிரயோஜனமற்றது நிலையில் பிரிக்கப்பட்டுள்ளன.



118

அடுத்த என்ன நிகழும்?
வெளி தோற்றத்தில் சந்தோஷமும், நம்பிக்கை யுமாக இருக்கலாம். சொப்பனத்தில் காட்டப்பட்ட சிலையின் அர்த்தத்தின்படி முடிவு சம்பவமானது பிரமிக்க செய்கிறதாய் இருந்தது. அதை தானியேல் எழுதினார்.



119

(வசனம் தானியேல் 2:44, 45)
அந்த ராஜாக்களின் நாட்களிலே பரலோகத்தின் தேவன் என்றென்றைக்கும் அழியாத ஒரு ராஜ்யத்தை எழும்பப் பண்ணுவார்.



120

அப்படியே அது அந்த ராஜ்யங்களையெல்லாம் நொறுக்கி, நிர்மூலமாக்கி, தானோ என்றென்றைக்கும் நிற்கும்.

# 1  எதிர்காலத்தை அறிவது எப்படி?



121

இதுதான் சொப்பனத்தின் அர்த்தம். மனித கைகளால் பெயர்க்கப்படாத கல் ஒன்று மலையிலிருந்து பெயர்ந்து வந்தது.



122

அந்த கல் இரும்பையும், வெண்கலத்தையும், களிமண்ணையும், வெள்ளியையும், பொன்னையும் நொறுக்கினது.



123

இனிமேல் என்ன சம்பவிக்கம் என்பதை மகாதேவன் ராஜாவுக்கு தெரிவித்திருக்கிறார். சொப்பனமானது நிச்சயம். அதன் அர்த்தம் சத்தியம் என்றான். தானியேல் 2:44, 45.


124

மனித சரித்திரத்தின் மேடையில் நிகழ இருக்கும் அடுத்த மாபெரும் நிகழ்ச்சியானது இயேசுகிறிஸ்துவின் 2ம் வருகையும் அவர் ஸ்தாபிக்க இருக்கும் அவரின் ராஜ்யமுமாகும் அதை விளக்கிக் காட்ட, கையால் பெயர்க்கப்படாத கல் தீர்க்கதரிசனம் கூறுகிறது. இந்த பூமி முழுமையும் நிரம்பி இருக்க போகும் அவருடைய ராஜ்யம் மனித கரங்களில் அல்ல, வல்லமையான தேவகரங்களில் காணலாம்.



125

(வசனம் : வெளிப்படுத்தல் 11:15)
தீர்க்கதரிசனம் நிறைவேறின பின்பு,
.... அப்பொழுது உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும், அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின. அவர் சதாகாலங்களிலும், ராஜ்யபாரம் பண்ணுவார். வெளிப்படுத்தல் 11:15.



126

தானியேலின் புத்தகத்தில் ஆச்சரியமாய் தீர்க்கதரிசனத்தில் இந்த கடைசி கால சம்பவங்கள் குறிக்கப்பட்டிருப்பதை பார்க்கலாம்.




127


இயேசுவின் இரண்டாம் வருகை.


128


இந்த உலகில் உள்ள இராஜ்ஜியங்கள் அனைத்தும் அழிந்து போகும்.


129


தேவன் தம்முடைய ராஜ்யத்தை ஸ்தாபிக்கப் போகிறார்.


130

இந்த இராஜ்யம் கடைசி வரை எப்பொழுதும் இருக்கும்.


131

கர்த்தாதி கர்த்தராக இராஜாதி இராஜாவாக இயேசு கிறிஸ்து அபிஷேகம் பண்ணப்படுவார்.


132

பூமியை ஆளுகை செய்ய அவர் வருகிறார்.


133

தானியேல் தன் உணர்ச்சி பூர்வமான தரிசனத்தை, தேவனின் ஆச்சரியப்படும்படியான விளக்கத்தோடு சொல்லி முடித்த போது, நேபுகாத்நேசர் என்ற ராஜா தன் சிம்மாசனத்தை விட்டு எழுந்தான், எழுந்து தேவனை மகிமைப்படுத்தும் வண்ணமாக, தானியேலின் முன் தாழ விழுந்து வணங்கி, தேவனின் ஞானமும், வல்லமையும் தெளிவாக விவரிக்கப்பட்டிருப்பதை அறிக்கையிட்டான்.

1  எதிர்காலத்தை அறிவது எப்படி?

# 1  எதிர்காலத்தை அறிவது எப்படி?



134

(வசனம் தானியேல் 2:47) ராஜா தானியேலை நோக்கி, நீ இந்த மறைபொருளை வெளிப்படுத்தினபடியால், மெய்யாய் உங்கள் தேவனே தேவர்களுக்குத் தேவனும், ராஜாக்களுக்கு ஆண்டவரும், மறைபொருளை வெளிப்படுத்துகிறவருமாயிருக்கிறார் என்றான். தானியேல் 2:47 தானியேலின் தேவனே என் தேவன். அவரே வருங்காலத்தை தன் கரத்தில் வைத்திருக்கிறார்.



135

கிறிஸ்துவுக்கு முன் ஆறாம் நூற்றாண்டில் நேபுகாத்நேச்சர் கண்ட சொப்பனத்தின் பெரிய சிலை மூலமாக, தேவன் வருங்காலத்தின் இரகசியத்தை வெளிப்படுத்துகின்றார்.


136

ஆம், நண்பரே, சொப்பனமானது சத்தியம், அதின் அர்த்தம் சத்தியம். நமது பிரயாணம் ஏறக்குறைய முடிந்துவிட்டது. அடுத்து நடைபெற வேண்டிய பெரிய சம்பவம் மேகங்களின் மேல் கிறிஸ்து வந்து தமது நித்திய ராஜ்யத்தை ஸ்தாபிக்க வேண்டியதே.



137

(வீடியோ 5 வினாடிகள்)
பொன், வெள்ளி, வெண்கலம், இரும்பு ஆகியவற்றால் குறிக்கப்பட்ட ராஜ்யங்கள் யாவும் நிறைவேறி சரித்திரமாகிவிட்டது. அடுத்து நடைபெற வேண்டியது நமது கர்த்தரின் வருகையே.


138

கிறிஸ்துவின் கல்வாரி இரத்தத்தால் அவர் நமக்கு அழகான எதிர்காலத்தை ஏற்படுத்தி யுள்ளார். சில காலத்திற்கு முன்னே யாவும் நிறைவேற்றமடைந்தன. தேவன் இப்பொழுது தமது இராஜ்யத்தை ஸ்தாபிக்கவிருக்கிறார். நாம் விரும்பினால் அவருடைய ராஜ்யத்தில் பங்குபெற முடி யும்.



139

(வீடியோ 7 வினாடிகள்)
நாம் அவருடைய ராஜ்யத்தில் அங்கமாக வேண்டுமானால், கல்வாரியில் தொங்கிய திருடனைப் போல விசுவாசத்துடன் அவரிடம் கிட்டிச் சேர்ந்தால் கூடும்.
உலகத்தின் மீட்பரை நோக்கிப் பார்த்தான். அவருடைய முகத்திலிருநது வழிந்தோடிய இரத்தத்தை அவன் கண்டான். அவன் உள்ளம் உடைந்தது. தனது பாவத்தை அறிக்கையிட்டு சத்தமிட்டு கூப்பிட்டான்.



140

(வசனம் லூக்கா 23:42)
ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைந்தருளும் என்றான்.
இயேசு அன்றே அவனுக்கு பரலோகில் இருப்பான் என்று வாக்குறுதி கொடுத்தார்.


141

நீயும், அவரிடம் மன்றாடி அவர் தமது ராஜ்யத்தை ஸ்தாபிக்கும்போது அவருடைய ராஜ்யத்தில் சேரும் அதே நிச்சயத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.



142

(வசனம் மத்தேயு 25:34.)
இயேசுவின் வருகையில் அவர் உதட்டிலிருந்து புறப்படும் அழைப்பை நீ கேட்பாய்.
..... வாருங்கள் என் பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே.... உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற ராஜ்யத்தை சுதந்தரித்துக்கொள்ளுங்கள். மத்தேயு 25:34.

# 1 □ எதிர்காலத்தை அறிவது எப்படி?



143

- மனிதருடைய கரங்களில் இந்த உலகம் இல்லை. - சீக்கிரமாய் இயேசு கிறிஸ்து வருகிறார். - மாபெரும் நம்பிக்கையோடு எதிர்காலத்தை நோக்கியிருக்கிறோம். இது தேவகரத்தில் இருக்கின்றது.
- கையால் பெயர்க்கப்படாத கல் சிலையை நொறுக்கியது.
- தேவன், என்றென்றைக்குமுள்ள நமது நித்திய ராஜ்யத்தை ஸ்தாபிக்க போகிறார். உலக ராஜ்யங்கள் நொறுக்கப்படபோகிறது.
- இந்த தேவன் மேல் உன் நம்பிக்கை இருக்கட்டும்.
- கர்த்தரை நம்புங்கள்.
- அவரின் கரங்களினால் பாதுகாக்கப்பட்டு இளைப்பாறு.
- இன்று அவர் உங்களை அழைக்கிறார்.
- அவரிடம் வரும்படி உங்களை அழைக்கிறார்.
- உங்கள் இருதயத்தை அவரிடம் ஒப்புவி யுங்கள்.
- நாம் ஜெபிக்கின்ற போது, அதுவும் இப்பொழுதே, என் வாழ்க்கையை சமர்ப்பிக்கின்றேன் என்றும், ஆம் கர்த்தாவே நான் முழுமையாய் உம்மை நம்புகின்றேன் என சொல்லுவாயா.



144

இந்த தேவன் மேல் உன் நம்பிக்கை இருக்கட்டும்.
கர்த்தரை நம்புங்கள்.
அவரின் கரங்களினால் பாதுகாக்கப்பட்டு இளைப்பாறு.
இன்று அவர் உங்களை அழைக்கிறார்.
அவரிடம் வரும்படி உங்களை அழைக்கிறார்.
உங்களது இருதயத்தை அவரிடம் ஒப்புவி யுஙடகள்.
நாம் ஜெபிக்கின்ற போது, அதுவும் இப்பொழுதே, என் வாழ்க்கை சமர்ப்பிக்கின்றேன் என்றும் ஆம் கர்த்தாவே நான் முழுமையாய் உம்மை நம்புகிறேன் என சொல்வாயா.

# 2 □ அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்




1

அச்சமின்றி எதிர்காலத்தை எதிர்நோக்குதல்.



2

ஒரு அழகான கோடை நாளிலே, ஒரு தகப்பனும், அவரது 9 வயது மகளும் பெருங்கடலிலே நீந்திக் கொண்டிருந்தனர்.
அவர்கள் அலைகளில் நீந்திக் கொண்டிருந்த போது, திடீரென பெரிய உத்வேகத்துடன் அலை மோதியடிக்க ஆரம்பித்தது. அது வெகுவேகமாக சிறு பெண்ணை சிறிது தூரத்திற்கு கொண்டு சென்றுவிட்டது. அவள் தகப்பன் அவளைக் கிட்டிச்சேர முடியவில்லை. அவள் கரையை அடைய வேண்டுமானால் அவருக்கு உதவி தேவை. உடனே, மகளே பயப்படுவதற்குப் பதிலாக, மிதந்து, அமைதியாக நீந்து, பயப்படாதே, நான் உன்னைப் பிடிக்க வருகிறேன் என்று உரக்கக்கூறினார். பிறகு ஒரு படகைத் தேடி வேகமாக சென்றார்.
தகப்பன் படகோடும், சில மீட்டிப் பணியாளர்களுடனும் திரும்பி வந்து பார்த்த பொழுது, அவர் இருதயம் தொய்ந்து போனது. அவருடைய மகள் அங்கே இல்லை. கடலிலே தொலைதூரத்துக்குள் அவள் இழுத்துச் செல்லப்பட்டிருந்தாள். ஆனால் கடைசியிலே அவர்கள் அவளைக் கிட்டிச் சேர்ந்த போது, சிறு பெண் தன் தகப்பன் கற்பித்தது போலவே அமைதியாக மிதந்து கொண்டிருந்தாள்.



3

இறுதியில் அவளால் எப்படிப் பெருங்கடலின் தூரத்தில் முழுவதும் தனியாக, அமைதியாக இருக்க முடிந்தது என்று கேட்கப்பட்டாள். அவள் பதில் உரைத்தாவது என் தகப்பன் என்ன செய்யச் சொன்னாரோ அதையே நான் செய்தேன். அவர் திரும்ப வருவார் என்பது எனக்குத் தெரியும். எனவே நான் பயப்படவில்லை. அந்த துணிச்சலான சிறு பெண்ணின் நம்பிக்கை அவளை உயிரோடே வைத்திருந்தது. அது தொடர்ந்து உயிரோடிருப்பதற்கும், மீட்கப்படுவதற்கும் அவளை ஊக்கப்படுத்தியது. நம்மைக் கிறிஸ்தவ விசுவாசத்தில் வைத்திருக்கின்ற மாபெரும் நம்பிக்கை என்னவென்றால், நமது பரலோகப் பிதா அழிவின் விளிம்பில் உள்ள இந்த அகிலத்தை மீட்க ஆயத்தமாக இருக்கிறார் என்ற நம்பிக்கையே ஆகும்.

# 2 அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்



4

(வீடியோ 10 வினாடிகள்)
சமீபத்தில் ஒரு புகழ்பெற்ற விஞ்ஞானி. இந்த உலகம் மற்றொரு 1000 ஆண்டுகள் நீடிக்காது என்று தன் பயத்தைத் தெரிவித்தார்.
நமது பூமியின் சுற்றுப்புறத்தில் மனிதனால் உண்டாகும் மாசுகேடு, சுற்றியுள்ள உலகின் வெப்ப நிலையை உயர்த்தும்.



5

சாவுக்கேதுவான வெப்பக்கதிர்களை பூமியில் உருவாக்கி துருவப்பகுதியின் பனித் தொப்பிகள் உருகுவதுபோலு, கண்டங்களையும் பாதிக்கும் என்று அவர் கூறுகிறார். ஆனால் உலகமானது வேறொரு வித்தியாசமான வழியில் முடிவடையும் என மற்றவர்கள் நினைக்கிறார்கள்.



6

(வீடியோ 5 வினாடிகள்)
அணுக்கதிர் போரில் நம்மை நாமே அழித்துக் கொள்வோம் என்று சிலர் சொல்கிறார்கள்.


7

மக்கள் தொகை தொடர்ந்து பெருகுவதால், நாம் உணவு மற்றும் மற்ற மூலப் பொருட்களின் பற்றாக்குறையால் குறைவுபடுவோம் என்று மற்றவர்கள் சொல்கிறார்கள்.


8

ஒரு பெரிய வால் நட்சத்திரமோ அல்லது சிறு கிரகமோ பூமியோடு மோதி அழிப்பது போல, நாம் ஒரு வேளை துடைத்தழிக்கப்படுவோம் என்று இன்னும் மற்றவர்கள் சொல்கின்றனர்.


9

என்றாவது ஒரு நாளில் அந்நியர்கள் வேறொரு கிரகத்திலிருந்து வந்து நம் எல்லாரையும் அழிப்பார்கள் என்று பலர் நினைக்கிறார்கள். நம்மில் அநேகருக்கு, உண்மையிலேயே, கவலைப்படுவதற்கு மற்ற அநேக காரியங்கள் உண்டு.


10

வாழ்வதற்கான முயற்சியிலும், மற்றவர்களோடு இசைந்து போவதிலும், வியாதியோடும், வருத்தம் மற்றும் மரணத்தோடும் நாம் போராடுகிறோம்.

# 2  அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்



11

நம்மில் அநேகருக்கு, ஏறக்குறைய எல்லாருக்குமே, வாழ்க்கை என்பது எளிதானதல்ல. சில நேரங்களில் இந்த உலகம் சீக்கிரம் முடியாதா என்று நாம் சொல்லுமளவுக்கு கடினமானதாக அது இருக்கிறது. நிச்சயமாகவே வேதனை, பசி, களைப்பு மற்றும் மன அழுத்தம் நிறைந்து காணப்பட வாழ்க்கை உருவாக்கப்படவில்லை. நமக்கு ஒரு மேன்மையான உலகம் வேண்டும்.



12

நல்லது, என் தோழனே, நற்செய்தி உண்டு. இந்த உலகம் முடிவடையப் போகிறது. மேன்மையான உலகம் ஒன்று வருகிறது.




13

ஏறக்குறைய நாம் எல்லாரும் உலகம் எப்படி, மற்றும் எப்பொழுது முடியும் என்று அறிய ஆசையுடன் உள்ளோம். இது நமது வாழ்க்கைக் காலத்தில் முடியுமா அல்லது இப்பொழுதிருந்து ஆயிரம் அல்லது பத்தாயிரம் ஆண்டுகள் ஆகுமா?



14

இது எப்படி முடியும் என்று யார் தான் சரியாக சொல்லக்கூடும்? வருவதைக் குறித்துக் குறிசொல்கிற தீர்க்கதரிசிகளுக்குக் குறைவில்லை.




15

ஆனால் தீர்க்கத்தரிசிகள் யாருடைய முன்னறிவிப்புகள் சரியாக இருக்கிறது. தீர்க்கதரிசிகள் யாருடைய தீர்க்கதரிசனங்கள் உண்மையிலேயே நடக்கிறது என்பதை கண்டுபிடிப்பதே பிரச்சனை ஆகும்.

# 2  அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்



16

(வீடியோ 15 வினாடிகள்)
ஆனால் ஒருவருடைய தீர்க்கதரிசனங்கள் எல்லாமே நடந்திருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா? இந்த உலகம் எப்படி முடியப் போகிறது. சீக்கிரத்திலே அது முடிவடையுமா அல்லது இன்னும் பல ஆயிரம் ஆண்டுகள் நீடிக்குமா என்று சொல்லக்கூடிய ஒருவர் உண்டு? இந்த உலகத்தை உருவாக்கிவரும், அதன் தொடக்கத்தில் இருந்தவரும் என அவரே அது எப்பொழுது முடியும் என்று அறிந்திருக்கிறார் என்பதை கற்றுக்கொள்வதில் எந்த ஆச்சரியமும் இருக்கக் கூடாது. நண்பர்களே, இயேசு கிறிஸ்து. சிருஷ்டியின் தேவன், தம்முடைய வார்த்தையினாலே, நம்மை எதிர்காலத்துக்குள் கொண்டு செல்ல முடியும். அவர் ஒரு நம்பத்தகுந்த வழிகாட்டி, இந்த உலகத்தைத் தொடங்கின அவரைத் தவிர வேறு யார் இந்த உலகத்தின் முடிவைப் பற்றி அதிகமாக அறிந்திருக்க முடியும்?


17

இயேசு கிறிஸ்துவின் வாழ்வில் நடந்த ஒரு ஆர்வமூட்டும் சம்பவம் குறித்து வேதம் கூறுகிறது. ஒரு நாள் சீஷர்கள் அவரை அப்புறம் அழைத்துச் சென்று ரோம சாம்ராஜ்யத்தால் அப்பொழுது கட்டப்பட்ட ஆலயத்தின் கட்டடத்தை அவருக்குக் காண்பித்தார்கள்.


18

ரோமப் பேரரசிலேயே உள்ள விலைமதிப்பிட முடியாத கட்டிடங்களில் அதுவும் ஒன்று. ஒரு அழகான காட்சித்துணுக்கு. கட்டிடத்தைப் பார்த்த பின்பு, இயேசு அதிர்ச்சியூட்டும் வாக்கியத்தைத் தன் சீஷர்களிடத்தில் கூறினார். அவர் சொன்னதாவது.



19

(வசனம் : மத்தேயு 24:2)
இவைகளையெல்லாம் பார்க்கிறீர்களே? மெய்யாகவே நான் உங்களுக்கு சொல்லுகிறேன்.



20

இவ்விடத்தில் ஒரு கல்லின் மேல் ஒரு கல்லிராதபடிக்கு எல்லாம் இடிக்கப்பட்டுப் போகும். மத்தேயு 24:2.

# 2 □ அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்


21

யூத தேசத்திலே இதுதான் மாபெரிய கட்டிடம். அது முற்றிலும் அழிக்கப்படும் என்று இயேசு முன்னுரைத்தார்.


22

சீஷர்கள் அதிர்ச்சியடைந்தனர். அவர்கள் அப்படியே ஒலிவ மலையில் ஏறின பொழுது, நாமெல்லாரும் கேட்டிருக்க வேண்டிய கேள்வியை அவர்க்ள இயேசுவிடம் கேட்டார்கள்.



23

(வசனம் மத்தேயு 24:3)
சீஷர்கள் அவரிடத்தில் தனித்து வந்து, சொன்னதாவது, எங்களுக்குச் சொல்லும், இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்?



24

உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன?
மத்தேயு 24:3.


25

நீங்கள் பாருங்கள். இந்தக் கட்டிடம் அழிக்கப்படுமானால், இதற்குக் கிறிஸ்துவின் வருகையோடும் மற்றும் உலகத்தின் முடிவோடும் தொடர்பு உண்டு என்பதாக சீஷர்கள் கருதினார்கள்.


26

ஆனால் மத்தேயுவின் புத்தகத்திலே, 24ஆம் அதிகாரத்தில், இயேசு இரண்டு வெவ்வேறான சம்பவங்கள் குறித்துப் பேசினதாக நாம் காண்கிறோம்.


27

அவைகளில் ஒன்று இயேசுவின் இரண்டாம் வருகை - கிரகமாகிய இப்பூமியில் தன் நித்திய ராஜ்யத்தை ஸ்தாபிக்க மகிமையில் இந்த பூமிக்கு அவர் திரும்புதல்.

# 2 □ அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்



28

(வீடியோ 6 வினாடிகள்) மற்றொன்று, அந்தக் காலத்தில் வாழ்கின்ற மக்களால் பார்க்கப்பட வேண்டிய காரியம். அது எருசலேம் நகரம் மற்றும் தேவாலயத்தின் அழிவே ஆகும். இப்பொழுது தேவாலயத்திற்கு என்ன ஆகப்போகிறது என்பதைத் தன் சீஷர்களிடம் சொல்ல இயேசு முன் விளைகிறார்.



29

(வசனம் மத்தேயு 24:15-16).
ஆகையால் தானியேல் கூறியிருக்கிற பாழாக்குகிற அருவருப்பை நீங்கள் காணும் போது.



30

பரிசுத்த ஸ்தலத்தில் நிற்கக் காணும் போது
(வாசிக்கிறவன் சிந்திக்கக் கடவன்)



31

யூதேயாவில் இருக்கிறவர்கள் மலைகளுக்கு ஓடிப் போகக் கடவர்கள்.



32

எருசலேம் அழிக்கப்படும் என்று தானியேல் முன்னுரைத்திருக்கிறார். தீர்க்கதரிசி தானியேலின் எச்சரிப்புகள் சீக்கிரம் நிறைவேறும் என்று இயேசு இப்பொழுது தன் சீஷர்களுக்கு நினவூட்டினார்.



33

(வசனம் மத்தேயு 24:17-18)
வீட்டின் மேல் இருக்கிறவன் தன் வீட்டில் எதையாகிலும் எடுப்பதற்கு இறங்காதிருக்கக்கடவன்.




34

வயலில் இருக்கிறவன் தன் வஸ்திரங்களை எடுப்பதற்குத் திரும்பாதிருக்கக்கடவன்.

# 2 □ அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்



35

மற்ற வார்த்தைகளில், தங்கள் ஜீவனுக்காக ஓடும்படி அவர் அவர்களிடம் சொன்னார். ஏனெனில் சேனைகள் எருசலேம் நகரத்தைச் சூழ்ந்து கொள்வதை அவர்கள் பார்க்கும் பொழுது, அழிவு வெகுசமீபம், உடனடியாக நடக்கும்.




36

(வசனம் லூக்கா 21:20). எருசலேம் சேனைகளால் சூழப்பட்டிருப்பதை நீங்கள் காணும் போது, அதின் அழிவு சமீபமாயிற்றென்று அறியுங்கள். அவர்கள் எங்கேயிருந்தாலும், அந்த சேனைகளைப் பார்க்கும் பொழுது, அவர்கள் ஓட வேண்டும் என்பதை அவர் அவர்களுக்குத் தொடர்ந்து கூறினார்.




37

(வசனம் லூக்கா 21:22, 24) எழுதியிருக்கிற யாவும் நிறைவேறும்படி நீதியைச் சரிக்கட்டும் நாட்கள் இவைகளே.




38

அவர்கள் பட்டயக்கருக்கினாலே விழுவார்கள். சகல புறஜாதிகளுக்குள்ளளும் சிறைப்பட்டுப் போவார்கள்.



39

புறஜாதியாரின் காலங்கள் நிறைவேறும் வரைக்கும், எருசலேம், புறஜாதியரால் மிதிக்கப்படும். லூக்கா 21:22, 24.



40

கி.பி. 66ஆம் ஆண்டில், இயேசு முன்னுரைத்த ஏறக்குறைய 33 ஆண்டுகளுக்குப் பின்னர், ரோம சேனைகள் செஸ்தியுவின் தலைமையின் கீழ் அழிக்க வந்தனர்.



41

எருசலேமில் உண்டான கலகத்தை அமர்த்திப் போட வந்தனர். நகரத்துக்கு விரோதமாக அவர்கள் முற்றுகை போட்ட பொழுது, எப்படியோ, நகரம் ரோம சேனையின் முற்றுகைக்கு எதிர்த்து நின்றது. கடைசியாக, நகரம் ரோம சேனையின் சூரையாடுதலுக்கு எதிர்த்து நின்றது.

# 2  அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்


42

ரோம சேனைகள் நகரத்தைக் கைப்பற்ற முடியாமல், நம்பிக்கையற்றுப் பின்வாங்கினார்கள்.
(யூஷேபியஸ், சபைச் சரித்திரம், புஸ்தகம் 3, அதிகாரம் 5).



43

(வீடியோ 6 வினாடிகள்)
இயேசு கிறிஸ்துவின் கட்டளையைப் பின்பற்றினவர்கள் எருசலேம் நகரத்தின் அழிவுக்குத் தப்பினார்கள்.
நகரமானது ரோம சேனையால் கைப்பற்றப்பட்ட பொழுது அவர்கள் கொல்லப்படவில்லை.


44

கிட்டத்தட்ட 11 லட்சம்பேர் அந்த பயங்கர முற்றுகையில் கொல்லப்பட்டனர். கி.பி.66ல் ரோமசேனை பின்வாங்கியபொழுது, அவர்கள் இயேசுவின் அறிவுரையைக் கைக்கொள்வதில், நகரத்தைவிட்டு ஓடுவதில் தவறினார்கள்.

தீர்க்கதரிசனங்களைப் படிக்கவும், காலங்களின் அடையாளங்களைக் கவனிக்கவும் வேண்டியதன் முக்கியத்துவத்தை உணர்த்தும் ஒரு கருத்தைக் கவரும் பாடம் இங்கே இருக்கிறது.

அவிசுவாசிகள் அழிந்தபோது, கிறிஸ்துவை விசுவாசித்து, அவர் முன்னுரைத்த அடையாளங்களைக் கவனித்தவர்களோ இரட்சிக்கப்பட்டார்கள்.
இதுபோலவே உலகத்தின் முடிவிலுமிருக்கும்.
விழித்திருக்கும் விசுவாசிகள் விடுதலையாக்கப்படுவார்கள். கவலையாற்ற அவிசுவாசிகளோ அழிவார்கள்.



45

வீடியோ 5 வினாடிகள்) மகிமையான தேவாலயம் என்ன ஆயிற்று? தீத்து, எருசலேம் நகரத்தைக் கைப்பற்றும் பொறுப்புப் பெற்ற ரோமத்தளபதி, தேவாலயத்தை சேதப்படுத்தாதிருக்க கட்டளை கொடுத்திருந்தான்.
ஆனால் அவனுடைய படைவீரர்களில் ஒருவன் எரிபந்தத்தைக் கதவு வழியே எறிந்தான்.


46

தேவாலயமானது ஒரு ஜீவாலிக்கிற நரகமானது. ஒரு கல் மற்றொரு கல்லின்மேல் இருப்பதற்கு விடப்படவில்லை.

# 2 □ அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்


47

எருசலேமின் அழிவிற்கு 40 ஆண்டுகளுக்கு முன்னர் இயேசு தன் சீஷர்களிடத்தில் உரைத்த முன்னறிவிப்புகள் மிகச் சரியாக நிறைவேறின. உலக முடிவு பற்றி இயேசு நமக்குக் கொடுத்த அடையாளங்களை நாம் அசட்டை செய்வோமா? அல்லது எச்சரிக்கைகளைக் கவனித்து நமக்கு முன்னிருப்பதற்கு ஆயத்தமாவோமா? உலக முடிவு மிக சமீபமாயிருப்பதை நாம் எப்படி அறிவோம்? இயேசு நமக்குத் தெளிவான அடையாளங்களைக் கொடுக்கிறார்.



48

காலங்களின் அடையாளங்களில் சிலவற்றை நாம் பார்ப்போம். மத்தேயு 24:7 ல் கிறிஸ்து சொன்னார்.



49

(வசனம் மத்தேயு 24:7). ஜனத்துக்கு விரோதமாக ஜனமும், ராஜ்யத்துக்கு விரோதமாக ராஜ்யமும் எழும்பும்.



50

பஞ்சங்களும், கொள்ளை நோய்களும், பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். மத்தேயு 24:7. மனித சரித்திரத்தில் 20ம் நூற்றாண்டு இரத்தமயமான நூற்றாண்டு ஆகும்.




51

(வீடியோ 20 வினாடிகள்)
முதலாம் உலகபோரில் 20 மில்லியன் மக்கள் யுத்த பீடத்தில் பலியானார்கள். இரண்டாம் உலகப்போரில் 50 மில்லியன் மக்கள் அழிவுக்கு சாட்சிக்காரனார்கள். எல்லாரும் நினைப்பது. விரோதங்களும், அழிவுகளும் தான் முடிவு என்று. ஆனால் இன்னும் யுத்தங்கள் உண்டு. இதுபார்ப்பதற்கு உலகம் பைத்தியமானது போல் தோன்றுகிறது. இதுவும் அடையாளங்களில் ஒன்று.


52

தேசங்கள் - சமாதானத்திற்காக பேசுகிறார்கள். ஆனால் யுத்தத்திற்கு ஆயத்தமாகிறார்கள். வேறொரு வேத தீர்க்கதரிசனத்தின் வார்த்தைகள். சமாதானமும் மற்றும் ஆயத்தமும்.

# 2  அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்




53

வசனம் 1 தெசலோனிக்கேயர் 5:3) சமாதானமும், சவுக்கியமும் உண்டென்று அவர்கள் சொல்லும்போது ... அழிவு சடிதியாய் மற்றும் ஆயத்தமும்.
1 தெசலோனிக்கேயர் 5:3.
நாம் சமாதானத்தைப் பற்றி பேசுகிறோம். ஆனால் சமாதானம் இல்லை. எல்லாருக்கும் தேவை சமாதானம். ஆனால் இது வெறும் பேச்சு.


54

வேதாகமம் சொல்லுகிறது. கடைசி நேரத்தில் இந்த பூமியில், மனிதனுக்கு இப்பூமியை அழிக்கும் சக்தி உண்டு என்று.




55

(வசனம் வெளிப்படுத்தல் 11:18) ஜாதிகள் கோபித்தார்கள். அப்பொழுது உம்முடைய கோபம் மூண்டது. பூமியைக் கெடுத்தவர்களைக் கெடுக்கிறதற்கும் காலம் வந்தது.
வெளிப்படுத்தல் 11:18.
உலகத்தினால் உண்டாக்கப்பட்ட ஒன்றை அழிக்க மனிதனால் முடியாததாக இருந்தது. ஆனால் இப்போது மாற்றம்.


56

அணுகுண்டு கண்டுபிடிப்பினால், மனிதன் இப்போது தன் தகுதியை வைத்து, அதனால் பூமியை அழிக்க வழி தேடலானான்.


57

சிறந்த முறையில் அணு ஆயுத தடவாளங்கள் பாதுகாக்கப்பட்டதை, வாங்களோ, அல்லது திருடவோ வழி கண்டு கண்டுப்பிடித்திருக்கிறார்கள் தீவிரவாதிகள். இப்படிப்பட்ட நாசகரமான காரியம் காணாமல் போயும், யாரோ சிலர் அதை விற்கவோ, பயன்படுத்தவோ காத்திருக்கின்றனர்.



58

உலகில் காணப்படும் பெரிய நூல்நிலையங்களிலிருந்து, மதிக்கப்படும் பத்திரிகைகளிலிருந்து எப்படி அணு ஆயுத குண்டுகளை செய்யலாம் என செய்திகள் தயாராக இருக்கிறது. அதுவும் அருகாமையில் - கணிப்பொறியை தட்டி அறியலாம்.



59

(வீடியோ 5 வினாடிகள்)
உலகத்தின் மிகப்பெரிய பட்டணங்களை அழிக்க ஆயுதங்களை சிறு பெட்டிகளின் உள்ளே வைத்து, அதை எங்கு வேண்டுமானாலும் உபயோகிக்கும் எண்ணம், வரப்போகும் காலங்களில் இவர்கள் செய்யும் அளவுக்கு இருக்கின்றனர்.



60


கடைசி நாட்களில் அழிவுகள் பல வழிகளில் இருக்கும்.




61

வசனம் மத்தேயு 24:7) பஞ்சங்கள் உண்டாகும் ...

மத்தேயு 24:7.



62

பஞ்சங்கள் அநேக இடங்களில் உண்டாகும்.



63

ஒவ்வொரு வருடமும் பசியால் வாடும் மக்களின் கணக்கெடுப்பு 57 மில்லியன் என் மதிப்பிடப்பட்டுள்ளது. 1,56,000 மக்கள் ஒவ்வொரு நாளும் பட்டினியால் மரிப்பது கணக்கிடப்பட்டுள்ளது.



64

இப்பூமியில் மில்லியன் மக்களின் 60 சதவிகிதம் சத்தில்லா உணவினாலும், 20 சதவிகிதம் பட்டினியாலும் முடிவுக்குள்ளாக்கப்படுகிறார்கள். உலகத்தின் முடிவுக்கு சொல்லப்படும் அடையாளங்களுள் பஞ்சங்கள் வரும் என இயேசு சொல்லியிருக்கிறார்.

2 □ அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்

# 2  அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்



65

(வீடியோ 5 வினாடிகள்)
தெரிந்துக் கொள்ளப்பட்ட மூலாதார பகுதியிலிருந்து சொல்லப்படுவது. பற்றாக்குறையை சந்திக்கும் போது - உலக முழுவதும் பஞ்சங்கள், பட்டினி, அதனால் தொடரக்கூடிய நோய்கள், ஆகாரத்திற்கான யுத்தங்கள் உண்டாகும். மக்கள் தொகையில் பசியுள்ளோர் 2.3 பங்காக இருக்கும் நிலையில், அதிகமாகி வரும் ஒவ்வொரும் மில்லியன் மக்களையும் போசிப்பது எப்படி?



66

(வசனம் லூக்கா 21:25)
கடைசி நேரத்தில் பூமியின் மீது ஏற்படும் நிர்பந்தமான காரியங்களை கிறிஸ்து விவரித்து சொல்லுகிறார். பூமியின் மேலுள்ள ஜனங்களுக்குத் தத்தளிப்பும் இடுக்கணும் உண்டாகும். லூக்கா 21:25.



67

இயேசு சொன்னார். கொள்ளை நோய்கள் உண்டாகும்.




68

(வசனம் மத்தேயு 24:7) பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் பூமியதிர்ச்சிகளும் பல இடங்களில் உண்டாகும். கொள்ளை நோய்கள் - எனும் இந்த நோய்க்கு சொல் அகராதியில் விரோதமான புதிய நோய்கள் என அர்த்தம் கொள்கிறது.


69

பலவிதமான கொள்ளை நோய்கள் இருக்கிறது. இப்படிப்பட்ட வேளையில் நகநாகரீக மருந்துகள் என்ன செய்கிறது.



70

எய்ட்ஸ், மலேரியா, நிமோனியா, எலும்புருக்கி நோய், பால்வினை நோய்கள், சீதபேதி, காலரா.

# 2  அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்




71

உலக சுகாதார மையம் முன்கூட்டியே சொல்வது என்னவென்றால் இந்த காலக்கட்டங்களில் 10 மில்லியன்களுக்கு மேலாக பால்வினை நோய்கள் இருக்கும்.
உலக முழுவதிலுமுள்ள நாடுகள் அனைத்தும இவற்றை முற்றிலும் களைந்தெறிய நடிவடிக்கை எடுக்கப்படவேண்டும்.



72

நமது சுற்று சூழ்நிலை அசுத்தம் - என்பது நமது காலங்களில் கண்டுபிடிக்கப்பட்ட அடையாளம். ஏசாயா 51:6ல் கடவுள் சொன்னது. அதை வேதாகமம் முன் குறித்து அறிவிக்கிறது. உலகம் வளர்ந்து பழமையாய்ப்போம்.



73

(வசனம் ஏசாயா. 51:6.) உங்கள் கண்களை வானத்துக்கு ஏறெடுங்கள், கீழே இருக்கிற பூமியையும் நோக்கிப் பாருங்கள்.



74

வானம் புகையைப் போல் ஒழிந்துபோம். பூமி வஸ்திரத்தைப் போல் பழசாய்ப்போம்.
அதின் குடிகளும் அப்படியே ஒழிந்து போவார்கள். என் இரட்சிப்போ என்றென்றைக்கும் இருக்கும். என் நீதி அற்றுப்போவதில்லை.


75

அநேக பெரிய பட்டணங்களில், நமது நுரையீரல்களின் வழியாய் நாம் சுவாசிக்கும் காற்று விசமுள்ள இரசாயன கலவையால் நிறைந்துள்ளது.



76

அசுத்தமான வாயுவை குறித்து எச்சரிப்பு பலகைகள் பல பெரிய பட்டணங்களில் எச்சரிப்பை தருகிறது.



77

(வீடியோ 5 வினாடிகள்) பல இடங்களில் குடிநீர் - ஒரு பாதுகாப்பற்றதாகிவிட்டது. காரணம் அதில் பலவகையான ஆபத்தான கலவைகள் கலந்திருக்கிறது.



78

அணு ஆயுதங்களின் கழிவுகள் - உண்மையாகவே பிரச்சனையாக இருக்கிறது. அணுசக்தி கம்பெனிகளின் ஆபத்தினால் அதன் ஊழியர்கள் வேதனைப்படுவதால் நஷ்ட ஈடு கேட்கின்றனர்.


79

எங்கே நாம் நமது உடல் சக்திகளை உணவு, காற்று, தண்ணீர், இவைகளை சுத்தமாக பெற்றுக்கொள்ள முடியும்?



80

(வீடியோ 6 வினாடிகள்)
உலகில் மக்கள் தொகை கூடுதலினால் மனிதன் பலவிதமான பிரச்சனைகளை இப்பூமியில் சமாளிக்க வேண்டி உள்ளது.



81

(வசனம் லூக்கா. 21:25) பூமியின் மேலுள்ள ஜனங்களுக்கு தத்தளிப்பும். லூக்கா 21:25.



82

வேதத்தில் அதிகரித்து வருகின்ற நிலநடுக்கங்களைப் பற்றியும் கூறுகின்றது.



83

(வசனம் மத்தேயு 24:7) நிலநடுக்கம் பூமியின் பல இடங்களில் சம்பவிக்கும்.

மத்தேயு 24:7.
சமீப காலத்தில் அதிகமாக நிலநடுக்கம் ஏற்படுவதை காண்கிறோம்.



84

வருடத்தில் 6,000 நிலநடுக்கங்கள் உலகத்தில் நடக்கின்றன.




85

(வீடியோ 10 வினாடிகள்)
கடந்த 90 வருடங்களாக நமக்கு 1,50,000 நிலநடுக்கங்கள் காணப்பட்டது.



86

இக்கடைசி சிறு காலத்தில பூமியதிர்ச்சி 20,000 லிருந்து 30,000 பேரை பலிகொண்டுள்ளது. உங்களில் அநேகர் சமீபகாலங்களில் பல இடங்களில் (நாடுகளில்) நடந்த பூமியதிர்ச்சி அனுபவத்தை நினைவு கூறலாம்.




87

(வசனம் லூக்கா 21:11, 25)
பல இடங்களில் மகா பூமியதிர்ச்சிகளும், பஞ்சங்களும், கொள்ளை நோய்களும் உண்டாகும் என்று வேதம் சொல்லுகின்றது.



88

வானத்திலிருந்து பயங்கரமான தோற்றங்களும் பெரிய அடையாளங்களும் உண்டாகும்.



89

சூரியனிலும் சந்திரனிலும் நட்சத்திரங்களிலும் அடையாளங்கள் தோன்றும்.



90

காற்றும், அலையும் கர்ஜனையான சத்தமிடும் என சொல்லப்படும்வதை கவனியுங்கள்.

லூக்கா 21:11, 25.



91

(வீடியோ 17 வினாடிகள்)
காற்றும், அலையும் கர்ஜனையான சத்தமிடும் என சொல்லப்படும்வதை கவனியுங்கள்.

அசாதாரண சீதோசன நிலையை உலகம் எங்கும் நம் காணலாம். வாழ்க்கைக்கும், சொத்துக்கும் பயத்தை உண்டு பண்ணக்கூடிய எரிமலை, சூறாவளி, கரும்புயல், பூகம்ப காலங்களில் ஏற்படி கூடிய பயங்கரங்களை பல இடங்களில் காணலாம்.



92

வேதாகமம் கூறும் அடுத்த அடையாளம், முடிவு நேரங்களில் காணப்படும் நீதி, நெறிநிலை. இதுவரை கண்டராத பாவத்தின் உச்சநிலைக்கு உதாரணமாக சோதோம். கொமாராவை இன்றைய நிலையோடு ஒத்துப்பார்க்கும்படி கேட்கிறார்கள். அந்நகரங்களை தேவன் பரலோக அக்கினியினால் அழித்துப்போட்டார்.



93

(வசனம் லூக்கா 17:28, 30)
நோவாவின் நாட்களில் நடந்ததுப்போலால ...



94


மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படி சம்பவிக்கும்.

லூக்கா 17:28, 30.




95

(வசனம் யூதா 1:7) யூதா எழுதியிருக்கிறார். சோதோம் கொமோரோ பட்டணத்தார்களும், அவைகளை சூழ்ந்த பட்டணத்தார்களும் அவர்களைப் போல் விபசாரம் பண்ணி.
யூதா 7.



96

இந்த பட்டணங்களின் குணலட்சனங்களை குறித்தும், நெறிநிலை பற்றி யும் பவுலார் பேசுவதை காணுங்கள்.



97

(வசனம் ரோமர் 1:26, 27.)
அந்தப்படியே அவர்களுடைய பெண்கள் சுபாவ அனுபோகத்தை சுபாவத்துக்கு விரோதமான அனுபோகமாக மாற்றினார்கள்.



98

அப்படியே ஆண்களும் பெண்களை சுபாவப்படி அனுபவியமால், ஒருவர்மேல் ஒருவர் விரகதாபத்தினால் பொங்கி,

# 2 அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்





99

ஆணோட ஆண் அவலட்சணமானதை நடப்பித்து... ரோமர் 1:26, 27.




100

(வசனம் 2 தீமோத்யு 3:2-5) மனுஷர்கள், தற்பிரியரா யும், பணப்பிரியரா யும், வீம்புக்காரரா யும், அகந்தை யுள்ளவர்களா யும், தூஷிக்கிறவர்களா யும் தாய் தகப்பன்மாருக்குக் கீழ்ப்படியாதவர்களாக யும் நன்றியறியாதவர்களா யும், பரிசுத்தமில்லாதவர்களாகவும்.



101

அன்பில்லாதவர்களா யும், இணங்காதவர்களா யும், அவதூறு செய்கிறவர்களா யும், இச்சையடக்கம் இல்லாதவர்களா யும், கொடுமை யுள்ளவர்களா யும்.




102

துரோகிகளா யும், துணிகரமுள்ளவர்களா யும், இறுமாப்புள்ளவர்களா யும் தேவப்பிரியராயிராமல்.



103

தேவபக்தியின் வேஷத்தை தரித்து அதன் பெலனை மறுதலிக்கிறவர்களா யும்.
2 தீமோத்தே யு 3:2-5.



104

(வசனம் 2 தீமோத்தே யு 3:13). இது மோசமாகக் கூடுமோ? ஆம் சொல்வதற்கு வருந்துகிறேன். பொல்லாதவர்களும், எத்தர்களுமானவர்கள் மோசம் போக்குகிறவர்களாகவும், மோசம் போகிறவர்களாகவுமிருந்து, மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்.



105

கள்ளக்கிறிஸ்துக்கள் மற்றும் கள்ளத் தீர்க்கதரிசிகளின் வருகை - இயேசு கொடுத்த மிகக் குறிப்பிடத்தக்க அடையாளங்களில் ஒன்று ஆகும். உலகத்தை வஞ்சிக்கத் தோன்றும் கள்ளக்கிறிஸ்துக்கள் மற்றும் கள்ளத் தீர்க்கதரிசிகளைப் பற்றி இயேசு கிறிஸ்து எச்சரித்திருக்கிறார்.

# 2 □ அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்



106

(வசனம் மத்தேயு 24:23-24) அப்பொழுது, இதோ, கிறிஸ்து இங்கே இருக்கிறார். அதோ அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதேயுங்கள்.



107

ஏனெனில் கள்ளக்கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி கூடுமானால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாக.



108

கூடுமானால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும். மத்தேயு 24:23, 24.



109

(வசனம் மத்தேயு 24:26)
ஆகையால், இதோ வனாந்திரத்தில் இருக்கிறார் என்று சொல்வார்களானால் புறப்படாதிருங்கள்.
மத்தேயு 24:26.
நாம் அவரைத்தேடி எங்கும் போக தேவையில்லை.



110

(வசனம் மத்தேயு 24:27.)
மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்குவரைக்கும் பிரகாசிக்கிறது போல.



111

மனுஷகுமரனுடைய வருகையும் இருக்கும்.

வசனம் 27.



112

(வசனம் வெளிப்படுத்தல் 1:7)

இதோ மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரைக்காணும் அவரைக் குத்தினவர்களும் அவரைக் காண்பார்கள். வெளிப்படுத்தல் 1:7.

# 2 அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்

2 அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்



113

அவர் வருகையில் நாம் அவரைக் காண்போம். இயேசு எப்போது அவருடைய பரிசுத்த தூதர்களுடன் வருவார் என்பது நம் அனைவருக்கும் தெரியும்.



114

இராஜியத்தினுடைய சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்.
எல்லா அடையாளங்களிலும் இது ஒன்றுதான் நிறைவேறவேண்டிய தீர்க்கதரிசனமாகும்.



115

(வசனம் மத்தேயு 24:14). கர்த்தர் சொல்கிறார். இராஜியத்தினுடைய சுவிசேஷம் பூலோகமெங்குமுள்ள சகல ஜாதிகளும் சாட்சியாக பிரசங்கிக்கப்படும். அப்போது முடிவு வரும்.



116

வெளிப்படுத்தல் புத்தகத்தில் இப்பெரிய நற்செய்தி அறிவிப்பினை குறித்து நன்கு விளக்கப்படுகின்றது.




117

(வசனம் வெளிப்படுத்தல் 14:6). வானத்தில் ஒரு தூதன் பறக்கக்கண்டேன்.



118

பூமியில் வாசம் பண்ணுகிற சகல ஜாதிக்காரர்க்கும் அறியத்தக்க நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து.



119

சகல தோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவித்ததாக வெளி 14:6. இந்த இரவில் சொல்லப்படுகிற சத்தியத்தை நீங்கள் சிந்திப்பதுண்டோ? இது நித்திய சுவிசேஷத்தினுடைய ஒரு பாகம்தான்.


120

இந்த சுவிசேஷம் டி.வி., ரேடியோ படை முயற்சிக்கூட்டங்கள், தனியார் ஊழியம் சுவிசேஷக்கூட்டங்கள், இன்டர்நெட் இவைகள் மூலம் பூமியில் பரவுகிறது.


121

அறிவு பெருகிபோகும் என்று தானியேல் சொல்லி இருக்கிறார். இந்த உலக வரலாற்றின் கடைசி கடுமையான நாட்களில் தானியேல் புத்தகத்தின் முத்திரை உடைக்கப்பட்டு. இப்புவியைக் குறித்த தேவதிட்டதின் அறிவுப் பெருக்கத்தையும், விஞ்ஞான உலகத்தின் மாபெரிய அறிவுப் பெருக்கத்தையும் கொண்டுவரும்.




122

நேரம் கடந்து செல்கிறது.


நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ அப்படியே தேவகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்.


123

இப்பொழுது நடைபெறும் சம்பவங்களை சான்றாகப் பார்த்தால், மனிதன் தன் அழிவை, தானே தேடுவதுபோல் தெரிகிறது. நம்முடைய நாட்களை நோவாவின் நாட்களோடு இயேசு ஒப்பிடுகிறார்.



124

நோவா காலத்தில் ஜனங்கள் ஆவிக்குரியக்காரியங்களுக்கு நேரம் செலவழிக்காமல் தங்கள் அன்றாட ஜீவயத்துக்கடுத்த காரியங்களிலேயே நேரத்தை செலவழித்தவந்தனர்.




125

(வசனம் மத்தேயு 24:37, 39). இயேசு சொல்கிறார். நோவா காலத்தில் நடந்தது போல மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்.




126

ஜலபிரளயத்திற்கு முன் அவர்கள் புசித்தும் குடித்தும்.




127

நோவா பேழைக்குள் பிரவேசிக்கும் நாள் வரைக்கும் ஜனங்கள் பெண் கொண்டும் பெண் கொடுத்தும்.




128

ஜலப்பிரளயம் வந்து அனைவரையும் வாரிக்கொண்டு போகும் மட்டும் உணராதிருந்தார்கள்.



129


அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்.


130

இயேசு சொல்கிறார், அவருடைய இரண்டாம் வருகையும் நோவா காலத்தில் நடந்தது போல் நடக்கும். மக்கள் பெருவாரியான நேரத்தை தங்கள் சுய இச்சைகளுக்கும் சுக போகங்ளுக்கும் செலவழித்து தேவனை தேட மறப்பார்கள்.


131

காலத்தின் கடிகாரத்தில் கடைசி சில மணல் துளிகள் மாத்திரம் ஒட்டிக் கொண்டிருக்கின்றன. சீக்கிரத்திலே தேவகுமாரன், தூதர்கள் புடைசூழ நட்சத்திரம் நிறைந்த வானங்களை ஊடுருவி வருவார். தேவன் அந்த நாளுக்காக ஆவலோடு பாாத்திருக்கிறார். உலகத்தை அழிபதற்காக அல்ல. ஆனால், தமது ஜனங்களை வீட்டிற்கு அழைத்துச் செல்ல, அந்த வீடு காத்திருக்கிறது. அது ஆயத்தமாயிருக்கிறது.


132

இன்றைய உலகத்தின் அடையாளங்களை நாம் பார்த்தால், இயேசுவின் வருகைக்கு எவ்வளவு நெருங்கிவிட்டோம் என்பதைக் காணமுடியும். இயேசு முதலாவது முறை பூமிக்கு வந்தபோது இருந்ததைவிட இப்போது காரியங்கள் மிக மோசமாக இருக்கிறது. இயேசு பூமிக்கு வரும் நேரம் எது என்பதை மக்கள் அறிந்துகொள்ள தேவன் அப்பொழுதே பல அடையாளங்களைக் கொடுத்திருக்கிறார்.

# 2  அசட்டை செய்ய முடியாத அடையாளங்கள்



133

(வீடியோ 7 வினாடிகள்)
கடிகாரம் நாலாயிரம் ஆண்டுகள் இயங்கினது. தேவன் தனது வருகையை மக்கள் அறிவதற்காக தூதர்களையும் மற்றும் ஞானிகளையும் அனுப்பினார்.



134

(வசனம் யோவான் 1:11.)
அவர் தமக்கு சொந்தமானதிலே வந்தார், அவருக்கு சொந்தமானவர்களோ அவரை ஏற்றுக்கொள்ளவில்லை.


135

சகோதரரே, இயேசு சொன்னார். இதையெல்லாம் பார்க்கும்போது அவர் சீக்கிரமாய் வரப்போகிறார்.



136

(வசனம் மத்தேயு 24:33, 34.)
இவைகளெல்லாம் பார்க்கம்போது அவர் சமீபமாய் வாசலருகே வந்திருக்கிறார் என்று அறியுங்கள்.



137

இவைகளெல்லாம் சம்பவிக்கும் முன்னே இந்த சந்ததி ஒழிந்துபோகாதென்ற மெய்யாகவே உங்களுக்கு சொல்லுகிறேன்.

மத்தேயு 24:33, 34.


138

நேரம் தாமதிக்கிறது. ஆனால் இந்த சம்பவம் விரைவில் நடக்கும்.


139

மத்திய அமெரிக்காவின் நீராவிக்கப்பல் நியூயார்க் துரைமுகத்தைவிட்டு பனாமாக்கால்வாய் அருகேயிருந்து அட்லாண்டிக்கில் தெற்கு நோக்கி முன்னேறிக் கொண்டிருந்தபோது, கப்பலில் ஒரு ஒழுக்கு ஏற்பட்டது. மற்றொரு கப்பல் அதனுடைய துயர சைகையைப் பார்த்து உதவுவதற்கு முன்னோக்கிச் சென்றது. மீட்புக் கப்பலின் மாலுமி, என்ன தவறு நடந்தது? என்ற ஒரு செய்தியை அனுப்பினார். எங்களுக்கு மோசமான பழுது ஏற்பட்டு, கீழ்நோக்கி செல்கிறோம் என்று பதில் வந்தது. விருப்பமுள்ள ஒரு மீட்புப் பணியாளர் நீராவிக்கப்பல் தண்ணீரில் ஒருபுறம் சாய்வதைப்பார்த்து உங்கள் பயணிகளை நான் இப்பொழுது ஏற்றிக்கொள்கிறேன் என்று பதில் கூறினார்.

ஆனால் இரவாகிவிட்டது, மத்திய அமெரிக்க பயணிகளை இரவில் இடம்விட்டு இடம் மாற்றும் கடும் முயற்சியை விரும்பவில்லை. காலை வரை படுத்திருப்போம் என்று மறுபடியும் சொன்னார். மற்ற மாலுமி மற்றொரு செய்தி அனுப்பி, இப்பொழுதே நாம் செயல்பட வேண்டும் என் வற்புறுத்தினார். ஆனால் அவர் அலட்சியம் செய்யப்பட்டார். இரவிலே அவர் சற்று தொலைவிலே காத்திருக்க வேண்டியதாயிற்று. அவரது பணியாளர்கள் கப்பல் மேடையிலே நின்று மத்திய அமெரிக்காவின் விளக்குகளை அலைகளிலே மீன்பிடித்துக் கொண்டே, காண்பது இலகுவாயிருந்தது. ஏறக்குறைய ஒன்றரைமணி நேரத்திற்குப் பின்னர், அந்த விளக்குகள் மறைந்ததை ஆச்சரியத்துடன் பார்த்தனர். கப்பல் உள்ளே மூழ்கி பிரயாணம் செய்த யாவரும் அழிந்தனர்.


140

காத்திருப்பது நித்திய இழப்பை முடிவாகக் கொண்டு வரலாம். நீங்கள் இப்பொழுதே தீர்மானங்கள் எடுக்க வேண்டிய காலம் காலை வரை காத்திருப்பதால் பிரச்சனை இருக்காது என்று மத்திய அமெரிக்க மாலுமி நினைத்தார். அவர் துயரகரமான தவறிழைத்துவிட்டடர். வேதம் சொல்கிறது. இன்றே இரட்சன்யநாள். காத்திருக்காதே. தயங்காதே. தாமதியாதே. கிறிஸ்துவுக்காக ஏன் இப்பொழுதே தீர்மானம் எடுக்கக்கூடாது? இப்பொழுதே உங்கள் இருதயத்தை தேவனிடம் உயர்த்தி கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகைக்கு ஆயத்தமாக உதவும்படி அவரிடம் கேட்கமாட்டீர்களா? கிறிஸ்துவின் சீக்கிர வருகைக்கு ஆயத்தமாயிருப்பதை தடை செய்கிற காரியம் ஏதாவது உங்கள் வாழ்வில் இருக்கிறதா? நாம ஜெபிக்கும்போது, இப்பொழுதே அந்தக் காரியத்தை விட்டுவிடமாட்டீர்களா? கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வதில் நீங்கள் உண்மையிலேயே மனதுள்ளவர்களாயிருப்பீர்களானால் இப்பொழுதேதத உங்கள் கரத்தை உயர்த்தி சொல்வீர்களா? ஆம், கர்த்தாவே, நீர் மறுபடியும் வரும்போது நான் உம்மை சந்திக்க ஆயத்தமாயிருக்க விரும்புகிறேன்.

# 3 □ மாபெரும் தப்புவிப்பு!



1


நிலையான வாழ்வில் அடி எடுத்து வைக்கும் நாளில்.


2

மேரி சோர்ந்து போய் களைப்புற்றிருந்தார். வாரம் முழுமையும் வேலைப்பாடுகள். அவள் வாழ்க்கை முழுமையும் சுழற்சியான செயல் நிறைந்த வேளை. தன்னுடைய வீட்டிற்கு செல்லும் குறுகிய, அக்கிராம வழி பாதையில் தன் வாகனத்தை ஓட்டி வந்து இல்லம் வந்தாள்.


3

திடீரென்று, வானத்திலிருந்து நட்சத்திர வெளிச்சம், மிக பிரகாசமாய் வெளிச்சமாய் தோன்றியது.


4

அவள் பயந்தவளாய், அப்படியே தன் வாகனத்தின் உந்து விசையை அழுத்தியவளாய், இது காலத்தின் கடைசி வேளை, கிறிஸ்து வருகிறார். நான் என் வீட்டை கடந்து, என் மகனோடு இருக்கட்டும் என விரும்பினார்.

இந்த அனுபவத்தை மேரி, சில நாட்களுக்குப் பின், வானம் அவ்வளவாய் பிரகாசமாய் தோன்றியது, நான் எண்ணியது, இயேசுவின் வருகை மிக சமீபம் என்று சொன்னாள்.



5

என்றாவது, நீ சிந்தித்ததுண்டா? உலகம் சீக்கிரமாய் ஓர் முடிவுக்கு வரும் என்று. எப்படி முடிவு ஏற்படும் என ஆச்சரியப்படுகிறதால்? நட்சத்திர வெளிச்சம் தான் முடிவின் அடையாளமா?



6

(வீடியோ 8 வினாடிகள்)

இப்பூமியில் எல்லா மனித வாழ்வும், அணு ஆயுத யுத்தத்தினால் அழிக்கப்படும். அதுதான் உலக முடிவு என மக்கள் நினைக்கின்றனர்.

# 3  மாபெரும் தப்புவிப்பு!


7

அதிக மக்கள் தொகையினுள், இடமில்லாமல் பூமியில் பற்றாக்குறை ஏற்பட்டு, பெரிய பஞ்சம் வரும் அதுதான், உலக முடிவு என நினைக்கின்றனர்.


8

சிலர் என்றாவது ஒரு நாள் சிறு கிரகம் பூமி மீது விழுந்து உலகம் அழியும் என்று எண்ணுகின்றனர்.



9

(வீடியோ 8 வினாடிகள்)
உலகம் எப்படி முடிவுக்கு வரும் என்று வேதாகமம், நீண்ட காலங்களுக்கு முன்னமே, முன்னுரைத்திருப்பதை நீ அறிந்திருக்கிறாயா?
அன்பு நண்பர்களே இதோ ஒரு நற்செய்தி. மனித, இனம் - யுத்தத்தினாலோ, பஞ்சத்தினாலோ, இல்லை, சிறு கிரகம் விழுந்து அழியும் என்றோ எண்ண வேண்டாம்.


10

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் போது தான் உலகம் அழியும் என வேதாகமம் சொல்லுகிறது. அவர் இந்த பூமியை விட்டு போய் 2000 வருடங்கள் ஆனது. அவர் மீண்டும் இப்பூமிக்கு வருவார். நம்மை நித்தியம் சேர்ப்பார் என்பதை நாம் அறிவோம்.


11

ஜனங்கள் என்ன நினைக்கிறார்கள் என்பதை கண்டுபிடிப்பது, உற்சாகமானதுதான். அவர்களிடம், இயேசு கிறிஸ்து மீண்டும் வருகிறார். அது எப்படி இருக்கும் என கேட்டால், என்ன சொல்வார்கள்.


12

ஆம். அன்பானவர்களே, கிறிஸ்து ராஜா சீக்கிரம் வரப்போகிறார். சந்தேகத்திற்கு இடமின்றி, இந்த உலகின் குழப்பங்கள் மனித சக்திக்கு அப்பாற்பட்டதாக இருக்கிறது. கிறிஸ்துவையும், பிதாவையும் தவிர, வேறு யாராலும் மலிந்து கிடக்கும் இவ்வுலகின் குழப்பங்களை சரி செய்ய முடியாது.
ராஜா திரும்ப வரும் வேளை எவ்வளவு அசீர்வாதமானதாக இருக்கப் போகிறது.

# 3  மாபெரும் தப்புவிப்பு!



13

பவுல் அப்போஸ்தலா் சிறை கைதியாக இருண்ட சிறையில், தன் தலை வெட்டப்படும் தண்டனைக்கு காத்திருக்கும்போது, இவைகளை அவா் எழுதினாா்.




14

(வசனம்: தீத்து 2:13)
நாம் நம்பியிருக்கிற ஆனந்த பாக்கியத்துக்கும் மகா தேவனும், நமது இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவினுடைய மகிமையின் பிரசன்ன மாகுதலுக்கும் எதிா்பாா்த்துக் கொண்டிருக்கும்படி. தீந்து 2:13.
தனது விசுவாச குமாரனாகிய தீத்துவுக்கு தமது தேவனுடைய மகிமையின் வருகையைப் பற்றி கூறி உற்சாகப்படுத்துவதற்காக பவுல் இதை எழுதுகிறாா்.



15

உங்களுடைய வாழ்க்கை கடும் இரவைப்போல் காட்சியளிக்கும் போது இயேசுவின் இரண்டாம் வருகையில் இவை யாவும் சரி செய்யப்படும் என்ற இந்த மகிமையான ஆனந்தமான நம்பிக்கையை நோக்கிப்பாருங்கள்.




16

புதிய ஏற்பாட்டில் அதிகமாக பேசப்பட்டுள்ள சம்பவம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையாகும். சராசரி ஒவ்வொரு 25 வசனங்களுக்கு ஒரு தடவை இந்த நிகழ்ச்சியுடன் சம்பந்தப்பட்டுள்ளது. புதிய ஏற்பாட்டில், வேறு எந்த நிகழ்ச்சியைக் காட்டிலும், கிறிஸ்து இந்த ஒரு சம்பவத்தைக் குறித்தே அதிகம் பேசினாா். புதிய ஏற்பாட்டிலுள்ள இரண்டு வசனங்களை, வேதாகமத்தை நம்பும் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டும்.




17

(வசனம் யோவான் 3:16)
யோவான் 3:16. நன்கு அறிந்திருக்கின்றனா். தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூா்ந்தாா்.




18

அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு.

இரண்டாவதாக, கிறிஸ்து சிலுவையில் அறையப்படுவதற்கு சற்று முன்னதாக ஒரு அற்புதமான வாக்குத் தத்தத்தை கொடுத்தாா்.

# 3  மாபெரும் தப்புவிப்பு!



19

(வசனம்: யோவான் 14:1-3)
உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.



20

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு, அப்படியில்லாதிருந்தால், நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன், ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப் போகிறேன்.



21

நான் போய் உங்களுக்காக ஒரு ஸ்லத்தை ஆயத்தம் பண்ணின பின்பு நான்.. மறுபடியும் வந்து.



22

நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்வேன். யோவான் 14:1-3.


23

நூற்றாண்டுகள் நெடுகிலும் கிறிஸ்துவின் அடியார்களை எப்போதெல்லாம் ஏமாற்றமும், கஷ்டமும், அல்லது மரணமும் அச்சுறுத்தியதோ.


24

அப்போதெல்லாம் இந்த வாக்குத்தத்தம் நம்பிக்கையின் நட்சத்திரமாக விளங்கி பெலத்தையும் தைரியத்தையும் கொடுத்துள்ளது. இந்த வாக்குத்தத்த நிறைவேறுதலுக்காக கிறிஸ்துவின் பின்னடியார்கள் எதிர்பார்த்துக் கொண்டுள்ளனர்.



25


(வசனம்: 2 தீமோத்தேயு 4:7, 8)
பிற்காலத்தில், சிரச்சேதம் செய்யப்படுவதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்த வேளையில், பவுல் வெற்றிக் களிப்புடன், நல்ல போராட்டத்தைப் போராடினேன். ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக் கொண்டேன்.

# 3 □ மாபெரும் தப்புவிப்பு!



26

நீதியின் கிரீடம் எனக்காக வைக்கப்பட்டிருக்கிறது. நீதி யுள்ள நியாயதிபதியாகிய கர்த்தர்.



27

அந்த நாளிலே அதை எனக்குத் தந்தருளுவார், எனக்க மாத்திரமல்ல, அவர் பரசன்ன மாகுதலை விரும்பும் யாவருக்கும் அதை தந்தருளுவார். 2 தீமோ 4:7, 8.


28

கிறிஸ்துவின் வருகையைப் பற்றிய வாக்குத்தத்ததை பவுல் நிச்சயத்தோடு எதிர்நோக்கியதால் மரணத்தை பயமின்றி சந்தித்தார்.


29

ஆம், இயேசு நிச்சயம் வருவார். நண்பர்களே, கிறிஸ்து சீஷர்களுக்குக் கொடுத்த வாக்குத்தத்தம் நமக்கும் உரியதாகும். இயேசு நிச்சயம் வருவார்.


30

அவருடைய வருகைக்கும் உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்று அவருடைய சீஷர்கள் கேட்டபோது, இயேசு தமது வருகைக்கு முன் நடைபெறும் சம்பவங்களை விளக்கிக் கூறினார்.



31

(வசனம்: மத்தேயு 24:4, 5)
வாசிப்போமாக. இயேசு - ஒருவனும் உங்களை வஞ்சியாதபடி எச்சரிக்கையாயிருங்கள்.



32

ஏனெனில், அநேகர் வந்து, என் நாமத்தைத் தரித்துக் கொண்டு, நானே கிறிஸ்து என்ற சொல்லி அநேகரை வஞ்சிப்பார்கள்.
மத்தேயு 24:4, 5. 24 வசனத்தில் இயேசு இதை மேலும் விவரிக்கிறார்.

# 3 □ மாபெரும் தப்புவிப்பு!



33

(வசனம்: மத்தேயு 24:24)
ஏனெனில், கள்ளக் கிறிஸ்துக்களும் கள்ளத்தீர்க்கதரிசிகளும் எழும்பி, கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதாகப் பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.



34

கூடுமானால், தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களையும்.



35

கள்ளர்களை நம்மால் அடையாளம் கண்டுபிடிக்க முடியாவிட்டால் - கள்ளனையே கிறிஸ்து என நினைத்து அவனை பின்பற்ற வேண்டியிருக்கும். இயேசு ஏதோ சிறிய வஞ்சகங்களையல்ல பெரிய வஞ்சகம் நடக்குமென இயேசு எச்சரித்துள்ளார்.


36

இவ்வுலகிலுள்ள அனைவரையும் வஞ்சிக்கத்தக்கதாக மிகவும் திட்டமிட்டு செய்யப்படும் ஒரு, ஆள் மாறாட்டத்தைக் குறித்தே அவர் பேசுகிறார். இந்த சதிகாரர்கள் தங்களது வார்த்தை உண்மையென நிரூபிப்பதற்காக பொய்யான அற்புதங்களை செய்வார்கள்.


37

கிறிஸ்துவின் வருகையை நாம் புரிந்து கொள்ள முடியாது. கிறிஸ்துவின் வருகையை எவராலும் பொய்யாக நடித்துக்காட்ட இயலாது. அதே வேளையில் கிறிஸ்து வருவதற்கு முன்பாக ஒரு போலி கிறிஸ்துவை வெளிப்படச் செய்வதினால் நம்மை வஞ்சிக்கப் பார்ப்பான் என்பதை சீர்தூக்கிப் பாருங்கள்.


38

பிசாசானவன் கள்ள கிறிஸ்துகளையும் கள்ள தீர்க்கதரிசிகளையும் உபயோகித்து இரண்டாம் வருகையை பற்றி ஜனங்களை குழப்புவான்.



39

(வசனம்: 2 கொரிந்தியர் 11:13, 14)
அப்படிப்பட்டவர்கள் கள்ள அப்போஸ்தலர்கள், கபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவினுடைய அப்போஸ்தலரின் வேஷத்தைத் தரித்துக் கொண்டவர்களாயிருக்கிறார்கள்.




40

அது ஆச்சரியமல்ல, சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தைத் தரித்துக் கொள்வானே. 2 கொரிந்தியர் 11:13, 14.
சாத்தான் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை ஏமாற்றும் வகையில் ஒளியின் வேஷத்தை தரிப்பான்.



41

(வீடியோ 13 வினாடிகள்)
ஒவ்வொரு காலக்கட்டத்திலும் சிலர் இயேசு எனக்கூறி மக்களிடம் வலம் வருவதை கேள்விபடுகின்றோம். இயேசு எங்ஙனம் உடையனிந்திருந்தார் என்று மக்கள் நினைக்கின்றார்களோ அதேபோல் உடையனிவான். அன்பான மெல்லிய வார்த்தைகளை பேசுவதும், வேதவசனங்களை அதிகமாய் உபயேகிப்பதும், மிகவும் ஞானிகளைப் போல வலம் வருவார்கள். அதில் சிலர் கிறிஸ்து மறுபடியும். பூலோகத்திற்கு வந்திருக்கிறார் என மக்களை நம்பசெய்து, பெரியக் கூட்டத்தை கூட்டுவார் ஆனால் எவருமே கிறிஸ்துவல்ல என்று உறுதியுடன் கூற முடியும் எப்படி? இயேசுவிடம் எதை எதிர்ப்பார்ப்பீர்களோ அது அவர்களிடத்தில் காணப்படலாம். இயேசுவிடம் எத்தகைய வார்த்தைகளை எதிர்பார்ப்பீர்களோ அதைகூட அவர்களிடத்தில் காணப்படலாம்.


42

அவன் ஜனங்களை குணமாக்கி, பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்யும்போது வேதாகமத்தை சந்தேகிப்பதற்கான சோதனை உண்டாகக்கூடும். ஆயினும் நாம் என்ன கேட்கிறோம். என்னத்தைப் பாக்கிறோம், எப்படி உணருகிறோம் என நமது உணர்வுகளை நம்பாதிருப்போமாக.


43

ஒருவர் உண்மையானவரா அல்லது வேடதாரியா என்பதை தீர்மானிப்பதில் வேதாகமம் மட்டுமே தவறிழைக்காததாகும்.

3 ▯ மாபெரும் தப்புவிப்பு!

# 3  மாபெரும் தப்புவிப்பு!


44

நாம் வஞ்சிக்கப்படாதபடிக்கு கிறிஸ்துவின் வருகையைப் பற்றி சில அடையாளங்களை காண்போம்.


45

கிறிஸ்துவின் இரண்டாம் வருகை நாம் பார்க்கக்கூடியவிதத்தில் இருக்கும்.




46

(வசனம்: மத்தேயு 24:17)
மின்னல் கிழக்கிலிருந்து தோன்றி மேற்கு வரைக்கும் பிரகாசிக்கிறதுபோல மனுஷகுமாரனுடைய வருகையும் இருக்கும்.
மத்தேயு 24:27.
மேலும், வெளிப்படுத்தல் 1:7 ல் நாம் வாசிப்பதாவது.



47

(வசனம்: வெளிப்படுத்தல் 1:7)
இதோ மேகங்களுடனே வருகிறார். கண்கள் யாவும் அவரைக் காணும்.


48

போலி ஒருவேளை இங்கும் அங்கும் காணப்படலாம். ஆனால், ஏமாற்றுக்காரன் எல்லோரும் காணத்தகுந்த விதத்தில் மேகங்களின்மேல் வரமுடியாது.



49

இயேசு பூமியில் தனது வேலையை முடித்தபின், பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் வேளையில்.


50

அவர் தமக்கு மிகவும் நெருக்கமானவர்களை ஒலிவ மலைக்கு அழைத்து அவர்களுக்கு உபதேசித்த பின்பு. பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்டார்.

# 3 □ மாபெரும் தப்புவிப்பு!


51

இச்சம்பவத்தைக் குறித்து வேதாகமம் கூறுவதென்ன என்பதை கவனிப்போம்



52

(வசனம்: அப்போஸ்தலர் 1:9-11)
இவைகளை அவர் சொன்னபின்பு அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயரே எடுத்துக்கொள்ளப்பட்டார். அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக் கொண்டது.



53

அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பாாத்துக் கொண்டிருக்கையில், இதோ வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று.



54

கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பாாத்து நிற்கிறீர்கள்.



55

உங்களிடத்திினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு எழுந்தருளிப்போனாரோ அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள். அப்போஸ்தலா் 1:9-11.


56

தேவனிடத்திலிருந்து வந்த இரண்டு தூதர்கள் இயேசு சொன்ன வாக்குத்தத்தம் நிச்சயமாய் நிறைவேறும் என்று கூறினர்.



57

(வசனம்: லூக்கா 21:27)
அப்பொழுது மனுஷகுமாரன் மிகுந்த வல்லமையோடும். மகிமையோடும் மேகத்தின்மேல் வருகிறதை காண்பார்கள்.

# 3 மாபெரும் தப்புவிப்பு!


58

இயேசு வருகிறதைக் குறித்து எவரும் உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை. அவர் வேகத்தின் மேல வருகிறதை உன்னால் பார்க்க முடியும்.
இந்நிகழ்ச்சியை சாத்தானால் நடித்துக்காட்டஇயலாது.
கிறிஸ்து எங்கோ வனாந்திரத்திலே தோன்றப்போவதில்லை. அல்லது ஆகாய கப்பலில் வந்து இறங்கப்போவதில்லை.



59

இயேசு தனியாக திரும்பி வரமாட்டார். அது ஒரு மகிமையான சம்பவம்.



60

(வசனம் மத்தேயு 25:31)
அன்றியும் மனுஷகுமாரன் தமது மகிமை பொருந்தியானவராய்ச் சகல பரிசுத்த தூதரோடுங்கூட வரும்போது, தமது மகிமையுள்ள சிங்காசனத்தின் மேல் வீற்றிருப்பார் என இயேசு கூறினார். மத்தேயு 25:31



61

(வசனம் மத்தேயு 24:31)
இயேசு ஏன் தம்முடன் தூதர்களை அழைத்துக் கொண்டு வருகிறார்? அவர் கொடுக்கும் பதில் வலுவாய்த் தொனிக்கும் எக்காள சத்தத்தோடு அவர் தமது தூதர்களை அனுப்புவார்.



62

அவர்கள் அவரால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலிருந்து கூட்டிச் சேர்ப்பார்கள். மத்தேயு 24:31.


63

ஆம். இயேசுவுடன் கோடான கோடி பரிசுத்த தூதர்களும் வருவார்கள். அந்த மகிமையை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. தங்களை கிறிஸ்து என அழைத்துக் கொள்கிறவர்களால் ஏன் இந்த காரியத்தை செய்ய முடியாது என்பது இப்பொழுது உங்களுக்கு புரிகின்றதல்லவா?
இயேசுவின் வருகை போன்றதொரு சம்பவத்தை அவர்களால் காண்பிக்க முடியாது. எவராலும் முடியாது. மேலும் இயேசுவின் வருகையுடன் அனேக சம்பவங்கள் இணைந்துள்ளன.

# 3 □ மாபெரும் தப்புவிப்பு!



64

அவருடைய வருகையின் சத்தத்தை எல்லோரும் கேட்க முடியும். அப்பொழுது மரித்த பரிசுத்தவான்கள் கல்லறையிலிருந்து உயிர்த்தெழுவார்கள்.




65

(வசனம் 1 தெசலோனிக்கேயர் 4:16)
ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்.



66

அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.
1 தெசலோனிக்கேயர் 4:16.


67

இயேசுவின் வருகை பார்க்கக்கூடியதாக மட்டுமில்லாமல் எல்லோராலும் கேட்கக் கூடியதாகவும் இருக்கும். வலுவாய்த் தொனிக்கும் அந்த சத்தத்தைக் கேட்டு கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிர்த்து தங்கள் கல்லறைகளை விட்டு வெளியே வருவார்கள்.


68

கல்லறைகள் திறக்கப்பட்டு, குடும்ப அங்கத்தினர்ஒன்று சேர்க்கப்படும் போது உண்டாகும் மகிழ்ச்சியை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகின்றதா?


69


கிறிஸ்துவின் மெய்யான வருகையை ஏன் சாத்தானால் நடித்துக் காண்பிக்க முடியாது என்பதை உங்களால் விளங்கிக் கொள்ள முடிகிறதா?



70


இன்னும் அதிகமான நற்செய்தி, கிறிஸ்துவின் வருகையில் உயிரோடிருக்கிற பரிசுத்தவான்களுக்கு சம்பவிப்பதை கவனியுங்கள்.

# 3  மாபெரும் தப்புவிப்பு!



71

(வசனம் 1 தெசலோனிக்கேயர் 4:17.)
பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடு கூட ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டு .....



72

இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம். 1 தெசலோனிக்கேயர் 4:17.



73

(வீடியோ 4 வினாடிகள்)
உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள், மரித்து உயிர்த்தெழுந்தவர்களுடன் கர்த்தரைச் சந்திக்க ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றனர். அனேக குடும்பங்களும் ஒன்று கூடும். அந்த நாள் எத்தனை சந்தோஷமானது.


74

இயேசுவின் வருகையின் போது நடைபெறும் சம்பவங்களை பவுல் விளக்கமாக வர்ணிக்கிறார்.



75

(வசனம் 1 கொரிந்தியர் 15:51-53)
இதோ ஒரு இரகசியத்தை அறிவிக்கிறேன். .... நாம் எல்லோரும் மறுரூபமாக்கப்படுவோம்.



76


ஒரு நிமிடத்திலே, ஒரு இமைப்பொழுதிலே கடைசி எக்காளம். தொனிக்கும் போது.



77

மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம்.

# 3 □ மாபெரும் தப்புவிப்பு!



78

அழிவுள்ளதாகிய இது அழியாமையையும் சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக்கொள்ள வேண்டும்.
1 கொரிந்தியர் 15:51-53.


79

தேவன் தம்மை பின்பற்றுகிற ஒவ்வொருவருக்கும் தமது அன்பின் பரிசாகிய நித்திய வாழ்வைக் கொடுப்பார். அழியாமையென்னும் இந்த பரிசுக்கு முன்பாக மற்றெல்லா பரிசுகளும் அர்த்தமற்றவையாகும்.



80

(வசனம் பிலிப்பியர் 3:20, 21)
தேவன் தம்முடைய ஜனங்களுக்கு வேறொன்றையும் கொடுப்பார்.
கர்த்தராயிருக்கிற இயேசு கிறிஸ்து என்னும் இரட்சகர் வர எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறோம்.



81

அவர் நம்முடைய அற்பமான சரீரத்தை தம்முடைய மகிமையான சரீரத்துக்கு ஒப்பாக மறுரூபப்படுத்துவார்.
பிலிப்பியர் 3:20, 21.
கிறிஸ்துவின் சரீரத்திற்கு ஒப்பான சரீரம், வலியோ, வேதனையோ, வியாதியோ இல்லாத சரீரம். எத்தனை அருமையான செய்தி.



82

இங்கு மற்றொரு கூட்ட மக்கள். அவர்களுக்கு கிறிஸ்துவின் வருகை ஒரு நற்செய்தியாய் இராது. இவ்வுலக சரித்திரத்தில் நடைபெறப் போகும். அப்பூமி அதிர்ச்சியைப் பற்றி வேதாகமம் விவரிப்பதாவது?



83

(வசனம் : வெளிப்படுத்தல் 6:14-17)
வானமும் சுருட்டப்பட்ட புஸ்தகம் போலாகி விலகிப் போயிற்று.



84

மலைகள் தீவுகள் யாவும் தங்கள் இடங்களை விட்டு அகன்று போயிற்று.

# 3 □ மாபெரும் தப்புவிப்பு!



85

பூமியின் ராஜாக்களும், பெரியோர்களும், ஐசுவரியவான்களும், சேனைத் தலைவர்களும், பலவான்களும்.



86

பர்வதங்களிலும் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக் கொண்டு.




87

பர்வதங்களையும். கன்மலைகளையும், நோக்கி, நீங்கள் எங்கள் மேல் விழுந்து சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருடைய முகத்திற்கு மறைத்துக்கொள்ளுங்கள்.




88

அவருடைய கோபாக்கினையின் மகா நாள் வந்துவிட்டது. யார் நிலை நிற்கக்கூடும் என்றார்கள்.
வெளிப்படுத்தல் 6:14-17.




89

(வசனம் : வெளிப்படுத்தல் 16:18)
சத்தங்களும் இடி முழக்கங்களும் மின்னல்களும் உண்டாயின. பூமி மிகவும் அதிர்ந்தது.




90

பூமியின் மேல் மனுஷர்கள் உண்டான நாள் முதற்கொண்டு அப்படிப்பட்ட பெரிய பூமி அதிர்ச்சியுண்டானதில்லை.
வெளிப்படுத்தல் 16:18.


91

பூமியின் அனேக பட்டணங்கள் அழியும். கிறிஸ்துவின் வருகையில் நடைபெறப் போகும் இந்த பூமி அதிர்ச்சியை அனைவரும் சந்திக்க வேண்டியிருக்கும்.


92

எவரும் எதிர்பார்த்திராத வேளையில் தம்முடைய வருகை இருக்குமென இயேசு எச்சரித்திருந்தார். ஜனங்கள் தங்களது வாழ்நாட்களை சிற்றின்பங்களில் செலவிட்டு கொண்டிருப்பார்கள்.

# 3  மாபெரும் தப்புவிப்பு!



93

(வசனம் மத்தேயு 24:30)
மத்தேயு 24:30-ல் இயேசு வரும்போது பூமியிலுள்ள கோத்திரத்தாரெல்லாரும் கண்டு புலம்புவார்களென சொல்லப்பட்டுள்ளது.


94

அந்த நாளை சந்திக்க ஆயத்தமில்லாதவர்களுக்கு அப்படிதான் நடக்குமென இயேசு கூறினார். அவர்கள் அழிவார்கள் - என்பதை அவர்கள் அறிவார்கள். இந்நிலை மாற்றப்பட முடியும் என்பதிலிருந்து இது ஒரு சோகமான காட்சியாகும். நண்பர்களே அந்த நாள் ஒரு உண்மையான நாளாகும். இது ஒரு கனவு காட்சியல்ல. உண்மையான சம்பவமாகும்.


95

இயேசு வரும் போது அவரை சந்திப்பதற்கு ஆயத்தமாயிருப்பதைக் காட்டிலும் நமக்கு வேறொரு முக்கியமான காரியம் இவ்வுலகில் இல்லை. நாம் மிகவும் பெருமைப்பட்டுக் கொள்ளும் இவ்வுலக சம்பத்துக்களெல்லாம் ஒரு நிமிடத்தில் கடந்து போக கூடியவைகளாகும். ஒரேயொரு பூமி அதிர்ச்சி ஏற்பட்டால் போதும் அவ்வளவுதான்.



96

(வசனம் லூக்கா 21:36)
ஆகையால் இனிச் சம்பவிக்கப் போகிற இவைகளுக்கெல்லாம் நீங்கள் தப்பி மனுஷகுமாரனுக்கு முன்பாக நீங்கள் பாத்திரவான்களாக எண்ணப்படுவதற்கு எப்பொழுதும் ஜெபம் பண்ணி விழித்திருங்கள்.



97


மனுஷகுமாரனுக்கு முன்பாக நிற்க லூக்கா 21:36.



98


இதுவரைக்கும், வேதாகமத்திலிருந்து கற்றவைகளை சீக்கிரமாகத் திருப்பிப் பார்ப்போமாக.

# 3 மாபெரும் தப்புவிப்பு!





99

கள்ள தீர்க்கதரிசிகளும் கள்ள கிறிஸ்துகளும் ஒவ்வொருவரையும் வஞ்சிக்க முயற்சிப்பார்கள்.





100

சாத்தான் ஒளியின் தூதனைப் போல வெளிப்படுவான்.




101

இரண்டாம் வருகை இரகசியமாயிராது.





102

இயேசு வருவதை எல்லா கண்களும் காணும்.





103

எல்லா பரிசுத்த தூதர்களும் இயேசுவுடன் வருகின்றனர்.





104

எக்காள சத்தத்துடன் அவர் வருவார்.




105


பிரதான தூதனுடைய சத்தத்தோடும் அவர் வருவார்.




106


மரித்த பரிசுத்தவான்கள் உயிரோடு எழுந்திருக்கின்றனர்.

# 3  மாபெரும் தப்புவிப்பு!




107

உயிரோடிருக்கம் பரிசுத்தவான்கள். மரணத்தை காணாமல் மறுரூபமாக்கப்படுகின்றனர்.




108

எல்லா பரிசுத்தவான்களுக்கும் சாவாமை கொடுக்கப்படுகின்றது.




109

பூமியலுள்ள துன்மார்க்கர் யாவரும் இயேசுவைக் கண்டு புலம்புவார்கள்.



110

ஒரு பெரும் பூமி அதிர்ச்சி பூமியை நாசப்படுத்தும்.



111

இரட்சிப்பை இழக்கும் அனைவரும் அதமாக்கப்படுகின்றனர்.



112

நம் கண் கண்டவைகளையெல்லாம் சொல்ல முடியாது. மனித பேனாக்களால் அதை வர்ணிக்க முடியாது. மேலும் கிறிஸ்துவின் மகத்துவமான வருகையின் மகிமையின் பிரகாசத்தை மனித எண்ணத்தால் கிரகிக்க முடியாது. ஆயினம், வேத எழுத்தாளர்களும், ஓவியர்களும் கிறிஸ்துவின் வருகையின் காட்சியை எங்ஙனம் சித்தரிக்க முற்பட்டுள்ளனர் என்பதனை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விரும்புகிறோம்.



113

யாரும் எதிர்பார்த்திராத சூழ்நிலையில் இயேசு வருவார். தனது குமாரனின் வருகையின் நாளையும், வேளையையும் தேவனுடைய தொனி இடி முழக்கம் போல பூமியெங்கும் அறிவிக்கும்.

# 3 □ மாபெரும் தப்புவிப்பு!


114

வானம் சுருட்டப்பட்ட புத்தகம் போல விலகிப் போகும். பூமி அவருக்கு முன் அதிரும். எல்லா பர்வதங்களும் தீவுகள் யாவும் அதனுடைய இடத்திலிருந்து அகன்றுபோம்.


115

சீக்கிரமாக கிழக்கே வெகுதூரத்தில் உள்ளங்கையளவுள்ள ஒரு கருமேகம் காணப்படும்.


116

அந்த மேகம் பூமியை நெருங்க நெருங்க பிரகாசமாகவும் மகிமை நிறைந்ததாகவும், அதை சுற்றிலும் வானவில்லுடனும் காட்சி அளிக்கும். பயபக்தியுடன் தேவனுடைய ஜனங்கள் அந்த காட்சியை காண்பார்கள். ஆச்சரியப்படக் கூடியதாயிருக்கும்.


117

கிறிஸ்துவின் சிங்கசானத்தைச் சூழ ஆயிரமாயிரமான, கோடா கோடியான தூதர்கள் சூழ்ந்திருக்கும் காட்சி கண்கொள்ளா காட்சியாகும்.


118

அந்த பரலோக மகிமை பூமியை நெருங்கும்போது, வரப்போகும் அந்த ராஜாவை கண்கள் யாவும் காணும். அந்த புனிதரின் தலையை முள்கிரீடமல்ல அவரின் தலையில் மகிமை தங்கியிருக்கும். அவருடைய வஸ்திரத்தின் மேலும் தொடையின் மேலும், இராஜாதி இராஜா கர்த்தாதி கர்த்தா என்னும் நாமம் எழுதப்பட்டிருக்கும்.


119

பூமியின் ராஜாக்களும் பெரியோர்களும் ஐசுவரியவான்களும், சேனைத்தலைவர்களும், பலவான்களும், அடிமைகள் யாவரும், சுயாதீனர் யாரும் பர்வதங்களின் குகைகளிலும் கன்மலைகளிலும் ஒளித்துக் கொண்டு பர்வதங்களையும் கன்மலைகளையும் நோக்கி எங்கள் மேல் விழுந்து, ஆட்டுக்குட்டியானவருடைய முகத்திற்கு எங்களை மறைத்துக் கொள்ளுங்கள் என்பார்கள்.

# 3 □ மாபெரும் தப்புவிப்பு!



120

தேவனுடைய பிள்ளைகளை உபத்திரவப் படுத்தி கொன்றவர்கள் தேவகுமாரனாகிய கிறிஸ்துவை பரியாசம் செய்து நிராகரித்து, அவரை சிலுவையில் அறையும் சிலுவையில் அறையும் என்று குரல் எழுப்பினவர்கள் இப்போது அவருக்கு முன் நிற்கின்றனர். அவர்கள் இருதயம் உடைந்து, கால்கள் தள்ளாடி ஒன்றோடு ஒன்று மோதிக் கொண்டு, பயத்தோடும், நடுக்கத்தோடும் கதறி அழுகின்றனர்.



121

அவரே தேவகுமாரன். அவரே மெய்யான மேசியா.


122

அவர்கள் அவரை எல்லா மகத்துவத்தோடும் கண்டபோதிலும் அதிகாரம் அவரது வலதுபுறத்தில் இருப்பதை இன்னமும் காணவில்லை.


123

அவரை தேவகுமாரனாக காணும் போது பேச்சற்றவர்களாகின்றனர். பெருமை பிடித்த ஏரோது அவரை பரியாசம் செய்து ராஜாவே வாழ்க என்றான். சேவகர்கள் முட்கிரீடத்தை சூடினர்.


124

அவருக்கு ராஜ வஸ்திரத்தை உடுத்தி தலையில் முள் முடியை சூடி, அவருடைய கரத்தில் ஒரு கோலை கொடுத்து அவருக்கு முன்பாக பரியாசமாக பணிந்து கொண்டவர்கள் - இப்போது அவருக்கு முன் நிற்கின்றனர்.


125

ஜீவாதிபதியின் மேல் உமிழ்ந்து துப்பி அவரை அடித்தவர்கள் இப்போது கிறிஸ்துவின் பார்வையிலிருந்து தப்பி ஓட நினைக்கின்றனர்.

# 3 □ மாபெரும் தப்புவிப்பு!


126

அவருடைய கைகளிலும் கால்களிலும் ஆணிகளால் துளைத்தவர்கள். இப்போது அவருடைய தழும்புகளைப் பார்த்து பயத்துடனும், கலக்கத்துடனும் நிற்கின்றனர். அப்படியே அதிகாரிகளும், ஆசாரியர்களும் கல்வாரி சம்பவத்தை நினைத்துப் பார்க்கின்றனர். பிறரை ரட்சித்தான். தன்னைத் தான் இரட்சிக்க திராணியில்லாதவன் என்று தாங்கள் கூறிய வார்த்தைகளை நினைத்துப் பார்க்கின்றனர்.


127

இஸ்ரவேலரின் இராஜாவானால் அவன் சிலுவையை விட்டு கீழே இறங்கி வரட்டும்.
பிறகு நாங்கள் அவரை நம்புவோம்.


128

கிறிஸ்துவையும் அவருடைய பின்னடியார்களையும் அழித்தவர்கள் இப்போது அவர்களில் தேவமகிமை தங்குவதை காண்கின்றனர். பயத்தோடிருக்கும் இவ்வேளையில் பரிசுத்தவான்கள் இடும் மகிழ்ச்சி ஆரவாரம் அவர்கள் காதுகளில் விழுகின்றது.



129

(வசனம் ஏசாயா 25:9)
இதோ இவரே நம்முடைய தேவன். இவருக்காகக் காத்திருந்தோம். இவரே நம்மை இரட்சிப்பார்.



130

(வீடியோ பிரிவு 11)
பூமி அதிர்ந்து, மின்னல் பிரகாசித்து, இடி இடிக்கும் போது, தேவக்குமாரனுடைய சத்தம் மரித்த பரிசுத்தவான்களை அழைத்தது.
பரிசுத்தவான்களின் கல்லறைகளை அவர் பார்த்த பின், தனது கரங்களை வானத்துக்கு நேரே உயர்த்தி எழுந்திருங்கள், எழுந்திருங்கள், பூமியில் படுத்துக்கிடக்கிறவர்களே எழுந்திருங்கள் என்பார்.


131

பூமியெங்கிலும் அவருடைய சத்தம் தொனிக்கும். அவருடைய சத்தத்தைக் கேட்டு எழுந்திருப்பார்கள். பூமியெங்கிலுமிருந்து, சகல ஜாதிகளிலும் பாஷைகளிலும் ஜனக்கூட்டத்திலுமிருந்து ஒரு பெரும் படையே எழும்பும்.

# 3 □ மாபெரும் தப்புவிப்பு!


132

மரணமென்னும் சிறைச்சாலையிலிருந்து நித்திய நித்திய மகிமையைத் தரித்துக் கொண்டவர்களாய் அவர்கள் மரணமே உன் கூர் எங்கே? பாதாளமே உன் ஜெயம் எங்கே? என்று சத்தமிடுவார்கள்.
உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களும், உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களும் இணைந்து நீண்ட நெடிய வெற்றிக் களிப்புடன் ஆரவாரமிடுவர். எல்லா ஊனமும் கல்லறையிலேயே விட்டுவிடப்படும்.
வெகுகாலம் பேசிக்கொண்டிருந்த, எதிர்பார்த்த, நம்பிக் கொண்டிருந்த, ஆனால் முழுவதுமாய் அறிந்து கொள்ளமுடியாத அது என்ன அற்புதமான மீட்பு.


133

உயிரோடுள்ள பரிசுத்தவான்கள் ஒரு இமைப்பொழுதிலே மறுரூபமாவார்கள். தேவசத்தம் அவர்களை மகிமைக்குட்படுத்தும். இப்பொழுது அவர்கள் உயிர்த்தெழுந்த பரிசுத்தவான்களுடன் நித்தியத்தை தரித்துக் கொண்டவர்களாய் கர்த்தரைச் சந்திக்க ஆகாயத்தில் எடுத்துக் கொள்ளப்படுகின்றனர்.


134

தேவதூதர்கள் அவரால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களை ஆகாயத்தின் ஒரு முனைமுதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலும் இருந்து கூட்டிச் சேர்க்கிறார்கள். சிறு குழுந்தைகளை தேவதூதர் சுமந்துக்கொண்டு அவர்களுடைய தாயார்களின் கரதில் ஒப்புவிக்கின்றனர்.


135

மரணத்தால் வெகுகாலமாக பிரிக்கப்பட்டிருந்த நணபர்கள், மறுபடியும் பிரிக்க முடியாதபடி இணைக்கப்பட்டு மகிழ்ச்சி கீதங்களோடு ஆகாயததில் எடுத்துக் கொள்ளப்பட்டு தேவனுடைய நகரத்தை அடைகின்றனர்.


136

பரலோகத்திற்கு செல்லும் போது, தூதசேனைகள் சர்வ வல்லமையுள்ள தேவன் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர் என்று ஆரவாரமிடும்போது, மீட்கப்பட்டோர் அல்லேலூயா என்று மகிழ்ச்சி ஆரவாரமிடுகின்றனர்.

# 3 □ மாபெரும் தப்புவிப்பு!


137


பரிசுத்த நகரத்திற்குள் பிரவேசிக்குமுன் இரட்சகர் அவருடைய பிள்ளைகளுக்கு வெற்றியின் சின்னத்ததை தரித்து, ராஜரீக அந்தஸ்தை கொடுக்கிறார். எண்ணிலடங்கா மீட்கப்பட்ட கூட்டத்தாரின் கண்கள் யாவும் தேவன்பேரில் வைக்கப்பட்டிருக்கும். நமக்காக அந்தக் கேடு அடைந்து இப்போது மகிமை நிறைந்த அந்த முகத்தை நோக்கிப் பார்ப்பார்கள்.


138

ஜெயம் பெற்ற ஒவ்வொருவரின் தலையிலும் இயேசு தமது வலது கரத்தால் மகிமை சிறந்த, கிரீடத்தை வைப்பார். ஒவ்வொரு கிரீடத்திலும் புதிய நாமத்துடன், கர்த்தருக்குப் பரிசுத்தம் என்று எழுதப்பட்டிருக்கும். சொல்லிமுடியாத மகிழ்ச்சி ஒவ்வொரு இருதயத்தையும் நிரப்பும். ஒவ்வொரு நாவிலும் நன்றியுடன் கூடிய துதிப்பாடல் எழும்பும்.


139

பரிசுத்த நகரத்திற்கு முன்பாக வந்து நிற்கும்போது, முத்துக்களால் ஆன வாசலை இயேசு தாமே விரிவாய் திறக்கிறார். தேவனுடைய பிரமாணங்களை கடைபிடித்து இயேசுவின் மேல் விசுவாசத்தை கொண்ட ஜாதி இப்பொழுது உள்ளே பிரவேசிக்கிறது.



140

(வசனம்: மத்தேயு 25:34)
வாருங்கள் என்பிதாவினால் ஆசீர்வதிக்கப்பட்டவர்களே, உலகம் உண்டானது முதல் உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிற இராஜ்யத்தை சுதந்தரித்துக் கொள்ளுங்கள். மத்தேயு 25:34.


141

இதுவே நமது நம்பிக்கை. இதுவே நமது கதி.
இதுவே நமது எதிர்காலம். கிறிஸ்துவோடு நித்தியமாக நாம் வாழ முடியும். நித்தியத்தை இழந்துபோவோமானால், எல்லாவற்றையும் இழந்தவர்களாவோம். பரலோகத்தை இழந்தோமானால் எல்லாவற்றையும் இழந்தவர்களாவோம்.
கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகைக்காக நாம் ஆயத்தப்படாவிட்டால், யுகம் நெடுகிலும் எதிர்நோக்கிய ஒரு பெரும் சம்பவத்தை இழந்தவர்களாவோம்.
இயேசு அழைக்கிறார். மன்னிப்பைப் பெற வா.
இரக்கத்தினிடம் வா.
உனது பாவத்தின்மேல் வல்லமை பெற வா.
நித்தியத்திற்கு வா. என்னுடைய ராஜ்யத்திற்குள் வா.
அவருடைய அழைப்புக்கு இப்பொழுதே ஆம் என்ற சொல்லமாட்டாயா? அவருடைய நித்திய ராஜ்யத்திற்கு விரும்புவாயானால் இப்பொழுதே ஜெபிக்க நீ எழுந்து நிற்பாயா.

# 4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?



1


வாழ்வின் பரம இரகசியத்தை கண்டு கொள்ளுதல்


2

நீங்கள் கடற்கரைக்கருகில் வசிப்பவர் என்று வைத்துக்கொள்ளுங்கள். ஒரு காலைப் பொழுதில் நடந்து வரும்போது உதித்து வரும் சூரியஒளி தண்ணீரில் பட்டு மிளிருவதையும், அலைகள் கடற்பரப்பில் மோதுவதையும் காணுவது மகத்துவமான காட்சியல்லவா?


3

அற்புதமான, அமைதியான சூழலில் கடற்கரை மணலின் மீது நடக்கும் போது பாதச்சுவடுகளை காண்கின்றீர்கள். பல பாதச் சுவடுகளை கண்டாலும் எவ்வித மனிதரையும் காணவில்லை. இது என்ன பாடத்தை சொல்லிக்கொடுக்கின்றது? மனிதர்களை பார்க்கவில்லையெனினும், யாரோ, மனிதர்கள் நடந்து சென்றதை உறுதிப்படுத்தவில்லையா? மற்றொரு வினாவை எழுப்புகிறேன்.


4

வெளியே நின்று உங்களை சுற்றி என்ன பார்க்கின்றீர்கள்? புல்வெளி, மரங்கள், குன்றுகள், மலை, பூக்கள், நீரூற்றுகள், குளம், தண்ணீர், விலங்கினங்கள்.


5

அவ்வாறு நின்றுகொண்டிருக்கும் போது நீங்கள் எதன் மீது கால் வைத்து கொண்டிருக்கிறீர்கள்.
ஆம். நீங்கள் பூமியின் மேல் தட்டில் நின்று கொண்டிருக்கிறீர்கள்.


6

மேல்நோக்கிப்பாருங்கள். என்ன பார்க்கின்றீர்கள்?


7

பகல் வேளையில் சூரியனை, வானத்தை, மேகத்தைப் பார்க்கலாம்.

4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?


# 4 தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?


8

இரவு வேளையில் ஆயிரக்கணக்கான நட்சத்திரங்களைக் காணலாம். சில வேளைகளில் நிலவையும் காணலாம்.


9

இவைகள் அங்கே எப்படி உதித்தன? நீங்கள் எப்படி இங்கு வந்தீர்கள். உங்களை உருவாக்கினது யார்?


10


சிலர் உயிர் கடலிலுள்ள சிறிய அணுவிலிருந்து உருவானது என்றும், அச்சிறு அணு பலுகிப் பெருகி பல அணுக்களை உருவாக்கினது என்றும் கூறுகின்றனர் மேலும் அவை கோடிக்கணக்கான வருஷங்களில் கால் முளைத்து, வளர்ந்து, பூமியையும், நீர்ப்பரப்பையும் நிரப்பினது.


11

லட்சக்கணக்கான மக்கள் உலகம் உண்டான, உயிரினங்கள் தோன்றிய வரலாற்றையும், பலவிதங்களில் நம்பியிருப்பினும், ஒரு நிலைப்பாடு தெளிவாக நம்பப்பட்டிருக்கிறது. அதென்னவெனில், ஒரு சிருஷ்டி-கர்த்தர் இவ்வுலகைப் படைத்தார் என்பதாகும். ஆனால் எந்த தேவன்?


12

நவீன காலத்தில் மக்கள் அநேக தேவர்களை வணங்குகின்றனர். புத்தர், முகமது நபி, ஷின்டோ, இந்துமத தேவர்கள் மற்றும் பலர் தெய்வமாக போற்றப்படுகின்றனர். இத்தெய்வங்களை வணங்குகின்றவர்கள் இத்தெய்வங்கள் தான் மாபெரிய தேவன் என்று நம்புகின்றனர்.


13

இவ்வுலகில் அநேக தெய்வங்கள் பேசப்படினும், ஒரே ஒருவரைத் தான் சிருஷ்டி கர்த்தாவாக போற்ற முடியும். அந்த தேவன் தான் வேதம் சொல்லுகின்ற கடவுள். ஆகையால் சிருஷ்டி கர்த்தர் யார் என்பதை வேதத்தின் மூலம் அறிய முயற்சிப்போம்.



14

ஒரு இல்லத்தை காணும்போது அது எப்படியோ விபத்தாக அவ்விடம் வந்ததா? இல்லை. யாரோ ஒருவர் அதை உருவாக்கினார் அல்லவா?

# 4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?


15

ஒரு சாலையை பார்க்கும் போது, அது தானாக உண்டானதா? அல்லது யாரோ ஒருவர் அல்லது பலர் முயற்சியினால் உண்டானதா? சாலை, வீடு என்பவைகளைக் காட்டிலும், உலகமும், மக்களும் உண்டானது மேன்மையானதல்லவா? ஆகையால் மக்களையும், மிருகங்களையும் நட்சத்திரங்களையும், அறிவு பூர்வமாக சிந்தித்துப் பார்த்தால் இது யாரோ ஒருவரால் உண்டானதல்லவா?
யாரோ ஒருவர் இவற்றையெல்லாம் திட்டமிட்டு, பின் உண்டாக்கியிருக்கிறார்.


16

நானே வடிவமைத்தவர், சிருஷ்டிகர் என்று உரிமை பாராட்டுகின்ற ஆண்டவரை அறிந்துக் கொள்ள தொடங்குவோம். அவருடைய வேதப்புத்தகத்திலிருந்து இவ்வுலகம் எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதை அறிய முயற்சிப்போம். முதல் நாள் என்ன நடந்தது? ஆதியிலே தேவன் வானத்தையும் பூமியையும் சிருஷ்டித்தார்.



17

(வசனம் ஆதியாகமம் 1:1) வாரத்தில் முதலாம் நாளிலே தேவன் பூமியை உண்டாக்கினார். ஆதியாகமம் 1:1.



18

(வசனம் ஆதியாகமம் 1:3)
தேவன் வெளிச்சம் உண்டாகக் கடவது என்றார். வெளிச்சம் உண்டாயிற்று. ஆதியாகமம் 1:3.



19

(வசனம் ஆதியாகமம் 1:4,5)
வெளிச்சம் நல்லது என்று தேவன் கண்டார். வெளிச்சத்தையும், இருளையும் தேவன் வெவ்வேறாகப் பிரித்தார்.



20

சாயங்காலமும் விடியற்காலமுமாகி முதலாம் நாள் ஆயிற்று ஆதியாகமம் 1:4,5
வாரத்தில் முதலாம் நாளிலே தேவன் பூமியை உண்டாக்கினார். தேவன் வெளிச்சத்தை உண்டாக்கி பகல் இரவு என்ற காலத்தை ஏற்படுத்தினார்.

4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?

# 4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?




21

(வசனம் ஆதியாகமம் 1:6)
இரண்டாம் நாள்
பின்பு தேவன் ஜலத்தின் மத்தியில் ஆகாய விரிவு உண்டாகக் கடவது என்றும், அது ஜலத்தினின்று ஜலத்தைப் பிரிக்கக் கடவது என்றும் சொன்னார்.
ஆதியாகமம் 1:6.




22

(வசனம் ஆதியாகமம் 1:7)
அது அப்படியே ஆயிற்று.
ஆதியாகமம் 1:7.



23

(வசனம் ஆதியாகமம் 1:8) தேவன் ஆகாயவிரிவை உண்டாக்கி வானம் என்று பேரிட்டார்.
சாயங்காலமும் விடியற்காலமுமாகி இரண்டாம் நாள் ஆயிற்று. இரண்டாம் நாளில் தேவன் வானத்தை நமக்கு மேலாக படைத்தார். ஆகாய விரிவுக்குக் கீழாக இருக்கிற ஜலத்திற்கும், ஆகாய விரிவுக்கு மேலே இருக்கிற ஜலத்திற்கும் பிரிவுண்டாக்கினார்.




24

(வசனம் ஆதியாகமம் 1:9) மூன்றாம் நாள்,
பின்பு தேவன் வானத்தின் கீழே இருக்கிற ஜலம் ஓரிடத்தில் சேரவும் வெட்டாந்தரை காணப்படவும் கடவது என்றார்.



25

அது அப்படியே ஆயிற்று. ஆதியாகமம் 1:9



26

(வசனம் ஆதியாகமம் 1:11) பின்புசாயங்காலமும் விடியற்காலமுமாகி மூன்றாம் நாள் ஆயிற்று.
மூன்றாம் நாள் தேவன்: வெட்டாந்தரையையும் சமுத்திரத்தையும், பூமியை நிரப்பும் புல் பூண்டுகளையும் உண்டாக்கினார்.




27

தங்கள் விதையையுடைய கனிகளை தங்கள் தங்கள் ஜாதியின்படியே கொடுக்கும் கனிவிருட்சங்களையும் முளைப்பிக்கக் கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. ஆதியாகமம் 1:11.





28

(வசனம் ஆதியாகமம் 1:13) சாயங்காலமும் விடியற்காலமுமாகி மூன்றாம் நாள் ஆயிற்று. ஆதியாகமம் 1:13
பின்பு தேவன் : பகலுக்கும், இரவுக்கும் வித்தியாசம் உண்டாக்கத்தக்கதாக வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்கள் உண்டாக்கக்கடவது என்றார்.





29

(வசனம் ஆதியாகமம் 1:14, 15)
நான்காம் நாள்
பின்பு தேவன் பகலுக்கும் இரவுக்கும் வித்தியாசம் உண்டாகக் கடவது என்றார்.




30

அவைகள் அடையாளங்களுக்காகவும், காலங்களையும், வருஷங்களையும் குறிக்கிறதற்காகவும் ....




31

அவைகள் பூமியின் மேல் பிரகாசிக்கும்படி வானம் என்கிற ஆகாய விரிவிலே சுடர்களாயிருக்கக்கடவது என்றார். அது அப்படியே ஆயிற்று. ஆதியாகமம் 1:14,15.




32

(வசனம் ஆதியாகமம் 1:18,19)
தேவன் அது நல்லது என்று கண்டார்.




33

சாயங்காலமும் விடியற்காலமுமாகி நாலாம் நாள் ஆயிற்று. ஆதியாகமம் 1:19
நான்காம் நாள் தேவன் சூரியன், சந்திரன் வானில் பிரகாசிக்கக் கட்டளையிட்டார். நட்சத்திரங்களையும் உண்டாக்கினார்.




34

(வசனம் ஆதியாகமம் 1:20) ஐந்தாம் நாளில் தேவன் எதை உருவாக்கினார்? பின்பு தேவன் நீந்தும் ஜீவஜந்துக்களை ஜலமானது திரளாய் ஜனிப்பிக்கக்கடவது.

4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?

# 4 □ தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?



35

தேவன் மகா மச்சங்களையும், ஜலத்தில் தங்கள் தங்கள் ஜாதியின் படியே திரளாய் ஜனிப்பிக்கப்பட்ட சகலவித நீர் வாழும் ஜந்துக்களையும், (சிறகுள்ள ஜாதி ஜாதியான சகலவித பட்சிகளையும் சிருஷ்டித்தார்). ஆதியாகமம் 1:20.



36

(வசனம் ஆதியாகமம் 1:23)
சாயங்காலமும் விடியற்காலமுமாகி ஐந்தாம் நாள் ஆயிற்று.
ஆதியாகமம் 1:23 ஜாதி ஜாதியான சகலவித பட்சிகளையும் உண்டாக்கினார்.



37

(வசனம் ஆதியாகமம் 1:24) ஆறாவது நாள் சிருஷ்டிப்பு மிக முக்கியமானது.
பின்பு தேவன் பூமியானது ஜாதி ஜாதியான ஜீவ ஜந்துக்களை உருவாக்கக்கடவது என்றார்.



38

நாட்டு மிருகங்களையும், ஊரும் பிராணிகளையும், காட்டு மிருகங்களையும் ஜாதி ஜாதியாய் பிறப்பிக்கக்கடவது என்றார் அது அப்படியே ஆயிற்று. ஆதியாகமம் 1:24.



39

(வசனம் ஆதியாகமம் 1:26,27) தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்.



40

அவர்கள் சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்து பறவைகளையும், மிருக ஜீவன்களையும் .....



41

பூமியனைத்தையும், பூமியின் மேல் ஊரும் சகல பிராணிகளையும் ஆளக்கடவர்கள். ஆதியாகமம் 1:26.

# 4 தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?



42

தேவன் தம்முடைய சாயலாக மனுஷனைச் சிருஷ்டித்தார். அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்.




43

ஆணும் பெண்ணுமாக அவர்களை சிருஷ்டித்தார்.




44

(வசனம் ஆதியாகமம் 1:31) அப்பொழுது தேவன் தாம் உண்டாக்கின எல்லாவற்றையும் பார்த்தார். அது மிகவும் நன்றாயிருந்தது.



45


சாயங்காலமும், விடியற்காலமுமாகி ஆறாம் நாள் ஆயிற்று. ஆதியாகமம் 1:31 ஆறாம் நாள் தேவன் மிருகங்களை உண்டாக்கினார். பின் சிருஷ்டிப்பின் சிகரமாக மனிதனை உண்டாக்கினார்.


46

ஆதாமும் ஏவாளும் பரிணாம வளர்ச்சி பெற்று உலகில் வரவில்லை. அவர்களுடைய சரீரம் வடிவமைக்கப்பட்டு தேவசாயலில் உருவாக்கப்பட்டது என்று வேதம் கூறுகிறது.


47

இவர் பெரிய பொறியாளர் - ஞானமான வடிவமைப்பாளர். இவரே நம்மை உண்டாக்கினார். ஏழாம் நாள். ஏழாம் நாளில், சிருஷ்டிப்பை தேவன் முடித்தார். ஆகையால் தேவன் ஏழாம் நாளை ஓய்வு நாளாக்கினார்.



48

(வசனம் ஆதியாகமம் 2:1,2) தேவன் பூமியையும் அதிலுள்ளவற்றையும், மனிதனையும் எவ்வாறு உண்டாக்கினார் என்பதை பார்த்தோம்.




49

தேவன் தாம் செய்த தம்முடைய கிரியையை ஏழாம் நாளிலே நிறைவேற்றி,

4 தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?

# 4 தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?




50

தாம் உண்டாக்கின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்தபின்பு ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார். ஆதியாகமம் 2:1, 2



51

பின்பு தேவன் தாம் சிருஷ்டித்து உண்டு பண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால் தேவன் ஏழாம் நாளை ஆசிர்வதித்து அதை பரிசுத்தமாக்கினர். பின்வரும் கூட்டங்களில் இந்த ஏழாம் நாள் குறித்தும் தேவன் ஓய்ந்திருந்ததைக் குறித்தும் அதிகமாய் பேசுவோம்.


52

இன்னும் அதிகமாக இந்த ஆச்சரியமான வடிவமைப்பாளரையும், சிருஷ்டிகரையும் பார்ப்போம்.


53

இன்னும் அதிகமாக இந்த ஆச்சரியமான வடிவமைப்பாளரையும், சிருஷ்டிகரையும் பார்ப்போம்.


54

நம்முடைய சரீரமானது இந்த வடிவமைப்பினையும் சிருஷ்டிகளைக் குறித்தும் ஆச்சரியமான உண்மைகளை வெளிப்படுத்துகின்றது.


55

நம்முடைய சரீரத்தின் ஒரு அவயமாகிய கண்ணைக்குறித்து சிந்திப்போம்.



56

(வீடியோ 10 வினாடிகள்) நம்முடைய கண்களை ஒப்பிடும் போது உலகின் நுன்னிய நவீன காமிராக்களெல்லாம் பிள்ளைகள் விளையாடும் பொம்மை போன்றது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

# 4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?


57

இவ்வுலகில் உள்ள நவீன சோதனைக்கூடங்களில் செய்ய முடியாத வேலைகளையும் கண் பார்த்து, செய்தியை உடனடியாக புரிந்து கொள்ளச் செய்ய முடியும்.
நம் மூளையின் செல்கள் அதை செய்தியாக மாற்றும் செயல்கள் அதிசயிக்கத்தக்கது. இதைக் காட்டிலும் அதிசயிக்கத்தக்கது உலகில் ஒன்றும் இருக்க முடியாது.


58

நம்முடைய கண்கள் மூலம் தேவன் இவ்வுலகிலுள்ள அதிசயங்களையும் அவர் உண்டாக்கின இந்த அண்ட சராசரங்களையும் காணச் சொல்கிறார். சங்கீதக்காரர் சொல்வதை பாருங்கள்.



59

(வசனம் சங்கீதம் 139:14) நான் பிரமிக்கத் தக்க அதிசயமாய் உண்டாக்கப்பட்டபடியால் உம்மை துதிப்பேன்.



60

உமது கிரியைகள் அதிசயமானவைகள் அது என் ஆத்துமாவுக்கு நன்றாய்த் தெரியும் சங்கீதம் 139:14..
மனிதனின் சரீரமும், மனமும் ஒன்றுக்கொன்று பிரச்சினையானவை. எனவே மிக ஞானமுள்ள ஒருவரே அதை வடிவமைத்திருக்க வேண்டும்.


61

மற்ற உலகங்கள் எப்படிப்பட்டது? தேவன் உலகை வடிவமைத்து அண்ட சராசரங்களையும் உருவாக்கினார் என்பதற்கு வேறு என்ன அடையாளங்கள்?


62

ஏசாயா என்ற பக்தன் உலகின் அற்ப காரியங்களிலிருந்து நமது பார்வையை அகற்றி தேவன் வானத்தில் உண்டாக்கியுள்ள அதிசயங்களை பாருங்கள் என்கிறார்.



63

(வசனம் ஏசாயா 40:26) வானத்தில் உள்ள எண்ணற்ற நட்சத்திரங்களை அண்ணாந்து பாருங்கள். அவை எங்கிருந்து வந்தன? வானத்தில் எவ்வளவு நட்சத்திரங்கள் உள்ளன?

# 4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?



64

அவைகளையெல்லாம் பேர் பேராக அழைக்கிறவராமே, அவருடைய மகா பெலத்தினாலும், அவருடைய மகா வல்லமையினாலும்.



65


ஒன்றும் குறையாமலிருக்கிறது. ஏசாயா 40:26


66

வானத்தில் உள்ள எண்ணற்ற நட்சத்திரங்களை அண்ணாந்து பாருங்கள். அவை எங்கிருந்து வந்தன? வானத்தில் எவ்வளவு நட்சத்திரங்கள் உள்ளன?


67

இவைகளின் எண்ணிக்கையை குறித்து ஆண்டவர் கூறின ஒரு விளக்கத்தைப் பாருங்கள். ஒரு நாள் யூத சந்ததியின் தகப்பனாகிய ஆபிரகாமை வெளியே அழைத்து இரவில் வானத்தின் நட்சத்திரங்களை எண்ணச் சொன்னார்.



68

(வசனம் ஆதியாகமம் 15:5) நீ வானத்தை அண்ணாந்து பார். நட்சத்திரங்களை எண்ண உன்னாலே கூடுமானால் அவைகளை எண்ணு என்று சொல்லி, பின்பு அவனை நோக்கி, உன் சந்ததி இவ்வண்ணமாய் இருக்கும் என்றார். ஆதியாகமம் 15:5


69

சமீபத்தில் ஒரு வானசாஸ்திரி சொன்னார். கடற்கரையில் உள்ள எல்லா மணலையும் எண்ணக் கூடுமானால் கிட்டத்தட்ட அந்தளவு நட்சத்திரங்கள் வான மண்டலத்தில் உண்டு.


70


நீங்கள் கடற்கரையில் இருக்கும் போது ஒரு வாளி மணலை எடுத்து எண்ணிப் பாருங்கள். அதிக நேரம் ஒதுக்குங்கள். தாவீது சொல்வதில் ஆச்சரியமில்லை.

# 4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?



71

(வசனம் சங்கீதம் 8:3,4) உமது விரல்களின் கிரியையாகிய உம்முடைய வானங்களையும், நீர் ஸ்தாபித்த சந்திரனையும் நட்சத்திரங்களையும் நான் பார்க்கும் போது



72

மனுஷனை நீர் நினைக்கிறதற்கும் மனுஷ குமாரனை நீர் விசாரிக்கிறதற்கும் எம்மாத்திரம்? சங்கீதம் 8:3,4.



73

(வீடியோ 20 வினாடிகள்) எல்லா வல்லமையான தேவன், உலகின் சகல சிருஷ்டிகளையும் ஆண்டு வழி நடத்தி - நம்முடைய தேவைகளையும் சந்திப்பது எவ்வளவு ஆச்சரியம். தேவனுடைய விருப்பமில்லாமல் ஒரு அடைக்கலான் குருவி கூட கீழே விழுவதில்லை.




74

(வசனம் மத்தேயு. 10:31).
ஆதலால் பயப்படாதிருங்கள். அநேகம் அடைக்கலான் குருவிகளைப் பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள். மேலும் தேவனுடைய அன்பையும் அரவனைப்பையும் குறித்து வலியுறுத்த இயேசு கூறுவதைக் கேளுங்கள்:



75

(வசனம் மத்தேயு 10:30) உங்கள் தலையிலுள்ள மயிரெல்லாம் எண்ணப்பட்டிருக்கிறது.
மத்தேயு. 10:30. எப்படிப்பட்ட தேவன்!


76

வேதாகமம் தேவன் ஒருவரை மாத்திரமே தொழுது கொள்ள வேண்டும் என்று ஏன் உரிமை பாராட்டுகின்றது? வேதமும் - கிறிஸ்தவ மார்க்கமும் தேவன் ஒருவரை மாத்திரமே தொழ வற்புறுத்துவது - தேவன் சிருஷ்டிகர் என்ற காரணத்திற்காக மட்டுமே.


77

இவர் சிருஷ்டிகர் என்று உரிமை பாராட்டினால், அவர் தொழுது கொள்ளப்பட தகுதியானவர் என்பதை ஒத்துக்கொள்ளுகின்றீர்களா?

4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?

# 4 தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?


78

வேதத்தில் கடைசி புத்தகத்தை எழுதின யோவான், கிறிஸ்துவின் அன்பான சீஷன், பத்மு தீவிலிருந்து கண்ட தரிசனத்தில் பரலோக தேவனின் சிம்மாசனத்தை பார்க்கின்றார். அவர் பார்த்ததை கேளுங்கள்.



79

(வசனம் வெளிப்படுத்தல் 4:10,11) இருபத்து நான்கு மூப்பர்களும் சிம்மாசனத்தின் மேல் வீற்றிருக்கிறவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து



80

சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறவரைத் தொழுது கொண்டு, தங்கள் கிரீடங்களைச் சிங்காசனத்திற்கு முன்பாக வைத்து



81

தேவரீர் மகிமையையும் கனத்தையும் வல்லமையையும் பெற்று கொள்ளுகிறதற்கு பாத்திரராயிருக்கிறீர்.



82

நீரே சகலத்தையும் சிருஷ்டித்தீர். உம்முடைய சித்தத்தினாலே அவைகள் உண்டாயிருக்கிறவைகளும், சிருஷ்டிக்கப்பட்டவைகளுமாயிருக்கிறது என்றார்கள். வெளிப்படுத்தல் 4:10,11.


83

இந்த மூப்பர்கள் தேவனுடைய சிங்காசனத்திற்கு முன்பு தொழுது கொள்வதின் நிச்சய காரணம் அவர் சிருஷ்டிகர் என்பதனால் மாத்திரமே. இது நாம் அவரை தொழுது கொள்ளப் போதுமானதாகும்.


84

இவரே இவ்வுலகையும், நம்மையும் உண்டாக்கினார். ஆனால் நீங்கள் இவரை தொழுது கொள்ள சிருஷ்டிகர் என்ற இந்த ஆதாரம் மாத்திரம் போதுமா? தேவனே இன்னும் அநேக ஆதாரங்களை அவர் சிருஷ்டி கர்த்தா என்பதை சொல்லி சென்றிருக்கிறார்.

# 4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?



85

(வசனம் ரோமர் 1:20) அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள், உண்டாக்கப்பட்டிருக்கிறவைகளினாலே உலகமுண்டானது முதற்கொண்டு தெளிவாய்க் காணப்படும்.



86

அவருடைய நித்திய வல்லமை தேவத்துவம் என்பவைகள். ரோமர் 1:20 உலகம் சிருஷ்டிக்கப்பட்ட நாள் முதல் தேவன் சிருஷ்டிகர் என்பதற்கு அவரால் உண்டாக்கப்பட்டவைகளிலிருந்து அனேக ஆதாரம் உண்டு.


87


மணலில் ஒரு காலடியை பார்த்தவுடன், நாம் மனிதரை பார்க்கவில்லை என்றாலும் யாரோ ஒருவர் நடந்து சென்றிருக்கிறார் என்று நம்புகின்றோமே?


88

உங்களைச் சுற்றியுள்ள பொருட்களை காணும்போதும், அதன் சுவடுகளை காணும்போது, யாரோ ஒருவர் இருந்து இவற்றை படைத்திருக்க வேண்டுமல்லவா?



89

பரலோக பிதா - வேதம் அழைக்கும் வண்ணம், அவர் மாத்திரம் சிருஷ்டிப்பில் ஈடுபடவில்லை.



90

(வசனம் ஆதியாகமம் 1:26.)
பின்பு தேவன் நமது சாயலாகவும், நமது ரூபத்தின்படியேயும் மனுஷனை உண்டாக்குவோமாக. சுவிசேஷ எழுத்தாளராகிய யோவான் இதை இன்னும் அதிகமாக விவரிக்கின்றார்.



91

(வசனம் யோவான் 1:1-3) ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது. அந்த வார்த்தை தேவனாயிருந்தது.

# 4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?



92

அவர் ஆதியிலே தேவனோடிருந்தார்.



93

சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.




94

(வசனம் யோவான் 1:14) அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும் சத்தியத்தினாலும் நிறைந்தவராய் நமக்குள்ளே வாசம் பண்ணினார்.



95

அவருடைய மகிமையைக் கண்டோம். அது பிதாவுக்கு ஒரே பேறானவருடைய மகிமைக்கு ஏற்ற மகிமையாகவே இருந்தது. யோவான் 1:14.



96

வேதம் தேவத்துவம் பற்றி சொல்கிறது. பரலோக பிதா, தேவகுமாரன், தேவனாகிய பரிசுத்த ஆவியானவர். தேவத்துவம் மூவராய் இருக்கின்றார்கள். மூவரும் வெவ்வேறாய் இருப்பினும் ஒன்றாய் நினைத்து செயல்படுகின்றனர்.


97

கிறிஸ்து சிருஷ்டிப்பில் பிதாவோடு இணைந்து செயல்பட்டார்.




98

(வசனம் எபேசியர் 3:9) இயேசு கிறிஸ்துவைக் கொண்டு எல்லாவற்றையும் சிருஷ்டித்த தேவனுக்குள்ளே ஆதிகாலங்கள் முதல் மறைந்திருந்த இரகசியத்தினுடைய ஐக்கியம் இன்னதென்று ..... அளிக்கப்பட்டிருக்கின்றது. ஒவ்வொரு நல்ல ஈவும், பெற்றுக்கொண்டதும், பெற்றுக்கொள்ள போவதும், சிருஷ்டிகர் மனிதனுக்கு கொடுத்த மிகப் பெரிய ஆசீர்வாதங்கள்.




99

தேவன் மனிதனை படைத்ததோடு மட்டுமின்றி, அவனுக்கு அழகான உலகையும் படைத்து மனிதனுடைய தேவையையும் சந்தித்தார்.




100

(வசனம் சங்கீதம் 145:15,16) எல்லா ஜீவன்களின் கண்களும் உம்மை நோக்கிக் கொண்டிருக்கிறது. ஏற்ற வேளையிலே நீர் அவைகளுக்கு ஆகாரங்கொடுக்கிறீர்.




101

நீர் உமது கையை திறந்து சகல பிராணிகளின் வாஞ்சையையும் திருப்தியாக்குகிறீர். சங்கீதம் 145:15,16.




102

தேவன் அவருடைய சிருஷ்டிகளுக்கு எப்படி தேவைகளை சந்திக்கிறார் என்று நோக்குங்கள். நீங்கள் பருகும் தண்ணீரை எடுத்துக் கொள்ளுங்கள். இது பிரமிடுகளை விட பழமையானது - மலைகளுடைய வயதை ஒத்தது.



103

தண்ணீர் பலவித அழுக்கான திரவங்களினால் அசுத்தப்படுகின்றது. ஆனால் சூரியனால் ஆவியாக்கப்பட்டு ஆகாயத்தில் தூய்மையான தண்ணீர் எடுத்துக்கொள்ளப்படுகின்றது.



104

அங்கு சென்றவுடன் அது தூய்மையாக்கப்பட்டு, மழையாக, பனியாக பூமிக்கு பகிர்ந்தளிக்கப்படுகின்றது. ஆண்டவர் ஏற்படுத்தின தண்ணீர் தூய்மையாக்கும், பலனளிக்கும் திட்டத்தை பார்த்தீர்களா?



105

தேவனுடைய மகத்துவமான வல்லமை - வானத்தில், சூரியனில் உள்ளது. சற்று யோசித்துப் பாருங்கள்.

# 4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?


106

சூரியன் சற்று பெரியதாகவோ அல்லது பூமிக்கு அருகிலோ இருந்தால் சமுத்திரம் சூடாகி கொதித்து எழும்.



107

சூரியன் ஒருவேளை சிறியதாகவோ அல்லது சற்று தூரமாகவோ இருந்தால் இங்கு எல்லாம் உறைந்து போய்விடும். தேவன் எல்லாவற்றையும் படைத்ததோடு மட்டுமல்லாமல் அவ்றறை காப்பாற்றியும் வருகின்றார். காற்றும், தேவன் மனிதர்களுக்கு அருளிய மற்றொரு ஈவு, வேதம் என்ன சொல்லுகிறதென்றால்.



108

(வசனம் யோபு 12:10) சகல பிராணிகளின் ஜீவனும், மாம்சமான சகல மனுஷரின் ஆவியும் அவர் கையிலிருக்கிறது.
யோபு 12:10


109

தேவன் உலகை வடிவமைத்து - மனித வாழ்வுக்காகவும், நலனுக்காகவும் காற்று எந்த விதிமுறையில் இருக்க வேண்டும் என அறிந்திருக்கிறார்.



110

எந்த அளவு நைட்ரஜன், ஆக்ஸிஜன், ஆர்கன், கார்பன்-டை ஆக்ஸைடு சரியான அளவு காற்றில் கலக்க வேண்டும். இது இயற்கையாக நடந்து விடாது.


111

இவ்வுலகின் அதிசயங்களுக்கும், ஆண்டவருடைய காக்கும் கரங்களுக்கும் முடிவில்லை. பறவைகளின் இடம் பெயரும் அதிசயத்தை பாருங்கள்.


112

பறக்கும் போது பறவைகளின் எடை குறைந்து ஆயிரக்கணக்கான மைல்கள் நிற்காமல் இலக்கை அடைவது எப்படி என்று யோசித்து பார்த்தீர்களா?

# 4 ▯ தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?




113

மீன்கள் எப்படி 1200 மைல் கடந்து தாங்கள் உருவான நீருற்றையும் கண்டுபிடிக்கின்றன? அவைகள் இங்கே எப்படி செல்வது என்று ஞானம் பெற்றது எப்படி? வரைபடமில்லா சமுத்திரத்தில் மீன்கள் எவ்வாறு இவைகளை கண்டுபிடிக்கின்றன?



114

தேனி தேன் கூட்டை வடிவமைத்து கையாளும் பொறியாளத் திறமை, சாதாரண மூளைக்கும் எட்டாத ஞானமல்லவா? இவைகளுக்கு பின் உள்ள ஞானம் எங்கிருந்து கிடைத்தது. யோபு சொல்லுவதை கேளுங்கள்.




115

(வசனம் யோபு 12:7-9) இப்போதும் நீ மிருகங்களை கேட்டுப் பார். அவைகள் உனக்கு போதிக்கும். ஆகாயத்து பறவைகளை கேள். அவைகள் உனக்கு அறிவிக்கும்.



116

அல்லது பூமியை விசாரித்துக் கேள். அது உனக்குப் போதிக்கும். சமுத்திரத்தின் மச்சங்களைக் கேள். அவைகள் உனக்கு விவரிக்கும்.




117

கர்த்தருடைய கரம் இதைச் செய்ததென்று இவைகளெல்லாவற்றினாலும் அறியாதவன் யார்? யோபு 12:7-9 உலகில் உள்ள அனைத்தும் தேவனைச் சார்ந்து அவரை சிருஷ்டிகராக தொழுது கொள்வது பாக்கியம்.



118

(வசனம் சங்கீதம் 100:3) கர்த்தரே தேவனென்று அறியுங்கள். நாம் அல்ல அவரே நம்மையுண்டாக்கினார்.



119

நாம் அவர் ஜனங்களும் அவர் மேய்ச்சலின் ஆடுகளுமாயிருக்கிறோம்.
சங்கீதம் 100:3
தேவன் நம் தேவைகளை அறிந்திருக்கிறார். நம்முடைய தேவைகளை கொடுப்பதற்கு வல்லமையுள்ளவராயிருக்கிறார்.

# 4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?



120

(வசனம் எரேமியா 32:17) ஆ, கர்த்தராகிய ஆண்டவரே இதோ, தேவரீர் உம்முடைய மகா பலத்தினாலும் நீட்டப்பட்ட உம்முடைய கரத்தினாலும் வானத்தையும், பூமியையும் உண்டாக்கினீர்.



121

உங்களால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை.



122

இந்த அண்டசராசரத்தையும், உங்கள் வாழ்க்கையையும் தேவன் நடத்துகிறார் என்ற உண்மை உங்களுக்கு சமாதானத்தை கொடுக்கிறதல்லவா? தேவன் எல்லாவற்றையும் முன் கூட்டியே அறிந்திருக்கிறார். நட்சத்திரக்கூட்டங்களை நடத்துகிறவரால் கூடாதது ஒன்றுமில்லை.



123

(வசனம் ஏசாயா 46:9). நானே தேவன், எனக்கு சமானமில்லை.



124

அந்தத்திலுள்ளவைகளை ஆதிமுதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளை பூர்வ முதற்கொண்டும் அறிவிக்கிறேன். ஏசாயா 46:10


125

தேவனால் சந்திக்க முடியாத எந்த காரியமும் நமக்கு நடைபெறாது என்ற உண்மை எவ்வளவு நம்பிக்கை தருவதாக இருக்கிறது. எல்லாவற்றுக்கும் மேலாக.



126

(வசனம் 1 யோவான் 4:8). தேவன் அன்பாகவே இருக்கிறார்.



127

(வசனம் யோவான் 16:27) பிதா தாமே உங்களை சிநேகிக்கிறார். .



128

(வீடியோ 10 வினாடிகள்) இத்தனை பெரிய அண்ட சராசரத்தை படைத்த தேவன் உங்களை விசாரிக்கிறவராக இருக்கிறார் என்பது ஆச்சரியமாக இருக்கிறது?

தேவனுடைய அளவிடமுடியாத வல்லமையையும், ஆழமான ஞானத்தையும், அவருடைய சர்வ வியாபகத்தையும், நினைத்துப் பார்ப்பது ஆச்சரியத்தைக் கொடுக்கும். ஆனால் அவருடைய அன்பை நாம் புரிந்துக் கொள்ள முடியும். அந்த அன்பை விட்டு நம்மை யாரும் பிரிக்க முடியாது.




129

(வசனம் ரோமர் 8:38, 39). மரணமனாலும், ஜீவனானாலும், தேவ தூதர்களானாலும்,



130

நிகழ்காரியங்களானாலும் வருங்காரியங்களானாலும்.



131

உயர்வானாலும் தாழ்வானாலும், வேறெந்த சிருஷ்யானாலும் நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவிலுள்ள தேவனுடைய அன்பைவிட்டு நம்மைப்பிரிக்கமாட்டாதென்று நிச்சயித்திருக்கிறேன்.



132

அவரே நம்முடைய தேவனாகிய இயேசுக் கிறிஸ்து. ரோமர் 8:38, 39.

4  தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?

# 4 தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?


133

நாம் நல்லவர்களாக இருக்கும்போதும் தீயவர்களாக இருக்கும்போதும் தேவன் நம்மை நேசிக்கிறார் என்பதை சிந்திக்கிறீர்களா? வெள்ளையானாலும், கறுப்பானாலும், ஆணானாலும், பெண்ணானாலும், நம்மை அவர் நேசிக்கிறார். வேறு யாரும் அப்படியில்லை.



134

வசனம் எரேமியா. 31:3. ஆம், அநாதி சிநேகத்தால் நான் உன்னை சிநேகித்தேன்.



135

(வசனம் சங்கீதம் 100:5) கர்த்தர் நல்லவர், அவருடைய கிருபை என்றென்றைக்கும் உள்ளது என்று தாவீது எழுதினார். சங். 100:5 தேவன் நம்மை ஒருபோதும் விட்டுவிடுவதில்லை. நம் உயிருள்ள நாள் எல்லாம் அவர் நம்மோடு இருக்கிறார். ஒருவேளை அவருடைய அன்பைக் குறித்து இன்னும் சந்தேகம் இருக்கக்கூடாது என்பதற்காக அவர் நமக்கு எளிய விதத்தில் விளக்குகிறார்



136

(வசனம் ஏசாயா 49:15, 16) ஸ்திரீயானவள் தன் கர்ப்பத்தின் பிள்ளைக்கு இரங்காமல் தன்பாலகனை மறப்பாளோ?



137

அவர்கள் மறந்தாலும் நான் உன்னை மறப்பதில்லை.



138

இதோ என் உள்ளங்கைகளில் உன்னை வரைந்திருக்கிறேன். ஏசாயா 49:16.


139

தேவன் நம்மேல் வைத்த அன்பை விளக்க எவ்வளவோ முயற்சிகள் செய்தார். ஆனால் தீர்க்கதரிசிகளும் தேவதூதர்களும் கொடுத்த செய்திகள் நாம் விளங்கிக் கொள்ளும் அளவுக்கு இல்லை.


140

ஆகவே, தேவன் தன் குமாரனை அனுப்பினார். பரலோகப் பிதாவின் முழு வெளிப்பாடாக, அவருடைய குணத்தை முழுவதும் தரித்தவராகக் கிறிஸ்து வந்தார்.



141


(வசனம் யோவான் 14:9). என்னைக் கண்டவன் பிதாவைக் கண்டான் என்றார்.


142

தேவன் எப்படிப்பட்டவர் என்றும், அவர் நம்மைக் குறித்து என்ன நினைக்கிறார் என்றும் நாம் அறிய வேண்டுமானால் கிறிஸ்துவின் வாழ்க்கையை நன்றாகப் படிக்க வேண்டும். நம்முடைய தேவைகளை சந்திக்கும்படி அவர் நம்மைப் போலானார். தரித்திரருக்கு சுவிசேஷத்தைப் பிரசங்கித்தார். இருதயம் நறுங்குண்டவர்களை சுகமாக்கி, குருடர்களுக்கு பார்வை கொடுத்தார்.


143

பசியுள்ளவர்களுக்கு ஆகாரம் கொடுத்து ஏழையோடு, அவர்களுடைய இல்லங்களில் உணவருந்தினார். அவர்களுடைய பாவங்களை மன்னித்து, அவர்களுடைய வாழ்வில் நம்பிக்கை கொடுத்தார்.


144

அனேகர் கண்ட முதல் முகம் அவருடையதே. அனேகர் கேட்ட முதல் குரல் அவருடையதே. எல்லா கிராமங்களிலும் அவர் மகிழ்ச்சியைக் கொடுத்தார். அவர் சென்ற இடமெல்லாம் மக்கள் ஆசீர்வாதம் அடைந்தனர். அவருடைய வாழ்வு முழுவதும் பிறருக்காகவே அர்ப்பணிக்கப்பட்டது.


145

அவர் அனுபவித்த பாடுகள், அவமானம், யாவற்றையும், சிலுவையில் இருதயம் நொருங்குண்டவராக அவர் மரித்ததையும் நாம் பார்க்கும் போது தன் பிள்ளைகள் மேல் வைத்துள்ள அன்பை நாம் புரிந்துக் கொள்கிறோம்.



146

(வசனம் யோவான் 3:16.)
தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளி ... உலகத்தில் அன்பு கூர்ந்தார்.

# 4 தற்செயலானதா அல்லது வடிவமைக்கப்பட்டதா?



147

அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு.

யோவான்3:16.


148

இந்த அண்ட சராசரத்தின் தேவன் யார்? அவரே வல்லமையுள்ள சிருஷ்டிகர். அவர் எல்லாம் அருளும் அதிசயமானவர், அவர் அருமையாக வடிவமைப்பவர், அவர் அன்பான தகப்பன்.



149

அனேக ஆண்டுகளுக்கு முன் ஒரு சிறுவன் விபத்தில் மாட்டி, கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்லப்பட்டான். அவனுக்கு உடனடியாக இரத்தம் மாற்றப்படவேண்டும். கொடுப்பதற்கு யாருமே முன் வரவில்லை. கடைசியாக, அவனுடைய தகப்பனுடைய கையிலிருந்து நேரடியாக அவனுக்கு இரத்தம் ஏற்றப்பட்டது. இரத்தம் ஏறிக்கொண்டிருக்கும் போது அவர் மருத்துவரைப் பார்த்து, ஐயா, தேவைப்பட்டால், என் இரத்தம் முழுவதையும் என் மகனுக்காகக் கொடுக்க நான் ஆயத்தமாக இருக்கிறேன் என்றார்.


150

தான் படைத்த இந்த உலகம் பாவத்தில் கிடப்பதை நம் பரமபிதா பார்த்தார். பரலோகம் கொடுக்க முடிந்த எல்லாவற்றையும் தன் குமாரனில் அவர் இந்த பூமிக்குக் கொடுத்தார். இந்த உலகின் ஜனங்களை மீட்பதற்காக என் ரத்தம் முழுவதையும் கொடுக்கிறேன் என்று இயேசு கூறினார்.


151

அப்படிப்பட்ட அன்பைவிட்டு நீங்கள் எப்படி ஓட முடியும்? மனிதன் பாவம் செய்தபோது தேவன் தன்னை முழுவதுமாக அவனுக்காகக் கொடுத்தார். நீங்கள் அவருக்கு முக்கியமானவர்கள். உங்கள்மீது அதிசயமான அன்பு அவர் வைத்திருக்கிறார். இன்று இரவு நாம் ஜெபிக்கும்போது உங்கள் கரங்களை உயர்த்தி, தேவனே என் இருதயத்தை இப்போதே திறந்து கொடுக்கிறேன். என் ஜீவனை இப்போதே உமக்குக் கொடுக்கிறேன் என்று அவரிடம் சொல்வீர்களா?

# 5 பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்



1

நிகழ்கால பொருத்தங்கள்


2

சில ஆண்டுகளுக்கு முன் திரு. மார்ஸ் தன் அத்தை இறந்துபோனதையும், தனது உயிலில் அவரை இணைத்திருப்பதையும் அறிந்தார். சாசனம் வாசிக்கப்பட்டதாவது எனது பிரியமான ஸ்டீவன் மார்ஸ்க்கு, எனது குடும்ப வேதம், அதிலிருக்கும் எல்லாவற்றையும், அத்தோடு எஞ்சிய எனது பண்ணையையும் உயிலில் எழுதி வைக்கிறேன். நல்லது. கடன் செலுத்தப்பட்ட பிறகு, ஒரு சிலநூறு டாலர்களே எஞ்சியிருந்தது. அந்தப் பணமும் சீக்கிரத்தில் செலவழிந்தவுடன், திரு. மார்ஸ் அந்தக் குடும்ப வேதாகமத்தை மேல்மாடி அறையில் உள்ள இரும்புப் பெட்டியில் போட்டு வைத்துவிட்டார். ஸ்டீவன் மார்ஸ் சிறிய ஓய்வூதியத் தொகையை வைத்து நாட்களைக் கழித்தார். முப்பது ஆண்டுகள் வறுமையில் அவர் வாழ்ந்தார்.

# 5 பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்



3

(வீடியோ 9 வினாடிகள்)
கடைசியில், தன்னுடைய 90 வயதில், தன் மகன் வீட்டிற்கு மாற தீர்மானித்தார். தன் உடைமைகளைக் கட்டும் பொழுது, தனது அத்தையின் வேதாகமத்தை எடுத்து ஒவ்வொரு பக்கமாகப் புரட்டினார். அதன் பக்கங்களில் வங்கிப் பணத்தாள்கள் சிதறி இருப்பது கண்டு திரு. மார்ஸ் அதிர்ச்சியுற்றார். அந்தக் காலத்திலேயே மிகப் பெரிய தொகையான 5,000 டாலர்களுக்கும் அதிகமான பணம் இருந்ததை கண்டார். ஐசுவரியவானாக இருந்திருக்க வேண்டிய அவர் தன் அதிகப்படியான வாழ்க்கையை வறுமையிலேயே கழித்துவிட்டார். தேவ வார்த்தைக்குள் தனது விரல் நுனிகளிலேயே பொக்கிஷம் இருக்கிறதா? எழுதப்பட்ட புத்தகங்களிலேயே வேதம் தான் மிகவும் அளவிடற்கரிய புத்தகம் என்று இலட்சக்கணக்கான மக்கள் விசுவாசிக்கிறார்கள்.
வேதம் தேவ ஆவியினால் அளிக்கப்பட்டது என்றும், நித்ய ஜீவனைப் பெற தெளிவான அறிவுரைகள் அதிலே உண்டு என்றும் ஏராளமானவர்கள் நம்புகிறார்கள். எல்லா தேசத்தாரும், மொழிப்பிரிவினரும், மக்கள் பின்னணியினரும் தேவனுடைய வார்த்தையை, வாழ்க்கையை மாற்றும், விலையேறப் பெற்ற பொக்கிஷமாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.
மற்ற மக்கள் ஆபத்தான சந்தேகங்கள் கொண்டுள்ளனர். அவர்கள் அநேக கேள்விகளை வைத்திருக்கிறார்கள்.


4

உலகத்தில் அதிகம் விலையாகும் புத்தகத்தை குறித்து தெரியுமா? பரிசுத்த வேதாகமம் அது நம்பத்தகுந்ததா? உண்மையும் சத்தியத்தையும் பேசுகிறதா? துள்ளியமானதா? சிலர் வேத புத்தகத்தை நம்பலாம் என்கின்றனர். சிலர் நம்பக்கூடாது என்கின்றனர். எது சரி?



5

இப்பதில் மிக முக்கியமானது. ஏனெனில் வேத புத்தகம் உண்மையானது. நீங்கள் நம்புகின்றீர்களோ இல்லையோ, இது உங்கள் வாழ்வா? சாவா பிரச்சனை. வேதப் புத்தகம் சத்தியமானால், உங்களின் நித்திய வாழ்வு, அதை நம்புவதையும், ஒதுக்குவதையும், வைத்தே அமையும். வேதத்தை எப்படி நம்புகிறோம் என்பதை பொறுத்தே நம் தெய்வ நம்பிக்கையும் அமையும். தேவனைப் பற்றிய உண்மையை நாம் ஒரே ஒரு இடத்தில் தான் அறிய முடியும். அது வேதப்புத்தகம். அதற்காகத்தான் வேதப் புத்தகம் நமக்கு கொடுக்கப்பட்டுள்ளது.


6

நம்மால் காண முடியாத தேவனைக் குறித்து, தீர்க்கதரிசிகள் மூலமாக, அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்து மூலமாகவும் சொல்லப்பட்ட செய்தியைத் தான் இப்புத்தகம் கூறுகின்றது.


7

இந்த தேவனுடைய வார்த்தையாகிய இப்பேரிய புத்தகத்தைக் குறித்து பேசி, இதில் சொல்லப்பட்ட சத்தியங்களுக்கு எவ்வித ஆதாரங்கள் உள்ளன. அவற்றையெல்லாம் நம்பலாமா, வேண்டாமா?



8

(வீடியோ 6 வினாடிகள்) வேதம் ஒரே ஒரு புத்தகமல்ல. இதனுள்ளே ஒரு பெரிய நூலகமே உண்டு. பரிசுத்த வேதம் 66 புத்தகங்களையும், பல கால கட்டங்களில் பல்வேறு ஆசிரியர்களைக் கொண்டு 1600 ஆண்டுகளில் எழுதப்பட்டது. பழைய ஏற்பாட்டில் 39 புத்தகங்களும் புதிய ஏற்பாட்டில் 27 புத்தகங்களும் உண்டு.


9

45 பலதரப்பட்ட மனிதர்கள் இப்புத்தகத்தை எழுதினாலும், அவர்கள் கூறுகின்ற கருத்துக்களில் காணப்படும் ஒற்றுமை, ஒரே மூலக் கருத்தில் இருந்து எடுக்கப்பட்டது போன்று தோன்றுகிறது. ஒருவரையொருவர் பார்த்தது கூட கிடையாது என்ற போதிலும், இவர்களின் எழுத்துக்களிலே ஒரு பெரிய ஒற்றுமை உண்டு.

5 □ பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்

# 5 பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்


10

இதை எழுதியவர்கள் பலதரப்பட்ட பணிகளை செய்தவர்கள் சிலர் மீன் பிடிப்பவர்கள், சிலர் மேய்ப்பர்கள், சிலர் அரசர்கள், சிலர் அரசாங்க அதிகாரிகள், சிலர் விவசாயிகள், சிலர் பிரசங்கிமார்கள், சிலர் அரசியல்வாதிகள், சிலர் வைத்தியர்கள்.



11

(வீடியோ 13 வினாடிகள்)
இருப்பினும் ஒரு பூரண ஒற்றுமை அவர்களின் எழுத்துக்களிலே காண முடிகின்றது. இது அதிசயமல்லவா? இந்த ஒற்றுமையைக் குறித்து விவரிக்க வேண்டுமெனில், தேவன் அவருடைய பிள்ளைகளோடு தொடர்பு கொள்ள கொடுத்த புத்தகம் இது என்று அறிக்கையிட்டால் இவ்திசயம் நன்கு விளங்கும்.



12

(வசனம் 2 போது 1:21) பேதுரு கூறும் போது, தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலுண்டாகவில்லை. தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டு பேசினார்கள். 2 பேதுரு 1:21).



13

(வசனம் 2 தீமோத்தேயு 3:16-17)
பவுல் எழுதியிருக்கிறது. வேத வாக்கியங்களெல்லாம் தேவ ஆவியால் எழுதப்பட்டிருக்கிறது.



14

கடிந்து கொள்ளுதலுக்கும், சீர்த்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும்.



15

தேவ மனிதன் தேறினவனாகவும், எந்த நற்கிரியையும், செய்ய தகுதியுள்ளவனாகவும், இருக்கும் படியாக 2 தீமோத்தேயு 3:16, 17 தேவன் இந்தத் தொடர்பு முறையைத் தெரிந்துக்கொள்ளக் காரணம் எழுத்துவடிவில் நம்மோடு பேசுவது - இதுவே பாவத்தால் துண்டிக்கப்பட்ட மனிதனையும் தேவனையும் இணைக்கும் வழியாக இருந்தது.

# 5 □ பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்


16

ஏதேன் தோட்டத்தில் தேவனும் மனிதனும் ஒருமித்து பேசிக்கொண்டு நடந்த போது அங்கே ஒரு தீர்க்கதரிசி தேவையில்லாமல் இருந்தது.


17

ஆதாம் பாவம் செய்த போது தேவனிடமிருந்து தன்னை மறைத்துக்கொண்டான், ஏனெனில் அவன் தான் செய்த காரியத்துக்காக குற்றமுள்ளவனாக பயந்தான்.
ஆதாமே, நீ எங்கே இருக்கிறாய்? என்று தேவன் கேட்ட போது, ஆதாம்,



18

(வசனம் ஆதியாகமம் 3:10)
நான் தேவரீருடைய சத்தத்தை தோட்டத்திலே கேட்டு, நான் பயந்து ஒளித்துகொண்டேன் ... ஆதியாகமம் 3:10.



19

தேவன் முக முகமாக பேசுவது அதிகநாள் நீடிக்கவில்லை. தேவன் தன்னுடைய காரியங்களை வெளிப்படுத்த தீர்க்கதரிசிகளையும் பிறகு தன் குமாரனையும் தெரிந்துக்கொண்டார்.



20

(வசனம் ஆமோஸ் 3:7)
கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்கு தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.


21

மொத்தமாக நியாயப்பிரமாணம் என்று அழைக்கப்பட்ட யோபு புத்தகத்தையும், பழையு ஏற்பாட்டின் முதல் ஐந்து புத்தகங்களையும் எழுதும்படி தேவன் மோசேயை ஏவினார். இது நடந்தது ஏறக்குறைய கி.மு. 1500ல்


22

இந்த காலக்கட்டத்தில் இஸ்ரவேல் பல லட்சம் மக்கள் கொண்ட வல்லமையான ஒரு தேசமாக வளர்ந்திருந்தது. தேவன் தமது சித்தத்தை எழுத்து வடிவில் வெளிப்படுத்த அவசியமாய்க் கண்டார். இது, சித்திர எழுத்து முறை என்று சொல்வதை விட, சரியாக அடிப்படை எழுத்துமுறை கண்டுபிடிக்கப்பட்ட காலம் என சொல்லலாம்.

# 5  பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்



23

தேவன் தன் சொந்த விரல்களால் எழுதிய பத்து கற்பனைகளையும் மற்றும் மோசே தேவனுக்காக எழுதிய நியாயப் பிரமாண புத்தகத்தையும் வாசிக்கக் கூடியவர்களாக ஜனங்கள் இருந்தார்கள்.




24

ஆனால் ஒரு கேள்வி மீந்திருக்கிறது.  வேதாகமம் தேவன் அதைக் கொடுத்த அன்று போலவே இன்றும் மிகச் சரியானதாக, மற்றும் நம்பத் தகுந்ததாக இருக்கிறதா?

1947 ஆம்  ஆண்டு வரைக்கும், கி.பி. 900ம் ஆண்டின் படிவங்களையே பழைய ஏற்பாட்டின் பகுதிகளாக கொண்டிருந்தனர்.




25

ஏசாயா சுருள் கண்டுபிடிக்கப்பட்டது கி.மு. 125 முன். இவை அன்றைய தினம் இருந்த சுவடிகளுக்கு ஏற்ககுறைய ஆயிர வருடங்களுக்கு முன் எழுதப்பட்டவைகள்.  இது முழு ஏசாயா புத்தகத்தையும் உள்ளடக்கியது.




26

உயர்திரு. பிரடெரிக் கென்யான், தரம் பெற்ற நிபுணர்களில் ஒருவரும் மற்றும் பிரிட்டிஷ் தொல் பொருள் ஆராய்ச்சிப் பள்ளியின் தலைவருமான இவர் அறிவிப்பதாவது, ஆயிரம் ஆண்டுகள் கடந்த பின்பு, 166 வார்த்தைகள் கொண்ட ஒரு அதிகாரத்தில் ஒரே ஒரு வார்த்தை (மூன்று எழுத்துக்கள்) மட்டுமே கேள்விக்குரியதாயிருக்கிறது.





27

இந்த வார்த்தை குறிப்பாக செய்தியின் அர்த்தத்தை மாற்றாது.
(உயர்திரு. பிரடெரிக் கென்யானின் வாக்கியம்)



28

உயர்திரு. பிரடெரிக் கென்யான் இவ்விதம் கூறுகிறார்.


29

கிறிஸ்தவர் முழு வேதாகமத்தையும் தங்களில் எடுத்து பயமோ, தடுமாற்றமோ, இன்றி தங்கள் கரங்களில் உள்ளது உண்மையாகவே தேவனின் வார்த்தை என்று சொல்லலாம்.


30


எந்தவிதமான குறையும் ஏற்படாமல் தலைமுறை, தலைமுறையாக நூற்றாண்டு காலமாக கொடுக்கப்பட்டு வந்தது. (சர். பிரட்ரிக் கென்யான் என்பவரின் வார்த்தை).


31

சர் கென்யான் இந்த வார்த்தைகளை, தன் ஜீவிய கால முழுவதையும் வேதத்தின் பகுதிகள் எவ்விதம் மொழி பெயர்க்கப்பட்டது என்றும், அப்படி மாற்றப்பட்ட போது, இந்த புத்தகத்தின் செய்திகள் எப்படி எடுத்தாளப்பட்டது என்பதையும் நன்கு ஆராய்ந்த பின்பே எழுதுகிறார்.


32

வேதத்தை குறை கூறுவோர், கடந்த நூற்றாண்டில் வேதத்தை சந்தேகிக்க அநேக காரணங்கள் உண்டு என்கின்றனர். ஆனால் இந்த சந்தேகங்கள் எல்லாம் பூமி ஆய்வாளர்களால் அமைதியாக்கப்பட்டது.


33

19ம் நூற்றாண்டு வரை, வேதம் கூறுவதை விட சற்று கொஞ்சம் காரியம் தான் கடந்த காலத்தைக் குறித்து அறிந்திருந்தோம்.


34

விநோதமான, பட எழுத்துக்களின் பின்னால் முன் நாட்களின் சரித்திரம் எகிப்தின் சித்திர பாஷைக்கு பின்னால் அடைபட்டு இருந்தது. எகிப்தில் இருந்தவர்களோ, அல்லது உலகின் எப்பகுதியில் இருந்தவர்களாலும் கூட விளங்கிக்கொள்ள முடியாதவைகளாக அவை இருந்தன.


35

1798. நெப்போலியன் தன் படையோடு எகிப்தின் மேல் படை எடுத்தான். தன் 38,000 போர் வீரர்களோடு, நூற்றுக்கணக்கான கலைஞர்களையும், மொழி வல்லுநர்களையும், விஞ்ஞானிகளையும், அந்த நிலத்தில் மறைந்து கிடக்கும் சரித்திரத்தை நன்கு புரிந்து கொள்ள அழைத்துப் போனான்.

5 □ பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்

# 5  பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்


36

எங்குப் பார்த்தாலும், கோவில் சுவர்களிலும், ஞாபகச் சின்னங்களிலும் இந்த அறிந்து கொள்ள முடியாத சித்திர எழுத்துக்களையே அவர்கள் கண்டனர். நெப்போலியனும் அவர் போர் வீரர்களும், இந்த சித்திர எழுத்துக்கள் என்ன இரகசியங்களை குறிக்கிறது என்று எண்ணி வியந்தனர்.


37

இதுவரை கண்டறியாத அபூர்வ பூமி ஆய்வாக 1799ல் நடந்த ஆய்வு அமைந்தது.


38

நெப்போலியனின் வீரர்கள், பின்னால் ரோஸ்டா கல் என்றழைக்கப்பட்ட ஒன்றை பூமிக்கு உள்ளிருந்து கண்டெடுத்தனர். 122 செ.மீ. நீளமும் 76 செ.மீ. அகலமும் கொண்ட ஒரு கருங்கல். (நான்கு அடிக்கு 2 1-2 அடி) அது அநேக நூற்றாண்டுகளாக அறிய முடியாதிருந்த இரகசியங்களை வெளிப்படுத்துவதாக இருந்தது.


39

இந்த ரோஸ்டா கல் இப்போது பிரிட்டீஸ் அருங்காட்சியகத்தில் உள்ளது.


40

இந்த கற்பலகை, ரோஸ்டா என்ற பட்டணத்தின் அருகில் இருந்த டெல்டா பகுதியின் காரியங்களை வெளிப்படுத்தியது. அது மூன்று மொழிகளில் அமைந்த ஒரு பழங்கால கட்டளை. (சித்திரபாஷை) உள்நாட்டு, எகிப்து கிரேக்க மொழிகளில் எழுதப்பட்டவை. வல்லுநர்கள் கிரேக்க எழுத்தை எளிதில் மொழி பெயர்க்கக் கூடும். ஆனால் இந்த சித்திர எழுத்துக்கள் வித்தியாசமானவை.



41

அது மூன்று மொழிகளில் அமைந்த ஒரு பழங்கால கட்டளை. (சித்திரபாஷை) உள்நாட்டு, எகிப்து கிரேக்க மொழிகளில் எழுதப்பட்டவை. வல்லுநர்கள் கிரேக்க எழுத்தை எளிதில் மொழி பெயர்க்கக் கூடும். ஆனால் இந்த சித்திர எழுத்துக்கள் வித்தியாசமானவை.



42

20 ஆண்டுகளுக்குப் பின், 1822ல் புத்திசாலியான ஜீன் பிராங்காஸ் சேம்போலியன் என்ற பிரெஞ்சு மனிதன் ரோஸ்ட்டா கல்லில் உள்ள சித்திர எழுத்துக்களை படிக்கும் இரகசிய முறையை உலகிற்கு அறிமுகப்படுத்தினார்.


43

இப்படியாக எகிப்தின் ஏராளமான கடந்த கால பொக்கிஷங்கள், வல்லுநர்களுக்கு வழி நிறைந்து கொடுத்தது.



44

மிக முக்கியமானது என்னவென்றால் நீண்ட காலமாக மறைந்து கிடந்த எகிப்தின் சரித்திரம், வேதத்தை நிலைநாட்டியது.  அந்த கல் வேதத்தில் சொல்லப்பட்டவைகள் உண்மை என அறை கூவியது.


45

அநேக பூமி ஆய்வாளர்கள் தொடர்ந்து ஆராய்ந்தனர். எவ்வளவுக்கதிகமாய் ஆராய்ந்தார்களோ, அவ்வளவுக்கதிகமாய் வேத சரித்திரம் உண்மை என்பதை பழங்கால சரித்திர நாகரிகங்களின் குறிப்பு மூலம் நிலை நாட்டினர்.



46

சமீப கால கண்டுபிடிப்பான டெல் மெர்டக், பூமி அகழ்வாய்வை வல்லமை உள்ளதாக்கியது.  இது எல்பா என்றழைக்கப்பட்ட சிரியாவின் பட்டணம்.  இது ஒரு காலத்தில் மிக செல்வாக்கான 30,00,000 ஜனங்கள் கொண்ட கலப்பான சமுதாயம்.


47

சவக்கடல் சுருள் கண்டுபிடிப்பு வரை அநேக வல்லுநர்கள் (இத்துறையை சேர்ந்தவர்கள்) இக்கண்டுபிடிப்பால் மிக மகிழ்ச்சிக்குள்ளானார்கள். ஆனால் இவை எல்லாவற்றையும் விட வேத மாணாக்கரை இவை மிகுந்த வியப்புக்குள்ளாக்கியது.

# 5  பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்


48

பட்டணத்தின் அரண்மனையைச் சார்ந்த நகல் எழுதுவோர், எழுதப்பட்ட 14,000 மண்பாண்டங்களில் எழுதப்பட்டு பின் பாதுகாக்கப்பட்ட கி.மு. 2300 காலத்திற்கு முன்னதான மண் சுவடிகளை கண்டுபிடித்தனர். கண்டுபிடிக்கப்பட்ட மிக பழங்கால அரசாங்கமான ஆர்சீவ், அலுவலக நடைமுறைகளை கொண்ட எல்பா என்ற ராஜ்யத்தின் முறைகளை கொண்டதாக இருந்தது.


49

சில சரித்திரக்காரர்கள் எபிரேயர்கள் மோசே காலத்தில் எழுதும் கலையை பெற்றிருந்தார்களா என சந்தேகிக்கின்றனர். ஆனால் 19ம் நூற்றாண்டு வரை இதை நிருபிக்கும் எந்த ஆதாரமும் கிட்டவில்லை.


50


ஆனால் எல்பா கல்வெட்டு மோசே காலத்திற்கு முந்தியவை. அகல்வாய்வாளர்கள் ஒரு நூலகம் நிறைய கண்டுபிடிப்புகளை கண்டுபிடித்துள்ளனர். அவை மோசே காலத்திற்கு முந்தியவை.


51

எல்பா கல்வெட்டு சிருஷ்டிப்பின் கதையையும், வெள்ளப்பெருக்கின் கதையையும் விவரிக்கிறது. அவைகளில் குறிக்கப்பட்டுள்ள பெயர்களும் இடங்களும் வேதாகம பெயர்களான ஏசா, ஆபிரகாம், இஸ்ரவேல், சீனா, எருசலேம் என்ற பெயர்களோடு ஒத்திருந்தது.



52

ஆனால் ஆச்சரியம் என்னவென்றால் இரண்டு பாவ பட்டணங்களான சோதோம், கொமாரா. இந்த கண்டுபிடிப்புக்கு முன் வேதத்தை தவிர வேறு சரித்திர ஆதாரம் இந்த பட்டணங்களைப் பற்றி இல்லை. எனவே அவை ஏதோ கற்பனை நகரம் என்றே கருதப்பட்டு வந்தது.


53


அன்றைய பூலோக பெயர்களை இவைகள் உறுதிப்படுத்துகின்றன.

# 5  பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்



54

சில ஆசிரியர்கள், ஆதியாகமம் மேய்ப்பர்களால் பாடப்படும் ஒரு பாடல் என்றும் கட்டுக்கதை என்றும் கூறுகின்றனர். எல்பா என்ற கண்டுபிடிப்பும் மற்ற கண்டுபிடிப்புகளும் வேதத்தின் உண்மைக் கருத்தை வெளிப்படுத்துகின்றன.



55

(வசனம் சங்கீதம் 119:160) தாவீது சொல்கிறார். உம் வசனம் சமூலமும், சத்தியமும் உம்முடைய நீதி நியாயமெல்லாம் நித்தியம்.



56

(வசனம் ஏசாயா - 45:19)
தேவன் ஏசாயா புத்தகத்தில் 45:19ல் சொல்கிறார். நான் நீதியைப் பேசி யதார்த்தமானவைகளை நடப்பிக்கிற கர்த்தர்.


57

மரித்துப் போன மனிதன் கட்டுக்கதையைச் சொல்வதில்லை. ஆனால் அவர்கள் சொல்லுகின்றார்கள். கட்டுக்கதைகள் பொய்க்கதைகளைவிட உற்சாகமூட்டுபவை. உலக சரித்திரத்தில் எடுபட்டுப்போன அநேக நாகரீகங்கள் கூட வேதத்தின் நம்பிக்கையைக் குறித்து பேசுகின்றது.



58

19ம் நூற்றாண்டு வரை சில ஆசிரியர்கள் செமிராமி என்ற அரசி தான் பாபிலோனைக் கட்டியதாக எண்ணினார்கள். இருப்பினும் தானியேல் நேபுகாத்நேசர் என்ற ராஜா கட்டியதாக கூறுகின்றார்.



59

(வசனம் தானியேல் 4:30). இது நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா? தானியேல் 4:30. யார் இதில் சரி?



60


1899ல் ராபர்ட் கோல்டிவே பாபிலோனின் பழைய சிதைவுகளைத் தோண்ட ஆரம்பித்ததில், ஆயிரக்கணக்கான சூளையில் சுடப்பட்ட செங்கற்களை பூமியிலிருந்து எடுத்தார். அவைகள் நகரத்தின் சுவர்களிலும் கோவில்களிலும் இருந்து எடுக்கப்பட்டதாயும், நேபுகாத்நேச்சார் ராஜாவின் முத்திரையைத் தாங்கியதாயும் இருந்தன.

# 5 பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்



61

பாபிலோனின் தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால், நேபுகாத்நேச்சரின் வெற்றிகளைக் கணக்கிட்டிருக்கிற ஒரு ஆப்பெழுத்து முறையில் ஆன கற்பலகையும் கண்டுபிடிக்கப்பட்டது.



62

அதன் மேல் ராஜா சொன்ன வார்த்தைகள், ஈசாகிலா மற்றும் பாபிலோனின் அரண்களை நான் பலப்படுத்தி, என் ஆட்சியின் பேர்பிரஸ்தாபத்துக்காக ஸ்தாபித்தேன்.



63

(வசனம் தானியேல் 4:30) வேதத்தில், பெருமையான நேபுகாத்நேச்சர், இது நான் கட்டின பாபிலோன் அல்லவா என்று சொன்னார்.



64

இது என் வல்லமையின் பராக்கிரமத்தினால் என் மகிமைப் பிரதாபத்திற்கென்று ராஜ்யத்துக்கு அரண்மனையாக நான் கட்டின மகா பாபிலோன் அல்லவா இது என்று சொன்னார். தானியேல் 4:30.


65

தற்போது லண்டன் மாநகரில் இருக்கும் கிழக்கு இந்தியா வீடு என்ற கல்வெட்டில் ஆறாவது பகுதியில் பாபிலோனின் மிகப் பெரிய கட்டிடங்களைக் குறித்தும், நேபுகாத்நேச்சரின் கட்டிட நேர்த்தியை குறித்தும் கூறுகின்றது. இது தேவ வார்த்தையின் மற்றொரு பெருமை.


66

உலக சரித்திரத்தில் பெல்ஷாத்தார் என்னும் பாபிலோனிய மன்னனின் பெயர் இல்லை. ஆனால் வேதம் இவனைக் குறித்தும் விருந்துச் சாலையில் தேவனின் கரம் எழுதியதைக் குறித்தும் கூறுகின்றது. இது தானியேல் கண்டுபிடித்த கற்பனை பெயரில் இல்லை.


67


நெபோநிட்ஸ், நேபுகாத்நேச்சரின் வாரிசு, தேமா, அரோமா போன்ற இடங்களுக்கு சென்ற போது 10 ஆண்டுகள் பாபிலோனை பெல்ஷாத்சார் ஆண்டு வந்தான்.

# 5 □ பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்




68

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களும் கூட பாபிலோன் ராஜ்யம் பெல்ஷாத்சாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது என்று உறுதிபடுத்துகின்றனர். இவ்வாறு எழுதப்பட்டிருக்கின்றது.



69

என்னால் உயர்த்தப்பட்ட மகன் பெல்ஷாத்சார் என் சரீர பிறப்பு, உள்ளத்தில் தேவனுடைய வணக்கத்தை விரும்பினான் பாவத்திற்கு தன் உள்ளத்தில் இடங்கொடுத்தான்.



70

அவன் வாழ்வின் சம்பத்தினால் திருப்தியடையட்டும், அவன் உள்ளத்தில் வசிக்கும் பெரிய தேவர்களை தொழுது கொள்ளட்டும் என் முதற்பேறான குமாரனே.

தேவன் நவீன கால மனிதனோடு பேசுகிறார். பக்கம் 154.



71

(வசனம் தானியேல் 12:4.)
தானியேல் கடைசி புத்தகத்தில் மிகவும் ஆச்சரியமான வார்த்தைகளை வாசிக்கிறோம்.
தானியேலாகிய நீயோவென்றால், முடிவுக்காலம் மட்டும் இந்த வார்த்தைகளை புதைபொருளாக வைத்து இந்த புஸ்தகத்தை முத்திரைபோடு.



72

அநேகர் இங்கும் அங்கும் ஓடி ஆராய்வார்கள். அறிவும் பெருகிப்போம்.
தானியேல் 12:4. ஞானமானது விஞ்ஞானத்தினால் மட்டும் பெருகுவதில்லை. தேவனுடைய வார்த்தையின் துல்லியமான நிறைவேறுதலிலிருந்தும் ஞானம் அதிகரிக்கும்.



73

தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களால் எடுக்கப்பட்ட செங்கற்கள், உருளைகள், பெயர் பலகைகள், வேதம் சொல்வது உண்மை என்று நிரூபிக்கின்றன.


74

இன்னொரு மிகப் பெரிய ஆதாரம் வேதம் தேவனின் வார்த்தை என்பதற்கு அது எதிர்காலத்தைக் குறித்து துல்லியமாக பேசுவது நிறைவேறுவதாகும்.

# 5 பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்



75

(வசனம் ஏசாயா 46:9-10). நானே தேவன் எனக்கு சமானமானவனில்லை.



76

அந்தத்திலுள்ளவைகளை ஆதி முதற்கொண்டும், இன்னும் செய்யப்படாதவைகளைப் பூர்வகால முதற்கொண்டும் அறிவிக்கிறேன்.

ஏசாயா 46:9, 10.


77

ஆம். தேவன் திரையை விலக்கி எதிர்காலத்தின் இரகசியங்களை காண்பிக்கிறார். இதன் மூலம் வேதம் என்பது சாதாரண புத்தகம் அல்ல என்பதை விளக்கி காண்பிக்கிறார்.


78

பாபிலோன் அதன் மகிமையையும், வல்லமையையும் பெறுவதற்கு முன்பு தேவனுடைய புத்தகம் தீர்க்கமாய் அதன் நிலை குறித்து பேசினது.



79

(வசனம் ஏசாயா 13:19.)
ராஜ்யங்களுக்குள் அலங்காரமும், கல்தேயருடைய பிரதான மகிமையுமாகிய பாபிலோனானது,



80

தேவனால் சோதோமும் கொமோராவும் கவிழ்க்கப்பட்டது போல கவிழ்க்கப்படும்.
ஏசாயா 13:19.
வேதமானது எந்த ராஜ்யம் இதை கவிழ்க்கும் என்றும் கூறுகின்றது.



81

(வசனம் எரேமியா 51:11) கர்த்தர் மேதியருடைய ராஜாக்களின் ஆவியை எழுப்பினார். பாபிலோனை அழிக்க வேண்டுமென்பதே அவருடைய நினைவு.
ஏரேமியா 51:11.

# 5  பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்


82

150 ஆண்டுகளுக்கு முன்பே பாபிலோனுக்கு எதிரான படையை நடத்துவான் என்று அவன் பிறப்பிற்கு முன்பே கூறப்பட்டிருக்கின்றது.



83

(வசனம் ஏசாயா 45:1) கர்த்தராகிய நான் அபிஷேகம் பண்ணின கோரேசுக்கு .... கதவுகளை திறந்து வைக்கும்படிக்கும். ஏசாயா 45:1
வேதத்தின் தீர்க்கதரிசனங்கள் நிறைவேறினவா? ஒரு எழுத்து விடாமல் நிறைவேறியது.



84

பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் பெர்சியன் அரங்கில் பாபிலோன் அழிக்கப்பட்ட சரித்திரம் சொல்லப்படுகின்றது. இந்த மண்ணான உருளையில் கோரேசின் வெற்றி விவரிக்கப்படுகின்றது. அதன் விளக்கங்கள் துள்ளியமானவை.




85

வேதம் பாபிலோனின் அழிவைக் குறித்து மாத்திரம் பேசவில்லை. மேலும் கூறும் போது.




86

(வசனம் எரேமிய 51:37) பாபிலோன் குடியில்லாத மண்மேடுகளாகும். எரேமியா 51:37.



87

(வசனம் ஏசாயா 13:20-21) ஏசாயா எழுதினார். இனி ஒரு போதும் அதில் ஒருவரும் குடியேறுவதுமில்லை.



88

காட்டுமிருகங்கள் அங்கே படுத்துக்கொள்ளும், ஊளையிடும், பிராணிகள் அவர்களை நிரப்பும், கோட்டான்கள் அங்கே குடிகொள்ளும், காட்டாடு அங்கே துள்ளும்
ஏசாயா 13:20, 21.

5  பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்

# 5 பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்




89

பாபிலோனின் எதிர்காலத்தை ஆண்டவர் ஒருவர் மாத்திரமே துல்லியமாக வரையறுத்துக் கூற முடியும். ஆஸ்டின் எச் லேயார்டு பாபிலோனைக் குறித்து விவரிக்கும் போது.



90

ஒழுங்கில்லாத குப்பைக் கூளங்களின் குவியல்கள் ஏக்கர் கணக்கில் குவிந்துகிடக்கிறது. திறந்த உபயோகமற்ற குவியல்கள்.




91

ஆந்தைகள் அலறும், நரிகள் ஊளையிடும், படுகுழிகள் நிறைந்த இடம். நினிவே பாபிலோனின் அழிவு கண்டுபிடிப்புகள் பக்கம் 413.



92

பாபிலோனில் பெயர்ப்பலகையைத் தவிர, அதன் மகிமை ஒன்றும் மீதமாயிருக்கவில்லை. அழிந்துகிடக்கும் கட்டிடங்களின் குவியல்களைத் தவிர வேறு ஒன்றுமில்லை. இதுதான் வேதத்தின் மகத்துவம்.



93

(வசனம் ஏசாயா 40:8) புல் உலர்ந்து, பூ உதிரும், நமது தேவனுடைய வசனமோ என்றென்றைக்கும் நிற்கும் என்பதையே சொல் என்று உரைத்தது.
ஏசாயா 40:8.


94

நண்பர்களே, நூற்றுக்கணக்கான ஆண்டுக்கு முன்பே தேவன் இராஜ்ஜியத்தின் எதிர்காலத்தை சொன்னார் என்றால் நம் எதிர்கால சகல காரியங்களையும் சரியாக அறிந்துகொள்வதற்கு அவருக்கு ஞானமும் திறமையும் உண்டு.


95

தீர்க்கதரிசனமானது உலக சரித்திரத் திரையை விலக்கி ஆண்டவருடைய கண்ணோட்டத்தில் எதிர்காலத்தை நோக்க வேண்டும். இது இப்பூவுலகத்தில் மனிதரை அச்சுறுத்தும் ஏராளமான பிரச்சினைகளுக்கு முடிவு கிடைக்கும்.


96

வேதமானது சரித்திரத்தைக் காட்டிலும் விஞ்ஞான கோட்பாடுகளைக் காட்டிலும், தீர்க்கதரிசன நிறைவேறுதலைக் காட்டிலும் மேலானது. வேதம் இல்லாமற் போயிருந்தால் மனித சமுதாயம் பெரிய கேள்விக்குறியாயிருக்கும்.


97

இப்புத்தகத்தின் மையக்கருத்து இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு எருசலேமின் வெளிப்புறத்தில் நடந்தது என்ன என்ற சரித்திரம். இதுதான் நம்மை இப்புத்தகத்தின் மகத்துவத்தை உணரச் செய்கின்றது.


98

ஜீவனுள்ள தேவனுடைய குமாரன் சிலுவையில் மரித்தாரா? மரிக்கவில்லையா?
வேதாகமம் சொல்கிறபடி அவர் இவர்தானா? இல்லை அவரில்லையா?
கல்வாரி - உண்மைச் சம்பவமா? இல்லை (வீண் எண்ணமா?) உண்மையற்றதா? இப்படிப்பட்ட வித்தியாசத்தை நாம் அறிந்துகொள்வது மிக்க அவசியமானது.


99

ஒரு மாபெரும் அத்தாட்சி - வேதாகமம் என்பது - ஒரு வல்லமையானது, வாழ்க்கையை மாற்றும் புத்தகமாகும்.

அந்த வல்லமைளானது இயேசு கிறிஸ்து எனும் ஒரு தனி நபரில் அக்கூற்று மெய்பிக்கப்பட்ட ஒன்றாகும் உள்ளது. இயேசு சொன்னது.



100

(வசனம் யோவான் 5:39).

வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள். அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே. என்னைக் குறித்து சாட்சி கொடுக்கிறவைகளும் அவைகளே.


யோவான் 5:39.

# 5 □ பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்


101

புதிய ஏற்பாடு என்ற ஒன்று அப்பொழுது எழுதபடாமலிருந்தபடியால் இயேசு கிறிஸ்து பழைய ஏற்பாட்டை பேசுகின்றனர்.

இரட்சிப்பை குறித்தும் அவரின் அன்பின் ஊழியத்தைப் பற்றியும் வரப்போகிற மேசியாவைப் பற்றியும் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனஙக்களை, பழைய ஏற்பாட்டை நாம் படிக்கின்ற போது கண்டு கொள்ளலாம்.



102

(வசனம் லூக்கா 24:44).

தம் சீடர்களிடம் இயேசு சொன்னதாவது, ... நான் உங்களோடிருந்தபோது உங்களுக்குச் சொல்லி கொண்டு வந்த விசேஷங்கள் இவைகளே.



103

மோசேயின் நியாயப்பிரமாணத்திலும் தீர்க்க தரிசனங்களின் ஆகமங்களிலும் சங்கீதங்களிலும் என்னைக் குறித்து எழுதியிருக்கிறவைகள்.

லூக்கா 24:44.


104

புதிய ஏற்பாட இயேசுவின் வாழ்க்கை சம்பவமும், பழைய ஏற்பாடு கிறிஸ்துவைக் குறித்தும் சொல்லப்பட்ட தீர்க்க தரிசன சம்பவங்களாகும்.

நாம் முழு வேதாமத்தையும் பார்க்கின்றபோது அவைகள், இயேசுகிறிஸ்துவைப் பற்றின வெளிப்பாடுகளாகும். அவர் இப்பூமியில் (கலகம் நிறைந்த) வந்து பிதாவானவர். எப்படிப்பட்டவர் என்பதை நிரூபணமாக்கின வெளிப்பாடுகள் இவை.



105

மரித்தோருக்கு நம்பிக்கையும், கவலைப்படுவோர்க்கு தேற்றுதலும், சத்துவ மற்றவனுக்கு உறுதியும், மனிதனுடைய குணங்களை மாற்றுவதும், வாழ்க்கையை மாற்றும் வல்லமையும், எங்கு கொண்டு போனாலும் ஆச்சிரிமான வல்லமைகளை சுமந்துச் செல்லும் ஓர் அற்புத புத்தகம் வேதாகமம். ஆகவே தான். ஜீவனுள்ள தேவனுடைய வார்த்தைகள் என அழக்கப்படுகிறது.

சரித்திரத்தின் நெடுகிலும், வேதாகமத்தின் வல்லமை மனிதர்களை மாற்றியுள்ளது என்பது திரும்ப திரும்ப நிரூபிக்கப்பட்டுள்ளது. வேதாகமத்தின் வல்லமையால் கோபக்காரர்களும், சமாதானத்தின் பிள்ளைகளாக மாற்றப்பட்டுள்ளனர்.


106

காம இச்சையுள்ள துன்மார்க்க மக்களை சுத்தமும், தூய்மையாக்கப்பட்டவர்களாக மாற்றும் அடைந்துள்ளனர் ஏமாற்றுக்காரர்களை தங்களின் ஏமாற்று தன்மையிலிருந்தும், திருடர்களை தங்களின் திருட்டுதனத்திலிருந்தும், குடிகாரர்களை தங்களின் குடியிலிருந்தும் விடுதலைப் பெற்றுள்ளனர்.

வேதாகமத்தின் வல்லமையால் சிறைச்சாலைகளிலுள்ள கடின முரடர்கள், கொலைக் காரர்கள் மாற்றப்பட்டு சந்தோஷமான கிறிஸ்துவர்களாக இருப்பதை இன்றும் நாம் பார்க்க முடிகின்றது.


107

வேதாகமத்தின் வல்லமையாலும், புதிய அன்பாலும், நிறைந்த திருமணம் இங்கே முறிந்து போகுமோ என அஞ்ச வேண்டியதில்லை. தேவனுடைய புத்தகம் எவரையும் மாற்ற முடியாதென்றால் அதை ஒருவரும் தினந்தோறும் கரிசனையோடு வாசிக்கமாட்டார்கள். என் நண்பனே, நீ தினந்தோறும் வாசிக்க நேரம் எடுத்து கொள்வாயானால் அது உன்னையும் மாற்றும்.


108

இயேசு கிறிஸ்து மக்களை மாறுதலடைய செய்வதிலே தமது நேரத்தை செலவழித்தார். அதுதான் கிறிஸ்தவ மார்க்கத்தின் மையக்கருத்தாகும் வேதாகமத்தின் இரகசிய வல்லமையும் அதுவே.

5 □ பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்

# 5 □ பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்



109

(வசனம் : யோவான் 8:32)

மக்களை மாற்றும் வல்லமை எது என்று இயேசு அறிந்திருந்தார்.

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும்.

யோவான் 8:32.



110

மனிதர்களை மாற்றுவதும், விடுதலையடையச் செய்வதும் சத்தியம்.
ஒரு குடிக்காரனை தெளிவான அன்பான தகப்பனாக மாற்றுவது சத்தியம்.
போதைக்கு அடிமையானவர்களை விடுதலையாக்குவது சத்தியம்.
இன்றைய உலகில் அதிக வஞ்சனைகள்தான் பழக்கத்தில் இருக்கிறது. நாம் கேட்பது என்னவென்றால் - சத்தியம் என்றால் என்ன?



111

(வசனம் : யோவான் 17:17)
இயேசு பதிலை தந்தார் :
உம்முடைய வசனமே சத்தியம், யோவான் 17:17.
ஆண், பெண் என்ற இரு பாலரின் இருதயத்தையும் மாற்றுவது தேவ வார்த்தையின் வல்லமையாகும்.
வேதாகமம் தேவனின் வார்த்தையாகும். அது சத்தியமாகும்.


112

இயேசு கிறிஸ்து எனும் மனிதரை ஏற்றுக் கொள்ளும் மனதுடையோர், தங்களை மாற்றிக் கொள்ள எண்ணும் போது தேவ வார்த்தை அவர்களை மட்டும் மாற்றும். வேதாகமத்தை படித்த லட்சோப லட்ச மக்கள் மாற்றப்பட்டுள்ளனர்.
வாழ்க்கையும், இருதயத்தையும் தொடப்பட்ட வல்லமை இதைவிட மேலான வல்லமை இன்று உலகில் இல்லை.
நண்பனே, இப்படிப்பட்ட வித்தியாசத்தைபார் இந்த புத்தகத்தை வைத்து நாம் என்ன சொல்கிறோம்? இல்லத்தில் பயன்படுத்துவதும், சபைக்கு எடுத்து சொல்வதிலும் இப்புத்தகம் மேலானதாக உள்ளதா? சமாதான எண்ணத்திற்கும் சந்தோஷத்திற்கும் நித்தியமாய் நமது அனுதின வாழ்வின் இரகசியத்திற்கும் கொடுக்கப்பட்டவைகள்.



113

(வீடீயோ 12 வினாடிகள்).

வாழ்க்கையை மாற்றும் தேவ வார்த்தையின் வல்லமைப் பற்றிய கதையை நான் உங்களுக்கு சொல்லுகிறேன்ன.

பல ஆண்டுகளுக்கு முன் பௌண்டி என்று அழைக்கப்படும் கப்பல் ஒன்று இருந்தது. 1790ம் ஆண்டு பிளைவ் எனும் கப்பல் மாலுமியும் அவன் பணியாளர்களும் இங்கிலாந்திலிருந்து வெஸ்ட்இன்டீஸ் பகுதிக்கு சென்று மலிவான மரங்களைக் கொண்டுவர பிரயாணப்பட்டனர்.



114

(வீடியோ 7 வினாடிகள்) பிளைவ் என்பவரின் கொடூரத் தலைமையும், பணியாளர்களை அவன் நடத்திய விதங்களும் உலகத்திற்கும் வழிநடத்தியது. கலகத் தலைவனான ப்ளாட்சர் கிறிஸ்தியான், பிளையையும் மற்றும் அவரோடு கூட 18 உதவியாளர்களையும் ஒரு சிறு படகில் வைத்து கடத்திவிட்டான். காப்டன் பிளையின் திறமையால் அவர்கள் சுமகமாக இங்கிலாந்திது சென்றடைந்தனர்.

5 □ பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்

# 5  பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்



115

(வீடியோ 4 வினாடிகள்)

பௌண்டியில் சென்றவர்களின் பயணம் கடினமாயிருந்தது. இறுதியில் அவர்கள் ஜன நடமாட்டமில்லாத பிட்சேரியன் தீவை அடைந்தனர்.



116

(வீடியோ 10 வினாடி) தங்களை எவரும் கண்டுபிடிக்க கூடாதென்பதற்காக அவர்கள் பௌண்டியை தீயிட்டுக் கொளுத்தினர். அவர்கள் தாகிட்டி ஏ்னற இடத்திலிருந்தபோது ப்ளை சில பெண்களையும், குழந்தைகளையும், தனது படகில் ஏற்றிக் கொண்டார்.

சாராயம் காய்ச்ச ஆரம்பித்தபோது கலகக்காரர்களிடையே பிரச்சனையும் தொடர்ந்தது. ஒருவரை வருவர் பகைத்து கொலை செய்து கொண்டனர். இறுதியில் ஜாண் ஆதாம் சில பெண்களும், குழந்தைகளும் மட்டுமே எஞ்சினர்.



117

(வீடியோ 8 வினாடிகள்).
பௌண்டியிலிருந்து ஜாண் ஆதாம் ஒரு வேதாகமத்தை கண்டெடுத்தார். அதை அவர் வாசிக்க ஆரம்பித்தார். அதை வாசிக்க வாசிக்க அவரில் ஒரு பெரும் மாற்றம் உண்டாயிற்று. தன்னுடனிருக்கும் சிறுபிள்ளைகளுக்கு ஒரு எதிர்காலத்தை உண்டாக்கி கொடுக்க வேண்டுமென்ற ஒரு பொறுப்பை உணர்ந்தார். எப்படி, எழுதி, படிக்க வேண்டும், வாழ வேண்டும் என்பதை கற்றுக் கொடுத்தார். அத்தீவில் வாழந்தவரிகளிடையே ஏற்பட்ட மாறுதலை அவ்வழியே கப்பலில் சென்றவர்களும், பின் பிரிட்டீஸ் அரசாங்கமும் இறுதியில் முழு உலகமும் கண்டது.


118

நண்பரே, இந்த வேதாகமம் உன்னுடைய வாழ்க்கையம் மாற்ற வல்லது. வேதாகமத்தை நாம் வாசிக்கும் போது, எந்த பரிச்தத ஆவியானவர் பல நூற்றாண்டகளுக்கு முன் இந்த புத்தகத்தை எழுத் தூண்டினாரோ அதே பரிசுத்த ஆவியானவர் உங்களுடைய வாழ்க்கையும் மாற்றுவார்.

திறந்த மனதுடனும், எளிமையான விசுவாசத்துடனும் வேதாகமத்திடம் வந்து, கர்த்தாவே, நான் பின்பற்றும்டி உம்முடைய சத்தியத்தை காட்டுங்கள். கர்த்தாவே என் வாழ்வில் நான் செய்ய வேண்டிய மாற்றத்தை எனக்குச் சுட்டிக்காட்டும். கர்த்தாவே அன்புள்ள மனிதனாக மனுஷியாக மாற்றும். உம்மை இரட்சகராக காண வாஞ்சிக்கிறேன் எனக்கூறு.


119

ஆம், நண்பனே, இது சாதாரண புத்தகமல்ல, இந்த புத்தகத்தின் நாயகரே இந்த புத்தகம் விசேஷமானது என்பதற்கு ஆதாரம். அவரை நாம் கண்டு கொள்ளும்போது நமது விசுவாசம் பெருகும். அவரை நேசிப்பதும், விசுவாசிப்பதும் அவரை அறிவதாகும்.

5 பண்டைக்கால சுருள்களின் இரகசியங்கள்

# 6  ஏன் இத்தனை வேதனைகள்?




1

அன்பான ஒரு தேவன் இதை எப்படி அனுமதிக்க முடியும்?



2

க்ளாறா ஆண்டர்சன் என்ற பெண்மணி வீட்டுவேலை செய்பவர். பதினைந்து வருடமாக ஒரே எஜமானிடம் சான் பிரான்ஸிஸ்கோ பட்டணத்தில் வேலை செய்த இவர் ஒரு நாள் காணாமல் போய்விட்டார். எங்கே சென்றார் என்று எஜமானுக்கு ஒன்றுமே தெரியவில்லை. அனேக நாள் தேடுதலுக்குப்பின் அப்பட்டணத்தின் அதிகாரிகள் அவரைக் கண்டு பிடித்தார்கள்.

அவள் சான் பிரான்ஸிஸ்கோ பட்டணத்துக்கு வெளியே ஒரு மலைச்சரிவில் பட்டினியாக மரிக்கும் தருவாயில் ஒளிந்து கொண்டிருந்தார். ஒரு பத்திரிகை ஆசிரியர் அவளிடம் தனியாகச் சென்று காரணத்தைக் கேட்டபோது என்னை மரிக்க அனுமதியுங்கள். நான் ஒரு வீட்டுவேலைக்காரி. என்னைக் கவனிப்பார் யாருமில்லை. என் வாழ்வுக்கு எந்த மரியாதையுமில்லை. எனக்கு குடும்பம், உறவினர், நண்பர்கள் யாருமில்லை. நான் மிகவும் தனிமைப்படுத்தப்பட்டவளாக இருக்கிறபடியால் மரிக்க வேண்டும். தயவு செய்து என்னைவிட்டு விடுங்கள். என்னை கவனிக்க யாருமே இல்லை என்று கூறினாள்.



3

கவனிக்க யாருமில்லை என்பதே இந்த பூமியில் வாழும் அனேக மனிதர்களின் அபலக்குரலாக இருக்கிறது. அண்மையில் வேதனைக்குறித்து ஒரு கேள்வி கேட்கப்பட்டது. நீங்கள் தேவனிடம் ஒரே ஒரு கேள்வி கேட்க அனுமதிக்கப்பட்டால் என்ன கேட்பீர்கள்? தேவனே நீர் என்னைக் கவனிக்கிறீரா? நீர் மிகவும் நல்லவரானால், ஏன் இத்தனை நோய்களும், வேதனைகளும், மரணமும் இந்த உலகில் காணப்படுகின்றன. ஏன் இத்தனை மன வேதனைகள், கவலைகள், யுத்தங்கள், பஞ்சங்கள், இயற்கை சீற்றங்கள் காணப்படுகின்றன.

6  ஏன் இத்தனை வேதனைகள்?

# 6 □ ஏன் இத்தனை வேதனைகள்?


4

நம்மைச் சுற்றிலும் ஒரு பாவ வல்லமை செயல்படுவதை நாம் காண முடிகிறது. எங்கும் கடினமான விபத்துக்கள் நடைபெறுகின்றன.



5

(வீடியோ 15 வினாடிகள்) இந்த கவலைகள், கண்ணீர், விபத்துக்கள் யாவற்றுக்கும் காரணம் யார்? அனேகர் தங்கள் வாழ்க்கையில் வரும் வேதனைகளுக்கு தேவனைக் குறை கூறுகின்றனர். தேவனே ஏன் இதை எனக்குச் செய்தீர் என்று பலர் கூறுவதை எத்தனை முறை நாம் கேட்டிருக்கிறோம்.



6


நன்மைக்கும், தீமைக்கும் இடையே நடக்கும் போராட்டத்தைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது என்பதை சற்றே கவனிப்போம். தேவன் வேதனையை உலகத்தில் கொண்டு வராவிட்டால் அதை உலகில் கொண்டுவரக் காரணம் யார்?


7

வேதம் இதைத் தெளிவுபடுத்துகிறது. தன் நிலத்தில் நல்ல விதை விதைத்த ஒரு மனிதனின் கதையை கிறிஸ்து கூறினார். அவை முளைத்த போது



8

களைகளும் நிலத்தில் முளைத்தன.



9

(வசனம் மத்தேயு 13:27)
வீட்டு எஜமானுடைய வேலைக்காரர் அவனிடத்தில் வந்து, ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை அல்லவா விதைத்தீர் என்றார்கள்.



10

அந்த களைகள் எங்கிருந்து வந்தன என்று அறிய அவர்கள் விரும்பினார்கள்.

# 6 □ ஏன் இத்தனை வேதனைகள்?



11

(வசனம் மத்தேயு. 13:37-39)
அவர் பிரதியுத்தரமாக, நல்ல விதையை விதைக்கிறவர் மனுஷகுமாரன்.



12

நிலம் உலகம், நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரர், களைகள் பொல்லாங்கனுடைய புத்திரர்



13

அவைகளை விதைத்தவன் சத்துருவாகிய சாத்தான். மத்தேயு. 13:37-39.




14

தேவன் தன்னுடைய அன்பையும் கனிவையும் நம்மில் விதைக்க முயலும் அதே வேளையில், இந்த உலகில் அதற்கு எதிரான ஒரு சக்தி கிரியை செய்து, தேவனுடைய பிள்ளைகளின் வாழ்வில், துயரம், இழப்பு, மரணம், வியாதி போன்றவைகளை கொண்டு வருகிறது என்பதைப் பாருங்கள்.


15

வேதத்தின் கடைசி புத்தகமான வெளிப்படுத்தலில், இவைகள் எப்படி தோன்றின, பரலோகத்தில் என்ன நடந்தது. அது எப்படி இந்த உலகில் அநேக குழப்பங்களை கொண்டு வந்தது என்ற உண்மைகளை அறிந்து கொள்ள வைக்கிறது.

துன்மார்க்கத்தின் ஆரம்பத்தை நாம் ஆராய்வோம். அது ஒருவேளை நம்மை ஆச்சரியப்பட வைக்கும். ஆனால் பரலோகத்தில் ஒரு காலத்தில் யுத்தம் உண்டானது.



16

(வசனம் வெளிப்படுத்தல் 12:7-9)
வானத்தில் யுத்தம் உண்டாயிற்று. மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும், வலுசர்ப்பத்தோடு யுத்தம் பண்ணினார்கள். வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதர்களும் யுத்தம் பண்ணினார்கள்.

# 6  ஏன் இத்தனை வேதனைகள்?



17

ஆனாலும் அவர்கள் ஜெயம் கொள்ளவில்லை. வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற் போயிற்று.



18

உலகமனைத்தையும் மோசம் போக்கின. பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது.



19

அது பூமியிலே தள்ளப்பட்டது. அதனோடே கூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். வெளிப்படுத்தல் 12:7-9.


20

இப்பொழுது வெளிப்படுத்தல் 12:3-4ல் எப்படி வலுசர்ப்பம் அல்லது சாத்தான் அறிமுகப்படுத்தப்படுகிறான் என்பதை கவனியுங்கள்.



21

(வசனம் வெளிப்படுத்தல் 12:3, 4)
வேறொரு அடையாளம் வானத்தில் காணப்பட்டது. ஏழு தலைகளையும் பத்து கொம்புகளையும்.



22

தன் தலைகளின் மேல் ஏழு முடிகளையும் உடைய.



23

அதன் வால் வானத்தின் நட்சத்திரங்களில் மூன்றில் ஒரு பங்கை இழுத்து அவைகளைப் பூமியில் விழுத்தள்ளிற்று.


24

தேவனுக்கு எதிராக தோன்றின கலகத்தில், உண்மையாகவே மூன்றில் ஒரு பங்கு தூதர்கள், மோசம் போக்குபவனின் கலகத்தில் சேர்ந்து கொண்டனர். விழுந்து போன லூசிபர் என்றழைக்கப்படும் தூதனைக் குறித்து இன்னும் கொஞ்சம் அதிகமாக பார்ப்போம்.
பழைய ஏற்பாட்டில் அவன் தீருவின் அரசனாக சித்தரிக்கப்பட்டுள்ளான். அது அவனைக் குறித்து கூறுகிறது.



25

வசனம் எசேக்கியல் 28:12-14) கர்த்தராகிய ஆண்டவர் உரைக்கிறது என்னவென்றால் நீ விசித்திரமாய் செய்யப்பட்ட முத்திரை மோதிரம், நீ ஞானத்தால் நிறைந்தவன். பூரண அழகுள்ளவன்.
எசேக்கியல் 28:12.



26

நீ தேவனுடைய தோட்டமாகிய ஏதேனில் இருந்தவன். விலையேறப்பட்ட கற்கள் உன்னை மூடிக்கொண்டிருந்தது.
எசேக்கியல் 28:13.




27

நீ காப்பாற்றுகிறதற்காக அபிஷேகம் பண்ணப்பட கேரூப், தேவனுடைய பரிசுத்த பர்வதத்தில் உன்னை வைத்தேன்.



28

அக்கினி மயமான கற்களின் நடுவே நீ உலாவினாய்.
எசேக்கியல் 28:14.


29

லூசிபர் அழகான தூதன், அவன் எல்லாவற்றிலும் பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்டவன். தேவனுக்கு அருகில் நின்று, காப்பாற்றும் கேரூப் என்ற தூதன்.

6  ஏன் இத்தனை வேதனைகள்?

# 6 □ ஏன் இத்தனை வேதனைகள்?


30

லூசிபருக்கு பரலோகத்தில் ஒரு மேலான பதவி இருந்தது. கிருபாசனத்திற்கு அல்லது தேவனுடைய சிம்மாசனத்திற்கு இருபுறமும், வலது புறம் ஒன்றும் இடது புறம் ஒன்றும் ஆக இரண்டு தூதர் இருந்தனர். இவர்களில் ஒருவன்தான் லூசிபர்.


31

அவன் தேவனுக்கு அருகில் இருப்பதில் திருப்தி அடையவில்லை. அவன் தேவனாக வேண்டும் என விரும்பினான். லூசிபரிடமும், அவன் தேவனோடு கொண்டிருந்த உறவிலும் ஏதோ நடந்தது. தேவன் லூசிபரிடம் சொன்னார்.



32

(வசனம் எசேக்கியல் 28:15) நீ சிருஷ்டிக்கப்பட்ட நாள் துவங்கி உன்னில் அநியாயம் கண்டுபிடிக்கப்பட்டது மட்டும், உன் வழிகளில் குறையற்றிருந்தாய்.

எசேக்கியல் 28:15.




33

(வசனம் எசேக்கியல் 28:15) உன் அழகினால் உன் இருதயம் மேட்டிமையாயிற்று. உன் மினுக்கினால் உன் ஞானத்தைக் கெடுத்தாய்.

எசேக்கியல் 28:17.



34

அந்த அழகான தூதன், மேன்மையான தூதன், சுயநலக்காரனானான். தேவனுக்கு செலுத்தப்படும் மகிமை, தனக்கும் வேண்டும் என் இச்சித்தான். வல்லமையின் மேல் மோகங்கொண்டான். அண்டசராசரத்தின் ஆளுகையில், தன் தேவனையே எதிர்க்கும் துணிவு கொண்டான். கவனமாக கேளுங்கள்.



35

(வசனம் ஏசாயா 14:12-14) அதிகாலையின் மகனாகிய விடிவெள்ளியே, நீ வானத்திலிருந்து விழுந்தாயே. எவ்விதம் நீ தரையிலே தள்ளுண்டுபோனாய்.



36

நான் வானத்துக்கு ஏறுவேன், தேவனுடைய நட்சத்திரங்களுக்க மேலாக என் சிங்காசனத்தை உயர்த்துவேன், என்றும் நீ உன் இருதயத்தில் சொல்லிக் கொண்டாய்.



37

உன்னதமானவருக்கு ஒப்பாவேன்.

ஏசாயா 14:12-14


38

இந்த கர்வமான வார்த்தைகள் லூசிபரின் உதடுகளிலிருந்து புறப்பட்டவுடனே, பரலோகத்தின் பரிபூரண அன்பும், ஒற்றுமையும், ஆயிரக்கணக்கான சுயநல துண்டுகளாக சிதறிப்போயின.


39

லூசிபர், அதிருப்தியின் ஆவியை மற்ற தூதர்களின் மத்தியில் பரப்புவதற்கு முன்னதாகவே மெதுவாக, ஆனால் உண்மையாகவே தேவனின் அன்பையும், நீதியையும் பலவீனப்படுத்தினான்.


40

ஒரு பெட்டியில் இருக்கும் அழுகிப்போன பழும்போல, அவன் தன் கலகத்தை மற்ற தூதர்களுக்கும் பரப்பினான். ஏன் தேவன் உடனே சாத்தானை அழிக்கவில்லை என் நீங்கள் ஆச்சரியப்படலாம். தேவன் லூசிபரையும் அவனோடு கலகத்தில் ஈடுபட்ட தூதர்களையும் கண் இமைக்கும் நேரத்தில் அழித்து இருக்கலாம். அப்படி அவர் செய்திருந்தால், எல்லா சிருஷ்டியும் அவரை பயத்துடன் தான் சேவித்திருக்கும்.

6  ஏன் இத்தனை வேதனைகள்?

# 6  ஏன் இத்தனை வேதனைகள்?


41

ஒரு வேளை தேவன் நம் தெரிந்துக் கொள்ளுதலை எடுத்து விட்டு நம்மை ஒரு இயந்திர மனிதனாக படைத்திருத்தால்... எவ்வளவு பேருக்கு குழுந்தைகள் உண்டு. உங்களில் கொஞ்சம் பேருக்கு இருக்கிறது. இயந்திர குழந்தை வேண்டுமா? நீங்கள் சொல்லும் எல்லா காரியத்துக்கும் கீழ்படியும்படி செய்யப்பட்ட குழந்தையை எந்த அளவு விரும்புவீர்கள்?
காலையில் உங்கள் குழந்தை எழுந்து அம்மா நான் என் சாப்பாட்டை சாப்பிடுவேன் சரி, அப்பா நான் வீட்டை சுத்தம் செய்வேன். உங்களுக்கு ஒரு இயந்திர மனிதன், குளிர்ச்சியான, இரும்பால் ஆன ஒரு இயந்திர குழந்தை.
உங்களுக்கு குழந்தை இல்லை என வைத்துக் கொள்வோம்.
இதுபோன்ற ஒரு குழந்தை வேண்டும் என விரும்புவீர்களா? விரும்பமாட்டோம். அதே போலவேதான் ஆண்டவரும்.


42

தேவன் அன்புள்ள தேவன், எங்கு தேவனுடைய பிள்ளைகள் அவரை நம்பி அவரை அன்பால் தொழுகொள்கிறார்களோ, அப்படிப்பட்ட அன்பின் உறவில் மாத்திரமே அவர் மகிழ்ச்சியடைகிறார்.


43

சாத்தான் தேவனின் கட்டளைகளையும், நீதியையும் எதிர்க்கிறான். ஆனால், தேவன் யார் முதலாளி என்பதை கட்டாயமாக காட்ட இந்த கட்டளைகளை கொடுக்கவில்லை. இந்த கட்டளைகள், சிருஷ்டிகளை காக்கவும், அவர்களின் அமைதியையும், மகிழ்ச்சியையும் நிலைநாட்டவே கொடுத்திருக்கிறார்.



44

அவரின் கட்டளைகள் நிறுத்தும் விளக்கு போலும், வேகதடைகள் போலும், நம்முடைய பாதுகாப்புக்காகவும், நம்முடைய நலத்திற்காகவும் திட்டமிடப்பட்டுள்ளன.

ஆனால் தூதர்களில் மேன்மையான இவன், தன் சிருஷ்டிகரைவிட இந்த அண்டசராசரத்தை சிறப்பாக தன்னால் நடத்த முடியும் என நினைத்தான்.

# 6  ஏன் இத்தனை வேதனைகள்?


45

தேவனின் எதிராளியாகிய சாத்தான், தன்னையே பிசாசாக ஆக்கிக்கொண்டான்.



46

(வீடியோ: 10 வினாடிகள்) தேவன் ஒவ்வொருவருக்கும், கீழ்படியவோ கீழ்படியாமல் இருக்கவோ இருக்க தெரிந்துகொள்ளுதலைக் கொடுத்திருக்கிறார்.

தேவன் தன்னுடைய அன்பாலும், தாராள குணத்தாலும், சாத்தான் இந்த உலகை எவ்விதம் தனக்கு விருப்பமான விதத்தில் நடத்துகிறான் என்பதை உலகம் அறிந்து கொள்ளும்படி அவனை அனுமதித்து இருக்கிறார்.

தேவன் எல்லோருக்கும் நல்லவராகவும், அன்பானவராகவும் இருக்கும்போது, இது எல்லாம் எப்படி இப்படி நடக்கிறது என்பதை நம்மால் புரிந்து கொள்ள முடியாது.


47

பரலோகத்தில் ஆரம்பித்த யுத்தம் முடிந்துவிடவில்லை. இடம் மாத்திரம் மாறியுள்ளது. இந்த பூமிதான் நன்களமாக உள்ளது. இங்குதான் சாத்தான் தன் அரசாங்கம் எவ்வாறு இருக்கும், இந்த உலகை எவ்விதம் நடத்துகிறான் என்பதை செய்து காட்டப்போகிறான்.



48

ஆனால், ஏன் இந்த பூமி? ஏன் இந்த பூமி இப்படியாக வேண்டும்?



49

(வசனம் 1 கொரிந்தியர் 4:9) நாங்கள் உலகத்துக்கும், தூதருக்கும், மனிதருக்கும் வேடிக்கையானோம்.

1 கொரிந்தியர் 4:9.

# 6  ஏன் இத்தனை வேதனைகள்?



50

இந்த உலகம் இப்போது சிருஷ்டிகரின் விவரிக்க முடியாத அழகோடும், பரிபூரணத்தோடும் தோன்றியுள்ளது.. இந்த உலகம் கைப்பற்றிக் கொள்ளக்கூடிய ஒரு பரிசு என சாத்தான் எண்ணினான்.

புதிதாக தோன்றியுள்ள இந்த உலகை, அழகு மிகும் இந்த கிரகத்தை கொள்ளை கொள்ள விரும்பினான்.



51

மனித இனத்தின் தாயும் தகப்பனுமாகிய ஆதாமும் ஏவாளும் பரிபூரணமாக சிருஷ்டிக்கப்பட்டிருந்தபோதிலும், தவறு செய்வதிலிருந்து அவர்கள் தவிர்த்து வைக்கப்படவில்லை.
அவர்கள் தேவனை நேசிக்கவோ, அவரை பின்பற்றவோ அல்லது அவரின் ஆலோசனையை மறந்துவிடவோ சுதந்திரம் பெற்றிருந்தனர். ஆனால் அவர்களின் விசுவாசம் பரிசோதிககப்பட்டது. அந்த பரிசோதனை ஒரு மரத்தைச் சார்ந்து இருந்தது. ஆனால் தேவன் இதைக் குறித்து எச்சரித்து இருந்தார்.




52

(வசனம் ஆதியாகமம் 2:16,17) தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் நீ தாராளமாக புசிக்கலாம். (ஆதியாகமம் 2:16, 17)




53

ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம். நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய். ஆதியாகமம் 2:16,17. இது ஏற்றுக்கொள்ளும்படியான வேண்டுதல்தான். அவர்கள் மேலான பாதுகாப்பை உணர்ந்திருக்கலாம். மனிதன் தான் முழுவதும் பாதுகாப்பை விட்டு வெளியே போய் தான் பாதுகாப்பாக இருக்கிறேன் என நினைக்கும் போது அவன் மிகவும் பலவீனமாக இருக்கிறான்.

# 6  ஏன் இத்தனை வேதனைகள்?


54

இதுதான் ஏவாளுக்கு நடந்தது.

சாத்தான் தன் அசாத்திய வல்லமையை ஏவாளை நோக்கி பயன்படுத்தினான். சாத்தான் மிக கேடுள்ளவனாக இருப்பதால் அவன் எப்போதாவது தான் நேரடியாக செயல்படுகிறான். அவன் ஸ்தாபனத்தை, ஜனத்தை அல்லது ஏன், சர்ப்பத்தை கூட உபயோகிப்பான்.


55

ஆகவே தான் பவுல் சொன்னார்.



56

(வசனம் எபேசியர் 6:11-12)
நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணி யுள்ளவர்களாகும்படி தேவனுடைய சர்வா யுதவர்கத்தை யும் தரித்துக் கொள்ளுங்கள்.



57

ஏனெனில் மாமிசத்தோடும், இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும்.



58

இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதியோடும் வான மண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனையோடும்.
எபேசியர் 6:11, 12.


59

ஏவாள் வஞ்சிக்கப்பட்டாள். அவள் தன்னோடு பேசும் சர்ப்பத்தின் வார்த்தைகள் சாத்தானின் வார்த்தைகள் என்பதை ஒருபோதும் யோசிக்கவில்லை. பிசாசு சர்ப்பத்தின் மூலமாக பேசி அவளிடம் கேட்டது.



60


(வசனம் ஆதியாகமம் 3:1) நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் சொன்னது உண்டோ என்றது.
ஆதியாகமம் 3:1.

# 6 ஏன் இத்தனை வேதனைகள்?




61

(வசனம் ஆதியாகமம் 3:2-4)
ஏவாள் பிரதியுத்திரமாக நாங்கள் தோட்டத்திலுள்ள விருட்சங்களின் கனிகளைப் புசிக்கலாம்.




62

ஆனாலும் தோட்டத்தின் நடுவில் இருக்கிற விருட்சத்தின் கனியை குறித்து.




63

தேவன் நீங்கள் சாகாதபடிக்கு அதைப் புசிக்கவும் அதைத் தொடவும் வேண்டாம்.



64

அப்போது சர்ப்பம் ஸ்திரியை நோக்கி நீங்கள் சாகவே சாவதில்லை.
ஆதியாகமம் 3:2-4


65

ஏவாள் சர்ப்பத்துக்கு செவி கொடுத்தாள். தேவன் சொன்னதைவிட வித்தியாசமானதாக இவன் சொல்கிறது இருக்கிறதே என்பது அவள் மனதில் தோன்றி இருக்கலாம்.

அவள் ஏதோ குழப்பத்தில் இருக்கிறாள் என்பதை புரிந்து கொண்டு சாத்தான் மேலும்



66

(வசனம் ஆதியாகமம் 3:5) நீங்கள் இதை புசிக்கும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும் என்றும், நீங்கள் நன்மை தீமை அறிந்து தேவர்களைப் போல் இருப்பீர்கள் என்றும் தேவன் அறிவார்.

ஆதியாகமம் 3:5.

# 6  ஏன் இத்தனை வேதனைகள்?


67


சாத்தான் சொன்னான் தேவன் நேர்மையற்றவர். அதனால்தான் நன்மையான ஒன்றை மறைத்து வைத்துள்ளார். தேவனைப்போல் மாற வேண்டும் என்பதுதான் சாத்தானின் அணையா ஆவலாக இருந்தது. அதுவே அவனுடைய விழுகைக்கு காரணம். இப்போது அது ஏவாளுக்கு நல்லதுபோல் தோன்றியது. அதற்கு உடனடியாக தன்னை விற்றுப்போட்டாள்.



68

(வசனம் ஆதியாகமம் 3:6.)

அப்போது ஸ்திரீயானவள், அந்த விருட்சம் புசிப்புக்கு நல்லதும், பார்வைக்கு இன்பமும்.




69

புத்தியை தெளிவிக்கிறதற்கு இச்சிக்கப்படத்தக்க விருட்சமுமாய் இருக்கிறது என்று கண்டு, அதின் கனியை பறித்து புசித்து.

ஆதியாகமம் 3:6.


70

ஏவாள் ஆதாமுக்கும் அப்பதழத்தை கொடுத்தாள், அவன் அதை உண்டான்.


71

ஆதாமும் ஏவாளும் ஏதோ தவறு நடந்துள்ளது என்பதை உணரும் முன்பே தேவனின் அன்பும், உண்மையும் நிறைந்த சோதனையில் தோற்றுப்போனார்கள்.


72

சாத்தான் புதிதாக உருவான இந்த உலகை கைப்பற்றிக் கொண்டான். அந்தச் நேரத்திலிருந்து இந்த உலகின் அதிபதி என்று தன்னை உரிமை பாராட்ட ஆரம்பித்தான். இந்த உலகின் ஆளுநர் போராட்டத்தில் ஈடுபட்டான். ஆதாமும் ஏவாளும் தீமையானவனுக்கு செவிகொடுத்தனர்.

# 6 □ ஏன் இத்தனை வேதனைகள்?


73

துக்ககரமான நாள் நெருங்கியது. தேவன் ஆதாமையும், ஏவாளையும் பகலில் குளிர்ச்சியான நேரத்தில் அழைக்க வந்தார். இந்த நாள் மட்டும் சிருஷ்டித்த தேவனோடு பேசுவதும், நடப்பதும் மிகுந்த சந்தோஷமான நேரமாகயிருந்தததது. ஆனால் இந்த நாளில் அவர்கள் புதருக்குள் ஓடி ஒளிந்து கொண்டார்கள்.


74

இறுதியாக புதருக்குப் பின்னால் இருந்து மெதுவாக அறிக்கையிட்டான்.




75

(வசனம் ஆதியாகமம் 3:10)

நான் தேவரீருடைய சத்தத்தை தோட்டத்தில் கேட்டு நான் நிர்வாணியாயிருப்பதினால் பயந்து ஒளித்துக் கொண்டேன் என்றான்.
ஆதியாகமம் 3:10.


76

இதற்கு முன்பு ஆதாம் ஒரு போதும் பயந்தது இல்லை. அந்த பயத்தை தருவது பாவமே. பாவம் தேவனை பற்றிகூட பயப்பட வைக்கிறது.



77

(வசனம் ஆதியாகமம் 3:11)

அப்பொழுது தேவன், புசிக்க வேண்டாம் என்று நான் உனக்கு விலக்கின விருட்சத்தின் கனியைப் புசித்தாயோ என்றார்.
வசனம் 11.
ஆதாம் பதிலளித்தார்.



78

(வசனம் ஆதியாகமம் 3:12) என்னுடனே இருக்கும்படி தேவரீர் தந்த ஸ்திரியானவள் அவ்விருட்சத்தின் கனியை எனக்குக் கொடுத்தாள். நான் புசித்தேன் என்றான். ஆதியாகமம் 3:12. சில நாட்களுக்கு முன்பு ஆதாம் ஏவாளோடு மரிக்கவும் தயாராகயிருந்தான். இப்பொழுது அவளை தேவனிடத்தில் குற்றப்படுத்துகிறான். எப்படி பாவம் முழுமையான அன்பை பிரிக்கிறது.

# 6 ▯ ஏன் இத்தனை வேதனைகள்?


79

தேவன் ஏவாளிடத்தில் கேட்டபொழுது அவனை குற்றப்படுத்தவில்லை.




80

(வசனம் ஆதியாகமம் 3:13)

சர்ப்பம் என்னை வஞ்சித்தது. நான் புசித்தேன். (ஆதியாகமம் 3:13) ஏவாள் தேவன்மேல் குற்றம் சாட்டினாள். நீர் சிருஷ்டித்த சர்ப்பம் என்னை இந்த பிரச்சினைக்குள்ளாக்கியது.


81

அந்த நாளில் ஆதாமுக்கும், ஏவாளுக்கும் மரண தண்டனை அளிக்கப்பட்டது. அவர்கள் மேலும் அப்பழத்தை புசிக்காத வண்ணம். அவர்களைத் தோட்டத்திலிருந்து விரட்டினார். நீங்கள் சாவதில்லை என்று சாத்தான் கூறினான். ஆனால் வேதம் சொல்கிறது.




82

(வசனம் ஆதியாகமம் 5:5) ஆதாம் உயிரோடிருந்த நாளெல்லாம் தொளாயிரத்து முப்பது வருஷம், அவன் மரித்தான். ஆதியாகமம் 5:5. சாத்தானைக் குறித்து தெரிய வரும்போது காலம் கடந்துவிட்டது.



83

(வசனம் யோவான் 8:44) அவன் பொய்யனும், பொய்க்கு பிதாவுமாயிருக்கிறான். யோவான் 8:44.



84

இந்த உலகின் கொடுமைக்கும், நாகவேளைக்கும் தேவனை குற்றப்படுத்துவது எளிது. ஆனால் சாத்தான் தான் இந்த அழிவுகளுக்கெல்லாம் காரணம்.



85

(வீடியோ 10 வினாடிகள்) சாத்தான் தான் இந்த உலகத்துக்கு தொல்லைகளை கொண்டு வந்து பாவத்தையும், உபத்திரவங்களையும் தருகிறான். இயேசு அவன் முகமூடியை கிழித்து அவன் ஜனங்களுக்கு உபத்திரவம் கொடுக்கும் வழிகளையும் அழிக்கிறார்.

# 6 ஏன் இத்தனை வேதனைகள்?


86

ஒரு ஓய்வு நாளில் இயேசு ஜெப ஆலயத்தில் போதகம் பன்னிக் கொண்டிருந்த போது பதினெட்டு வருஷமாய் பலவீனப்படுத்தும் ஆவியைக் கொண்ட ஒரு ஸ்திரியை கண்டு குணப்படுத்தினார்.


87

அந்த அற்புதம் ஓய்வு நாளில், தேவனுடைய பரிசுத்தமான தொழுகை நாளில் நடைப் பெற்றபடியால், அவரை குற்றப்படுத்தினர். ஆனால் அதை இயேசு எவ்விதம் சமாளிக்கிறார் என்று பாருங்கள்.



88

(வசனம் லூக்கா 13:16)
இதோ, சாத்தான் பதினெட்டு வருஷமாய்க் கட்டியிருந்த ஆபிரகாமின் குமாரத்தியை.



89

ஓய்வு நாளில் அந்த கட்டிலிருந்து அவிழ்த்துவிட வேண்டியதில்லையா?
லூக்கா. 13:16.


90

இயேசு சொன்னார், சாத்தான் இவளை பதினெட்டு வருஷமாக கட்டியிருந்தான். சாத்தான் ஒரு குற்றவாளி. உண்மை என்ன என்றால் எல்லா நோய்களுக்கும், இதய வேதனைக்கும், மரணத்துக்கும், பிரச்சனைக்கும் பின்னால் இருந்து இயக்கும் கெட்ட சக்தியாக சாத்தான் இருக்கிறான்.


91

வேதகமத்தில் எங்கும் இல்லாத அளவுக்கு சாத்தானின் தீய திட்டங்கள், யோபு முதலாம் அதிகாரத்தில், சாத்தானுக்கும், தேவனுக்கும் இடையில் நடைபெறும் சம்பாஷனையின் மூலம் விவரிக்கப்பட்டுள்ளது.


92


சாத்தான் தள்ளப்பட்ட கொஞ்ச நாளுக்குப்பின் தேவபுத்திரர் கர்த்தருடைய சந்நிதியில் வந்தார்கள். சாத்தானும் வந்தான். இது தேவ புத்திரர்கள் கூடும் கூட்டம், சாத்தான் அழைக்கப்படாமலே வந்திருந்தான்.

# 6 ஏன் இத்தனை வேதனைகள்?



93

(வசனம் யோபு 1:7) கர்த்தர் சாத்தானைப் பார்த்து நீ எங்கேயிருந்து வருகிறாய் என்று கேட்டார். யோபு 1:7. யார் உன்னை அழைத்தார்கள்? இங்கிருக்க உனக்கு என்ன உரிமையிருக்கிறது? சாத்தான் கர்த்தருக்கு பிரிதி யுத்திரமாக.



94


பூமியெங்கும் உலாவி அதில் சுற்றித் திரிந்து வருகிறேன். யோபு. 1:7
சாத்தான் ஆதாமின் ஸ்தானத்தை எடுத்துக்கொண்டு, பூமியின் மேல் அதிகாரம் உண்டு என்கிறான்.


95

ஆதாம் தேவ குமாரன் என்றழைக்கப் பட்டான், (லூக்கா 3:38) எப்படி அன்று தேவனோடு அந்த கூட்டத்திற்குள் வந்தவர்கள் அழைக்கப்பட்டார்களோ அப்படியே அழைக்கப்பட்டான்.



96

இவர்கள் ஆதாம் எப்படி ஆரம்பத்தில் இந்த உலகின் தலைவனாக இருந்தானோ அதே போல் இவர்களும் மற்ற உலகின் தலைவர்களாக இருக்கலாம். சாத்தான் தன்னை இவ்வுலகிலகின் பிரதிநிதியாக உரிமை பாராட்டினான். தேவன் சாத்தானிடம் சொன்னார்.



97

(வசனம் யோபு 1:8, 9, 11) என் தாசனாகிய யோபுவின் மேல் கவனம் வைத்தாயோ, அவனைப் போல பூமியில் ஒருவனும் இல்லை.



98


உத்தமனும், சன்மார்க்கனும், தேவனுக்கு பயந்து பொல்லாப்புக்கு விலகுகிறவன்.



99

அதற்கு சாத்தான் பிரதியுத்தரமாக யோபு விருதாவாகவா தேவனுக்குப் பயந்து நடக்கிறான்?

# 6 □ ஏன் இத்தனை வேதனைகள்?



100

ஆனாலும் உம்முடைய கையை நீட்டி அவனை தொடுவீரானால், அப்போது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மை தூசிக்கானோ பாரும். என்றான். (யோபு 1:8, 9, 11).


101

யோபு தேவனுக்கு உண்மையாயிருப்பது அவரை நேசித்து, நம்புவதால் அல்ல, தேவன் அவனுக்குச் செய்த நல்லக் காரியத்துக்காகவே என்று சாத்தான் சொல்லும் காரணம் எப்படிப்பட்ட ஒரு அறைகூவல் என்று பாருங்கள்.



102

(வசனம் யோபு 1:12) கர்த்தர் சாத்தானை நோக்கி, இதோ அவனுக்கு உண்டானவையெல்லாம் உன் கையில் இருக்கிறது, அவன் மேல் மட்டும் உன் கையை நீட்டாதே என்றார்.



103

சாத்தான் கர்த்தருடைய சந்நிதியை விட்டு புறப்பட்டுப் போனான்
யோபு 1:12
யோபுவின் சொத்தின் மேல் கை வைக்க சாத்தான் ஆவலோடு போனான்.


104

அந்த அடிகள் யோபுவின் மேல் விழ ஆரம்பித்தது. முதலில் சபேயர் வந்து யோபுவின் மிருக ஜீவன்களை திருடிக்கொண்டு வேலையாட்களைக் கொன்று போட்டனர்.


105

இரண்டாவது, மின்னல் ஆடுகளையும், மேய்ப்பர்களையும் கொன்று போட்டது.


106

மூன்றாவது, கல்தேயர் வந்து யோபுவின் ஒட்டகங்களை ஓட்டிக்கொண்டு போனார்கள்.

# 6 □ ஏன் இத்தனை வேதனைகள்?



107

நான்காவது, (மிக உள்ளத்தை உடைக்கும் செய்தி) பெருங்காற்று வீட்டின் மேல் மோதி யோபுவின் பெரிய மகனின் வீட்டையும், யோபுவின் பத்து குழந்தைகளையும் அழித்துக் கொன்று போட்டது.




108

பரிதாபமான யோபு, தேவன் தன் சொத்துகளை எல்லாம் எடுத்துக்கொண்டு தன் இருதயத்தை நொறுக்கினார் என எண்ணினான். பிசாசு இவைகளை செய்தான் என அறியாமல் இருந்தான். துக்கம் அவனை அதிகம் சூழ்ந்தாலும், யோபுவின் உண்மை மாறவில்லை.





109

(வசனம் யோபு 1:21) கர்த்தர் கொடுத்தார். கர்த்தர் எடுத்தார். கர்த்தருடைய நாமத்துக்கே ஸ்தோத்திரம். யோபு 1:21. தன் சொத்தையும், பிள்ளைகளையும் வாரிக்கொண்டு போன உபத்திரவத்தை அவன் புரிந்துகொள்ள முடியாமல் இருந்தாலும், தேவனின் நற்குணத்தை யோபு நம்பினான். ஆனால் சாத்தான் அதோடு நின்றுவிடவில்லை, மீண்டும் தேவனிடம் சவால் விட்டான்.





110

(வசனம் யோபு 2: 4-6)
தன் ஜீவனுக்கு பதிலாக மனிதன் தனக்கு உண்டான எல்லாவற்றையும், கொடுத்துவிடுவான்.




111

ஆனாலும், நீர் உம்முடைய கையை நீட்டி அவன் எலும்பையும், அவன் மாமிசத்தையும் தொடுவீரானால், அப்போது அவன் உமது முகத்துக்கு எதிரே உம்மை தூஷிக்கிறானோ பாரும்.




112

அப்போது கர்த்தர் சாத்தானை நோக்கி, இதோ, அவன் உன் கையிலிருக்கிறான். ஆகிலும், அவன் பிராணனை மாத்திரம் தப்பவிடு என்றார். யோபு 2:4-6.



113


சோதனை நடந்தது. யோபு தன் உண்மையில் நிலை நின்றானா, அல்லது தன் முதுகை தேவனுக்கு விரோதமாக திருப்பினானா?

# 6  ஏன் இத்தனை வேதனைகள்?



114

(வசனம் யோபு 2:7)
அப்போது சாத்தான் கர்த்தருடைய சந்நிதியை விட்டு புறப்பட்டுப் போனான்.



115

யோபுவின் உள்ளங்கால் தொடங்கி அவன் உச்சந்தலை மட்டும் கொடிய பருக்களால் அவனை வாதித்தான். யோபு 2:7.


116

உங்களுக்கு ஒரு கொப்பளம் இருந்தால், அது எவ்வளவு வேதனைக்குரியது என்பது தெரியும். உள்ளங்கால் முதல் உச்சந்தலை மட்டும் என்று யோசித்துப் பாருங்கள்.



117

சாத்தான் எவ்வளவுதான், யோபுவின் சொத்துக்களை, குழந்தைகளை, சுகத்தை கெடுத்தாலும், யோபு உண்மையுள்ளவனாக இருந்தான். எப்படிப்பட்ட மனிதன் பாருங்கள். வேதாகமம் சொல்கிறது.




118

இவை எல்லாவற்றிலும், யோபு பாவம் செய்யவில்லை. தேவனை தூசிக்கவும் இல்லை.
யோபு 1:22.




119

யோபுவை துன்புறுத்தியது யார்?
யோபுவை உபத்திரவப்படுத்தியது யார்? சாத்தான்.




120

அவனின் ஜீவியத்துக்கடுத்தவைகளை திருடி, வேலையாட்களை கொன்றது? சாத்தான்,




121

பெருங்காற்றை வரவழைத்து மகன்களையும் பெண்களையும் அழித்தது யார்? சாத்தான்.


122


தேவன் நம் அன்பையும் உண்மையையும் பரிசோதிக்க கஷ்டங்களை அனுமதிக்கலாம்.


123

ஆனால் இந்த கிரகமாகிய பூமியில் நடைபெறும் எல்லாத்தீங்குக்கும், பொறுப்பாளி. குற்றவாளி சாத்தான் தான்.


124

நீங்களும், நானும் இந்த அண்ட சராசரத்தில் நடக்கும் ஒரு நாடகத்தின் மத்தியில் இருக்கிறோம். அதிகாரத்துக்கும், நியாயமற்றதுக்கும், சிருஷ்டிகருக்கும் சாத்தானுக்கும், உண்மைக்கும் கலகத்துக்கும் நடக்கும் போராட்டம் அது. நாம் பார்வையாளர்களாக அல்ல, சம்பந்தப்பட்டவர்களாகவே இருக்கிறோம். விரும்பினாலும் சரி விரும்பாவிட்டாலும் சரி.


125

சாத்தான் என்பது கற்பனையோ, அல்லது நம்மை ஆயத்தமற்றவர்களாக்கி ஒரு வல்லமையை எதிர்கொள்ளச் செய்யும் ஒரு அறிவுப்பூர்வமான வல்லமை.


126

வெளிப்படுத்தின புத்தகம் சொல்கிறது.



127

(வசனம் வெளிப்படுத்தல் 12:12.)
ஆகையால் பரலோகங்களே! அவைகளில் வாசமாயிருக்கிறவர்களே! களிகூருங்கள் பூமியிலும் சமுத்திரத்திலும் குடியிருக்கிறவர்களே! ஐயோ.



128

பிசாசானவன், தனக்கு கொஞ்சம் காளந்தான் உண்டென்று அறிந்து உங்களிடத்தில் இறங்கின படியால், வெளிப்படுத்தல் 12:12 பேதுரு இந்த எச்சரிப்பை எழுதுகிறார்.

6 ☐ ஏன் இத்தனை வேதனைகள்?

# 6 ஏன் இத்தனை வேதனைகள்?




129

(வசனம்1 பேதுரு 5:8.)
தெளிந்த புத்தி யுள்ளவர்களாயிருங்கள். விழித்திருங்கள். ஏனெனில் உங்கள் எதிராளியாகிய பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம் போல்.




130

எவனை விழுங்கலாமோ என்று.
1 பேதுரு 5:8



131

இப்படி சாத்தான் மிக மோசமாக செயல்பட்டதும் சிருஷ்டிப்பின் தேவன் புது சிருஷ்டிப்பின் திட்டத்தை வைத்துள்ளார். அது நாம் நித்திய வாழ்வைப் பெற, நமக்காக மரித்து விலைக்கிரயத்தை செலுத்திய, விலையேறப்பெற்ற குமாரன் கிறிஸ்துவை யும் உள்ளடக்கியது.



132

வேதம் சொல்கிறது. சாத்தான் கெர்ச்சிக்கும் சிங்கம் போல வருகிறான் என்று.



133

கிறிஸ்து குழந்தையாக இருந்தபோது அவரை அழிக்க சாத்தான் ஏரோது மூலம் கிரியை செய்தான் (அவன் தோற்றான்).




134

(வீடியோ :10 வினாடிகள்)
சாத்தான் வனாந்தரத்தில் இயேசுவிடம் வந்து பரலோகத்திலிருந்து வரும் தூதன் போல வேஷம் போட்டு மூன்று சோதனைகளால் சோதித்தான். (அவன் தோற்றான்).



135

பெருங்கூட்டத்தின் மூலம் சாத்தான், கிறிஸ்துவை கல்வாரியில் அழிக்க முயன்றான். (அவன் தோற்கடிக்கப்பட்ட சத்தரு எப்போதும்).


# 6  ஏன் இத்தனை வேதனைகள்?


136

கல்வாரி இருந்தது. ஆனாலும் உயிர்த்தெழுதலும் இருந்தது. தேவனுக்கு ஸ்தோத்திரம். எப்படி பிதாகுமாரனை அளித்தாரோ, அப்படியே குமாரனும் தன்னையே தந்து உங்களுடைய என்னுடைய விதியை மாற்றினார். இது வெற்றியின் வேளை, பூமியில் சாத்தானால் சிறை வைக்கப்பட்டுள்ள அனைவருக்கும் சுதந்தரத்தை அறிவிக்கும் நாள்.



137

சாத்தான் இப்போது தோற்கடிக்கப்பட்ட சத்துரு கிறிஸ்து தன் மரணத்தால், தீமையையும், துன்பத்தையும் அழிக்கும் உரிமையை பெற்றார். பவுல் எபிரேயர் 2:14ல் எழுதுகிறார்.



138

(வசனம் எபிரேயர் 2:14.)
ஆதலால், பிள்ளைகள் மாமிசத்தையும் இரத்தத்தையும் உடையவர்களாயிருக்க, அவரும் அவர்களைப் போல, மாமிசத்தையும் இரத்தத்தையும் உடையவரானார்.



139


மரணத்துக்கு அதிகாரியாகிய பிசாசானவனைத் தமது மரணத்தினாலே அழிக்கும்படிக்கும்.


140

சாத்தானவன் தான் எப்படிப்பட்டவன் என்பது, இந்த அண்ட சராசரமும் அறிந்து கொள்ளும்படி வெளிப்படுத்தியுள்ளான். இந்த உலகை அவன் நடத்தும் விதத்தை இன்றும் வெளிப்படுத்திக்கொண்டு தான் இருக்கிறான். புயல், பூமியதிர்ச்சி, வெள்ளம், குற்றங்கள், வியாதி, மாரடைப்பு மேலும் வேதனை இவைகளை நாம் பார்க்கிறோம்.


141

காணப்படாத எல்லாக்காரியங்களிலும் சாத்தானின் அசாத்திய காரியங்கள் உள்ளன.


142

இந்த துயரங்கள் தேவனின் செயல்கள் அல்ல. அவையாவும் பிசாசின் செயல்களே.

# 6 ஏன் இத்தனை வேதனைகள்?


143

உங்கள் வாழ்வில் உள்ள வருத்தம், மனவேதனை தடுமாற்றம் இவைகளை எண்ணி வியப்புறலாம். நீங்கள் குழந்தைகளின் இழப்பு குறித்தும் அன்பானவர்களின் மரணத்தையும் கண்டு வியந்து எங்கே தேவன்? என கேட்கலாம்.


144

வேதம் போதிக்கிறது. தேவன் அங்கு தான் உள்ளார். அவர் உங்களின் மனவேதனையில், வருத்தத்தில், தடுமாற்றத்தின் மத்தியில் உள்ளார். பாவம், வேதனை என்ற பிரச்சனையை முடிவுக்குக் கொண்டுவர அவர் சீக்கிரம் வர இருக்கிறார்.


145

இந்த பரமண்டலத்திற்குரிய பூமி, சாத்தனால் கடத்தப்பட்டுள்ளது. ஆனால் சீக்கிரம் மீட்கப்பட போகிறது. இது நற்செய்தி. இந்த அறிவு, பயந்து நடுங்குபவர்களை அமைதியாக்கும், தவறாகப் போன இந்த உலகின் பிரயாணிகளை ஆர்வமுள்ளவர்களாக்கும். தேவன் சாத்தானை அழிக்க திட்டம் வைத்து உள்ளார். அந்த திட்டம்தான் என்ன என்பதை வரும் கூட்டங்களில் படிக்கலாம். சாத்தானைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது என பார்ப்போம்.



146

(வசனம் எசேக்கியல் 28:16, 18)

காப்பாற்றுகிற கேருபாய் இருந்த உன்னை நான் அழித்துப்போடுவேன்.



147

ஆகையால், ஒரு அக்கினியை நான் உன் நடுவிலிருந்த புறப்படப்பண்ணி.



148

உன்னை பூமியின்மேல் சாம்பலாக்குவேன். எசேக்கியல் 28:18 பாவமும், வேதனையும் முற்றுமையால் ஒழிந்துபோம்.



149

ஆம், நண்பர்களே, இயேசு கிறிஸ்து சீக்கிரமாய் வருகிறார். ஏழையான கலிலேயனாக அல்ல, அவமானப்படுத்தப்பட்டவராக அல்ல, மறுதலிக்கப்பட்டவராக அல்ல, உமிழப்பட்டவராக அல்ல. சிலுவையில் தொங்கினவராக அல்ல.



150


ஆனால் ராஜாதி ராஜவாக, தேவாதி தேவனாக ஆளுகை செய்பவனாக வருவார். நாம் அவரை சந்திக்க ஆயத்தமாக வேண்டும். இதை நாம் தவறவிட்டு விட்டால் எல்லாவற்றையும் இழந்துவிடுவோம்.




151


(வீடியோ 12 வினாடிகள்)

இன்றைய பிரச்சினை என்னவெனில், யாரை நம்புகிறோம்? யாரை பின்பற்றுகிறோம். அன்புள்ள தேவனையா? அல்லது விழுந்துபோன தூதனையா? பிரிவுக்கோடு வரையப்பட்டிருக்கின்றது. உலகம் முழுவதும் இந்த இரண்டு பகுதியாக பிரிக்கப்பட்டிருக்கின்றது. நீங்கள் யார் பக்கம்? யாரை சார்ந்து இருக்கிறீர்கள்?



152

சஞ்சலமுள்ள, தனிமையில் வாடுகின்ற, குற்றமுள்ள, பூமியில் வாழும் எல்லா மக்களுக்கும் இயேசு கிறிஸ்து ஒரு அன்பின் அழைப்பை கொடுக்கிறார்.




153

(வசனம் மத்தேயு 11:28) வருத்தப்பட்டு பாரஞ்சுமக்கிறவர்களே நீங்கள் எல்லோரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தருவேன்.

மத்தேயு 11:28.




154

(வசனம் யோவான் 6:37) என்னிடத்தில் வருகிறவனை நான் புறம்பே தள்ளுவதில்லை. யோவான் 6:37. இது சந்தோஷமான செய்தியல்லவா?

6 □ ஏன் இத்தனை வேதனைகள்?

# 6  ஏன் இத்தனை வேதனைகள்?


155

வாழ்க்கையின் துயரங்கள் நெஞ்சை பிளக்கும் ஏமாற்றங்கள், துக்கமான நிகழ்ச்சிகள் இவற்றிற்கு மத்தியில் இயேசு இருக்கின்றார். இப்போது நீங்கள் படுகின்ற துன்பங்களை அவர் அறிந்தவராக இருக்கிறார். நீங்கள் வியாதியினால் படுகின்ற வேதனைகளை அவர் அறிவார். அவர் கூர்மையான ஆணிகளால் அவர் நகத்தில் பாய்ச்சினதை அனுபவித்தவர். அவர் தனிமையை அறிந்திருக்கிறார். தனிமையாக இருளில் சிலுவையில் தொங்கினதை அறிந்திருக்கிறார். ஏழ்மையை அறிந்திருக்கிறார். பாலஸ்தீனாவின் புழுதிப்படிந்த தெருக்களில் உணவின்றி, தங்கும் இடமின்றி அவதிப்பட்டதை அனுபவித்திருக்கிறார். இப்போதே அவரிடம் வாருங்கள் அவர் உங்களுக்கு நம்பிக்கையும் உற்சாகத்தையும் தருவார். நற்செய்தியை பாருங்கள். ஒரு நாள் இயேசு கிறிஸ்து மறுபடியும் வருவார். அவர் வந்து எல்லா துன்பங்களையும் முடிவுக்கு கொண்டுவருவார். புதிய உலகை ஸ்தாபிப்பார். பாவமும், பாவிகளும் அழிக்கப்படுவார்கள். சாத்தான் இறுதியாக முழுமையாக அழிக்கப்படுவான். இயேசு உங்களுடைய குடும்பத்தை மீட்டெடுப்பார். புதிய பூமியில் நித்திய ஜீவனை அருளுவார். ஆனால் யார் உங்கள் ஆண்டவர் என்பதை தீர்மானிக்க வேண்டும். இந்த முடிவு வாழ்வா சாவா என்று இப்பொழுதே தீர்மானிக்கப்பட வேண்டும். இயேசு கிறிஸ்துவை உங்கள் வாழ்வின் ராஜாவாக ஏற்றுக் கொள்வீர்களா? அவர் காத்திருந்து தம்முடைய கரத்தை விரித்து - வா - வா என்கிறார். தலைகளை தாழ்த்தி ஆம் இயேசுவே இதோ நான் வருகிறேன். என்று நாம்ஜெபத்திலேயே கூறுவோமா?

# 7 □ உலகை மாற்றின ஒரு ஜீவன்



1

உங்கள் வாழ்வையும் மாற்றுவார்.


2

இரண்டுபேர் அமெரிக்காவில் நூற்றுக்கணக்கான மைல்களை இரயிலில் கடக்க தீர்மானித்தனர். நீண்ட தூரம் பயணமாக இருந்த படியால் பலகாரியங்களை வழிப்பிராயணத்தில் பேசிக் கொண்டே சென்றனர். சீதோஷ்ண நிலையைக் குறித்தும் அரசியலைக்குறித்தும் குழந்தைப் பருவத்தைக் குறித்தும், வாழ்க்கையின் அனுபவம், குடும்பம் திருமணம் என்று பேசிக் கொண்டே சென்றனர். இறுதியில் அந்த பேச்சு மதத்தில் சென்றது. இரண்டு பேரில் ஒருவர் மதவாதி. அடுத்தவர் இல்லைவாதி, ஒருவர் இயேசுவை விசுவாசிப்பவர். மற்றொருவர் தேவனையே தேடாதவர், ஒருவர் வேதம் வாசிப்பவர், மற்றவர் வேதமே படித்ததில்லை.


3

அந்த கோடை வெயிலில் அவர்கள் பேச எடுத்த ஒரு தலைப்பு இயேசுவை பற்றியது. அந்த இல்லை வாதி இந்த கிறிஸ்தவ நண்பரை ஆழமான கேள்விகளை கேட்டார். நீ ஏன் கிறிஸ்தவனாயிருக்கிறாய்? இது ஒரு பூகோள தவறல்லவா? நீ ஒரு கிறிஸ்தவ நாட்டில் குடிமகனாய் பிறந்திருப்பாய்? இயேசு அல்லது மற்ற மதஞானிகளிடம் இருந்து வேறுபட்டவர். அவர் ஒரு மதபோதகரா? அல்லது மத தத்துவ ஞானியா? எப்படி? இயேசு எப்படி தெய்வமாக இருந்து நமக்கு நித்திய ஜீவனை தர முடியும். அது உண்மையா? கிறிஸ்தவ நண்பர். கேட்ட கேள்விக்கு அந்த கோடை வெயிலில் உடனே பல பதில்களை பகிர்ந்து கொண்டார். இந்த கேள்விகளுக்கு நல்ல பதில் கிடைத்ததெனில் அதுதான் நித்திய ஜீவன் எனக் கூறினார்.



4

இந்த உலகம் புகழ் பெற்ற மனிதர்களை பெற்றிருக்கின்றது. ஒவ்வொருவரும் இவ்வுலக நன்மைக்காக ஏதேனும் ஒரு விதத்தில் பங்காற்றியிருக்கின்றனர்.

# 7  உலகை மாற்றின ஒரு ஜீவன்


5

இராஜாக்கள், தலைவர்கள், மத, இராணுவ தலைவர்கள், விஞ்ஞானிகள், கைவண்ணம் திட்டுபவர்கள், இவ்வுலகில் அவர்களின் அடையாளங்களை வைத்து சென்றிருக்கின்றனர். அவர்களின் பெயர்கள் உலகில் அதிகமாய் பேசப்படுகிறது.


6

மற்ற எல்லாரைக்காட்டிலும் ஒரு நாமம் உயர்ந்து நிற்கிறது. அவருடைய பிறப்பினால் உலக சரித்திரம் பிரித்து காட்டப்பட்டு இருக்கிறது. அவர் பெயர் இயேசு. இயேசு என்னும் பெயர் வரலாற்றில் புகழ் பெற்றது. ஒன்று அவருடைய பெயரைக் குறித்து கேள்விப்படுவது அடுத்து அவரை மெய்யாய் அறிந்து கொள்வது.


7

இந்த இரவில் சரித்திரத்தை வேதத்திலிருந்து அறிமுகப்படுத்த விரும்புகின்றேன். இயேசு கிறிஸ்து யார் என்ற கேள்வியுடன் தொடங்குகிறேன். அவர் யார்? எப்படி வித்தியாசனமானார். அவர் நல்லவர் மாத்திரமா, நீதி போதகரா, அல்லது தத்துவ ஞானியா? அவரின் இரண்டு சீஷர்களுக்கு அந்த பிரச்சினை இருந்தது.


8

அவர் உயிர்த்தெழுந்த ஞாயிறன்று எம்மாவூர் சாலையில் அவருடைய இரண்டு சீஷர்களை சந்தித்தார்.


9

கடைசி காலங்களில் நிறைவேறப்போகின்ற தீர்க்க தரிசனங்களை அவர் அவர்களுக்கு சுட்டிக் காண்பித்தார்.



10

(வசனம் லூக்கா 24:25, 27.)

தீர்க்கதரிசிகள் சொன்ன யாவையும் விசுவாசிக்கிறதற்குப் புத்தியில்லாத மந்த இருதய முள்ளவர்களே.



11

மோசே முதலிய சகல தீர்க்கதரிசிகள்.

# 7 □ உலகை மாற்றின ஒரு ஜீவன்



12

எழுதின வேதவாக்கியங்களெல்லாவற்றிலும் தம்மைக் குறித்து சொல்லயவைகளை.

லூக்கா 24:25, 27.




13

இயேசு மேசியா என்பதற்கு வேத ஆதாரங்களை பார்ப்போம்.



14


அவருடைய அற்புத பிறப்பு, மரியாள், இயேசுவை பெற்றெடுக்கும் முன்பே ஏசாயா பக்தன்.



15

(வசனம் ஏசாயா 7:14.)

ஆதலால் ஆண்டவர்தாமே உங்களுக்கு ஒரு அடையாளத்தை கொடுப்பார்.



16


இதோ ஒரு கன்னிகை கர்ப்பவதியாகி ஒரு குமாரனை பெறுவாள். அவருக்கு இம்மானுவேல் என்று பேரிடுவார்கள்.

ஏசாயா 7:14.



17

(வீடியோ 5 வினாடிகள்) இயேசுவிற்கு அநேக பெயர்கள் உண்டு. இம்மானுவேல், இயேசு, இரட்சகர், கிறிஸ்து மற்றும் மேசியா. இயேசு பிறப்பதற்கு 600 ஆண்டுகளுக்கு முன்பே கன்னிகை பிறப்பை குறித்து பார்க்கிறோம். இந்த தீர்க்கதரிசனம் இயேசு ஒரு தெய்வம் என்பதற்கு சாட்சியாகும். கிறிஸ்துவின் கன்னிகையின் பிறப்பை தேவதூதன் கூறுகின்ற விதத்தை பாருங்கள்.



18


(வசனம் மத்தேயு 1:18.)
இயேசு கிறிஸ்துவினுடைய பிறப்பின் விபரமாவது, அவருடைய தாயாகிய மரியாள் யோசேப்புக்கு நியமிக்கப்பட்டிருக்கையில்.

# 7  உலகை மாற்றின ஒரு ஜீவன்



19

அவர்கள் கூடி வருமுன்னே, அவள் பரிசுத்த ஆவியினாலே கர்ப்பவதியானாள்.
மத்தேயு 1:18.



20

அவர் பிறந்த இடம்.



21

(வசனம் மீகா 5:2) .... பெத்லகேமே இஸ்ரவேலை ஆளப்போகிறவர் உன்னிடத்தில் வருவார்.
தீர்க்கதரிசனம் 700 ஆண்டுகளுக்கு முன்பு கூறிய, அதே ஊரில் இயே கிறிஸ்து வந்து பிறந்தார்.
மீகா 5:2. தீர்க்கதரிசனம் 700 ஆண்டுகளுக்கு முன்பு கூறிய, அதே ஊரில் இயே கிறிஸ்து வந்து பிறந்தார்.



22

வசனம் மத்தேயு 2:1) யூதேயாவிலுள்ள பெத்லேகமிலே இயேசு பிறந்த போது (மத்தேயு 2:1).
மீகாவின் தீர்க்கதரிசனத்தை புதிய ஏற்பாடு உறுதிப்படுத்துகின்றது. இயேசு நல்ல மனிதன் என்பதைக் காட்டிலும், நல்ல குரு என்பதைக் காட்டிலும் மேலானவர். அவர் தேவனுடைய குமாரன். கன்னிகையின் வயிற்றில், ஏசாயா தீர்க்கதரிசனம் உரைத்தது போல் பிறந்தார். மிகா தீர்க்கதரிசனம் உரைத்தது போல பெத்லேகமிலே பிறந்தார்.


23

வேதத் தீர்க்கதரிசனம் நூற்றுக்கணக்கான வருடங்களுக்கு முன்பே கிறிஸ்துவின் வாழ்க்கையை துல்லியமாய் உரைத்தது. துள்ளியமாய் இத்தீர்க்க தரிசனங்கள் நிறைவேற்றியது. ஆதாம் ஏவாள் பாவம் செய்தபோது தேவன் ஒரு திட்டம் வைத்திருந்தார். அவருடைய அன்பு கிறிஸ்துவை இவ்வுலகிற்கு கொடுத்து, ஒரு பூரண பரிசுத்த வாழ்க்கை வாழவும், அவர்களுக்காக மரிக்க ஒப்புக்கொடுக்கவும் சித்தம் கொண்டார். அவரையும் அவருடைய தீர்மானத்தையும் ஏற்றுக்கொண்டால் அவர் நமக்கு நித்திய ஜீவனையளிப்பார். இதுதான் தேவனுடைய இரட்சிப்பின் திட்டம்.

# 7 □ உலகை மாற்றின ஒரு ஜீவன்


24

கிட்டத்தட்ட 2000 வருடங்களுக்கு முன்பு கிழக்கத்திய ஞானிகள் வேதத்தை படித்தனர். அவர்கள் பெரிய ராஜாவை குறித்தும், வெளிப்படும் இடம், நேரத்தையும் அறிந்திருந்தனர்.


25

இக்காலக்கட்டத்தில் தோன்றும் நட்சத்திரம் தான் இந்த ராஜா பிறக்கும் அடையாளம். பெத்லேகம் என்னும் ஊரில் அவரை கண்டு பணிந்து தொழுது கொண்டனர்.



26

(வசனம் லூக்கா 2:7.)

அவள் தன் முதற்பேறான குமாரனை பெற்று பிள்ளையை துணிகளில் சுற்றி.



27

சத்திரத்திலே அவர்களுக்கு இடமில்லாதபடியினால், ... முன்னணையிலே கிடத்தினாள். லூக்கா 2:7.


28

சத்திரத்தில் இடமில்லாதபடியினால் இயேசுவானவரை மாட்டு தொழுவத்தில் கிடத்தினர். உதவியற்ற நிலையில் இயேசு கிறிஸ்து பிறந்தார்.


29

அவருடைய தாயார் மிக அன்பானவர். வாலிப வயதிலும், அவள் தேவ குமாரனை பெறுவாள் என்பதை ஏற்றுக் கொண்டாள்.



30

அவர் தேவகுமாரன் எனப்பட்டாலும், பிதாவைப் போலவே இவரும் தேவன். பவுல் அப்போஸ்தலன் கூறும் வண்ணம், தேவனுக்கு சமமானவராக இருப்பினும், அடிமையைப்போல மனுஷ ரூபமானார்.



31

(வசனம் பிலிப்பையர் 2:6.)
அவர் தேவனடைய ரூபமாயிருந்தும் தேவனுக்கு சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்.

# 7  உலகை மாற்றின ஒரு ஜீவன்



32

தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து.




33

மனுஷசாயலானார்.

பிலிப்பையர் 2:6, 7.


34

இயேசு நம்மைப்போல் மனிதனாய் பூமியில் வாழ்ந்தார். ஆனால் அவர் குற்றமற்றவர். அவர், வாழ்வின் கடைசி 24 மணி நேரத்தில், பல நூற்றாண்டுகளாக வேதத்தில் சொல்லப்பட்டிருந்த தீர்கதரிசனங்கள் நிறைவேறின.



35

யூதாஸ் காட்டிக் கொடுத்ததை ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்ளுங்கள்.



36

(வசனம் சங்கீதம் 41:9.)


என் பிராண சிநேகிதனும். நான் நம்பினவனும், என் அப்பம் புசித்தவனுமாகிய மனுஷனும். என் மேல் தன் குதிகாலைத் தூக்கினான். அப்பொது அவன் இயேசுவின் மார்பிலே சாய்ந்து கொண்டு ஆண்டவரே அவன் யார் என்றான். இயேசு பிரதியுத்திரமாக.



37

நான் இந்தத் துணிக்கையை தோய்த்து எவனுக்குக் கொடுப்பேனோ, அவன் தான்.

யோவான் 13:26.



38

காட்டிக் கொடுத்தவனுக்கு கொடுத்த விலை.




39

அப்பொழுது எனக்கு கூலியாக முப்பது வெள்ளிக்காசை நிறுத்தார்கள். சகரியா 11:12.




40

(வசனம் மத்தேயு 26:14,15) அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய யூதாஸ்காரியோத்து என்பவன் பிரதான ஆசாரியடத்திற்குப் போய்.





41

நான் அவரை உங்களுக்குக் காட்டிக் கொடுக்கிறேன். நீங்கள் எனக்கு என்ன கொடுக்கிறீர்கள் என்றான். அப்பொழுது எனக்கு கூலியாக முப்பது வெள்ளிக்காசை நிறுத்தார்கள்.





42

அவரை திட்டியதும் அடித்ததும்.




43

(வசனம் ஏசாயா 50:6) அடிக்கிறவர்களுக்க என் முதுகையும், தாடைமயிரைப் பிடுங்குகிறவர்களுக்கு என் தாடைகளையும் ஒப்புக் கொடுத்தேன்.




44

அவமானத்துக்கும் உமிழ் நீருக்கும் என் முகத்தை மறைக்கவில்லை.


ஏசாயா 50:6.




45

(வசனம் மத்தேயு 26:67) அப்பொழுது, அவருடைய முகத்தில் துப்பி, அவரைக் குட்டினார்கள், சிலர் அவரைக் கன்னத்தில் அறைந்து.

மத்தேயு 26:67.




46

அவருடைய கைகளையும், கால்களையும் உருவக்குத்தினார்கள்.

# 7  உலகை மாற்றின ஒரு ஜீவன்



47

வசனம் சங்கீதம் 22:16) என் கைகளையும் என் கால்களையும் உருவக்குத்தினார்கள். (சங்கீதம் 22:16). இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலிற்கு பின்பு. அவருடைய சீடனாகிய தோமா அவர் உயித்தெழுந்து விட்டாரா என்று சந்தேகப்பட்டு கூறினார்.




48

(வசனம் யோவான் 20:25) அவருடைய கைகளில் ஆணிகளினாலுண்டான காயத்தை நான் கண்டு, அந்தக் காயத்திலே என் விரலையிட்டு, என் கையை அவருடைய விலாவிலே போட்டாலொழிய.



49

நான் விசுவாசிக்க மாட்டேன்.
யோவான் 20:25.



50

அவர் அக்கிரமக்காரில் ஒருவராக எண்ணப்பட்டார். கிறிஸ்துவைப் பற்றிய இந்த தீர்க்தரிசனம் நேரடியாக நிறைவேறுவதை கவனியுங்கள்.



51

(வசனம் ஏசாயா 53:12).

அவர் அக்கிரமக்காரில் ஒருவராக எண்ணப்பட்டார்.
ஏசாயா 53:12.



52

(வசனம் மாற்கு 15:27, 28). அவருடைய வலது பக்கத்தில் ஒருவனும் அவருடைய இடது பக்கத்தில் ஒருவனுமாக, இரண்டு கள்ளர்களை அவரோடே கூட சிலுவைகளில் அறைந்தார்கள்.



53

அக்கிரமக்காரரில் ஒருவனாக எண்ணப்பட்டார் என்கிற வேதவாக்கியம் அதானாலே நிறைவேறிற்று. மாற்கு 15:27, 28.

# 7 □ உலகை மாற்றின ஒரு ஜீவன்



54

அவருடைய உடைக்காக சீட்டுப் போட்டார்கள். இயேசுவின் உடைக்கு என்ன நடக்கும் என்பதை. தாவீது ராஜா இயேசு மரிப்பதற்கு 1000 வருடங்களுக்கு முன்பே சொன்னார்.



55

(வசனம் சங்கீதம் 22:18) என் வஸ்திரங்களை தங்களுக்குள்ளே பங்கிட்டு, என் உடையின் பேரில் சீட்டு போடுகிறார்கள்.

சங்கீதம் 22:18




56

(வசனம் யோவான் 19:23, 24.)
போர் சேவகர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தபின்பு, அவருடைய வஸ்திரங்களை எடுத்து, ஒவ்வொரு சேவகனுக்கு ஒவ்வொரு பங்காக நாலூ பங்காக்கினார்கள்.



57


அங்கியையும் எடுத்தார்கள். அந்த அங்கி, தையில்லாமல் மேலே தொடங்கி முழுவதும் நெய்யப்பட்டதாயிருந்தது.



58

அவர்கள் இதை நாம் கிழியாமல், யாருக்கு வருமோ என்று இதைத் குறித்துச் சீட்டுப் போடுவோம்.

யோவான் 19:23, 24.



59

அவருடைய வார்த்தைகள் சிலுவையில்.



60

(வசனம் சங்கீதம் 22:1) என் தேவனே என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர். சங்கீதம் 22.1. பழைய ஏற்பாடு வசனங்கள் மத்தேயு 27.46 ல் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

# 7 உலகை மாற்றின ஒரு ஜீவன்



61

(வசனம் மத்தேயு 27:46) ஒன்பதாம் மணி நேரத்தில் என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர் என்று மிகுந்த சத்தமிட்டுக் கூப்பிட்டார்.




62

அவருடைய தீர்க்கதரிசனங்கள் அனைத்தும் இயேசுவின் மனித கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்டதாக இருந்தது.




63

அவரால் அவருக்கு பிறந்த இடத்தை ஆயத்தம் செய்ய முடியவில்லை.




64

அவர் பிறந்த முறை.




65

அவரைக் காட்டிக் கொடுத்தல்.



66

அவர் மரணத்தை சுற்றிய நிகழ்ச்சிகள்.


67

அவர் தன்னைப் பற்றி கூறிக் கொண்டபடியே, மேசியாதான்.
சரீரம் அடிக்கப்பட்டதினாலும், கை கால்கள் ஆணிகளால் கடாவப்பட்டு, முள்முடி சூட்டப்பட்டு, முகத்தில் காரி உமிழப்பட்டு வேதனையினால் சிலுவையில் தொங்கி கொண்டிருந்தார்.

# 7 □ உலகை மாற்றின ஒரு ஜீவன்




68

அவர் 10 ஆயிரம் தூதர்களை அழைத்து, இந்த உலகை அழித்து தன்னை விடுவித்து இருக்கலாம். அவர் நம்மையும், அவரையும் இரட்சித்து இருக்கலாம்.



69

உங்கள்மேல் அக்கரை கொள்பவர்களைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட்டதுண்டா, இயேசு நம்மேல் அக்கரை கொண்டுள்ளார். அதை நீண்ட காலத்திற்கு முன்னே எருசலேமுக்கு வெளியே இருந்த மலையில் நிருபித்துள்ளார்.



70

மிக முக்கயமான கேள்வி உனக்கு இயேசு யார்?


71

நம் பாவவாழ்கையின் இடத்தில், ஒரு பரிபூரண வாழ்வை இயேசு இந்த கிரகத்துக்கு வந்தார். நாம் மரிக்க வேண்டிய மரணத்தை அவர் மரித்தார்.



72

(வசனம் ஏசாயா 53:3-7). அவர் அசட்டை பண்ணப்பட்டவரும் மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும் துக்கம் நிறைந்தவரும் பாடு அனுபவித்த வருமாயிருந்தார்.



73

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொருக்கப்பட்டார். அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.



74

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொருக்கப்பட்டார். அவருடைய தழும்புகளால் குணமாகிறோம்.

# 7 உலகை மாற்றின ஒரு ஜீவன்




75

அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை. அடிக்கப்படும்படி கொண்டுபோகப்படுகிற ஆட்டுக்குட்டியைப் போலவும், அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார்.

ஏசாயா 53:3-7.




76

இங்கே இயேசு ஒரு ஆட்டுக்குட்டியைப் போல என்று குறிப்பிடப்படுகின்றது. ஆட்டுக்குட்டி என்று வேதத்தில் அநேகம் முறை சொல்லப்பட்டிருக்கிறது.




77

(வசனம் வெளிப்படுத்தல் 13:8) கூறுகின்ற வண்ணம் உலகத்தோற்றமுதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய ஜீவபுஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்கவார்கள்.




78

(வசனம் வெளிப்படுத்தல் 5:8, 12.)
இருபத்து நான்கு மூப்பர்கள், ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாக வணக்கமாய் விழுந்து...




79

அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவர் வல்லமையும், ஐசுவரியத்தையும், ஞானத்தையும், பெலத்தையும், கனத்தையும் மகிமையும் ஸ்தோத்திரத்தையும் பெற்றுக்கொள்ளப் பாத்திரராயிருக்கிறார். வெளிப்படுத்தல் 5:8, 12.
கிறிஸ்து என்ற ஆட்டுக்குட்டி நம்மை நித்திய மரணத்திலிருந்து மீட்டு நித்திய வாழ்வை அருளினார்.




80

(வசனம் ரோமர் 6:23.)
பாவத்தின் சம்பளம் மரணம்.

# 7  உலகை மாற்றின ஒரு ஜீவன்





81

தேசனுடைய கிருபைவரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.

ரோமர் 6:23.


82

ஆதாமும் ஏவாளும் பாவம் செய்ததால் தேவனிடமிருந்து பிரிந்தனர். அவர்கள் ஜீவ விருட்சத்தின் கனியை தொடர்ந்து தின்று மறுபடியும் பாவம் செய்யாதபடி மனுஷனை ஏதேன் தோட்டத்திலிருந்து தேவன் துரத்தி விட்டார். இதனிமித்தம் அவர்களின் பெலன் படிப்படியாக குறைந்து இறுதியில் மரணத்தை சந்தித்தனர்.



83


(வசனம் ஆதியாகமம் 3:24.)
அவர் மனுஷனை துரத்திவிட்டு ஜீவவிருட்சத்துக்கு போகும். வழியைக் காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்கு கிழக்கே கேரூபின்களையும்.



84

ஜீவ விருட்சத்துக்கு போகும் வழியைக் காவல் செய்ய ஏதேன் தோட்டத்துக்குக் கிழக்கே வீசிக்கொண்டிருக்கிற சுடரொளி பட்டயத்தையும் வைத்தார்.

ஆதியாகமம் 3:24.



85

இரட்சிப்பின் திட்டத்தை அவர்களுக்கு சொன்னார்.



86

(வசனம் ஆதியாகமம் 3:1). உனக்கும் ஸ்திரிக்கும் உன் வித்துக்கும் (சாத்தானின் பின்னடியார்கள்) அவள் வித்துக்கும் (தேவனின் பின்னடியார்கள்) பகையை உண்டாக்குவேன்.



87


அவர் (இயேசு) உன் (சாத்தான்) தலையை நசுக்குவார். நீ (சாத்தான்) அவரின் (இயேசு) குதிங்காலை நசுக்குவாய். ஆதியாகமம் 3:15.

# 7  உலகை மாற்றின ஒரு ஜீவன்



88

நசுக்குவார் என்பதின் அர்த்தம் என்ன?



89

எபிரேய மொழியில் நசுக்குதல் என்பதற்கு நொருக்குதல் என்று அர்த்தம். தலையை நசுக்குவது என்பது குதிகாலை நசுக்குவதைவிட கொடியது. கிறிஸ்து சாத்தானை ஜெயித்தார். மனிதனை இரட்சிப்பதற்கு வேறொரு திட்டத்தையும் ஞாபகப்படுத்தினார்.


90

அவர் பலிமுறையை சொல்லி கொடுத்தார். ஒரு நாள் நித்திய ஜீவனை அளிக்கும் இயேசுவாகிய அந்த ஆட்டுக்குட்டியின் மேல் விசுவாசம் காட்ட வேண்டும்.


91

எப்பொழுது பலி முறைகள் ஆரம்பமானது என்று வேதம் திட்டமாக கூறவில்லை. ஆதாமுக்கும் ஏவாளுக்கும் தேவன் தோல் உடைகளை செய்து கொடுத்தார்.



92

(வசனம் ஆதியாகமம் 4:4, 5). ஆபேலும் தன் மந்தையின் தலையீற்றுகளிலும் அவைகளில் கொழுமையானவைகளிலும் சிலவற்றைக் கொண்டு வந்தான்.



93

ஆபேலையும் அவன் காணிக்கையையும் கர்த்தர் அங்கீகரித்தார். ஆதியாகமம் 4:4.



94

தேவன் காயினையும் அவன் காணிக்கையும் அங்கீகரிக்கவில்லை. காயின் மிகவும் எரிச்சலடைந்தான். ஆதியாகமம் 4:5. தேவாட்டுக்குட்டியைக் குறிக்கும் ஆட்டுக்குட்டியை ஆபேல் கொண்டுவந்தார். காயினோ நிலத்தின் கனியை கொண்டுவந்தார். காயின் ஆட்டுக்குட்டியின் பலியின்மேல் விசுவாசம் வைக்கவில்லை.

# 7 உலகை மாற்றின ஒரு ஜீவன்



95

(வசனம் எபிரேயர் 9:22) இரத்தம் சிந்துதல் இல்லாமல் பாவமன்னிப்பு கிடையாது. எபிரேயர் 9:22.


96

தேவன் இஸ்ரவேலரை எகிப்தைவிட்டு வெளியே கொண்டு வந்து, மோசே மூலம் தான் கட்டச் சொன்ன ஆசரிப்புக் கூடார சடங்காச்சாரங்கள் மூலமாக அவர்களுக்குப் பல பாடங்களைக் கற்றுக்கொடுத்தார். ஆசரிப்புக் கூடாரம் அல்லது வாசஸ்தலம் பரலோகத்தில் நிறுவப்பட்டிருக்கிற மெய்யான வாசஸ்தலத்தின் ஒரு மாதிரி ஆகும்.


97

அந்தச் சடங்குகளில் ஒன்று கடந்து செல்லுதல் ஆகும்.


98

முதல் மாதம் 14ஆம் தேதியிலே ஒரு ஆட்டக்குட்டியை வெட்டி அதன் இரத்தத்தை அவர்கள் வீட்டு வசாலின் நிலைக் கால்களில் பூசும்படி கற்பிக்கப்பட்டிருந்தனர். ஆட்டுக்குட்டியின் இரத்தத்தினால் அவர்கள் மூடப்பட்டிருக்கிறார்கள் என்பதற்கு அதுவே ஒரு அடையாளம்.



99

அந்த இரவில் சங்கார தூதன் இரத்தம் பூசப்பட்டிருந்த இல்லங்களின் உள்ளே எவரையும் தீங்குக்குட்படுத்தாமல் கடந்து சென்றான்.


100

சங்கார தூதனின் அழிவிலிருந்து ஆட்டுக் குட்டியின் இரத்தம் மாத்திரமே நம்மை விடுவிக்க முடியும் என்பதைக் கடந்து செல்லுதல் அவர்களுக்கு ஞாபகமூட்டினது. பலியிடப்பட்ட மிருகங்கள் பாவத்திலிருந்து சுத்திகரிக்க முடியாது. ஆனால் தேவனுடைய தியாக பலியின் மேல் உள்ள மக்களின் விசுவாசம் பாவத்திலிருந்து அவர்களை இரட்சிக்க முடியும்.

# 7  உலகை மாற்றின ஒரு ஜீவன்




101

(வசனம் எபிரேயர் 9:26) அவர் தம்மை தாமே பலியிடுகிறதினாலே பாவங்களை நீக்கும் பொருட்டாக இந்தக் கடைசி காலத்தில் ஒரே தரம் வெளிப்பட்டார். எபிரேயர் 9:26.





102

(வசனம் எபிரேயர் 10:4). அல்லாமலும் காளை வெள்ளாட்டுக்கடா இவைகளுடைய இரத்தம் பாவங்களை நிவர்த்தி செய்யமாட்டாதே ....எபிரேயர் 10:4



103

மறுநாளிலே யோவான் ஸ்நானகன் இயேசுவை மேசியா என அறிவித்தான். இயேசுவைக் காண்பித்து, சொன்னதாவது.




104

(வசனம் யோவான் 1:29).
.... இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. யோவான் 1:29.



105

தேவ ஆட்டுக்குட்டியாகிய மேசியாவை முன் சுட்டிக்காட்டியதுதான் சடங்காச்சார முறையின், பலி முறைகள்.
பழைய ஏற்பாட்டில், இரத்தம் சிந்தி மரித்த ஒவ்வொரு ஆட்டுக்குட்டியும் பல நூற்றாண்டுகளாக நமக்காக இரத்தம் சிந்தின இயேசுவை பிரதிபலித்து காட்டியது.



106

இயேசு கிறிஸ்து - இவ்வுலகின் இரட்சகர்.
இயேசு பாவங்களை சுமந்தார்.
இயேசு மன்னிக்கிறார்.
குற்றத்திலிருந்து விடுதலை செய்பவர் - இயேசு.
எப்படி வாழ வேண்டும் என்று கற்றுக் கொடுப்பவர் - இயேசு.
இயேசுவின் வாழ்க்கை நம் எல்லோருக்கும் முன் மாதிரியான ஒன்று.
நம் வாழ்வின் வல்லமையானவர் - இயேசு.
நம் உள்ளான மனுஷனில் மாற்றம் செய்பவர்.
நமக்கு புது வாழ்வு தருபவர் இயேசு.

# 7  உலகை மாற்றின ஒரு ஜீவன்


107

1914-ல் அண்டார்க்டிக் பெருங்கடலைக் கடக்க திரு. எர்னஸ்ட் சாக்கிஸ்ட்டன் எடுத்த முயற்சியில் தி என்ட்யூரன்ஸ் என்ற அவரது கப்பல் மிதக்கும் பனிக்கட்டியில் மோதி நொறுங்கியது. யானைத்தீவில் வந்து சேரும் வரை, அந்தக்குழு அநேக நாட்களாக அலைந்து திரிந்தது.

வரவிருக்கும் குளிர்காலத்தில் தொடர்ந்து வாழ்வதற்குத் தேவையான பொருட்களை பத்திரப்படுத்த, சாக்கிஸ்ட்டன் ஆண்கள் அடங்கிய முகாமை ஏற்படுத்தினர். ஆனால் தங்களை மீட்க ஒருவரும் வரமாட்டார்கள் என்பதை சீக்கிரம் உணர்ந்தார்.

தாங்கள் எங்கே இருக்கிறோம் என்பது ஒருவருக்குமே புலப்படவில்லை. உறையச் செய்யும், பனிப்புயல் வீசும் அண்டார்க்டிக் பெருங்கடலால் அவர்கள் உலகத்திலிருந்து துண்டிக்கப்பட்டிருந்தார்கள்.

மீட்கப்படுவதற்கு ஒரே ஒரு நம்பிக்கை மாத்திரம் இருந்தது. யாராவது ஒருவர் அந்தப் பகையாளியான பெருங்கடலைக் கடந்து, உதவி பெறுவதே அந்த நம்பிக்கை.


சாக்கிஸ்ட்டன் கடல் பிரயாணத்திற்கு 20 அடியுள்ள பெரிய படகை செய்யத் தொடங்கினார். தன்னார்வமுள்ளவர்கள் 6 பேர் கொண்ட குழுவை ஏற்படுத்தினார். அவர்கள் உறைதீவான தெற்கு ஜியார்ஜியாவில் இருக்கும் நார்வேகியன் கடல் நிலையத்தை அடைவதற்கு 800 மைல்கள் தூரம் அந்தக் கொந்தளிக்கும் கடலைக் கடக்க வேண்டும்.

# 7  உலகை மாற்றின ஒரு ஜீவன்


108

வருஷத்தின் காற்றடி காலத்தில் திறந்த வெளிப் படகில் செல்வது கடினமான வேலை போல் தோன்றிற்று. ஆனால் சாக்கிஸ்ட்டன் தன் குழுவினரோடு புறப்பட்டார். அநேக நாட்கள் அவர்கள் ஒரு கித்தான் துணிப் போர்வைக்குள் நெருக்கமாக இருந்து, கொடூரமான அலைகளுக்குள் உட்பட்டிருந்த போதும், தங்கள் சிறிய படகு பெருங்காற்றினால் சேதப்படாதபடிக்கு ஜெபித்தார்கள்.

எலும்பை உறைய வைக்கும் கடுங்குளிர், குளிர்நீரால் விறைப்பு, பசி மற்றும் தாகம் ஆகியவற்றைத் தாங்கிக் கொண்டார்கள். அவர்களின் கடற்பிரயாணம் தொடங்கி 14 நாட்கள் ஆன பின்பு, கடலின் நீரினாலும், தாகத்தாலும், வருந்தி மரணத் தருவாயை அடைந்தது போன்ற நிலையில், அவர்கள் தெற்கு ஜியார்ஜியாவின் கருப்பு செங்குத்தான பாறைகளைக் கண்டனர். சாக்கிஸ்ட்டன் சாதித்துவிட்டார். சீக்கிரத்திலே ஒரு கப்பல் தன் வழியே வந்து மீதியான கரை சேராத மனிதர்களை மீட்டுவிடும்.


109

தேவன், எல்லையற்ற பாவக்கடலால் சூழப்பட்டு, நமது தீவில் நாம் துண்டிக்கப்பட்டு இருக்கிற தமது இழிநிலையைப் பார்த்து, தாமே அந்த எதிரான கடலில் மூழ்கினார். மனித வர்க்கத்துக்குள் இருந்த வெளித்தனமான, பனி போன்ற விஸ்தாரமான தீமையைத் தாமே ஏற்றுக்கொண்டார். அகில உலகத்திலும் இயேசுவைப் போன்ற ஒருவர் எவருமில்லை. அவர் ஒருவரே நம்மை இரட்சிக்க வல்லவர். அவர் ஒருவரே நமது குற்றத்தை அப்புறப்படுத்தி, நமது வாழ்க்கையை மாற்றுகிறார். அவரே நமக்கு நித்திய ஜீவனை அளிக்க முடியும். இப்பொழுதே உங்கள் கரங்களை உயர்த்தி சொல்வீர்களா? ஆம், இயேசுவே, இன்றிரவு நான் உம்மை எனது கர்த்தரும், இரட்சகருமாக ஏற்றுக்கொள்கிறேன். ஆம், கர்த்தாவே, நீர் எனக்காக மரித்தீர் என்பதை விசுவாசிக்கிறேன். ஆம், கர்த்தாவே, என் வாழ்க்கையை உம்மிடத்தில் கொடுக்கிறேன். உங்கள் கரங்களை உயர்த்துங்கள். நான் உங்களுக்காக ஜெபிக்கிறேன்.



1

அழியாமையின் இரகசியம்.



2

(வீடியோ 19 வினாடிகள்)
பூமியானது அதிர போகிறது. பலம் வாய்ந்த நடுக்கம். அதிர்ச்சி அலையாய் பட்டணம் முழுமையும் அனுப்பப்பட போகிறது. அலுவலக கட்டிடங்கள் வீடுகள் நொறுக்கப்பட போகிறது. மருத்துவமனைகளும், பள்ளிக்கூடங்களும் ஆலயங்களும் அழிக்கப்பட போகிறது.

பிப்ரவரி, 2001ம் ஆண்டு ஏற்பட்ட பூமியதிர்ச்சியினால், எல்சால்வடாரில் 3000 மக்கள் அதி துரிதமாய் கொல்லப்பட்டனர். ஆயிரமாயிரம் பேர் தங்கள் வீடுகளை இழந்தனர். அவசர சிகிச்சை பணியாளர்கள் இரவும் பகலும் கடினமாய் உழைத்து, வெற்றியைத் தேடினார்கள். இருப்பினும், கொஞ்சம் பேரைத் தான் உயிருடன் காப்பாற்ற முடிந்தது.

சிதறடிக்கப்பட்ட சூழ்நிலையின் மத்தியில் பாதி கரம் புதைக்கப்பட்டிருந்ததை ஒருவர் பார்த்தார். அப்போது அக்கரம் மெல்ல அசைவுற்றதை கண்டு அதிர்ச்சியானது. பின் பணியாளர்கள் இன்னும் உக்கிரமாய் தோண்டினார்.

நான்கு மணி நேரம் எடுத்து கொண்டபின் மூடபடாத நிலையில் நடுத்தர வயதில் உள்ள ஒரு மனிதனை பள்ளத்திலிருந்து எடுத்தனர். நான்கு நாட்கள் உணவின்றி, தண்ணீரின்றி கிடந்த அவர் உயிர் பிழைத்தார். இப்படிப்பட்ட கடினமான சூழ்நிலையில் அவர் எப்படி உயிரோடிருந்தார். என்ன விந்தை இது, இப்படி நடந்தது என அவரிடம் கேட்கப்பட்டது.

அம்மனிதனின் பதில் நான் தப்பித்துக்கொள்ள வேண்டுமென்று விரும்பினேன் உதவி எப்படியாகிலும் வரும் என நம்பினேன் நான் பிழைத்தேன் என்றான் அவன்.

8  நித்தியமாய் வாழ பிறத்தல்


3

- நாம் வாழ வேண்டும் எனும் விருப்பத்துடன் பிறக்கிறோம்.
- இவ்வுலகில் நீங்களும் நானும் இதை பெற்றுக் கொண்டு தான் நுழைகிறோம்.
- இந்த விருப்பம் இருப்பதினால் தான் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.
- எப்பொழுதும் உறுதியுடன் இருப்பது தான் விருப்பமாக இருக்கிறது.
- பொதுவான வாஞ்சை - எல்லா மனிதர்களிடமும் இருப்பது - வாழ வேண்டும் எனும் விருப்பம் தான்.


4

மனித வாழ்க்கை அச்சுறுத்தும் போது, மக்கள் நம்பக் கூடாத தன்மைக்கு போய்விடுகின்றனர். வீரமாக இருப்போமானால் பிறரையும் பாதுகாப்போம்.
- ஒரு குழந்தை கிணற்றில் விழுந்து போன ஒரு நிலையோ அல்லது உடைந்த கப்பலில் மக்ககள் தூரத்தில் தவிக்கின்ற நிலைாக இருக்கலாம்.


5

மலைச்சரிவில் ஏறும் போது ஏற்பட்ட ஆபத்தாக அல்லது பூமியதிர்ச்சியினால் ஏற்பட்ட சிதைவாக இருக்கலாம்.
- யாராவது ஒருவர் வாழ்க்கை சமநிலையில் இருந்தாலும் மக்கள் இனம் ஒருவருக்கொருவர் பாதுகாத்தல் வேண்டும்.


6

- நாம் விரும்பப்பட தகாத உண்மை என்னவென்றால் கடைசி ஆபத்தில் உள்ள நாம் ஒவ்வொருவரும் ஜீவிக்கிறோம், சாதாரண ஓர் ஆபத்தல்ல மரணத்திற்குள்ளான ஆபத்திலும் ஜீவிக்கிறோம்.



7

(வசனம்: ரோமர் 6:23)
பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன். ரோமர் 6:23.


8

பாவம் - மரணத்தை உண்டாக்கும் விஷம். அது சாவுக்குரியது ஏன்?
நாம் எல்லோரும் பாவஞ் செய்தபடியினால் வாழ்க்கையின் மூலாதாரமான நம்மை சிருஷ்டித்த, தேவனிடத்திலிருந்தும் நம்மை அது பிரித்துவிட்டது.



9

(வசனம் ரோமர் 3:23)
எல்லாரும் பாவஞ்செய்து, தேவ மகிமையற்றவர்களானோம். ரோமர் 3:23.




10

(வசனம்: ரோமர் 3:10-12)
நீதிமான் ஒருவனாகிலும், இல்லை.



11

உணர்வுள்ளவன் இல்லை. தேவனைத் தேடுகிறவன் இல்லை.



12

எல்லாரும் வழிதப்பி, ஏகமாய்க் கெட்டுப் போனார்கள், நன்மை செய்கிறவன் இல்லை, ஒருவனாகிலும் இல்லை. ரோமர் 3:10-12.


13

மனித இனம் எல்லோரும் நமது முதல் பெற்றோராகிய ஆதாம், ஏவாளின் வழிவந்த சந்ததியார். நம்முடைய சொந்த வழியிலே போய், தேவனிடமிருந்து நம்மை பிரித்து, அவருக்குக் கீழ்படியாமல் போனோம்.



14

(வசனம்: ரோமர் 5:12)
இப்படியாக, ஒரே மனுஷனாலே பாவமும் பாவத்தினாலே மரணமும் உலகத்திலே பிரவேசித்தது.



15

எல்லா மனுஷரும் பாவஞ்செய்தபடியால், மரணம் எல்லாருக்கும் வந்ததுபோலவும் இதுவுமாயிற்று. ரோமர் 5:12.

8 □ நித்தியமாய் வாழ பிறத்தல்

# 8 நித்தியமாய் வாழ பிறத்தல்




16

பாவத்தின் இயல்பு தன்மை - மரணம்
100 சதவிகிதம்-பாவத்தின் கிரயம்-மரணம்.
ஆதாம்தன் பாவத்திற்காக மரிக்க வேண்டும். அதுபோல் ஆதாமின் சந்ததியான நாம் எல்லோருக்கும், பாவத்தின் விளைவு-மரணம்.




17

நாம் எல்லோரும் குழியில் விழுந்தோம்.
கண்ணியிலகப்பட்ட, உதவியற்றவர்கள்.
நம்மை யாராகிலும் பாதுகாக்காவிடில், மரணத்துக்குள்ளாளோம்.
நம்மை இரட்சிக்க ஒருவர் இல்லை என்றால் அது ஒரு துர்செய்தியாகும்.
நம்மை இரட்சிக்க ஒரு இருக்கிறார். அதுதான் நற்செய்தி.




18

(வசனம்: எபேசியர் 2:8, 9).
கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள், இது உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு.




19

ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.
எபேசியர் 2:8, 9.
ஆம் நாம் எல்லோரும் பாவிகள். இதில் எந்தவொரு சந்தேகமும் இல்லை.
எண்ணங்களினாலும், வார்த்தையினாலும், ஒவ்வொரு சுயநலத்தினாலும் நாம் பாவம் செய்கிறோம்.




20

ஒவ்வொரு நாளும் எண்ணிக்கையற்ற முறையில் நாம் பாவம் செய்வதை கற்பனை செய்து பார்.
இதுதான் காரணம். நாம் பாவிகள். பிரச்சனை என்பது - பாவங்கள் என்பதில் அல்ல. மாறாக நாம் கட்டாயப்படுத்தின நிலையில் அனுமதித்தல்.



21

எவராவது தன் கொடிய வியாதியை உணராமலும் மருத்துவ உதவியை நாடாமலும் இருந்தால், அவன் மரித்துப்போவான். அதுதான் தன்னுடைய ஆவிக்குரிய நிலையை உணராமலும் உதவியை நாடாமலும் இருப்பவனின் நிலையும்.



22

(வசனம்: ஏசாயா 59:2)
உங்கள் அக்கிரமங்களே, உங்களுக்கும் உங்கள் தேவனுக்கும், நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது. ஏசாயா 59:2.
கடவுள் தான் வாழ்வின் மூலாதாரம். ஆதாம் பாவம் செய்தவுடனே மரிக்க ஆரம்பித்தான், நாம் அனைவரும் மரணத்தின் கீழாக உள்ளோம்.
இங்கே ஒரு நற்செய்தி, நம்மை நேசிக்கும் அன்பு தேவன், இரட்சிப்பின் நம்பிக்கையை கொடுக்காமல் பாவத்தின் விளைவு என்ன என்று சொல்வதில்லை.




23

(வசனம்: ரோமர் 6:23)
பாவத்தின் சம்பளம் மரணம். தேவனுடைய கிருபை வரமோ, நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.



24

(வீடியோ 3 வினாடி) இரட்சிப்பு. இலவச வெகுமதி. நாம் அதற்கு தகுதியல்ல, விலைகிரயத்திற்கு வாங்கவோ நம்முடைய நற்கிரியைகளினால் சம்பாதிக்கவோ முடியாது.


25

அதிகமான நற்காரியங்களை செய்வதினால் பாவ மன்னிப்பும், நித்திய ஜீவனையும் பெறுவோம் என அநேக மக்கள் நம்புகின்றனர். தங்களடைய சரீரத்தை நொருக்குவதினாலும் ஆணிகள் குத்திய படுக்கையில் அமருவது போன்ற செயல்களினாலும் கடவுளிடமிருந்து நன்மையை பெறுவோம் என நம்புகின்றனர்.


26

கூர்மையான கம்பிகளினாலும், ஆணிகளினாலும் சாட்டைகளினாலும் தங்கள் சரீரத்தை கிழித்து கொள்கின்றனர்.


27

மாம்ச சரீரத்தை, தேவையற்ற நிலையில் பழுதாக்கி சூடான கரி நெருப்பில் நடப்பது போன்றவைகளினால் தெய்வீகதின் நன்மையை தேடுகின்றனர்.

8  நித்தியமாய் வாழ பிறத்தல்

# 8 நித்தியமாய் வாழ பிறத்தல்


28

பரிசுத்தவான்களுக்கு, உணவளிப்பதாலும், தர்மசாலைகள், கட்டிடங்கள் கட்டிக்கொடுப்பதாலும், எதிர்கால வாழ்வில் நன்மையை பெறுவோம் என சிலர் நம்புகின்றனர்.


29

இஸ்லாமை பாதுகாக்க மரிப்பது, மெக்காவுக்கு யாத்திரை செய்வது போன்ற காரியங்களைவிட பெரிய சந்தோஷமும், நல்வழியம் வேறில்லை என சிலர் எண்ணுகின்றனர்.


30


அநேக கிறிஸ்தவர்கள் புத்தியீனமாய் இப்படியே செய்கிறார்கள்.
சபைக்கு செல்வது, காணிக்கைக் கொடுப்பது, வேதாகமம் கூறும் தங்க சட்டத்தை பின்பற்றுவது, இவைகளினால் கடவுளிடம் நன்மை பெறுவோம். நித்திய ஜீவனை சுதந்தரிப்போம் என நினைக்கின்றனர். இது முடியும் காரியமா?


31

மன்னிப்பையும், நித்திய ஜீவனையும் தேவனிடமிருந்து பெற்றுக்கொள்ள, கடவுளுக்கு லஞ்சம் கொடுப்பது போல, நற்செயல்கள், மனரீதியாக வறுத்திக் கொள்ளுதல், சரீர தண்டனை அனுபவித்தல் இவைகளின் மூலம் மனிதன் பெற முடியுமா?


32

விளையாட்டு போட்டிகளில் வெற்றிக்கு ஒருவர் தங்கமெடல் பெறுவது போல இரட்சிப்பை சம்பாதிக்க முடியுமா?



33

(வசனம்: எபேசியர் 2:8, 9)
வேதாகமம் சொல்லுகிறது. கிருபையினால் விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானதல்ல. இது தேவனுடைய ஈவு.



34

ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல.
எபேசியர் 2:8, 9.


35


நாம் தேவனை சார்ந்து இருக்கும்போது தேவனுடைய கிருபையும், அன்பும், நன்மையும் நமக்க இலவசமாக கொடுப்பார். நாமே இரட்சிப்பை சம்பாதிப்போமானால் அது இலவச வெகுமதியல்ல. நம்முடைய சொந்த கிரியைகளினால் நம்மை நாம் இரட்சிக்க முடியாது.


36

இதோ உங்களுக்கு ஒரு வெகுமதி என உன் எஜமான் ஒரு உரையை உங்கள் கையில் கொடுக்கிறார்.


37

2 வார சம்பளத்துக்குரிய பகுதியை நீங்கள் கண்டால் அது ஒரு வெகுமதியாகுமா? இல்லை, அது உங்களால் சம்பாதிக்கப்பட்டவை.


38

வல்லமை தேவன் சர்வலோகத்தையும் ஆட்சி செய்கிறார்.



39

(வீடியோ 12 வினாடி) ஏன் சுயநலமும் கலகமுமுள்ள மனிதன் தன் பாவத்தின் பலன்களை அனுபவிக்க தேவன் விட்டுவிடவில்லை?



40

(வசனம்: 1 யோவான் 4:8)
யோவான் முதலாம் நிருபத்தில் விடையை கண்டுபிடி. தேவன் அன்பாகவே இருக்கிறார். 1 யோவான் 4:8.


41

உங்களில் அநேக பெற்றோர்கள்.

8 □ நித்தியமாய் வாழ பிறத்தல்

# 8  நித்தியமாய் வாழ பிறத்தல்



42

ஒரு குழந்தை நேராய் வந்து இரவும் பகலும் அழுவது என்ன என்பதை நீங்கள் அறிவீர்கள். எல்லாவற்றையும் நீங்கள் ஒழுங்காக வைத்திருந்த பின்னும், அவைகள் பார்ப்பதற்கு உதவியற்ற ஒருநிலையை காணலாம். தரையில் நடந்து, குழந்தைக்கு பாடல்பாடி, உங்கள் நண்பர்களின் ஆலோசனைபடி செய்தும், ஒன்றுக்கும் பிரயோஜனமில்லை, உங்களிடம் ஒன்று கேட்கிறேன். நீங்கள் எவ்வளவாய் சோர்வுற்றிருந்தாலும், குழந்தையானது எவ்வளவு நேரம் சுகவீனமாயிருந்தாலும் குழந்தையை தனியே விட்டு, வேதனை அடைவதை நினைத்துப் பார்த்திருக்கிறீர்களா?



43

உதவியற்ற நிலையில் குழந்தை வேதனைபடுவதையோ துன்பப்படுவதையோ சகிக்க முடியாது ஏன்? நீங்கள் அந்த சிறு குழந்தையை நேசிக்கிறீர்கள். அதுதான் தேவன் எனப்பட்டவரும்.


44

பாவநோயினால் சுகவீனமான இந்த பூமி எனும் அவருடைய குழந்தை.


45

சகிக்க முடியாத நிலையில் வேதனையும், துன்பத்தையும் அடைந்திருந்தாலும், தேவன் அவர்களை அதிகமாய் எப்போதும் அன்பு செய்கிறார்.


46

தேவன் நம்மைவிட்டு தூரமாய் நடப்பவர் என எண்ணிவிட வேண்டாம்.
விரோதத்தின் விளைவினால் நம்மை துன்பப்படுத்துகிறார் என தேவனை பற்றி எண்ணிவிட வேண்டாம்.



47

(வசனம்: 2 பேதுரு 3:9).
வேதாகமம் சொல்லுகிறது. தாமதிக்கிறார் என்று சிலர் எண்ணுகிறபடி, கர்த்தர் தமது வாக்குத்தத்தைக் குறித்துத் தாமதமாயிரமால், ஒருவரும் கெட்டுப்போகாமல் எல்லாரும் மனந்திரும்ப வேண்டுமென்று விரும்பி நம்மேல் நீடிய பொறுமையுள்ள வராயிருக்கிறார். 2 பேதுரு 3:9.

# 8 □ நித்தியமாய் வாழ பிறத்தல்



48

நீங்கள் மரித்துப்போவதை விரும்பாத தேவன் நீங்கள் யாராயிருப்பினும், நல்லவரோ, கெட்டவரோ தேவன் உங்களை நேசித்து இரட்சிக்க விரும்புகிறார்.



49

நாம் எல்லோரும் பாவம் செய்தோம், தேவனுக்கு விரோதமாகி, அவருடைய கற்பனைகளை உடைத்துப் போட்டோம்.



50

இப்பூமிக்குரிய அரசாங்கம் நீண்ட நாளுக்கு அநியாயததிற்கு இடம் கொடுக்க முடியாது.




51

நெறிந்து தவறுவோர் தண்டிக்கப்படுவார்கள். தேவனுடைய கட்டளையை தவறுவோர் அதிகமாய் தண்டிக்கப்படுவர். ஏனெனில், பாவம் நம்மை தேவனிடமிருந்து பிரிந்துவிட்டது. நம் ஒவ்வொருவரையும் இரட்சித்து, உதவி செய்பவர் தேவன் மாத்திரமே.




52

சீனாய் மலையில் தேவன் தம்மை குறித்து விளக்கிக் காட்டியது. தேவன் நித்தியத்திற்கும் அன்பானவர். அவர் நீதியின் தேவன்.




53

(வசனம்: யாத்திராகமம் 34:6, 7)
... கர்த்தர் இரக்கமும், கிருபையும், நீடிய மகாதயையும், சத்தியமுள்ள தேவன்.




54

ஆயிரம் தலைமுறைகளுக்கு இரக்கத்தைக் காக்கிறவர், அக்கிரமத்தையும், மீறுதலையும், பாவத்தையும் மன்னிக்கிறவர், குற்றவாளியைக் குற்றமற்றவனாகவிடாமல் ...
யாத்திராகமம் 34:6, 7.


55

வழியில்லையா? இதற்கு வேறு முடிவில்லையா? ஆம். அதற்கு வழியண்டு. நேசிக்கும் அன்பு தேவன் வழியை கண்டுபிடித்தார் நம்மை நியாயம் தீர்த்து, இரட்சித்து காப்பதுதான் அது.


56

நாம் பிழைக்கும்படியாக, நமது பாவங்களுக்காக நமது இடத்தில் நமக்கு பதிலாக பூரணமானவர் மரித்தார். அன்பின் சீஷன் யோவான் இவ்வாறு அவ்வழியை குறித்து விளக்குகிறார்.



57

(வசனம்: யோவான் 3:16)
தேவன், தம்முடைய ஒரே பேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும் படிக்கு அவரை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்பு கூர்ந்தார்.




58

விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப் போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு. யோவான் 3:16.


59

எல்லா மனிதரும் சந்திக்கும் ஒவ்வொரு வேதனைகளையும், பிரச்சனைகளையும் சந்திக்க இப்பூமிக்கு மனிதனாய் இயேசு வந்த வாழ்ந்தார். பரிபூரண கீழ்படிதலான வாழ்க்கை வாழ்ந்தார். மனிதவர்க்கத்தின் பாவமில்லா பிரதிநிதியாக, எல்லா மனிதரின் குற்றத்திற்காகவும், இவர் தானாக வந்து அவர்களுடைய இடத்தை எடுத்துக் கொண்டார்.



60

(வசனம்: ரோமர் 5:19)
பவுலார் எழுதுகிறார். ஒரே மனுஷனுடைய கீழ்ப்படியாமையினாலே அநேகர் பாவிகளாக்கப்பட்டதுபோல,



61

ஒருவருடைய கீழ்ப்படிதலினாலே அநேகர் நீதிமான்களாக்கப்படுவார்கள். ரோமர் 5:19.

# 8 □ நித்தியமாய் வாழ பிறத்தல்


62

இயேசுவின் மரணம் தேவ கோபத்தை திருப்திபடுத்தும் என்று எண்ணப்படுமானால் அது அர்த்தமற்றது. நமக்காக தமது ஒரே குமாரனை பலியாக ஒப்புக்கொடுத்தது, தேவன் நம்மேல் வைத்த அன்பினிமித்தமே, நம்மை இரட்சிக்கவே இயேசு தம்மையே மரிக்க ஒப்படைத்தார். இயேசு கிறிஸ்து பலியாக்கப்பட்ட தேவாட்டுக் குட்டி.




63

(வீடியோ 25 வினாடிகள்) விழுந்துபோன மனிதனை மீட்க தேவனுடைய திட்டம், ஒவ்வொருநாளும் சாட்சியாய், அடையாளங்களாகவும், சடங்காச் சாரத்தினாலும், உதாரணமாக, தேவன், எகிப்திலிருந்து தெரிந்துக் கொள்ளப்பட்ட மக்களாகிய இஸ்ரவேலர்கள் வனாந்தரத்தில், சீனாய் மலையின் சமீபத்தில் காட்டப்பட்டது.

இயேசு கிறிஸ்து கல்வாரியில் வந்து மரிப்பார் என்பதற்கு அடையாளமாய் வனாந்திர ஆசரிப்புக் கூடாரம் சுட்டிக் காட்டப்பட்டது. எல்லா மனிதரின் பாவங்களுக்காக, உண்மையான ஆட்டுக் குட்டியானவர் தியாகமாகி, அதன் வழியாய், நம்பிக்கையும், உறுதியும், மன்னிப்பும், இரட்சிப்புமானார்.


64


ஒரு பாவி கொண்டுவரும் ஆட்டுக்குட்டி, அதின்மீது அவன் கைகளை வைத்து அறிக்கை செய்யும் பாவம் ஆட்டின்மீது சார்ந்து, அது கொல்லப்பட்டப்பின், அந்த பாவம் அம்மரணத்தின் வழியாய் மன்னிக்கப்பட்டது என அடையாளப்படுத்தியது. அது இயேசுவை பிரதிபலித்து காட்டியது.


65

சந்தோஷமில்லை. ஆம், கல்வாரியின் சிலுவை, பலி, ஆத்துமாவிற்க கொண்டு வந்த நித்திய வாழ்வின் வாக்குதத்தத்தின் மீது சந்தோஷமில்லை. இந்த செயலின் வழியாக கடவுள், பாவமானது மரணத்தை கொண்டு வந்தது என்பதை காட்டினார். அது பாவிக்காக பாவமில்லாத தியாக பலி.


66

மனிதனுக்கு பதிலாளியாக மரிக்கவும், வேதாகமம காலங்களில், தேவ பிள்ளைகள் படைத்த ஒவ்வொரு தியாக பலியும், வரப்போகிற தேவகுமாரனில் அவர்கள் காட்டிய விசுவாசத்தை குறிக்கிறது.




67

(வசனம்: யோவான் 1:29)
இயேசுவே உண்மையான தியாகபலி. இயேசு ஞானஸ்தானம் பெற வந்தபோது, யோவான் சொன்னது ... இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி. யோவான் 1:29
கீழ்த்தரமான வகையில், மிகவும் கேவலமாய் இயேசுவை அடித்தார்கள், பரிகசித்தார்கள், சிலுவையில் அடித்து கொலை செய்தார்கள்.



68


(வசனம்: 1 பேதுரு 2:22)
அவர் பாவம் செய்யவில்லை. அவருடைய வாயிலே வஞ்சனை காணப்படவில்லை என்றாலும் சிலுவையில் மரித்தாரென வேதாகமம் கூறுகிறது. 1 பேதுரு 2:22.


69

பஸ்கா பண்டிகைக் காலத்திலே கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். அக்காலத்திலே குற்றவாளி ஒருவனை விடுவிப்பது ரோம அதிகாரிகளுக்கு வழக்கமாயிருந்தது. ஜனக்கூட்டமோ பராபாசை தெரிந்து கொண்டு அவனுக்கு பதிலாக இயேசுவை மரணத்திற்கு ஒப்புக் கொடுத்தது.


70

மரணத்தில் இயேசு பாவிகளோடு ஒன்றித்திருந்தார். இரண்டு கள்வர்களின் நடுவிலே அவர் சிலுவையில் அறையப்பட்டார். உலகத்தின் பாவத்தை தேவன் அவர்மேல் வைத்தார்.



71

(வசனம்: மத்தேயு 27:46)
என் தேவனே, என் தேவனே ஏன் என்னைக் கைவிட்டீர்? மத்தேயு 27:46.
பாவத்தினால் உண்டாகும் பயங்கரமான பிரிவை அவர் உணர்ந்தார். பிதாவிடத்திலிருந்து பிரிக்கப்படுவதால் உண்டாகும் பிரிவால் அவர் உள்ளம் உடைந்தது.



72

(வசனம்: மாற்கு 15:31)
அது உண்மைதான், மற்றவர்களை இரட்சித்தான். தன்னை அவனால் இரட்சிக்க முடியவில்லை. மாற்கு 15:31.


73

அது உண்மைதான். அவர் தன்னை காப்பாற்றிக் கொள்ள முடியாவிடினும் இன்னமும் அவர் மற்றவர்களை இரட்சிக்கிறார். பிராமாணத்தை மீறியதால் உண்டான பாவத்தின் சம்பளமாகிய மரணத்தை, இழந்துபோன மனுக்குலத்திற்காக அவர் செலுத்தினார். தேவ அன்பை இழந்து போன மனுக்குலத்திற்கு பதிலாக தம்முடைய குமாரனையே கொடுத்தார்.



74

நாம் அவரைப் போல நடத்தப்பட வேண்டுமென்பதற்காக அவர் நம்மைப்போல் நடத்தப்பட்டார். அவர் நமது பாவத்திற்காக ஆக்கினை அடைந்து நாம் நித்திய ஜீவனை அடைவதற்காக நாம் அடைய வேண்டிய மரணத்தை அவர் அடைந்தார். இவ்விதமாக தேவன் நமக்கு நித்திய ஜீவனைக் கொடுப்பதுடன், நீதியுள்ளவர் என்னப்பட்டார்.



75

(வசனம்: எபேசியர் 2:8)
புறஜாதிகளின் அப்போஜ்தலனாகிய பவுல், கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள் என்றார். எபேசியர் 2:8.
இரட்சிப்பின் இருதயமே விசுவாசம்.


76

பிலிப்பிய சிறை அதிகாரி தான் இரட்சிக்கப்பட என்ன செய்ய வேண்டுமென கேட்டபோது, பவுல் பதிலாக.



77

(வசனம்: அப்போஸ்தலர்கள் 16:31)
கர்த்தராகிய இயேசுவை விசுவாசி, அப்பொழுது இரட்சிக்கப்படுவாய்.
அப் 16:31.



78

கிறிஸ்து இவ்வுலகில் வாழ்ந்தார் என்று உன் சிந்தையில் கொள்வது உன்னை இரட்சிக்காது. விசுவாசம் அதைவிட பெரியது.

# 8 □ நித்தியமாய் வாழ பிறத்தல்




79

(வசனம் யாக்கோபு 2:19)
வேதம் கூறுகிறது. பிசாசுகளும் விசுவாசித்து நடுங்குகின்றன. யோக்கோபு 2:19.



80

இயேசுவை விசுவாசிப்பதென்றால் அவர் 1900 வருடங்களுக்கு முன்னால் மரித்தார் என்று அறிந்திருப்பது மட்டுமல்ல.



81

(வசனம் நீதிமொழிகள் 3:5,6) உன் வழிகளெல்லாம் அவரை நினைத்துக்கொள். அப்பொழுது அவர் உன்னை நடத்துவார்.
நீதி 3:5, 6.




82

உன் வழிகளெல்லாம் அவரை நினைத்துக்கொள். அப்பொழுது அவர் உன்னை நடத்துவார்.
நீதி 3:5, 6
நீ அவரை விசுவாசிக்கிறாயா? நீ மெய்யாகவே அவரை நம்புகிறாயா? உன் வாழ்க்கையை அவர் கட்டுப்படுத்தும் அளவிற்கு நீ அவரை நம்புகிறாயா?



83

இரட்சிக்கும் விசுவாசம் என்பது கிறிஸ்துவின் தியாகம். நாம் செய்த ஒவ்வொரு பாவத்திற்கும் கிரயம் செலுத்த போதுமானது என நம்புவதாகும்.
அதாவது, பாவத்திலிருந்து நம்மை நாமே இரட்சிக்க முடியாது. நம்மை இரட்சிப்பதற்கே கிறிஸ்து கல்வாரியில் மரித்தார் என நம்புவதாகும்.



84

ஒரு மனிதனும் தன்னை இரட்சித்துக் கொண்டதாக பெருமை கொள்ள முடியாது. மகிமை தேவனுக்கே உரியது. தேவன் தமது கிருபையைக் கொடுக்கிறார். நாம் அவரை விசுவாசிக்கிறோம். தேவனை முழுமையாக விசுவாசிக்கிறோம்.


85

இரட்சிப்பை பெற்றுக்கொள்வது மிக எளிது. ஆயினும், அனேகர் அது மிகவும் கடினமானது என நினைக்கின்றனர். பிலிப்பி பட்டணத்து சிறை அதிகாரியின் கேள்விக்கு பவுல் மற்றும் சிலர் கொடுத்த பதிலில் உள்ளது.



86

(வசனம் அப்போஸ்தலர்கள் 16:30.)
இரட்சிக்கப்பட நான் செய்ய வேண்டும்?




87

இரட்சிப்பை குறித்து நான்கு காரணிகள். அதுதான்.
இரட்சிக்கப்படுவதற்கு தேவை.



88

(வசனம் எபேசியர் 2:8, 9)
காரணம் 1.
இரட்சிப்பு இலவசமானது. கிருபையினாலே
விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது
உங்களால் உண்டானதல்ல, இது தேவனுடைய ஈவு
ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது
கிரியையினால் உண்டானதல்ல. (எபேசியர் 2:8, 9)
இங்கே ஒரு கேள்வி. இரட்சிப்பு - ஏன் இரட்சிப்பு
இலவசமானது?



89

(வசனம் ரோமர் 3:23)
காரணம் 2
நாம் எல்லோரும் பாவிகள். ரோமர் 3:23
சொல்லுகிறது.
நாம் எல்லோரும் பாவஞ்செய்து தேவ மகிமையற்றுப்
போனோம்.


90

அப்படிச் சொன்னால், நான் வெகுமதியை வாங்க
தகுதியில்லை.
இரட்சிப்பை நான் தள்ளமாட்டேன்.
என்னைப் பாருங்கள், நான் பாவம் செய்தேன்.
தேவ மகிமையற்றுப் போனேன்.
இரட்சிப்பானது என்னுடைய நற்தன்மையை சார்ந்தது,
அடுத்து அதை திரும்ப சம்பாதிக்க முடியாது.
ஏனெனில் நான் பாவம் செய்தேன். நான் போதுமான
அளவிற்கு நல்லவனல்ல. இதற்காகத் தான் இரட்சிப்பு
இலவசமான வெகுமதி. இது நல்லதொரு உதாரணம்.

8  நித்தியமாய் வாழ பிறத்தல்



91

(வசனம் ரோமர் 6:23)
காரணம் 3.
பிரச்சனை - பாவம் என்பது மரணம்.
ரோமர் 6:23 - பாவத்தின் சம்பளம் மரணம்.
எல்லாரும் சந்திக்கும் பிரச்சனை பெரியது.
நான் பாவி - அதனால் எனக்கு மரணம்.
நான், இலவசமான இரட்சிப்புக்கு பாத்திரனல்ல.
இலவசமான வெகுமதிக்கு நான் பாத்திரனல்ல.
நாம் பாவம் செய்து, தேவ மகிமையற்று போனோம்.
அதனால் தான் நமக்கு இலவசமான வெகுமதி உண்டு.
பிரச்சனையானது, நான் பாவி, மரிப்பதற்கு நான் பாத்திரன். கடவுள் இந்த பிரச்சனையை தீர்க்க முடிவாயிருக்கிறார்.




92

(வசனம் ரோமர் 5:8)
காரணம் 4.
வழி. இயேசு, நமக்காக அவர் மரித்தார்.
ரோமர் 5:8 சொல்லுகிறது. நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார். இது அழகானதா இல்லையா? நண்பனாக எனக்காக இயேசு மரித்தார். உனக்காகவும் அவர் மரித்தார்.




93

நான்கு மிக எளிதான காரணங்களை திரும்பி பார்ப்போம்.




94

1. இரட்சிப்பு என்பது இலவசமான வெகுமதி.




95

2. நாம் எல்லோரும் பாவஞ் செய்தோம்.



96

3. பிரச்சனை. பாவம் - நமக்கு மரணமாகும்.



97

4. தீர்வு. இயேசு நமக்காக மரித்தார். அவரை நமது இரட்சகராக ஏற்றுக் கொண்டால் நாம் ஜீவனை கண்டடைவோம்.


98

நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்தார். நண்பர்களே அவர் உனது மற்றும் எனது பாவத்திற்காக மரித்ததிற்காக அவரை நேசிக்கிறாயா? அவர் நமக்கு இரட்சிப்பை இலவசமாக கொடுத்ததற்காக அவரை நேசிக்கமாட்டாயா?


99

நான் அந்த இலவச ஈவை பெற்றுக் கொள்வது எப்படியென கேட்கலாம்.



100

(வசனம் வெளிப்படுத்தல் 3:20)
வேதம் இதற்கு வெளிப்படுத்தல் புத்தகத்தில் பதில் தருகின்றது (வெளிப்படுத்தல் 3:20) இதோ வாசல்படியில் நின்று கதவைத் தட்டுகிறேன்.
நித்திய ஜீவனை ஒருவர் வைத்துக்கொண்டு உன் வீட்டுக் கதவை தட்டினால் நீ அவரை உள்ளே வரவேற்பாயா அல்லது வெளியே நிறுத்தி விடுவாயா?


101

ஒரு வேளை நீ கதவை திறந்து அவரை உள்ளே வரவேற்பாய். கிறிஸ்துவை நீ உள்ளே அழைக்கும் போது நீ நித்திய ஜீவனையும் பெற்றுக்கொள்கிறாய். ஆ. அது எத்தனை அருமையானது. இயேசு உன் வாழ்க்கையினுள் பிரவேசிக்க விரும்புகிறார். நாம் அவரை உள்ளே வரவேட்போமாக.

8  நித்தியமாய் வாழ பிறத்தல்



102

இப்படித் தான் நாம் கிறிஸ்துவின் இலவச ஈவை பெற்றுக் கொள்கிறோம். இயேசுவே உமக்கு நன்றி. என் வாழ்க்கையினுள் வாரும். என் இதயத்தில் வாரும். என் வாழ்வை கட்டுப்படுத்தி என்னை ஆட்கொள்ளும். இயேசு உள்ளே வரும் போது, அவரை நமது நண்பராகவும், இரட்சகராகவும், நமது கர்த்தராகவும், தலைவராகவும் வரவேற்கிறோம்.




103

கிறிஸ்துவை நமது இருதயத்திற்குள் அழைக்கையில் இரண்டு முக்கியமான காரியங்கள் நடைபெறுகின்றன.




104

(வசனம் 1 யோவான் 1:9).
நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து




105

எல்லா அநியாயத்தையும் நீக்கி சுத்திகரிப்பதற்கு உண்மையும் நீதியுமுள்ளவராயிருக்கிறார்.
(1 யோவான் 1:9)
நண்பர்களே அது ஒரு அற்புதமான வாக்குத்தத்தம்.



106

நாம் என்ன செய்கிறோம். எங்கேயிருக்கிறோம். நாம் எப்படிப்பட்ட வாழ்க்கையை வாழ்ந்தோம் என்பது காரியமல்ல. நாம் எவ்வளவு பெரிய பாவியாயிருந்த போதிலும் அவரிடத்தில் வந்து இலவசமான இரட்சிப்பை பெற்றுக் கொள்ளலாம். நமது பாவத்தை அறிக்கை செய்து முழு மன்னிப்பையும் பெற்றுக் கொள்ளலாம்.



107

கிறிஸ்து நமது பாவத்தை சமுத்திரத்தின் ஆழத்தில் போட்டுவிட்டு, மறுபடியும் நினைக்கமாட்டேன் என்கிறார்.



108

என் நண்பர்களே இயேசு, மன்னிப்பளித்து மறக்கிறவர். சில பாவங்களை கடவுளிடம் அறிக்கையிட்டும், குற்றப்படுத்தப்பட்டு, அதற்காக வருத்தப்பட்டால் அதையும் மன்னிக்க தேவன் பெரியவர்.
தேவன் என்ன சொல்லுகிறாரோ அதற்கு நாம் கீழ்ப்படிய வேண்டும்.
1 யோவான் 5:10-ல் தெளிவாக கூறுகிறது.
..... தேவனை விசுவாசியாதவனோ அவரை பொய்யராக்குகிறான்.



109

(வசனம் 1 யோவான் 5:10)
தேவனுடைய குமாரனிடத்தில், விசுவாசமாயிருக்கிறவன், அந்தச் சாட்சியைத் தனக்குள்ளே கொண்டிருக்கிறான்.



110

..... தேவனை விசுவாசியாதவனோ அவரை பொய்யராக்குகிறான்.



111

அந்த சாட்சியை விசுவாசியாததினால் தேவன் தம்முடைய குமாரனை தந்தார். 1 யோவான் 5:10. இயேசு கிறிஸ்து, நம்முடைய பாவங்களை மன்னித்து, குற்றங்களை அப்புறப்படுத்துகிறார். தாம் சொன்னதை அப்படியே செய்கிறவர்.



112

இயேசு கிறிஸ்து எப்பொழுதும் மன்னித்து மறக்கிறவர். அது போல நாமும் மன்னிக்கிறவர்களாக இருக்க வேண்டும்.



113

(வசனம் அப்போஸ்தலர் 3:19)
பேதுருவின் வார்த்தைகளில், அப்போஸ்தலர் 3:19. உங்கள் பாவங்கள் நிவர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்.

8 □ நித்தியமாய் வாழ பிறத்தல்

# 8 □ நித்தியமாய் வாழ பிறத்தல்


114

நாம் இயேசுவிடம் வந்து, அவரின் இலவசமான வெகுமதியான இரட்சிப்பை ஏற்றுக்கொண்டு அவரை நமக்குள் வரவேற்கும் போது, நடைபெறும் முதல் காரியம், அவர் நம்மமை மன்னித்து, நம்மை கழுவி சுத்திகரித்து, நமது பாவங்களை கடலின் ஆழத்தில் போட்டுவிடுகிறார்.
இது உங்களுக்கு அற்புதமாய் தோன்றவில்லையா? என்னுடைய இரட்சகரும், உங்களின் அன்பு இரட்சகருமான இயேசுவை அன்பு செய்ய வேண்டும். அதைவிட மேலான காரியம் நம்மில் நடைபெறுகிறது. அவரை நம் இருதயத்தில் ஏற்றுக்கொள்ளும் போது.


115

அவன் அடிச்சுவடுகளை பின்பற்றி வரும்படி, அவரைப் போல இருக்க, நாம் பாவத்தை மேற்கொள்ள வல்லமையை தருகிறார். ஆம். குடிகாரர்கள் இனிமேல் குடிப்பதில்லை. பொய் சொல்லுபவர் இனிமேல் பொய் சொல்வதில்லை. திருடுபவர் இனி திருடுவதில்லை.



116

(வசனம். யோவான் 1:12)
அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் அவருடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்.



117

அவருடைய நாமத்தை விசுவாசிக்கிறவர்களுக்கு அவருடைய பிள்ளைகளாகும்படிக்கும் அவருடைய மகன்களாக, மகள்களாக இருக்க வல்லமை கொடுக்கிறார். இனிமேல் நாம் சாத்தானுக்கு கீழ்ப்பட்டவர்களல்ல. இனி நாம் இருட்டின் பிள்ளைகளுமல்ல.


118

அவருடைய அடிச்சுவடுகளில் நடக்க வல்லமை தருகிறார். எல்லாவற்றையும் மேற்கொண்டு, அவரின வெகுமதியான இட்சிப்பை ஏற்றுக் கொள்ளவும் வல்லமை தருகிறார்.

# 8 □ நித்தியமாய் வாழ பிறத்தல்


119

நாம் இலவசமான இட்சிப்பபை ஏற்றுக்கொண்டு, எதிர்த்து, பாவத்தில் விழும் போது மீண்டும், மீண்டும் நம்மை மன்னிக்கிறவராக இருக்கிறார்.
இயேசுவைப் போல் வளரவும், பாவத்தை மேற்கொள்ளவும், வல்லமை தருகிறார்.
இரட்சகராகிய இயேசுவில் எப்படி நம்பிக்கையும், விசுவாசமும் வைத்து வளர வேண்டும் என்று கற்றுக்கொள்ளும் வழி இது. சாத்தான் இனிமேல் நமது கர்த்தரல்ல, இயேசுவே நம்முடைய கர்த்தர்.


120

இங்கே பாருங்கள். இலவசமான இட்சிப்பை ஏற்றுக்கொண்டு அவரை நம்பி, விசுவாசித்து வாழ்வது தான் அவரில் நாம் நம்பிக்கையுள்ளவர்கள் என்பதாகும்.
அவரின் அடிச்சுவடுகளில் நடக்க, நம்முடைய பாவங்களை மன்னித்து, நமக்கு வல்லமையும் கொடுக்கிறார்.


121

நம் இதய கதவை தட்டும் சத்தம் கேட்டு அதற்கு பதில் தரும் வகையில், இயேசுவை நம்முடைய இருதயத்தில் ஏற்றுக்கொள்ள அழைக்கும் போது, நம்முடைய பாவ இருதயத்தை கழுவி, நம்மை மன்னிக்கிறார், அவரைப போல மாறி வாழவும் பாவத்தை வென்று, மாறினவர்களாய் இருக்கவும் வல்லமை தருகிறார்.


122

நீங்கள் இதை அறிந்திருக்கிறீர்களா? இயேசு, நமக்குள் வாசம் செய்யும் போது நாம் அறிந்து கொள்ள வேண்டியது, நமக்கு நித்திய ஜீவன் உண்டு என்பதைத்தான்.
நாம் இரட்சிக்கப்பட்டு, எப்பொழுதும் இயேசுவோடு இருப்போம். ஆகவே நாம் கவலைப்பட தேவையில்லை.



123

(வசனம் 1 யோவான் 5:12, 13)
குமாரனை உடையவன் ஜீவனை உடையவன், தேவனுடைய குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.



124

தேவ குமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருக்கிற உங்களுக்கு இவைகளை எழுதுகிறேன்.

# 8 நித்தியமாய் வாழ பிறத்தல்




125

உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று நீங்கள் அறியவும்.
1 யோவான் 5:12, 13.


126

இப்பொழுதே, இங்கே, நமக்கு நித்திய ஜீவன் உண்டு என்று நாம் அறிந்து கொள்ள வேண்டும் என இயேசு சொல்லுகிறார். இப்பொழுதே, இங்கேயே நாம் இரட்சிப்பின் நிச்சயத்தை ஏற்றுக்கொண்டு, இயேசுவை நம் இருதயத்தில் அழைத்து மகிழ இயேசு விரும்புகிறார். எங்கும் உள்ள, எல்லோருக்கும் இயேசு கொடுக்கும் அழைப்பு என்னவென்றால் ....



127

(வசனம் யோவான் 3:16).
.... அவரை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு.
யோவான் 3:16.
நீங்கள் - ஒன்றுக்கும் உதவாத பாவிகள் என நினைக்கலாம். ஆனால் அது உண்மையல்ல.
முடியாத ஒரு சூழ்நிலையை, தேவன் மாற்றி விடுதலை தருகிறார்.
பெரிய பாவம் என்றோ, கெட்ட வாழ்க்கை என்றோ இல்லை. இயேசு எல்லாரையும் எல்லாவற்றையும் மன்னிக்கிறார்.


128

மான்ஹட்டன் மகாணத்தின் போதைப் பொருட்கள் அதிகமாக விற்கப்படக்கூடிய ஒரு மாவட்டத்தில், ஒரு கட்டடத்தில் 1995ம் ஆண்டு டிசம்பர் 31ம் நாள் தீப்பற்றிக் கொண்டது. திரு. ஜான் கிளான்ஸி என்ற மிகப் பழக்கமுற்ற தீயணைப்பு அதிகாரியின் தலைமையில் படையினர் போராடினர். அந்த கட்டிடத்தில் போதைப் பொருள் உபயோகிப்பவர்களும் குடிகாரர்களுமே தங்குவதுண்டு. யாராவது வீட்டினுள் இருப்பார்கள் என்ற எண்ணத்தில் கிளான்ஸி, எரியும் நெருப்பினுள் பாய்ந்து வீட்டுக்குள் செல்லத் தீர்மானித்தார். வீடு முழுவதும் புகையாகி, பார்க்கக்கூடாதிருந்தது. சட்ட விரோதிகளைக் காப்பாற்ற, தீயணைப்பு அதிகாரிகள் தங்கள் ஜீவனை பணையம் வைத்துப் போராடினர். திடீரென்று இரண்டாவது மாடி இடிந்து விழுந்து கிளன்ஸியை அமுக்கியது. எவ்வளவோ போராடியும் அவரைக் காப்பாற்ற முடியவில்லை. அவருடைய உடல் அடையாளம் தெரியாத அளவு எரிந்துவிட்டது. 1995ம் ஆண்டின் கடைசி நாள் இந்த தைரியம் வாய்ந்த தீயணைப்பு வீரனின் கடைசி நாளாயிற்று. எல்லா மனிதனுடைய வாழ்வையும் அவர் மதிப்போடு நினைத்ததால் மற்றவர்களுக்காகத் தன் ஜீவனைக் கொடுக்க ஆயத்தமானார். கர்ப்பவதியான அவருடைய மனைவித் தனியாகவிடப்பட்டார். பிறர் வாழ்வை காப்பாற்ற நினைத்த அவருடைய வாழ்வு போயிற்று. ஏதோ ஒரு மனிதன் எரிந்து அழிவதைப் பார்த்துவிட்டு அவரால் சும்மாயிருக்க முடியவில்லை. விசாரணையில் எட்வின் சுமித் என்ற ஒரு குடிகாரன் அந்த வீட்டுக்குத் தீ வைத்ததாகத் தெரிந்தது. கலவரம் செய்வதற்காகத் தீ வைத்த அந்த மனிதனுடைய வாழ்வைக் காப்பாற்ற ஜான் கிளான்ஸி தன் வாழ்வை மாய்த்துக் கொண்டார். ஏசு கிறிஸ்துவுக்கு ஏற்ற என்ன ஒரு உதாரணம் இவர்.

8 □ நித்தியமாய் வாழ பிறத்தல்


129


இயேசு பரலோகத்தின் பாதுகாப்பை விட்டு இவ்வுலக நரக அக்கினியான இடத்திற்கு தம்மை தாழ்த்தினார். நமது இரட்சகர் சிலுவையில் தொங்கிக் கொண்டிருந்த போது, பாவ அக்கினி அவரை முழுமையாய் சிதைத்தது.
நம்முடைய சுயவிருப்பில் நாம் பாவம் செய்தோம். இதோ நம்முடைய கோபக்கனல், இலக்கை, பெருமை, விபச்சாரத்திற்காக ..... இயேசு மரித்து, நாம் வாழும்படியாய் செய்தார்.
சிலுவையில் பாவ அனலின் காரியத்தை அனுபவித்தார். ஆனால் நரக அக்கினியை அல்ல, அவர் வரும் போது நரக அக்கினியையும், பாவத்தையும் நித்தியமாய் எரிப்பார்.
நீ எப்பொழுதும் நித்தியமாய் வாழ, இன்று இயேசு உனக்கு உத்தரவாதம் தருகிறார்.


130

அவர் கேட்டுக்கொண்டே காத்திருக்கிறார்.
உன்னுடைய வாழ்வின் இரட்சகராய், அவரை உன் இதய கதவை திறந்து, இன்றே, உன்னில் அவரை அழைக்கமாட்டாயா?
அவர் காத்துக்கொண்டு, கேட்டுக்கொண்டே இருக்கிறார். இது ஒன்றை மாத்திரம் அவர் செய்யவில்லை.
அதாவது, உன்னை கட்டாயப்படுத்தி உன்னில் அவர் வர விரும்பவில்லை.
நம் எல்லோருக்கும் அவர் தெரிந்தெடுக்கும் மனபாங்கை தருகிறார்.
நாம் அவருக்காய் இதய கதவை திறக்கும் போது, மகிழ்ச்சியாய் நம்முள் வருவார். நண்பனே, இதை நீ இப்போதே செய்வாயா? நீண்ட நேரம் காத்திருக்காமல் உடனே உனக்குள் அவரை அழைப்பாயா?


131

முடிந்தால், என்னுடன் சேர்ந்து இப்படி ஜெபி.



132

அன்பு தேவனே, நான் ஒரு பாவி என உணர்வடைகிறேன். எனக்கு உம்முடைய உதவி தேவை.





133

இயேசுவை என்னுடைய சொந்த இரட்சகராக, கர்த்தராக ஏற்றுக்கொள்ள ஆசிக்கிறேன்.




134

அவருக்கு பதில் தரும் வண்ணமாக, அவர் தட்டும் சத்தம் கேட்டு, இப்பொழுதே என் இதய கதவை திறந்து என்னுள் அவரை அழைக்கிறேன்.




135

தயவுடன் நான் செய்த எல்லா பாவங்களையும் மன்னித்து, என் வாழ்க்கை முழுமையும் உம்முடைய கட்டுப்பாட்டில் வைத்துக்கொள்ளும் ....



136

உம்மில் என்றும் வாழ என்னை கழுவி, சுத்திகரித்து, என் இருதயத்தில் நீர் வந்து வாசம் செய்ய விரும்புகிறேன்.
என்னுடைய ஜெபத்தை, கேட்டு பதில் தெரிவித்ததற்காக உமக்கு நன்றி.  இயேசுவின் நாமத்தில் ஆமென்.

# 9  நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்



1

நியாயாதிபதி உங்கள் பக்கம் இருக்கிறார்.


2

இங்கிலாந்தின் அரசர்களில் ஜேம்ஸ் 1 என்பவர் நியாயாதிபதியாக இருக்க முயற்சித்தார். வழக்கின் ஒரு பகுதியை நன்றாக கவனித்தார். வழக்கிற்குத் தீர்ப்பு சொல்ல முடிவெடுத்த தருணத்தில், வழக்கின் மறுபகுதியையும் கவனித்தார். பின்பு முற்றிலும் குழப்பத்திற்குள்ளானார். அவருக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. முதலில் யாரை குற்றமற்றவர்கள் என்று எண்ணினாரோ அவர்கள் குற்றவாளிகளாகத் தோன்றினர். பின்பு யாரைக் குற்றவாளிகள் என்று எண்ணினாரோ அவர்கள் குற்றமற்றவர்களாகத் தோன்றினர். முடிவில் கைவிடப்பட்ட சூழ்நிலையில் நீதிபதி என்ற ஸ்தானத்தில் நம்பிக்கையிழந்தவராய்க் காட்சியளித்தார். ஜேம்ஸ் 1 அரசர் பின்வருமாறு கூறினார். வழக்கின் முதல் பகுதியை மட்டும் நன்றாக கேட்க முடிந்தது: ஆனால் இரண்டு பகுதிகளான வாதி, பிரதிவாதி பக்கங்களையும் கேட்ட பிற்பாடு, எது சரி என்று என்னால் அறிய முடியவில்லை. குழம்பிய சூழ்நிலையில் உள்ள நீதிபதி தீர்மானம் எடுப்பதில் சிக்கல் உண்டு. கர்த்தர் மட்டும் பட்சதாபமில்லாதவர். முற்றிலும் நம்பிக்கைக்குரிய சரியான நீதிபதி. நம்மை அவர் நியாயந்தீர்க்கும் போது குழப்பமடையமாட்டார்.



3

(வீடியோ 4 வினாடிகள்) வேதாகமம் கூறுகிறது: நாம் ஒவ்வொருவருக்கும் ஆண்டவர் முன்னிலையில் ஒரு வழக்கு நிலுவையில் உள்ளது.



4

(வீடியோ 12 வினாடிகள்) இப்பொழுதும்கூட, நாம் எப்படி வாழ்ந்து இருக்கிறோம். என்ன செய்து இருக்கிறோம் என்பதற்குக் கணக்கு கொடுக்கும் வண்ணம், நாம் அந்த நியாயத் தீர்ப்பின் முன் ஆஜர் ஆக, நீதிமன்றத்தால் உத்திரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அண்டசராசரத்தின் உயர்ந்த நீதிமன்றத்தில் ஒவ்வொரு ஆணுக்கும், ஒவ்வொரு பெண்ணுக்குள் நிலுவையில் உள்ள வழக்கு ஒன்று உள்ளது. அப்போஸ்தலனாகிய பவுலார் கூறுகிறார். தேவனிடத்தில் ஒரு காரியம் இருக்குமென்றால் - முழு உலகமும்ட அதைக் கடைபிடிக்க வேண்டும்.



5

(வசனம். அப்போஸ்தலர் 17:31)
மேலும் ஒரு நாளைக் குறித்திருக்கிறார். அதிலே அவர் .... பூலோகத்தை நீதியாய் நியாயந்தீர்ப்பார்.
அப்போஸ்தலர் 17:31.
ஒருவரும் சாக்குப்போக்குச் சொல்ல இடமில்லை. ஒருவரும் தப்பமுடியாது. ஒவ்வொருவரும் நிற்க வேண்டும் என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது.




6

(வசனம் 2 கொரிந்தியர் 5:10)
.... நாமெல்லாரும் கிறிஸ்துவின் நியாயாசனத்திற்கு முன்பாக வெளிப்பட வேண்டும்.
2 கொரிந்தியர் 5:10.


7

நாம் நம்புகிறோமோ, இல்லையோ.
நாம் விரும்புகிறோமோ, இல்லையோ.
நாம் கிறிஸ்தவர்களாக இருக்கிறோமோ, இல்லையோ.
நாம் எவராக இருந்தாலும், நாமெல்லாரும் அவர் முன் நின்றாக வேண்டும்.
தேவனிடத்தில் பட்சாதாபம் இல்லை.
பரலோக மன்றம் நம்மை அழைக்கும் போது, நாம் நிற்க வேண்டும். ஏன்? பவுல் பதில் கொடுக்கிறார்.



8

(ரோமர் 14:12)
ஆதலால் நம்மில் ஒவ்வொருவனும் தன்னைக் குறித்து தேவனுக்குக் கணக்கொப்புவிப்பான்.
ரோமர் 14:12.

# 9  நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்


9

பரலோக மன்றத்தின் தீர்மானம் ஒவ்வொரு நபருடைய தலைவிதியையும் நித்தியமாக நிர்ணயிக்கும். தீர்மானமானது மறுபடியும் திருப்பமுடியாததாக இருக்கும். மேல்முறையீடு செய்வதற்கு உயர்நீதிமன்றமும் இல்லை.




10

(வீடியோ. 15 வினாடிகள்) ஆனால் ஒரு கட்டளை கொடுக்கப்படுவதற்கு அல்லது தீர்ப்புக் கொடுக்கப்படுவதற்கு முன்பு, ஒரு சோதனையோ அல்லது புலனாய்வோ இருக்கும். இந்தப் பரலோகத்தின் தீர்ப்பு மன்றம் அல்லது மன்றக் கூட்டத்தைப் பற்றிய படத்தைக் காண நாம் வேதத்திற்குத் திரும்புவோம். தீர்க்கதரிசி தானியேல் எழுதியதாவது:



11

(வசனம். தானியேல் 7:9,10)
நான் பார்த்துக்கொண்டிருக்கையில், சிங்காசனங்கள் வைக்கப்பட்டது. நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்.



12

அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும், பஞ்சைப் போல துப்புரவாகவும் இருந்தது.



13

அவருடைய சிங்காசனம் அக்கினி ஜுவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது.



14


அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது.



15

ஆயிரமாயிரம் பேர் அவரைச் சேவித்தார்கள்.

# 9 □ நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்



16

கோடானகோடி பேர் அவருக்கு முன்பாக நின்றார்கள். நியாயசங்கம் உட்கார்ந்தது. புஸ்தகங்கள் திறக்கப்பட்டது.
தானியேல் 7:9,10.


17

இங்கே தானியேல் பிதாவாகிய தேவனை படம்பிடித்துக் காட்டுகிறார் அல்லது நீண்ட ஆயுசுள்ளவர் நித்திய சிங்காசனத்தின் மேல் வீற்றிருக்கிறார், அவரை சுற்றிலும் எண்ணிலடங்காத, தேவதூதர்கள் இருந்தார்கள். அடுத்து தானியேல் எதைப் பார்த்தான் என்று இப்பொழுது கவனியுங்கள்.



18

(வசனம் தானியேல் 7:13)
இராத்தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ,



19

மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடனே வந்தார்.




20

அவன் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். தானியேல் 7:13.


21

இங்கே தேவனுடைய குமாரன் நீண்ட ஆயுசுள்ளவர் முன் நிற்பதாக படம்பிடித்து காட்டுகிறார். பூமியின் நீதிமன்றத்தின் காட்சியைப் போல் அது இருந்தது. அங்கே ஒரு தலைமை தாங்கும் நீதிபதி - நீண்ட ஆயுசுள்ளவர். பதிவு செய்யும் பதிவாளர்களாக - தேவனுடைய பரிசுத்த தூதர்கள். மனிதனின் வக்கீலாக - இயேசு.



22

(வசனம். யோவான் 2:1)
நீதிபரராயிருக்கிற இயேசு கிறிஸ்து நமக்காகப் பிதாவினிடத்தில் பரிந்து பேசுகிறவராயிருக்கிறார். 1 யோவான் 2:1.

# 9  நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்




23

(வீடியோ 5 வினாடிகள்) நல்லது. நீங்கள் சொல்லலாம். அங்கு எல்லாரும் இருப்பார்கள் என்று, ஆனால் முயற்சிக்கிறவர்கள் மட்டும் இருப்பார்கள் இதன் தார்ப்பரியம் உண்மையாக இருக்கலாம், ஆனால் வேதம் என்ன சொல்கிறது என்று பார்ப்போம்.




24

(வசனம் தானியேல் 7:10)
நியாய சங்கம் உட்கார்ந்தது, புஸ்தகங்கள் திறக்கப்பட்டது.
தானியேல் 7:10.
சோதனையை வென்றவர்களின் குறிப்புகள் இந்த புஸ்தகங்களில் குறிக்கப்பட்டிருந்தது.




25

(வசனம் பிரசங்கி 12:14)
ஒவ்வொரு கிரியையையும், அந்தரங்கமான ஒவ்வொரு காரியத்தையும், நன்மையானாலும், தீமையானாலும் தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்.
பிரசங்கி 12:14.



26

(வசனம் மல்கியா 3:16)
அப்பொழுது கர்த்தருக்குப் பயந்தவர்கள் ஒருவரோடொருவர் பேசிக் கொள்வார்கள், கர்த்தர் கவனித்துக் கேட்பார்.



27

தேவனுக்குப் பயந்தவர்களுக்கும் அவருடைய நாமத்தில் தியானிக்கிறவர்களுக்கும் ஞாபக புஸ்தகம் ஒன்று அவருக்கு முன்பாக எழுதப்பட்டிருக்கிறது. மல்கியா 3:16.
நம்முடைய இருதயம் எல்லா நேரத்திலும் அவரிடம் ஈர்க்கப்படுவதை தேவன் கவனித்தார். நாம் செய்கிற எல்லா இரக்கங்களையும், ஒவ்வொரு ஆறுதலின் வார்த்தைகளையும் அவர் குறிக்கிறார்.



28

(வசனம் சங்கீதம் 56:8)
என் கண்ணீரை உம்முடைய துருத்தியில்வையும், அவைகள் உம்முடைய கணக்கில் அல்லவோ இருக்கிறது. சங்கீதம் 56:8.
உங்கள் வாழ்க்கையின் ஆழமான கவலைகளையும் கூட தேவன் அறிவார்.

# 9 நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்



29

(வசனம் சங்கீதம் 139:1,3,16)
கர்த்தாவே, நீர் என்னை ஆராய்ந்து, அறிந்திருக்கிறீர்.



30

என்னுடைய வழிகள் எல்லாம் உமக்கு தெரியும்.



31

அவைகள் உருவேற்படும் நாட்களும், உமது புஸ்தகத்தில் எழுதியிருக்கிறது.
சங்கீதம் 139:1,3,16.


32

தேவன் நம்மைப் பற்றி எல்லாவற்றையும் அறிந்திருக்கும் போது, அவைகளை அவருடைய தேவைக்காக பதிவு செய்து வைத்திருப்பது அவசியம் இல்லை. தேவனுடைய அன்பையும் நீதியையும் எல்லா நபரும் அறிந்து கொள்ளும்படியாக அவைகள் அண்ட சராசரங்கத்தின் தேவைக்காக குறிப்பேடுகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. நாம் தேவனுக்கு கணக்கு ஒப்புவிக்க வேண்டும் என்பது ஒரு பரிசுத்த எண்ணமாகும்.


33

மிகவும் விலையேறப்பெற்ற எல்லா வாழ்க்கையின் வெகுமதியையும் எல்லோரும் கணக்கொப்புவிக்க வேண்டும். இதைத்தான் சாலமோன் எழுதும் போது சொல்கிறார்.



34

(வசனம் பிரசங்கி 11:9)
வாலிபனே! உன் இளமையில் சந்தோஷப்படு. உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்.



35


உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட

# 9  நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்




36

ஆனால் இவையெல்லாவற்றினிமித்தமும் தேவன் உன்னை நியாயத்திலே கொண்டு வந்து நிறுத்துவார் என்று அறி.
பிரங்கி 11:9.



37

(வசனம் மத்தேயு 12:36,37)
மத்தேயு எழுதினார். மனுஷர் பேசும் வீணான வார்த்தைகள் யாவையும் குறித்து நியாயத் தீர்ப்பு நாளிலே கணக்கொப்புவிக்க வேண்டும்.



38

ஏனெனில் உன் வார்த்தைகளினாலே நீதிமான் என்று தீர்க்கப்படுவாய் அல்லது உன் வார்த்தைகளினால் குற்றவாளி என்று தீர்க்கப்படுவாய்.
மத்தேயு 12:36,37.



39

சிலர் கணக்கிட்டனர். சராசரியான மனிதன் ஒரு வாரத்தில் 320 பக்கங்களைக் கொண்ட ஒரு புத்தகம் கொள்ளும் அளவுக்கு வார்த்தைகளைப் பேசுகிறான். அப்படியென்றால் 60 வருடத்தில் அதைப் போன்ற 3000 புத்தகங்கள் கொள்ளும் அளவிற்கு வார்த்தைகளைப் பேசுகிறான்.


40

நியாயத் தீர்ப்பில் உங்கள் புத்தக சாலையின் புத்தகங்கள் என்ன சொல்லும்? அதைவிட, அந்த வார்த்தைகளுக்குப் பின்னால் உள்ள, கிரியைகள் வெளியே காணப்படும்.



41

(வசனம் 1 கொரிந்தியர் 4:5)
இருளில் மறைந்திருக்கிறவைகளை அவர் வெளியரங்கமாக்கி, இருதயங்களின் யோசனைகளையும் வெளிப்படுத்துவார்.
1 கொரிந்தியர் 4:5.


42

அந்த நாளில் எந்தவிதமான ஒளிவு மறைவுகள் இருக்காது! மனிதர்கள் தங்கள் நண்பர்களையும், குடும்பத்தையும் முட்டாளாக்க முடியும். ஆனால் ஒருவராலும் கடவுளை முட்டாளாக்க முடியாது. அவர் இருதயத்தின் இரகசியங்களை அறிகிறார்.

# 9  நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்


43

இதோ பாருங்கள்! நமது நியாயத் தீர்ப்பு நாளில், நம்மை இரண்டில் ஒன்றில் காணலாம். ஒன்று கடந்த கால தோல்விகளை (பாவங்களை) இயேசுவின் இரத்தம் மூடும், அல்லது நாம் தண்டனைக்கு உரியவர்கள் என்று நமது தஸ்தாவேஜுகள் கூறும். உண்மையில், நமது வெளிப்படையான தோற்றத்தில் அல்ல - நாம் உண்மையில் வாழ்வில் எப்படி இருக்கிறோம் - என்ன செய்கிறோம் என்பதே வித்தியாசத்தை உண்டாக்கும். இயேசுகிறிஸ்து வரும்போது: அவனவன் கிரியைக்குத் தக்கதாக அவனவனுக்கு பலனளிப்பார். மத்தேயு 16:27.



44

(வசனம் மத்தேயு 16:27)
அவனவன் கிரியைக்கு தக்கதாக அவனவனுக்கு பலனளிப்பார்.
மத்தேயு 16:27.
ஆனால், நாம், நம்மைக் கர்த்தருக்கு ஒப்புவித்து இருக்கிறோம் என்பதை நமது நற்கிரியைகள் வெளிப்படுத்துகின்றன.




45

ஒருவேளை இப்படி நீங்கள் சொல்லலாம்: நீங்கள் கிருபையினாலே இரட்சிக்கப்பட்டால், ஏன் நமது கிரியைகளால் நியாயந்தீர்க்கப்படுகிறோம்? இது நல்ல ஒரு கேள்வியாகும். டாக்டர். சாகெ க்யூபோ எழுதினார்.



46

கிரியைகளைச் சார்ந்து நியாயந்தீர்க்கப்படுகிறோம் என்றால் என்ன அர்த்தம் என்பதை சீர்தூக்கிப் பார்ப்போம்.



47

எதனால் தேவன் நம்மை நியாயம் தீர்ப்பார். நம்முடைய தோலினாலா, நம்முடைய இனத்தினாலா, நம்முடைய சமூக வகுப்பினாலா, நம்முடைய கல்வியினாலா, நம்முடைய தோற்றததினாலா, நம்முடைய தாலந்தினாலா, நம்முடைய பெலத்தினாலா.

# 9  நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்



48

நாம் உறுப்பினராக சபையில் இருப்பதாலா அல்லது கிறிஸ்துவின் வேலையில் நம்முடைய முழுமுயற்சியினாலா? நல்லதோ அல்லது கெட்டதோ தேவன் நம்முடைய செயல்களினாலே நம்மை நியாயம் தீர்ப்பார்.
நீதிமன்றத்தால் அனுப்பப்படும் அழைப்பு, பக்கம் 20
உண்மையிலே நல்ல கிரியைகள் தெளிவாக செய்யப்படவில்லை.



49

(வீடியோ 8 வினாடிகள்) அவைகள் தேவனுக்கும் மனிதனுக்கும் ஒரு இருதயம் முழுவதிலும் அன்பாலே தொடர்ந்து வருபவைகள். இயேசுவோடு உள்ள அன்பின் தொடர்பினாலே அவருடைய பின்னடியார்கள் நல்ல செயல்களைச் செய்வார்கள்.



50

(வசனம் பிரசங்கி 12:13,14)
காரியத்தின் கடைத் தொகையைக் கேட்போமாக.



51

தேவனுக்கு பயந்து, அவர் கற்பனையை கைக்கொள், எல்லா மனுஷர் மேலும் விழுந்த கடமை இதுவே.



52

ஒவ்வொரு கிரியையும் ..... தேவன் நியாயத்திலே கொண்டு வருவார்.
பிரசங்கி 12:13, 14.
கிறிஸ்துவிடம் மனிதனது உறவானது அவனது நடத்தையால் நியாயந்தீர்க்கப்படுகிறபடியால், அவனது நடத்தைக்கு ஓர் அளவுகோல் அவசியப்படுகிறது.


53

பூமியில் உள்ள நம்முடைய சட்ட சம்பந்தமான முறையிலே ஒரு குற்றம் நடந்திருக்கிறதா, சட்டம் மீறப்பட்டிருக்கிறதா, என்று நீதிமன்றம் பரிசோதித்து நிர்ணயிப்பது வழக்கமான காரியம். சட்டம் தவிர்க்கப்படும் போது மட்டும் தான் ஒரு மனிதன் மனசாட்சியில்லாதவனாய் காணப்படுகிறான்.

# 9  நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்


54

தேவனுடைய நியாயந்தீர்ப்பிலே அங்கே ஒரு சட்டம் அல்லது தரம் உள்ளது யாக்கோபு எந்த சட்டம் உயர்த்தப்படும் என்பதை தெளிவுபடுத்துகிறார்.



55

(வசனம் யாக்கோபு 2:12)
சுயாதீனப் பிரமாணத்தினால் நியாயந்தீர்ப்படையப் போகிறவர்களாய் அதற்கேற்றபடி பேசி, அதற்கேற்றபடி செய்யுங்கள்.
யாக்கோபு 2:12.



56

(வசனம் யாக்கோபு 2:11)
முன்னால் உள்ள வாக்கியத்தில் யாக்கோபு இரண்டு கற்பனைகளைச் சொல்லுகிறார். விபசாரம் செய்யாதிருப்பாயாக, மேலும் கொலை செய்யாதிருப்பாயாக. தெளிவாக தேவனுடைய பத்து கற்பனைகள் தான் சுயாதீனப் பிரமாணம் என்று அழைக்கப்படும். அதனாலே மனிதர்களின் ஜீவியம் நியாயந்தீர்க்கப்படும்.



57

(வீடியோ 4 வினாடிகள்) கிறிஸ்துவுக்கும், சாத்தானுக்கும் இடையே நடக்கும் மாபெரும் போராட்டத்திலே எந்தப் பக்கம் நாம் நிற்கிறோம் என்பதை நியாயந் தீர்ப்பு தீர்மானிக்கும். நாம் கிறிஸ்துவோடு இருக்கிறோமா? நம்முடைய உள்ளத்திலே அவர் ஜீவிக்க நதம் அனுமதிக்கின்றோமா?


58

பத்துக் கற்பனையில் வெளிப்படுத்தும் அந்த மேலான அன்பை அவரிடத்தில் நாம் வைத்துள்ளோமா? அவருடைய பெலத்தினாலே அவருடைய சித்தத்தைப் பின்பற்றுவது நம்முடைய விருப்பமா? அவர் அவருடைய கற்பனைகளை நம்முடைய இருதயங்களில் எழுதியுள்ளாரா?


59

நீங்கள் பாருங்கள் இடம் விட்டு இடம் போகிறவர்கள் ஒரு நாட்டின் பிரஜையாக வேண்டும் என நினைத்தால் அவர்கள் அந்த நாட்டின் விசுவாசப் பிரதிக்கினை எடுத்து, ஒரு நேர்மையான பிரஜையாக இருப்பேன் என்றும் அந்த மண்ணின் சட்டங்களை மதிப்பேன் என்றும் உறுதிமொழி எடுப்பார்கள்.

# 9  நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்



60

(வீடியோ 10 வினாடிகள்) எப்படியோ, எல்லாப் பிரஜைகளும் அவர்கள் எடுத்துக்கொண்ட உறுதிமொழிக்கு உண்மையாய் இருப்பதில்லை. சிலர் வெளிப்படையாக பரலோகத்திற்கு உண்மையுள்ளவர்கள் போலத் தெரிகிறார்கள். ஆனால் பிற்காலத்தில் உண்மையற்றவர்களாக மாறிவிடுகிறார்கள். அப்படி அவர்கள் உண்மையற்றவர்கள் என்று நிரூபிக்கப்பட்டால், அவர்களது குடியுரிமை இரத்து செய்யப்பட்டு நாடு கடத்தப்படுகிறார்கள்.



61

எப்படியோ, எல்லாப் பிரஜைகளும் அவர்கள் எடுத்துக்கொண்ட உறுதிமொழிக்கு உண்மையாய் இருப்பதில்லை. சிலர் வெளிப்படையாக பரலோகத்திற்கு உண்மையுள்ளவர்கள் போலத் தெரிகிறார்கள். ஆனால் பிற்காலத்தில் உண்மையற்றவர்களாக மாறிவிடுகிறார்கள். அப்படி அவர்கள் உண்மையற்றவர்கள் என்று நிரூபிக்கப்பட்டால், அவர்களது குடியுரிமை இரத்து செய்யப்பட்டு நாடு கடத்தப்படுகிறார்கள்.




62

எப்படியோ, எல்லாப் பிரஜைகளும் அவர்கள் எடுத்துக்கொண்ட உறுதிமொழிக்கு உண்மையாய் இருப்பதில்லை. சிலர் வெளிப்படையாக பரலோகத்திற்கு உண்மையுள்ளவர்கள் போலத் தெரிகிறார்கள். ஆனால் பிற்காலத்தில் உண்மையற்றவர்களாக மாறிவிடுகிறார்கள். அப்படி அவர்கள் உண்மையற்றவர்கள் என்று நிரூபிக்கப்பட்டால், அவர்களது குடியுரிமை இரத்து செய்யப்பட்டு நாடு கடத்தப்படுகிறார்கள்.



63

(வசனம் மத்தேயு 7:21) என்னை நோக்கி: கர்த்தாவே! கர்த்தாவே! என்று சொல்லுகிறவன் அதில் பிரவேசிப்பதில்லை.



64

பரலோகத்தில் இருக்கிற என் பிதாவின் சித்தத்தின்படி செய்கிறவனே பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பான் மத்தேயு 7:21. அதாவது, நன்மைக்கும் - தீமைக்கும் - கிறிஸ்துவுக்கும் சாத்தானுக்கும் இடையில் இருக்கும் விவாதம் என்னவென்றால் - தேவனுடைய அன்பின் குணலட்சணத்தைப் பற்றியதே.

# 9 ▯ நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்


65

தேவனுடைய சட்டம் அவருடைய குணாதிசயங்களை வெளிப்படுத்துகின்றது. கடைசி நியாயத்தீர்ப்பில் ஒரு ஆச்சரியம் நம் அனைவருக்கும் காத்திருக்கின்றது.


66

ஆனாலும் திகைக்க வைக்கக்கூடிய ஒரு உண்மை என்னவென்றால், பரலோக நீதிமன்றத்தில் இப்பொழுது நியாயத்தீர்ப்பு நடந்துகொண்டு இருக்கிறது என்பதை சில கிறிஸ்தவர்கள் மட்டுமே அறிவார்கள். உண்மையில், வேதாகமத்தின் கடைசி புத்தகமான வெளிப்படுத்தின விசேஷம் ஆண்டவருடைய நியாயத்தீர்ப்பு இப்பொழுது பரலோகத்தில் நடந்துகொண்டிருக்கிறது என்பதை வெளிப்படுத்துகிறது.



67

ஆகவே தான் வெளிப்படுத்தின விசேசத்தின் கடைசி அதிகாரங்களில் - யோவான் - உலகிற்கு கடைசி எச்சரிப்பையும் மக்களுக்கு அழைப்பையும் விடுக்கிறார்.



68

(வசனம்: வெளிப்படுத்தல் 14:6, 7)
பின்பு வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக் கண்டேன்.



69

அவன் பூமியில் வாசம் பண்ணுகிற சகல் ஜாதிகளுக்கும் கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் அறிவிக்கத்தக்க நித்திய சுவிசேஷத்தை உடையவனாயிருந்து.



70

சகல ஜாதிக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும்.



71

மிகுந்த சத்தமிட்டு, தேவனுக்குப்பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள். அவர் நியாயத்தீர்ப்பு கொடுக்கும் வேளை வந்தது.

# 9 ◻ நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்



72

வானத்தையும், பூமியையும் சமுத்திரத்தையும் நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்கள்.
வெளிப்படுத்தல் 14:6, 7.




73

இந்த செய்தியில் நியாயத்தீர்ப்பு வரும் என்று சொல்லவில்லை, ஆனால் நியாயத்தீலர்ப்பு வந்து விட்டது என்று கூறுகின்றது.



74

மூன்று செய்திகள் அடங்கிய இந்த தூதில் இரண்டாவது பகுதி கடைசி நாட்களில் வாழும். தேவனுடைய ஜனங்களை கள்ள போதனைகளிலிருந்து வெளியே வரும்படி அழைக்கிறது. இந்த தூதின் கடைசி பகுதி இந்த உலகில் வாழும் தேவஜனத்துக்கு வெளிப்படுத்தின சுவிசேஷத்தில் சொல்லப்பட்ட மிருக வணக்கத்தைப் பற்றி எச்சரிப்பு கொடுக்கிறது



75

(வசனம்: வெளிப்படுத்தல் 14:9, 10)
மிருகத்தையும், அதன் சொரூபத்தையும் வணங்கி தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதன் முத்திரையை தரித்துக் கொள்கிறவன்.



76

அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பமில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடித்து
வெளிப்படுத்தல் 14:9, 10 14வது, 15வது வசனத்தை கவனியுங்கள். இவை மூன்று தூதர்களின் தூதை தொடர்ந்து வருகிறது.



77

(வசனம்: வெளிப்படுத்தல் 14:14, 15)
பின்பு நான் பார்த்தபோது, இதோ வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின்மேல் மனுஷகுமாரனக்கு ஒப்பான, ஒருவரைக் கண்டேன்.



78

தமது சிரசின்மேல் பொற்கிரீடத்தையும் தமது கையிலே கருக்குள்ள அரிவாளையும் உடைய ஒருவர் உட்கார்ந்து இருப்பதைக் கண்டேன்.

# 9  நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்



79

அப்போது வேறொரு தூதன் தேவாலயத்திலிருந்து புறப்பட்டு, மேகத்தின்மேல் உட்கார்ந்திருக்கிறவரை நோக்கி மிகுந்த சத்தமிட்டு,



80

அறுக்கிறதற்குக் காலம் வந்தது. ஆகையால் உம்முடைய அரிவாளை நீட்டி அறுத்துவிடும்.




81

பூமியின் பயிர் முதிர்ந்தது. வெளிப்படுத்தல் 14:14, 15.




82

பூமியின் பயிர் முதிர்ந்தது. என்றால் அது உலகத்தின் முடிவு. அறுவடை என்பது கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக் குறிக்கிறது. கிறிஸ்துவின் வருகைக்குமுன் என்ன நடக்கும்? தேவனின் நியாயத்தீர்ப்பு அவருடைய வருகைக்கு யார் ஆயத்தம் என்று காட்டம். சிறிதுநேரம் இந்தப் பொருள் குறித்து ஆழமாக ஆராய்வோம். ஒரு வேளை நீங்கள் ஆச்சரியப்படலாம். இந்த நியாயத்தீர்ப்பு எப்போது நடக்கும் என்று?




83

இதன் விளக்கம் தானியேலின் புத்தகத்திலுள்ள மிக முக்கியமான தீர்க்கதரிசனத்தில் உள்ளது.



84

(வசனம்: தானியேல் 8:14)
இரண்டாயிரத்து முந்நூறு இராப்பகல் செல்லும் வரைக்கும் இருக்கும், பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்தரிக்கப்படும். என்றான். தானியேல் 8:14 கே.ஜே.வி. இதுதான் வேதத்திலேயே நீண்ட தீர்க்கதரிசனமாகும்.



85

(வசனம்: எசேக்கியல் 4:6)
தீர்க்கதரிசனத்தில் ஒரு நாள் என்பது ஒரு வருடத்தைக் குறிக்கும். ஒவ்வொரு வருஷத்துக்குப் பதிலாக ஒவ்வொரு நாளை உனக்குக் கட்டளையிட்டேன். எசேக்கியல் 4:6. எனவே 2300 நாள் என்பது 2300 வருஷம்.



86

2300 வருடம் என்பது தானியேல் 7,8,9 அதிகாரங்களின் தொகுப்பாக இருக்கிறது.




87

2300 தீர்க்கதரிசன நாட்கள் அல்லது 2300 வருஷக்காலம், எருசலேமை எடுப்பித்துக் கட்டுவதற்கும், பொருளாதாரத்தை சீர் அமைப்பதற்கும் கட்டளை கொடுத்த அர்த்தசஷ்டாவின் கட்டளையுடன் ஆரம்பமாகிறது. இஸ்ரவேலர் பாபிலோனில் 70 வருஷம் சிறை இருந்தனர். அவர்கள் எருசலேமுக்குப்போய் அதை எடுத்துக்கட்ட வேண்டும் என மிகவும் வாஞ்சித்தனர்.



88

2300 தீர்க்கதரிசன நாட்கள் அல்லது 2300 வருஷக்காலம், எருசலேமை எடுப்பித்துக் கட்டுவதற்கும், பொருளாதாரத்தை சீர் அமைப்பதற்கும் கட்டளை கொடுத்த அர்த்தசஷ்டாவின் கட்டளையுடன் ஆரம்பமாகிறது. இஸ்ரவேலர் பாபிலோனில் 70 வருஷம் சிறை இருந்தனர். அவர்கள் எருசலேமுக்குப்போய் அதை எடுத்துக்கட்ட வேண்டும் என மிகவும் வாஞ்சித்தனர்.


89

கடைசியாக கி.மு.457ல் மிக நீண்ட நாட்களாக ஆவலோடு காத்திருந்த கட்டளையை ராஜா இட்டார். அந்ததேதியிலிருந்து 2300 வருடங்களை சேர்த்தால் கி.பி.1844 வருகிறது. வேதபகுதிக்கே திரும்பவும் செல்வோம். 2300 தீர்க்கதரிசன நாட்கள் என்பது திட்டவட்டமானது, அதற்கு பின்பு பரிசுத்த ஸ்தலம் சுத்தகரிக்கப்படும். எனவே நாம் பார்த்தபடி இந்த தீர்க்கதரிசனம் 1844ல் முடிகிறது. பரிசுத்த ஸ்தலம் சுத்திகரித்தல் என்றால் என்ன?

9  நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்

# 9 நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்



90

1844ல் தான் தேவனின் நியாயத்தீர்ப்பு வேளை ஆரம்பமானது என வேதாகமம் விவரிக்கிறது. கடிகாரம் அந்த நேரத்தை காட்டியது. 2300 இராப்பகலுக்குப்பின் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்படும் என்று தானியேல் சொன்ன தீர்க்கதரிசனம் எப்படி தேவனின் நியாயத்தீர்ப்போடு சம்பந்தப்பட்டது என நீங்கள் கேட்கலாம்.




91

பரிசுத்த ஸ்தலம் சுத்திகரித்தல் என்றால் என்ன? இது நியாயத்தீர்ப்போடு எவ்வாறு சம்பந்தப்பட்டது? வேதாகமம் இரண்டு பரிசுத்த ஸ்தலங்களாகக் கூறுகிறது. ஒன்று பூமியில் உள்ளது. மற்றொண்டு பரலோகத்தில் உள்ளது.


92

பழைய இஸ்ரவேல் ஜனங்கள் தினமும் தங்கள் பலிகளை பரிசத்த ஸ்தலத்திற்கு கொண்டு வந்தனர்.


93

அங்கே அவர்கள், வர இருக்கிற தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் மேல் தங்கள் விசுவாசத்தை வைத்து, தங்கள் பாவங்களுக்காக ஆட்டை பலியிட்டனர்.


94

இயேசு நம்முடைய ஸ்தானத்தில் நமக்காக மரித்தார். ஆகவே நாம் பாவம் செய்யும்போது, தேவனிடம் அவைகளை மன்னிக்கும்படி கேட்கிறோம்.


95

எனவே கல்வாரிக்கு முன் ஜனங்கள் பின் நோக்கி கல்வாரியை பார்க்கும் படியான பலி நடக்கவில்லை. எனவே விசுவாசத்தோட தங்களுக்காக பலியாக இருக்கும் தேவ ஆட்டுக்குட்டியை முன்நோக்கிப் பார்த்தனர்.
குற்றமில்லாத மிருகத்தை பலியிட்டதின்மூலம் இரட்சகர்மேல் தங்களுக்குள்ள நம்பிக்கையை அவர்கள் அறிக்கையிட்டனர். அவர் வந்து, மரித்து அவர்கள் பாவ மன்னிப்பை பெறும் நிலையை கொண்டுவருவார்.

# 9 நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்




96

ஆசாரியன் மிருகத்தின் இரத்தத்தை கொண்டு வந்து மகா பரிசுத்தஸ்தலத்திற்கு முன்பு இருந்த திரையில் தெளிப்பதன் மூலம், மாதிரிப் பூர்வமாக அவர்களின் பாவங்கள் பரிசுத்த ஸ்தலத்திற்கு மாற்றப்பட்டது.



97

எனவே, வருஷத்துக்கு ஒருமுறை, இஸ்ரவேல் ஜனங்கள் மிகவும் பரிசுத்தமான நிவாரண நாள் என்ற ஆராதனையின் மூலம் பரிசுத்த ஸ்தலத்தை சுத்திகரித்தனர். இஸ்ரவேல் ஜனங்களுக்கு இந்த நாள் ஒரு நியாயத்தீர்ப்பின் நாள்.


98

பாவ நிவாரண நாளுக்கு பத்து நாளுக்கு முன்பாக எக்காளம் ஊதப்பட்டு இஸ்ரவேல் ஜனங்கள் தங்கள் பாவங்களை பரிசோதித்து பார்த்து, மனந்திரும்பி பாவ மன்னிப்புப் பெற ஞாபகப்படுத்தப்பட்டது. இதைச் செய்ய தவறினவர்கள் இஸ்ரவேலர்களின் பாளயத்தைவிட்டு புறம்பே தள்ளப்பட்டனர்.



99

அந்நாளில் ஆசாரியன் உங்களைச் சுத்திகரிக்கும் பொருட்டு உங்களுக்காக பாவ நிவர்த்தி செய்யப்படும்.




100

கர்த்தருடைய சந்நிதியில் உங்கள் பாவமெல்லாம் நீங்கிச் சுத்திகரிக்கப்படும்.
லேவியராகமம் 16:30.


101

எபிரேயர் என்ற புத்தகமானது இந்தபூமியின் பரிசுத்த ஸ்தலத்தில் செய்யப்படும் ஆராதனைகளும் பலி முறைகளும், நமது பிரதான ஆசாரியராகிய கிறிஸ்து பரலோகத்தின் பரிசுத்த ஸ்தலத்தில் மன்னிக்கும் காரியத்தை மாதிரியாக கொண்டது என்று சொல்கிறது.



102

(வசனம்: எபிரேயர் 8:1, 2)
பவுல் சொல்கிறார். பரலோகத்திலுள்ள மகத்துவ ஆசனத்தின் வலது பாரிசத்தில் உட்கார்ந்திருக்கும் பிரதான ஆசாரியர் நமக்கு உண்டு.

# 9 □ நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்




103

பரிசுத்த ஸ்தலத்திலும், மனுஷரால் அல்ல கர்த்தரால் ஸ்தாபிக்கப்பட்ட மெய்யான கூடாரத்திலும் ஊழியஞ்செய்கிறவர்.
எபிரேயர் 8:1, 2.



104

(வசனம்: எபிரேயர் 9:11, 12, 24)
மீண்டும், கிறிஸ்துவானவர் வரப்போகிற நன்மைக்குரிய பிரதான ஆசாரியராக வெளிப்பட்டு.




105

தம்முடைய சொந்த இரத்தத்தினாலும் ஒரே தரம் மகாபரிசுத்த ஸ்தலத்திலே பிரவேசித்து.



106

நித்திய மீட்பை உண்டு பண்ணினார்.




107

கையினால் செய்யப்பட்டதாயிருக்கிற பரிசுத்த ஸ்தலத்திலே கிறிஸ்துவானவர் பிரவேசியாமல்.




108

மெய்யான பரிசுத்த ஸ்தலத்துக்கு அடையாளமான, பரலோகத்தில் தானே.



109


பிரவேசித்திருக்கிறார். எபிரேயர் 9:11, 12, 24.
கிறிஸ்துவின் கல்வாரி மரணம், நம் பாவங்கள் அனைத்துக்கும் நிவாரணம் அளிக்கக்கூடியதாக இருக்கிறது.



110

(வசனம்: எபிரேயர் 7:25)
தமது மூலமாய்த் தேவனிடததில் சேருகிறவர்களை முற்ற முடிய இரட்சிக்க வல்லவராயிருக்கிறார்.

# 9  நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்



111

அவர் எப்போதும் உயிரோடிருக்கிறபடியால், அவர்களுக்காக, வேண்டுதல் செய்கிறார். எபிரேயர் 7:25. உண்மையான ஆசரிப்புக்கூடாரம் அல்லது பரிசுத்த ஸ்தலம் பரலோகத்தில் இருக்கிறது. பூமியில் நடைபெறும் அனைத்தும் இரட்சிப்பின் திட்டத்தில் செய்யப்படுவதின் மாதிரியாக உள்ளது. இயேசு அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டி இயேசு, ஜீவிக்கும் ஆசாரியன் இயேசு நமது பிரதான ஆசாரியன், எப்படி பிரதான ஸ்தலத்திற்குள் பிரவேசிக்கிறானோ அதேபோல் இயேசுவும் கடைசிநாட்களில் தன் நியாயத்தீர்ப்பின் வேலையைச் செய்ய மகாபரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசிப்பார்.




112

(வசனம். மத்தேயு 10:32,33) நியாயத்தீர்ப்பில் நாம் கிறிஸ்துவின் மீது கொண்ட நல்ல உறவுதான் நம் நித்தியத்தை தீர்மானிக்கும். கிறிஸ்து நம்மை இரட்சிக்க வாஞ்சையுள்ளவராயிருக்கின்றார். நம்மை இரட்சிப்பதற்க எல்லாவற்றையும் செய்து கொண்டிருக்கின்றார். அவர் சொல்லும்போது, மனுஷருக்குமுன்பாக என்னை அறிக்கையிடுகிறவனை,



113

அவனை நானும் பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவேன்.



114

மனுஷர் முன்பாக என்னை மறுதலிக்கிறவன் எவனோ, அவனை நானும், பரலோகத்திலிருக்கிற என் பிதாவின் முன்பாக மறுதலிப்பேன். மத்தேயு 10:32, 33


115

நாம் தனியாக நியாத்தீர்ப்பில் நிற்பதில்லை. கிறிஸ்துவை அறிக்கையிட்டால், அவரும் நம்மை பிதாவின் முன்பாக அறிக்கை பண்ணுவார். நாம் கிறிஸ்துவினுடையவர்களானால், அவர் நமது வக்கீல், கிறிஸ்துவின் மூலமாக பாவமற்றவர்களாக தேவனுக்கு முன்பாக நிற்போம்.

# 9  நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்


116

நமது பதிவேடுகள். நமது இரட்சகரின் அன்பான ஜீவியத்தையே நமக்கு பலன் கிடைக்கும். எனவே இயேசுவை தங்கள் முழு இருதயத்தோடும் நேசித்து அவரை பின்பற்றுபவர்கள், நியாயத்தீர்ப்பைக் குறித்து பயப்படத் தேவையில்லை. அறிக்கை செய்யபட்ட ஒவ்வொரு பாவத்திற்கும், கிறிஸ்து தான் சிந்தின இரத்தத்தின் மதிப்பை முன் வைப்பார்.



117

(வசனம்: 1 யோவான் 1:7)
அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மை சுத்திகரிக்கும். 1 யோவான் 1:7.



118

(வீடியோ 13 வினாடிகள்)
பூமியின் கடைசி மணிநேரத்தில் நாம் வாழ்கிறோம். 1844 முதற்கொண்டு நுட்ப நியாய விசாரணை பரலோகத்தின் நீதிமன்றத்தில் நடைபெற்று வருகிறது.




119

(வீடியோ தொடர்கின்றது)
சந்தேகத்திற்கு இடமின்றி இந்த நியாய விசாரணை ஆதாமிலிருந்து ஆரம்பமாகியுள்ளது. பூமியில் மரித்த முதல் பரிசுத்தமானவன்.



120

(வசனம்: 1 பேதுரு 4:17)
பவுல் எழுதுகிறார். நியாயத்தீர்ப்பு தேவனுடைய வீட்டில் துவங்கும் காலமாயிருக்கிறது.
1 பேதுரு 4:17 மற்ற வார்த்தைகளில் சொல்வதென்றால் தேவ ஜனம் என்று தங்களை சொல்லக்கொள்கிறவர்களிடத்திலிருந்து நியாயத்தீர்ப்பு ஆரம்பமாகிறது.


121

ஆபேல் நீதிமன்றத்தில் நிற்கும்நாளை நம் மனகண்களால் பார்ப்போம். அவரின் வழக்கு நீதிமன்றத்தில் வரும்போது, தேவன் ஆபேலின் வாழ்க்கையை கவனிக்கிறார். அவன் தேவ ஆட்டுக்குட்டின் மரணத்தை ஏற்றுக் கொண்டதை பதிவேட்டில் பார்க்கிறார்.

# 9  நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்




122

வேதத்தின் பதிவேடுகளில் ஆபேலின் கடைசி செய்கையான வரப்போகும் இரட்சகரை விசுவாசித்து அவன் செலுத்தின பலி பதிவாகியுள்ளது. கிறிஸ்துவின் ஜீவியம் அவனின் கணக்கில், வைக்கப்படுகிறது அவன் பாவம் முழுவதும் கிறிஸ்துவின் இரத்தத்தால் மூடப்பட்டுள்ளது.




123

நீங்கள் அந்த இயேசுவை நம்பலாம். ஆபேலின் வக்கீலாக அவர், ஆணிபாய்ந்த தன் புனிதகரங்களை நீட்டியவராக சொல்கிறார்.
பிதாவே, என் இரத்தம் ஆபேலுக்காக செலுத்தப்பட்டது. ஆபேலின் பெயரை ஜீவ புஸ்தகத்தில் எழுதுங்கள் என இயேசு சொன்னபோது எண்ணிக்கையற்ற தூதர்கள் மனமகிழ்ந்து பாடியதை உங்களால் கேட்க முடியவில்லையா கிறிஸ்து வாக்கு பண்ணியபடியே அவர் பெயர் இன்றும் அங்குள்ளது.





124

(வசனம்: வெளிப்படுத்தல் 3:5)
ஜெயங்கொள்ளுகிறவனெவனோ அவனுக்கு வெண்வஸ்திரம் தரிப்பிக்கப்படும்.




125

ஜீவ புஸ்தகத்திலிருந்து அவனுடைய நாமத்தை நான் கிறுக்கிப்போடுவதில்லை.




126

நான் என்பிதா முன்பாகவும் அவருடைய தூதர் முன்பாகவும் அவன் நாமத்தை அறிக்கையிடுவேன். வெளிப்படுத்தல் 3:5.



127

மேலும் சந்தேகம் இல்லை. யூதாசின் பெயரும் கூட பரலோகத்தின் நீதிமன்றத்தில் எழுப்பப்பட்டது. யூதாஸ் ஒரு சீடனாக கிறிஸ்துவை பின்பற்றுகிறவனாக இருந்தான். ஆனால் அவனுடைய வாழ்க்கை அவன் வேலையைவிட கிறிஸ்துவை பிரதானமாக நேசிக்கவில்லை.

# 9 நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்


128


ஆனால் முப்பது வெள்ளி காசுகளுக்காக தேவனை காட்டிக்கொடுக்கும் வரை ஒரு பெலவீனம் அவனிடமிருந்த மற்ற பெலவீனத்திற்கு வழிநடத்தியது. பின்பு மனவேதனையினால் தானாகவே தூக்கில் தொங்கிக்கொண்டான்.


129

இயேசு யூதாசை நேசித்தார். அவர் அந்த இரவு இராபோஜனத்தில் யூதாசின் அழுக்கு பாதத்தை கழுவி பெருமையிலான இருதயத்தை தொட நினைத்தார். அவனுடைய வழக்கறிஞராக நியாயத்தீர்ப்பில் அவன் பக்கத்தில் நிற்க அவர் எண்ணினார்.


130

ஆனால் யூதாஸ் வழி மாறினான். இயேசுவுக்கு யூதாசின் பெயரை மறுபார்வையிட எவ்வளவு வருத்தமாக இருந்திருக்க வேண்டும். நம்முடைய சுயநீதி நியாய தீர்ப்பில் செயல்பட முடியாது கவனி யுங்கள்.



131

(வசனம்: ஏசாயா 64:6)
நாங்கள் அனைவரும் தீட்டானவர்கள்போல இருக்கிறோம். எங்களுடைய நீதிகளெல்லாம் அழுக்கான கந்தை. ஏசாயா 64:6.


132

யார் தொடர்ந்து அவர்களுடைய வாழ்வில் கிறிஸ்துவை முதலில் வைக்கிறார்களோ அவர்கள் மட்டும் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தை தரித்துக் கொள்வார்கள். அது இல்லாமல், ஒரு மனிதன்கூட நியாயத்தீர்ப்பில் நிலை நிற்கமுடியாது. எனவே ஜீவ புத்தகத்தில் யூதாசின் பெயர் அழிக்கப்பட்டது.


133

நாம் ஜீவிப்பது ஒரு பயபக்தியான நேரம். இஸ்ரவேலர்களை போல நாம் நம்முடைய ஜீவியத்தை பரிசோதித்து பார்க்க வேண்டும். நாம் நம்முடைய ஒப்படைத்தலை சரிபடுத்திக் கொள்ள வேண்டும். அதுதான் நம்மை நீதிமன்றததில் ஒப்புவிக்கக்கூடிய ஆயத்தம்.

# 9 நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்



134

(வசனம்: வெளிப்படுத்தல் 22:11)
அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ்செய்யட்டும், அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும், நீதியுள்ளவன் இன்னும் நீதிசெய்யட்டும்
பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.
வெளிப்படுத்தல் 22:11.
இவ்வளவு காலமாய் தேவன் மனிதனுக்கு காட்டிய இரக்கமும் பாவமன்னிப்பும் எடுத்துகொள்ளப்படும். இந்த வார்த்தைகள், இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும், இயேசுவை தெய்வமாகவும், தங்களின் மத்தியஸ்தராகவும் ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கும், துக்கமான வார்த்தையாக இருக்கும்.



135

(வசனம்: எரேமியா 8:20)
அறுப்புக் காலம் சென்றது. கோடைக்காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை!
எரேமியா 8:20.
பிறகு இயேசு இந்த பூமிக்கு திரும்ப வருவார்.



136

(வசனம்: வெளிப்படுத்தல் 22:12)
இதோ, சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.
வெளிப்படுத்தல் 22:12.


137

நண்பனே, இயேசு உன்னுடைய வழக்கறிஞராகா நியாயத்தீர்ப்பிலே இருக்க வாஞ்சிக்கிறார். நீ அவருடைய கல்வாரியின் பலியை ஏற்றுக் கொள்ள அவர் வாஞ்சிக்கிறார். அவர் உன்னுடைய பாவங்களை போக்க நீ உன்னுடைய பாவங்களை அவரிடம் அறிக்கையிட வாஞ்சிக்கிறார். உன்னுடைய பெயர் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட வாஞ்சிக்கிர். பரிசுத்த நகரத்திற்கு யார் போக முடியும். யார் போக முடியாது என்று யோவான் வர்ணிக்கிறார்.



138

(வசனம்: வெளிப்படுத்தல் 21:27)
தீட்டுள்ளதும் அருவருப்பையம் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில பிரவேசிப்பதில்லை.

# 9 நம்பிக்கையுடன் நியாயத்தீர்ப்பைச் சந்தித்தல்



139

ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள். வெளிப்படுத்தல் 21:27.


140

உங்கள் இருதயத்தை இயேசுவுக்கு இப்பொழுதே திறந்து காட்ட விரும்புகிறீர்களா? அவருடைய இராஜ்யத்திற்கு தடையாயிருக்கிற எதுவாயிருந்தாலும் அதை அவர் உங்கள் வாழ்க்கையில் இருந்து எடுத்துபோட நீங்கள் விரும்புகிறீர்களா? நியாயத்தீர்ப்பில் தேவன் நம்மைப் பற்றி எல்லாவற்றையும் வெளிப்படுத்துவார். இந்த அகில உலகத்திற்கு முன்பாக எல்லாம் வெளிபடும். நம்முடைய எல்லா பாவங்களும் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. உங்களுடைய பாவம்மூட - இயேசுவின் இரத்தத்தால் மூடிப்பட நீங்கள் விரும்புகிறீர்களா? கிறிஸ்து முன்வந்து ஆம், இது என் மகன், இது என் மகள் என்று சொல்ல விரும்புகிறீர்களா? நான் அவர்களுடைய பாவங்களை மன்னித்தேன். நான் அவர்களுடைய கடனை நீக்கிவிட்டேன். நான் அவர்களடைய குற்றங்களை மன்னித்தேன். அவர்களுடைய பாவங்கள் என்னுடைய இரத்தத்தால் மூடப்பட்டது. நித்தியமாக பதிவேடுகளில் அவைகளை நீக்கி இயேசு பரலோக சிங்காசனத்தில் நிற்கிறார். அவர் அங்கே நியாயத்தீர்ப்பில் இரட்சகராக நிற்கிறார். இப்போது நீங்கள் அவரிடம் வருவீர்களா? உங்கள் முழு வாழ்வை அவருக்கு கொடுப்பீர்களா? ஏன் உங்களுடைய கையை பரலோகத்திற்கு நேராக இப்பொழுதே உயர்த்தி நாம் ஜெபித்து ஆம் ஆண்டவரே என்று சொல்லக்கூடாது. என் வாழ்வை எடுத்துக் கொள்ளும். நான் உம்முடையவனாக இருக்க விரும்புகிறேன்.

# 10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?



1

இது ஒரு மாற்றத்தை ஏற்படுத்துமா?



2

குற்றங்கள் உலகின் பல நகரங்களில் அதிகரிக்கின்றது தெரியுமா? இது ஆச்சரியமான வழிகளை காட்டுகிறது.


3

ஒரு நாள் ஒருவர் மிகவும் கோபத்துடன் போலீஸ் நிலையத்திற்குள் நுழைந்தார். அவருடைய வீட்டில் இருந்த விலைமதிப்புள்ள பொருட்களை யாரோ திருடிவிட்டதாகவும், அந்த திருடனின் முகத்தை பார்த்ததாகவும், அங்கிருந்த காவல் அதிகாரியிடம் புகார் செய்தார். அங்கிருந்த அதிகாரி அங்கிருந்த ஒரு அழுக்கடைந்த குற்றவாளிகளின் புகைப்படங்கள் இருந்த புத்தகத்தை காண்பித்து, அதில் அந்த குற்றவாளியை கண்டுபிடிக்க முடியுமா எனக்கேட்டார்.


4

திடீரென்று அந்த அதிகாரி பொறுங்கள் என்றுக்கூறி ஒரு குறிப்பிட்ட போட்டோ மீது கையை வைத்து, புகார் செய்ய வந்த மனிதரை மேலும் கீழும் பார்த்தார். உடனே, நீதான் அவன், உன்னை கைது செய்ய உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கின்றது என்றார். இந்த காவல் அதிகாரி புகார் செய்ய வந்த அந்த மனிதன் தான் குற்றவாளி என்று கண்டுபிடித்தார்.



5

குற்றங்களும், கொடுமைகளும் எங்கு பார்த்தாலும் நாம் நினைப்பதற்கும் அதிகமாக நிறைந்திருக்கின்றனது. நம்முடைய வேலை செய்யும் இடங்களில், தொழிற்சாலைகளில், நிறுவனங்களில், பட்டணங்களிலும் நிறைந்திருக்கின்றது.

10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?

# 10 நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?



6

சில நாடுகளில் சச்சரவுகளும், திருட்டும், புரட்சிகளும் சாதாரண அன்றாட பிரச்சினையாகிவிட்டது. சாலைகள் பாதுகாப்பற்றவையாகிவிட்டன. கொலைகள், கடத்தல், தீவிரவாதம், குண்டுமழை, திருட்டு, விபச்சாரம், கொடுமை, ஊழல் போன்றவை நம்முடைய அன்றாட செய்திகளாகிவிட்டன. ஏன் குற்றங்கள் பெருகுகின்றன? நீதியற்ற சமுதாயம் பெருக காரணமென்ன? நம் உலகத்திற்கு என்ன நடந்தது.




7

மேற்கத்திய நாடுகளில், நாகரிகம் வளர்ந்த சமுதாயத்தில், புதிய வாலிப சமுதாயம் இணைந்து நாளடைவில் குறை பேசுவதும், சவால் விடுவதும் அன்றாட நிகழ்ச்சிகளாகிவிட்டன. தேவன் நம் குழந்தைகளுக்கு, பெரியவர்கள் மாதிரிகளாக இருக்க விரும்புகின்றனர். நம்மை குழந்தைகள் அதிகமாய் பிரதிபலிப்பார்கள். யாரால் நல்ல ஒரு முன்மாதிரியை ஏற்படுத்த முடியும்?



8

தகப்பனார் வேலையிலும், வரி செலுத்துவதிலும் ஏமாற்றுகின்றனர். தாயார் கருக்கலைப்பிலும், ஆக இருவரும் ஒருவரை ஒருவர் ஏமாற்றிக் கொண்டிருக்கின்றனர்.



9

குழந்தைகள் அனைத்தையும் உற்று கவனிக்கின்றனர். குடும்ப முறிவு பெரிய வடுக்களை ஏற்படுத்துகின்றது. பெற்றோர் குழந்தைகளுக்கு நன்மை தீமையை உணர்த்தவில்லையென்றால் யாரால் சொல்லிக்கொடுக்க முடியும். இப்பெரிய பொறுப்பை பெற்றோர்கள் பள்ளிக்கூடத்திற்கு விட்டுவிட முடியாது. பல பள்ளிக்கூடங்கள் நல்ல போதனைகளை பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுப்பதில்லை. நாம் வேதத்தின் நியாயங்களை ஒதுக்கிவிட்டோம் என்பது தான் இவை எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்க முடியும்.




10

சில சபைகள் கூட தவறான போதனைகளை போதிக்கின்றன.




11

அவருடைய நியாயப் பிரமாணங்கள் ஒழிந்து போய்விட்டது என்று பிரசங்கிக்கின்றனர்.




12

அவருடைய பிரமாணங்கள் நம் காலத்திற்கு ஒவ்வாதவை என்றும்,




13

அல்லது அவருடைய கட்டளைகள் பின்பற்ற முடியாதவை.



14

இதன் விளைவாக அநேகர் தங்கள் சொந்த பிரியமான காரியங்களால் அனேக முறிந்துபோன குடும்பங்களையும், கட்டுப்படுத்த முடியாத குழந்தைகளையும், தீவிர குற்றங்களையும் காண்கிறோம்.




15

(வசனம் ஓசியா 8:7)
அவர்கள் காற்றை விதைத்து சூறைக்காற்றை அறுப்பார்கள்.



16

இதில் கேள்வி என்னவென்றால், நன்மை தீமையென்று வரையறுக்க கூடியவர் யார்? பெரிய நியாயவாதிகள் கூட தவறான தீர்மானங்களை எடுக்கின்றார்கள். நமக்கு அப்பால் நன்மை தீமையை வரையறுத்துக்கொள்ள உதவி கிட்டுமா? அல்லது நமக்கு நாமேதான் தீர்மானித்து கொள்ள வேண்டுமா?




17

(நீதிமொழிகள் 16:25)
வேதம் நமக்கு நாமே நன்மை தீமையை வரையறுக்க நல்ல நீதிபதிகள் அல்ல என்று உரைக்கின்றது.
மனுஷனுக்கு செம்மையாய்த் தோன்றுகிற வழியுண்டு.
அதன் முடிவோ மரண வழிகள்.
நீதிமொழிகள் 16:25.

10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?



18

(வசனம் 2 தீமோத்தேயு 4:3, 4)
ஏனென்றால், அவர்கள் ஆரோக்கியமான உபதேசத்தை பொறுக்க மனதில்லாமல், செவித்திவுள்ளர்களாகி, தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற.



19

செவித்தினவுள்ளவர்களாகி தங்கள் சுய இச்சைகளுக்கேற்ற போதகர்களை தங்களுக்கு திரளாய் சேர்த்துக்கொண்டு.




20

சத்தியத்திற்கு செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்கு சாய்ந்து போகும் காலம் வரும். 2 தீமோத்யு 4:3,4



21

ஆம். சட்டங்களை நாம் தூக்கியெறிந்து விடுவதின் மூலம் சுதந்திரம் பெற்றுக்கொள்வதில்லை என அறிவோம். நன்மை தீமை என்ற அடிப்படை விதியை நீக்கினால் - உலகில் குழப்பமே மிஞ்சும்.



22

சாலைகளில் உள்ள எல்லா சாலை விதிகளையும், அடையாளங்களையும் நீக்கினால் மிகப்பெரிய குழப்பமே மிஞ்சும்.



23

அந்த விதிகள் யாவை? நன்மை தீமை எது என்று நம்மால் அறிந்துகொள்ள முடியுமா?


24

பல நூற்றாண்டுகளுக்கு முன்பு தேவன் குற்றமற்ற சமுதாயத்திற்கு ஒரு இலக்கணத்தை வகுத்து கொடுத்தார். இதை ஒழுங்காக பின்பற்றியிருந்தால் குற்றமில்லாத சமுதாயம் ஏற்பட்டிருக்கும். இப்பூமியில் வாழும் அனைவரும் பாதுகாப்பாகவும், சந்தோஷமாகவும் வாழ்ந்திருக்கலாம்.



25

(வசனம் : யாத்திராகமம் 20:2)
இஸ்ரவேல் ஜனங்கள் சீனாய் மலையில் காத்திருந்தபோது தேவன் அவர்களை சந்தித்து கூறினது என்னவெனில்
உன்னை அடிமைத்தன வீடாகிய எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின உன் தேவனாகிய கர்த்தர் நானே.
யாத்திராகமம் 20:2.



26

(வீடியோ பிரிவு 6)
முதலாவதாக தேவன் அவர்களை அடிமைத்தனத்திலிருந்து விடுவிப்பவராக அறிமுகப்படுத்திக் கொள்கிறார். சிவந்த சமுத்திரத்தை திறந்து அவர்களை காப்பாற்றினார். நீங்கள் என்னை நம்பினால் உங்களை காப்பாற்றுவேன் என்கிறார்.


27

பின்னர், அவருடைய தெய்வீக சட்டதிட்டங்களை கூறி, நாம் நன்மை தீமை அறிவதோடு மட்டுமல்லாமல், பாதுகாப்போடும் சமாதானத்தையும் வாழவழி வகை செய்தார்.



28

சீனாய் மலையில் தேவன் பேசினது பத்து பிரமாணங்களை வரிசைப்படுத்தி பார்ப்போம்.
என்னையன்றி உனக்கு வேறே தேவர்கள் உண்டாயிருக்க வேண்டாம்.



29

ஒரு சொரூபத்தையாகிலும் யாதொரு விக்கிரகத்தையாகிலும் உண்டாக்கவும், நமஸ்கரிக்கவும் வேண்டாம்.



30

தேவனுடைய நாமத்தை வீணிலே வழங்காதிருப்பாயாக.



31

ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஆறு நாளும் வேலை செய்து உன் கிரியைகளை நடப்பிப்பாயாக. ஏழாம் நாள் உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்.

10  நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?

# 10 — நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?



32

தந்தையையும் தாயையும் கனம் பண்ணுவாயாக.



33

கொலை செய்யாதிருப்பாயாக.



34

விபச்சாரம் செய்யாதிருப்பாயாக.



35

களவு செய்யாதிருப்பாயாக.



36

பொய் சாட்சி கூறாதிருப்பாயாக.



37

பிறனுடைய வீட்டை இச்சியாதிருப்பாயாக, பிறனுடைய மனைவியையும், அவனுடைய வேலைக்காரனையும்.



38

அவனுடைய வேலைக்காரியையும் அவனுடைய எருதையும், அவனுடைய கழுதையையும் மற்றும் பிறருக்குள்ள யாதொன்றையும் இச்சியாதிருப்பாயாக. யாத்திராகமம் 20:3-17.



39

(வீடியோ பிரிவு 10)
இஸ்ரவேல் ஜனங்கள் இதைக் கேட்ட போது உண்மையாக இது தேவசித்தம் என அறிந்தனர். அதை செய்வதற்கு தீர்மானித்தனர்.

# 10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?


40

பிறகு நாம் மிகவும் மறந்து போகிறவர்கள் என அறிந்து, அவைகளை இரண்டு கற்பலகைகளில் தேவன் தாமே தம் விரலினால் 10 கற்பனைகளையும் எழுதினார்.



41

(வசனம் யாத்திராகமம் 31:18)
சீனாய் மலையில் தேவன் மோசேயோடு இவைகளை பேசின பின்பு.



42

உடன்படிக்கையின் இரண்டு பலகைகளை அவரிடம் கொடுத்தார்.



43

தேவனுடைய விரலினால் கற்பலகைகளில் எழுதினார். யாத்திராகமம் 31:18.


44

இதுதான் தேவன், தன் கற்பனைகளை எழுத்துவடிவில் முதன்முதலில் கொடுத்தது இவை நித்திய காலமாக இருந்தவை. சீனாய் மலைக்கு நீண்ட காலத்திற்கு முன்பாகவே, ஏன் ஆதாம் ஏவாள் காலத்திற்கு முன்பே, நித்தியமாக, மாறாத, பரலோக அரசாங்கத்தின் தன்மையை தீர்மானிப்பதின் நியமமாக நியாயப்பிரமாணம்.


45

உண்மையில், தூதர்கள் கூட தேவனின் கற்பனையால் தான் ஆளப்படுகின்றனர். ஆனால் அவர்களுக்கு ஒன்று தேவனின் கற்பனைக்கு கீழ்படியவோ அல்லது அவைகளை உதாசீனம் செய்து கலகம் செய்யவோ தெரிந்துக்கொள்ளும் உரிமை அவர்களுக்கு கொடுக்கப்பட்டுள்ளது.


46

சாத்தானும், அவனைச் சேர்ந்த தூதர்களும் தங்கள் விருப்பப்படி செய்ய தெரிந்துக்கொண்டனர். தங்கள் சொந்த கட்டளைகளை உருவாக்கினர். இந்த கலகமானது அவர்களை பரலோகைவிட்டு புறப்பே தள்ளியது.

10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?

# 10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?





47

(வசனம்: வெளிப்படுத்தல் 12:7-9).
வானத்தில் யுத்தமுண்டாயிற்று. மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள். வலுசர்ப்பமும் அதைச் சேர்ந்த தூதரும் யுத்தம் பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை.




48

வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற் போயிற்று.




49

உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது, அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது.





50

அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அதனோடே கூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள்.
வெளிப்படுத்தல் 12:7-9.
ஆனால் தேவனைப் பின்பற்றி, அவருடைய கற்பனைக்கு உண்மையாயிருந்த தூதரும் இருந்தனர்.




51

(வசனம் : சங்கீதம் 103:20)
கர்த்தருடைய வார்த்தையைக் கேட்டு, அவருடைய வசனத்தின்படி செய்கிற பலத்த சவுரியவான்களாகிய அவருடைய தூதர்களே, அவரை ஸ்தோத்தரியுங்கள்.
சங்கீதம் 103:20.



52

ஆதாமும் ஏவாளும் ஏதேனில் தேவனின் கற்பனைகளை அறிந்திருந்தனர். அவர்கள் பாவம் செய்தபின், அவமானத்தையும் குற்ற உணர்வையும் உணர்ந்தனர்.



53

ஆபேலின் காணிக்கையை தேவன், அங்கீகரித்து காயினின் பலியை நிராகரித்த போது, காயீன் கோபமடைந்தான். தேவன் அவனிடம் கேட்டார்.

# 10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?



54

(வசனம் : ஆதியாகமம் 4:6, 7)
உனக்கு ஏன் எரிச்சல் உண்டாயிற்று? உன் முகநாடி ஏன் வேறுபட்டது?




55

நீ நன்மை செய்தால், மேன்மை இல்லையோ, நீ நன்மை செய்யாதிருந்தால், பாவம் வாசற்படியில் படுத்திருக்கும். ஆதியாகமம் 4:6, 7.



56

(வசனம் ரோமர் 4:15)
நியாயப்பிரமாணம் இல்லாவிட்டால் மீறுதலுமில்லை. ரோமர் 4:15.



57

மீறுதல் என்பது கற்பனையை, கடமையை மற்றும் பலவற்றை மீறுவது பாவம் என வெப் ஸ்டார் டிக்ஸ்னரி கூறுகிறது.


58

சீனாய் மலையில் கற்பனையைப் பற்றி, பேசப்படும் முன்னே, ஆபிரகாம் தேவனின் கற்பனைக்குக் கீழ்படிந்தான்.



59

(வசனம். ஆதியாகமம் 26:5.)
ஆபிரகாம் என் சொல்லுக்கு கீழ்படிந்து என் விதிகளையும், என் கற்பனைகளையும், என் நியமங்களையும், என் பிரமாணங்களையும் கைக்கொண்டபடியால். ஆதியாகமம் 26:5.


60

சீனாய் மலைக்கு நீண்ட காலத்திற்கு முன்பே, யோசேப்பு தன் மனசாட்சியால் வழிநடத்தப்பட்டு போத்திப்பாரின் மனைவியின் சோதனைக்கு இடங்கொடுக்கவில்லை.

10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?

# 10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?



61

(வசனம் : ஆதியாகமம் 39:9)
... நீ அவருடைய மனைவியாயிருக்கிறபடியால் உன்னைத் தவிர வேறொன்றையும் அவர் எனக்கு விலக்கி வைக்கவில்லை.



62

இப்படியிருக்க, நான் இத்தனை பெரிய பொல்லாப்புக்கு உடன்பட்டு, தேவனுக்கு விரோதமாய்ப் பாவம் செய்வது எப்படி என்றான். ஆதியாகமம் 39:9.


63

யோசேப்பு விபச்சாரம் பாவம் என அறிந்து இருந்தான். தேவனின் நன்மைக்கும் தீமைக்கு உள்ள நியமத்தை உணர்ந்திருந்தான். தேவனுடைய கற்பனையை மீறி பாவம் செய்வதில்லை என உறுதியாக தீர்மானித்தான்.



64

(வீடியோ பிரிவு 4)
இஸ்ரவேல் ஜனங்கள், தேவனுக்கு கீழ்படிந்து, நடக்க அறிவுறுத்தப்பட்டு இருந்தனர். ஆனால் கொடூரமான எகிப்தின் அடிமைத்தனத்தால் (கற்பனையை) அவைகளை அவர்கள் மறந்து போய் இருந்தனர்.


65

எகிப்தைவிட்டு பிறப்பட்டபின், சீனாய் மலையை அடைவதற்கு, ஒரு சில வாரங்களுக்கு முன், இஸ்ரவேல் ஜனங்கள் தேவனின் கற்பனையை மீறி ஓய்வுநாளில் மன்னாவை பொறுக்க போனதைக்குறித்து, தேவன் மோசேயை கடிந்து கொள்கிறார்.



66

(வசனம் : யாத்திராகமம் 16:28, 30)
என் கட்டளைகளையும், என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்தமட்டும் மனதில்லாதிருப்பீர்கள்.



67

அப்படியே ஜனங்கள் ஏழாம் நாளில் ஓய்ந்திருப்பார்கள் யாத்திராகமம் 16:30. நான்காம் கற்பனை சீனாய் மலை அனுபவத்திற்கு முன்பே கடைப்பிடிக்கப்பட்டது என்பதை பாருங்கள்.

# 10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?


68

ஆம். தேவனின் கற்பனையே, இந்த அண்டசராசரத்தின் நன்மைக்கான நியதியாக நித்தியமாய் இருக்கிறது. உண்மையாகவே, தேவனின் இராஜ்யத்தில் அவரின் கற்பனை ஆளுகை செய்கிறது என்பது நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது அல்லவா?




69

(வசனம்: 1 கொரிந்தியர் 14:33, 40)
அப்போதலர் பவுல் எழுதுகிறார். தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல்...



70

சகலமும் நல்லொழுக்கமாயும், கிரமமாயும் செய்யப்படக்கடவது.
1 கொரிந்தியர் 14:33, 40.


71

ஒரு கிரமமான அரசாங்கம் கட்டளைகள் இல்லாமல் நிலைத்திருக்க முடியாது. கிரமமான மகிழ்ச்சியான பாதுகாப்பான சமுதாயம் வரைமுறைகள் இல்லாமல் இயங்க முடியாது.
இயற்கையிலேயே கட்டளைகள் இருக்கிறது. ஏன் குழந்தைகள் கூட கட்டளைகள் இல்லாமல் விளையாட்டு, விளையாட முடியாது.



72

(வசனம்: ரோமர் 2:13)
நியாயப்பிரமாணத்தை கேட்கிறவர்கள் தேவனுக்கு முன்பாக நீதிமான்களல்ல.



73

நியாாயப்பிரமாணத்தின்படி செய்கிறவர்களே நீதிமான்களாக்கப்படுவார்கள்? ரோமர் 2:13.
தேவனின் கற்பனையை அறிந்து கொள்வது மாத்திரமல்ல. அவைகளின் படி நடப்பதும் முக்கியம்.

10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?

# 10  நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?



74

(வசனம் யோவான் 14:15.)
இயேசு சொன்னார். நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள். யோவான் 14:15. உண்மையில் இயேசு பழைய ஏற்பாட்டிலிருந்து அன்புதான். எல்லா கற்பனைகளுக்கும் கீழ்படிவதின் நோக்கமாக இருக்கிறது என சுட்டிக்காட்டுகிறார்.



75

(வசனம்: மத்தேயு 22:37-40)
... உன் தேவனாகிய கர்த்தரிடத்தில, உன் முழு இருதயத்தோடும், உன் முழு ஆத்துமாவோடும் உன் முழு மனதோடும் அன்பு கூறுவாயாக.



76

இது முதலாம் பிரதான கற்பனை.




77

பின்பு இயேசு கூறினார். இரண்டாம் கற்பனை என்னவென்றால், உன்னிடத்தில் நீ அன்பு கூறுவதுபோல பிறனிடத்திலும், அன்பு கூறுவாயாக என்பதே.



78

இவ்விரண்டு கற்பனைகளிலும், நியாயப்பிரமாணம் முழுமையும், தீர்க்கதரிசனங்களும் அடங்கி இருக்கிறது என்றார். மத்தேயு 22:37-40.


79

உண்மையாகவே, உன் முழு இருதயத்தோடும் முழு ஆத்துமாவோடும், முழு மனதோடும் தேவனை நேசிப்பாயானால்.



80

உண்மையிலேயே, முதல் நான்கு கற்பனையை கடைபிடிப்பதன் மூலம், அப்படிப்பட்ட அன்பை நாம் வெளிக்காட்டுகிறோம்.



81

தேவனே நம் வாழ்வில் முதலிடமாக இருக்க வேண்டும்.



82

நம் தொழுகை அவருக்கு மாத்திரமே இருக்க வேண்டும்.



83

அவருடைய பரிசுத்த நாமத்தை மதித்து, மகிமைப்படுத்த வேண்டும்.



84

ஒவ்வொரு ஓய்வுநாளிலும், அவரோடு நம்முடைய செயல்களை செய்வதில் ஆர்வம் கொள்ள வேண்டும்.



85

நம்மை நேசிப்பதுபோல, பிறரை நாம் உண்மையாகவே நேசிப்போனால்.



86

நம்முடைய தாயையும், தகப்பனையும் கனம்பண்ண வேண்டும்.



87

வாழ்க்கையின் மகத்துவம்.



88

ஒழுக்க நெறியை காப்பாற்றுவது.

10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?

# 10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?



89

மற்றவரின் உடமையை மதிக்க வேண்டும்.



90

மற்றவர்களோடு உள்ள பந்தத்தில் கண்ணியத்தை காக்க வேண்டும்.



91

மற்றவருக்கு உரியதை இச்சிக்கக்கூடாது.


92

ஒரு கணக்கெடுப்பு கூறுகிறது. 35,00,00,000 சட்டங்கள் மனிதனின் ஒழுங்கை காப்பதற்கு உருவாக்கப்பட்டுள்ளது என்கிறது.



93

ஆனால், தேவன் உருவாக்கிய பத்து கற்பனைகளில் இந்த எல்லா மனித நடத்தைக்குரிய காரியங்களும் அடங்கி இருக்கிறது. தேவன் மாத்திரமே இப்படிப்பட்ட பரிபூரண கட்டளையை எழுத முடியும், வேதம் சொல்கிறது.




94

(வசனம்: சங்கீதம் 19:7)
கர்த்தருடைய வேதம் குறைவற்றதும், ஆத்துமாவை உயிர்ப்பிக்கிறதுமாயிருக்கிறது.
சங்கீதம் 19:7.



95

(வசனம்: சங்கீதம் 19:11)
அவைகளைக் கைக்கொள்வதால் மிகுந்த பலன் உண்டு.
சங்கீதம் 19:11.



96

வேத வல்லுணன் ஆகஸ்ட் ஸ்ட்ராங் என்பவர் தேவனின் குணத்தின் பிரதிபலிப்பே கற்பனை என்கிறார்.

# 10  நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?



97

இன்று நாம் சொல்லலாம். பத்து கற்பனை, தேவனின் மாறாத குண நலங்களை வெளிப்படுத்துவதே அல்லாமல் மற்றது அல்ல.


98

ஏதொரு மாற்றம் கற்பனையில் இருக்குமானால் அது பரிபூரணமானதாக இருக்காது. பரிபூரணமான கற்பனையாக இருப்பதால் அது ஒருக்காலும் மாற்றப்பட முடியாது.



99


(வசனம்: லூக்கா 16:17)
வேதத்தில் ஒரு எழுத்தின் உறுப்பு அவமாய்ப் போவதைப் பார்க்கிலும், வானமும் பூமியும் ஒழிந்துபோவது எளிதாயிருக்கும்.
லூக்கா 16:17.


100

ஆனால், நீ சொல்லலாம். பத்து கற்பனை எப்போதும், என் மகிழ்ச்சிக்கு ஒரு வேலி போட்டதுபோல் நான் எண்ணுகிறேன் என்று கூறலாம் தேவன் ஒருக்காலும் தன் கற்பனைமூலம் மனிதனின் மகிழ்ச்சியை தடை செய்ய வேண்டும் என்றோ, ஒரு பாரமாகவோ, இருக்கவோ அவற்றை கொடுக்கவோ இல்லை.


101

அதற்கு மாறாக, தேவன், கற்பனை, நமக்கு ஒரு பாதுகாப்பாகவும், நம்மை துக்கம், குற்ற உணர்வு இவைகளிலிருந்து காக்கவுமே கொடுத்தார். தேவனுடைய கற்பனை எல்லோருக்கும் எங்கும் பாதுகாப்பை அருள வேண்டும் என்பதே தேவனின் நோக்கம்.



102

(வசனம்: உபாகமம் 5:29)
அவர்கள் எந்நாளும் எனக்கு பயந்து, என் கற்பனைகளையெல்லாம் கைக்கொள்வதற்கேற்ற இருதயம் அவர்களுக்கு இருந்தால் நலமாயிருக்கும்.



103

அவர்களும், அவர்கள் பிள்ளைகளும் என்றென்றைக்கும் நன்றாயிருக்கும்படி.
உபாகமம் 5:29.

# 10  நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?




104

எப்படி நாம் பாலங்களின் ஓரங்களிலும், மலைப் பாதையின் ஓரங்களிலும் பாதுகாப்பு வேலி அமைக்கிறோமோ, அதுபோலவே தேவனுடைய கற்பனைகளும், நம் வாழ்க்கை பாதையில் நம்மை காப்பவைகள்.





105

(வசனம்: ரோமர் 3:20)
அவரது கற்பனையை கொடுத்ததற்கு வேறொரு காரணம் உள்ளது.
... பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறது.
ரோமர் 3:20.




106

(வசனம்: ரோமர் 7:7)
பவுல் கூறுகிறார். பாவம் இன்னதென்று நியாயப்பிரமாணத்தினால் நான் அறிந்தேனேயன்றி மற்றபடி அறியவில்லை.




107

இச்சியாதிருப்பாயாக என்று நியாயப்பிரமாணம் சொல்லாதிருந்தால், இச்சை பாவம் என்று நான் அறியாமலிப்பேனே. ரோமர் 7:7.



108

தன் பிரஜைகளால், அவளின் அழகு அழியாதது என்று கருதப்பட்ட ஒரு இளவரசியை பற்றிய ஒரு கதை சொல்லப்படுகிறது.  இப்படியிருக்க, ஒரு நாள்  ஒரு வியாபாரி வந்து அவனிடம் ஒரு கண்ணாடியை விற்றார். அவள் அந்தக் கண்ணாடியில் தன் முகத்தை பார்த்தபோது, அது பயங்கரமாக இருந்ததால் அவள் அந்தக் கண்ணாடியை சுக்கு நூறாக உடைத்துப்போட்டாள்.



109

தேவனுடைய கற்பனை கண்ணாடி போன்றது.  அந்த இளவரசிபோல், நாம் கண்ணாடியில் நம்மை பார்க்கும்போது, அந்தக்காட்சி, நாம் விரும்பக்கூடியதாக இருப்பதில்லை.


110

ஆனால் கற்பனையை அழித்துவிடுவதோ, அல்லது வேண்டாம் என்று தள்ளிவிடுவதோ நம்முடைய நிலையை மாற்றிவிடாது.


111

கற்பனை நம் பாவத்தை சுட்டிக்காட்டும். அவரின் கற்பனையில் சொல்லி உள்ளபடி நடந்தால், அது நம்மை, மகிழ்ச்சியான குற்றமற்ற வாழ்வுக்கு நடத்திச் செல்லும்.


112

கற்பனை, நமக்கு பாவத்தை மேற்கொள்ளும் வல்லமையையோ அல்லது குற்ற உணர்விலிருந்தோ மீளவோ உதவாது. வரும் நாட்களில் நாம் செய்யும் அநேக நல்லகாரியங்கள், கடந்த நாளில் நாம் செய்த தவறுகளை போக்கிவிடாது. அப்படியானால், எவ்விதம் பாவமன்னிப்பு பெறுவது? கற்பனையை மீறியதால் வந்த மரணத்திலிருந்து தப்புவதுத எப்படி?


113

ஏதேன் தோட்டத்தின் வாசலிலே தானே, தேவன் கீழ்படியாமை மரணத்தை கொண்டு வந்தது என்பதை விளங்கச் செய்தார். கீழ்படியாமையோ, அல்லது அறியாமல் செய்த காரியமோ, ஒரு ஆட்டுக்குட்டி அடிக்கப்பட்டு, பாவி தன் நம்பிக்கையை தேவனின் இரட்சிக்கும் திட்டத்தின்மேல் நம்பிக்கை வைக்க, அவனுக்குக்காட்டப்பட்டது.


114

மீறப்பட்ட கற்பனைக்கு ஈடாக எப்படி மனுஷகுமாரன் மரிக்க வேண்டி இருக்கிறது என்பதை ஆதாம் உணர்ந்து கொள்ள தேவன் வகுத்த வழி.
கிறிஸ்து, தேவ ஆட்டுக்குட்டி, மனிதனின் தண்டனையையும், மரணத்தையும் போக்கும்.


115

கற்பனை மனிதனை பாவத்திலிருந்து மீட்க முடியாது.

10  நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?



116

(வசனம் கலாத்தியர் 3:21)
அப்போஸ்தலர் பவுல் சொன்னார். உயிரைக் கொடுக்கத்தக்க நியாயப் பிரமாணம் அருளப்பட்டிருந்ததானால்



117

நீதியானது நியாயப் பிரமாணத்தினாலே உண்டாயிருக்குமே.
கலாத்தியர் 3:21.
பாவமன்னிப்பையும், இரட்சிப்பையும் கொண்டு வருவது கற்பனை அல்ல. தேவனின் கிருபை தான் அவைகளை கொண்டு வருகிறது. கிறிஸ்துவின் தியாக பலியால் மாத்திரமே நித்திய ஜீவனை நாம் அடைகிறோம்.



118

(வசனம் : ரோமர் 6:23)
பாவத்தின் சம்பளம் மரணம், தேவனுடைய கிருபை வரமோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினால் உண்டான நித்திய ஜீவன்.
ரோமர் 6:23.
கற்பனைக்கு கீழ்படிவதால் நாம் இரட்சிப்பை பெற முடியாது.



119

(வசனம் : எபேசியர் 2:8, 9)
கிருபையினாலே விசுவாசத்தைக் கொண்டு இரட்சிக்கப்பட்டீர்கள். இது உங்களால் உண்டானது அல்ல. இது தேவனுடைய ஈவு.




120

ஒருவரும் பெருமை பாராட்டாதபடிக்கு இது கிரியைகளினால் உண்டானதல்ல. எபேசியர் 2:8,9.


121

நாம் கிருபையினாலே இரட்சிக்கப்படுவதினால் கீழ்ப்படியாத வாழ்க்கையை வாழலாமா? ஒரு போதும் இல்லை.



122

(வசனம் : ரோமர் 6:1, 2)
பவுல் சொல்லும் போது, ஆகையால் என்ன சொல்லுவோம்? கிருபை பெருகும்படிக்கும் பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமா?

# 10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?



123

கூடாதே. பாவத்துக்கு மரித்த நாம் இனி அதிலே எப்படி பிழைப்போம். ரோமர் 6:1, 2. பாவத்திலிருந்து மீட்டெடுக்கப்பட விரும்புகின்றவர்களும், தேவனுடைய இராஜ்யத்தில் அங்கமாக விரும்புகின்றவர்களுக்கும் இரட்சிப்பு ஈவாக கொடுக்கப்படுகின்றது.




124

சிலர், கற்பனையானது ஒழிந்துவிட்டது என்று கூறுகின்றனர். சற்று சிந்தித்து பாருங்கள்.




125

கற்பனை இல்லையென்றால், பாவமும் இல்லை. ஏனெனில், நியாயப் பிரமாணத்தை மீறுவதே பாபம்.




126

கற்பனை இல்லையெனில் நமக்கு கிருபை அவசியமில்லை. நாம் பிரமாணத்தை மீறும் போது தேவன் நமக்குக் காட்டும் கிருபையே தேவனின் அன்பான இரக்கம்.



127

கிருபை அவசியமில்லை. ஆதலால் சிலுவையை நாம் அவமதிக்கிறோம்.



128

சிலுவை தேவையில்லை என்போமெனில், இரட்சகரும், நமக்கு தேவயைில்லை. நமக்கு கற்பனை அவசியமில்லையெனில், பாவம், கிருபை, சிலுவை ஏன் இரட்சகரும் கூட தேவையில்லை. நாம் பிரமாணத்தை மீறினபடியினால் அவர் கல்வாரி சிலுவையில் மரித்து, நம்மை கிருபையினாலே பாவமன்னிப்பு வழங்கியிருக்கிறார். கிருபை நியாயப்பிரமாணத்தை ஒழித்து போடவில்லை. தேவனுடைய கிருபையினாலே நாம் தேவனுடைய கற்பனையை கடைபிடிக்க விரும்புகின்றோம்.

# 10 நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?


129

ஒரு சிறைக்கைதி மரணத்திற்கு காத்திருக்கும் போது,


130

மன்னிப்பு பெற்று விடுதலை பெற்றால், அவர் சட்டத்தை கைக்கொள்ள வேண்டிய அவசியமில்லையா?


131

அந்த சிறைக்கைதி மன்னிப்பு பெற்றபடியால் முன்பைவிட நாட்டின் சட்டத்தை கைக்கொள்ள கடமைப்பட்டிருக்கின்றான்.



132

மிக முக்கியமான சாட்சியம் என்னவென்றால், பிரமாணம் பாவத்தை சுட்டிக் காண்பிப்பதோடு மட்டுமல்லாமல், இரட்சகரிடத்தில் நம்மை வழி நடத்தும். கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது, அவர் நம்மை மன்னித்து, பிரமாணங்களை கைக்கொள்ள பெலன் கொடுக்கிறார். அவர் வாக்குரைத்தது என்னவெனில்,



133

(வசனம் எபிரேயர் 8:10)
... என்னுடைய பிரமாணங்களை அவர்களுடைய மனதிலே வைத்து, அவர்களுடைய இருதயங்களில் அவைகளை எழுதுவேன். ... எபிரேயர் 8:10.


134

நீங்கள் அன்பு கொண்டிருக்கின்ற காரியங்களை செய்வது எளிதல்லவா? அதைத்தான் ஆண்டவர் அவரை பின்பற்றுபவர்களுக்கு வாக்களிக்கின்றார். அவர் பிரமாணத்தை நம் இருதயத்தில் எழுதும் போது, அந்த அன்பரையே பின்பற்றுவார்கள்.



135

(வீடியோ பிரிவு 8) இந்த வழியின் மூலம்தான் மனிதன் பிரமாணத்திற்கு கீழ்படிந்து கைக்கொள்ள முடியும். பிதாவின் மீது கிறிஸ்து அன்பு கொண்டிருந்தபடியினால் தான் பிரமாணங்களை கைக்கொள்ள முடிந்தது.

# 10  நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?



136

(வசனம் : யோவான் 15:10)
இயேசு சொன்னார்.

நான் என் பிதாவின் கற்பனைகளைக் கைக்கொண்டு அவருடைய அன்பினாலே நிலைத்திருக்கிறது போல.
யோவான் 15:10.



137

(வசனம் யோவான் 14:15)
அவருடைய கற்பனைகளை கைக்கொள்வதற்கு அவர்மீது நாம் அன்பு செலுத்த இயேசு அழைக்கிறார்.
நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளை கைக்கொள்ளுங்கள்.
யோவான் 14:15.



138

தேவனுடைய சித்தத்திற்கு கீழ்படிந்து நடக்கின்ற மிகப்பெரிய வெளிப்பாடு, கெத்சமனே தோட்டத்தில் குளிரான அந்த இரவிலே இயேசுவின் இரத்தம் வியர்வையாக வெளிப்பட்டு, சிந்திய போது நிறைவேறியது.



139

(வசனம் மத்தேயு 26:39)
என் பிதாவே, இந்த பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும். ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல. உம்முடைய சித்தப்படியே ஆகக்கடவது.
மத்தேயு 26:39
அந்த வேளையில் மனித சமுதாயத்தின் தலைவிதி தீர்மான பள்ளத்தாக்கில் இருந்தது. இக்குற்ற உலகம் கிறிஸ்துவினால் மீட்கப்படுமா? கைவிடப்படுமா என்ற பெரிய சூழ்நிலை இருந்தது.


140

இந்த வாலிப கலிலேயன், மனித சமுதாயத்தின் மேல் அளவு கடந்து அன்பு வைத்து சிலுவையில் மரித்தார். அவர் நெற்றியில் சிந்தின இரத்தத்தை துடைத்துவிட்டு, பாவம் செய்தவர்கள் அதற்குரிய தண்டனையை அனுபவிக்கட்டும் என்று கூறியிருக்கலாம்.

10  நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?


141


அவர் நமக்காக சிலுவையை சுமந்தார். அவர் எடுத்த தீர்மானத்திலிருந்து, பின் வாங்கவில்லை. அவர் தம்முடைய இரத்தத்தை சிந்தி நம் பாவத்தை தீர்தார். நாம் நித்திய ஜீவன் அடைய அவர் நம்முடைய ஸ்தானத்தில் மரித்தார்.


142


இயேசு நம்முடைய பாவத்துக்கு பரிகாரத்தை தேடினபடியால் நாம் பாவ மன்னிப்பு பெற்று அவருடைய தியாகத்தின் மூலம் நாம் மீட்டெடுக்கப்படுகின்றோம்.


143

அந்த கல்வாரி மலை மீது தொங்கின அந்த பழைய சிலுவை நமக்கு நித்திய அடையாளமாய் இருந்து, பிரமாணத்தை மீறின அந்த மனிதனுக்கு இரக்கத்தை காண்பித்தது.



144

இந்த பிரமாணம் அழிக்கப்பட்டிருந்தாலோ அல்லது மாற்றப்பட்டிருந்தாலோ கிறிஸ்து மரிக்க வேண்டிய அவசியமில்லை. கல்வாரி தேவையற்றதாயிருந்திருக்கும்.



145

ஆனால் ஆண்டவர் குற்றம் சாட்டப்பட்ட மனிதனுடைய பாவத்தை அசட்டை செய்யவில்லை.



146

அவர் தேவனுடைய நியாயப் பிரமாணத்தை மாற்ற முடியவில்லை.


147

ஆகவே பாவம் செய்த மனிதனுக்கு இரட்சகர் தேவை. தேவன் நமக்கு அவருடைய சொந்த குமாரனை கொடுத்து நமக்காக மரிக்கச் செய்தார்.



148

(வசனம் யோவான் 3:16)
தேவன் தன்னுடைய குமாரனை தந்தருளி இவ்வளவாய் உலகத்தில் அன்புக்கூர்ந்தார்.

# 10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?



149

விசுவாசிக்கிறவன் கெட்டுப்போகாமல் நித்திய ஜீவனை அடையும்படிக்கு.
யோவான் 3:16.


150

வெளிப்படுத்துதல் இயேசுவை காண்பதற்கு ஆயத்தமாயிருக்கின்ற பிள்ளைகளையும், அவருடைய ராஜ்யத்தில் அங்கமாகும் பிள்ளைகளைக் குறித்தும் பேசுகின்றது.



151

(வெளிப்படுத்துதல் 14:12)
தேவன் இவர்களை குறித்து பேசுகிறார்.
தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்கிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்.
வெளிப்படுத்துதல் 14:12.



152

வெளிப்படுத்தல் 14:14ல் தேவன் சொல்கிறார்,
பின்பு நான் பார்த்த போது இதோ வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின் மேல்




153

தமது சிரசின் மேல் பொற்கிரீடத்தையும் தமது கையிலே சுருக்குள்ள அரிவாளை உடைய ஒருவர் உட்கார்ந்திருக்கிறதை கண்டேன்.


154

இப்பெரிய தீர்க்கதரிசனத்திலே யோவானுக்கு தேவன் சபையின் சரித்திரத்தை படித்து காண்பித்தார்.
கடைசியில் வாழும் மீதமான மக்களின் சபையையும் காண்பித்தார்.



155

(வசனம் வெளிப்படுத்தல் 12:17)
அப்பொழுது வலுசர்ப்பமானது, ஸ்திரியின் மேல் கோபம் கொண்டு, அவருடைய சந்ததியான மற்றவர்களோடே யுத்தம் பண்ணப் போயிற்று.

10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?

# 10 நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?



156

தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்ளுகிறவர்களும், இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய. வெளிப்படுத்தல் 12:17.


157

வேதத்தின் கடைசி புத்தகத்தில் இவ்வாறு கூறப்பட்டிருக்கின்றது.


158

தேவனுடைய பிள்ளைகள் சிருஷ்டிகரை, அவர்களுடைய மீட்பரை நேசித்து அவருடைய சித்தத்தை அறிய முற்படுவார்கள்.
தேவனுடைய அன்பை வெளிப்படுத்தி அவருடைய சித்தத்தை வெளிப்படுத்துவார்கள்.
அவருடைய சித்தம் அவருடைய 10 பிரமாணத்தில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. கீழ்படிதல் மூலம் அவர்களை பாவத்திலிருந்து மீட்டெடுத்த ஆண்டவருக்கு நன்றி கூறினர். அவருடைய காயப்பட்ட கரம் அன்புடன் வா என்று அழைக்கின்றது. அவருக்காக வாழ்வதற்கு நமக்கு பெலம் கொடுக்கின்றார்.



159

(வசனம். வெளிப்படுத்தல் 22:17) அவர் பாவத்தை கழுவ விரும்புகின்றார். அவருடைய இரக்கமுள்ள சத்தத்தை கேளுங்கள். தாகமாயிருக்கிறவன் வரக்கடவன், விருப்பமுள்ளவன் ஜீவதண்ணீரை இலவசமாய் வாங்கிக் கொள்ளக்கடவன்.
வெளிப்படுத்தல் 22:17.


160

ஒரு போதகர் புறநகர் பகுதியில் இருந்த ஒரு நகரத்தின் இல்லத்திற்கு சென்றார். ஒரு பெண்மணி கதவை திறந்து, ஐயா எனக்கு பைபிளோ, கிறிஸ்தவ மதமோ பிடிக்காது. ஆனால் என் கணவருக்கு மிகவும் பிடிக்கும். ஆகையால் பின்னர் வந்து பேசுங்கள் என்றார். பிரசங்கியர் சனிக்கிழமை மாலை அந்த இல்லத்திற்கு சென்றார். அது ஒரு விடுமுறை நாளானாபடியால் அவன் ஹோட்டலுக்கு சென்று, சீட்டாட தயாரானான். ஆனால் போதகர் அவரோடு பேச்சை ஆரம்பித்தவுடன், எனக்கு ஒரு வேதாகமம் உண்டு. அதைப்பாருங்கள் என்றார். என்னுடைய தாயார் ஒரு அழகாக பெட்டியில் வைத்து கொடுத்தது என்றான். மனைவியை அழைத்து வேதாகமம் எங்கே என்றார். அநேகநேரம் செலவழித்து அவருடைய ஜெப புத்தகத்தை கண்டனர். வேதம் கண்டு பிடிக்கப்படவே இல்லை.


161

குடிபழக்கம் ஒரு பிரச்சினையாக அவருக்கு இருந்தது. அத்துடன் சூதாட்டம், புகைபிடித்தல் இவையும் அவரை அழித்துக் கொண்டிருந்தது. இத்துடன் கணவன் மனைவி உறவும் சரியில்லை. அனைவி அவள் பொருட்களை எடுத்து வீட்டை விட்டு வெளியறே எத்தனித்துக் கொண்டிருந்தாள். ஒருவரையொருவர் விவாகரத்தும் செய்ய விரும்பினர். இதற்கிடையில் போதகருடைய வருகை அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு புதிய எழுச்சியை ஏற்படுத்தியது. வேதபாடத்தை வாரந்தோறும் படிக்க ஆரம்பித்தனர்.


162

ஒவ்வொரு வாரமும் வேதத்தில் தேவனை பற்றியும், சிலுவையைப் பற்றியும் பேச பேச, ஆவியானவர் அந்த இல்லத்தை ஆசீர்வதித்தார். ஒரு நாள் மாலை அந்த போதகரை பார்த்து ஐயா, இவ்விரவு சற்று தாமதித்து செல்லுங்கள். நாம் மனம் விட்டுபேச வேண்டும் என்றான்.

10 □ நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?

## 10  நல்லது அல்லது கெட்டது என்பது இற்று உண்டா?


163

இருவரும் தனியாக உட்கார்ந்து, போதகரே, நான் ஒரு கிறிஸ்தவ இல்லத்தில் பிறந்தவன். என் வாலிப வயதில் வழி தவறி கெட்டகுமாரனைப் போல் வாழ்ந்து சபையை, வேதத்தை, ஆண்டவரை மறந்தேன் என்று வேதனையுடன் கூறினான். போதகரே நான் குடித்து பல நாட்கள் ஆகிவிட்டன. ஆண்டவருடைய நாமத்தை வீணிலே வழங்கவில்லை. சிகரட் எனக்கு விருப்பமில்லாமல் போகிறது. என் மனைவி என்னோடு சேர்ந்து வாழ தீர்மானித்திருக்கிறாள். நேற்று காலை என் மனைவி என்மீது அன்பு பாராட்டி, வாசற்படி வரை வந்து முத்தமிட்டு அனுப்பினாள். ஆம், இது எனக்கு ஆச்சரியமாயிருக்கிறது. என்னில் என்ன நடக்கிறது? போதகரே? இவையெல்லாம் அந்த திங்கட்கிழமை வேதாகமம் தானா? என்று ஆர்வத்துடன் கேட்டான்.


164

பிரசங்கியார், நான் ஒன்றும் செய்வில்லை. ஆனால், நான் விசுவாசிக்கும் இந்த வேத புத்தகம் பேசினது. 2 கொரி 5:17ல் ஒருவன் கிறிஸ்துவுக்கு உள்ளிருந்தால், அவன் புது சிருஷ்டியாயிருக்கிறான். பழையவை யாவும் ஒழிந்துபோயின எல்லாம் புதியதாயின. இப்போது அந்த ஜேக் என்ற மனிதன் ஆம் நான் இப்போது புதிய ஜேக் என்று கூறி சந்தோஷப்பட்டான். ஆம், நண்பர்களே, கிறிஸ்து தேவனுடைய குமாரன். அவர் ஒருவருக்கே மனிதர்களை மாற்றுகின்ற சக்தி உண்டு. உங்களுடைய வாழ்க்கையையும் மாற்ற இயேசு விரும்புகிறார். அவருடைய கிருபையினால் கற்பனையை கடைபிடிக்க உதவி செய்கிறார். நீங்கள் பெலவீனர்களாக, பாவிகளாக இருக்கலாம். ஆனால் கிறிஸ்து பெரிய வல்லமையுள்ளவர். அவர் நம் பாவங்களை மன்னிப்பார். புதிய வாழ்வை வாழ உதவி செய்வார். இயேசு உங்களை அழைக்கிறார்? அமைதியாக முழங்காலில் நின்று ஆம் ஆண்டவரே நான் உம்மிடம் சேர விரும்புகிறேன் என்று கூற விரும்புகின்றீர்களா? உங்களை சுற்றியுள்ள மக்களைப்பற்றி கவலைப்படாதிருங்கள். இயேசு உங்களை அழைக்கிறார். ஆம் ஆண்டவரே, நான் வருகிறேன் என்று கூறுகின்றீர்களா? ஜெபிப்போம்.

# 11 □ நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



1

உன்னுடைய வாழ்க்கையை திருப்தி செய்வது எப்படி.


2

தாமஸ் ஹஸ்லி என்ற உயிரியல் வல்லுனரை குறித்த கதை ஒன்று உண்டு. ஒரு நாள் விரிவுரையாற்றுவதற்காக ஒரு பட்டணத்திற்கு தாமதமாக வந்தார். அந்த நாட்களிலுள்ள குதிரை வண்டிக்குள் குதித்து ஏறினார். மிக வேகமாக வண்டியை ஓட்ட அந்த ஓட்டுனரை சத்தமிட்டார்.


3

வண்டி ஓட்டுனரோ கீழ்படிந்து தனது சாட்டையினால் அடித்து வேகமாக தெருவில் ஓட்டினான். அது ஒரு குறுகலான தெரு. ஒரு நிடம் அவரது இருக்கையில் அமர்ந்த ஹஸ்லி மறுபடியுமாக எழும்பி உட்கார்ந்து அவர் ஓட்டுனரை கூப்பிட்டு, கவனி. கவனி, நான் எங்கே போக வேண்டுமென்பது உனக்குத் தெரியுமா? அந்த ஓட்டுனர் எனக்கு தெரியாது என்று சொன்னான். ஆனால் நான் எந்த அளவுக்கு வேகமாக ஓட்டவேண்டுமோ அந்த அளவுக்க வேகமாக ஓட்டுகிறேன் என்றார்.


4

பயங்கரமான மக்கள் கூட்டம் நகர்ந்து கொண்டேயிருக்கிறது. அநேக காரியங்கள் அவர்கள் வாழ்க்கையில் நடந்துக் கொண்டிருக்கிறது. அவர்கள் எப்பொழுதும் அதிவேகமாக எங்கேயோ போய் கொண்டிருக்கிறார்கள். ஆனால் உண்மை என்னவெனில் அநேகருக்கு அவர்கள் எங்கு செல்கிறார்கள் என்பது தெரியாது. அவர்களது வாழ்க்கை எங்குபோய்க் கொண்டிருக்கிறது என்பது தெரியாது.


5

இந்த காரணத்திற்காகத்தான் வேதத்தின் கடைசி புஸ்தகமான வெளிப்படுத்தலில் தேவன் அவரது கடைசி அழைப்பைக் கொடுக்கிறார். அதிகாரம் 14 வசனம் 7ல் இயேசுவின் வருகைக்காக காத்திருக்கும் உலகத்திற்கு அப்போஸ்தலனாகிய யோவான் இந்த வார்த்தைகளில் அழைப்பு கொடுக்கிறான்.

# 11 நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



6

(வசனம்: வெளிப்படுத்தல் 14:7)
... தேவனுக்கு பயந்து அவரை மகிமைப்படுத்துங்கள். அவர் நியாயத் தீர்ப்பு கொடுக்கும் வேளை வந்தது.



7

வானத்தையும், பூமியையும், சமுத்திரத்தையும், நீரூற்றுகளையும் உண்டாக்கினவரையே தொழுதுக் கொள்ளுங்கள்.
வெளிப்படுத்தல் 14:7.
உங்களிடத்தில் ஒரு பட்டணத்தின் வரைபடமிருந்து ஒரு இடத்தை தேடுவதற்காக அதை பயன்படுத்த முயற்சிக்கும்போது அது தவறான வரைபடமாகயிருந்தால் பெரிய வித்தியாசத்தை அது உண்டுபண்ணும்.


8

யாரை தொழுது கொள்வது?
வானத்தையும், பூமியையும படைத்தவரையே தொழுதுக் கொள்ளுங்கள். எல்லாவற்றையும் படைத்தவரை தொழுதுக் கொள்ளுங்கள். நாம் நின்று எங்கே செல்கிறோம் என்பதை உணரும்படி தேவன் அழைக்கிறார். நாம் தேவனால் படைக்கப்பட்டோம் என்பதை புரியும்போது நாம் ஏன் இங்கு இருக்கிறோம்? நாம் எங்கே போய்க்கொண்டிருக்கிறோம் என்பதை உணர உதவி செய்கிறது.


9

ஆனால் இன்றைக்கு மக்கள் அண்டசராசரத்தையும் உலகத்தையும் இந்த உலகத்தில் உள்ள எல்லாவற்றையும் எல்லாரையும் தேவன் படைத்தார் என்பதை. மறந்துவிட்டார்கள்.
சிலர் வேதாகமத்தை முற்றிலுமாக நம்பலாம் என்றும் சிலர் நம்ப முடியாது என்றும் சொல்லுகிறார்கள். யார் சரி?

# 11  நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.





10

(வீடியோ பிரிவு 6)
இன்று லட்சக்கணக்கானோர் அவர்கள் தாமாகவே தோன்றினதாக நினைக்கிறார்கள். கோடிக்கணக்கான வருஷங்களுக்கு முன்பே நாம் ஒரு செல்லிலிருந்து வளர்ந்து ஒரு கடல் பிராணியாகவும் அதிலிருந்து நிலவாழ் பிராணியாகவும் பின்னர் அதிலிருந்து மனிதனாக வளர்ந்திருக்கிறோம். எல்லாம் எதேச்ச கரமாக நடைபெற்றது. அதை புரிந்துக் கொள்ள முடியாது என்று சொல்லுகிறார்கள்.


11

ஆனால் தேவன் நம்மை படைத்தவர் என்பதற்கு ஒரு அடையாளத்தை நமக்கு கொடுத்திருக்கிறார் தெரியுமா? தேவன் நம்மையும் அண்டசராசரத்தையும் சலகத்தையும் உருவாக்கினவர் என்பதை ஒவ்வொரு வாரமும் நினைப்பூட்ட ஒரு அடையாளத்தை கொடுத்திருக்கிறார் தெரியுமா?
வேதாகமம் உண்மையென்றால், உங்கள் நித்தியம் நீங்கள் அதை நம்புவதையும் நம்பாததையும் பொறுத்தே அமைகிறது. வேதாகமத்தைக் குறித்து என்ன நம்புகிறீர்கள் என்பது தேவன் மேல் உள்ள நம்பிக்கையின் வித்தியாசத்தை காட்டுகிறது.



12

உண்மையாகவே சிருஷ்டிப்பின் வாரக் கடைசியில், வாரந்தோறும் நினைப்பூட்டும் இந்த காரியத்தை தந்தார். ஆனால் கொஞ்சம் குறைய உலகம் முழுவதும் இந்த ஞாபகச் சின்னத்தை மறந்துவிட்டது.



13

(வீடியோ பிரிவு 15)
அந்த ஞாபக சின்னம் இல்லாமையால் அநேகர் தேவன் இந்த உலகத்தை சிருஷ்டித்தார் என்பதை மறந்துவிட்டார்கள். எனவே தான் நமது காலததில் சந்திரனுக்கு மனிதர்களை, உலகம் எப்படி ஆரம்பமானது என்று பார்க்க அனுப்பினார்கள்.

# 11 நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.


14

தொலைநோக்கு கருவியை பயன்படுத்தி ஆகாயத்தை தூரத்தில் உற்றுநோக்கி உலகம் படைக்கப்பட்டதற்கு தடையங்கள் ஏதாவது கிடைக்குமா என்று பார்க்கிறார்கள். எனவே கர்த்தருடைய வசனமாகிய பரிசுத்த வேதாகமத்தை ஆராய்ந்துபார்த்து அது உண்மையுள்ளதா? இல்லையா? அது நம்பதகுந்ததா? இல்லையா? என்று பார்க்க வேண்டும்.


15

ஏன் இந்த எல்லா முயற்சிகளும் செலவுகளும் ஆர்வமும்?
ஏனெனில் நம்முடைய இந்த பெரிய கேள்விக்கு பதில் தேவைப்படுகிறது. இந்த அண்டசராசரத்தில் நாம் மட்டும் தனிமையாக இருக்கிறோமா? நாம் இங்கு எப்படி வந்தோம்? ஏன் இங்கு இருக்கிறோம்? எங்கே போகிறோம்? பதில்கள் நமக்கு முன்பாகயிருந்தபோதும் தேடுதல் தொடர்ந்து நடைபெறுகிறது. ஆனால் நாம் எங்கிருந்து வந்தோம் என்பதை இந்த உலகம் நினைக்க தவறிவிட்டது.



16

இதை மற்நத உலகத்திற்கு நினை, நான் உன் சிருஷ்டிகர் என்று தேவன் சொல்கிறார். நீ நினைப்பதற்கு உதவ நான் ஒரு அடையாளத்தை கொடுத்திருக்கிறேன் என்றார்.




17

(வீடியோ பிரிவ 5)
மனிதன் தானாக தோன்றினான் என்று பறைசாற்றுகின்ற உலகத்திற்கு நீதானாக தோன்றவில்லை. நான் உன்னை படைத்தேன் என்று சொல்லுகிறார்.



18

ஆனால் தேவன் நம்மை படைத்தார் என்பதற்கு அடையாளமாகக் கொடுத்த காரியம் என்ன? என்று சிலர் கேட்கலாம், சிருஷ்டிப்பின் வாரத்தின் ஒவ்வொரு நாளிலும் தேவன் எவைகளைப் படைத்தார் என்பதை சற்று நினைவு கூறுங்கள்.



19

(வசனம்: சங்கீதம் 33:8, 9)
படைப்பு பயங்கரமானது. அதை அவர் எப்படி செய்தார்? சீக்கிரமாக அதை எப்படி செய்தார்? பூமியெல்லாம் கர்த்தருக்கு பயப்படுவதாக, உலகத்திலுள்ள, குடிகளெல்லாம் அவருக்கு அஞ்சியிருப்பதாக.




20

அவர் சொல்ல ஆகும் அவர் கட்டளையிட நிற்கும். சங்கீதம் 33:8, 9.



21

அது எப்படி சம்பவித்தது என்பதை நாம் புரிந்துகொள்ள முடியாது. ஆனால் தேவன் அவைகளை அவரது வார்த்தையினால் கொண்டு வந்தார். அந்த வார்த்தை பேசப்பட்ட வார்த்தையாக இருந்தாலும், எழுதப்பட்ட வார்த்தையாக இருந்தாலும், அது கலை நுணுக்கமும் வல்லமை யுள்ளதாகவுமுள்ளது.
நான் தேவன் நம்முடைய சித்தத்தை நம்மோடு தொடர்புக் கொள்ளவே இந்த வேதபுஸ்தகத்தை நமக்குக் கொடுத்தார் என்பதை அறிக்கை செய்வதின் மூலமாக இந்த ஒப்பந்தத்தை விவரிக்க முடி யும்.



22

(வசனம்: ஆதியாகமம் 2:1)
இவ்விதமாக வானமும், பூமியும் அவைகளின் சர்வ சேனைகளும் உண்டாக்கப்பட்டுத் தீர்ந்தன.
ஆதியாகமம் 2:1.


23

சிருஷ்டிகர் ஆறு நாளைக்குள்ளே உலகத்தை உருவாக்கி, மரம், செடி, மலர்கள், நீரோடைகளினால் அதை உடுத்துவித்தார்.


24

அவர் சூரிய பிரகசாத்தை யும் சூரிய அஸ்தனத்தை யும் மற்றும் இரவில் அனுபவிக்க சந்திரனையம் கொண்டு வந்தார்.

11  நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.

# 11 ⎕ நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.


25

எல்லாவற்றிற்கும் மேலாக இரண்டு பூரண மனிதர்களை படைத்தார். என்ன ஒரு மகிமை. சிருஷ்டித்தவரின் சாயலில் அவர்கள் படைக்கப்பட்டார்கள். பூமியையும் அவைகளில் உள்ள எல்லாவற்றையும் ஆளும்படியாக சிருஷ்டிக்கப்பட்டார்கள்.



26

(வசனம்: ஆதியாகமம் 1:27)
தேவன் தம்முடைய சாயலாக மனிதனை சிருஷ்டித்தார். அவனை தேவ சாயலாகவே சிருஷ்டித்தார்.
ஆதியாகமம் 1:27.



27

இன்னும் தேவன் எல்லாவற்றையும் செய்து முடிக்கவில்லை. அவர் செய்ய வேண்டிய இன்னொரு காரியமிருந்து. அடுத்த நாளில் அதாவது ஏழாம் நாளில் என்ன நடந்தது. என்பதை வேதம் சொல்வதை கவனியுங்கள்.




28

(வசனம் ஆதியாகமம் 2:2-4) தேவனாகிய கர்த்தர் பூமியையும் வானத்தையும் உண்டாக்கின நாளிலே, வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு இவைகளே...




29

தாம் உண்டாக்கி கிரியையையெல்லாம் முடித்த பின்பு, ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்.



30

தேவன் தாம் சிருஷ்டித்து உண்டுபண்ணின தம்முடைய கிரியையையெல்லாம் முடித்தபின்பு அதிலே ஓய்ந்திருந்தப்படியால், தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து அதை பரிசுத்தமாக்கினார்.




31

தேவனாகிய கர்த்தர் பூமியையும் வானத்தையும் உண்டாக்கின நாளிலே வானமும் பூமியும் சிருஷ்டிக்கப்பட்ட வரலாறு இவைகளே...
ஆதியாகமம் 2:2-4.



32

தேவன் ஒருவர்தான் ஒரு காரியத்தை பரிசுத்தமாக்க முடியும். பரிசுத்த வேதாகமம் சொல்லுகிறது. தேவன் ஏழாம் நாளை பரிசுத்தமாக்கினார் என்று.



33

ஒரு காரியத்தை பரிசுத்தப்படுத்துவது என்பது அந்த காரியத்தை புனிதமான உபயோகத்திற்காக பிரத்தியேகப்படுத்துவது என்பதாகும். தேவன் ஓய்வு நாளை மற்ற நாட்களிலிருந்து பிரத்தியேகப்படுத்தினார். அதுபரிசுத்தம்-முற்றிலும் தேவனக்குரிய நாள். ஒரு நாள் அப்படி என்ன பெரிய வித்தியாசத்தை உண்டுபணணபோகிறது? என்ற சிலர் ஆச்சரியப்படுகிறார்கள். ஒரு வேளை இந்த எடுத்துக்காட்டு அவர்களுக்கு உதவும்.


34

திருமணத்தில் ஒரு பெண் ஒரு புருஷனுக்கு பரிசுத்த மனைவியாக பிரத்தியேகப்படுத்தப்படுகிறாள். அது ஒரு வேளை உங்கள் திருமண நாளாக வைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் உற்சாகமாயிருக்கிறீர்கள். ஏனெனில், இந்த நாளுக்காக நீங்கள் எதிர்பார்த்துக்கொண்டு இருந்தீர்கள்.


35

உங்களுக்க மனைவியாகவிருக்கப் போகிறவளுக்கு ஆறு சகோதரிகள் இருக்கிறார்கள் என்று வைத்துக் கொள்ளுவோம். திருமண சடங்கின்போது ஒரு பெண் மட்டும் ஒருவனுக்கு இணைக்கப்படுகிறாள். அவள் பிரத்தியேகமானவள். இனி அவள் ஒரு போது ம் 7 பேரில் ஒருத்தி அல்ல. அவர் பரிசுத்தமானவள். திருமணத்தின் போது தன்னுடைய கணவனுக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டவள்.


36

திருமணத்திற்கு பிறகு உங்கள் மனைவியின் சகோதரிகளில் ஒருத்தி வந்து, அது என்ன வித்தியாசத்தை உண்டு பண்ணும்? ஏழு பேரில் ஒருத்தியாக இருந்தால் போதும். ஏழு பேரில் ஒரு சகோதரி மற்றவர்களைப் போல நல்ல குணமுடையவள் என்று சொன்னால் உங்கள் பதில் என்னவாகயிருக்கும்? அது வித்தியாசம் உடையதாக இருக்குமா?

11 □ நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.

# 11  நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.


37

அது மணவாட்டிக்கு வித்தியாசத்தை உண்டுபண்ணுமா? அம்மாவைக் குறித்து எப்படி ஒப்பிடுவோம்?
ஆம், நிச்சயமாக, வித்தியாசத்தை உண்டுபண்ணும். எனது மணவாட்டியே, தெரிந்துக்கொள்ளப்பட்டவளே. பரிசுத்தமானவளே, பிரிந்து எடுக்கப்பட்டவளே. எனக்குரியவளே என்று ஒரு கணவனாக நீ சொல்லுவாய்.
எனவே 24 மணி நேரமடங்கிய 7-வது நாளை தெரிந்துக்கொண்டு தேவன் அதைபரிசுத்தமாக்கினார். அதை பிரித்தெடுத்து அதை தமக்குச் சொந்தமாக்கினார். ஓய்வு நாள் ஆசீர்வதிக்கப்பட்ட பரிசுத்தமான நாள், தேவ வார்த்தையின்படி அது ஏதோ ஒரு நாள் அல்ல ஆனால் அது ஏழாம் நாள்.



38

(வசனம்: மாற்கு 2:27, 28)
கிறிஸ்து சொன்னது இங்கேயிருக்கிறது. மனுஷன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை. ஓய்வு நாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டது



39

ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராய் இருக்கிறார்.
மாற்கு 2:27, 28.


40

நாம் இந்த உலகத்திலே தானாக தோன்றவில்லை என்பதை ஞாகப்படுத்தவே தேவன் ஓய்வுநாளை கட்டளையிட்டார். தேவன் ஆறு நாட்களில் அவனையும் அதிசயமான உலகத்தின் மீதமுள்ளவைகளையும் படைத்தார்.
ஒவ்வொரு வாரமும் மனிதனும் தேவனும் தங்கள் அன்பை புதுப்பிக்கவும், மனிதன் தேவனை தொழுதுக்கொள்ளவும் நாளாகவும் இருந்தது. தேவன் ஆறு நாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் படைத்து, ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் என்று மனிதன் நினைக்க இந்த நாளை கட்டளையிட்டார்.


41

தேவன் அவரது சொந்த விரலினால் நியாயப்பிரமாணத்தை எழுதியபோது அதை நினைக்கும்படியாக மனிதனிடம் கேட்டுக் கொண்டார். நான்காவது கற்பனை தேவனின் பரிசுத்த நியாயப்பிரமானததின் மத்திய பாகத்தில் உள்ளது. இந்த நாளை நினைக்கும்படியாக மனித குலத்தை வேண்டிக்கொண்டார். ஏனெனில், ஆறு நாளைக்குள்ளே அவர் பூமியையும் சமுத்திரத்தையும், நீருற்றுக்களையும் உண்டாக்கினார்.



42

ஓய்வு நாள் சிருஷ்டிப்பின் ஞாபகமாக எப்பொழுதும் ஆசரிக்கப்பட்டிருந்தால் பரிணமகாரர்களும், சந்தேகவாதிகளும் இல்லை வாதிகளும் இன்று ஜீவித்துக் கொண்டிருக்கமாட்டார்கள். அவர்களுடைய ஆரம்பத்தைக் குறித்தும் தேவனோடு அவர்களுக்கு இருக்கிற உறவைக் குறித்தும் ஒவ்வொரு வாரமும் அவர்கள் நினைப்பூட்டப்பட்டிருப்பார்கள். பாவம் பெருகினபோது மனிதன் தான் எங்கிருந்து வந்தான்? ஏன் இங்கு இருக்கிறான்? எங்கே போகிறான் என்பதை மறந்துவிட்டான். இவைகள் சம்பவித்தபோது எப்படி வாழ வேண்டும் என்பதையும் மறந்துவிட்டான்.



43

(வீடியோ பிரிவு 10) மோசேயின் நாடகளில் இஸ்ரவேலர்கள் அநேகமாக அவர்களது தேவனை மறந்துவிட்டார்கள். மனிதன் உண்டுபண்ணின சிலை வழிபாட்டில் மூழ்கிபோயிருந்தனர்.



44

(வீடியோ பிரிவு 7) வாக்குத்தத்தம் செய்யப்பட்ட தேசத்திற்குபோகும் வழியில் தேவன் அவர்களை எதிரியினடமிருந்து அற்புதமாக விடுவித்து வானந்தரமார்க்கமாக வழி நடத்தினார். இந்த வானந்திரத்தில், உலக சரித்திரத்தின் முதல் வாரத்தில் உண்டு பண்ணின ஏழாம் நாள் ஓய்வுநாளை அவர்கள் நினைக்கும்படியாக தேவன் இரண்டு காரியங்களை செய்து காண்பித்தார்.

11 நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.

# 11 □ நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



45

(வீடியோ பிரிவு 10) முதலாவது, தேவன் அவர்கள் மேல் அக்கறைகொண்டு எகிப்திலிருந்து வெளியே கொண்டு வந்தார்.
அப்படி வந்தபோது போதுமான உணவை அவர்கள் எடுத்து செல்லவில்லை. உணவு தீர்ந்து போது அவர்கள் முறுமுறுத்தார்கள்.
ஆண்டவர் செய்த அற்புதங்களையும் நன்மைகளையும் அவர்கள் பாராட்டாமலிருந்தார்கள். ஆனாலும் தேவன் அவர்களுக்கு ஆகாரம் கொடுத்தார்.



46

(வசனம்: யாத். 16:4, 5)
அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி நான் உங்களுக்கு வானத்திலிருந்து அப்பம் வருஷிக்கப்பண்ணுவேன்.



47

ஜனங்கள் போய் ஒவ்வொரு நாளுக்கு வேண்டியதை ஒவ்வொரு நாளிலும் சேர்த்துக் கொள்ள வேண்டும்.



48

அதினால் அவர்கள் என் நியாயப் பிரமாணத்தின்படி நடப்பார்களோ நடக்க மாட்டார்களோ என்று அவர்களைச் சோதிப்பேன்.
யாத்திராகமம் 16:4.
இதில் சொல்லப்பட்ட அப்பம் பொதுவாக மன்னாவை குறிக்கும்.



49

ஆறாம் நாளிலோ அவர்கள் சேர்த்ததை ஆயத்தம் பண்ணிவைக்க கடவர்கள்.



50

நாள்தோறும் சேர்க்கிறதை பார்க்கிலும் இரண்டத்தனையாக சேர்க்க வேண்டும். யாத்திராகமம் 16:5

# 11 □ நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



51

(வசனம்: யாத்திராகமம் 16:6)
அப்பொழுது மோசேயும் ஆரோனும் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரையும் நோக்கி.



52

கர்த்தர் உங்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப் பண்ணினவர் என்பதைச் சாயங்காலத்தில் அறிவீர்கள். யாத்திராகமம் 16:6.




53

(வீடியோ பிரிவு 16)
இரவில் மன்னா பெய்தது. காலையில் பெய்திருந்த பனி நீங்கின பின்பு, இதோ வனாந்திரத்தின் மீதெங்கும் உருட்சியான மன்னா கிடந்தது. விடியற்காலத்தில் ஜனங்கள் அதை சேர்த்தார்கள் மத்தியானத்தில் மீதமுள்ளவை காணாமல் போயின.
ஆனால் வாரத்தின் ஆறாம் நாளில் என்ன சமபவித்தது என்பதை கவனித்துப் பாருங்கள்.




54

(வசனம்: யாத்திராகமம் 16:21, 22)
அதை விடியற்காலந்தோறும் அவரவர் புசிக்கும் அளவுக்கு தக்கதாகச் சேர்த்தார்கள்.




55

வெயில் ஏற ஏற உருகிப்போம்.



56

ஆறாம் நாளில் தலைக்கு இரண்டு ஓமர் வீதமாக இரண்டத்தனையாய் ஆகாரம் சேர்த்தார்கள்.



57

அப்பொழுது சபையின் மூப்பர்கள் எல்லாரும் வந்து, அதை மோசேக்கு அறிவித்தார்கள்.

11 □ நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.

# 11 நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



58

(வசனம்: யாத். 16:23)
அவன் அவர்களை நோக்கி: கர்த்தர் சொன்னது இதுதான், நாளைக்கு கர்த்தருக்குரிய பரிசுத்த ஓய்வு நாளாகிய ஓய்வு.



59

நீங்கள் சுடவேண்டியதை சுட்டு வேவிக்க வேண்டியதை வேவித்து, மீதியாயிருக்கிறதையெல்லாம் நாளை மட்டும் உங்களுக்காக வைத்து வையுங்கள் என்றான். யாத் 16:21-23.



60

(வசனம்: யாத். 16:25, 26)
ஏழாம் நாளை குறித்து சொன்னபோது: அப்பொழுது மோசே, இன்றைக்கு புசியுங்கள் இன்று கர்த்தருக்குரிய ஓய்வு நாள். இன்று நீங்கள் அதை வெளியிலே காணமாட்டீர்கள்.



61

ஆறு நாளும் அதை சேர்ப்பீர்களாக. ஏழாம் நாள் ஓய்வு நாளாயிருக்கிறது: அதிலே அது உண்டாயிராது என்றான். வசனம் 25, 26.


62

அநேகர் தேவன் கட்டளையிட்டபடி செய்தார்கள். ஆனால் சிலர் ஓய்வு நாளில் மன்னாவை சேர்க்க புறப்பட்டார்கள். தேவன் அதை குறித்து என்ன சொல்கிறார் என்பதை கவனியுங்கள்.



63

(வசனம்: யாத். 16:28-30)
அப்பொழுது கர்த்தர் மோசேயை நோக்கி என் கட்டளையும் என் பிரமாணங்களையும் கைக்கொள்ள எந்த மட்டும் மனதில்லாதிருப்பீர்கள்?



64

பாருங்கள், கர்த்தர் உங்களுக்கு ஓய்வு நாளை அருளினபடியால் அவர் உங்களுக்கு ஆறாம் நாளில் இரண்டு நாளுக்கு வேண்டிய ஆகாரத்தைக் கொடுக்கிறார்.



65

ஏழாம் நாளில் ஒருவனும் தன் ஸ்தானத்திலிருந்து புறப்படாமல் அவனவன் தன் தன் ஸ்தானத்தில் இருக்க வேண்டும்.

# 11 □ நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



66

அப்படியே ஜனங்கள் ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்கள். யாத். 16:28-30.


67

ஓய்வு நாள் சிருஷ்டிப்பின் போது ஸ்தாபிக்கப்பட்டு சீனாய்க்கு வருவதற்கு முன்பு ஜனங்களால் ஆசரிக்கப்பட்டது. கட்டளை கொடுப்பதற்கு முன்பு ஆசரிக்கப்பட்டது.


68

பிரயாணத்தின் மூன்றாவது மாதத்தில் தேவன் ஜனங்களை சீனாய் மலைக்கு கொண்டு வந்தார். அங்கே ஜனங்களோடு பகிர்ந்துக் கொள்ளம்படியாக மோசேக்கு செய்தி கொடுத்தார்.



69

(வசனம்: யாத். 19:5, 6)
இப்பொழுது நீங்கள் என் வாக்கை உள்ளபடி கேட்டு, என் உடன்படிக்கையை கைக்கொள்வீர்களானால்.



70

சகல ஜனங்களிலும் நீங்களே எனக்கு சொந்த சம்பத்தாயிருப்பீர்கள், பூமியெல்லாம் என்னுடையது.



71

நீங்கள் எனக்க ஆசாரிய ராஜ்யமும் பரிசுத்த ஜாதி யுமாய் இருப்பீர்கள் என்று சொல் என்றார்.



72


நீ இஸ்ரவேல் புத்திரரோடே சொல்ல வேண்டிய வார்த்தைகள் இவைகளே என்றார். யாத்திராகமம் 19:5, 6.

11 □ நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.

# 11 □ நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.


73

தேவன் தமது ஜனங்களுக்கு மிகவும் அருமையான அழைப்புக் கொடுத்திருந்தார். அவர்கள் அவருடைய கற்பனைக்கு கீழ்படிந்தால் அவர்கள் விசேஷ ஜனமாயும் பரிசுத்த தேசமாயுமிருப்பார்கள். சிருஷ்டிகரோடு தாங்கள் கொண்டுள்ள உறவை ஒருபோதும் மறக்காமல் இருக்க வேண்டுமென்ற நிச்சயத்தோடு கற்பனைகளில் ஒன்றைக் கொடுத்தார். உண்மையிலேயே அது நினைப்பாயாக என்ற வார்த்தையில் ஆரம்பிக்கிறது.



74

(வசனம்: யாத். 20:8-11)
ஓய்வு நாளைப் பரிசுத்தமாய் ஆசரிக்க நினைப்பாயாக. ஆறு நாளும் வேலை செய்து உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக.



75

ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள். அதிலே யாதொரு வேலையும் செய்ய வேண்டாம்.




76

நீயானாலும், உன் குமாரனானாலும் உன் குமாரத்தியானாலும் உன் வேலைக்காரனானாலும், உன் வேலைக்காரியானாலும்.



77

உன் மிருக ஜீவனானாலும் உன் வாசலிலிருக்கிற அந்நியனானாலும் யாதொரு வேலையும் செய்ய வேண்டாம் கர்த்தர் ஆறு நாளைக்குள்ளே.



78

வானத்தையும் பூமியையும், சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் உண்டாக்கி ஏழாம் நாளிலே ஓய்ந்திருந்தார்.



79

ஆகையால் கர்த்தர் ஓய்வு நாளை ஆசீர்வதித்து அதை பரிசுத்தமாக்கினார்.
யாத்திராகமம் 20:8-11.

# 11  நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



80

அந்த 10 கற்பனைகளின் மத்திய பகுதியில் அல்லது இருதயத்தில் ஓய்வு நாள் இருக்கிறது. ஓய்வு நாள் சிருஷ்டிப்பின் ஞாபக சின்னம், உலகம் எவ்வளவு பழமையோ அந்த அளவு ஓய்வு நாளும் பழமையானது. அவருக்கு கீழ்படிந்து அந்த ஞாபக சின்னத்தை நினைக்கிறவர்களுக்கு தேவன் அநேக வாக்கு தத்தங்களை அருளுகிறார்.



81

(வசனம்: ஏசாயா 58:13, 14)
என் பரிசுத்த நாளாகிய ஓய்வு நாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி, உன் காலை விலக்கி, ஓய்வு நாளை மனமகிழ்ச்சியின் நாளென்றும்.



82

உன் வழிகளின்படி நடவாமல் கர்த்தருடைய பரிசுத்தநாளை மகிமையுள்ள நாளென்றும் சொல்லி அதை மகிமையாக எண்ணுவாயானால்.



83

உனக்கு இஷ்டமானதை செய்யாமல் உன் சொந்த பேச்சை பேசாமலிப்பாயானால்.



84

அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்... ஏசாயா 58:13, 14.
மனிதன் ஞாபக சின்னத்தை நினைப்பானேயானால் அவன் சந்திக்கிற அநேக பிரச்சினைகள், மறக்கப்பட்ட தேவன், அர்த்தமில்லாத வாழ்க்கை, அடையாளம் கண்டு கொள்வதில் பிரச்சினை போன்ற அநேக பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்படும்.



85

(வீடியோ பிரிவு 8). ஆனால் வருந்தத்தக்க காரியம் என்னவென்றால் தேவனுடைய பிள்ளைகள் மறந்துவிட்டார்கள். அவரை அவரது பரிசுத்த நாளில் தொழுது கொள்ள மறந்துவிட்டார்கள்.


86

மரக்கட்டகளையும், கல்லையும் வணங்க ஆரம்பிப்பதற்கு நீண்ட காலத்திற்கு முன்பே தங்களுடைய உற்பத்தியை அதாவது தங்கள் ஆரம்பத்தையே மறந்துவிட்டார்கள்.

## 11  நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.


87

பல நூற்றாண்டுகளாக தீர்க்கதரிசிகள் சிருஷ்டி தேவனிடம் தங்கள் கவனத்தை திருப்ப அழைப்பு விடுத்தபோது ஓய்வு நாள் ஆசரிப்பில் உயிர் மீட்சி ஏற்பட்டது. தேவன் ஒரு போதும், ஓய்வு நாளை யூதர்களுக்காக மட்டும் கொடுக்கவில்லை.


88

யூத கோத்திரம் தோன்றும் முன்பே ஓய்வு நாள் ஸ்தாபிக்கப்பட்டது. அப்படிப்பட்ட ஆசீர்வாதத்தை தேவன் ஒரு தேசத்திற்கு மட்டும் கட்டுப்படுத்தி வைக்கவில்லை.



89

(வசனம்: ஏசாயா 56:6, 7)
எல்லா இடத்திலும் எல்லாரையும் ஞாபகப்படுத்தவும், அவருடன் ஓய்வுநாளை பரிசுத்தமாய் ஆசரிக்கவும் அவர் அழைக்கிறார் ஓய்வு நாளை பரிசுத்தமாய் ஆசரிக்கிற ஒவ்வொருவரையும்.




90

... நான் என் பரிசுத்த பர்வதத்தில் கொண்டு வந்த என் ஜெப வீட்டிலே அவர்களை மகிழப்பண்ணுவேன்.




91

என்னுடைய வீடு சகல ஜனங்களுக்கும ஜெப வீடு எனப்படும். ஏசாயா 56:6, 7.



92

ஏழாம் நாள் யூதரின் ஓய்வு நாள் என்று வேதத்தில் எங்கேயும் சொல்லப்படவில்லை.
அது எல்லா மனித குலத்திற்கும் உரிய நாள் என்று இயேசு தெளிவுப்படுத்தினார்.



93

(வசனம்: மாற்கு 2:27)
மனிதன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வு நாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டது. மாற்கு 2:27.

# 11  நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.

11  நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



94

(வசனம்: யாத்திராகமம் 20:10)
தேவன் சொன்னார். ... ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வு நாள்.
யாத்திராகமம் 20:10.



95

(வசனம்: மத்தேயு 12:8)
இயேசு சொன்னார். அவர் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார். என்று (மத்தேயு 12:8) ஏனெனில் அவர் அதை உண்டாக்கினார்.



96

(வசனம்: வெளிப்படுத்தல் 1:10)
ஆகவே தான் வெளிப்படுத்தின சுவிசேஷத்தை எழுதிய யோவான் அதை கர்த்தருடைய நாளென்று அழைத்தார் வெளிப்படுத்தல் 1:10.
சிருஷ்ப்பின் சின்னத்தை விடவும் சிருஷ்டிகனை விடவும் ஓய்வு நாள் மேலானது. அது தேவனுக்கும் மனிதனுக்கும் இடையே உள்ள அடையாளம்.




97

(வசனம் எசேக்கியல் 20:20)
என் ஓய்வு நாட்களை பரிசுத்தமாக்குங்கள் அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளாமாயிருக்கும்.



98

நான் உங்கள் தேவனாகிய கர்த்தர் என்று அறியும்படிக்கு அவைகள் அடையாளமாயிருக்கும் (எசேக் 20:20)
சிருஷ்டிப்பின் வாரத்தில், ஓய்வு நாளை பரிசுத்தப்படுத்தினவர் தான் பாவ மனுஷனையும் பரிசுத்தப்படுத்துகின்றனர். நமது சிருஷ்டிகர் தான் நமது இரட்சகர்.



99

(வசனம் எசேக்கியல் 20:12)
எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாயிருப்பதற்கான என் ஓய்வு நாட்களையும் கட்டளையிட்டேன்.



100

நான் தங்களை பரிசுத்தம் பண்ணுகிற கர்த்தர் என்று அறியும்படிக்கு அவர்களுக்கும் எனக்கும் அடையாளமாயிருக்க என் ஓய்வு நாட்களை கட்டளையிட்டேன். எசேக்கியல் 20:12

# 11 நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



101

(வீடியோ பிரிவு 12)
இந்த பூமியில் பாவம் பிரவேசிப்பதற்கு முன்பே ஓய்வு நாள் ஸ்தாபிக்கப்பட்டது. அப்படியே பாவம் முற்றிலும் அழிக்கப்பட்ட பிற்பாடும் ஓய்வு நாள் ஆசரிக்கப்படும்.




102

(வசனம் ஏசாயா 66:22, 23)
நான் படைக்கப் போகிற புதிய வானமும், புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பது போல



103

உங்கள் சந்ததியும் உங்கள் நாமமும் நிற்கும் என்று கர்த்தர் சொல்லுகிறார்.



104

நான் படைக்கப் போகிற புதிய வானமும், புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பது போல



105

மாம்சமான யாவரும் எனக்கு முன்பாக தொழுது கொள்வார்கள் என்று கர்த்தர் சொல்கிறார். ஏசாயா 66:22, 23.



106

(வீடியோ பிரிவு 6) நித்தியம் நெடுகிலும் அவரை சிருஷ்டிகரென்றும் மீட்பரென்றும் மகிமைப்படுத்த தேவ ஜனங்கள் ஓய்வு நாளை ஆசரிப்பார்கள் பாவம் பிரவேசிப்பதற்கு முன்பு ஓய்வு நாள் ஆசரிக்கப்பட்டது என்றால் பூமி புதுப்பிக்கப்ட்ட பிற்பாடும் ஆசரிக்கப்படும். அப்படியென்றால் இப்பொழுதும் அது ஆசரிக்கப்பட வேண்டும் என்பது அர்த்தமில்லையா?


107

தேவனை குறித்தும் ஓய்வு நாளைக் குறித்தும் கேள்வி எழுப்பினால் அதை இயேசு எவ்விதம் கடைபிடித்தார் என்பதை பார்க்க வேண்டும்.

# 11  நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.

11  நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



108

இயேசு ஓய்வு நாளில் என்ன செய்தார் என்பதை லூக்கா சொல்கிறார்.



109

(வசனம் லூக்கா 4:16)
தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்து




110

தம்முடைய வழக்கத்தின்படியே ஓய்வு நாளில் பிரவேசித்து வாசிக்க எழுந்து நின்றார்.
லூக்கா 4:16
அது இயேசுவின் வழக்கம் என்று விவிலியம் சொல்லுகிறது.



111

ஓய்வு நாளுக்கு விளக்கம் கூறுகையில் வெப்ஸ்டர்ஸ் அகராதி



112

வாரத்தின் ஏழாம் நாள் (சனிக்கிழமை) - என்று வெப்ஸ்டர்ஸ் புதிய உலக அகராதியின் இரண்டாம் கல்லூரி பதிப்பு கூறுகிறது.



113

(வீடியோ பிரிவு 9)
ஆதாமுக்கும் மோசேயிக்கும் இடைப்பட்ட காலத்தில் அந்த நாள் மறக்கப்பட்டிருந்தாலோ மாற்றப்பட்டிருந்தாலோ சீனாயில் 10 கற்பனையை கொடுத்தப் போது அதை சரிசெய்திருப்பார்.



114

(வீடியோ பிரிவு 11)
மோசேயிக்கும், இயேசுவுக்கும் இடைப்பட்ட காலத்தில் அந்த நாள் காணாமல் போயிருந்தால் இயேசு அந்த குறிப்பை சரிசெய்திருப்பார்.

# 11 நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



115

(வீடியோ பிரிவு 9)
அப்போஸ்தலர்களுடைய நாட்களில் அந்த நாட்கள் மாற்றப்பட்டிருந்தால் அவர்கள் அதை குறித்து எழுதி வைத்திருப்பார்கள்.



116

(வீடியோ பிரிவு 9) நாட்களை துல்லியமாக கணக்கு வைத்திருக்கும் யூதர்கள் இன்றைக்கும் ஏழாம் நாள் சனிக்கிழமையில் தான் தொழுகை செய்கிறார்கள்.



117

(வீடியோ பிரிவு 19)
இயேசு பூமியில் இருந்த நாட்களில் அந்த நாளை குறித்த சர்ச்சை எழும்பவில்லை. எழும்பின ஒரே சர்ச்சை அவர் எப்படி ஆசரித்தார் என்பது தான். ரபீக்கள் கடினமான சட்ட திட்டங்களினால் ஓய்வு நாளை பாரமான நாளாக்கியிருந்தார்கள். இயேசுவோ மனித சட்டங்களை மாற்றி ஓய்வு நாள் ஆசரிப்பின் உண்மையான அர்த்தத்தை காண்பிக்க விரும்பினார்.


118

ஓய்வு நாளில் ஜனங்களை குணப்படுத்தினதால் அவர்கள் அவரை குற்றப்படுத்தின போது



119

(வசனம் மத்தேயு 12:12)
ஓய்வு நாளில் நன்மை செய்வது நியாயம் தான் என்றார். மத்தேயு 12:12.



120

(வீடியோ பிரிவு 18)
இயேசு குணப்படுத்தினார் ஊழியம் செய்தார் என்று விவிலியம் கூறுகிறது. நாம் பூரணம் அடையவும், குற்ற உணர்வு, வெறுப்பு, சுயநலம் போன்றவற்றிலிருந்து விடுதலையடையவும் மன சமாதானத்தைப் பெற்றுக் கொள்ளவும் ஓய்வுநாளை தந்தார். தேவ சாயலுக்கு மீட்கப்படவும், சிருஷ்டிகரை நினைக்கவும் அந்த நாளை கொடுத்தார். இந்த ஊழியத்தைத் தான் இயேசு செய்ய வந்தார். அதே ஊழியத்தை அவர் சென்ற பிற்பாடு சீஷர்கள் செய்தனர்.




121

(வீடியோ பிரிவு 11)
ஓய்வு நாளின் அர்த்தத்தை அவருடைய சீஷர்கள் அவரது மரணத்தின் போது வாழ்ந்து காட்டினார். இந்த குழப்பமான சூழ்நிலையில் அவரது நண்பர்கள் இயேசுவின் சரீரத்தில் பரிமள தைலத்தை ஓய்வு நாள் முடிந்து பூசுவதற்கு முன்பு கற்பனையின் படியே ஓய்வு நாளில் ஓய்ந்திருந்தார்கள்.




122

(வசனம் லூக்கா 23:54-56)
அந்த நாள் ஆயத்த நாளாயிருந்தது ஓய்வு நாளும் ஆரம்பமாயிற்று.



123

கலிலேயாவிலிருந்து அவருடனே கூட வந்திருந்த ஸ்திரீகளும், பின்சென்று கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து.



124

திரும்பிப் போய், கந்தகவர்க்கங்களையும் பரிமள தைலங்களையும் ஆயத்தம் பண்ணி கற்பனையின்படியே ஓய்வு நாளில் ஓய்ந்திருந்தார்கள்.
லூக்கா 23:54-56.



125

(வீடியோ பிரிவு 8) ஓய்வு நாளுக்கு முந்தின நாளில் இயேசுவில் அவர்கள் கொண்டிருந்த நம்பிக்கை நசுக்கப்பட்டது. சிலுவையில் அவரது கொடூர மரணத்தை பார்த்தார்கள். அவர்களது நம்பிக்கையும், கனவும் இருளடைந்து கல்லறையில் வைக்கப்பட்டது. அவருடைய மரித்த சரீரத்திற்கு தைலம் பூச விரும்பினர்.



126

(வசனம் லூக்கா 24:1)
வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே ஆயத்தம் பண்ணின கந்தகவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு.... கல்லறையினிடத்திற்கு வந்தார்கள்.
லூக்கா 24:1.



127

மறக்க முடியாத அந்த 3 நாட்களையும் இன்னொரு முறை பார்ப்போம்.

# 11  நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



128

1. வெள்ளிக்கிழமை இயேசு மரித்தார். ஸ்திரீகள் கந்தகவர்க்கங்களையும் பரிமள தைலத்தையும் ஆயத்தம் பண்ணினர்.



129

2. சனிக்கிழமை (ஓய்வு நாள்) இயேசு கல்லறையில் ஓய்வு எடுத்துக்கொண்டார்.



130

3. ஞாயிற்றுக்கிழமை (வாரத்தின் முதல் நாள்) இயேசு உயிர்த்தெழுந்தார். ஸ்திரீகள் இயேசுவின் சரீரத்தில் தைலம் பூச வந்தார்கள்.
இயேசு மரித்தபோது எந்த நாள் என்பதை குறித்த சந்தேகத்திற்கே இடமில்லை.



131

(வசனம்: யோவான் 19:30)
ஆயத்த நாளில் இயேசு சிலுவையில் தொங்கி முடிந்தது என்று கூறினார். யோவான் 19:30.
யோவான் 19:30


132

அவரது மீட்பின் வேலை நிறைவடைந்தது. ஓய்வு நாளில் கல்லறையில் ஓய்ந்திருந்தார்.




133

(வீடியோ பிரிவு 6)
வாரத்தின் முதலாம் நாள் ஞாயிற்றுக்கிழமையில் உயிர்த்தார். சாவிலும் ஓய்வு நாளை ஆசரித்தார். ஓய்வு நாளில் கல்லறையில் இளைப்பாறினார்.
சிலுவைக்கு அருகில் நின்று கொண்டிருக்கும்போது நமக்கு என்ன உணர்வு வருகிறது என்றால் ஏழு நாட்களில் ஏதாவது ஒரு நாள் ஓய்வு நாள் அல்ல என்றும் ஓய்வு நாளை பரிசுத்த குலைச்சலாக்குகிறவன் சிருஷ்டிப்பையும் சீனாயில் கொடுக்கப்பட்ட கற்பனைகளையும் மற்றும் கல்வாரியையும் பரிசுத்த குலைச்சலாக்குகிறான்.

# 11 □ நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



134

ஆம், ஏழு நாட்களில் எந்த நாளை ஆசரிக்கிறோம் என்பது முக்கியத்துவம் உள்ளதாயிருக்கிறது. ஜியார்ஜ் வாண்டாமென் என்ற கிறிஸ்தவ எழுத்தாளர்.




135

அவரது அன்பின் பணியை செய்து கொண்டிருக்கிற அவருடைய பின்னடியார்கள் பரிசுத்த வேலையை குலச்சலாக்குவதை நாம் எப்படி பார்த்துக் கொண்டிருக்க முடியும்.



136

பிரமாணத்தை விட்டுக் கொடுக்க முடியாத காரணத்திற்காகத் தன் ஜீவனை கல்வாரி சிலுவையில் விட்டு மரித்த கிறிஸ்துவானரை அவமதிக்கின்றோமா?



137

கல்வாரி வெளிச்சத்தில் நின்றுகொண்டு எந்த நாள் என்றால் என்ன? எந்த ஒரு வித்தியாசத்தையும் உண்டு பண்ணாது என்று எப்படி சொல்லமுடியும்? நினைவில் கொள்ளவேண்டிய ஒரு நாள் என்ற புஸ்தகத்தில், பக்கம் 40ல் இவ்விதமாக எழுதியிருக்கிறார்.




138

சிருஷ்டிகர் நினைப்பாயாக என்று சொல்லியிருந்தும் அநேகர் மறந்துவிடுகின்றனர். அப்படி மறப்பது தேவனுடைய விருப்பமல்ல. கிறிஸ்தவர்கள் எல்லாக் காலத்திலும் ஓய்வு நாளை ஆசரிக்க வேண்டும் என்றும் எதிர்பார்த்தார்.



139

(வசனம்: மத்தேயு 24:20)
நீங்கள் ஓடிப்போவது மாரிக்காலத்திலாவது ஓய்வு நாளிலாவது சம்பவியாதபடிக்கு வேண்டிக் கொள்ளுங்கள். மத்தேயு 24:20.




140

(வீடியோ பிரிவு 6)
கி.பி.70ல் எருசலேம் அழிக்கப்பட்ட வேளையிலும் கிறிஸ்தவர்கள் ஓய்வு நாளை ஆசரித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று எதிர்பார்த்தார்.

11 □ நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.

# 11  நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



141

(வசனம் அப் 17:1, 2)
உயிர்தெழுதலுக்கு பிற்பாடும் இயேசுவின் அப்போஸ்தலர்கள் ஓய்வு நாளை ஆசரித்தார்கள் என்று புதிய ஏற்பாடு கூறுகிறது. அவர்கள் தெசலோனிக்கே பட்டணத்துக்கு வந்தார்கள். அங்கே யூதர்களுடைய ஜெப ஆலயம் இருந்தது.




142

பவுல் தன்னுடைய வழக்கத்தின்படியே அவர்களிடத்தில் போய் மூன்று ஓய்வ நாட்களில் வேத வாக்கியங்களின் நியாயங்களை எடுத்து அவர்களுடனே சம்பாஷித்தார். அப் 17:1, 2.
மற்றொரு ஓய்வு நாளில் பவுல் பிரசங்கம் செய்துக் கொண்டிருந்தபோது சில புறஜாதியார்கள் விண்ணப்பங்களோடு அவரிடத்தில் வந்தார்கள்.



143

(வசனம்: அப் 13:42, 44)
... இந்த வசனங்களை அடுத்த ஓய்வு நாளில் தங்களுக்கு சொல்ல வேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.




144

அடுத்த ஓய்வு நாளிலே கொஞ்சங் குறைய பட்டணத்தார் அனைவரும் தேவ வசனத்தை கேட்கும்படி கூடிவந்தார்கள்.
அப்போஸ்தலர் 13:42, 44.


145

உண்மையிலே ஓய்வுநாளில் 84 கூட்டங்கள் நடத்தினதாக அப்போஸ்தலர் நடபடிகள் கூறுகிறது.


146

ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தல் வரைக்கும் ஓய்வு நாள் ஒரு தங்க இழை போன்று ஓடுகின்றது. அது கிறிஸ்துவின் வருகையில் அவரை சந்திக்க ஆயத்தமாயிருப்பவர்களின் குணாதிசயங்களை விவரிக்கிறது.

# 11  நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.



147

(வசனம்: வெளிப்படுத்தல் 14:12)
தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேல் உள்ள விசுவாசத்தையும் காத்துக் கொள்கிறவர்களாகிய பரிசுத்தவான்களின் பொறுமை இதிலே விளங்கும். வெளிப்படுத்தல் 14:12.



148


(வசனம்: யோவான் 14:15)
இயேசு சொன்னார். என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள். அந்த கற்பனைகளில் ஒன்று ஓய்வு நாளை நினைக்கும்படி சொல்லுகிறது.


149

ஒவ்வொரு நாரமும் 7ம் நாளில் நமது தேவனை தொழுவோமானால் நாம் எங்கிருந்து வந்தோம் அல்லது நம்மையும் இந்த உலகத்தையும் யார் படைத்தார் என்பதை ஒரு போதும் மறந்து போகமாட்டோம்.


150

ஒவ்வொரு வாரமும் ஓய்வு நாளை ஆசரித்தால் நாம் யார் என்பதை குறித்து ஆச்சரியப்பட அவசியமில்லை. நாம் உலகத்தின் இராஜாவாகிய தேவனின் குமாரர்களம் குமாரத்திகளுமாயிருக்கிறோம்.


151

இங்கு நாம் எப்படி வந்தோம் என்பதை குறித்து ஆச்சரியப்பட அவசியமில்லை. தேவனுடைய தேவைக்காக நம்மை உண்டாக்கியிருக்கிறார்.


152

நினைப்பாயாக என்று உனக்கு சொன்ன அதே இயேசுவானவர் இன்றிரவு உன்னிடமாக உன் பாவங்களுக்காக சிலுவையில் ஆணிகள் கடாவப்பட்ட கரங்களை நீட்டி, என்னை பின்பற்று என்று அழைக்கிறார்.



153

சிருஷ்டிகரை இப்பொழுது பின்பற்றுவாயா? உனக்காக உண்டாக்கின ஓய்வு நாளை நினைத்து அவருடைய கற்பனைகளுக்கு கீழ்படிவாயா? இப்பொழுது இருந்தே ஒவ்வொரு வாரமும் ஒவ்வொரு ஏழாம் நாளிலும் ஓய்வு நாளை ஆசரிப்பாயாக? ஏழாம் நாள் ஓய்வு நாளில் உன்னை சிருஷ்டித்தவரை தொழுதுக் கொள்ள இயேசுவின் மற்றும் அப்போஸ்தலர்களின் முன் மாதிரியை பின்பற்றுவாயா.

11  நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.

# 11  நன்மைக்காகவே சிருஷ்டிக்கப்பட்டிருக்கிறோம்.


154

ஓய்வு நாள் என்பது எந்த நாளை ஆசரிக்கிறோம் என்பது மட்டுமல்ல யாரை பின்பற்றுகிறோம் என்பதும் முக்கியம். அது ஏதேனில் முதன்முதலாக ஓய்வு நாளை ஆசரித்த ஆதாமோடும் ஏவாளோடும் இணைந்து நிற்பதாகும்.
ஓய்வு நாளை பரிசுத்தமாக ஆசரிக்க நினைப்பாயாக என்று தேவன் சொன்னபோது இருந்த மோசேயோடு, தேவனுடைய பிரமாணத்துக்கு கீழ்படிவதாகும்.
பழைய ஏற்பாட்டில் உள்ள, விசுவாசத்தில் பெரியவர்களாகிய ஏசாயாவோடும், எரேமியாவோடும் தானியேலோடும் ஆராதிப்பதாகும். பேதுருவோடும், யாக்கோபோடும் யோவானோடும் எல்லாவற்றையும், படைத்தவரை தொழுதுக் கொள்ளுவதாகும்.
ஆம் ஆண்டவரே நான் உம்மோடு நிற்பேன். நான் உம்மை முதலாவதாக என் வாழ்க்கையில் வைப்பேன். உம்மை எல்லா நேரமும் பின்பற்றுவேன். இது உங்களுடைய விருப்பம் என்றால் ஜெபிக்கும்போதே கரங்களை உயர்த்துங்கள்




1

அது உனக்கு சம்பிகாதபடி பார்த்துக் கொள்.



2

கட்டுக்கதைகள் நீண்ட காலமாகயிருப்பின் அதை சத்தியங்களாக ஏற்றுக் கொள்கிறார்கள்.
உதாரணத்துக்கு சிலந்தி பூச்சியை எடுத்துக் கொள்ளுங்கள்.
கி.மு.350ல் பிரபல கிரேக்க தத்துவ மேதை அறிஸ்டாட்டில் அதற்கு 6 கால்கள் இருப்பதாகச் சொன்னார் அதை தொடர்ந்து அடுத்த 20 நூற்றாண்டுகளாக சிலந்திக்கு 6 கால்கள் என்று தான் நம்பினார்கள்.
சிலந்தியின் கால்களை எண்ணிப்பார்பதற்குக் கூட யாரும் பிரயாசப்படவில்லை.
இந்த பிரபல அறிஸ்டாட்டிலோடு யார் சவால் பண்ண முடியும்?
ஆனால் லாமார்க் என்ற உயிரியல் வல்லுனர் அதன் கால்களை எண்ணினார். அவர் எத்தனை கால்களை எண்ணினார் தெரியுமா?
சரியாக 8 கால்கள். ஆனால் லாமார்க் அதன் கால்களை எண்ணினபோது நீண்ட காலமாக சத்தியமாக நம்பப்பட்ட கட்டுகதைகள் அழிக்கப்பட்டன.

12  அநேகம் பேர் கட்டு கதைகளினால் நிறப்பட்டு இருக்கிறார்கள்


3

கிறிஸ்தவ சபைக்கு உள்ளே மார்க்க கட்டுகதைகள் நழுவி வந்துவிடவில்லையா?
ஆறு கால்கள் அல்லது எட்டு கால்களை கொண்ட சிலந்தியை விட அதிக முக்கியத்துவமுடைய ஒன்றோடு நாம் ஈடுபடவில்லையா?
பல லட்சக்கணக்கான மக்கள் வாரத்தின் முதல் நாளைதான் உண்மையான ஓய்வு நாளாக நம்பி தொழுது வருகிறார்கள்.
வாரத்தின் ஏழாம் நாள் சனிக்கிழமைதான் தேவனின் உண்மையான ஓய்வு நாள் என்றுகடந்த பகுதியில் தெளிவாகப் பார்த்தோம்.
ஒரு பாட புஸ்தகத்தைப் போன்று 2000 ஆண்டு காலமாக சிலந்திக்கு ஆறு கால்கள் என்ற தவறான உபதேசத்தை போதித்தது போன்று லட்சகணக்கானோர் ஓய்வு நாளைப் பற்றிய தவறான உபதேசத்தையும் ஏற்றுக் கொண்டனர்.
இந்த கூட்டத்தில் நீங்கள் கலந்துக் கொள்கிறீர்கள் என்றால் நீங்கள் சத்தியத்தை தேடுகிறீர்கள். தேவனுடைய வார்த்தை என்ன சொல்கிறது என்று அறிய ஆவலாய் உள்ளீர்கள். மத தலைவர்கள் என்ன சொல்ல விரும்புகிறார்கள் என்று அறிய நீங்கள் விரும்பவில்லை. தேவன் என்ன சொல்ல விரும்புகிறார் என்று அறிய விரும்புகிறீர்கள். கடந்த பகுதியில் என்ன படித்தோம் என்பதை திருப்பி பார்ப்போம்.



4

(வீடியோ பிரிவு 8) ஒவ்வொரு வாரமும் தேவன் ஒரு விசேஷ நாளை தந்திருக்கிறார். அது ஓய்வு நாள் அதிலே அவரை தொழுது கொண்டு சிருஷ்டிகரையும் அவரது கிரியைகளையும் நினைக்க வேண்டுமென்று கற்றிருக்கிறோம். ஓய்வு நாள் என்பது ஏதோ ஒரு நாள் அல்ல அது வாரத்தின் ஏழாம் நாள் என்று கற்றிருக்கிறோம். இந்த உலகம் முடிந்து நாம் பரலோகத்தில் சிருஷ்டிகளுடன் இருக்கும்போதும் ஓய்வுநாள் ஆசரிக்கப்படும்.


5

ஆனால் இன்று நாம் உலகத்தில் பார்க்கும்போது ஏராளமான பேர்-ஏன் அநேகமானோர் தேவனை ஏழாம் நாளில் தொழுது கொள்வதில்லை.


6

அநேகர் வேதத்தின் தேவனை ஆராதிக்காமல் வேறே தேவர்களை ஆராதிக்கிறார்கள்.



7

வேதம் சொல்லும் தேவனை ஆராதிக்கிறவர்களில் அநேகர் அவர் பரிசுத்தம் பண்ணின நாளை விட்டுவிட்டு வேறு நாளில் அவரை ஆராதிக்கிறார்கள் அது ஏன் அப்படி?
தேவன் அந்த நாளை மாற்றினாரா?
வேறு யாராவது மாற்றினார்களா?
அநேகர் ஏழாம் நாள் ஓய்வுநாளை விட்டுவிட்டு வேறு நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை கர்த்தருடைய நாளாக ஏற்படுத்தி ஆராதிக்கிறார்கள் அது ஏன்?



8

தேவன் அவருடைய நியாய பிரமாணத்தில் பூமியிலிருக்கும் நம் அனைவருக்கும் ஒரு அடையாளத்தை வைத்திருக்கிறார். ஒரு விசேஷமான அடையாளம்.



9

(வசனம்: எசேக்கியல் 20:12, 20)
அவர்களுக்கும் எனக்கும் அடையாளமாயிருப்பதற்கான என் ஓய்வு நாட்களையும் கட்டளையிட்டேன்.



10

நான் தங்களை பரிசுத்தம் பண்ணுகிற கர்த்தர் என்று அவர்கள் அறியும்படிக்கு அந்த அடையாளத்தைக் கட்டளையிட்டேன்.



11

என் ஓய்வுநாட்களை பரிசுத்தமாக்குங்கள் அவைகள் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்.



12

நான் உங்களை தேவனாகிய கர்த்தர் என்று அறியும்படிக்கு அவைகள் அடையாளமாயிருக்கும். எசேக்கியல் 20:12, 20.

12 □ அநேகம் பேர் கட்டு கதைகளினால் நிறப்பட்டு இருக்கிறார்கள்



13

(வீடியோ பிரிவு 4)
வேதாகமம் ஆரம்பம் முதல் முடிவு வரை தேவன் ஓய்வு நாளை ஸ்தாபித்தார் அது வாரத்தின் ஏழாம் நாளாகிய ஓய்வு நாள் என்ற உண்மையை வெளிப்படுத்துகிறது. அது அவருக்கும் அவரது ஜனங்களுக்கும் அடையாளமாயிருக்கும். அந்த ஓய்வு நாளை மாற்றியதாக வேதத்தில் எங்கேயும் சுட்டிகாட்டவில்லை.



14

(வீடியோ பிரிவு 10)
வேதத்தை ஆராய்ந்ததின் மூலமாக இந்த செய்திகளில் என்னத்தை கற்றோம் என்பதை திருப்பி பார்ப்போம். தேவன் பூமியையும் மனிதனையும் படைத்து முடித்தவுடன் அவர் ஓய்வு நாளை உண்டாக்கினார்.



15

அவரது படைப்பின் ஞாபக சின்னமாக வாரத்தின் ஏழாம் நாளை பூமியின் சரித்திரம் நெடுகிலும் இருக்கும்படியாகக் கொடுத்தார்.


16

சீனாவில் தேவன் தன்னுடைய பிரமாணத்தை எழுதியபோது அதனுடைய இருதயத்தில் ஓய்வுநாள் கற்பனையை வைத்தார்.



17

(வீடியோ பிரிவு 5)
மனிதன் தானாக வரவில்லை என்பதை எப்போதும் நினைக்கும்படி இந்த கற்பனையைக் கொடுத்தார்.


18

தேவன் மனிதனிடம் இந்த ஏழாம் நாளை ஆசரிக்கக் கேட்கும் காரணம் அவர் பூமியை ஆறு நாட்களில் சிருஷ்டித்து.


19

ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார் தேவன் தன்னுடைய கற்பனைகளை குறித்து மோசேயோடு சொன்னபோது அதனோடு ஒன்றையும் கூட்டவும் கூடாது அதனோடு ஒன்றையும் குறைக்கவும் கூடாது.



20

(வசனம்: உபாகமம் 4:2)
நான் உங்களுக்கு கற்பிக்கிற வசனத்தோடே நீங்கள் ஒன்றும் கூட்டவும் வேண்டாம் அதில் ஒன்றையும் குறைக்கவும் வேண்டாம்.



21

ஆனால் நான் உங்களுக்கு கற்பிக்கும் உங்கள் தேவனாகிய கர்த்தரின் கட்டளைகளை நீங்கள் கைக்கொள்ளுங்கள்.
உபாகமம் 4:2.




22

(வசனம்: சங்கீதம் 89:34)
என் உடன்படிக்கையை மீறாமலும் என் உதடுகள் விளம்பினதை மீறாமலும் இருப்பேன். சங்கீதம் 89:34.


23

இயேசுகிறிஸ்து தாமே சீனாய் மலையில் கொடுத்த கற்பனைகளை மேன்மைப் படுத்த அதே தீர்மானமுடையவராய் இருக்கிறார் என்பதை மலை பிரசங்கத்தின்போது நியாய பிரமாணத்தை அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள் நிறைவேற்றவே வந்தேன் என்று சொன்னார்.



24

(வசனம்: மத்தேயு 5:17-19)
அவருடைய வார்த்தையை கவனியுங்கள். நியாய பிரமாணத்தையானாலும், தீர்க்க தரிசனங்களயானாலும் அழிக்கிறதற்கு வந்தேன் என்று எண்ணிக் கொள்ளாதேயுங்கள். அழிக்கிறதற்கு அல்ல நிறைவேற்றவே வந்தேன்.



25

மெய்யாகவே சொல்லுகிறேன் வானமும் பூமியும் ஒழிந்து போனாலும்.



26

நியாயப் பிரமாணத்திலுள்ளதெல்லாம் நிறைவேறுமளவும் அதில் ஒரு சிறு எழுத்தாகிலும் ஒரு எழுத்தின் உறுப்பாகிலும் ஒழிந்து போகாது.

12  அநேகம் பேர் கட்டு கதைகளினால் நிறப்பட்டு இருக்கிறார்கள்



27

ஆகையால் இந்தகற்பனைகள் எல்லாவற்றிலும் சிறிதானதொன்றையாகிலும் மீறி, அவ்விதமாய் மனுஷருக்குப் போதிக்கிறவன்.



28

பரலோக ராஜ்யத்தில் எல்லாரிலும் சிறியவன் என்னப்படுவான்.
மத்தேயு 5:17-19.
தேவன் அவரது ஜனங்களுக்கு 10 கற்பனைகளை கொடுத்தப்போது அவரது பரிசுத்த உதடுகளின் வார்த்தைகளை மாற்றி அமைக்கக்கூடாது என்று தெளிவுப்படுத்தியிருந்தார்.


29

அவரும் பிதாவும் உலக சரித்திரத்தின் முதல் வாரத்தில் பரிசுத்தப்படுத்தின நாளை மகிமைப்படுத்தும்படியாக, வாழ்ந்து காட்டி முன் மாதிரியை வைத்துப்போனார்.



30

(வசனம்: லூக்கா 4:16)
எனவே அவர் தாம் வளர்ந்த ஊராகிய நாசரேத்துக்கு வந்து தமது வழக்கத்தின்படியே.



31

ஓய்வுநாளில் ஜெப ஆலயத்தில் பிரவேசித்து வாசிக்க எழுந்து நின்றார். லூக்கா 4:16.


32

மத தலைவர்கள் இயேசுவின் சீஷர்களை ஓய்வு நாளை மீறும் காரியத்தில் குற்றப்படுத்தினபோது அவர் ஓய்வு நாளுக்கும் ஆண்டவர் என்று இயேசு சொன்னார்.



33

(வசனம்: மாற்கு 2:27, 28)
மனிதன் ஓய்வு நாளுக்காக உண்டாக்கப்படவில்லை, ஓய்வு நாள் மனிதனுக்காக உண்டாக்கப்பட்டது.



34

ஆகையால் மனுஷகுமாரன் ஓய்வு நாளுக்கும் ஆண்டவராயிருக்கிறார். மாற்கு 2:27, 28.


35

இயேசு ஓய்வு நாளை மகிமைப்படுத்தினது மட்டுமல்லாமல் அவரது சீஷர்கள். எதிர்காலத்திலும் அதை மகிமைப்படுத்த ஜெபிக்கும்படியாக வேண்டிக் கொண்டார்.



36

(வசனம்: மத்தேயு 24:20)
மத்தேயு 24:20ல் பார்க்கிறோம் நீங்கள் ஓடிப்போவது மாரி காலத்திலாவது ஓய்வு நாளிலாவது, சம்பவியாதபடிக்கு வேண்டிக் கொள்ளுங்கள் என்ற விண்ணப்பத்தை காண்கிறோம்.


37

கி.பி.70 ஆண்டிற்கு முன்னதாக எருசலேமைவிட்டு ஓடிப்போக வேண்டிய சூழலைக் குறித்து இயேசு பேசிக் கொண்டிருக்கிறார்.



38

கி.பி.70ம் ஆண்டில் ரோமர்களால் அழிவுக்குட்பட்டது.


39

அவர் சிலுவையில் அறையப்பட்ட பின்பும் அவருடைய பின்னடியார்கள் ஓய்வு நாளை பரிசுத்தமாக கடைபிடித்து நடக்க வேண்டுமென அவர் எதிர்பார்த்தார்.



40

ஐதீக யூதர்கள் எகிப்திலிருந்து பிரயாணப்பட்டதிலிருந்து பண்டைய ஏறக்குறைய 3500 வருடகாலமாக யூதர்கள் ஏழாம் நாளில் தொழுகை செய்தனர். உலகின் எப்பகுதியில் வாழ்ந்து வந்த போதிலும் இன்னமும் அவர்கள் வாரத்தின் ஏழாம் நாளை தேவ தொழுகைக்காக பிரத்தியேகபடுத்துகின்றனர்.

12 அநேகம் பேர் கட்டு கதைகளினால் நிறப்பட்டு இருக்கிறார்கள்



41

வேதாகமம் மட்டுமே நமக்கு செய்தியின் ஆதாரமாயிருந்தபோதிலும், ஏழாம் நாள் (அ) ஓய்வு நாள் எது என்பதை தீர்மானிக்க முடியும்.
சிலுவையில் அறையப்பட்ட வாரத்தில் நடந்த சம்பவங்களை லூக்கா குறிப்பிடுகிறார்.
வெள்ளிக்கிழமை கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார்.



42

(வசனம்: லூக்கா 23:54-56, 24:1
அந்த நாள் ஆயத்த நாளாயிருந்தது, ஓய்வு நாளும் ஆரம்பமாயிற்று.



43

கலிலேயாவிலிருந்து அவருடனே கூட வந்த ஸ்தீரிகளும் பின்சென்று. கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து



44

அந்த நாள் ஆயத்த நாளாயிருந்தது, ஓய்வு நாளும் ஆரம்பாமாயிற்று. கலிலோயவிலிருந்து அவருடனே கூட வந்த ஸ்தீரிகளும் பின்சென்று, கல்லறையையும் அவருடைய சரீரம் வைக்கப்பட்ட விதத்தையும் பார்த்து.



45

வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம் பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு,




46

வாரத்தின் முதலாம் நாள் அதிகாலையிலே தாங்கள் ஆயத்தம் பண்ணின கந்தவர்க்கங்களை அவர்கள் எடுத்துக்கொண்டு, லூக்கா 23:54-56, 24:1.


47

கிறிஸ்துவின் மரணத்தை நினைவுப்படுத்துவதற்காக, அனேகமாக எல்லா கிறிஸ்தவர்களும் பெரிய வெள்ளியை அனுசரிக்கின்றனர்.
மேலும் உயிர்தெழுதலை, ஈஸ்டர் ஞாயிறன்று கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலாகக் கொண்டாடுகின்றனர்.


48

அவ்விரு நாட்களுக்கும் இடைப்பட்ட நாளே ஓய்வு நாளென்று வேதாகமம் கூறுகிறது கற்பனையின்படியே.



49

(வீடியோ பிரிவு 4) சிலுவைக்குப் பிறகு பல ஆண்டுகளுக்குப் பின் லூக்கா இதை எழுதினாலும் இன்னமும் ஞாயிற்றுக்கிழமையை வாரத்தின் முதல் நாளென்றே குறிப்பிடுகின்றார். மேலும் ஏழாம் நாளை ஓய்வு நாள் என்றே குறிப்பிட்டார். இவ்விரு நாட்களிடையேயுள்ள வித்தியாசத்தை வேதாகமம் தெளிவாக வித்தியாசப்படுத்துகிறது.


50

சிலுவைக்கு அனேக ஆண்டுகளுக்கு பின்னும் உண்மையில் அப்போஸ்தலர்கள் ஏழாம் நாளான ஓய்வு நாளிலே தொடர்ந்து தொழவும், பிரசங்கிக்கவும் செய்தனர்.



51

(வசனம்: அப்போஸ்தலர் 13:14, 42, 44)
பவுலும் அவன் உடன் தோழரும் அந்தியோகியாவிற்கு சென்றபோது ஓய்வு நாளிலே ஜெப ஆலயத்தில் பிரவேசித்து உட்கார்ந்தார்கள் என வேதாகமம் கூறுகிறது.



52

அப்போஸ்தலர் 13:14. அவர்கள் யூதருடைய ஜெப ஆலயத்திலிருந்து புறப்படுகையில்.



53

அடுத்த ஓய்வு நாளிலே இந்த வசனங்களைத் தங்களுக்கு சொல்ல வேண்டும் என்று புறஜாதியார் வேண்டிக் கொண்டார்கள்.



54

அடுத்த ஓய்வு நாளிலெ கொஞ்சங் குறையப் பட்டணத்தாரனைவரும் தேவ வசனத்தைக் கேட்கும்படி கூடிவந்தார்கள். அப் 13:42, 44.
ஓய்வுநாள் தோறும் ஜெபாலயத்திலே வந்து தொழுது கொள்வது பவுலின் வழக்கமாயிருந்தது.

12 □ அநேகம் பேர் கட்டு கதைகளினால் நிறப்பட்டு இருக்கிறார்கள்



55

(வசனம்: அப் 18:4)
ஓய்வு நாள்தோறும் அவன் ஜெப ஆலயத்திலே சம்பாஷணைப் பண்ணி யூதருக்கும் கிரேக்கருக்கும் புத்தி சொன்னான்.
இந்த வேத உண்மைகளிலிருந்து, கிறிஸ்துவோ அல்லது அவரது சீஷர்களோ தொழுகையின் நாளை மாற்றவில்லையென்பது தெளிவாகிறது. அப்படிப்பட்ட மாறுதலை வேதாகமம் கட்டளையிடவுமில்லை.



56

ஓய்வுநாள் மாற்றத்தைக் குறித்து புதிய ஏற்பாட்டின் எந்த எழுத்தாளுரும் குறிப்பிடவில்லை. அப்படிப்பட்ட ஒருமாற்றம் நடைபெற்றிருக்குமானால் புதிய ஏற்பாட்டில் அதுவே பிரதானமான செய்தியாயிருக்கும்.




57


(வசனம்: சங்கீதம் 89:34)
என் உதடுகள் விளம்பினதை மாற்றாமலும் இருப்பேன் என தேவன் கூறுகிறார்.
சங்கீதம் 89:34.
தேவன் தம்முடைய பிரமாணத்தை மாற்றவில்லை மற்றும் அதை மாற்ற எவருக்கும் அதிகாரமில்லை.
ஞாயிறு ஆசரிப்பை கடைபிடிக்கும் சபைகளின் பண்டிதர்கள் இதை நன்றாக அறிந்துள்ளனர்.


58


கத்தோலிக்க சபையின் கார்டினல் ஜேம்ஸ் கிப்பன்ஸ் ஒருமுறை எழுதுகையில் :
வேதாகமத்தை ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம் வரைக்கும் வாசித்தாலும் ஞாயிறுக்கிழமையை பரிசுத்த நாள் எனக்கூறும் ஒரு வசனத்தைக் கூட கண்டுபிடிக்க முடியாது.


59

மார்க்க அனுசரிப்புக்காக சனிக்கிழமையையே வேதாகமம் வலியுறுத்துகிறது.
எங்கள் பிதாக்களின் விசுவாசம், பக்கம் 111, 112.


60

க்லோவிஸ் ஜி. சேப்பல் என்னும் மெதடிஸ்ட் சபையைச் சார்ந்தவரும் அதே கருத்தை கூறுகிறார். ஏழாம் நாளிலிருந்து முதலாம் நாளின் மாற்றத்திற்கு வேதாகமம் முழுவதையும் தேடினாலும் ஒரு வசனத்தைக் கூட கண்டுபிடிக்க முடியாது.


61


ஏழாம் நாளிலிருந்து முதலாம் நாளின் மாற்றத்திற்கு வேதாகமம் முழுவதையும் தேடினாலும் ஒரு வசனத்தைக் கூட கண்டுபிடிக்க முடியாது.
வாழ்க்கைக்கு பத்து விதிகள். பக்கம் 61.


62

கிறிஸ்துவோ அல்லது அவரது பின்னடியார்களோ வேறு ஒரு நாளை ஆசரித்ததாகவோ, ஆசரிக்கச் சொன்னதாகவோ வேதத்தில் எவ்வித ஆதாரமும் கிடையாது.
அப்படியானால் ஞாயிறு ஆசரிப்பு வந்தது எங்ஙனம் என்று நீங்கள் கேட்கலாம். பக்கம் 35.


63

சாக்ரட்டீஸ் ஸ்காலஸ்டிக்ஸ் என்ற 5ம் நூற்றாண்டு வரலாற்று ஆசிரியர் கூறுவதிலிருந்து கிட்டத்தட்ட எல்லா கிறிஸ்தவ சபைகளுமே திருவிருந்து ஆராதனையை ஒவ்வொரு ஓய்வுநாளிலும் கொண்டாடினர் என்று அறிந்து கொள்ளுகின்றோம்.


64

இருப்பினும் ரோமிலிருந்த அலெக்ஸான்டிரிய கிறிஸ்தவர்கள் பழைய பழக்க வழக்கத்தினிமித்தம் இதை பின்பற்றவில்லை.
சபை வரலாறு, சி.பி ஹேய்னஸ் எழுத்துகளிலிருந்து, ஓய்வுநாளிலிருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு என்ற புத்தகத்திலிருந்து பக்கம் 35.


65

மத்திய காலங்களில் அனேக சபைகளில் ஏழாம் நாள் ஆசரிப்பான ஓய்வு நாள் ஆசரிக்கப்பட்டது என்பதற்கு இக்காலத்தில் உலகெங்கிலும் சரித்திர ஆதாரங்கள் இருக்கின்றன.


66


அனேக சபை சரித்திர ஆசிரியர்களின் கருத்தப்படி இந்த படிப்படியான மாற்றம் கி.பி.70க்கும் கி.பி.135ம் இடையில் ஏற்பட்டிருக்க வேண்டும். இக்காலத்திலே யூதர்களுக்கும் ரோமர்களுக்குமிடையே கசப்பான அனுபவம் காணப்பட்டது.

12  அநேகம் பேர் கட்டு கதைகளினால் நிறப்பட்டு இருக்கிறார்கள்




67

யூதர்களுக்கே விரோதமாக ரோமர்களிடம் காணப்பட்ட குரோதமனப்பான்மை மெதுவாக கிறிஸ்தவர்களுக்கும் யூதர்களுக்குமிடையே வளர்க்கப்பட்டது. யூத பழக்க வழக்கங்களுக்கு விரோதமான போக்கு ரோம சாம்ராஜ்யம் முழுவதிலும் ஊக்குவிக்கப்பட்டது. கிறிஸ்தவர்கள் தங்களை யூதர்களுடன் சேர்த்துப் பார்க்க விருப்பமாற்றிருந்தனர். ஆகவே ஓய்வுநாள் ஆசரிப்பை அனேக கிறிஸ்தவர்கள் குறைத்துக் கொள்ளலாயினார்.




68

இப்படிப்பட்ட காலத்திலேயே ஞாயிறு ஆசாரிப்பு மற்றும் ஈஸ்டர் - ஞாயிறு சபைக்கு உள்ளே புகுந்தது என்பது ஏற்றுக் கொள்ளப்பட வேண்டிய கருத்தாகும்.




69

ரோம அதிகாரிகளிடம், தங்களை யூதர்களிடமிருந்து வித்தியாசப்படுத்திக் காட்டுவதற்கு இது பயன்படுத்தப்பட்டது.
பக்கம் 237.



70

இதை மனதில் கொண்டு பார்த்தால் ஏன் ரோமப் பேரரசின் தலைமை பட்டணங்களில் வசித்த கிறிஸ்தவர்கள் தங்கள் ஓய்வு நாளை ஆசரிப்பதிலிருந்து தங்களை பிரித்துக் கொண்டனர் என்பது விளங்கும். ஏனெனில் அவ்விடங்களில் யூதர்களுக்கு விரோதமான போக்கு மிக அதிகமாய் காட்டப்பட்டது.




71

(விடீயோ பிரிவு 7)
மேலும் ரோமாபுரியிலிருந்து சபை ஓய்வுநாள் ஆசரிப்பை மிக எளிதாக கைவிட்டுவிட்டது. ஏனெனில் அங்கிருந்த சபையோர் அனேகமாக அஞ்ஞான மார்க்கத்திலிருந்து வந்தவர்களே.




72

(வசனம்: ரோமர் 11:13)
இங்கு பவுல் ரோமாபுரியிலுள்ள சபையை அழைக்கும் விதத்தைக் கவனியுங்கள்.
புறஜாதியாராகிய உங்களுடனே பேசுகிறேன். ரோமர் 11:13.


73

இந்த கிறிஸ்தவர்கள் புறஜாதியிலிருந்து மனந்திரும்பினபடியினால், ஓய்வுநாள் ஆசரிப்பில் காலங்காலமாக பழக்கப்பட்ட யூதர்களைப்போல ஓய்வுநாள் ஆசரிப்பில் நன்கு பண்படவில்லை.


74

வாரத்தின் மற்ற நாட்களுக்குப் பதிலாக ஞாயிறு தெரிந்து கொள்ளப்பட்டது ஏன்?
அது ஒரு நல்ல கேள்வி?
ரோம சாம்ராஜ்யத்தில் வாழ்ந்த அஞ்ஞானிகள் அனேக ஆண்டுகளாய் சூரியனை வணங்கி வந்தவர்களே. ஆகவெ சூரியனுடைய நாளை ஆசரித்தனர்.


75

ரோம பேரரசர்கள் தங்களை சூரியக் கடவுளாகவே கூறிக் கொண்டனர். மேலும் அந்த முத்திரையை தங்களது நாணயங்களிலும், கட்டிடங்களிலும் பொறித்து, குடிகள் அனைவரும் சூரியனை வணங்கும்படி கட்டளையிட்டனர்.
சில இறை பண்டிதர்களின் கருத்துப்படி இப்படி செய்வதன் மூலம் சபை வளர நல்ல வாய்ப்பு இருப்பதாக கண்டனர். சில அஞ்ஞான பழக்க வழக்கங்களை வைத்துக் கொள்வதன் மூலம் அனேகர் கிறிஸ்தவ மார்க்கத்துக்குள் வருவார்கள் என்பதும், கிறிஸ்தவ சபைக்கு வந்த பின்பும் தங்களுடைய மார்க்கத்திலேயே இருப்பதான உணர்வு ஏற்படும். மேலும் சாம்ராஜ்யம் முழுவதிலுமுள்ள குடிகள் ஒரு பெரிய மார்க்கத்தின் மூலமாக ஒன்றிணைக்கப்படுவார்கள்.


76

பல நூற்றாண்டுகளாக ஞாயிறு பரிசுத்த நாள் என்றில்லாமல் விடுமுறை தினமாகவே ஆசரிக்கப்பட்டது. பிற்காலத்தில் இரண்டு நாட்களும் பரிசுத்த நாளாக கருதப்பட்டது.


77

கீழ்கண்ட கருத்தை அப்போஸ்தல முறைமைகள் என்ற புத்தகத்தில் 23 அதிகாரத்திலிருந்து அறிகிறோம். கிறிஸ்தவர்கள் கவலையீனமாக மாறிவிட்டார்களென கூறுவதற்கில்லை. படிப்படியாக அவர்கள் தங்களது விசுவாசத்தை விட்டுக் கொடுத்துவிட்டார்கள்.

12 □ அநேகம் பேர் கட்டு கதைகளினால் நிறப்பட்டு இருக்கிறார்கள்



78

அப்போஸ்தல சபையில் காணப்பட்ட தூய்மை மற்றும் பரிசுத்தம், இரண்டாம், மூன்றாம் சந்ததி கிறிஸ்தவர்களிடையே குறைந்து போயிற்று.




79

அவர்களிடையே விட்டுக்கொடுத்தல் மற்றும் மருளவிழுகைக்கான ஆதாரங்கள் காணமுடிகிறது.




80

முதலாவத ஞாயிறு ஆசரிப்பு சட்டம் ரோம சக்கரவர்த்தியான கொனசிந்து ராயனாலே மார்ச் 7 கி.பி.321ல் இடப்பட்டது. இதுவே சபை சத்தியத்தை விட்டுக் கொடுத்துவிட்டது என்பதற்கு ஆதாரம்.



81

அதே வேளையில் அஞ்ஞானிகள்: சூரிய வணக்க நாளான ஞாயிற்றுக் கிழமையிலே நியாயதிபதிகளும், பட்டணவாசிகளும் ஓய்ந்திருக்க வேண்டும். எல்லா தொழில் கூடங்களும் மூடப்பட வேண்டும்.




82

கிராமப்புறங்களில் உள்ளவர்கள் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் தாராளமாய் தங்களது கடமையைச் செய்யலாம்.
கிறிஸ்தவ சபையின் சரித்திரம், 1902ம் பதிப்பு 3ம் பாகம் பக்கம் 380.


83

ஞாயிறு ஆசரிப்பு கிறிஸ்தவ சபையின் பிரிக்கமுடியாத பகுதியென்று ரோம சபை லாவோதிக்கேயாவில் கூடி இயற்றிய சட்டம், ஞாயிறு ஆசரிப்புக்கான முதல்படியாகும்.



84

கி.பி.325ம் ஆண்டு ரோமில் பிஷப்பாயிருந்த சில்வஸ்டர் முதல் நாளை கர்த்தருடைய நாள் என்று அழைத்தார் கிஸ்டோரியா எக்ளிஸ்டிகா 739 கி.பி.364ல் லவோதிக்கேயாவில் கூடின மற்றொரு ஆலோசனைக் கூட்டத்தில் கீழ்கண்ட சட்டம் இயற்றப்பட்டது.


85

கிறிஸ்தவர்கள் யூதர்கள் பின்பற்றி (ஓய்வு நாளை கடைபிடித்து) சனிக்கிழமைகளில் ஓய்ந்திருக்கக் கூடாது... அந்நாளில் வேலை செய்ய வேண்டும்.


86


அதே சமயம் கர்த்தருடைய நாளை கனப்படுத்தி கூடுமான மட்டும் அந்நாளில் எந்த வேலையும் செய்யாமல் நல்ல கிறிஸ்தவர்களாயிருக்க வேண்டும்.


87

அந்நாளில் எந்த வேலையும் செய்யாமல் சபைகளின் ஆலோசனை கூட்டங்களின் சரித்திரம் 2ம் பாகம் பக்கம் 316.


88

இப்படிப்பட்ட கட்டளைகளுக்குப் பின்னும் ஆறாம் நூற்றாண்டிலும் கிறிஸ்தவர்கள் பரிசுத்த ஓய்வு நாளை கடைபிடித்தனர்.


89

ஏழாம் நாளில் கட்டளைப்படி வேலை செய்யாமல் இருப்பவர்கள் அந்திக் கிறிஸ்துவின் தீர்க்கதரிசிகளாவர். ஞாயிறு ஆசரிப்பு சட்டம், சி.பி. ஹேய்னஸ், ஓய்வு நாளிலிருந்து ஞாயிற்றுக்கிழமை, பக்கம் 43.



90

(வீடியோ பிரிவு 7)
இன்று இருப்பதுபோல அந்நாட்களிலே வேதாகமம் ஒவ்வொருவரிடமும் இருக்கவில்லையென்பதை மனதிலே கொள்வோமாக. வேத உபதேசங்கள் வாய்மொழியாகவே உரைக்கப்பட்டபடியால் சாதாரண விசுவாசிளால் வேத வாக்கியத்திற்கும் பாரம்பரியத்திற்குமிடையே உள்ள வித்தியாசத்தை பிரித்து பார்ப்பது அரிதாயிருந்தது.


91

கிறிஸ்து மற்றும் அவருடைய சீஷர்கள் சென்ற பின்பு பல நூற்றாண்டுகளுக்குப் பின் சத்தியம் எது என்பதை ஜனங்கள் அறியாதிருந்தார்கள்.

12  அநேகம் பேர் கட்டு கதைகளினால் நிறப்பட்டு இருக்கிறார்கள்




92

புரட்டஸ்தாந்து சீர்திருத்தம் வந்தபோதோ தேவனுடைய வசனத்தின் இடத்தை அனேக சடங்குகளும், பாரம்பரியங்களும் பிடித்துக் கொண்டதை அறிந்து கேள்விகளை எழுப்பினர்.





93

வேதாகமம், வேதாகமம் மட்டுமே நமது விசுவாச வாழ்க்கையின் சட்டம். என்பதே சீர்திருத்த இயக்கத்தின் குரலாயிருந்தது.



94

ஹஸ் மற்றும் ஜெரோம் போன்றோர் தங்களுடைய விசுவாசத்திற்காக தங்களையே எரியும் அக்கினிக்கு ஒப்புக் கொடுத்தார்கள்.



95

எப்படியாயினும் ஆறாம் நூற்றாண்டிற்கு பின், ஓய்வு நாள் சத்தியம் பாரம்பரியத்திற்கு இடையே மறைக்கப்பட்டது. வெகு சிலரே வேதாகமம் என்ன கூறுகிறதென்பதை ஆராய்ந்து பரிசோதித்தார்கள். மற்றவர்களோ தங்களிடம் வந்தவைகளை உண்மையா அல்லது கட்டுகதையா என்பதைக் கூட கேட்காமல் அப்படியே ஏற்றுக் கொண்டனர்.



96

சில வேளைகளில் கேட்டு விசாரிக்காமலே ஜனங்கள் ஏற்றுக் கொண்டனர். பல நூற்றாண்டுகளாக சூரிய குடும்பத்திற்கு பூமியே மையம் கொண்டிருப்பதாகவும் சூரியன் மற்றும் ஏனைய கிரகங்களெல்லாம் பூமியை சுற்றி வருவதாக நினைத்தனர். இதை கோப்பர்நிகஸ் என்பவர் தவறு என்று நிருபிதிதுக் காட்டினார். பூமியல்ல சூரியனே, சூரிய குடும்பத்தின் மையம் என்றார்.
இக்கருத்தை வன்மையாக எதிர்த்தவர்கள் சபையின் தலைவர்களே, தேவனுடைய பரலோகத்தை உன்னால் மாற்ற முடியாது என அவரை கடிந்து கொண்டனர். உண்மையில் கோப்பர்நிகஸ் இறைவனுடைய பரலோகத்தை மாற்ற முயற்சிக்கவில்லை.
அறிவுபூர்வமற்ற பாரம்பரியம் உண்மையல்ல என்பதை சுட்டிகாட்டி உண்மையை வெளிப்படுத்தினார். பல நூற்றாண்டுகளாக நாம் நம்பிக் கொண்டிருந்தோம் என்பதினாலே அது உண்மையாகிவிடாது.
ஓய்வு நாள் மாற்றப்பட்டது எப்படி? கத்தோலிக்க சபையின் எழுத்தாளர் கூறும் ஆச்சரியமான காரியங்கள் இந்த உண்மையை வெளிப்படுத்தும்.




97

புரட்டஸ்தாந்து சபை உருவாவதற்கு ஓராயிரம் ஆண்டுகளுக்கு முன்னதாகவே அது தன் தெய்வீக பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறது.




98

சனிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றப்பட்டது. கிறிஸ்தவ ஓய்வு நாள், பக்கம் 16.



99


கான்வர்ட் கேட்டிகிஸம் என்ற புத்தகத்திலிருந்து நாம் இவ்வாறு வாசிக்கின்றோம்:



100

கேள்வி - ஓய்வு நாள் எது?

12  அநேகம் பேர் கட்டு கதைகளினால் நிறப்பட்டு இருக்கிறார்கள்




101

பதில் - சனிக்கிழமையே ஓய்வு நாள்.



102

கேள்வி - ஓய்வு நாளுக்கு பதிலாக நாம் ஞாயிற்றுக்கிழமையை ஆசரிப்பதேன்?



103


பதில் - ஏனென்றால் கத்தோலிக்க சபை அதன் பரிசுத்தத்தை சனிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு மாறுதல் செய்துள்ளது. இந்த மாற்றம் கி.பி.336ல் லவோதிக்கேயாவில் கூடின ஆலோசனை சங்கத்தால் செய்யப்பட்டது.


104

கத்தோலிக்க சபை இதை மாற்றியதைக் குறித்து வெளிப்படையாக திறந்த மனதுடன் ஒத்துக் கொள்வதேன்?
இதற்கான பதிலில், பாரம்பரியத்தை பின்பற்றுவதில் சபைக்கிருக்கின்ற அதிகாரத்தை காட்டுவதற்கு என்று கூறப்பட்டுள்ளது.


105

சீர்திருத்தக் காலத்தில் புரட்டஸ்தாந்துகளுக்கும் கத்தோலிக்கருக்குமிடையே நிலவிய முக்கியமான வித்தியாசங்கள் சபையில் பாரம்பரியத்தின் அதிகாரம் எப்படிப்பட்டது என்பதே. மார்ட்டீன் லூத்தர், வேதாகமம், வேதாகமம் மட்டுமே என்று விடுத்த சவால் கத்தோலிக்க சபையால் ஏற்படுத்தப்பட்ட பாரம்பரியங்களை கேள்விக்குறியாக்கியது.



106

பாரம்பரியம் வேதாகமத்துடன் கொண்டிருக்கும் உறவில் கத்தோலிக்க சபை எந்த நிலையை எடுக்க வேண்டம் என்பதை தீர்மானிப்பதற்காகவே டிரண்ட் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இறுதியாக அதற்கா ன பதில் அளிக்கப்பட்டது அந்த கூட்டத்தில் ஆற்றப்பட்ட உரை சூழ்நிலையையே மாற்றினதை எச்.எச். ஹால்ட்ஸ்மன் என்பவர் பதிவு செய்துள்ளார்.



107

இறுதியாக, ஜனவரி 18, 1562ல் காலையிலே எல்லா தயக்கங்களும் தள்ளிவைக்கப்பட்டு,




108

ரீஜியோவின் ஆர்ச்பிஷப் தனது உரையில், வெளிப்படையாக வேதாகமத்தைவிட பாரம்பரியமே உயர்வானது எனக் குறிப்பிட்டார்.
கேனன் அன் டிராடிசன், பக்கம் 263.
சபையின் உபதேசங்களுக்கு பாரம்பரியமே அடிப்படை என்ற கருத்தை வேதாகமம் ஆதரிப்பதில்லை.



109

இயேசு தமது காலத்தில் வாழ்ந்த மார்க்கத் தலைவர்களிடம் கேட்ட கேள்வியை உங்களால் நினைத்துப் பார்க்க முடிகிறதா?




110

(வசனம்: மத்தேயு 15:3,9)
அவர்களுக்கு அவர் பிரதியுத்தரமாக நீங்கள் உங்கள் பாரம்பரியத்தினாலே தேவனுடைய கற்பனையை ஏன் மீறி நடக்கிறீர்கள்?



111

மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள். மத்தேயு 15:3, 9.



112

அதன் பிரச்சினையை காண முடிகிறதா? கிறிஸ்துவையும் வேதாகமத்தையுமா அல்லது மனித பாரம்பரியத்தையா பின்பற்றுவீர்களா? இது வெறுமனே நாட்களையும் எண்ணிக்கைகளையும் பற்றியதல்ல. நமது எஜமானன் யார் என்பதை பற்றியது. இதுவே மிக முக்கியமான பிரச்சினை! உங்கள் எஜமானன் கிறிஸ்துவா அல்லது மற்ற அமைப்புகளின் பாரம்பரியமா?


113


இதுவரைக்கும் சில பண்டிதர்கள், மற்றும் சரித்திர ஆசிரியர்களின் மேற்கோளை எடுத்துக் காட்டினோம். ஆனால் இங்கே ஓய்வுகள் மாற்றப்பட்டதற்கான புதிய காரணத்தை காண்கிறோம்.

12 □ அநேகம் பேர் கட்டு கதைகளினால் நிறப்பட்டு இருக்கிறார்கள்




114

உயிர்தெழுதலை மேன்மைப்படுத்துவதற்காக கத்தோலிக்க சபை ஞாயிற்றுக்கிழமையை முக்கியப்படுத்தி அந்த நாளே கிறிஸ்தவர்களின் தொழுகை நாளாக இருக்க வேண்டுமென தீர்மானித்தது. கேரி கீட்டிங், கதிதோலிசம் அண்ட பண்டமண்டலிசம் 1988, பக்கம் 38.




115

நீங்கள் நின்று யோசிப்பதற்கான வேறொரு காரணத்தை பரிசுத்த, கேத்தரின் கத்தோலிக்க சபையின் காவளர், மே 21, 1995ல் கூறியதாவது. முதலாம் நூற்றாண்டில் சபை மிகுந்த தைரியத்துடனும், புரட்சிகரமாகவும் செய்த மிகப்பெரிய மாற்றம் பரிசுத்த நாளைப் பற்றியதாகும்.



116

ஓய்வுநாள் சனிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு செய்யப்பட்ட மாற்றம். வேதாகம வழிநடத்துதலின் அடிப்படையில் செய்யப்படாமல் சபையின் தனிப்பட்ட விருப்பப்படியே செய்யப்பட்டது.



117

வேதாகமமே முழு அதிகாரம் கொண்டது என நினைக்கும் ஒவ்வொருவரும், நியாயப்படி ஏழாம் நாள் அட்வெண்டிஸ்தரைப் போல சனிக்கிழமையை பரிசுத்தமாக கடைபிடிக்க வேண்டும்.




118

தானியேல் தீர்க்கதரிசனம் 7 ம் அதிகாரத்தில் தேவன் சின்ன கொம்பைப் பற்றி வெளிப்படுத்தி யுள்ளார். தானியேல் 7:21, 25.



119

(வசனம்: தானியேல் 7:25)
காலத்தையும் பிரமாணத்தையும் மாற்ற நினைப்பான். என்ன தீர்க்கதரிசனம்!
பூமியிலுள்ள மார்க்க வல்லமை தேவனுடைய பிரமாணத்தை மாற்ற முயற்சிக்கும் என்பதற்கு இது ஒரு தெளிவான முன் அறிவிப்பாகும். பத்து கட்டளையில் காலத்தை குறித்துப் பேசும் ஒரே ஒரு பிரமாணம் - ஓய்வு நாளைப் பற்றிய கட்டளையாகும்.


120

வானத்தையும் பூமியையும் படைத்த தேவன் அன்று போல் இன்றும் மாறாதவராயிருக்கிறார். ஏதேன் தோட்டத்தில் தாம் ஏற்படுத்தியதைத அவர் மாற்றவில்லை. உண்மையைச் சொல்லப்போனால் இந்த தீர்க்கதரிசனம் சிருஷ்டிகரே நம்மை நியாயதீர்க்கப் போகிறவரென கூறி அவரையே பணிந்து கொள்ள வலியுறுத்திகிறது. அதை செய்யவிடாதபடி ரோம சபையே பிரமாணத்தை மாற்ற நினைக்கிறது.


121

இயேசு வரும்போது அவரை சந்திப்பதற்கு ஆயத்தமாகும்படி இந்த தீர்க்கதரிசனம் ஜனங்களை அழைக்கிறது. அந்த அழைப்புக்குச் செவிகொடுத்து ஆயத்தப்படுவோரைக் குறித்து வேதாகமம் விவரிப்பதாவது.



122

(வசனம் வெளிப்படுத்தல் 14:12)
தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக் கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும். வெளிப்படுத்தல் 14:12.



123

தேவன் பேரில் பற்றுதல் உள்ளவர்கள் அவருடைய பிரமாணத்திற்கு கீழ்படிந்து அதைக் கைக்கொண்டு நடப்பார்கள் என்று சொல்லித் தெரிய வேண்டியதில்லை.



124


ஆம், அவருடைய பரிசுத்த நாளை கைக்கொண்டு சிருஷ்டிகரை நினைக்கும்படி தேவன் நம்மிடம் கேட்கிறார். அவர் வாக்குபடி செய்வது அவரிடம் நாம் காண்பிக்கும் பயபக்தியை வெளிப்படுத்துகிறது. ஞாயிறு ஆசரிப்பை ஒருவன் கைக்கொள்ளும்போது அவன் மனித பாரம்பரியத்துக்கு கீழ்படிகிறான். தேவனுடைய சித்தத்தை நாம் அறிந்துகொண்டு அதை பின்பற்றுவதே நமது சிலாக்கியமாகும். மனித உபதேசங்களைக் குறித்து தேவன் கூறுவதாவது.



125


(வசனம்: மாற்கு 7:6, 7)
இந்த ஜனங்கள் தங்கள் உதடுகளினால் என்னைக் கனம் பண்ணுகிறார்கள். அவர்கள இருதயமோ எனக்குத் தூரமாய் விலகியிருக்கிறது.

12  அநேகம் பேர் கட்டு கதைகளினால் நிறப்பட்டு இருக்கிறார்கள்




126

மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாகப் போதித்து, வீணாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள். மாற்கு 7:6,7.



127

(வசனம்: மாற்கு 7:9)
பின்னும் அவர் - நீங்கள் உங்கள் பாரம்பரியத்தை கைக்கொள்ளும்படிக்கு தேவனுடைய கட்டளைகளை வியர்த்தமாக்கினது நன்றாயிருக்கிறது.
மாற்கு 7:9.



128

(வசனம்: மாற்கு 7:6)
அவர்கள் இருதயமோ எனக்குத் தூரமாயிருகிறது. என இயேசு கூறினார். உண்மையிலேயே இது அன்பைப் பற்றியது. இதயத்தைப் பற்றியதாகும்.



129

(வசனம்: 1 யோவான் 5:3)
நாம் தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்வதே அவரிடத்தில் அன்பு கூறுவதாம். அவருடைய கற்பனைகள் பாரமானவைகளுமல்ல.
1 யோவான் 5:3.



130

இயேசு ஒரு நாள் உபதேசித்துக் கொண்டிருந்தபோது, கேட்டுக் கொண்டிருந்தவர்களிடம் எல்லோரும் பரலோகம் செல்ல முடியாது எனக் கூறினார்.
ஒரு மரம் நல்ல மரமா கெட்ட மரமா என்பது அதன் கனிகளால் அறியப்படும் என்றார்.



131

(வசனம்: மத்தேயு 7:21)
பின்பு அவர், என்னை நோக்கி கர்த்தாவே, கர்த்தாவே என்று சொல்லுகிறவன் அதில் (பரலோக ராஜ்யத்தில்) பிரவேதிப்பதில்லை.



132

என் பிதாவின் சித்தப்படி செய்கிறவனே பரலோக ராஜ்யத்தில் பிரவேசிப்பான்.
மத்தேயு 7:21.


133

தேவன் தம்முடையவர்களின் கனியை பார்த்தே நன்கறிவார் என்பது தெளிவு, வெற்று வார்த்தைகளினால் அல்ல, அவர் சொல்லியதை செய்கிறவர்களே அவருடையவர்கள் அப்படிப்பட்டவர்களையே தேவன் தம்முடைய ராஜ்யத்திற்குள் வரவேற்பார்.


134

நீ அவரை நேசிப்பாயானால், அவரே உன்னை நடத்தும்படி அவரிடம் உன்னை ஒப்புக்கொடு.
நாம் ஓய்வு நாளை ஆசாரிக்கும்போது, நாம் கற்பனையை கடைபிடிக்கிறவர்களாக மட்டுமல்ல தேவனுடைய அற்புதமான ஆசீர்வாதங்களை பெற்றுக் கொள்ளத் தக்கதாக நமது வாழ்வைத் திறக்கிறோம்.



135

ஒவ்வொரு வாரமும் அந்த விசேஷித்த நாளை நமது சிருஷ்டி கர்த்தரிடம் செலவளிக்கும்போது அவரைக் குறித்து அதிகமதிகமாக அறிந்து கொள்ளுகிறோம்.
இந்த நாட்களில் நமது வாழ்க்கை மிகவும் துரிதமாய் செல்லுகிறது. அவைகளின் உடே நேரம், கிடைக்காத பொருளாய் உள்ளது.


136

மன உளைச்சல், நெருக்கம், வேகம் இவைகளின் மத்தியில் தேவன் வாரத்தில் ஒருநாள் அவரிடம் ஓய்வு கொள்ளும்படி கேட்கிறார்.
அந்த நாளில் அவரை தொழுது கொள்ளவும் அவரிடம் பேசவும் வேதவாக்கியத்தின் மூலம் அவர் பேசுவதைக் கேட்கவும் அவர் நம்மை அழைக்கிறார். ஒரு நாள் முழுவதையும் அவருடைய சமூகத்தில் நம்மை படைத்தவரோடு செலவழிப்பது எத்தனை பெரிய பாக்கியம்.

12 □ அநேகம் பேர் கட்டு கதைகளினால் நிறப்பட்டு இருக்கிறார்கள்


137

நண்பர்களே, வெளிப்படையாய் பேச விரும்புகிறேன். ஒரு புறம் சத்தியமும் மறுபுறம் பாரம்பரியமும் இருக்கிறது.  ஒரு புறம் வேதாகமும் மறு புறம் மனித உபதேசங்களும் உள்ளது.
ஒருபுறம் தேவனுடைய கற்பனை, மறுபுறம் மனித சட்டங்கள் உள்ளது.
ஒருபுறம் ஓய்வுநாள் மறுபுறம் ஞாயிறு உள்ளது. இதுநாள் பிரச்சனை அல்ல, எஜமானைப் பற்றிய பிரச்சினை.
இது தேவனுக்கு கீழ்படிகிறோமா என்பதல்ல. இயேசுவை பின்பற்றுகிறேனா என்பதே.  உன் வாழ்வை தேவனுக்கு ஒப்புக் கொடுத்து, மனித பாரம்பரியத்தை தள்ளி தேவனை பின்பற்ற தீர்மானிப்பாயா? நாம் ஜெபிக்கும்போதே இயேசுவே நான் உம்மை வாழ்நாள் முழுவதும் பின்பற்ற விரும்புகிறேன் என்பதை கூறுவாயா.

# 13  மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?



1

பரலோகமா? நரகமா? அல்லது ஒன்றும் இல்லாததா?


2

1956ம் ஆண்டு பெல்ஜியன் காங்கோ என்ற நாடு உள்நாட்டுப் போர் துவங்கின நேரம் டாக்டர் பால் கார்ல்ஸன் ஆஸ்பத்திரியை கலகக்காரர்கள் பிடித்து டாக்டர் கார்ல்ஸன்யும் மருத்துவ ஊழியர்களையும் கொன்றனர். பல நாட்கள் கழித்து ஓர் இடத்தில் டாக்டர் கார்ல்ஸன் மரித்துப்போன சரீரம் கிடந்தது. அவருடைய பாக்கெட்டில் ஒரு புதிய ஏற்பாடு தேதி குறிப்பிடப்பட்டு இருந்தது. அது ஆவர் மரிக்குமுன் எழுதப்பட்டது. அதில் சமாதானம் என்று எழுதப்பட்டிருந்தது. அந்த மரிக்கின்ற அந்த சூழ்நிலையிலும் டாக்டர். பால் கார்ல்ஸனுக்கு சமாதானம் எங்கிருந்து வந்தது?


3

மரணத்தின் பள்ளத்தாக்கில் நின்று கொண்டிருக்கும்போது சமாதானம் வருமா? மரணத்திலிருந்து நம்மை தடுப்பது எது? மரணத்தைக் குறித்து அநேக புரியாத புதிர்கள் உண்டு. ஒரு மனிதன் மரிக்கும்போது என்ன நடக்கின்றது? பரலோகமா? நரகமா? அல்லது ஒன்றுமில்லாத சூழ்நிலையா? மரித்த சரீரத்திற்குள் என்ன ஏற்படுகின்றது என்று நமக்குத் தெரியும்? ஆகையால் அதன் உள்ளே இருந்த உயிருள்ள மனிதன் எங்கே? மனிதர்கள் மரிக்கும்போது, எங்கே போகின்றார்கள்?


4

மரணத்தின் கொடூரத்தையும், பிரிவையும், தாங்க முடியாமல், நம் அன்பானவர்களை இழக்க கொடுக்கும் போது, அவர்களோடு தொடர்பு கொள்ள முடியாதா? என ஏங்குகின்றோம்.


5

மிகவும் ஆணித்தரமாக இது சாத்தியம்தான் என்று கூறுகின்ற மக்களும், இயக்கங்களும் உண்டு. ஜேம்ஸ் வான் பிராக், அவருடைய பரலோகத்தோடு பேசுதல், புத்தகத்தில் மரித்த பிறகும் ஒருவனோடு உயிரோடிருக்கும் நாம் பேச முடியும் என்று கூறுகின்றார்.

# 13  மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?


6

நாம் கல்லறைக்கும், மரணத்திற்கும் நெருங்குகின்ற வேளையில் மரணத்தை குறித்த சத்தியத்தை தெளிவாக தெரிந்துக்கொள்ள வாஞ்சிக்கின்றோம்.



7

(வீடியோ பிரிவு 5)
தேவன் இந்த தலைப்பைக் குறித்து ஏதேனும் கூறியிருக்கின்றாரா? நாம் மரிக்கும்போது என்ன நடக்கும் என்று வேதம் கூறுகின்றதா? ஆணித்தரமாக ஆம் என்று கூறலாம்.


8

இதற்கான பதில் இயேசு கிறிஸ்து உயிர்த்தெழுதலின் மூலம் கூறப்படுகின்றது.


9

இயேசு சிலுவையில் மரித்த பின்பு, அவருடைய நண்பர்கள் அவருடைய சரீரத்தை, வேதம் சொல்லும் வண்ணம் யோசேப்பின் புதிய கல்லறையில் வைத்தார்கள்.


10

ரோம மன்னர் பிலாத்து போர்ச் சேகர்களை கல்லறையின் வாயிலில் காவல் காக்க வைத்திருந்தார். யாரும் இயேசுவின் சரீரத்தை திருடமுடியாதபடி தடுத்தனர். ஆனால் பரலோக பிதா தன் சித்தபடி செய்தார்.


11

ஞாயிறு காலை சூரிய வெளிச்சத்திற்கு முன்பே, பரலோகத்திலிருந்து பிரகாசமான தூதன் வந்து, கல்லறையிலிருந்து கல்லை புரட்டி இயேசுவை உயிரோடே எழுப்பினார்.


12

உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்து மரணத்தை வென்றவரானார். போர்ச்சேவகர்கள் தேவதூதனுடைய பிரகாசத்தினால் செத்தவர்களைப் போல கீழே விழுந்தார்கள்.

# 13 □ மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?



13

கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலின் வெற்றி ஆதித்திருச்சபையின் வளர்ச்சிக்கு பெரிய ஊக்க சத்தியாக இருந்தது. உயிர்த்தெழுதலைக் குறித்து ரோமர்களுக்கு நம்பிக்கையில்லை. அவர்களுக்கு தெரிந்ததெல்லாம். கல்லறை ஆழம், யாரும் உள்ளே, உயிரோடு இருக்க முடியாது என்று நம்பினார்கள், இப்போது கிறிஸ்து உயிர்த்தெழுந்தினாலே நம்பிக்கை உடையவராக இருக்கின்றோம். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் ஒரு நாள் உயிரோடே எழும்புவார்கள்.



14

ரோம் நகரில் உள்ள கல்லறை எழுத்துகளில் ரோமர்களின் மரணத்திற்கும், கிறிஸ்தவர்களின் மரணத்திற்கும் வித்தியாசம் காணப்படுகின்றது. ரோம கல்லறையில் காணப்படும் நம்பிக்கையற்ற நிலைமையை பாருங்கள்.



15

மறுபடியும், மறுபடியுமாக நித்திய பிரிவு - போன்ற துக்கமான வார்த்தைகள் ரோம அஞ்ஞான கல்லறைகளில் இருப்பதை காணலாம். ஆனால் கிறிஸ்தவ கல்லறைகளில்



16

நாம் மறுபடியும் சேரும் வரைக்கும் விடை கொடுக்கிறோம். அல்லது காலை வரைக்கும் இரவு வணக்கம். கிறிஸ்தவ கல்லறைகளில், தைரியம், நம்பிக்கை, உயிர்தெழுதலின் எதிர்பார்ப்பு ஆகியன காணப்படுகின்றது.




17

(வசனம். வெளிப்படுத்தல் 1:18)
மரித்தேன். ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன். ஆமென்.




18

நான் மரணத்திற்கும் பாதாளத்திற்குமுரிய திறவுகோல்களை உடையவராயிருக்கிறேன். வெளிப்படுத்தல் 1:18.
ஒரு கிறிஸ்தவனுக்கு கல்லறைக்கு பிறகு தேவன் என்ன வைத்திருக்கிறார் என்று அறியவில்லையென்றால், மரணத்திற்கு பின் எந்த நம்பிக்கையும் இல்லை.

# 13 □ மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?



19

1 கொரிந்தியர் 15ம் அதிகாரத்தில பவுல் உயிர்த்தெழுதலைக் குறித்து அழகாக பேசுகின்றனர். உயிர்த்தெழுதல் இல்லை என்போமானால் ஒரு கிறிஸ்தவனுக்கு எந்த நம்பிக்கையும் இல்லாமற் போய்விடும், என்று கூறுகின்றனர்.




20

(வசனம்: 1 கொரிந்தியர் 15:16-18)
மரித்தோர் உயிர்த்தெழாவிட்டால் கிறிஸ்துவும் எழுந்திருக்கவில்லை.




21

கிறிஸ்து எழுந்திராவிட்டால், உங்கள் விசுவாசம் வீணாயிருக்கும், நீங்கள் இன்னும் உங்கள் பாவங்களில் இருப்பீர்கள்.





22

கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்களும் கெட்டிருப்பார்களே.
1 கொரிந்தியர் 15:16-18.



23

பவுல் அப்போஸ்தலர் ஏன் இப்படி கூறுகின்றார் என்பதை புரிந்துகொள்ள மரணத்தை குறித்து வேதம் என்ன சொல்லுகின்றது என்பதை அறிய வேண்டும்.



24

தேவன் மனிதனை படைத்தபோது அவர்கள் மரிக்க வேண்டும் என்பது தேவ திட்டமல்ல. ஆதாமை படைத்தவுடன், தாம் படைத்தவற்றை எல்லாம் பார்த்தார். வேதம் ஆதியாகமம் 1:32ல் தேவன் மிகவும் நல்லது என்று கண்டதாக கூறுகின்றது. ஆதாம் பாவம் செய்வதற்குமுன், மரணமில்லை, வியாதியில்லை, துக்கமில்லை, தேவன் கூறியதை எண்ணிப்பாருங்கள்.




25

(வசனம்: ஆதியாகமம் 2:16,17)
தேவனாகிய கர்த்தர் மனுஷனை நோக்கி நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையும் புசிக்கவே புசிக்கலாம்.

# 13 □ மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?



26

ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியை புசிக்க வேண்டாம்.




27

அதை புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் என்று கட்டளையிட்டார்.
ஆதியாகமம் 2:16, 17.


28

அடுத்த அதிகாரம் மிகவும் மகிழ்ச்சியாக இல்லை. ஒரு துக்கமான சம்பவத்தை ஆதியாகமம் 3ம் அதிகாரம் குறிப்பிடுகின்றது.


29

பிசாசானவன், வலு சர்ப்பத்தின் வடிவிலே வந்த ஏவாளை வஞ்சித்து விலக்கப்பட்ட கனியை புசிக்க வைத்துத் தேவனுடைய வார்த்தையை மீற வைத்தான். ஏவாள் தேவனுடைய கட்டளையை சாத்தானிடம் கூறினாள். ஆனால் பிசாசு.




30

(வசனம்: ஆதியாகமம் 3:4)
நீங்கள் சாகவே சாவதில்லை. வசனம் 4.
வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள மரணத்தைக் குறித்த முதல்பொய். ஏவாள் பிசாசை நம்பி, விலக்கப்பட்ட கனியை புசித்தாள்.


31

ஆண்டவர் ஆதாமையும், ஏவாளையும் ஜீவ விருட்சத்தின் கனியை புசிப்பதிலிருந்தும் விலக்க வேண்டிய கட்டாயம் வந்தது.




32

(வசனம்: ஆதியாகமம் 3:22, 23)
... இதோ மனுஷன் நன்மை தீமை அறியத்தக்கவனாய் நம்மில் ஒருவரைப்போல் ஆனான்.

13 □ மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?

# 13 மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?



33

இப்பொழுதும் அவன் தன் கையை நீட்டி ஜீவவிருட்சத்தின் கனியையும் பறித்து, புசித்து என்றைக்கும் ஏன் உயிரோடிராதபடிக்குச் செய்ய வேண்டும்.




34

ஆகையால் தேவனாகிய கர்த்தர் அவனை ஏதேன் தோட்டத்திலிருந்து அனுப்பிவிட்டார்.




35

அவன் எடுக்கப்பட்ட மண்ணைப் பண்படுத்த.
ஆதியாகமம் 3:22, 23.



36

ஜீவனின் மூலகாரணரான தேவனிடத்திலிருந்தும், ஜீவ விருட்சத்திலிருந்தும், பிரிக்கப்பட்டபடியால், மரணம் மனுஷருக்கு ஏற்பட்டது.



37

(வசனம்: ஆதியாகமம் 3:18, 19)
இந்த நேரத்தில் தேவன் ஆதாமிடம் சொன்னார்.
வெளியின் பயிர் வகைகளைப் புசிப்பாய்.



38

நீ பூமிக்கு திரும்புமட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய்.



39

நீ பூமியிலிருந்து எடுக்கப்பட்டாய். நீ மண்ணாயிருக்கிறாய். மண்ணுக்குத் திரும்புவாய்.
ஆதியாமம் 3:18, 19.

# 13  மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?


40

மரணம் பற்றி முழுவதும் என்ன என்றும் தேவனிடத்திலிருந்தும் நித்திய பிரிவினையிலிருந்தும் நம்மை இரட்சிப்பதற்கு தேவன் என்ன உபாயங்களை வைத்திருக்கின்றார் என்பதைப் புரிந்துக் கொளவதற்கான திறவுகோல் இங்கேதான் இருக்கிறது.



41

மண்ணிலிருந்து எடுக்கப்பட்ட மனிதன் அதனிடத்திற்கே திரும்புவான் என்று வேதம் கூறுகிறது. தேவன் ஆதாமை எப்படிப் படைத்தார் என்று பாருங்கள்.




42

(வசனம்: ஆதியாகமம் 2:7)
தேவனாகிய கர்த்தர் மனுஷனைப் பூமியின் மண்ணினாலே உருவாக்கி.



43

ஜீவசுவாசுத்தை அவன் நாசியிலே ஊதினார். மனுஷன் ஜீவாத்துமாவானான்.
ஆதியாகமம் 2:7.


44

தேவன் பூமியின் மூலக்கூறுகளை எடுத்து, மனிதனுக்கு ஒரு சரீரத்தைப் படைத்தார். மனிதனுக்கான சரீரத்தை உருவாக்குவதை அவர் முடித்தபோது, அவரிடம் ஜீவனற்ற ஒரு சடலம் மாத்திரம் இருந்தது - வெறும் சரீரம் மட்டும். அவனை ஒரு ஜீவாத்துமா ஆக்குவதற்கு இன்னும் சில காரியம் தேவைப்பட்டது. தேவன் ஆதாமின் நாசியிலே ஜீவசுவாசுத்தை ஊதினார். அவன் ஜீவாத்துமாவானான் என்பதை வேதம் இங்கே சொல்கிறது.



45

(வீடியோ 3 வினாடிகள்) நாம் இப்படி ஒரு சூத்திரத்தை ஏற்படுத்தலாம்.
சரீரம்- சுவாசம் ஒரு ஜீவாத்துமா.



46

(வீடியோ பிரிவு 3)
அல்லது மரணத்திற்கு, நாம் எழுதுவதாவது.
ஜீவாத்துமா - சுவாசம் சடலம்.

# 13  மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?



47

(வசனம்: பிரசங்கி 12:7)
இவ்விதமாய் மண்ணானது தான் முன்னிருந்த பூமிக்குத் திரும்பி, ஆவி தன்னைத் தந்த தேவனிடத்திற்கு திரும்பும்.
பிரசங்கி 12:7.
அதைத்தான் ஞானி பிரசங்கியில் சொல்கிறார்.


48

வேத புத்தகங்களிலேயே முதலாவதாக எழுதப்பட்ட யோபு புத்தகமும் மரணத்தைக் குறித்து இதேவிதமான சாராமசத்தைக் கூறுகிறது.



49

(வசனம்: யோபு 27:3)
என் சுவாசம் என்னிலும், தேவன் தந்த ஆவி என் நாசியிலும் இருக்குமட்டும். யோபு 27:3.
வேதம் கூறுவதைக் கவனியுங்கள், தேவன் தந்த ஆவி என் நாசியிலும் இருக்குமட்டும்.
வேதம் கூறுவதைக் கவனியுங்கள். தேவன் தந்த ஆவி என் நாசியிலும் இருக்குமட்டும்.


50

மனிதனைப் படைக்கும்போது அவனுடைய நாசியில் தேவன் அதைத்தான் வைத்தார்.




51

(வசனம்: சங்கீதம் 146:3, 4)
மற்றொரு வசனத்தைப் பார்ப்போம்.
பிரபுக்களையும், இரட்சிக்கத்திராணியில்லாத மனுஷனையும் நம்பாதேயுங்கள்.



52

அவனுடைய ஆவி பிரியும், அவன் தன் மண்ணுக்குத் திரும்புவான். அந்நாளிலே அவன் யோசனைகள் அழிந்துபோம்.
சங்கீதம் 146:3, 4.


53

ஆவி சரீரத்தைவிட்டுப் பிரிந்து, சரீரம், பூமிக்குத் திரும்புகிறது என்று மரணத்தைக் குறித்த சத்தியத்தை தாவீது ராஜா வெளிப்படுத்துகிறார். மனிதன் மரிக்கிறான்.




54

(வசனம்: பிரசங்கி 9:5, 6)
இது சாலொமோன் சொன்னதோடு ஒத்திருக்கிறது. உயிரோடிருக்கிறவர்கள் தாங்கள் மரிப்பதை அறிவார்களே. மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள். இனி அவர்களுக்கு ஒரு பலனுமில்லை.



55

அவர்கள் பேர் முதலாய் மறக்கப்பட்டிருக்கிறது.



56

அவர்கள் சிநேகமும், அவர்கள் பகையும், அவர்கள் பொறாமையும் எல்லாம் ஒழிந்து போயிற்று...
பிரசங்கி 9:5, 6.




57

(வீடியோ 5 வினாடிகள்)
அவன் ஒன்றும் அறியான்!
ஒன்றுமில்லை!
இல்லை! ஒன்றுமில்லை!
மரித்தவர்கள் பரலோகத்தில் தேவனைத் துதித்துக் கொண்டிருக்கைவில்லை என்று தாவீது எழுதினதோடு இது ஒத்துப்போகிறது. அப்படியானால், அவர்கள் எங்கே? என்று நீங்கள் கேட்கலாம்.



58

(வசனம்: சங்கீதம் 115:17)
தாவீது இதை முற்றிலும் தெளிவாக்குகிறார்.
மரித்தவர்களும், மவுனத்தில் இறங்குகிற அனைவரும் கர்த்தரைத் துதியார்கள்.
சங்கீதம் 115:17.



59

(வசனம் யோபு 14:10, 12, 13)
மனுஷனோவென்றால் செத்தபின் ஒழிந்து போகிறான். மனுபுத்திரன் ஜீவித்துப் போனபின் அவன் எங்கே?...



60

மனுஷன் படுத்துக்கிடக்கிறான். வானங்கள் ஒழிந்துபோகுமளவும் எழுந்திருக்கிறது இல்லை.

# 13  மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?




61

அவர்கள் நித்திரை தெளிந்து விழிக்கிறதும் இல்லை.



62

நீர் என்னைப் பாதாளத்தில் ஒளித்து, உமது கோபம் தீருமட்டும் என்னை மறைத்து வையும்.




63

என்னைத் திரும்ப நினைக்கும்படி எனக்கு ஒரு காலத்தைக் குறித்தால் நலமாயிருக்கும்.
யோபு 14:10, 12, 13.


64

மனிதன் மரித்து, பாதாளத்தில் வைக்கப்பட்டு, உயிர்த்தெழுதலின் நாள் வரை அவன் எழுந்திருப்பதில்லை என்பதை தேவனுடைய சொந்த வார்த்தை தன்னகத்தே கொண்டிருக்கிது. இதை அவர் எப்படி விளக்குகிறார் கவனியுங்கள்.




65

(வசனம் யோபு 14:14, 15)
மனுஷன் செத்தபின் பிழைப்பானோ? எனக்கு மாறுதல் எப்போது வருமென்று எனக்குக் குறிக்கப்பட்ட போராட்டத்தின் நாளெல்லாம் நான் காத்திருக்கிறேன்.



66

என்னைக் கூப்பிடும், அப்பொழுது நான் உமக்கு உத்தரவு சொல்லுவேன்.
யோபு 14:14, 15.



67

(வசனம்: யோபு 17:13)
அப்படி நான் காத்துக் கொண்டிருந்தாலும், பாதாளம் எனக்கு வீடாயிருக்கும், இருளில் என் படுக்கையைப் போடுவேன்.
யோபு 17:13. கே.ஜே.வி

# 13  மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?




68

மரணத்தைப் பற்றிய பேசும்போது நித்திரை என்ற வார்த்தையை யோபு பயன்படுத்துவதை கவனியுங்கள். அதே காரியத்தைத்தான் மற்ற வேதாகம எழுத்தாளர்களும் கூறுகின்றனர்.



69

(வசனம்: சங்கீதம் 13:3)
தாவீது எழுதுகிறார். என் தேவனாகிய கர்த்தாவே, நீர் நோக்கிப் பார்த்து, எனக்குச் செவி கொடுத்தருளும், நான் மரண நித்திரை அடையாதபடிக்கு என் கண்களை தெளிவாக்கும்.
சங்கீதம் 13:3.
மரண நித்திரை செய்வதைக் குறித்த பயம் தாவீதுக்கு இருந்தது. வாழ்வதற்க அவர் விரும்பினார்.




70


(வசனம்: தானியேல் 12:2)
பூமியின் தூளிலே நித்திரை பண்ணுகிறவர்களாகிய அநேகரில் சிலர் நித்திய ஜீவனுக்கும், சிலர் நித்திய நிந்தைக்கும், இகழ்ச்சிக்கும் விழித்து எழுந்திருப்பார்கள்.
தானியேல் 12:2.


71

தேவ வார்த்தைகளில் உள்ள முக்கியமான ஆறுதல்படுத்தும் சத்தியங்களில் ஒன்று ஒருவன் மரிக்கும்போது, அது ஆணோ அல்லது பெண்ணோ, வாழ்வின் பிரச்சனைகளின் தொந்தரவின்றி, ஜீவனைக் கொடுப்பவர் அழைக்கும் வரை, அமைதியாக இளைப்பாறுகிறான். வேதம் மரணத்தை நித்திகைக்கு ஒப்பிடுவது ஏதோ அதிசயமாய் இருக்கிறதா?


72

தாவீது ராஜா தான் மரிக்கும் நேரம் வந்தபோது, அவனுக்கு என்ன நடக்கும் என்பதை நாத்தான் தீர்க்கதரிசி அவனிடம் கூறினான்.



73

(வசனம்: 2 சாமுவேல் 7:12)
உன் நாட்கள் நிறைவேறி, நீ உன் பிதாக்களோடே நித்திரை பண்ணும்போது.
2 சாமுவேல் 7:12.

13  மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?

# 13 மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?


74

இயேசு தாமே மரணத்தை நித்திரை என்றழைத்தார். தன் அருமை நண்பன் லாசருவின் மரணத்தை விளக்கும்போது, அதே விளக்க வார்த்தையைத் தான் அவர் உபயோகித்தார். இயேசுவும், அவருடைய நெருங்கின சகாக்களும் எப்படி மரணத்தைப் பற்றிப் பேசினார்கள் என்று பார்ப்போம். பெத்தானியாவிலே ஒரு இல்லம் இருந்தது. லாசரு, மரியாள் மற்றும் மார்த்தாள் இருந்த அவர்களின் இயேசு அடிக்கடி இல்லத்திற்கு சென்று வருவார்.



75

(வசனம்: யோவான் 11:5)
வேதம் கூறுகிறது. இயேசு மார்த்தாளிடத்திலும், அவளுடைய சகோதரரியிடத்திலும், லாசருவினிடத்திலும் அன்பாயிருந்தார். யோவான் 11:5.


76

ஒரு நாள் இயேசுவும், அவர் சீஷர்களும் யோர்தான் நதியண்டை இருந்தபோது, பெத்தானியாவில் தன் மூன்று நண்பர்களிடமிருந்து, லாசரு வியாதிப்பட்டிருக்கிறான் என் உடனடி செய்தியைப் பெற்றார். ஆனால் தான் இருந்த இடத்திலே பின்னும் இரண்டு நாட்கள் தங்கினார்.



77

(வசனம் யோவான் 11:11, 12, 14, 15).
நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான். நான் அவனை எழுப்பப்போகிறேன்.



78

அதற்கு அவருடைய சீஷர்கள். ஆண்டவரே, அவன் நித்திரையடைந்திருந்தால் சுகமடைவான் என்றார்கள்.



79

அப்பொழுது இயேசு அவர்களை நோக்கி வெளிப்படையாய் சொன்னது, லாசரு மரித்துப்போனான்.

# 13 □ மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?



80

நான் அங்கே இராததினால் நீங்கள் விசுவாசமுள்ளவர்களாகிறதற்கு ஏதுவுண்டென்று உங்கள் நிமித்தம் சந்தோஷப்படுகிறேன். இப்பொழுது அவனிடத்திற்குப் போவோம் வாருங்கள் என்றார். யோவான் 11:11-15.


81

அவர்கள் பெத்தானியாவில் அந்தக் குடும்பம் இருந்த இடத்திற்கு தங்கள் வழியிலே சென்றார்கள். அப்பட்டணத்தை நெருங்கும் போதே. அவர்களை சந்திக்க மார்த்தாள் ஓடி வந்தாள்.



82

(வசனம் யோவான் 11:21, 23, 24).
மார்த்தாள் இயேசுவினிடத்தில் சொன்னதாவது, ஆண்டவரே, நீர் இங்கேயிருந்தீரானால் என் சகோதரன் மரிக்கமாட்டான். யோவான் 11:21 அவள் சொன்னது சந்தேகத்திற்கிடமின்றி சரிதான். ஆனாலும், இயேசு ஒரு திட்டம் வைத்திருந்தார்.



83

இயேசு அவளை நோக்கி, உன் சகோதரன் உயிர்த்தெழுந்திருப்பான் என்றார். மார்த்தாளின் மறுபதிலை இப்பொழுது கவனமாக நோக்குங்கள்.



84

உயிர்த்தெழுதல் நடக்கும் கடைசி நாளிலே அவனும் உயிர்த்தெழுந்திருப்பான் என்று அறிந்திருக்கிறேன். யோவான் 11:23-24. உலக முடிவின் உயிர்த்தெழுதலில் மார்த்தாள் லாசருவைப் பார்க்க எதிர்நோக்குவதாக இயேசுவிடம் உறுதிபடக் கூறினாள்.


85

இருப்பினும், அந்த சம்பவத்தைக் குறித்துக் கிளர்ச்சியூட்டும், மாதிரிக் காட்சியைக் கொடுக்க இயேசு ஆயத்தமாக இருந்தார்.



86

(வசனம் யோவான் 11:25)
நானே உயிர்த்தெழுதலும், ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான். யோவான் 11:25.

13 □ மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?

# 13  மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?



87

இயேசு லாசருவின் கல்லறையண்டை வந்தபோது, யோவான் நமக்குக் கூறுகிறார்.



88

(வசனம் யோவான் 11:35)
இயேசு கண்ணீர் விட்டார்.
அவர் தன் சிநேகிதன் லாசருவுக்காக கண்ணீர் விடவில்லை. அவனை உயிர்த்தெழச் செய்யப்போகிறேன் என்பதை அவர் அறிந்திருந்தார்.


89

அந்தக் குடும்பத்திற்காக, சிநேகிதர்களுக்காக மற்றும் யுகம் நெடுகிலும் தங்கள் அன்புக்குரியவர்களை இழந்து வருந்தி, துன்பத்தை அனுபவிக்கப் போகும் எல்லாருக்காகவும் இயேசு கண்ணீர் விட்டார்.


90

இயேசு நுழைவாயில் கல்லை



91

எடுத்துப்போடும்படி கேட்டார்.



92

(வசனம் யோவான் 11:39)
இவ்விதமான அந்தக் கோரிக்கையில்,
அக்கறையுள்ளவளாக, மார்த்தாள் ஆட்சேபித்தாள்.
ஆண்டவரே, இப்பொழுது நாறுமே, நாலு நாளாயிற்றே.
யோவான் 11:39. ஆம். இயேசு பெத்தானியா செல்வதற்கு நாலு நாட்கள் தாமதித்தார். லாசரு மரித்துவிட்டான் என்ற உண்மையை அந்தத் தாமதம் எந்த சந்தேகத்துக்கும் இடமில்லாமல் செய்துவிடும்.


93

கல்லானது அப்புறம் புரட்டப்பட்ட பின் இயேசு உரத்த சத்தமாக, லாசருவே, வெளியே வா என்று கூப்பிட்டார்.

# 13 ▯ மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?


94

இயேசு குறிப்பாக லாசருவை மட்டும் அழைத்தது நல்ல காரியம். இல்லாவிட்டால் பூமியில் இருக்கிற ஒவ்வொரு கல்லறையும் திறந்திருக்கும் என்று யாரோ ஒருவர் சொல்லியிருக்கிறார்.


95

பெத்தானியாவின் மூன்று சிநேகிதர்களுக்கும் அந்த நாள் எப்படியிருந்திருக்கும்? களி கூருதலும், மகிழ்ச்சியும் தான் என்னே. நண்பர்களே, பெத்தானியாவிலே அது ஒரு மகிழ்ச்சியூட்டும் நாளாக இருந்தது.


96

ஆனால் இயேசு மறுபடியும் வரும்போது அவரை இரட்சகராக ஏற்றுக்கொண்ட மற்ற சிநேகிதர்களின் எல்லா கல்லறைகளும் திறக்கப்பட்டு, அவரை சந்திக்க ஆகாயத்திலே எழும்புவார்கள் என்ற அந்த மகிமையின், மகிழ்ச்சியின் ஒரு சிறிய மாதிரிக் காட்சிதான் இது. அப்போஸ்தலனாகிய பவுல் ஆதிக்கிறிஸ்தவர்களோடு இந்த ஆறுதலின் செய்தியைப் பகிர்ந்தளித்தார்.



97

(வசனம் 1 தெசலோனிக்கேயர் 4:13, 16))
அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போல துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனமில்லை.




98

நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போலத் துக்கித்து.
1 தெசலோனிக்கேயர் 4:16.
இயேசு வரும் போது நடைபெறும் சம்பவங்களைப் பவுல் தெளிவாக விளக்குகிறார்.



99

ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்.



100


அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.
1 தெசலோனிக்கேயர் 4:16.

13 ▯ மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?

# 13  மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?



101

இயேசு வரும்போது நடைபெறும் சம்பவங்களைப் பவுல் தெளிவாக விளக்குகிறார்.




102

(வசனம்: 1 கொரிந்தியர் 15:51-55)
இதோ, ஒரு இரகசியத்தை உங்களுக்கு அறிவிக்கிறேன். நாமெல்லாரும் நித்திரையடைவதில்லை. ஆனால் நாமெல்லாரும் மறுரூபமாக்கப்படுவோம்.



103

கடைசி எக்காளம் தொனிக்கும்போது, ஒரு நிமிஷத்திலே, ஒரு இமைப்பொழுதிலே.




104

எக்காளம் தொனிக்கும் அப்பொழுது மரித்தோர் அழிவில்லாதவர்களாய் எழுந்திருப்பார்கள். நாமும் மறுரூபமாக்கப்படுவோம் 1 கொரிந்தியர் 15:51,52. நாம் எப்படி மறுரூபமாக்கப்படுவோம் என்பதை பவுல் பிறகு சொல்கிறார்.



105

அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ள வேண்டும்.



106

அழிவுள்ளதாகிய இது அழியாமையையும், சாவுக்கேதுவாகிய இது சாவாமையையும் தரித்துக் கொள்ளும்போது,



107

மரணம் ஜெயமாக விழுங்கப்பட்டது என்று எழுதியிருக்கிற வார்த்தை நிறைவேறும்.



108

... பாதாளமே, உன் ஜெயம் எங்கே?
1 கொரிந்தியர் 15:53-55.

# 13 மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?


109

பிரேதக்குழியிலிருக்கிற எல்லாரும் உயிரிடைவார்கள் என்று இயேசு சீஷர்களுக்குச் சொல்லியிருக்கிறார்.




110

(வசனம்: யோவான் 5:28, 29)
இதைக்குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம், ஏனென்றால், பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்.



111

நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள்.



112

தீமை செய்தவர்கள அக்கினியை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். யோவான் 5:28, 29.



113

ஒரு கணம் யோசியுங்கள். மக்கள் மரணத்தின்போது பரலோகமோ அல்லது நரகமோ போய்விட்டார்களானால், நீதிமான்களையோ அல்லது அநீதிமான்களையோ உயிர்த்தெழுச் செய்வதன் அவசியம் ஏன்? நான் இரண்டாம் முறை வரும்போது என்று இயேசு இந்த வாக்கியத்தை ஏன் கூற வேண்டும்.



114

(வசனம்: வெளிப்படுத்தல் 22:12)
இதோ, சீக்கிரமாய் வருகிறேன். அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடே கூட வருகிறது.
வெளிப்படுத்தல் 22:12.



115

இது மிகவும் தெளிவாகக் காணப்படுகிறது. மக்கள் மரிக்கும்போது, இயேசு வரும்வரை அவர்கள் நித்திரையடைந்து, தங்கள் பிரயாசங்கள் மற்றும் கவலைகளிலிருந்து இளைப்பாறுகிறார்கள்.

# 13  மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?


116

அவர் என்னத்திற்காக வருகிறார்? தம்முடைய தியாகத்திலே தங்கள் சார்பிலே ஏற்றுக்கொண்ட எல்லாரையும் உயிரோடழுப்பி அவர்களோடு மறுபடியும் இணைக்கப்பட அவர் வருகிறார். அக்காலத்திலுள்ள, அவரை உண்மையாய் பின்பற்றுபவர்களை வரவேற்பதற்காகவும் அவர் வருகிறார். என்ன நற்செய்தி, கவனியுங்கள்?



117

(வசனம்: 1 தெகலோனிக்கேயர் 4:17)
பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.



118

இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.
1 தெசலோனிக்கேயர் 4:17.


119

இரட்சிக்கப்பட்ட எல்லாருமே இயேசுவைப்போல் மிகமையான சரீரம் பெறுவார்கள். அழியாமையை (நித்ய ஜீவன்) பெற்றுக் கொள்வார்கள். அப்படியே கர்த்தருடனே எந்நாளம் தாபரித்திருப்பார்கள் என்பதை நாம் பார்த்தோம்.


120

சிலுவையில் தொங்கின கள்ளனைப் பற்றி என்ன சொல்வீர்? என்று யாராவது ஒருவர் கேட்கலாம்.


121

அந்தக் கள்ளனையும் அவனுக்கு இயேசு கொடுத்த வாக்குத்தத்தம் பற்றியும் வேதம் உண்மையிலே என்ன போதிக்கிறது? என்று நாம் பார்ப்போம். சிலுவையில் அறைபவர்கள் இயேசுவை ஒரு தனிக்குற்றவாளியாக அடையாளம் கண்டு கொள்ள வேண்டும் என்பதற்காக இரண்டு கள்ளர்களுக்கு மத்தியிலே அறைந்தார்கள்.

# 13 □ மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?


122

ஆரம்பத்தில் இரண்டு கள்ளர்களுமே, இயேசுவுக்கு உண்மையிலே வல்லமை இருந்தால் அவரையும், தங்களையும் விடுவிக்கும்படி கூறி இகழ்ந்ததாக மாற்கு புத்தகம் கூறுகிறது. பின்பு கள்ளர்களில் ஒருவன் மனந்திரும்பி இரட்சிப்புக்காகக் கூவியழைத்தான்.



123

(வசனம்: லூக்கா 23:42, 43)
பின்பு அவன் இயேசுவை நோக்கி, ஆண்டவரே நீர் உம்முடைய ராஜ்யத்தில் வரும்போது அடியேனை நினைத்தருளும் என்றான்.



124

இயேசு அவனைநோக்கி, இன்றைக்கு நீ என்னுடனே கூடப் பரதீசிலிருப்பாய் என்று மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார். லூக்கா 23:42, 43.


125

அந்த வாக்குத்தத்தை மறுபடியும் பார்ப்போம். ஆம், நண்பனே, இன்று, இப்பொழுது, நீயும் அந்த நிச்சயத்தைப் பெறமுடியும். கிறிஸ்துவுக்குள் நிச்சயம் உண்டு.


126

அந்த நாளிலே இயேசு மரித்து, ஞாயிறு காலை வரை பிரேதக்குழியிலே கிடத்தப்பட்ட போதிலும், அதிலிருந்து தப்புவதற்கான உத்திரவாதம் கொடுத்திருந்தார்.



127

(வசனம்: லூக்கா 23:43)
மரிக்கும் கள்ளனுக்கு அதிசயமான நிச்சயம் தான் என்னே, நம்பிக்கையற்றிருந்த அவனுக்கு, எங்கும் சூழ்ந்த இருள் அவன் ஆத்துமாவை அச்சுறத்தியபோது; பிரேதக்குழிக்கும் அப்பால் ஒரு நம்பிக்கையின் வாக்குத்தத்தை இயேசு அவனுக்கு அளித்தார். அந்த மணி நேரத்திலேதானே இயேசு அந்த கள்ளனுக்கு வாக்குரைத்தாவது, இன்றைக்கு நான் சொல்லுகிறேன், அல்லது இப்பொழுது நான் உனக்குச் சொல்லுகிறேன். நீ என்னுடனேகூட பரிதீசிலிருப்பாய்.

# 13 □ மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?



128

அவன் உடனே பரதீசு செல்ல இயேசு கள்ளனிடம் வாக்குக் கொடுத்ததாக சிலர் நினைக்கிறார்கள். ஆனால் இயேசு தாமே மரித்தபொழுது உடனே பரதீசு செல்லவில்லை.


129

அவர் அந்த நாளிலே, வெள்ளிக்கிழமையிலே, மரித்து, கடன் வாங்கப்பட்ட கல்லறையிலே அடக்கம் செய்யப்பட்டதாக வேதம் நமக்குக் கூறுகிறது.


130

ஞாயிறு காலை இயேசு மரியாளுக்கு முன், தோன்றினார். அவள் அவரை தொட முயன்றாள். அவரோ தடை செய்து. தான் இன்னும் பிதாவிடம் (பரலோகம்) செல்லவில்லை என்றார். அவர் சொல்தை கவனி யுங்கள்.




131

(வசனம்: யோவான் 20:17)
இது ஞாயிற்றுக்கிழமை காலை நடந்தது, நான் இன்னும் என் பிதாவினிடத்திற்கு ஏறிப்போகவில்லை என்கிறார். யோவான் 20:17 இயேசு வெள்ளி அன்று பரலோகத்தில் இருந்திருக்க முடியாது.



132

அந்தக் கள்ளனும் வெள்ளி அன்று பரதீசு போக வில்லை என்று வேதம் சொல்கிறது.



133

(வசனம் யோாவன் 19:31-33)
அந்த நாள் ஓய்வு நாளுக்கு ஆயத்த நாளாக இருந்தபடியால், உடல்கள் சிலுவைகளில் ஓய்வுநாளில் இராதபடிக்கு.



134

(அந்த நாள் பெரிய ஓய்வுநாளாயிருந்தபடியால்)
யூதர்கள் பிலாத்துவினிடத்தில் போய், அவர்களுடைய காலெலும்புகளை முறிக்கப்படும்படிக்கும், உடல்களை எடுத்துப்போதும்படிக்கும் உத்தரவு கேட்டுக்கொண்டார்கள். யோவான் 19:31.

# 13  மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?





135

அந்தப்படியே போர்ச் சேவகர் வந்து அவருடனே கூடச் சிலுவையில் அறையப்பட்ட முந்தினவனுடைய காலெலும்புகளையும் மற்றவனுடைய காலெலும்புகளையும் முறித்தார்கள்.



136

அவர்கள் இயேசுவினிடத்தில் வந்து அவர் மரித்திருக்கிறதைக் கண்டு அவருடைய காலெலும்புகளை முறிக்கவில்லை.
யோவான் 19:31-33.


137

இரண்டு கள்ளவர்களும் தப்பிச் சென்று விடாதபடி அவர்களின் கால் எலும்புகளை முறித்தனர் என்று பார்க்கிறோம்.


138

ஆனால், அவர்கள் இயேசுவின் கால் எலும்புகளை முறிக்கவில்லை. ஏனெனில் அவர் ஏற்கனவே, வெள்ளிக்கிழமை, மரித்துப்போய் இருந்தார். எனவே திருடனோ, இயேசுவோ யாரும் வெள்ளியன்று பரலோகம் போகவில்லை.


139

இயேசு நமது மீட்பின், ஒன்றுபடுதலின் கிரயத்தை செலுத்தினார்.


140

தேவன் மனித இனத்துக்குக் கொடுக்கும் மாபெரும் பரிசு, நித்திய ஜீவனும் மரணத்தின் மேல் வெற்றியும் தான். மற்ற எல்லா பரிசுகளும், இது இல்லாமல் இருந்தால், அர்த்தமற்றவையாகிவிடும். அவைகளை நீங்கள் கேட்பதால் அது உங்களுடையது ஆகும்.


141

நீங்கள் எடுத்த தீர்மானங்களிலேயே இதுதான் மிக முக்கியமானது. உங்களுடைய நித்தியம் அதைப்பொறுத்துத்தான் உள்ளது.

# 13  மரிக்கும்போது நமக்குள் என்ன நடக்கின்றது?


142

இந்த விலையேறப்பட்ட நித்திய வாழ்வுக்குரிய பரிசு. இயேசு கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராகவும், கர்த்தராகவும் ஏற்றுக் கொள்ளும் அனைவருக்கும் இது வாக்களிக்கப்பட்டுள்ளது. சுத்தமாக்கப்படாத மனம், பெருமை சுயநலம் கொண்ட மனம் இவையாவும் சிலுவையின் அடியில் புதிதாக மாற்றப்படுகிறது. கிறிஸ்து இவை அனைத்தையும் கல்வாரியில் பெற்றுக் கொள்ளும்படி செய்தார். இதைக்காட்டிலும் பெரியவற்றை அவர் உனக்கு செய்ய முடியுமா?


143

அவைகளை நீங்கள் வாஞ்சிப்பீர்களானால், நித்திய ஜீவன் உங்களுடையதாகும்.


144

அவர் ஜீவிப்பதால், கல்லறைக்கும் அப்பால், நமக்கு ஒரு மகிமையான நம்பிக்கை இருக்கிறது.


145


ஐக்கிய நாட்டை சேர்ந்த ஒரு சிறு கிராமத்தில் ஒரு தொடர்கூட்டம் நடந்து கொண்டிருந்தது. அந்தக் கூட்டததிற்கு வந்துக் கொண்டிருந்த ஒரு வாலிபனின் உள்ளம் அங்கு பேசப்பட்ட தேவ செய்தியினால் மிக ஆழமாக தொடப்பட்டது.


146

அந்தக்கூட்டம் நடந்த இடம், கல்லறைக்கு பக்கத்தில் இருந்தது. கூட்டம் நடந்து கொண்டிருந்த இடத்திற்குவரும் முன்இந்த வாலிபன் அந்த கல்லறைக்குச் சென்றான். தன் வாழ்வை குறித்தான கேள்வி எழுந்தது. அவனுக்கு பாவமன்னிப்பும், மன அமைதியும் தேவைப்பட்டது. மரணத்தைக் குறித்து அவன் யோசித்தபோது நித்திய ஜீவனைக் குறித்ததான நிச்சயம் தனக்கு வேண்டும் என உணர்ந்தான்.


147

அந்த நாள் மாலைக் கூட்டத்தின் தலைப்பு கல்லறைக்கு அப்பால் உள்ள நம்பிக்கை அந்த வாலிபன் கூட்டத்தில் அமர்ந்து செய்தியை கூர்மையாக கவனித்தான். அன்று இரவே தன்னை கிறிஸ்துவுக்கு ஒப்படைத்தான். தனக்காக மரித்து, உயிர்த்து தனக்கு நித்திய ஜீவனைக் கொடுக்கும் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டான். அன்று இரவே, ஜீவிக்கும் கிறிஸ்துவால் அவன் ஜீவியம் மாறியது. சமாதானம் அவன் உள்ளத்தில் பெருக்கெடுத்தது. புதிய நம்பிக்கை அவன் உள்ளத்தை ஆட்கொண்டது.


148

கல்லறைக்கு அப்பால் உள்ள, இந்த நம்பிக்கையை, நித்திய ஜீவனுக்கான நம்பிக்கையை நீங்களும் பெற்றுக் கொள்ளலாம். இந்த நம்பிக்கை உங்களுக்கும், வேண்டும் என் எண்ணுவீர்களானால், நாங்கள், ஜெபிக்கும்போது எழுந்து நிற்பீர்களா?



1

மரித்தவர்களுடன் உயிரோடிருப்பவர்கள் தொடர்பு கொள்ள முடியுமா?


2

மக்கள் மரித்தவுடன், ஆவியில் வந்து உயிரோடிருக்கும் நம்மை சந்திப்பார்களா? மரித்து போனவர்களின் ஆவி உயிரோடு இருக்கிறவர்களின் ஆவிக்குள் புகுந்து பேசமுடியுமா? மரணத்தில் சரீரம் செத்து, ஆவி உயிரோடு இருக்குமா?


3

யாரேனும் நம் குடும்ப அங்கத்தினர் மரித்துப் போன பிறகு அவர்களுடைய ஆவியை தொடர்பு கொண்டு பேசமுடியும் என்று மந்திரவாதிகள் கூறுகின்றனர். அதைக் குறித்து என்ன நினைக்கிறீர்கள்.


4

மரித்துப் போனவர்களின் ஆவி உயிரோடிருக்கிறவர்களின் சத்தத்தையும், மூளையையும், உபயோகித்து நம்முடன் தொடர்புகொள்ள முடியுமா?


5

நம் வாழ்க்கையில் இப்படிப்பட்ட நிலை ஏற்படும் போது நாம் என்ன நிலையை எடுக்கப் போகிறோம்? எப்படி பேச முடியும்?


6

இது ஒரு வாழ்வா, சாவா என்ற பிரச்சனை. இது நமது இரட்சிப்பின் வாழ்வு சம்பந்தப்பட்டது. நாம் இதைக் குறித்து தெளிவடைய வேண்டும். நாம் நம்புகிற சில கொள்கைகள் சரியானதுதானா? தவறானதுதானா? என்று எப்படி தெரிந்து கொள்வது?




7

இதற்கான பதில் வேதபுத்தகத்தில் கிறிஸ்து மூலமாய் சொல்லப்பட்டிருக்கிறது.

14 □ கல்லறைகளுக்கு பின்னால் ஒளக்கும் குரல்கள்


8

இயேசு நம்முடைய நண்பர். நம்முடைய அன்பான குடும்ப அங்கத்தினர்களை நாம் இழக்க நேரிடும் போது, நம் மனநிலை எப்படியிருக்கும் என்று தேவன் அறிந்திருக்கிறார். நம்முடைய துக்கத்தில் பங்கெடுக்கின்றார். ஆகவே நாம் கிறிஸ்து இயேசுவின் மரணம், உயிர்த்தெழுதல், நித்திய வாழ்வுகுறித்து என்ன கூறியிருக்கின்றார் என்று பார்ப்போம். இயேசு கூறினால் நாம் நிச்சயம் நம்ப வேண்டும். இதை ஒத்துக்கொள்கிறீர்களா?


9

நம்முடைய துக்கத்தில் இயேசு பங்குபெற்றால் நாம் நன்றி சொல்ல வேண்டாமா?



10

(வசனம் யோவான் 11:35)
தன் நண்பனின் அடக்கத்தில் இயேசு கண்ணீர் விட்டார். யோவான் 11:35.
கிறிஸ்துவே இப்படிப்பட்ட மரண இருளின் பள்ளத்தாக்கை கடந்து வந்திருக்கின்றார்.



11

(வசனம் வெளிப்படுத்தல் 1:17,18)
பயப்படாதே நான் முந்தினவரும், பிந்தினவரும் உயிருள்ளவருமாயிருக்கிறேன்.



12

மரித்தேன் ஆனாலும் இதோ சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்.




13

நான் மரணத்திற்கும், பாதாளத்திற்குமுள்ள திறவுகோளை உடையவராயிருக்கிறேன்.
வெளிப்படுத்தல் 1:18.
மேலும் என்ன செய்ய வேண்டும்? இயேசு ஜீவனை கொடுப்பவர். நமக்கு பரிபூரண ஜீவனை கொடுக்கிறார்.



14

(வசனம் யோவான் 10:10)
நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், பரிபூரணப்படவும் வந்தேன். நம்மை பரிபூரணமாக மீட்டெடுப்பேன் என்று வாக்குரைத்தார்.
யோவான் 10:10



15

(வசனம் யோவான் 11:25)
இயேசு அவளை நோக்கி நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான் யோவான் 11:25.
இயேசு வாழ்க்கை சிறப்பாளர் அவருக்கு இவ்வுலகில் உள்ள மற்ற எல்லோரைக் காட்டிலும் வாழ்வைக் குறித்து நன்கு அறிந்திருந்தார். ஏனெனில் அவரே நம்மைப் படைத்தவர்.



16

(வசனம் யோவான் 1:1,3)
ஆதியிலே வார்த்தை இருந்தது. அந்த வார்த்தை தேவனிடத்திலிருந்தது அந்த வார்த்தை தேவனாயிருந்தது.



17

சகலமும் அவர் மூலமாய் உண்டாயிற்று. உண்டானதொன்றும் அவராலேயல்லாமல் உண்டாகவில்லை.
யோவான் 1:1,3.



18

(வசனம் கொலோசயர் 1:16)
ஏனென்றால் அவருக்குள் சகலமும் சிருஷ்டிக்கப்பட்டது. சகலமும் அவருக்கென்றும் சிருஷ்டிக்கப்பட்டது.
கொலோசயர் 1:16.


19

இதுவரை இந்நிகழ்ச்சியில் நாம் கற்றுக்கொண்டவற்றை நம் மனதில் கொண்டு வருவது நலம். இயேசு கிறிஸ்து மரணம் என்பது ஜீவன் அல்ல, அல்லது இன்னொரு வடிவமானதும் அல்ல என்று தெளிவாக்குகின்றார்.

14 கல்லறைகளுக்கு பின்னால் ஒளக்கும் குரல்கள்



20

(வசனம் யோவான் 11:11) இயேசுவின் நண்பர்களில் ஒருவர் மரித்தபோது நம்முடைய சிநேகிதனாகிய லாசரு நித்திரையடைந்திருக்கிறான்.
யோவான் 11:11.
கிறிஸ்து மரித்துப் போன ஒரு மனிதரைக் குறித்து பேசினார். மரணத்தை எப்படி குறிக்கிறார் என்பதைப் பாருங்கள். நித்திரை வேதத்தில் சொல்லப்பட்ட மரணத்திற்கு சமமான அர்தத்தில் குறிப்பிடுகின்றார்.



21

(வசனம் யோவான் 11:14)
கிறிஸ்துவின் சீஷர்கள் புரிந்துகொள்ளாதபோது, தெளிவாக லாசரு மரித்துப்போனான் என்று கூறினார்.
யோவான் 11:14.
மற்றொரு வடிவத்திலே லாசரு உயிரோடிருக்கவில்லை.


22

லாசரு மரித்து போய் அவன் சரீரம் கல்லறையிலிருந்தது. மேலும் கிறிஸ்து உயிர்த்தெழும் வரை மற்றொரு வாழ்வு கிடையாது என்பதையும், உயிர்த்தெழுதலில் மாத்திரம் தான் மரித்தவர்கள் ஜீவனை பெற முடியும்.



23

(வசனம் யோவான் 6:40) குமாரனைக்கண்டு அவரிடத்தில் விசுவாசமாயிருக்கிறவன் எவனோ, அவன் நித்திய ஜீவனை அடைவதும் நான் அவனை கடைசி நாளில் எழுப்புவதும்,



24

என்னை அனுப்பினவருடைய சித்தமாயிருக்கிறது.
யோவான் 6:40.


25

கிறிஸ்து இரண்டாம் முறை வருகிறார் என்று சொல்லும்போது நாம் பூரிப்படைகின்றோம். அவருடைய நோக்கம் தெளிவானது. மரணத்தைக் குறித்தும், ஜீசனைக்குறித்தும் தெளவான கருத்து வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. ஏன் அவர் மறுபடியும் வரவேண்டும்?



26

(வசனம் யோவான் 14:1-3)
உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.



27

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்கு சொல்லியிருப்பேன். ஒரு ஸ்தலத்தை உங்களுக்காக ஆயத்தம் பண்ணப்போகிறேன்.



28

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு,




29

நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்.
யோவான் 14:1-3.



30

இயேசு கிறிஸ்து தாமே அந்த உன்னதமான அனுபவத்தை விவரிக்கின்றார்.




31

(வசனம் மத்தேயு 24:30, 31)
அப்பொழுது, மனுஷகுமாரனுடைய அடையாளம் வானத்தில் காணப்படும். சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.



32

அப்பொழுது, மனுஷகுமாரன் வல்லமையோடும், மிகுந்த மகிமையோடும் வானத்தின் மேகங்கள் மேல் வருகிறதை சகல கோத்திரத்தாரும் கண்டு புலம்புவார்கள்.



33

வலுவாய் தொனிக்கும் எக்காள சத்தத்தோடு அவர் தமது தூதர்களை அனுப்புவார்;

14  கல்லறைகளுக்கு பின்னால் ஒளக்கும் குரல்கள்



34

அவர்கள் அவரால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வானத்தின் ஒரு முனை முதற்கொண்டு மறுமுனை மட்டும் நாலு திசைகளிலிருந்து கூட்டிச் சேர்ப்பார். மத்தேயு 24:30,31.


35

ஏன் எக்காளத் தொனி? ஏன் தேவ தூதர்கள்?


36

கிறிஸ்துவால் தெரிந்து கொள்ளப்பட்ட மக்களை கூட்டி சேர்த்து அவருடைய ராஜ்யத்திற்கு எடுத்து செல்ல ஆயத்தமாய் இருக்கிறார். அவருடைய வருகையின் எல்லா காரியங்களும் துள்ளியமாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.




37

(வசனம் 1 தெசலோனிக்கேயர் 4:13-18)
அன்றியும் சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் - அறிவில்லாதிருக்க மனதில்லை.




38

நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப் போல துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை.




39

இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தார் என்று விசுவாசிக்கிறோமே, அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடே கொண்டு வருவார்.



40

கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்கு சொல்லுகிறதாவது:




41

கர்த்தருடைய வருகை மட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை.




42

ஏனெனில் கரத்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும்,



43

தேவ எக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கி வருவார். அப்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.



44

பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக, மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு,



45

இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம்.




46

ஆகையால் இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.
1 தெசலோனிக்கேயர் 4:13-18.



47

இதில் மூன்று விதமான அத்தியாயங்கள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை காணலாம்.



48


இது தேவனுடைய வார்த்தையின்படியே இருப்பதால் பிரச்சினை தீரந்தது.

14 □ கல்லறைகளுக்கு பின்னால் ஒளக்கும் குரல்கள்



49

2. கல்லறையிலிருந்து உயிர்த்தெழுந்தவர்களுடன், உயிரோடிருக்கும் கிறிஸ்தவர்களும், ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படும் வேளை தான் கிறிஸ்துவின் வருகையின், நேரம் உயிரோடிருக்கும் பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுதலில் மரித்த பரிசுத்தவான்களுக்கு முந்திக்கொள்வதில்லை.



50

3. உயிர்த்தெழும் முன்பு ஏற்படுகின்ற மரணத்தைத் தான் கிறிஸ்துவும், பவுலும் நித்திரை எனக் கூறுகின்றனர். கிறிஸ்துவின் அயர்ந்த நித்திரை மரணம். நினைவுள்ள வாழ்வு அல்ல என்பதை கிறிஸ்து மிக அழகாக தெளிவுப்படுத்தினார். மரணத்தில் உள்ளுணர்வு கிடையாது. உணர்வு என்பது மூளையின் ஒரு வேளை. மரணத்தில் அந்த உள்ளுணர்வு நின்றுபோய்விடும்.



51

(வசனம் பிரசங்கி 9:5)
வேதம் மிக தெளிவாக, உயிரோடிருக்கிறவர்கள் தங்கள் மரிப்பதை அறிவார்களே, மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள்.
பிரசங்கி 9:5.



52

மரித்தவனுக்கே என்ன தெரியும்? ஒன்றுமே தெரியாது. ஆனால் மரித்தவர்கள் உயிரோடிருப்பவரகளிடம் தொடர்பு கொள்ள முடியாது. மரித்தவர்கள் உயிரோடிப்பவர்களிடம் தொடர்பு கொள்கின்றார்கள் என்ற எண்ணம் எங்கிருந்து வந்தது?



53

(வசனம் யோபு 7:9,10)
வேதமானது மரித்து போனவர்களின் நினைவற்ற நிலையை எடுத்து கூறுகின்றது. மேகம் பறந்து போகிறது போல, பாதாளத்தில் இறங்குகிறவன் இனி ஏறிவரான்.
யோபு 7:9.



54

இனி தன் வீட்டுக்கு திரும்பான் அவன் ஸ்தலம் இனி அவனை அறியாது.
யோபு 7:10.


55

இந்த கொள்கை சாத்தானிடமிருந்து வந்தது. ஏதேன் தோட்டத்தில் ஏவாளை வஞ்சித்து, அதன் மூலம் ஆதாமையும் ஏமாற்றி, தோடடத்திலிருந்து விரட்டியதததோடு மட்டுமின்றி இறுதியில் ஜீவனையே போக்கடிக்கச் செய்தான். சர்ப்பத்தின் மூலம் பேசி ஏவாளை சாத்தான் என்ற ஏமாற்றுக்காரன் வஞ்சித்தான்.



56

(வசனம் ஆதியாகமம் 3:4)
ஏவாள் சாத்தானின் பொய்யை நம்பினாள். நீங்கள் சாகவே சாவதில்லை.
ஆதியாகமம் 3:4.



57

(வசனம் ஆதியாகமம் 2:17)
இந்த பொய்யானது தேவன் கூறியதற்கு நேர் விரோதமானது
நீங்கள் சாகவே சாவீர்கள்.
ஆதியாகமம் 2:17. பிரச்சினை இதுதான், யாரை நம்புவது?



58

ஒரு குறிகாரன் சொல்கிறான், நாம் மரித்துப்போன நம் குடும்பத்தினருடன் தொடர்புகொள்ள முடியும். இது சரியா? இது முடியுமா? இல்லை.


59

கிறிஸ்துவின் போதனைகளிலிருந்து மரித்துப்போனவர்களிடமிருந்து உயிரோடிருக்கும் நாம் தொடர்புகொள்ளவே முடியாது.
ஏன்? மரித்தவர்கள் ஒன்றும் அறியார்கள். அவர்கள் சுயநினைவற்ற நித்திரையில் இருக்கிறார்கள். நீங்கள் மரித்தவர்களிடம் தொடர்புகொள்ள முடியும் என்று நினைக்கிறீர்களா?



60

மரித்தவர்கள் சுயநினைவற்றவர்களாக இருப்பதால், உயிரோடிருப்பவர்களிடம் பேசும் ஆவிகள் யாவை?


61

வேதம் அவை யாவை என்பதை மிகவும் தெளிவாக கூறுகின்றது.



62

(வசனம் வெளிப்படுத்தல் 16:13,14)
அப்பொழுது வலுசர்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் (சாத்தான்) கள்ளத்தீர்க்கதரசியின் வாயிலுமிருந்து




63

தவளைகளுக்கு ஒப்பான மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு வரக்கண்டேன்.



64

அவைகள் அற்புதங்களைச் செய்கிற பிசாசுகளின் ஆவிகள் அவைகள் பூலோகமெங்குமுள்ள ராஜாக்களை ....



65

பூலோகமெங்குமுள்ள ராஜாக்களை சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்கு கூட்டிச் சேர்க்கும்படி புறப்பட்டு போகிறது.
வெளிப்படுத்தல் 16:13, 14.


66

வேதம், அவை யார் என்பதை மாத்திரமல்ல அவைகள் எங்கிருந்து வந்தன என்பதையும் கூறுகின்றது.



67

(வசனம் வெளிப்படுத்தல் 12:7-9)
வானத்திலே யுத்தமுண்டாயிற்றுமிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுச்சர்ப்பத்தோடு யுத்தம் பண்ணினார்கள்.



68

யுத்தம் பண்ணினாலும் ஜெயம்கொள்ளவில்லை.
அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று.



69

உலகமனைத்தையும்மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழையபாம்பாகிய பெரியவலுசர்ப்பம் தள்ளப்பட்டது.



70

அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அதனோடேகூட அதைத் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். வெளிப்படுத்தல் 12:7-9.


71


அவர்கள் விழுந்துபோன தேவ தூதர்கள். நண்பர்களே எச்சரிக்கையாயிருங்கள். ஆவிகளோடு நாம் தொடர்பு வைத்துக்கொள்வது மிகவும் ஆபத்தானதாகும். அவர்களின் ஒரே நோக்கம் மறுபடியும் சொல்லுகிறேன். அவர்களின் ஒரே நோக்கம் உங்களை ஏமாற்றி இயேசுவினிடமிருந்து உங்களை பிரித்து நித்தியத்தை இழக்கச் செய்ய வேண்டும் என்பது தான்.


72

இந்த மயிர்க்கூச்செரியும் அனுபவம் உன்னை இத்தகைய ஆவிகளிடமிருந்து தூரமாக்க வேண்டும். மரித்தவர்கள் உயிரோடிருக்கிறார்கள் என்று நம்பினால் நீங்கள் ஏமாற்றப்படுவதற்கு வாய்ப்பை பிசாசுக்கு தருகிறீர்கள் என்று தான் அர்த்தம்.



73

தேவனுடைய வார்த்தை ஆவிக்குரிய மார்க்கத்தைக் குறித்தும் அவைகளோடு தொடர்பு கொள்ளக்கூடாது என்று தெளிவாய் கன்டிக்கின்றது. தேவன் ஆவிகளோடு தொடர்புகொண்டு பேசின பிள்ளைகளுக்கு கூறின எச்சரிப்பை கேளுங்கள்.



74

(வசனம் : லேவியராகமம் 19:31)
லேவியராகமம் 19:31 அஞ்ஞனம் பார்க்கிறவர்களை நாடி குறிசொல்லுகிறவர்களைத் தோடாதிருங்கள். அவர்களாலே தீட்டப்பட வேண்டாம்.



75

நான் உங்கள் தேவனாகிய கர்த்தர்.

14  கல்லறைகளுக்கு பின்னால் ஒளக்கும் குரல்கள்



76

(வசனம் : உபாகமம் 18:10-12)
இஸ்ரவேல் ஜனங்கள் கானான் தேசத்திற்கு போகும் முன், உங்கள் மத்தியில் இப்படிப்பட்டவர்கள் இருக்கலாகாது எனக் கண்டிப்பாக உபதேசிக்கப்பட்டிருந்தனர்.



77

குறி சொல்கிறவனும், நாள் பார்க்கிறவனும், அஞ்ஞனம் பார்க்கிறவனும், சூனியக்காரனும்.



78

இப்படிப்பட்டவைகளைச் செய்கிறவன் எவனும் கர்த்தருக்கு அருவருப்பானவன். உபாகமம் 18:10-12. கே.ஜே.வி

அஞ்சனம் பார்க்கிறவன் தன் ஜனத்தை தவறுக்கு வழிநடத்துவார்கள் என்பதை தேவன் அறிந்திருந்தபடியால் இவைகளை அவர்களுக்குச் சொன்னார்.




79

(வசனம் யாத்திராகம் 22:18)
சூனியக்காரியை உயிரோடே வைக்க வேண்டாம். யாத்திராகம் 22:18


80

சவுல் இந்த சூனியக்காரியிடம் விசாரிக்கும் காரியமானது மரித்தவர்களோடு பேசமுயலும் அறிவீனமான செயலை வெளிப்படுத்துகிறது.



81

(வசனம் 1 நாளாகமம் 10:13)
அப்படியே சவுல் கர்த்தருடைய வார்த்தையை கைக்கொள்ளாமல் கர்த்தருக்குச் செய்த தன் துரோகத்தின் நிமித்தம் செத்துப்போனான்.



82

அஞ்சனம் பார்க்கிறவர்களைக் கேட்டும்படிக்கு தேடின நிமித்தம்
1 நாளாகமம் 10:13.


83

சாத்தான் கிறிஸ்துவின் சாயலைப்போலவே வெளிப்படுத்துவான்.



84

(வசனம் 2 கொரிந்தியர் 11:14)
அது ஆச்சரியமல்ல! சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக் கொள்வானே. 2 கொரிந்தியர் 11:14.


85

மரணத்துக்கு முன் தாங்கள் அறிந்திருந்த ஒருவரைப் போல, யாராவது ஒருவர் வந்து அவரைப் போலவே பேசியும், காரியங்களை செய்தும், நடந்தும் கொண்டால் நீங்கள் அவரிடம் எப்படி நடந்துகொள்வீர்கள். வேதம் சொல்கிறது. சாத்தானும் அவன் தூதர்களும் இதுபோல் ஏமாற்றுவார்கள்.


86

உலகில் வாழ்ந்த யாரைப் போல வேண்டுமென்றாலும், அவனால் தோன்ற முடியும். அநேக நல்லவர்கள் கூட வஞ்சிக்கப்பட்டு சாத்தானுடைய வழியில் இழுக்கப்பட்டு பேசுவதற்கும் அத்தகைய மரித்துப் போன தன் உறவினர்களிடம் உறவுக்காக வாஞ்சிப்பதும் யோசிப்பதற்கே பயமாக இருக்கிறது.



87

உலகில் வாழ்ந்த யாரைப் போல வேண்டுமென்றாலும், அவனால் தோன்ற முடியும். அநேக நல்லவர்கள் கூட வஞ்சிக்கப்பட்டு சாத்தானுடைய வழியில் இழுக்கப்பட்டு பேசுவதற்கும் அத்தகைய மரித்துப் போன தன் உறவினர்களிடம் உறவுக்காக வாஞ்சிப்பதும் யோசிப்பதற்கே பயமாக இருக்கிறது.



88

(வசனம் மத்தேயு 24:4,5)
இயேசு அவர்களுக்கு பதில் கூறிச் சொன்னது, ஒருவனும் உங்களை வஞ்சிக்காதபடி எச்சரிக்கையாக இருங்கள்.



89

ஏனெனில் அநேகர் வந்து என் நாமத்தைத் தரித்துக்கொண்டு, நானே கிறிஸ்து என்று சொல்லி, அநேகரை வஞ்சிப்பார்கள். மத்தேயு 24:4,5. ஆகவே மிகவும் எச்சரிக்கையாயிருங்கள்.


90

இயேசு அதே எச்சரிக்கை, மீண்டும் இந்த பிரசங்கத்தில் உபயோகிக்கிறார்.



91

(வசனம் மத்தேயு 24:23-25)
அப்போது, இதோ கிறிஸ்து இங்கே இருக்கிறார். அதோ அங்கே இருக்கிறார் என்று எவனாகிலும் சொன்னால் நம்பாதீர்கள்.



92

ஏனெனில் கள்ள கிறிஸ்துக்களும் கள்ள தீர்க்கதரிசிகளும் எழும்பிகூடுமானால் தெரிந்துக் கொள்ளப்பட்டவர்களையும்,



93

வஞ்சிக்கத்தக்க பெரிய அடையாளங்களையும் அற்புதங்களையும் செய்வார்கள்.



94

இதோ, முன்னதாக உங்களுக்கு அறிவித்திருக்கிறேன்.




95

மரித்த நம்முடையவர்கள் உயிரோடு இருப்பதை சிலர் பார்த்ததாகவும், சிலர் அப்படி சொல்லவும் கேட்டும் இருக்கலாம்.



96

பிரிந்த எனது கணவரோடு பேசினேன் என்று சிலர் சொல்லலாம்.




97

இன்னும் ஒருவர், வன்முறையால் எனது மகனை இழந்தேன். ஆனால் நான் அவனைப் பார்த்து பேசியது பெரிய ஆறுதலாக இருந்தது என்கிறார்கள். மரித்தவர்கள் நித்திரையாயிருக்கிறார்கள். அந்த ஆவியினாலே கூடுமானால் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை வஞ்சிப்பான். ஏனென்றால் அவர்கள் தங்கள் உணர்வுகளையும், எண்ணங்களையும், அனுபவங்களையும் தேவ வார்த்தையை விட கூடுதலாக எண்ணுகிறார்கள்.



98

தெரிந்தெடுக்கப்பட்டவர்கள் ஏன் ஏமாற்றப்படுவதில்லை? ஏனெனில் அவர்கள் இயேசுவை நம்புகின்றனர். தங்கள் எண்ணம், உணர்வு, அனுபவங்களைக் காட்டிலும் உண்மையான தேவ வாக்கை நம்புகின்றனர்.




99

இதுதான் பிரச்சினை



100

தேவனுடைய சத்தியத்தை ஏற்றுக்கொள்ளுவோமா?



101

அல்லது சாத்தானுடைய பொய்யை நாம் நம்புகிறோமா?


102

நமது சிந்தனையை வேத வார்த்தைகளால் மதில் போட்டு காத்துவிட்டவர்கள் மட்டுமே. சர்தானின் அதிவேக ஏமாற்றுக்களையும், வரும் சாத்தானின் வெள்ளத்தின் அலைகளையும் எதிர்த்து நிற்க முடியும். இவைகளை நாம் நிர்ணயமான சித்தத்தோடு அறிந்து விசுவாசிக்க வேண்டும். சத்தியத்தைவிட்டு விலகிச் செல்கிற நமது அனுபவங்கள், உணர்வுகள், தோற்றங்கள் ஆகியவற்றிற்கு இடம் தரக்கூடாது.

14  கல்லறைகளுக்கு பின்னால் ஒளக்கும் குரல்கள்


103

நமது சிந்தனையை வேத வார்த்தைகளால் மதில் போட்டு காத்துவிட்டவர்கள் மட்டுமே. சர்தானின் அதிவேக ஏமாற்றுக்களையும், வரும் சாத்தானின் வெள்ளத்தின் அலைகளையும் எதிர்த்து நிற்க முடியும். இவைகளை நாம் நிர்ணயமான சித்தத்தோடு அறிந்து விசுவாசிக்க வேண்டும். சத்தியத்தைவிட்டு விலகிச் செல்கிற நமது அனுபவங்கள், உணர்வுகள், தோற்றங்கள் ஆகியவற்றிற்கு இடம் தரக்கூடாது.


104

அவர்கள் மருத்துவமனை அறையில் இங்கும் அங்குமாக அலைந்து தன் சொந்த சரீரத்தையே பார்த்துகொண்டிருந்ததாக சொல்லுவார்கள்.


105

அல்லது பிரகாசமான ஒளி தங்களை சூழ்ந்ததாகவும், இயேசுவோ அல்லது தூதர்களோ தங்களை வா என்று அழைத்ததாகவும் சொல்வர். சிலர் மரணத்தின் மறுபக்கத்தில் மரித்துப்போன தங்கள் அன்பானவர்களை பார்த்ததாகவும் சொல்கின்றனர். தேவனுடைய வார்த்தை மாத்திரமே நம்மை இப்படிப்பட்ட பொய்யான காரியங்களிலிருந்து நம்மை தப்புவிக்க உதவும்



106

பார்ப்பதை நம்புவது அல்லது, என் கண்களால் பார்ப்பதை நான் நம்புவேன் என்பது உண்மையாகவே ஏமாற்றுதலுக்கு வழிநடத்தும்.


107

வேதாகமத்தை நம்புவதை விட்டு, நமது எண்ணங்கள், உணர்வுகள், அனுபவங்கள் இவைகளை சாரும் போது ஆபத்தான தீர்மானங்களை எடுக்கிறொம். சாவைக் குறித்து தவறான நம்பிக்கைகள் உலக முழுவதும் நிலவுகிறது.



108

உதாரனமாக மறுருபத்தை எடுத்துக் கொள்வோம். லட்சக்கணக்கானோர் சாகும்போதுஈ ஏதோ ஒரு மறுபிறவி எடுக்கிறார்கள், ஆனால் அந்த பிறவி எது என்று அவர்களுக்கே தெரிவதில்லை. அது மாடு, எலி, பாம்பா என்று தெரியாது என நம்புகின்றனர்.


109

அல்லது மறுரூபத்தில் தனவந்தன், ஒரு அரசன் அல்லது ஒரு ஏழை, பிச்சைக்காரன், குருடன் செவிடன், அல்லது முடவன் அல்லது ஒரு வேதனையும் இயலாமையுமான வியாதி.



110

வாழ்க்கை என்பது சுற்றிவருகிற சக்கரம் போன்றது. மனிதன் மரித்த பிறகும் திரும்ப பிறக்கிறான். இவை இவ்வுலகத்தில் ஒரு முடிவில்லா மறுபிறப்பு என்று இந்து மார்க்கம் போதிக்கிறது. அனேக மக்கள் தங்களது கற்பனை ஆற்றலில் உண்மையான தத்துவத்தின் பின்னணி என்ன என்று தெரியவில்லை. இவ்விதமான நம்பிக்கையில், சுயகட்டுப்பாடு, தெரிந்தெடுப்பு இல்லை. ஒரு தீர்மானம் எடுக்க முடியவில்லை.




111

சுய தேர்வு, மகிழ்ச்சி ஆகிய பண்புகளை பெற்று ஒரு சுய உணர்வுள்ள வாழ்க்கை குறிக்கோளாக இல்லாமல், மனிதன் கடைசியாக நிர்வாணம் என்ற நிலைக்கு போயிவிடுகிறான்.



112

ஒரு அதைலான வெறுமை ஆள்தத்துவமோ, ஞாபக சக்தியோ இல்லாத ஒரு நிலைமை.



113

ஒரு நபராக இருந்து நீ, யோசனை செய்வதற்கோ, அன்பு, உணர்வு, மற்றும்உணர்வோடு கூடிய மகிழ்ச்சி இல்லாத நிலை.


114

சுயம், ஒரு சொட்டு நீர் சமுத்திரத்தில் கலப்பது போன்றும் பின்பு அதன் தோற்றம் மறைந்து இப்பிரபஞ்சத்தால் உறிஞ்சப்படுவது போலும் இருக்கிறது.


115

புத்த மதமும் அவ்வாறே, எப்படியேனும் வாழ்க்கையின் சக்கரம் உங்கள் சரியான கருமத்தை பொருத்த முடிவில்லா பயணம் செய்யாது இருக்க இந்த வாழ்க்கையிலேயே. வாழ்க்கை சுற்றை முடித்துக்கொள்ளுங்கள் என புத்தர் போதித்தார்.

14  கல்லறைகளுக்கு பின்னால் ஒளக்கும் குரல்கள்


116

உள் மன சித்தத்தை கட்டுப்படுத்தும் போதனை சொல்கிறது. ஒரு மனிதனின் விருப்புகள் வாழ்க்கையின் ஒரு கட்டத்தில் முழுவதுமாக முடிவுபெறும்.



117

சரீரமும், எண்ணமும் அப்படிப்பட்ட ஒரு நிலைக்கு வரும்போது அவன் நேரடியாகவே மரணத்தின் மூலம் நிர்வாண நிலைக்கு போய்விடுகிறான். அங்கே அவன் இப்பிரபஞ்சத்தின் மற்ற அணுக்களோடு ஒரு அணுவாக மாறிவிடுகிறான்.



118

மற்றும் இந்த இரு பெரு மதங்களிலும் நல்லவை, கெட்டவை ஆகிய வல்லமைகள் சரிநிகராக நித்தியமாக இருந்து கொண்டிருக்கும், என்ற நம்பிக்கை இருக்கிறது.



119

இந்தோனேசியாவில் உள்ள பாலி என்ற தீவில் பாரோங் நடனம் பார்க்க முடி யும்.


120

பாரோங் இனத்தவர்கள் அவித்த முட்டைகளை போல ஆடை தரித்து, கூர்மையான ஆயுதங்களோடு போதை பானங்களை அருந்தின ஆறுபேர் எதிரெதிரே நிர்ப்பார்கள்.


121

பாரோங் அவர்களை முன்னோக்கி பின் தள்ளுவார்கள். அவர்கள் சுழற்றி சுத்துவார்கள். ஆகாயத்தில் சிலம்படித்து வெட்டித் தள்ள முயற்சிப்பார்கள்.


122

பரோங்கர்கள் நின்று திரும்பி அம்மனிதர்களை பார்ப்பார்கள். அவர்கள் நின்று ஒரு அடி முன்னேறி பின்பு ஒரு அடி எதிர்ப்பார்கள். இவ்வாறு அந்த ஆறு மனிதர்களையும் அடித்து கடைசியாக ஆறு பேரும் சுயநினைவு இழந்து தரையிலே விழும்போது, ஊரார் வந்து சண்டையை நிறுத்தி, அவர்கள் மேல் தண்ணீர் தெளித்து எழுப்புவார்கள். ஆறுபேரும் தங்களது குடிசைக்கு திரும்புவார்கள். பரோஸ் மறுதிசையில் செல்வார்கள். இவை எவைகளை கற்றுக் கொடுக்கிறது? இவை மத திருவிழாவா? அவர்கள் நம்பிவந்த செயலின் உருவமே. இந்து மதத்தில் பரோஸ் தெய்வமாகவும், ஆறுபேரும் பிசாசாகவும் காட்டப்படுகின்றனர். இந்த போரில் யாரும் தோற்பதும் இல்லை. ஜெயிப்பதும் இல்லை.



123

சரித்திரம் முடிவு பெறாத சக்கரமாகவும் உலகத்தில் அநீதியை அழித்து நீதியை நிலைநாட்டும் ஒரு நித்திய கடவுள் இல்லை என்ற நம்பிக்கையும் அடிப்படையாக கொண்டதுதான் அந்த விழா.




124

உயிர்தெழுதல், வாழ்க்கை இவைகளுக்காக நான் ஏசுவிற்கு நன்றி செலுத்துகிறேன். நீங்களும் அப்படித்தானே இல்லையா? பாவம் தொடராது என்பது ஒரு ஆச்சரியமான நம்பிக்கையே. சரித்திரம், பாவம் இல்லாத, வியாதி, யுத்தம், உணவு பற்றாக்குறை, வேதனை மரணம் ஆகியவை அவருடைய மக்களுக்காக புதிய பூமியை படைக்க போகும் நேரத்திற்கு சரித்திரம் நெருங்கிக் கொண்டிருக்கிறது.



125

(வசனம்: வெளிப்படுத்தல் 21:1-4)
நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன். முதலாம் வானமும், பூமியும் ஒழிந்து போயின.



126

அங்கே சமுத்திரம் இல்லை.

14  கல்லறைகளுக்கு பின்னால் ஒளக்கும் குரல்கள்




127

பின்பு யோவானாகிய நான் பரிசுத்த நகரம் புதிய எருசலேம் ஆண்வரிடத்திலிருந்து பரலோகத்தை விட்டு இறங்கி வரக் கண்டேன்.




128

மணவாழ்க்கைக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போன்று இருந்தது.




129

பின்பு பரலோகத்தில் இருந்து வருகிற சத்தத்தை கேட்டேன். இதோ மனுஷர் மத்தியிலே ஆண்டவருடைய வாசஸ்தலம் இருக்கிறது.




130

அவர்களிடத்தலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனங்களாயிருப்பார்கள். தேவன் தாமே அவர்களோடே கூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.



131

கர்த்தர் அவர்கள் கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமும் இல்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை முந்தினவைகள் ஒழிந்து போயின.




132

கர்த்தர் அவர்கள் கண்ணீரையெல்லாம் துடைப்பார். இனி அங்கே மரணமும் இல்லை. வருத்தமும், அலறுதலும் இல்லை. முந்தினவைகள் ஒழிந்து போயின. வெளிப்படுத்தல் 21:1-4.


133

கர்த்தரை தெரிந்து கொண்டு மறுபடியும் பிறக்க மாட்டாயா? மரித்த பிறகு அல்ல, அது மாமதம், பல பிறவிகள் எடுத்து பல லட்சம் ஆண்டுக்ள கழித்து அல்ல. இப்போதே, இன்றே.



134

நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.



135

இயேசகிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுந்ததினாலே,
அழியாததும், மாசற்றதும் வாடாததுமாகிய
சதந்திரத்திற்கேதுவாக




136

மரத்திலிருந்து உயிரோடு எழுந்த இயேசுவினாலே.



137

அழியாததும், மாசற்றதும் வாடாததுமாகிய சுதந்திரம்.



138

உங்களுக்காக பரலோகில் வைக்கப்பட்டிருக்கிது.
1 பேதுரு 1:3, 4.


139

உங்களது வாழ்வு நிரந்தரமானது என்று ஆண்டவர்
இன்று உங்களுக்கு உறுதி அளிக்கிறார்.



140

(வசனம்: 1 யோவான் 5:11, 12)
தேவன் நமக்கு நித்திய ஜீவனைத் தந்திருக்கிறார்.
அந்த ஜீவன் அவருடைய குமாரனில் இருக்கிறதென்பதே
அந்த சாட்சியாம்.



141

குமாரனை உடையவன் ஜீவனை உடையவன்,
தேவனுக்கு குமாரன் இல்லாதவன் ஜீவன் இல்லாதவன்.
1 யோவான் 5:11, 12.
எப்படி நமக்கு தெரியும்? நிச்சயிப்பது எப்படி?
கடவுளுடைய வாத்தை தெளிவாக இருக்கிறது.



142

(வசனம்: 1 யோவான் 5:13)
தேவ குமாரனுடைய நாமத்தின் மேல் விசுவாசமாயிருந்த
உங்களுக்கு இவைகளை எழுதுகிறேன்.

14 □ கல்லறைகளுக்கு பின்னால் ஒளக்கும் குரல்கள்



143

நித்திய ஜீவன் உங்களுக்கு உண்டென்று நீங்கள் அறிந்து கொள்ளுங்கள். 1 யோவான் 5:13. நாம் ஒவ்வொருவரும் விடையளிக்க வேண்டிய பதில் யாதெனில் எனக்கு இயேசு இருக்கிறாரா? உடனே அவரை இந்நேரத்திலேயே பெற்றுக்கொள்ளுங்கள்.

---



144

(வசனம்: வெளிப்படுத்தல் 3:20)
இதோ நான் (உங்கள் இருதயம்) வாசற்படியில் நின்று கதவைத் தட்டுகிறேன்.


---



145

என் சத்தத்தை கேட்டு கதவைத் திறந்தால்.


---



146

நான் வந்து அவனோடு போஜனம் பண்ணுவேன். அவனும் என்னோடு போஜனம் பண்ணுவேன். வெளிப்படுத்தல் 3:20.

---


147

இப்பொழுதே அவருக்கு உங்கள் இருதய கதவை திறந்து அவரை உள்ளே அழையுங்கள்.

# 15 □ கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.



1

அதிகப்படியான ஆரோக்கியத்தைப் பெறுவது எப்படி?


2


மத்தியத் தரைக்கடலின் மரகத நீல நீரை நோக்கினாற்போல் செங்குத்தான பாறையின் மேல் அமைந்திருக்கிறது அந்த பழமைம வாய்ந்த போர்சுகீசியா சன்னியாசி மடம். அந்தக் காட்சி நம்மை பெருமூச்சு விடச் செய்யும் காட்சி மகோன்னதமான இயற்கைக் காட்சி. ஆனால் அங்கே ஒரு பிரச்சனை இருக்கிறது. அந்த மலைசிகரத்தையடைய ஒரேவழி வயதான மடத்துறவி மேலே இழுக்கிறே கயிற்றிலே கட்டப்பட்ட ஒரு பழைய பிரம்புக் கூடையின் மூலம் தான் அங்கு செல்ல முடியும்.


3

ஒரு நாள் ஒரு வழியாட்டியும், பார்வையாளரும் மடத்தை விட்டுப் புறப்பட்டனர். அவர்கள் கூடையில் காலடி எடுத்து வைத்து, துறவியால் கீழே இறக்கப்படும்போது கயிறானது கீழுள்ள கூர்மையான பாறைகளில் மோதி ஊசலாடியது. எப்ப, எப்ப அவர்கள் கயிற்றை மாற்றம் செய்வார்கள்? என்று சுற்றுலாப் பயணி நடுக்கத்துடன் கேட்டான்.


4

கவலைப்படாதீர்கள். மறு நம்பிக்கையூட்டும் தொனியில் வழிகாட்டி கூறினான். ஒவ்வொரு முறையும் அது அறுபடும்போது நாங்கள் அதை மாற்றுகிறோம்.


5

இக்கதையைப் போலவே, தான் ஆயிரக்கணக்கான மக்கள் தங்கள் ஆரோக்கியத்தைக் குறித்து முன்னுரைக்க முடியாத நிலையில் தங்களை வைத்திருக்கிறார்கள். அந்தக் கயிற்றைப்போல தங்கள் ஆரோக்கியம் பழுதடையும் வரை காத்திருந்து பின்பு தற்போதைய நவீன ஆரோக்கிய முறையை நாடுகின்றனர். அறுபட்ட கயிற்றைப்போல் பழுதடைந்த ஆரோக்கியத்தை மாற்றுவது அவ்வளவு எளிதல்ல. ஆரோக்கியம் என்பத தருணம்பற்றிய காரியமல்ல, இயற்கை விதிகளுக்குக் கீழ்ப்படியக்கூடிய தெரிந்தெடுப்பின் காரியம்.

15 □ கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.

# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.


6

நண்பர்களே, மோசமான ஆரோக்கியத்தை நீங்கள் பெற வேண்டுமா? மருத்துவ உதவிக்காக ஜனங்கள் வருஷா வருஷம் லட்சக்கணக்கான பணம் செலவழிக்கின்றனர். ஜனங்கள் பணத்தை செலவழிப்பதில், வியாதிக்காக செலவழிப்பது தான் மிக உயர்ந்ததாக உலகில் உள்ளது. அப்படியானால் சுகமாக இருப்பது எவ்வளவு பெருமானதாக இருக்கிறது. புற்று நோயோடோ அல்லது எய்ட்ஸ் நோயால் மரிப்பவரை கேட்டுப் பாருங்கள்.


7

இரத்தச் சோகையால் வருந்தும் குழந்தையின் பெற்றோரையோ அல்லது மூட்டுவலியால் அவதியுறும் முதியோரையோ கேட்டுப் பாருங்கள். அவர்கள் நல்ல ஆரோக்கியம் விலையேறப்பட்டது என்பர். இழந்துபோகும் வரை முழுமையாக போற்றப்பட வேண்டிய ஆசீர்வாதம் அது.



8

ஒரு வருட வாழ்க்கை அல்லது ஒரு நாள் வாழ்க்கை, என்ன பெருமானம் மதிப்பு பெரும்? முதலாம் எலிசபெத் ராணி தன் மரணப்படுக்கையில் என் வாழ்வின் சம்பத்தெல்லாம் அது ஒரு கனப்பொழுதானனே என்கிறார் ஆனால் அதை விலைகொடுத்து வாங்க முடியாது. பொது வான அறிவு புகட்டும் சாதாரண ஆரோக்கிய முறைகளை பயன்படுத்துவதின் மூலம் அருமையான வருடங்களை பெறலாம் அதை நாம் உணர்ந்துள்ளோமா?



9

டாக்டர். பிரஸ்லோ என்பவர் லாஸ் ஏஞ்சல்ஸ்-ல் உள்ள கலிபோர்னியா பல்கலைக்கழகத்தைச் சார்ந்தவர். 9 வருடம் ஒரு ஆராய்ச்சியை 7,000 ஜனங்களிடம் செய்தார். அவர்களின் பழக்க வழக்கங்கள் குறித்ததான ஏழு கேள்விகளை கேட்டார். பின்பு அந்த நோயாளிகளை கவனித்தார். அவர்களோடு சேர்ந்து நன்கு ஆரோக்கிய முறைகளைக் கடைபிடிப்பவர்கள் கடைபிடிக்காதவர்களோடு சேர்த்து ஒப்பிட்டார்.




10

இங்கே அவர் கேட்ட அந்த ஏழு கேள்விகள்.


# 15 □ கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.





11

1. நீங்கள் புகை புடிப்பவரா?
2. நீங்கள் மது அருந்துபவரா?எவ்வளவு?
3. நீங்கள் தொடர்ந்து உடற்பயிற்சி செய்பவரா?



12


4. ஒரு நாளைக்கு எத்தனை மணிநேரம் உறங்குகிறீர்கள்?
5. எவ்வளவு எடையுள்ளவர்?
6. காலை உணவு தவறாமல் உண்பவரா?
7. தொடர்ந்து சாப்பாட்டிற்கு இடையில் திண்பண்டம் சாப்பிடுபவரா?

மேற்குறிப்பிட்ட ஏழு கேள்விகளுக்கும் சரியாய் பதில் கூறியவர்கள் எனில் இந்த ஆரோக்கிய விதிகளை கடைபிடிக்காதவர்களைக் காட்டிலும் 11.5 வருடம் அதிகமாக உயிர்வாழ்வார்.



13

11.5 ஆண்டின் வாழ்வை உங்கள் வாழ்க்கையில் அதிகரிக்க நீங்கள் என்ன கொடுப்பீர்கள்?
வாழ்க்கையில் சந்தோஷமான, சுகமான வாழ்வுக்கான செய்தியைத்தான் இப்பொழுது நான் பகிர்ந்து கொண்டிருக்கின்றேன். அது உங்கள் வாழ் நாளை அதிகப்படுத்தும்.
இந்த செய்தியை கேட்பது வாழ்க்கைக்கு பிரயோஜனமா என நினைக்கின்றீர்களா? தேவன் சுகமாக, சந்தோஷமாக நாம் வாழ விரும்புகின்றார் என்று கேட்கும்போது அநேகருக்கு ஆச்சரியமாக இருக்கின்றது.



14

(வசனம்: 3 யோவான் 1:2)
பிரியமானவனே, உன் ஆத்துமா வாழ்கிறதுபோல நீ எல்லாவற்றிலும் வாழ்ந்து சுகமாயிருக்கும்படி வேண்டுகிறேன்.
3 யோவான் 2.



15

(வசனம்: யோவான் 10:10)
இயேசு, நானோ அவர்களுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.
யோவான் 10:10.

# 15 கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.


16

இயேசு நாம் மகிழ்ச்சியாகவும், ஆனந்தமாகவும், ஆரோக்கியமாகவும் இருக்க வேண்டம் என் விரும்புகிறார். அந்த வாழ்க்கையை பூரணமாக பெற்றுக்கொள்ள வேண்டும் என விரும்புகிறார்.



17

நாம் ஆரோக்கியமாக வாழ்வது எப்படி என தெரிந்து கொள்வது சாத்தியமா? சாத்தியப்படும். வேதத்தில் நம்முடைய வாழ்க்கைக்கு தேவையான சுகாதர விதிகள் கூறப்பட்டுள்ளன என்பதை நாம் அறியாதவர்களாக இருக்கின்றோம்.



18

பல ஆண்டுகளாக யூதர்களின் வாழ்க்கை முறையைக் குறித்து அநேக ஆராய்ச்சிகள் நடைபெற்றிருக்கின்றத. கான்சர் வியாதி மற்றவர்களைக் காட்டிலும் மிகக்குறைந்த அளவில் யூதர்களை தாக்குகின்றது. அதேபோல கொள்ளை நோய்களும் குறைவாகவே தாக்குகிறது. யூதர்களுக்கு பரம்பரை பழக்க வழக்கங்கள். பரம்பரை தொற்றுவியாதி, எதிர்ப்பு சக்திகள் மற்றவர்களைவிட ... குறைவா?


19

அதே வேளையில் யூதர்கள் மற்றவர்களை போலவே சாப்பிட்டார்களெனில், அவர்களுக்கும் கான்சர், மற்ற வியாதிகள் மற்றவர்களுக்கு வருவதைப் போன்று வருகின்றது. இரகசியம் எங்கிருக்கின்றதெனில் உணவு பழக்கமுறை பின்பற்றும் ஆரோக்கிய விதிமுறைகள்.



20

(வீடியோ 10 வினாடிகள்)
தேவன் இஸ்ரவேல் மக்களை எகிப்திலிருந்து வெளியே அழைத்துவரும் போது, அநேக சுகாதார விதிகளை போதித்திருந்தார். அந்த விதிகளை போதித்ததோடு மட்டுமின்றி அதை பின்பற்றுகின்றவர்களுக்கு அநேக வாக்குத்தத்தங்களையும் கொடுத்திருந்தார்.



21

(வசனம் யாத்திராகமம் 15:26)
.... நீ உன் தேவனாகிய கர்த்தரின் சத்தத்தைக் கவனமாய் கேட்டு அவர் பார்வைக்கு செம்மையானவைகளை செய்து.

# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.




22

அவர் கட்டளைகளுக்குச் செவிகொடுத்து, அவருடைய நியமங்கள் யாவையும் கைக்கொண்டால்.



23

நான் எகிப்தியருக்கு வரப்பண்ணின வியாதிகளில் ஒன்றையும் உனக்கு வரப்பண்ணேன். நானே உன் பரிகாரியாகிய கர்த்தர். யாத்திராகமம் 15:26. மேலும் அவர் கூறும் போது.



24

(வசனம் யாத்திராகமம் 23:25)
உன் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள். அவர் உன் அப்பத்தையும், தண்ணீரையும் ஆசீர்வதிப்பார்.



25

வியாதியை உன்னிலிருந்து விலக்குவேன். யாத்திராகமம் 23:25. இதன் மகத்துவத்தை கண்டுகொண்டீர்களா? தேவனுடைய ஆலோசனையைக் கேட்டு பின்பற்றினால் அநேக வியாதியை தவிர்க்கலாம். இது பணமில்லாத ஆலோசனைகள். எவ்வளவு ஆச்சரியமான வாக்குத்தத்தங்கள்.


26

இந்த வாக்குத்தத்தங்களை குறித்து மேலும் சங்கீதக்காரன் கூறும்போது.



27

(வசனம் சங்கீதம் 105:37)
அவர்கள் கோத்திரங்களில் பலவீனப்பட்டவன் ஒருவனும் இருந்ததில்லை. சங்கீதம் 105:37. இன்று நாம் எதிர்கொள்கின்ற அநேக வியாதிகள் எகிப்தியர்களுக்கு வந்தில்லையா?


28


1975 ம் ஆண்டு எகிப்திய கல்லறைகளின் இருக்கும் பதப்படுத்தப்பட்ட சரீரங்களின் மீது துவப்படும் ஆட்டேபிஸ் என்ற காரியத்தைக் குறித்து ஆராய்ச்சி செய்ய உலகம் முழுவதும் உள்ள ஆராய்ச்சியாளர்கள் இங்கிலாந்தில உள்ள மான்செஸ்டர் மருத்துவ கூடத்தில் கூடினர். இந்த சடலங்கள் கி.மு 1900 ஐ சார்ந்தவை.

# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.




29

(வீடியோ 1 வினாடி) அந்த ஆராய்ச்சியின் முடிவுகள் பாராட்டத்தக்கவை. நவீன கால மனிதன் அவதிப்படுகின்ற அநேக வியாதிகளை எகிப்தியர்கள் எதிர் கொண்டனர்.



30

(வீடியோ 6 வினாடிகள்) இருதய வியாதி, கான்சர், இரத்த சம்பந்தமான நோய்கள், நரம்பு தளர்ச்சி.




31

(வீடியோ 6 வினாடிகள்) கல்லீரல் வீக்கம், நரம்பு இசிவு நோய், பன்றி இறைச்சி  உன்பதானால் ஏற்படும் வியாதி, தாடைப்பிடிப்பு மற்றும் பல.


32

எகிப்து கல்வியினாலும், கலாச்சாரத்திலும் மோசே காலத்தில் சிறப்படைந்திருந்தாலும், அந்த மருத்துவ சிகிச்சை ஆப்பிரிக்க நாட்டின் மந்திரவாதிகளின் மருத்துவத்தை போன்றது.


33

கி.மு 1552 ல் மோசே பிறப்பதற்கு சற்று முன்பு பப்பயரஸ் என்ற புத்தகம் எழுதப்பட்டது.  அந்த புத்தகம் பல வியாதிகளுக்கும் சிகிச்சை முறையை தெரிவிக்கின்றது. ஒரு சில சிகிச்சை முறையை மாத்திரமே பயன்படுத்த முடியும்.


34

காயத்தை ஆற்ற கத்தியினால் புழுவின் இரத்தத்தில் தோய்த்து எடுக்கப்பட்டு, குதிரையின் குளம்பினால் புன்னில் வைத்து அழுத்த வேண்டும்.
பாம்பு கடிக்கு விக்கிரத்தின் மீது ஊற்றப்பட்ட தண்ணீரை குடிக்க வேண்டும்.


35

தலை வழுக்கையா? குதிரையின் குளம்பிலிருந்து எடுக்கப்பட்ட திரவத்தையும், பூவின் மொட்டையும், நாயின் பாதங்களை எண்ணையில் கொதிக்க வைத்து தடவ வேண்டும்



36

மோசே எகிப்திய எல்லா கல்வி ஞானத்தில தேறியிருந்தான் என வேதம் கூறுகின்றது (அப். 7:22) மோசேயினுடைய எழுத்துகளில் சுகாதார விதிகள், உணவு விதிகள், தனிப்பட்ட சுகாதாரம் ஆகியவை காணப்படுகின்றன. ஆனால் இவைகளில் ஒன்று கூட பப்பயரஸ் என்ற எழுத்துகளில் கானப்படவில்லை. மோசே இத்தகைய மகத்துவமான சுகாதார விதிகளை எங்கிருந்து கற்றார்? நிச்சயமாக தேவனிடமிருந்து.



37

மத்திய காலங்களில் தொழு நோயும், கருப்பு மரனமும் பயங்கர வியாதிகளாக கானப்பட்டன.



38

யாத்திரகாமத்துக்கு பின்பு தேவன் மோசே மூலமாக கொடுத்த பொது சுகாதார விதிகள் இப்படிப்பட்ட வியாதிகளை கட்டுப்படுத்துகின்றது.
கோடிக்கனக்கான மக்கள் இப்படிப்பட்ட கொள்ளை நோய்களிலிருந்து சபைத் தலைவர்கள் மருத்துவர்களாக இருந்து செயல்பட்டனா்.




39

ஜார்ஜ் ரோசன் எழுதுகிறாா்: மருத்துவர்கள் ஒன்றும் செய்வதற்கு இயலாததால், திருச்சபை தலைமை அங்கத்தை எடுத்துக்கொண்டது.




40

திருச்சபை - பழைய ஏற்பாட்டிலுள்ள நியமங்களை தனது வழிகாட்டியாக எடுத்துக்கொண்டது.




41

இதனைப்பற்றிய கருத்துக்களையும் அதன் விளைவுகளையும் குறித்து லேவியராகமம் புத்தகம் தெளிவாக எடுத்துரைக்கின்றது. - ரோசன்ஜார்ஜ் ரோசன், எம்.டி., பொது சுகாதாரத்தைக்குறித்த வரலாறு, பக்கம் 63-65.

15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.

# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.


42


வேதாகமத்தில் உள்ள பொது சுகாதாரக் கொள்கைகள் எப்பொழுதும் எல்லோருக்கும் அறியப்படக்கூடியதாக இருந்தாலும் உலகில் 6 கோடி மக்கள இன்னும் இந்த வாதைகளால் மரணம் அடைகின்றனர். இதை நினைக்கும் பொழுது அவமானமாக இருக்கின்றது.


43

கர்த்தர் நமது சரீரத்தை வடிவமைத்தார். எப்படி நாம் நோய்க்குத் தப்பி, சரீர சுகத்தில் இருக்க வேண்டும் என்பதையும் அறிகிறார். கர்த்தர் மனிதனுக்கு ஈடு இணையில்லா சரீரத்தைக் கொடுத்து எல்லையில்லாத தருணங்களையும் கொடுத்திருக்கிறார். சரீரம் அநேக அற்புதமான உறுப்புக்களைக் கொண்டது.


44

தேவன் நம்மை படைத்தார், நம் சரீரம் முழு பெலததுடன் இயங்க என்ன தேவை என்பதை அவர் நன்கு அறிந்திருக்கின்றார்.


45

பல வருடங்களாக சேமித்த பணத்தில் ஒரு வாலிபன் பளபளக்கும் கார் ஒன்று வாங்கினான்.


46

பல வருடங்கள் பழுதில்லாமல் ஓடி, பயன்பெற, அந்த காருக்கு தயாரிப்பாளரின் ஆலோசனை அட்டை கொடுக்கப்பட்டிருந்தது.


47

அது மிகவும் விலையுயர்ந்த காராக இருந்தபடியினால் அதை எப்படி பராமரிக்கவேண்டும் என கொடுக்கப்பட்ட அட்டவனையை படிக்கவேண்டுமல்லவா? ஆனால் அவன் படிக்கவில்லை. அவன் நினைத்ததெல்லாம் எப்படி மணிக்கு 60 கி.மீ வேகத்தில் செல்லமுடியும். மிக வேகமாக போய், சட்டென்று பிரேக்கை போட்டு அது எவ்வளவு சீக்கிரமாக நிற்கின்றது என்று பார்க்கவே விரும்பினான். அப்படி செய்யும்போது ஏற்படுகின்ற கார் டயரின் சத்தத்தை கேட்டு ஆனந்தமடையவே விரும்பினான்.

## 15 □ கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.


48


கார் சவாரி செய்வதற்கு முன்பு தண்ணீரின் அளவு, சக்கரங்களில் காற்றின் அளவு எதையும் பரிசோதிக்க மாட்டார். அந்தக் கொஞ்ச நேரத்தை வீணடிக்க அவர் விரும்பவில்லை. மக்கள் கூட்டம் அதிகம் உள்ள இடங்களுக்கு வேகமாகச் செல்வார். அவருடைய பளபளக்கும் காரை மக்கள் கூட்டம் பார்க்க விரும்பினார்.


49

கதையின் மீதமானதை கற்பனை செய்துப் பாருங்கள். ஆம். அந்த கார் நீண்ட நாட்கள் செயல்படவில்லை, பதிலாக ரிப்பேர் செய்ய அதிக பணம் தேவைப்பட்டது. இதைப்போலவே தேவன் கொடுத்த நம் சரீரத்தைக் அக்கறையின்றி விட்டுவிடுகின்றோமா? நாம் நிச்சயமாக எல்லாவித ஆலோசனைகளையும் பின்பற்ற விரும்புவோம் அல்லவா?


50

ஒரு தடவை ஆஸ்பத்திரிக்கு சென்று வந்தால் வாழ்நாள் முழுவதும் சேர்த்த சேமிப்பு தீர்ந்துவிடுகிறது.


51

நாம் சற்று சிருஷ்டிப்பின் இடத்திற்கு, ஏதேன் தோட்டத்திற்கு போய், தேவன் ஆதாமும், ஏவாளும் சுகமாய் வாழ சொல்லிய சில ஆலோசனைகளை கேட்பது நல்லது. நல்ல சத்தான உணவு. பாவம் இவ்வுலகில் வருமுன்பு, ஆதாமுக்கும், ஏவாளுக்கும் அவர்களின் நல்ல உடல் நலத்திற்காக சரிவிகித சத்தான உணவை தேவன் கொடுத்தார்.



52

(வசனம் ஆதியாகமம் 1:29)
இதோ பூமியின் மேல் எங்கும் விதை தரும் பூண்டுகளையும் விதை தரும் கனிமரங்களாகிய சகலவித விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன். அவைகளை உங்களுக்கு ஆகாரமாயிருக்கக் கடவது.



53

விதை தரும் கனி விருட்சங்களையும் உங்களுக்கு ஆகாரமாகக் கொடுத்தேன். ஆதியாகமம் 1:29.

15 □ கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.

# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.


54

நவீன மொழியில் சொல்லப்போனால் பழங்களும், தானியங்களும், கொட்டைகளும் கொடுக்கப்பட்டன.


55

இதுதான் அவர்களின் உணவு. இத்துடன் தேவன் ஜீவ விருட்சத்தின் கணியையும் கொடுத்து அவர்கள் நித்திய வாலிபத்தையும், ஆரோக்கியத்தையும் பெற உறுதிசெய்தார். ஆதாம் பாவம் செய்த பிறகு, தேவன் அவர்களை ஜீவ விருட்சத்திலிருந்து விலக்கி, காய்கறிகளை அவர்கள் உணவுக்காக சேர்த்தார்



56

(வசனம் ஆதியாகமம் 3:18)
வெளியின் பயிர்வகைகளைப் புசிப்பாய்.
ஜலப்பிரளயம் வரை இந்த பழங்கள், தானியங்கள், கொட்டைகள் மனிதனுக்கு உணவாயிருந்தன. அது சரியானதா? ஆம். உண்மையில் ஆண்டவர் கொடுத்த சரியான உணவு வகைகளினால் அன்றிருந்த மக்கள நூற்றுக்கணக்கான வருடங்கள் உயிர் வாழ்ந்தனர்.



57

(வசனம் ஆதியாகமம் 5:27)
உலகத்தில் அதிக நாட்கள் உயிர் வாழ்ந்தது மெத்தூசலா. மெத்தூசலாவுடைய நாளெல்லாம் தொளாயிரத்து அறுபத்தொன்பது வருஷம். ஆதியாகமம் 5:27.


58

ஜலப்பிரளயத்திற்குப் பின் மனிதனுடைய ஆயுசு நாட்கள் குறுக ஆரம்பித்தது. நோவாவின் மகன் சேம் 600 வருடங்களும் அவனது பேரன் 239 வருடங்களும், அவனது கொள்ளுப்பேரன் 175 வருடங்களும் வாழ்ந்தனர். தாவீது இராஜாவின் காலத்தில் மனுஷனுடைய ஆயுட்காலம் 70 வருடமாக ஆகியது. முதலில் இருந்தது அதிக நாட்கள், அப்படித்தானே.

# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.


59

ஜலப்பிரளயத்தினால் பூமியில் தாவர வகைகள் மிகவும் குறைந்து போய்விட்டன. நோவாவிற்கும் அவரது குடும்பத்திற்கும் பேழையில் இருந்த ஓராண்டிற்கு பிறகு உணவுப்பஞ்சம் ஏற்பட்டது. இந்த உணவுப் பஞ்சத்தை சமாளிக்க மாமிச உணவை தேவன் அனுமதித்தார். அதேவேளையில் எல்லா தாவரங்களும், எல்லா மாமிசமும் உணவிற்கு ஏற்றதல்ல. தேவன் எத்தகைய உணவு ஏற்றது என சில வழிமுறைகளை ஆலோசனையாக கூறியுள்ளார்.



60

விலங்குகளில் அசுத்தமானவை, சுத்தமானவை என்ற வேறுபாடு உண்டாக்கப்பட்டது. எந்த மிருகங்களை எத்தனை வீதம் எடுத்துச் செல்ல வேண்டும் என்று ஆண்டவர் நோவாவுக்கு ஆலோசனை கொடுத்தார்.




61

(வசனம் ஆதியாகமம் 7:2)
நீ சுத்தமான சகல மிருகங்களிலும் ஆணும் பெண்ணுமாக எவ்வேழு ஜோடும்.



62

நீ சுத்தமில்லாத மிருகங்களில் ஆணும் பெண்ணுமாக இரு ஜோடும்.
ஆதியாகமம் 7:2.


63

நோவா, எந்த மிருகங்கள் சுத்தமுள்ளவை, எந்த மிருகங்கள் அசுத்தமுள்ளவை என்பதை தெளிவாக அறிந்திருந்தார்.


64

பிற்காலத்தில் இஸ்ரவேல் மக்களை எகிப்தின் அடிமைத்தனத்திலிருந்து கர்த்தர் வெளியே அழைத்து வந்தபோது - அவர்களுக்கு உணவு அட்டவணைக் குறிப்பைக் கொடுத்தார். ஏனென்றால் அதன் மூலம் அவர்களுடைய ஆரோக்கியத்தையும், ஆயுளையும் பாதுகாத்துக்கொள்ள முடியும். உணவிற்கு எந்த மிருகங்கள் சுத்தமானவை, எந்த மிருகங்கள் அசுத்தமானவை என்பது கர்த்தருக்குத் தெரியும்.

15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.

# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.



65

(வசனம் உபாகமம் 14:6)
மிருகங்களில் விரிகுளம்பு உள்ளதாயிருந்து, குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்கிறதும்.



66

குளம்புகள் இரண்டாகப் பிரிந்திருக்கிறதும் அசைபோடுகிறதுமான சகல மிருகங்களையும் நீங்கள் புசிக்கலாம்.
உபாகமம் 14:6.
லேசாக ஞாபகத்தில் வைக்கக்கூடிய ஆலோசனைகள். இரண்டு காரியங்கள்.
1. விரிகுளம்பு உள்ளது. 2. அசை போடுகிறது.



67

(வீடியோ 14 வினாடிகள்) சில பொதுவான சுத்தமான பிராணிகள், வசனம் 4-6.  மாடு செம்மறி ஆடு, வெள்ளாடு, மான், வெளிமான், கலைமான் போன்றவை.




68

(வீடியோ 10 வினாடிகள்)
அசுத்தமான பிராணிகள் : (வசனங்கள் 7-8) ஒட்டகம், முயல், பன்றி, குழிமுயல், ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுங்கள்.  இரண்டு காரியங்கள். விரிகுளம்புள்ளது.  அசைபோடக்கூடியது உணவுக்கு ஏற்றது.  சில பிராணிகள் அசைபோட்டாலும் அவைகளுக்கு விரிகுளம்புகளில்லை.


69

உதாரணத்துக்கு: பன்றியை எடுத்துக்கொள்வோமானால், அதற்கு விரிகுளம்பு இருக்கிறது.  ஆனால் அது அசைபோடுவதில்லை.  ஆகவே அது அசுத்தமானது. வேதாகமம் சில நேரடியான ஆலோசனைகளைப் பன்றியைப் பற்றி சொல்லுகிறது.



70


(வசனம் லேவி. 11:7,8)
பன்றியின் குளம்பு விரிகுளம்பும் இரண்டாகப் பிரிந்ததுமாயிருந்தும், அது அசைபோடாது, அது உங்களுக்கு அசுத்தமாயிருக்கும்.

# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.



71

இவைகளின் மாமிசத்தைப் புசிக்கவும் இவைகளின் உடல்களைத் தொடவும் வேண்டாம். லேவியராகமம் 11:7, 8. கர்த்தர் பட்டியலிட்டிருக்கிற அசுத்தமான பிராணிகள் - கழிவுகளைச் சுத்தம் செய்பவைகள். ஆண்டவர் இந்த நல்ல ஆலோசனைகளதைத் தரும்பொழுதுத ஒன்றையும் நமக்கு மறைத்து வைக்கவில்லை. எது தீங்கானது, எது வியாதிகளுக்கும் பிணிகளுக்கும் காரணமாக இருக்கும் என்று கர்த்தர் அறிவார்.




72


(வசனம்: சங்கீதம் 84:11)
உத்தமமாய் நடக்கிறவர்களுக்கு நன்மையை வழங்காதிரார். சங்கீதம் 84:11.


73

பன்றி ஒரு தோட்டியைப் போன்றது. பன்றிகள் உண்ணும் கழிவுப் பொருட்கள் சில மணி நேரத்திற்கெல்லாம் ஜீரணமாகி - உணவுகளாக மாறுகின்றன. பசு-மற்றுமோர் உதாரணம்: பசுவிற்கு ஜீரண மண்டலம் வித்தியாசமாக இருக்கிறது. கூட்டு ஜீரண மண்டலம். பசுவிற்கு 48 மணிநேரம் (2 நாட்கள்) ஆகின்றன சாப்பிட்ட ஆகாரம் ஜீரணமாகி இரத்தத்தோடு கலக்க. கூட்டு ஜீரண மண்டலமாதலால் அநேக கழிவுப்பொருட்களை நீக்க அந்த அமைப்பு உதவுகிறது.


74

பன்றி இறைச்சியில் அடிக்கடி டிரிச்சின்னா என்ற கூட்டுப்புழு இருக்கின்றது. இந்தப்புழு உள்ள பன்றி இறைச்சியை ஒரு நபர் சாப்பிட்டால், உள்ளே சென்றதும் கூட்டப் புழுவின் கூடு கரைந்துவிடும். டிரிச்சின்னா என்ற அந்தப் புழு சிறுகுடலில் குடியிருந்து, பலுகிப்பெருகும்


75

இந்தப் புழுக்கள் இரத்தநாளங்கள் வழியாக நுழைந்து, உடலின் மற்ற பாகங்களுக்கு சென்றடைகின்றன. டிரிச்சினசிஸ் என்ற வியாதி கொடியது. எவ்வளவு அதிகமாக புழுவுள்ள இறைச்சியை உண்ணுகிறோமோ அவ்வளவு சீக்கிரத்தில் நோயால் பாதிக்கப்படுவோம். அநேக நேரங்களில் இந்த வியாதியை டாக்டர்கள் மூட்டுவலி என்றும் நச்சான உணவினால் வந்த வியாதி என்றும் தவறாகத் தீர்மானிக்கின்றனர்.

15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.

# 15 ▯ கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.



76

குறிப்புகள் வெளிப்படுத்துகின்றது. மோசே காலத்தில் வாழ்ந்த மக்களிடத்தில் இந்த டிரிச்சின்னா புழுக்கள் உள்ள வியாதி காணப்பட்டதாக அவர்களின் பதப்படுத்தப்பட்ட சடலங்களை ஆராயும்போது கண்டுபிடித்தனர். நல்லதைக் கர்த்தர் அறிவார். கர்த்தர் மீன்களை குறித்தும் ஆலோசனை கொடுத்திருக்கிறார்.





77

(வசனம்: உபாகமம் 14:9, 10)
ஜலத்திலிருக்கிற எல்லாவற்றிலும் சிறகும், செதிகளும் உள்ளவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம்.





78

சிறகும் செதிகளும் இல்லாத யாதென்றையும் புசிக்கலாகாது. அது உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக.
உபாகமம் 14:9, 10.





79

இங்கும் நீங்கள் பார்ப்பீர்களால் இரண்டு வழிமுறைகள் ஆலோசனைகளாகக் கொடுக்கப்படுகின்றன இலகுவாகப் புரிந்துகொள்வதற்காக:




80

1. அவைகளுக்கு சிறகுகள் இருக்க வேண்டும்.




81

2) அவைகளுக்கு செதில்களும் இருக்கின்றன. மனிதன் அதிகமாக சாப்பிடக்கூடிய சிறகும் செதிலும் இல்லாத கடல் வாழ் மீன்கள் எவை என்று நினைக்க முடிகிறதா?



82

டாக்டர். புருஸட ஹால்டெட் என்ற லோமலிண்டாப் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்தவரை, அரசாங்கத்தினர் இராணுவ உபயோகத்திற்காக வேண்டி, மீன்களில் எந்த மீன்கள் மனிதனுக்கு உணவுக்கு ஏற்றவை? எவை விஷத்தன்மை கொண்டவை என்று ஆராய்ச்சி மேற்கொள்ளச் செய்தனர்.

# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.


83

கடற்பிரயாணம் செய்வோர் விபத்தில் சிக்கினால் - சாப்பிடுவதற்கு எது சிறந்தது, எது விஷமீன்கள் என்பதை அறிந்திருக்க வேண்டும். டாக்டர். ஹால்டெட் பரிசோதனை முடித்த பிற்பாடு, இராணுவத்தினருக்கும், கப்பற்படையினருக்கும், 3500 வருடத்திற்கு முன்பு இஸ்ரவேலருக்கு கர்த்தர் எந்த மீன்களைச் சாப்பிடச் சொன்னாரோ, அதையே இவரும் சிபாரிசு செய்திருக்கிறார்.



84

(வசனம்: உபாகமம் 14:9)
ஜலத்திலிருக்கிற எல்லாவற்றிலும் சிறகும் செதிளும் உள்ளவைகளையெல்லாம் நீங்கள் புசிக்கலாம். கர்த்தர் அவைகளை எப்படி சிருஷ்டித்தார். குறிப்பாக சில மீன்களை ஏன் நாம் சாப்பிடலாம் அல்லது சாப்பிடலாகாது என்பதை கர்த்தர் அறிவார்.


85

பறவைகளைப் பற்றி என்ன செய்தி உண்டு? வேதாகமம் முக்கியமான ஆலோசனைகளைக் கொடுக்கிறது.



86

(வசனம்: உபாகமம் 14:11, 12)
சுத்தமான சகல பட்சிகளையும் நீங்கள் புசிக்கலாம்.



87


நீங்கள் புசிக்கத்தகாதவைகள் எவையென்றால், வசனங்கள் 11, 12.



88

(வீடியோ பிரிவு 14 விநாடிகள்)
தேவன் அவைகளைப் பட்டியலிடுகிறார். கழுகும், கருடனும், கடலுராஞ்சியும், பைரியும், வல்லூறும், சகலவித காகங்களும், தீக்குருவியும், கூகையும், செம்புகமும், ஆந்தையும், கோட்டானும், நாரையும். வௌவாலும் மற்றும் அவைகளின் வகைகளுமே.

# 15 □ கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.



89

(வசனம்: உபாகமம் 14:19)
பின்பு தேவன் சொன்னது. பறக்கிறவைகளில் ஊர்வன யாவும், உங்களுக்கு அசுத்தமாயிருப்பதாக, அவைகள் புசிக்கத்தகாதவைகள். வசனம் 19.



90

(வசனம்: லேவி 3:17)
தேவன் மேலும் கொடுத்த ஆலோசனை. இது உங்கள் வாசஸ்தலங்கள் எங்கும் உங்கள் தலைமுறைதோறும் நித்திய கட்டளையாயிருக்கும்.



91

கொழுப்பையாவது, இரத்தத்தையாவது நீங்கள் புசிக்கலாகாது. லேவி 3:17.


92

கொள்கைப்பிடிப்புள்ள யூதர்கள் இன்னும்இந்தப் போதனைகள் இன்றும் பின்பற்றுகிறார்கள். அவர்கள் ஒரு மிருகத்தை வெட்டும்பொழுது, அதன் இரத்தம் வெளியேறுவதற்காக, அதை தலைகீழாகத் தொங்கவிடுகின்றனர். பின் அந்த மிருகமானது துண்டாக்கப்பட்டு, மீதியான இரத்தமும் வெளியேற உப்புக்கரைசலில் நனைக்கப்படுகிறது.


93

கொழுப்பானது உண்ணப்படாமல் விலக்கப்படுகிறது. கொழுப்பும், இரத்தமும் உட்கொள்ளப்படுவதைத் தடுக்கும் இந்தக் கட்டளையை தேவன் கொடுத்த ஒரு சாதாரண சடங்காச்சாரத் தடையாக, மக்கள் அநேக வருஷங்களாகக் கருதினர்.


94

இருப்பினும், நவீன ஆராய்ச்சியானது தேவனுடைய கட்டளையின் ஞானத்தை உறுதிப்படுத்துகிறது.


95

இரத்தமானது அழுக்குகளை, நுண்ணுயிர்களை, நஞ்சுகளை மற்றும் சரீரக் கழிவுகளை சுமந்து செல்கிறது என்பது இப்பொழுது நமக்குத் தெரிகிறது. இரத்தத்தின் மூலமாக பலவியாதிகள் பரவுகின்றன.


# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.


96

அதிக செறிவூட்டப்பட்ட கொழுப்பாலான பால் தயாரிப்புகள் மற்றும் மாமிச உணவு வகைகள் நமது இரத்ததில் உள்ள கொழுப்பின் அளவை அதிகரிக்கச் செய்து, இரத்த சம்பந்தமான மற்றும் இருதய வியாதிகள் உருவாக ஒரு முக்கிய காரணியாகிறது என்பதையும் நாம் அறிவோம். சிறந்த உணவு முறையைத் தெரிந்துக்கொள்வதில் மனிதன் தன் சிருஷ்டிகரை நம்புவானானால், எவ்வளவு வியாதிகள் தவிர்க்கப்படும்.


97

ஆரோக்கியத்திற்கான உடற்பயிற்சி. தேவன் ஆதாம், ஏவாளைப் படைத்தபின் அவர்கள் செய்வதற்கென சில பயனுள்ள செயல்களை, உடற்பயிற்சியை அவர் அவர்களுக்குக் கொடுத்தார் என்று வேதம் கூறுகிறது.



98

(வசனம் ஆதியாகமம் 2:25)
தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அதைப்பண்படுத்தவும், காக்கவும் வைத்தார். ஆதியாகமம் 2:15.


99

உடற்பயிற்சி உடலை பலநோய்களிலிருந்து பாதுகாக்கிறது. செயல்பாடற்ற ஒரு சரீரம் சீர்கேடு அடைகிறது.


100

உடற்பயிற்சி தசைகள் மற்றும் இரத்தக்குழாய்களின் தன்மையை மேம்படுத்துகிறது.


101

நுரையீரல்கள் அதிக செயல்படுதிறன் பெற்று, குறைவான முயற்சியுடன் அதிகக் காற்றை இயக்கத்திற்குக் கொண்டு வருகிறது.

15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.

# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.


102

இருதயம் ஒவ்வொருத் துடிப்புக்கும் அதிக இரத்தத்தை இயக்கி, அதிகமாக முகததின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய். ஆதியாகமம் 3:19. மேலும் அவர் நிலம் செயல்படுகிறது. முழு சரீரத்தையும் மேம்படுத்த திசுக்களுக்கு ஆற்றலை உருவாக்கும் காற்று சுமந்து செல்லப்படுகிறது. ஆதாம், ஏவாள் பாவம் செய்தபின், தேவன் அதிகப்படியான, சரீரப் பிரகார வேலையைக் கூட்டியிருக்கிறார்.



103

(வசனம் ஆதியாகமம் 3:19)
தேவன் உரைத்ததாவது. நீ பூமிக்குத் திரும்பும் மட்டும் உன் முகத்தின் வேர்வையால் ஆகாரம் புசிப்பாய். ஆதியாகமம் 3:19.
உன்னிமித்தம் பூமி சபிக்கப்பட்டதாகவும், முள்ளையும், குருக்கையும் பிறக்கிறதாயும் இருக்கும் என்றும் சொன்னார். நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் வருத்தத்தோடே அதன் பலனைப் புசிப்பாய். வசனங்கள் 17, 18.


104

உடற்பயிற்சி மனிதனுக்குத் தேவை, அவனுடைய சரீரத்திற்கு மாத்திரமல்ல. அவனை இடுக்கணிலிருந்து காப்பதற்கும் அது அவசியம் என தேவன் அறிந்திருக்கிறார். சோம்பலான சிந்தை பிசாசின் தொழிற்கூடம் என்று ஒருவர் சொல்லியிருக்கிறார்.



105

(வசனம் யாத்திராகமம் 20:9)
தேவன் சொன்னதாவது. ஆறு நாட்களும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக. யாத்ததிராகமம் 20:9.
ஒவ்வொருவரும் வாரத்தில் ஆறு நாட்கள் வேலை செய்தால், ஒரு வேளை பிரச்சனைக்கு ஏதுவாக அவர்கள் அதிகக் களைப்படைவார்கள்.



106

நம்முடைய சரீரம் பரிசுத்த ஆவியானவரின் ஆலயம். அது தேவனுக்கு எவ்வளவு முக்கியமானது என்று நாம் அறியும்போது நம்முடைய சரீரங்களை கவனிப்பதின் முக்கியத்துவத்தை அறிந்துகொள்ள முடியும்.

# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.



107

(வசனம் 1 கொரிந்தியர் 6:19, 20)
அப்போஸ்தலர் பவுல் சொல்கிறார். உங்கள் சரீரமானது நீங்கள் தேவனாலே பெற்றும் உங்களில் தங்கியும் இருக்கற பரிசுத்த ஆவியினுடைய ஆலயமாயிருக்கிறதென்றும்,



108

நீங்கள் உங்களுடையவர்களல்ல என்றும் தேவனாலே வந்தவர்கள் என்றும் அறியீர்களா?



109

கிரயத்துக்குக் கொள்ளப்பட்டீர்களே. ஆகையால், தேவனுக்கு உடையவைகளாகிய உங்கள் சரீரத்தினாலும் உங்கள் ஆவியினாலும் தேவனை மகிமைப்படுத்துங்கள்.
1 கொரிந்தியர் 6:19, 20.


110

சிருஷ்டிப்பினாலும், மீட்பினாலும் மனிதன் தேவனுடைய சொத்து. அவருடைய குமாரனின் கல்வாரி பலிதான் தேவன் நமக்குக் கொடுத்த கிரயம். அந்த அளவில்லாத கிரயத்தினால் மனிதன் மீட்கப்பட்டதினாலே அவன் செய்கிற எல்லாக் காரியத்திலும் தேவனை மகிமைப்படுத்த வேண்டும்.



111


(வசனம்: 1 கொரிந்தியர் 10:31)
ஆகையால் நீங்கள் புசித்தாலும், குடித்தாலும், எதைச் செய்தாலும் எல்லாவற்றையும் தேவனுடைய மகிமைக்கென்று செய்யுங்கள்.
1 கொரிந்தியர் 10:31.
தேவனை உண்மையாகவே நேசிக்கிற ஒவ்வொரு நபரும் தன் சரீரத்தைக் கொடுக்கிற அல்லது மாசுபடுத்துகிற எந்த காரியத்திலும் கவனமாக இருப்பான்.



112

(வசனம்: 1 கொரிந்தியர் 3:17)
ஒருவன் தேவனுடைய ஆலயத்தைக் கெடுத்தால், அவனை தேவன் கெடுப்பார்.

# 15 கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.




113

தேவனுடைய ஆலயம் பரிசுத்தமாயிருக்கிறது. நீங்களே அந்த ஆலயம்.
1 கொரிந்தியர் 3:17.
ஒரு நபர் எந்த வழியிலே தன்னுடைய சரீரத்தை தீட்டுப்படுத்துகிறான் என்று ஒருவேளை ஆச்சரியப்படுவீர்கள். ஒதுக்க வேண்டிய சிலவற்றை பவுல் வகையறுக்கிறார்:



114

(வசனம்: 1 கொரிந்தியர் 6:9, 10)
... வஞ்சிக்கப்படாதிருங்கள், வேசிமார்க்கத்தாரும், விக்கிரகாராதனைக்காரரும்: விபசாரக்காரரும், சுய புணர்ச்சிக்காரரும், ஆண்புணர்ச்சிக்காரரும்.



115

திருடரும், பொருளாசைக்காரரும் வெறியரும் ... தேவனுடைய ராஜ்யத்தைச் சுதந்தரிப்பதில்லை.
1 கொரிந்தியர் 6:9, 10.
ஒழுக்கமின்மை மற்றும் முறைதவறிய நடத்தையுமே சரீரத்தை தீட்டுப்படுத்துகிறது என்று வேதம் கூறுகிறது.




116

(வசனம்: நீதிமொழிகள் 20:1)
சாலமோன் எழுதுகிறார். திராட்சரம் பரியாசஞ்செய்யும், மதுபானம் அமளிப்பண்ணும், அதினால் மயங்குகிற ஒருவனும் ஞானவானல்ல.
நீதிமொழிகள் 20:1.




117

(வசனம்: நீதிமொழிகள் 23:31-33)
மேலும் மறுபடியும். மதுபானம் இரத்தவருணமாயிருந்து, பாத்திரத்தில் பளப்பளப்பாய்த் தோன்றும்போது நீ அதைப் பாராதே. அது மெதுவாய் இறங்கும்.



118

முடிவிலே அது பாம்பைப்போல் கடிக்கும், விரியனைப்போல் தீண்டும்.



119

உன் கண்கள் பரஸ்திரீகளை நோக்கும், உன் உள்ளம் தாறுமாறானவைகளைப் பேசும்.
நீதிமொழிகள் 23:31-33.

## 15 □ கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.




120

மதுபானம் குடித்தல் உலகத்திலேயே உள்ள மிகப் பெரிய சுகாதார பிரச்சனைகளில் ஒன்று. ஏறக்குறைய பாதிக்கு மேலான சாலை விபத்துக்கள் குடிபோதையில் வாகனத்தை ஓட்டுவதாலும் சாலையை கடப்பதினாலுமே ஏற்படுகிறது என்றும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.


121

நடைபெறும் கொலைகளில் பாதிக்குமேல், ஒன்று கொலை செய்யப்பட்டனர் அல்லது கொலை செய்தவர் அல்லது இருவரும் மதுபானம் அருந்தியிருப்பார்கள்.


122

சரீரத்தின் உயிர்ச் சத்துக்களைப் பயன்படுத்தும் தன்மையை மதுபானம் பாதிக்கின்றது. மேலும் மதுபானத்தில் உள்ள சர்க்கரை கிருமிகளை எதிர்க்கும் சக்தியைக் குறைக்கின்றது.


123

மதுபானம், நுரையீரலை கொழுப்பு நிறைந்ததாக மாற்றுகிறது. நுரையீரலின் பாதிப்பால் மரிக்கக்கூடிய வாய்ப்புகள் மிக அதிகமாக உள்ளது. குறைந்தது பன்னிரெண்டு வருடங்கள் ஆயுளில் குறைகிறது.


124

தற்போதைய ஆராய்ச்சின்படி குடிக்கின்ற மதுபானம் இரத்தில் சேரும்போது அநேக மூளை அணுக்கள் செத்துபோய்விடுகின்றது.


125

மதுபானம் குடிக்காதவர்களைவிட மதுபானம் குடிக்கும் தாய்மார்களுக்கு குழந்தைகள் குறைகளோடு பிறக்கின்றன. ஆனால், கிறிஸ்தவர்களுக்கு மதுபானம் அதிக விளைவுகளை கொடுக்கின்றது.


126

கிறிஸ்தவர்கள் சாத்தானின் சோதனைகளைத் தவிர்க்க மனதை முழுமையாக பயன்படுத்த வேண்டும். சரி, தவறு என்று பகுத்தரியக்கூடிய திறனை இழந்துபோகாதபடிக்கு பார்த்துக்கொள்ள வேண்டும்.


127

வேதனையை குறைப்பதற்கு சிலுவையில் அவருக்கு கொடுத்த அந்த மயக்கும் பானத்தை இயேசு மறுத்தார்.

# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.


128

இயேசு கொடிய வேதனைப்பட்டாலும் கூட, அவருடைய சிந்தையை பாதிக்கின்ற எதையுமே அவர் ஏற்றுக்கொள்ளவில்லை.


129

அநேக தவறான பழக்கவழக்கங்கள் ஆரோக்கியத்தை பாதிக்கின்றது. புகைக்காதவர்களைவிட புகைப்பவர்கள் ஆயிர சதவீதத்திற்கும் அதிகமான நுரையீரல் புற்றுநோயால் வருத்த வாய்ப்பு உண்டு. புற்றுநோய் புகையிலையினால் மட்டும் வருவதல்ல. புகைப்பவருக்கு புகைக்காதவர்களைவிட 103 சதவீதம் இருதய நோயால் பாதிக்கப்படுகின்றனர்.


130

ஒவ்வொரு வருடமும் 55,000 எம்பைசீமா என்ற நோயால் உயிர் இழக்கின்றனர் நிகோட்டின் இரத்த குழாய்களை சுருங்கச் செய்கின்றது.


131

இந்த தொடர்ச்சியான கொழுப்பு அதிகரிப்பும் இரத்தக் குழாயின் சுருக்கமும், இருதயத்திற்கும், பிறபகுதிக்கும் போதுமான இரத்தம் செல்லத் தடை செய்கின்றது. இந்தப் பகுதியில் இரத்தம் உறைந்து இரத்த குழாய்களை அடைத்துவிடுவதால் மாரடைப்பு அல்லது வாதம் ஏற்படுகின்றது.


132

புகைக்கின்ற நபர்கள் சீக்கிரமாக முதுமையடைய வாய்ப்புண்டு. ஏனெனில் குறைவான பிராண வாயு மூளைக்கு எடுத்துச் செல்லப்படுகிறது.


133

பிரசவ நேரத்தில் புகைக்கிற பெண்கள் அவர்களின் குழந்தையின் இரத்த குழாய்களைப் பாதிக்கின்றனர். புகைக்கிற தாய்மார்களின் குழந்தைகளில் 27 சதவீதம் மரணத்திற்குள்ளாகின்றனர்.



134

கடந்த வருடம் அமெரிக்காவில் மட்டும் 5,00,000 மக்களுக்கு மேல் புகைப்பதினால் மரணம் அடைந்துள்ளனர்.

# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.





135

(வசனம்: யாத்திராகமம் 20:13)
தேவன் சொன்னார். கொலை செய்யாதிருப்பாயாக யாத்திராகமம் 20:13. எத்தனைபேர் தங்களை சாப்பாட்டினாலும், குடிப்பதினாலும், புகைப்பதினாலும் மாய்த்துக் கொள்கின்றனர்.



136

யாரோ ஒருவர் சொன்னார். பொதுவாக தற்கொலையின் ஆயுதங்கள், கத்திகள், முள்கரண்டிகள் மற்றும் கரண்டிகள் ஒரு வேளை நாம் கப்புகளையும் பாட்டில்களையும் சேர்த்துக் கொள்ளலாம்.



137

காபியில் உள்ள கேபின் என்ற விஷம் பாடபுத்தகங்களில் தூண்டுகிற விஷம் என்று சொல்லப்படுகிறது.
கிரால்டு சிராக் எம்.டி. நீங்களும் உங்கள் ஆரோக்கியமும் தொகுப்பு 1 பக்கம் 413.



138

டீ மற்றும் கோலா பானங்கள் கூட கேபின் நஞ்சு கொண்டவைகள். இந்த எல்லா வகை பானங்களும் இருதய நோய்கள், நரம்பியல் மாறுபாடு மற்றும் முத்திரைப்பையில் புற்றுநோய் போன்றவைகளுக்கு தொடர்புகளுடையது.


139

ஒருவர் ஒரு அறைக்குள் சென்று கொஞ்சம் கேபின் நஞ்சை ஊசிமூலம் நரம்பில் செலுத்தினால் நீங்கள் படிப்படியாக அதற்கு அடிமை ஆகிவிடுவீர்கள்.




140

பாதிக்கக்கூடிய எதையும் பயன்படுத்துவதை தவிர்ப்பதுதான் உண்மையான இச்சையடக்கம் என்று அர்த்தம். மேலும் எது நன்மையோ அதை பயன்படுத்துவதும் இச்சையடக்கமாகும்.


141


அநேக மக்கள் எது நன்மையோ அதை அதிகமாக எடுத்துக் கொள்கிறார்கள் இது பல பகுதியில் உள்ள மக்களுக்கு பிற முக்கியமான ஆரோக்கிய பிரச்சனைக்கு வழி நடத்துகிறது.

# 15  கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.



142

ஒவ்வொரு பவுண்ட் சரீரத்தின் கொழுப்பும், சரீரத்தில் மூன்றில் இரண்டு மடங்கு மயில்தூர புது இரத்த குழாய்களின் தேவையை ஏற்படுத்துகிறது.



143

இந்த கூடுதல் பகுதியான குழாய்கள் வழியாக இருதயம் இரத்தத்தை செலுத்த வேண்டும்.
ஹரால்டு சராக், எம்.டி., நீங்களும் உங்கள் சுகாதாரமும் தொகுப்பு 1, பக்கம் 395.


144


அதிக எடையுள்ள நபர்களின், இருதயம், கனையம், நுரையீரல், கல்லீரல், இவைகள் அதிகமாக வேலை செய்யவேண்டியுள்ளது. அதிக எடையுள்ள மனிதர்கள் மற்றவர்களைவிட பதினாறு வகையான நோய்களால் பாதிக்கப்படுகின்றனர்.


145

தேவன் நம்முடைய சரீரங்களை நல்ல முறையில் கவனிக்க வேண்டும் என விரும்புகிறார். அப்பொழுது நல்ல முறையில் நம் வாழ்வை அனுபவிக்கலாம். நாம் பொருப்புள்ளவர்களாகவும், நல்ல சந்தோஷமான ஜனங்களாகவும் இருக்க விரும்புகிறார். நாம் சுகமான வாழ்க்கை வாழ அவர் விரும்புகிறார். எப்படி அவருடைய அறிவுரைகளை பின்பற்றிகிறோமோ அவ்வளவு ஆரோக்கியமாக நாம் ஜீவிப்போம்.


146

ஓய்வும் பொழுதுபோக்கும் அழுத்தத்தில் இருந்து விடுபட உதவும். இயேசு அழுத்தத்தில் இருந்து விடுபட ஓய்வை நாடினார். ஜனக்கூட்டத்தோடு ஒரு கடினமான நாளுக்கு பிறகு அவர் சீடர்களிடம் சொன்னார்.



147

(வசனம்: மாற்கு 6:31)
வனாந்தரமான ஓரிடத்தில் தனித்துச் சற்றே இளைப்பாறும்படி போவோம் வாருங்கள் என்றார்.
மாற்கு 6:31.
ஓய்வு மற்றும் பொழுதுபோக்கு மூலம் வேலையை சமபடுத்த நம்மை இயேசு விரும்புகிறார்.



148

அதற்காகத்தான் அவர் நமக்கு ஓய்வு கொடுத்திருக்கிறார். நாம் நம்முடைய பிரச்சனைகளை மறந்து மற்றும் நம்முடைய வேலையை மறந்து தேவனோடு நேரத்தை செலவிட வேண்டும் என்று தேவன் அறிந்திருந்தார்.


149

சில காலங்களில் பாலைவனமான பகுதிகள் நமக்கு இளைப்பாறுதலை கொடுத்தாலும் அப்படிப்பட்ட இடங்களை தேர்ந்தெடுக்காமல், உயரமான மரங்கள் ஆழமான நதிகள், மலைகள் உங்கள் இருதயத்தை அமைதிப்படுத்த நீங்கள் தேர்ந்தெடுக்கலாம்.


150

எதுவாயிருந்தாலும், நீங்கள் கூட்டம், சத்தமான நகரங்கள், ரோடுகளை விட்டு தூரமான இடத்தை தேர்ந்தெடுக்க வேண்டம். சிறிய விளையாட்டு இருக்கலாம். அதிகமாக இருந்தாலும் நலம்.


151

ஆம், ஒரு சிறிய பரலோக அனுபவத்தை இங்கு நீங்கள் பெற வேண்டும் என்று தேவன் விரும்புகிறார். மேலும் புதிதாக படைக்கப்பட்ட புதிய பூமியிலும் ஜீவிக்க ஆயத்தமாக வேண்டும். இந்த பூமியில் உள்ள எல்லா வியாதி யும் அங்கே நித்தியமாக அழிக்கப்பட்டிருக்கும்.


152

உண்மையாகவே அது எனக்கு நல்லதாகப்படுகிறது என்று நீங்கள் சொல்கிறீர்கள். நான் அங்கு இருக்க விரும்புகிறேன். ஆனால் என்னிடம் சில பழக்கங்கள் உண்டு அவைகளிலிருந்து என்னால் மீளமுடியவில்லை. ஒரு நல்ல செய்தி இருக்கின்றது. நீங்கள் உங்கள் சுய பலத்தை சார்ந்திருக்க தேவன் எதிர்பார்க்கவில்லை.



153

(வசனம்: யோவான் 15:5)
உண்மையாகவே இயேசு சொன்னார். என்னையல்லாமல் உங்களால் ஒன்றும் செய்யக்கூடாது. யோவான் 15:5. நம்முடைய சொந்த பெலத்தினாலே நம்முடைய தவறான பழக்கங்களை மேற்கொள்ள முடியாது. நம்முடைய இரட்சகர் உதவி செய்கிறதற்கு ஏங்கி நிற்கிறார். பவுல் அந்த இரகசியத்தை அறிந்திருந்தார்.

15 □ கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.

# 15 கடிகாரத்தைப் பின்னுக்கு திருப்புங்கள்.



154

(வசனம்: பிலிப்பியர் 4:13)
அவர் சொன்னார். என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு.
பிலிப்பியர் 4:13.


155

இதைப்போல ஒரு சாயங்காலம் ஒரு பெண் தொடர் கூட்டங்களுக்கு வ்நதாள், போதகர் அவர்களை சந்திக்கும்போது அவர் தேவனுடைய குடும்பத்திற்கு திரும்புவதைப் பற்றி பேசினார். அவள் சொன்னாள், நான் இருக்க வேண்டும் என நினைக்கிறேன். கண்களில் கண்ணீர் சொரிய ஆனால் என்னால் முடியாது. நானே புகைக்கிறேன். அவர் அவளுடைய பெயரை சொல்லி அழைத்து இந்த பழக்கத்தில் இருந்து ஜெயம் பெற இயேசு விரும்புகிறார் என்பதை விசுவாசிக்கிறாயா? என்று கேட்டார். ஓ அம் நான் செய்கிறேன். ஆனால் என்னால் முடியாது. நான் மிகவும் பெலவீனமானவள் என்றாள். நான் ஒரு வேதவசனத்தை வாசிக்கட்டுமா? அவர் வேதத்தைத் திறந்து 1 யோவான் 5:14 ஐ வாசித்தார். நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால் அவர் நமக்குச் செவி கொடுக்கிறார் என்பதை அவரைப்பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம். இப்போது மேரி நீ புகைப்பதைவிட முடியும் என்று நம்புகிறாயா? என்று அவர் கேட்டார். இல்லை என்றாள், ஏனெனில், வேதம் சொல்லுகிறது. இந்த நம்பிக்கைதான் நாம் அவர்மேல் வைத்திருக்கிறோம். எங்கே அந்த நம்பிக்கை? அவரில்.


156

மறுபடியும் சேர்த்து அவர் அந்த வசனத்தை வாசித்தார். அவருடைய சித்தத்தின்படி நாம் அவரிடம் எதை கேட்டாலும் புகைப்பதை விட்டுவிடுவதை தவிர அவர் நமக்கு செவி சாய்க்கிறார். மேரியைப் பார்த்து அவர் கேட்டார். அதை உன்னுடைய வேதத்தில் நான் எழுதட்டுமா? அதை எழுதுவதற்கு உன் வேதத்தை பெறலாமா? இல்லை. இல்லை, என்றால் நான் வேதத்தை மாற்ற விரும்பவில்லை. அவர் சொன்னார். புகைப்பதை விடுவதற்கு இது தேவனுடைய சித்தமாக இருக்கிறது. ஆம், அதுதான் அவள் சொன்னாள். ஆகையினாலே, நீ கிறிஸ்துவிடம் அவர் வாக்களித்த வல்லமையை நம்பிக்கையோடு நீ கேட்க முடியுமா? ஓ, ஆம். அவள் சொன்னாள் என்னால் முடியும் நான் நம்புகிறேன். என்னிடம் ஓர் கேள்வி இருக்கின்றது. எப்போது நீ இந்த வல்லமையை பெற்று புகைப்பதைவிட முடியும்? ஒரு வாரத்திலா, ஒரு மாதத்திலா, 3 மாதங்களிலா? எப்பொழுது நீ அந்த வல்லமையை பெற்றுக்கொள்வாய்? அவர் மறுபடியும் வேதத்தை யோவான் 1:12-க்கு திருப்பி வாசித்தார். அவரை எற்றுக் கொண்டவர்கள். எத்தனை பேர்களோ, அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார். இயேசுவை ஏற்றுக்கொள்வது வல்லமையை ஏற்றுக் கொள்வது.


157

அவருடைய உதவியினாலே முழுமையான ஆரோக்கியம். சந்தோஷம் இங்கே இப்போதும் மேலும் புதிய பூமியிலே நித்திய ஜீவனையும் பெறமுடியும். இயேசுவினிடம் சேருவோம். அவர் உன்னிடம் சேருவார். ஒரு வளர்ச்சியையும் நீ இழக்கமாட்டாய்.

# 16 □ புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்




1

உன்னால் மீண்டும் துவங்க முடியும்.



2

(வீடியோ பிரிவு 10)
மார்ச் 1992ல் ஒரு கிறிஸ்தவ பிரசங்கி ஒரு தொடர் கூட்டத்தை மாஸ்கோவிலுள்ள கிரிமிலின் அரங்கில் நடத்தினார்.
ஒரு நாள் கூட்டம் முடிந்து ஒரு சிறிய அறையில் அவர் உட்கார்ந்திருந்த போது அந்த அறையின் கதவு திடீரென திறந்தது.


3

தாடியுடன் கூடிய ஒரு முரடனான வாலிபன் கதவை தள்ளிக்கொண்டு உள்ளே நுழைந்தான். அவரை தாக்கப் போகிறான் என்று நினைத்த பிரசங்கி சற்று பின்னே சென்றார். ரஷ்ய மொழி பெயர்ப்பாளர் அவ்விருவருக்குமிடையே வந்தார். அந்த வாலிபன் தன் கரங்களை அசைத்து ரஷ்ய மொழியில் பேசினான். மொழி பெயர்ப்பாளர் அதை மொழியாக்கம் செய்தார். அந்த மனிதன் ஒரு பிரபலமான குற்றவாளி, 28 தடவைகள் சிறைச்சாலைக்கு சென்றிருக்கிறான்.
குற்ற உணர்வு கொண்டு, நம்பிக்கையற்ற சூழலில் தன்னுடைய எதிர்காலத்தை குறித்து கலங்கி, சமாதானத்திற்காக ஏங்கி நிற்கிறான் என்றார். பிரசங்கி 1 யோவான் 1:9ஐ வாசித்தார். நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுள்ளவராயிருக்கிறார்.
குழப்பத்துடனிருந்த மனிதனுக்கு, கல்வாரியில் தொங்கின திருடன் மன்னிப்பை பெற்றான் என்பதை எடுத்துக் கூறி இயேசு உனக்கும் மன்னிப்பார் என உறுதி கூறினார். அவர் மன்னிப்பையும், விடுதலையையும் இரட்சிப்பையும் கொடுக்கிறார். அதை எடுத்துக் கொள்! மகிழ்ச்சியடை! கர்த்தரை துதி! என்றார். கண்ணீர் கரைபுரண்டோட தேவ சமூகத்தில் முழங்காலிட்டு தேவனுடைய மன்னிப்பைப் பெற்றுக் கொண்டான்.

16 □ புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்



4

ஓராண்டு கழித்து அந்த பிரசங்கி மாஸ்கோ சென்றார். புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சபையிலே விசுவாசிகளுடன் சேர்ந்து துதித்துக் கொண்டிருக்கையில், மனமாற்றமடைந்த குற்றவாளியும் பாட்டுக் குழுவில் இருப்பதைக் கண்டார்.



5

உள்ளத்திலுள்ள சமாதானம் அந்த முன்னால் குற்றவாளியின் முகத்தில் வெளிப்பட்டது. அந்த மனிதனின் முகம் சந்தோஷத்தினால் மலர்ந்தது. அவன் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டான். கிறிஸ்துவின் உபதேசம் அவனை மாற்றியது. அவன் கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டு ஞானஸ்தானம் பெற்றான். தேவனுடைய கிருபையால் வாழ்க்கை மாற்றமடைந்ததற்கு அடையாளமே ஞானஸ்தானமாகும். மாபெரும் மாற்றமடைந்த சவுலுடைய வாழ்க்கை கிறிஸ்துவின் வல்லமைக்கு ஒரு எடுத்துக்காட்டு.



6

சவுல் பிறப்பால் ரோம பிரஜையாய் இருந்தாலும், எருசலேமிலுள்ள மிகப் பெரிய ஆசிரியர்களிடம் கல்வி கற்றான். சவுல் யூத மார்க்கத்தைக் குறித்து மிகுந்த வைராக்கியம் கொண்டிருந்தான்.



7

சவுலுடைய பெயர் மனந்திரும்புதலுக்குப் பின் பவுலாக மாற்றப்பட்டது. அவர் கிறிஸ்தவ மார்க்கத்தை ஒழிப்பதற்காக செய்ததவாது.




8

(வசனம்: அப்போஸ்தலா் 22:4,5)
நான் இந்த மார்க்கத்தாராகிய புருஷரையும் ஸ்திரீகளையும் கட்டி சிறைச்சாலைகளில் ஒப்புவித்து மரண பரியந்தம் துன்பப்படுத்தினேன்.




9

தமஸ்குவிலிருக்கிறவர்களும் தண்டிக்கப்படும்படிக்கு, அவர்களைக் கட்டி, எருசலேமுக்குக் கொண்டு வரும்படி அவ்விடத்திற்குப் போனேன்.
அப்போஸ்தலா் 22:4, 5.

# 16  புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்


10

தமஸ்குவிற்கு போகும் வழியில்ஒரு பெரும் வெளிச்சம் அவனைச் சுற்றி பிரகாசித்தது. அவன் கீழே விழுந்தான்.



11

(வசனம்: அப்போஸ்தலர் 22:7, 8)
சவுலே, சவுலே ஏன் என்னை துன்பப்படுத்துகிறாய் என்ற சத்ததைக் கேட்டான்.



12

அப்பொழுது நான்: ஆண்டவரே, நீர் யார் என்றேன்.



13

நீ துன்பப்படுத்துகிற நசரேனாகிய இயேசு நானே.
அப்போஸ்தலர் 22:7, 8.



14

(வசனம்: அப் 22:10)
பெருமை கொண்ட பரிசேயன் தாழ்மையுடன் கர்த்தரிடம் கேட்டான் நான் என்ன செய்ய வேண்டும்.
நீ எழுந்து தமஸ்குவுக்குப் போ என்றார்.



15

நீ செய்யும்படிக்கு நியமிக்கப்பட்டதெல்லாம் அங்கே உனக்குச் சொல்லப்படும்.
அப்போஸ்தலர் 22:10.


16

பிரகாசமான வெளிச்சத்தால் அவன் பார்வை இழந்தவனாய் கையைப் பிடித்து தமஸ்குவுக்கு வழி நடத்தப்பட்டான்.

# 16 புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்


17

சவுல் தேவனுடைய பிள்ளைகளுக்கு செய்த கொடுமைகளை நினைத்துப் பார்க்க மூன்று நாள் சமயம் கிடைத்தது. தேவனுடைய பிள்ளைகளுக்கு விரோதமாய் எழுந்ததாலே, சவுல் தேவனையே குற்றம் சாட்டுகிறவனாய் இருந்தான். சவுலின் மனதில் எவ்வளவு பெரிய வேதனையை உண்டாக்கியிருக்க வேண்டும். தேவனோடு ஒப்பரவு கொள்வதற்கு சவுலுக்கு சமயம் கிடைத்தது.


18

அவன் மூன்று நாள் இருளில் அமர்ந்திருந்தான். அதன் பின்பு தேவன் அனனியா என்னும் தீர்க்கதரிசியை அவனிடம் அனுப்பினார்.



19

(அப்போஸ்தலர் 22:13-15)
சகோதரனாகிய சவுலே, பார்வையாடைவாயாக...
அந்நேரமே நான் பார்வையடைந்து அவனை ஏறிட்டுப் பார்த்தேன்.




20

அப்பொழுது அவன்: நம்முடைய முன்னோர்களின் தேவனுடைய திருவுளத்தை நீ அறியவும்.



21

நீதிபரரைத் தரிசிக்கவும், அவருடைய திருவாய் மொழியைக் கேட்கவும்.



22

நீ கண்டவைகளையும் கேட்டவைகளையும் குறித்துச் சகல மனுஷருக்கும் முன்பாக அவருக்குச் சாட்சியாயிருப்பாய்.
அப்போஸ்தலர் 22:13-15.
பின்பு பவுல் தன் வாழ்க்கையை முன்னோக்கித் தொடருவதற்காக, அவனது பழைய வாழ்வின் வாசல் அடைக்கப்பட்டது.



23

(வசனம்: அப்போஸ்தலர் 22:16)
இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன? நீ எழுந்து கர்த்தருடைய நாமத்தைத் தொழுது கொண்டு,



24


ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போகக் கழுவப்படு என்றான். அப்போஸ்தலர் 22:16.


25

இப்படியாக சவுல் கர்த்தருடனே சேர்ந்தான்
ஞானஸ்நானமே புதிய வாழ்வின் வழி.
தேவன் தன்னை மன்னித்து, மாபெரும் கிருபையை கட்டளையிட வேண்டும்.


26

அவன் ஞானஸ்நானம் பெற்றபோது கர்த்தர் தன் பாவத்தை மன்னித்தார் என்று உணர்ந்தான்.


27

உன்னுடைய பாவங்கள் மன்னிக்கப்பட்டு கழுவப்பட முடியுமா?




28

(வீடியோ பிரிவு 8)
நமக்கும் அப்படிப்பட்ட அனுபவம் தேவை என்பதை தேவன் அறிவார். ஆகவே தேவன் ஞானஸ்நான ஒழுங்கை வைத்துள்ளார்.
பாவத்திற்கு மரித்து நீதிக்கு பிழைப்பதற்கு ஞானஸ்நானத்தைவிட அழகான அடையாளம் வேறு எதுவாக இருக்க முடியும்?


29


கிறிஸ்தவ ஞானஸ்தானம் யோவான் ஸ்நானகனோடு ஆரம்பித்தது. ஜனங்கள் யாவரும் யோர்தான் நதியண்டையில் நடத்தப்பட்டனர்.

16 □ புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்



30

(வசனம்: மத்தேயு 3:5, 6)
அப்பொழுது எருசலேம் நகரத்தாரும், யூதேயா தேசத்தார் அனைவரும், யோர்தானுக்கு அடுத்த சுற்றுப்புறத்தார் யாவரும் அவனிடத்திற்குப் போய்.



31

தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு, யோர்தான் நதியில் அவனால் ஞானஸ்நானம் பெற்றார்கள்.
மத்தேயு 3:5, 6.


32

இயேசு தச்சுப் பட்டறையின் கதவை தாழிட்டு, தன் தாயாரிடமிருந்து விடை பெற்று யோர்தான் நோக்கி நடந்தார். யோவானின் கண்கள் இயேசுவின மேல் பட்டபோது அவன் தனது பிரசங்கத்தை நிறுத்தினான்.



33

(வசனம்: யோவான் 1:29)
இதோ உலகத்தின் பாவத்தை சுமந்து தீர்க்கிற தேவாட்டுக்குட்டி. யோவான் 1:29.


34

கிறிஸ்துவை தன் சொந்த இரட்சகராக ஏற்றுக் கொள்ளும் எல்லாருக்காகவும், பலியாக போகிற தேவாட்டுக்குட்டி என்பதை யோவான் கண்டு கொண்டான். தனக்கு ஞானஸ்நானம் கொடுக்கும்படி இயேசு அவனிடம் கேட்டபோது அவன் தயங்கினான்.



35

(வசனம்: மத்தேயு 3:14)
நான் உம்மாலே ஞானஸ்நானம் பெற வேண்டியதாயிருக்க... மத்தேயு 3:14.




36

(வசனம்: மத்தேயு 3:15)
இயேசு பிரதியுத்தரமாக, ... இப்பொழுது இடங்கொடு இப்படி எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாயிருக்கிறதுத என்றார்... வசனம் 15 இயேசுவுக்கு கடந்த காலத்தில் அறிக்கையிடும்படியான பாவ வாழ்க்கை இல்லை என்பதை அறிந்திருந்தான். இயேசுவும் அவரது உயிர்த்தெழுதலைக் குறித்த நம்பிக்கையை வாழ்ந்து காட்ட அவசியமில்லை.



37

மனிதனோடு தன்னை இணைத்துக் கொள்வதற்காக இயேசு ஞானஸ்நானம் எடுப்பதற்கு கேட்டுக் கொள்ளப்பட்டார். நீங்கள் கடைப்பிடிப்பதற்காகவே ஒரு முழுமையான எடுத்துக்காட்டை வைத்துப் போனார். எனவே யோவான் இயேசுவுக்கு யோர்தானில் திருமுழுக்குக் கொடுத்தார். இதுதான் ஞானஸ்நானத்தின் பொருள்.




38

(வசனம்: மத்தேயு 3:16, 17)
இயேசு ஞானஸ்நானம் பெற்று ஜலத்திலிருந்து கரையேறினவுடனே இதோ வானம் அவருக்கு திறக்கப்பட்டது.



39

தேவ ஆவி புறாவைப்போல் இறங்கி, தம்மேல் வருகிறதைக் கண்டார்.



40

அன்றியும் வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேசக்குமாரன் இவரில் பிரியமாயிருக்கிறேன் என்று உரைத்தது. மத்தேயு 3:16, 17.
புறாவின் இறக்கையில் தேவன் அவரது அன்பையும் தைரியமூட்டும் வார்த்தைகளையும் இயேசுவுக்கு அனுப்பினார். ஆனால் அதைவிட வேறொரு காரியத்தையும் செய்தார்.


41

இயேசு ஜலத்திலிருந்து கரையேறின உடனே நனைந்த வஸ்திரத்துடன் யோர்தான் நதிக்கரையில் நின்று கொண்டிருந்தார். தேவன் அவரை வெளிப்படையாக தன்னுடைய அபிஷேகம் பண்ணப்பட்ட குமாரன் என்று அறிவித்தார். கிறிஸ்துவின் ஞானஸ்நானம் அவரது ஊழியத்தின் ஆரம்பமாக அமைந்தது.



42

(வசனம் அப் 10:38)
.... நசரேனாகிய இயேசுவை பரிசுத்தாவியினாலும் வல்லமையினாலும் அபிஷேகம் பண்ணினார்.

16  புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்

# 16 □ புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்



43

தேவன் அவருடனே கூடயிருந்தபடியினால் அவர் நன்மை செய்கறவராயும் பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குகிறவராயும் சுற்றித் திரிந்தார். அப் 10:38.

இயேசு எவருக்கும் ஞானஸ்நானம் கொடுக்கவில்லை. ஆனால் அவரது சீஷர்கள் கொடுத்தார்கள் என்பதற்கு வேத குறிப்புகள் உண்.



44

(வசனம் யோவான் 4:1, 2).
யோவானைப் பார்க்கிலும் இயேசு அநேகம் பேரைச் சீஷராக்கி ஞானஸ்நானம் கொடுக்கிறார் என்று பரிசேயர் கேள்விப்பட்டார்கள்.



45

அப்படி கேள்விப்பட்டாலும், உண்மை என்னவெனில் இயேசு ஞானஸ்நானம் கொடுக்கவில்லை அவருடைய சீஷர்கள் கொடுத்தார்கள். யோவான் 4:1, 2.

இயேசு பரலோகம் ஏறிச் செல்லுவதற்கு சற்று முன்பு கொடுத்த கடைசிக் கட்டளையை கவனியுங்கள்.



46

(வசனம் மத்தேயு 28:19, 20)
ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி, பிதா குமாரன் பரிசுத்தாவியின் நாமத்திலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து.



47

நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்கள். இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன். மத்தேயு 28:19, 20.


48

இயேசு பரமேறிச் சென்றபின் அவரது சீஷர்கள் எப்படிப்பட்ட ஞானஸ்நானம் கொடுத்திருப்பார்கள் என்று ஆச்சரியத்தோடு அறிய விரும்பலாம். அவர்கள் அவருடைய சீஷர்களாயிருந்தபடியால் இயேசுவின் முன் மாதிரியை பின்பற்றினார்கள்.

# 16 □ புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்





49

(வசனம் எபேசியர் 4:5).
இயேசுவின் பக்தி வைராக்கியமான அப்போஸ்தலனாகிய பவுல், ஒரே கர்த்தரும், ஒரே விசுவாசமும், ஒரே ஞானஸ்நானமும் என்று சொல்லுகிறார். எபிசேயர் 4:5.



50


சிலுவைக்கு பிறகு விளக்கமாக ஞானஸ்நானத்தை குறித்து சொல்லப்பட்ட ஒரே புஸ்தகம் அப்போஸ்தலர் நடபடிகள். இதிலே சுவிசேஷகனாகிய பிலிப்பு நடத்தின ஞானஸ்நான குறிப்பு அடங்கி யுள்ளது.


51

பிலிப்பு என்பவன் காசா மார்க்கமாக செல்லும் சாலையில் சென்று கொண்டிருந்த போது எத்தியோப்பியருடைய ராஜ ஸ்திரீயாகிய கந்தாகே என்பவளுக்கு மந்திரி யும் அவளுடைய பொக்கிஷங்களுக்கெல்லாம் தலைவனுமாயிருந்த ஒருவன் எருசலேமுக்கு பணிந்து கொள்ள வந்தான்.


52

ஊருக்கு அவன் திரும்பிப் போகும் போது தன் இரதத்திலே உட்கார்ந்து, ஏசாயா தீர்க்க தரிசன ஆகமத்தை வாசித்துக் கொண்டிருந்தான். அப்பொழுது பிலிப்பு ஓடிப்போய் சேர்ந்து ....




53

(வசனம் அப் 8:30, 31).
அதற்கு அந்த பொக்கிஷக்காரன் மறுமொழியாக.



54

ஒருவன் எனக்கு சொல்லாவிட்டால் அது எனக்கு எப்படி தெரி யும்?


55

பிலிப்பு இரதத்தில் ஏறி தன்னோடு உட்காரும் படி வேண்டிக்கொண்டான். அந்த மனிதன் ஏசாயா 53-ம் அதிகாரத்தை வசிக்கிறதாக பிலிப்பு கண்டான். அதை விளக்கிக் காண்பிக்கும்படி பிலிப்பை வேண்டிக்கொண்டான். அந்த அதிகாரம்.



56

(வசனம் அப்போஸ்தலர் 8:35) பின்பு வேதத்தின் அந்த பகுதியை சுட்டிக் காண்பித்து இயேசுவைப் பற்றிய நற்செய்தியை அவனுக்குச் சொன்னான். அப் 8:35.


57

என்ன ஒரு வேதபாடம், அந்த இரதத்தில் போய் கொண்டிருக்கும் அவன் இயேசுவை குறித்து மட்டுமல்ல ஞானஸ்நானத்தின் முக்கியத்துவத்தைக் குறித்தும் அவனுக்கு பிரசங்கித்தான். வேதம் சொல்கிறது. அவர்கள் தண்ணீருள்ள ஓர் இடத்திற்கு வந்தபோது எத்தோப்பியன் பிலிப்புவிடம்.



58

(வசனம் அப் 8:36, 37)
...... தண்ணீர் இருக்கிறதே ஞானஸ்நானம் எடுப்பதற்கு தடை என்ன? அப் 8:36.



59

பிலப்பு அவனை நோக்கி, நீர் முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடையில்லை என்றான்.



60

அந்த எத்தியோப்பியன், இயேசு கிறிஸ்துவை தேவனுடைய குமாரனென்று விசுவாசிக்கிறேன் என்று சொன்னான். வசனம் 37.



61

(வசனம் அப் 8:38)
இரதத்தை நிறுத்த சொன்னான். அப்பொழுது பிலிப்பும் மந்திரியும் ஆகிய இருவரும் தண்ணீரில் இறங்கினார்கள். பிலிப்பு அவனுக்கு ஞானஸ்நானம் கொடுத்தான்.
அப் 8:38.
யோர்தான் நதியில் யோவான் இயேசுவை மூழ்க்கினது போல பிலிப்பு எத்தியோப்பிய மந்திரியை தண்ணீரில் மூழ்க்கினார்.



62

(வசனம் அப் 8:39)
அவர்கள் தண்ணீரிலிருந்து கரையேறினவுடனே கர்த்தருடைய ஆவியானவர் பிலிப்புவை கொண்டு போய்விட்டார்.

# 16  புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்



63

அவன் சந்தோஷத்தோடே தன் வழியே திரும்பிப் போனான். அப் 8:39.


64

நாமும் நமது கடந்தகால பாவத்தை புதைத்து கிறிஸ்துவுக்குள் புதிய வாழ்க்கை ஆரம்பிக்கும் போது இவ்விதமாக சந்தோசமாயிருப்போம். இதன் மூலம் ஆதித் திருச்சபையில் முழுக்க ஞானஸ்தானம் தான் முறையான ஞானஸ்தானமாக பின்பற்றப்பட்டு வந்தது.




65

புதிய ஏற்பாட்டில் முழுக்குதலை தவிர வேறு எந்த முறையும் சொல்லப்படவில்லை. அதைக்குறித்து விளக்க ஒரு ஞானஸ்நானத் தொட்டி முதலாம் நூற்றாண்டு சபையான பிலிப்பிப் பட்டண சபையில் உள்ளது. சபை சரித்திரக்காரர்களும், புதைப்பொருள் ஆராய்ச்சியாளர்களும்


66


சேர்ந்து 12 மற்றும் 13ம் நூற்றாண்டு வரை முழுக்குதல் ஞானஸ்நானம் தான் பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது.


67

கார்டினல் ஜேம்ஸ் கிப்பன் எழுதும் போது, கிறிஸ்தவ மார்க்க ஸ்தாபகத்திற்கு பின்னர் பல நூற்றாண்டுகளாக முழுக்குதல்தான் பழக்கத்தில் இருந்து வந்திருக்கிறது.


68

ஆனால் 12ம் நூற்றாண்டிலிருந்து தலையில் தண்ணீரை ஊற்றி ஞானஸ்நானம் கொடுக்கும் முறை சபைக்குள்ளே வந்தது.


69

முழுக்குதலைவிட இது எளிய முறையாக, சிரமமில்லாத முறையாகயிருப்பதால் இந்த முறை சபைக்குள் எளிதாக நுழைந்தது.



70

.... சபை தன் அதிகாரத்தை பயன்படுத்தி சூழ்நிலை, இடம், நேரத்திற்கு தகுந்தவாறு எளிய முறையை பின்பற்றி வந்தது.
நமது மூதாதையர்களின் நம்பிக்கை, 94-வது பதிப்பு பக்கம் 277.



71

துருக்கியில் உள்ள இடிந்துபோன எபேசு பட்டணத்திலுள்ள பரிசுத்த யோவான் ஆலயத்தை அநேக உல்லாச பிரயாணிகள் பார்க்க செல்கிறார்கள். சீஷனாகிய யோவானின் ஞாபகார்த்தமாக இந்த ஆலயம் கட்டப்பட்டது. இதில் முக்கியமாக பார்க்க வேண்டியது ஞானஸ்நானத் தொட்டி. இது வட்ட வடிவில் 12 அடி குறுக்களவில் 4 அடி ஆழத்தில் உள்ளே இறங்குவதற்கு இரண்டு பக்கங்களிலும் படிக்கட்டுகள் கொண்டதாயும் இருக்கிறது.



72


இத்தாலியிலுள்ள பைசா பேராலயத்திற்கு முன்பாக இருக்கின்ற பொதுவாக பைசா நகரத்து சாய்வு கோபுரம் என்று அழைக்கப்படுகிற மணி கோபுரத்தை குறித்து அநேகர் கேள்விப்பட்டிருக்கலாம்.


73

இந்த பேராலயத்தையும் சாய்வு கோபுரத்தையும் ஒட்டி ஒரு ஞானஸ்நானத் தொட்டி உள்ளது. இதை ஒரு வட்ட கட்டிடம் மறைத்துள்ளது.


74

14ம் நூற்றாண்டில் கட்டப்பட்ட தொட்டி இது. இதன் குறுக்களவு 20 அடி ஆழம் 4 அடி உடையதாக உள்ளது.
கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப் பின்னர் 1300 ஆண்டுகளுக்கு பிற்பாடும் முழுக்குதல் ஞானஸ்நானம் பழக்கத்தில் இருந்தது.



75

அப்படிப்பட்ட ஞானஸ்நான தொட்டிகளை கொண்ட பேராலயங்கள் பணிரெண்டுக்கும் மேலாக ஐரோப்பாவிலுள்ளது. இத்தாலியில் மட்டும் 66 தொட்டிகள் உள்ளன. இவைகளெல்லாம் 4ம் நூற்றாண்டிற்றும் 14ம் நூற்றாண்டிற்கும் இடைப்பட்ட காலத்தில் கட்டப்பட்டது.

# 16  புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்



76

ஞானஸ்நானம் பெறுவது என்பது முக்கியமா?



77

உண்மையாகவே ஞானஸ்நானம் தேவையா?




78

(வசனம் யோவான் 3:5)
ஒருவன் ஜலத்தினாலும், ஆவியினாலும் பிறவாவிட்டால்



79

அவன் தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்க மாட்டான் என்று மெய்யாகவே சொல்கிறேன். யோவான் 3:5.


80

ஜலத்தினால் பிறப்பதை, இயேசு ஞானஸ்நானத்தை குறிப்பதற்காக சுட்டி காண்பிக்கிறார். அதை பற்றி பின்னால் பார்ப்போம். இது பரலோக இராஜ்யத்தில் பிரவேசிப்பதற்கு மிகவும் அவசியம்.


81

இந்த புனிதமான வாக்கியத்தை இயேசு ஒரு தடவை மாத்திரம் குறிப்பிடவில்லை. அதே காரியத்தை மாற்கு 16:16ல் சொல்லியிருக்கிறார்.



82

(வசனம் மாற்கு 16:16)
விசுவாசமுள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்.
மாற்கு 16:16.
ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்படுத்துவதில் முதல்படி இயேசு, உன்னுடைய பாவங்களுக்காக மரித்தார் அவரே உன் இரட்சகர், கர்த்தர் என்று விசுவாசிப்பது.


83

இதைத் தான் பிலிப்பு அந்த எத்தோப்பியனிடத்தில் இயேசுவை விசுவாசிக்கும்படி வலியுறுத்தினான். அந்த எத்தியோப்பியன் ஞானஸ்நானம் பெறுவதற்கு தடை என்ன என்று கேட்ட போது, பிலிப்பு



84

(வசனம் அப் 8:37)
நீ முழு இருதயத்தோடும் விசுவாசித்தால் தடை ஒன்றுமில்லை என்றான்.
அப் 8:37.



85

(வசனம் மத் 28:19)
சீஷர்களுக்கு இயேசு கொடுத்த 2வது படி நீங்கள் போய் உபதேசம் பண்ணுங்கள்.
மத் 28:19.
ஞானஸ்நானத்திற்கு முன்பு ஒரு நபர் போதிக்கப்பட வேண்டும் - போதனை.



86

(வசனம் மத் 28:20)
ஞானஸ்நானம் பெறுகிறவர் போதிக்கப்பட்டு கற்பித்த யாவற்றிற்கும் கீழ்படிய வேண்டும். மத் 28:20.


87

வேறு விதத்தில் சொல்ல வேண்டுமானால் இந்த புனிதமான ஞானஸ்நான சடங்கிற்கு ஆயத்தமாகிறவன் இயேசுவின் உபதேசங்களை புரிந்து அவைகளை ஏற்றுக்கொள்ள வேண்டும். அறிந்து கொள்வதை விட அதை மனதார ஏற்றுக்கொள்ள வேண்டும்.



88

(வசனம் மத் 28:19)
நீங்கள் புறப்பட்டு போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் ஞானஸ்நானம் கொடுங்கள் (மத் 28:19)
கிறிஸ்துவுக்கு ஒருவன் தன் வாழ்க்கையை ஒப்புக்கொடுக்க வேண்டும். ஒருவன் இயேசுவோடு தன்னை இணைத்துக் கொள்ளும் போது இயேசுவின் வழியில் நடக்க வேண்டும். இயேசு ஒத்துக்கொள்ளாத எந்த ஒரு காரியத்தையும் செய்ய மாட்டான்.


89

மூன்றாவது படி - மனந்திரும்புதல்



90

(வசனம் அப் 3:19)
உங்கள் பாவங்களை நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பி குணப்படுங்கள்.
அப் 3:19 மனந்திரும்புதல் என்பது பாவத்திற்காக வருத்தப்பட்டு அந்த பாவத்திலிருந்து திரும்புதல்.



91

கல்வாரிக்கு நேராகத் திரும்பிய இருதயத்திலிருந்து மாத்திரம் இந்த மெய்யான மனந்திரும்புதல் வரமுடியும். மீட்பதற்காக கல்வாரி சிலுவையில் நமது பாவத்திற்காக பலியான கிறிஸ்துவின் பலியினால் தொடப்பட்ட இருதயத்திலிருந்துதான் இந்த காரியத்தை எதரிபார்க்க முடியும்.




92

ஞானஸ்நானத்திற்கு ஆயத்தப்படுத்துவதற்கான படிகளை சுருக்கிப் பார்ப்போம்.




93

1. ஞானஸ்நானத்திற்கு முன்பு ஒருவன் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள வேண்டும்.



94

2. ஞானஸ்நானத்திற்கு முன்பு, அந்த மனிதன் இயேசுவின் உபதேசங்களை அறிந்து அவைகளின்படி நடக்க வேண்டும்.



95

3. அவன் தன் பாவங்களை அறிக்கை செய்து மனந்திரும்ப வேண்டும்.

# 16 □ புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்




96

சில வேளைகளில் நீங்கள் நல்லதொரு வாழ்க்கையை விரும்பியிருக்கலாம். ஆனால் அந்த வாழ்க்கையை எப்படி ஆரம்பிப்பது என்று தெரியாமல் இருக்கலாம். ஞானஸ்நானத்திற்னு ஆயத்தப்பட இந்த 3 படிகளை கடைபிடிக்கும் போது உண்மையிலேயே நீ புதுமனிதனாய் மாறுவாய், மறுப்பிறப்படைவாய், மனந்திரும்பினவனாவாய்.



97

நான் ஞானஸ்நானம் பெறும் போது நான் சபையின் ஒரு அங்கமாக வரவேண்டுமா? அல்லது கிறிஸ்துவுக்குள்ளாக மட்டும் ஞானஸ்நானம் பெறுகிறேனா? கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் சரித்திரத்திற்குள்ளான ஞானஸ்நானம். இயேசுவின் சரீரம் என்பது இயேசுவின் சபை என்று வேதம் சொல்லுகிறது.





98

(வசனம் அப் 2:41, 42)
அவனுடைய வார்த்தைகளை சந்தோஷமாய் ஏற்றுக்கொண்டவர்கள் ஞானஸ்நானம் பெற்றார்கள். அன்றைய தினம் ஏறக்குறைய மூவாயிரம் பேர் சேர்த்துக் கொள்ளப்பட்டார்கள்.




99

அவர்கள் அப்போஸ்தலருடைய உபதேசத்திலும் அந்நியோநியத்திலும்




100

அப்பம் பிட்க்குதலிலும் ஜெபம் பண்ணுதலிலும் உறுதியாய் தரித்திருந்தார்கள். (அப் 2:41, 42) நாம் ஞானஸ்நானம் பெறும் போது நாம் ஆவிக்குரிய அனாதைகளாக நாம் இருப்பதில்லை. நாம் தனிமையில் விடப்படுவதில்லை. அப்போஸ்தலர் நடபடிகளில் ஞானஸ்நானம் பெற்றவர்கள் உபதேசத்திலும் அந்நியோநியத்திலும் தரித்திருந்து வேதத்தை நம்புகிற சபையில் அங்கமானார்கள்.



101

(வசனம் 1 கொரிந்தியர் 12:13).
அந்த ஒரே ஆவியினாலே அந்த ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்று, என்று 1 கொரி 12:13 ம் வசனம் சொல்லுகிறது.
28வது வசனம் சரீரம் சபை என்று தெளிவாக சொல்லுகிறது. ஆணும் பெண்ணும் இயேசுவை ஏற்றுக்கொண்டு அவருக்கு ஒப்புக்கொடுத்து அவரை பின்பற்ற வாஞ்சிக்கும் போது அப்படிப்பட்ட விசுவாசிகளோடு இருந்து ஆராதிக்க விரும்புவார்கள். அவர்கள் இருதயம் தேவனுடைய கற்பனைகளை கைக்கொள்கிற சபையில் அங்கமாகயிருக்க கொழுந்துவிட்டு எரியும்.



102

(வசனம் மத். 28:19, 20)
எனவே தான், மத். 28:19, 20ல் இயேசு சொன்னார். நீங்கள் புறப்பட்டுப் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமத்தில் அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து.



103

நான் கட்டளையிட்ட யாவற்றையும் அவர்கள் கைக்கொள்ளும்படி உபதேசம் பண்ணுங்கள் ....


104

இந்த இரவிலே இயேசு உன் ஜீவனை அவருக்கென்று கேட்கிறார். வேதத்தை விசுவாசித்து அவரது கற்பனைகளை கைக்கொள்கிற சபையோடு அங்கம் வகிக்க அழைக்கிறார். அப்போஸ்தலனாகிய பவுலுக்கு கொடுத்த அதே அழைப்பை உனக்கு கொடுக்கிறார்.



105

(வசனம் அப். 22:16)
இப்பொழுது, நீ தாமதிக்கிறதென்ன. நீ எழுந்து ஞானஸ்நானம் பெற்று உன் பாவங்கள் போக கழுவப்படு. அப் 22:16.


106

ஒரு நாள் இரவில் யூதமதத் தலைவனாகிய நிக்கதேமு இயேசுவிடம் வந்தான். அவன் இயேசுவிடம் வாஞ்சையுள்ளவனாகயிருக்கிறான் என்பதை அவனுடைய நண்பர்கள் அறிய விரும்பவில்லை.

# 16 □ புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்



107

(வசனம் யோவான் 3:2)
அவன் அவரை போதகரே என்று சொன்னதின் மூலமாக இயேசுவை முகஸ்துதி பண்ணினான். நீர் தேவனிடத்திலிருந்து வந்தவர் என்பதை அறிவேன்.



108

ஏனெனில் ஒருவனும் தன்னோடு தேவன் இராவிட்டால் நீர் செய்கிற இப்படிப்பட்ட அற்புதங்களை செய்யமாட்டான். யோவான் 3:2.
இயேசு அவனுடைய இருதயத்தை அறிந்தபடியினால் உடனே அவனுக்கு என்ன தேவை என்பதை காண்பித்தார்.



109

(வசனம்: யோவான் 3:3)
இயெசு அவனுக்கு பிரதி யுத்திரமாக.



110

ஒருவன் மறுபடி யும் பிறவாவிட்டால் அவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே சொல்லுகிறேன்.
யோவான் 3:3.



111

(வசனம் யோவான் 3:4)
நிக்கதேமு குழப்பமடைந்தவனாய் ஒரு மனிதன் முதிர்வயதாயிருக்கையில் எப்படி மறுபடி யும் பிறக்கக்கூடும்?



112

அவன் தாயின் வயிற்றில் இரண்டாம் தரம் பிரவேசித்து பிறக்கக்கூடுமா? யோவான் 3:4.



113

(வசனம்: யோவான் 3:5)
ஆவிக்குரிய பிறப்பை குறித்து அவர் சொன்னதாக சுட்டி காண்பித்தார். ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால்.

# 16 ▯ புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்



114

அவன் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான். (யோவான் 3:5)
ஞானஸ்நானத்தினால் சாட்சிக் கொடுக்கப்படுகிற ஆவிக்குரிய மறுபிறப்பைக் குறித்து இயேசு சொன்னார். ஞானஸ்நானத்தில் தண்ணீரினால் மனிதன் கழுவப்படுகிறான் என்பதை குறிக்க அப்படி சொன்னார்.


115

சந்தேகமில்லாமல் அந்த பெருமை வாய்ந்த நிக்கதேமு இருக்கிறவண்ணமாகவே, ஒரு நல்ல யூதனாகவே இயற்கை பிறப்பின் மூலமாக ராஜ்யத்தில் பிரவேசிக்க விரும்பினான்.


116


பரிசுத்தாவியின் வல்லமையால் - ஞானஸ்நானத்தினால் முற்றிலும் மறுரூபமாக்கப்படாத வாழ்க்கை ஒரு குறைவுள்ள வாழ்க்கை என்பதை இயேசு தெளிவுப்படுத்தினார்.


117

இவ்விதமாக தேவனால் கொடுக்கப்பட்ட பலியாகிய இயேசுவை ஏற்றுக்கொள்வதின் மூலம் தன்னை முத்தரிக்கிறான்.


118

கிறிஸ்துவுக்குள்ளான புதிய வாழ்க்கையின் ஆரம்பம்.



119

(வசனம்: மத்தேயு 3:17)
இயேசு கிறிஸ்துவின் ஞானஸ்நானத்தின்போது தேவனுடைய சத்தம் கேட்கப்பட்டது. இவர் என் நேசக்குமாரன் இவரில் நான் பிரியமாயிருக்கிறேன். மத்தேயு 3:17.




120

ஞானஸ்தான வேளையில் பரிசுத்த ஆவியானவர் புறாவைப்போல இயேசுவின் மேல் அமர்ந்தபடியினால் அவர் அபிஷேகம் பண்ணப்பட்டவர் என்றும் மேசியா என்றும் கிறிஸ்து என்று அழைக்கப்பட்டார்.

# 16  புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்


121

இந்நிகழ்ச்சி இயேசு கிறிஸ்துவின் பொது ஊழியத்தின் தொடக்க நிகழ்ச்சியாக இருந்தது. இதேபோல ஞானஸ்நானம் என்பதும் விசுவாசிகளுக்கும்கூட ஆவிக்குரிய தொடக்கமாக இருக்கும். இந்நிகழ்ச்சி கிறிஸ்துவை வெளியரங்கமாக அறிக்கை செய்து தன் வாழ்வை கிறிஸ்துவோடு இணைத்துக் கொண்டு வாழ்கின்ற நிகழ்ச்சியாகவும் இருக்கும்.




122

(வசனம்: கலாத்தியர் 3:27)
கலாத்தியர் 3:27, உங்களில் கிறிஸ்துவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றவர்கள் எத்தனை பேரோ, அத்தனை பேரும் கிறிஸ்துவை தரித்துக்கொண்டீர்களே.




123

(வீடியோ பிரிவு 10)
இயேசுவை ஏற்றுக்கொண்டவர்களுக்கு ஞானஸ்நானம் என்பது கிறிஸ்துவின் பாடுகளில் உள்ள மூன்று விசுவாசப்படிகளை தெரிவிக்கின்றது.




124

(வசனம்: ரோமர் 6:3, 4)
பவுல் கூறுகிறார், கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நாமனைவரும் அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறீர்களா?
ரோமர் 6:3.



125

இதன் பின்னர், இச்சடங்கில் கிறிஸ்தவனுக்கு நிகழும் இரண்டாவது நிலையைக் குறித்து பேசுகின்றார். அவருடைய மரணத்திற்குள்ளாக்கும் ஞானஸ்நானத்தினாலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ஆனால் மூன்றாவது நிலையும் இச்சடங்கில் உண்டு.



126

(வசனம்: ரோமர் 6:4)
பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டதுபோல.

# 16 □ புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்




127

நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு. வசனம் 4.
இதுதான் செய்தி. கிறிஸ்துவுக்குள்ளாய் ஞானஸ்நானம் பெற்றவன். ஆவியினாலும் ஜலத்தினாலும் புதிதாய் பிறந்திருக்கிறான்.


128

நாம் கிறிஸ்துவின் மரணத்தையும், அடக்கத்தையும், உயிர்த்தெழுதலையும் வெளியரங்கமாய் விசுவாச அறிக்கை செய்கின்றோம்.



129

(வசனம்: ரோமர் 6:11)
பவுல் பிறகு கூறுகிறார்.
அப்படியே நீங்களும், உங்களை பாவத்திற்கு மரித்தவர்களாகவும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்குள் தேவனுக்கென்று பிழைத்திருக்கிறவர்களாயும் எண்ணிக்கொள்ளுங்கள்.
கிறிஸ்தவ வாழ்க்கைக்கு ஏன் இது ஒரு அழகான பங்கு என காணமுடிகிறதா?


130

நியமிக்கப்பட்ட தம்பதிகளுக்கு இது ஒரு திருமண சடங்கைப் போன்றது. இது நாங்கள் வாழும் மட்டும் கிறிஸ்துவோடு விசுவாசத்தில் இணைக்கப்பட்டிருக்கிறோம் என்ற வெளியரங்க அறிக்கை.



131

(வசனம்: எபிசேயர் 4:5)
வேதம் என்ன சொல்லுகிறதென்றால், ஒரே கர்த்தர், ஒரே விசுவாசம். எபேசியர் 4:5. ஒரே ஞானஸ்நானம்.
ஆயினும் சபைகளில் பலமுறையில் ஞானஸ்நானம் அனுசரிக்கப்படுவதை காண்கிறோம்.


132

சிலர் தெளிக்கிறார்கள். சிலர் ஊற்றுகின்றார்கள். சிலர் முழுக்குகின்றார்கள். எப்படி ஒரே ஞானஸ்நான முறையில் இத்தனை குழப்பம். எது சரியான முறை?



133

நாம் கேட்க வேண்டிய ஒரே கேள்வி. இயேசு என்ன செய்தார்?


134

யோவான் யோர்தான் நதியில் ஞானஸ்நாம் கொடுத்துக்கொண்டு வந்ததாக வேதம் கூறுகின்றது. ஞானஸ்நானம்பெற இயேசு வந்தபோது தண்ணீரிலிருந்து வெளியே வந்தார். அவர் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றார்.



135

கிரேக்க வார்த்தையில் முழுப்பொருள் என்னவெனில், தண்ணீருக்குல் முழுகுதல் தண்ணீரால் மூடுதல். இந்த ஒரு முறையில் தான் கிறிஸ்துவின் மரணத்தையும், அடக்கம் பண்ணப்படுதலையும், உயிர்த்தெழுதலையும் நிறைவேற்ற முடியும்.


136

ஒருமுறை பவுல் அப்போஸ்தலனும் அவருடைய சக ஊழியர் சீலாவும் பிலிப்பி பட்டணத்திற்கு மாசிடோனியா மனிதனின் அழைப்பின்பேரில் வந்திருந்தலை தரிசனமாக கண்டான்.


137

அவர்களுடைய ஆவிக்குரிய செய்தியினாலே பிலிப்பி மக்களை பிரமிப்புக்குள்ளாக்கினார்.


138

ஆதலால், அந்த பிலிப்பி மக்கள் கூட்டமாக பவுலையும், சீலாவையும் தாக்கினார்கள். நகரத்து அதிகாரிகள் அவர்களை அடித்து ஆடைகளையும் கிழித்துப்போட்டார்கள்.


139

பவுலும், சிலாவும் சிறைச்சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டனர். இவர்கள் சிறைச்சாலையிலிருந்து தப்பாமல் வேண்டிய பாதுகாப்பு ஏற்பாடுகள் போடப்பட்டன.


140

நடுராத்திரியிலே பவுலும், சீலாவும் ஜெபம் பண்ணி, தேவனை துதித்து பாடினார்கள். சடுதியிலே சிறைச்சாலையின் அஸ்திவாரங்கள் அசைக்கும்படியாக பூமி மிகவும் அதிர்ந்தது. உடனே கதவுகளெல்லாம் திறவுண்டது.

# 16 □ புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்




141

சிறைச்சாலைக்காரன் கதவுகள் திறந்திருக்கிறதைக்கண்டு, கட்டுண்டவர்க்ள ஓடிப்போனார்கள் என்று எண்ணி, பட்டயத்தை உருடி தன்னைக் கொலை செய்து கொல்லப்போனான். ஏனென்றால் கட்டுண்டவர்கள் தப்பியதால், சிறைசாலைக்காரன் கொல்லப்படுவான்.



142

(வசனம்: அப்போஸ்தலர் 16:28)
பவுல் மிகுந்த சத்தமிட்டு, நீ உனக்கு கெடுதி ஒன்றும் செய்து கொள்ளாதே. நாங்கள் எல்லோரும் இங்கேதான் இருக்கிறோம் என்றான்.
(அப்போஸ்தலர் 16:28)



143

அந்த சிறைச்சாலைக்காரன் நடுங்கினான். பவுலும், சீலாவும் இந்த சிறைச்சாலைக்காரனிடம் மிகவும் அவதிப்பட்டனர். ஆனால், அவரை எதிர்த்து பழிவாங்க வேண்டும் என்ற எண்ணம் ஏற்படவில்லை. பவுலும் சீலாவும் குற்றமில்லாதவர்கள் என்று தெரியும். உடனே விளக்கு கொண்டு வரச்சொல்லி, உள்ளே ஓடி பவுலுக்கும், சீலாவுக்கும் முன்பாக விழுந்து.



144

(வசனம்: அப் 16:30, 31)
அவர்களை வெளியே அழைத்து வந்து ஆண்டவமாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?




145

அதற்கு அவர்கள் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.


146

சிறைச்சாலைக்காரன் அவர்களை தன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய், அவர்களுடைய காயங்களை கழுவினான்.



147

(வசனம்: அப் 26:33)
இராத்திரியில் அந்நேரத்தில்தானே அவன் அவர்களை அழைத்துக்கொண்டு போய் அவர்களுடைய காயங்களைக் கழுவினான்.

# 16 □ புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்




148

அவனும், அவனுடையவர்கள் அனைவரும் உடனே ஞானஸ்நானம் பெற்றார்கள்.
அப்போஸ்தலா் 16:33.



149

நண்பர்களே, ஞானஸ்நானத்தின் உண்மையான தார்ப்பரியத்தை இதற்கு முன்பு தெரியவில்லையென்றால், அவரது இப்படிப்பட்ட முழுக்கு ஞானஸ்நானம் ஆராதனையின்மூலம் இயேசுவை பின்பற்ற வாய்ப்பு கிட்டாமல் இருந்திருந்தால், அனனியா சவுலைக் கேட்ட அதே கேள்வி உங்களிடம் கேட்கப்படுகின்றது.




150

(வசனம்: அப் 22:16)
இப்பொழுது நீ தாமதிக்கிறதென்ன, நீ எழுந்து ஞானஸ்நானம் பெற்று, உன் பாவங்கள் போகக் கழுவப்படு...
அப்போஸ்தலா் 22:16.

# 16 ▯ புதிய துவக்கத்தை ஆரம்பித்தல்



151

இயேசு ஞானஸ்நானம் பெற்றபோது, வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாகி, இவர் என்னுடைய நேச குமாரன். இவரில் பிரியமாயிருக்கிறேன். நீங்களும் கூட இந்த முழுக்கு ஞானஸ்நானத்தில் ஈடுபடும் போது, நம் தேவன் உங்களுடைய உள்ளத்தில், நீ என் நேச குமாரன், நேச குமாரத்தி, நான் பிரியமாயிருக்கிறேன் என்று சொல்லுவார்.

தேவன் உன்னில் பிரியமாயிருப்பது எத்துணை பெரிய காரியம். நீங்கள் இவ்வாரதனையில் பங்குபெறும் போது தேவனுடைய சம்பத்தாக மாறுவீர்கள். நீங்கள் தேவ பிள்ளை. ஞானஸ்நானத்தை ஒரு விதத்தில் திருமணத்திற்கு ஒப்பிடலாம். திருமணத்திற்கு முன்பு மணமகனும், மணமகளும் ஒருவரை ஒருவர் நேசிக்கின்றனர். திருமணத்தில் அந்த அன்பு தொடங்குவதில்லை. திருமணம் அந்த அன்பின் சாட்சி, திருமணம் இது குடும்ப அங்கத்தினர்களுக்கு மத்தியிலும் நண்பர்கள் முன்னிலையிலும் ஏற்படுகின்ற வெளியரங்க அறிக்கை. ஞானஸ்நானம் கூட இப்படித்தான். ஞானஸ்நானம் நம் உள்ளத்தில் அன்பை ஏற்படுத்தி விடுவதில்லை. இது குடும்பத்தினர், நண்பர்கள் மூலம் நாம் கிறிஸ்துவோடு உள்ள அன்பை உறுதிப்படுத்துவதாகும்.

கிறிஸ்துவுக்குள் இப்புதிய வாழ்வை தொடங்குவதற்கு அடையாளமாக தண்ணீரினுள் நம்மை ஞானமுழுக்கின் மூலம் புதைக்க வேண்டும். பழையவை ஒழிந்து போயின. அவை ஒருபோதும் நம்மை பிடித்திருப்பதில்லை. தேவன் நமக்கு பரிசுத்த ஆவியானவர் மூலம் புதிய கிறிஸ்தவ ஜீவியத்தை ஜீவிக்க உதவி செய்கிறார்.

சிலர் ஞானமுழுக்கு பெற தயங்குகிறார்கள். அவர்கள் தயாராக இல்லை என்கின்றனர். ஞானஸ்நானம் என்பது நீங்கள் பூரணப்பட்டவர்க்ள என்று அர்த்தம் அல்ல. நீங்கள் ஒப்புக்கொடுக்கப்பட்டவர்கள் என்று அர்த்தம். இயேசு அவருடைய வழியை பின்பற்றி ஞானமுழுக்கு எடுக்க அழைக்கின்றார். அவர் உங்களுக்கு மன்னிப்பையும், பழைய பாவங்களிலிருந்து விடுதலையையும் கொடுத்து பரிசுத்த ஆவியானவர் உங்களை புதிய ஜீவியத்திற்குள் பிரவேசிக்க செய்வார் என்று கிறிஸ்துவிடம் கூறுகின்றீர்களா? நீங்கள் இயேசுவை பின்பற்றி வேதம் கூறுகின்ற ஞானமுழுக்கை பெற விரும்பினால் இந்த அரங்கத்தின் முன் வரிசைக்கு

வாருங்கள். உங்களுக்காக ஜெபிக்க விரும்புகின்றேன். நீங்கள் என்னோடு எழுந்து ஜெபத்தில் கலந்து கொள்ள அழைக்கிறேன். ஜெபிக்கும் முன் நீங்கள் ஆம் இயேசுவே நான் ஞானமுழுக்கு பெறுகிறேன் என்று கூறினால், முன் வரிசைக்கு ஜெபத்தோடு வரும்படியும் அழைக்கிறேன். நான் ஜெபிக்கிறேன். தயங்க வேண்டாம். இப்பொழுதே வாருங்கள்.

# 17 □ போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?



1

இந்த உலகின் மிகப்பெரும் வஞ்சனை.



2

(வீடியோ 19 வினாடிகள்) பதிவான மிகப்பெரும் வஞ்சனைகளில் ஒன்று 1960ல் நடந்தது. டேவிட் ஸ்டேயின். புத்திசாலியான பிரஞ்சு வாலிபன். 400க்கும் அதிகமாக பழைய எஜமான்களின் படங்களை வரைந்தார். போலியான பிக்காசோசஸ் சாகல்ஸ், ரினோரிஸ், வேன்கோத்ஸ் இதுபோன்ற பலர். இவைகளில் இவன் இவைகளை வரைந்த உண்மையான ஓவியர்களின் கையெழுத்தைப்போட்டு அவைகள் உண்மையானவைகள் போல் அனுப்பி வைத்தான். அவைகள் உன்னதமான படைப்பின் போலிகள். அவைகள் எவ்வளவுதான் உண்மைபோல் பறைசாற்றினாலும் அவைகள் போலிகள்.



3

(வீடியோ 9 வினாடிகள்) இவைகளில் 110 போலிகள் கண்டுபிடிக்கப்பட்டு, மீட்கப்பட்டன. ஸ்டேயின் 1972-ல் சிங் சிங் சிறையிலும் பிரான்சிலுள்ள பாரீஸ் சிறையிலம் அடைக்கப்பட்டார். 1980ல் சிறையிலிருந்து விடுதலை செய்யப்பட்டார். ஸ்டேயின் திருந்திய மனதுடன் தன் சொந்த பெயரிட்டே ஓவியங்கள் வரைய ஆரம்பித்தார்.



4

(வீடியோ 12 வினாடிகள்) இன்று அவர் பிரபலமான ஓவியரம் பேச்சாளாராகவும் உலகில் விளங்குகிறார். எதைப்பற்றி சொற்பொழிவு செய்கிறார்? அவர் நன்கு அறிந்துள்ள போலிகளைக் கண்டு கொள்வது எப்படி என்பதை பற்றித்தான் பேசுகிறார். எல்லா வேளைகளிலும் போலிகளை கண்டு கொள்வது இயலாத ஒன்று என்று ஸ்டேயின் கூறுகிறார். நீங்களும் இதை ஒத்துக் கொள்வீர்கள். இது நிபுணர்களால் கூட கடினமானது.

# 17 போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?




5

(வீடியோ 7 வினாடிகள்) இவைகள் எல்லாவற்றுக்கும் முற்பிதாவானாவன் சாத்தான். சாத்தானானவன் தனக்கு நிகர் இல்லாதவனாக போலிகளை உருவாக்குபவனாக, ஏமாற்றுபவனாக இருக்கிறான். சாத்தான் வெளிப்படையாக செயலாற்றுகிறவன் அல்ல. அவன் மற்ற மனிதர்கள் மூலமாக, வல்லமை பிரதிநிதிகள் மூலமாக செயல்படுகிறான். அவன் அப்படி வெளிப்படையாக செயல்படுபவனாக இருந்தால், ஏமாற்றப்படும் கிறிஸ்தவர்கள் குறைவாகவே இருப்பர். எனவே அவன் ஒரு திரைக்குப்பின், சில சமயங்களில் மதத்தின் மாறுவேடத்தில்செயல் புரிகிறான்.


6

உண்மையான தொழுகையிலிருந்து மக்களை திசை திருப்ப உண்மையோடே பொய்யை கலந்துவிடுகிறான். இதுதான் ஆயிரக்கணக்கான வருடங்களாக மனிதர்களை ஏமாற்றும் விதமாக உள்ளது.


7

தேவன் நம்மை இந்த பெரிய ஏமாற்றுபவனின் கையில் விட்டுவிடவில்லை. ஆனால், வேதத்தின் மூலம், கடைசி நாட்களில் நடக்கும் மாபெரும் வாஞ்சனைகளைக் குறித்து எச்சரித்துள்ளார்.


8

வேதம் சொல்கிறது, தானியேல், சமுத்திரத்திலிருந்து எழும் மிருகங்களைக் குறித்து தரிசனம் காண்கிறார்.



9

(வசனம்: தானியேல் 7:2, 3)
இராத்திரி காலத்தில் எனக்கு உண்டான தரிசனத்திலே நான், கண்டது என்னவென்றால், இதோ, வானத்தின் நாலு காற்றுகளும் பெரிய சமுத்திரத்தின்மேல் அடித்தது.



10


அப்போது வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழுந்தன.
தானியேல் 7:2, 3.


11

மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்புவது எதைக் குறிக்கிறது?


12

இந்த உவமேயமான தீர்க்கதரிசனத்தை விளங்கிக்கொள்ள வேதம் உதவட்டும். முதலில் இந்த தரிசனத்தில் தண்ணீர் இருக்கிறது.




13

(வசனம்: வெளிப்படுத்தல் 17:15)
வெளிப்படுத்தல் 17:15 நீ கண்ட தண்ணீர், ஜனங்களும், கூட்டங்களும், ஜாதிகளும் பாஷைக்காரருமாம். அதே அதிகாரத்தில் தேவன் தானியேலுக்கு அந்த மிருகங்கள் எதைக் குறிக்கிறது எனச் சொல்கிறார்.



14

(வசனம்: தானியேல் 7:17, 23)
அந்த நாலு பெரிய மிருகங்களும் பூமியிலிருந்து எழும்புகிற நாலு ராஜாக்கள்.



15

நாலாம் மிருகம் பூமியிலே உண்டாகும் நாலாம் ராஜ்யமாம். தானியேல் 7:17, 23.
வேதவாக்கியம் தெளிவாக கூறுகிறது. மிருகம் ராஜியத்தை அல்லது ராஜாவைக் குறிக்கும்.


16

பூமியில் ஜனங்கள் குடியேறியுள்ள இடத்திலிருந்து வரும் மிகவும், ஒரு குறிப்பிட்ட எழுகின்ற ராஜியத்தைக் குறிக்கும். இதை எவ்விதம் அவர் விவரிக்கிறார். தானியேல் 7:3.



17

(வசனம்: தானியேல் 7:3)
அப்பொழுது வெவ்வேறு ரூபமுள்ள நாலு பெரிய மிருகங்கள் சமுத்திரத்திலிருந்து எழும்பின.



18

(வசனம்: தானியேல் 7:4)
முந்தினது சிங்கத்தைப் போலிருந்தது. அதற்கு கழுகின் செட்டைகள் உண்டாயிருந்தது. தானியேல் 7:4.

17 □ போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?

# 17 □ போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?



19

(வசனம்: தானியேல் 7:5)
பின்பு கரடிக்கு ஒப்பான வேறே இரண்டாம் மிருகத்தைக் கண்டேன். அது ஒரு பக்கமாய் சாய்ந்து நின்றது.



20

தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக்கொண்டிருந்தது... தானியேல் 7:5.



21

(வசனம்: தானியேல் 7:6)
அதின் பின்பு, சிவிங்கியைப் போலிருக்கிற வேறொரு மிருகத்தைக் கண்டேன். அதின் முதுகின்மேல் பட்சியின் செட்டைகள் நாலு இருந்தது... தானியேல் 7:6.



22

(வசனம்: தானியேல் 7:7)
அதற்குப் பின்பு இராத்தரிசனங்கிளல் நாலாம் மிருகத்தைக் கண்டேன். அது கெடியும், பயங்கரமும் மகா பலத்ததுமாய் இருந்தது.




23

அதற்குப் பெரிய இருப்புப் பற்கள் இருந்தது. அது நொறுக்கிப்பட்சித்து மீதியானதை தன் காலால் மதித்துப் போட்டது.



24

அது தனக்கு முன்னிருந்த எல்லா மிருகங்களைப் பார்க்கிலும், வேற்றுருவமாயிருந்தது. அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தன.
தானியேல் 7:7.


25

எப்படிப்பட்ட மிருகக்காட்சி சாலை பாருங்கள். நாம் கவனிக்கும்போது அவை ஒவ்வொன்றும் சாதாரண மிருகங்கள் அல்ல. அவை ஒவ்வொன்றும் ஒரு விசேஷ குணங்கள் கொண்டவை, இவை இத்தரிசனங்களை அறிந்து கொள்ள உதவும்.

# 17 போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?


26

இத்தரிசனங்களில் தானியேல் மிருகங்கள் எதைக் குறிக்கிறது என்று எண்ணியபோது அவை நெபுகாத்நேசரின் தரிசனமான உலோக தரிசனத்தை ஞாபகத்திற்கு கொண்டு வந்திருக்கும். இந்த இரண்டு தரிசனங்களிலும், உபயோகிக்கப்பட்ட மாதிரிகள். பழங்கால உலகின் நான்கு ராஜியங்களை கொண்டதாகும்.



27

(வீடியோ 6 வினாடிகள்) பாபிலோனிலிருந்து ஆரம்பித்து மேதிய பெர்சியா ராஜியம், கிரேக்க ராஜியம், பிறகு ரோம ராஜியம்.


28

இது கிறிஸ்துவின் வருகை, அவரின் நித்திய ராஜியம் ஸ்தாபிக்கப்படுவதோடு முடிவடைகிறது.


29

மீண்டும், சற்று பின்னாகபோய் இந்த மிருகங்கள் அல்லது ராஜியங்கள் எப்படி ஜனங்கள் மத்தியில் தோன்றின எனப்பார்ப்போம்.




30

(வசனம்: தானியேல் 7:4)
முதல் மிருகம் சிங்கத்தைப் போல் இருந்தது. அதற்கு கழுகின் நான்கு செட்டைகள் இருந்தன. நான் பார்த்துக் கொண்டிருக்கையில் அதின் இறகுகள் பிடுக்கப்பட்டன.



31

அது தரையிலிருந்து எடுக்கப்பட்டு மனுஷனைப்போல இரண்டு கால்களின்மேல் நின்றது. மனுஷ இருதயம் அதற்குக் கொடுக்கப்பட்டது. தானியேல் 7:4.


32

இதைக் காட்டிலும் மேலான உதாரணம் பாபிலோன் ராஜியத்துக்கு கொடுக்க முடியுமா? முதல் ராஜியமாக (நின்ற சிலையின் பொன்னான தலையை இது குறிக்கிறது) சிங்கம் மிருகங்களின் ராஜா.

# 17  போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?


33

பழைய பாபிலோன் ராஜியம் தங்களைக் குறிக்க சிங்கத்தை உபயோகித்தனர். நில ஆய்வாளர்கள். பாபிலோனிய இடிபாடுகள் மத்தியில் இரண்டு கழுகின் செட்டை கொண்ட சிங்க அடையாளத்தை கண்டுபிடித்துள்ளனர்.


34

எப்படி சிங்கம் வல்லமைக்கும், வெற்றிக்கும் அடையாளமாக இருக்கிறதோ, அதேபோல் நெபுகாத் நேசரின் படையெடுப்புகள் மறக்க முடியாதவை. பாபிலோன் துரிதமாக பெற்ற வல்லமையும், ராஜியத்தை பரப்பியதையும் கழுகின் செட்டை அடையாளப்படுத்துகிறது. தேவன் பாபிலோன் ராஜியத்தைக் குறிக்க அதே சிங்க அடையாளத்தை உபயோகிக்கிறார்.



35

(வசனம்: எரேமியா 4:7)
உன் தேசத்தை பாழாக்கி விடும்படிக்கு சிங்கம் தன் புதரிலிருந்து எழும்பி.




36

உன் பட்டணத்தை குடியிராதபடி அழிக்க தன் ஸ்தானத்திலிருந்து புறப்பட்டு வருகிறான்... எரேமியா 4:7.


37

பெருமையான பாபிலோனிய ராஜா, தன் ராஜியம், என்றும் நிலைக்கும் என கனவு கண்டான். இந்த உலகை வேறு ராஜியம் ஆளும் என்ற எண்ணமே அவனுக்கு இல்லை. அவன் தன் கட்டிடங்களின் கற்களில் இது என்றைக்கும் நிலைக்கும் என எழுதி வைத்தான்.



38

(வீடியோ 4 வினாடிகள்) அக்டோபர் 13, 539 கி.மு.வில் உலோக தரிசனத்தில் தலையான பொன்னாகவும், கழுகின் செட்டை கொண்ட சிங்கமாக தானியேல் தரிசனத்தில் விவரிக்கப்பட்டு இருந்த பாபிலோன் ராஜியம் மகிமையின் முடிவுக்கு வந்தது.

# 17  போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?



39

(வீடியோ 3 வினாடிகள்) இரண்டாவது கரடியாக, விவரிக்கப்பட்டிருந்த ராஜியம் அல்லது அரசாங்கம், வெற்றி கொள்ளும் ராஜியமான மேதிய-பெர்சிய ராஜியமேயில்லாமல் வேறல்ல. இதே ராஜியம் தான் உலோக தரிசனத்தில் புயமும் மார்புமான வெள்ளி என்று குறிக்கப்பட்டது. தானியேல் தன் தரிசனத்தில் கரடியை கண்டு, அவன் சொன்னது.



40

(வசனம்: தானியேல் 7:5)
அது ஒரு பக்கமாய்ச் சாய்ந்து நின்று தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளைக் கவ்விக்கொண்டிருந்தது...
தானியேல் 7:5.


41

தானியேல் சொன்னார். அந்தக் கரடி தன் வாயின் பற்களுக்குள்ளே மூன்று விலாவெலும்புகளை கவ்விக் கொண்டிருந்தது. ஆனால் வேதம் இதன் அர்தத்தை கண்டுபிடிக்கவில்லை.



42

ஆனால், வேத வல்லுநர்கள் நம்புவது அந்த மூன்று விலாவெலும்புகளும் குறிப்பது.



43

லிதியா, பாபிலோன், எகிப்து, மேதிய பெர்சியர்கள் அழித்துப்போட்ட முக்கிய மூன்று ஸ்தலங்கள்.



44

மேதிய-பெர்சிய ராஜியம் இரண்டு நூற்றாண்டுகள்தான் ஆண்டது. ஆனால், கொடூரமான, பலமானதாக இருந்தது. தேவன் தானியேலுக்கு தரிசனத்தில் வேறொரு மிருகம், ராஜியம் தோன்றும் என வெளிப்படுத்தினார்.



45

(வசனம்: தானியேல் 7:6)
அதின்பின்பு, சிவிங்கியைப் போலிருக்கிற வேறொரு மிருகத்தைக் கண்டேன். அதின் முதுகின்மேல் பட்சியின் செட்டைகள் நாலு இருந்தது.

17  போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?

# 17 □ போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?



46

அந்த மிருகத்துக்கு நாலு தலைகளும் உண்டாயிருந்தது. அதற்கு ஆளுகை அளிக்கப்பட்டது. தானியேல் 7:6.


47

மெதுவாக இயங்கும் கரடி, துரிதமாக ஓடும். சிவிங்கிக்கு ஒப்பாக முடியாது. அதேபோல் பெர்சியா படை, மிக வேகமாக படையெடுத்து வரும் அலெக்சாண்டருக்கு முன் தங்களை காத்துக்கொள்ள முடியவில்லை.



48

(வீடியோ 4 வினாடிகள்) நெபுகாத்நேசரின் தீர்க்கதரிசன தரிசனத்தில் வயிறும், தொடையும், வெண்கலமாக விவரிக்கப்பட்டிருந்த மூன்றாம் உலக ராஜியம், தானியேல் தரிசனத்தில் அதேபோல், சிவிங்கியாக கிரேக்க ராஜியம் விவரிக்கப்பட்டுள்ளது.


49

அந்த நான்கு செட்டைகளும் அலெக்சாண்டரின் துரித வெற்றிகளை விவரிக்கிறது. கி.மு. 331ல் அர்பெல்லா என்ற போரில் தரியு 3ஐ தோற்கடித்தான். இந்த உலகம் கண்டிராத அளவு ராஜியங்களை 12 வருடத்தில் விஸ்தாரப்படுத்தினான். சிவிங்கியின் நான்கு தலைகள் கிரேக்க ராஜியத்தின் நான்கு பிரிவுகளைக் குறிக்கும்.



50

(வசனம். தானியேல் 8:22)
அந்த ஜாதியிலே நாலு ராஜியங்கள் எழும்பும் ...தானியேல் 8:22.


51

கிரேக்க ராஜியம் நான்கு பிரிவுகளாக பிரிந்தது என்று சரித்திரம் கூறுகிறது. அர்பெல்லா வெற்றிக்கு ஏழு வருடத்திற்கு பின் அலெக்சாண்டர் 32ம் வயதில் மரித்தார். அவரை அடக்கம் செய்வதற்கு முன்பே அதிகாரத்து சண்டை ஏற்பட்டது. முதலில் அலெக்சாண்டரின் உறவினர் மத்தியில். பிறகு அவரின் யுத்த தலைவர்கள் மத்தியில். கடைசியில் அலெக்சாண்டரின் தள கர்த்தர் நான்கு பேரின் மத்தியில் ஏற்பட்டு ராஜியம் அவர்களின் கையில் வந்தது.



52

(வீடியோ 9 வினாடிகள்) மிருகமான சிவிங்கி அல்லது கிரேக்க நான்கு தலைகள். இருந்தது. கசேண்டர், லிசிமேக்கஸ், டாலமிடு, சேலுக்கஸ்.



53

ஒரு தலை இருக்கும்போதே அநேகர் சரியான திசையில் செல்ல தடுமாறுகின்றனர். நான்கு தலைகள் இருந்தால் எப்படி இருக்கும்.
ஒவ்வொரு தலையும் தான்தான் முதலாவதாக இருக்க முயலும். இதே போன்றுதான் அலெக்சாண்டரின் ராஜியத்தில் நடந்தது. அலெக்சாண்டரின் நான்க தளபதிகளும் பேராசை உள்ளவர்களாக ஆளுகை செய்ய விரும்பினார்.



54

ஒவ்வொருவரும் மற்றவருக்கு விரோதமாக பட்டயத்தை உபயோகித்தனர். எனவே ராஜியம் சிக்கலும், சச்சரவும் நிறைந்ததாக மாறியது. மகா அலெக்சாண்டர், பக்கம் 494.



55

கடைசியாக ஜுன் 22, கி.மு.168 வரை அமைதியின்மையும், சச்சரவும் அந்த நான்கு பகுதிகளுக்குள் தொடர்ந்து இருந்து கொண்டே இருந்தது. அலெக்சாண்டரின் மரணத்துக்கு 144 ஆண்டுகளுக்குப் பின் பட்னா என்ற யுத்தத்தில் மகா அலெக்சாண்டரின் ராஜியம் முடிவுக்கு வந்தது.
ரோமின் சரித்திரம் புத்தகம் 3, அதிகாரம் 10.


56

கிரேக்க ராஜியத்துக்குப் பின் பயங்கரமான நாலாம் மிருகம் வல்லமைகொண்டது என்று தானியேல் கூறியது என்ன?


57

தூதன் தானியேலிடம் இந்த நான்காம் மிருகம் மற்ற மிருகங்களை விட வேறாக இருந்தது என்றார்.
இந்த மிருகம் தன் இரையை இரும்புப் பற்களால் அழித்தது.
மிக கொடூரமான துஷ்டமான வல்லமை பற்றிய படம் இங்கே விவரிக்கப்படுகிறது.

17 □ போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?

# 17 போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?


58

மிக சரியாக பொருந்தும் வருணணை ரோம ராஜியத்தைக் குறித்து சொல்லப்படுகிறது.


59

மற்ற இராஜியங்களை காட்டிலும் ரோம் இரக்கமில்லாத, கொடுமையான ராஜியமாக இருந்தது.
அவர்கள் எல்லா நாடுகளையும் அழித்தனர். அதன் ஜனங்களை அடிமைகளாக விற்றனர்.



60

(வீடியோ 4 வினாடிகள்) இந்த பயங்கர மிருகத்திற்கு நான்க இரும்புப் பற்கள் இருந்தது. உலோக சிலையில் நாலாம் ராஜியம் கால்கள் இரும்பாக குறிக்கப்படுகிறது. தானியேல் இந்த பயங்கர மிருகத்தால் கதிகலங்கிப் போனார் விசேஷமாக அதன் பத்து கொம்புகளால்.



61

(வசனம்: தானியேல் 7:8)
அந்தக் கொம்புகளை நான் கவனித்து இருக்கையில் இதோ, அவைகளுக்கு இடையிலே வேறொரு சின்னக் கொம்பு எழும்பிற்று.



62

அதற்கு முன்பாக முந்தின கொம்புகளில் மூன்று பிடுங்கிப்பட்டது. தானியேல் 7:8.



63

(வசனம்: தானியேல் 7:24)
... அந்த தூதன் தானியேலிடம், அந்த பத்துக் கொம்புகள். என்னவென்றால் அந்த ராஜியத்திலே எழும்பும் பத்து ராஜாக்களாம்.



64

(வீடியோ 4 வினாடிகள்)
ரோமின் பிரிக்கப்பட்ட ராஜியங்களைக் குறிக்கும். உலோக சிலையின் இரும்பும் களிமண்ணும் கலந்த பத்து விரல்கள் தானியேலின் மனதில் தோன்றியிருப்பதில் சந்தேகமில்லை.



65

(வீடியோ 4 வினாடிகள்) கி.பி. 476ல் முரட்டுத்தனமான இனம் ஐரோப்பாவின் வடக்கு பகுதியில் இருந்தவர் ரோம ராஜியத்தின் பெரும் பகுதியை அழித்தனர். இந்த ராஜியங்களின் ஏழு பிரிவுகள் இன்னும் ஐரோப்பாவில் இருக்கின்றன.



66

ஆனால் தானியேலை ஆர்வத்துக்குள்ளாக்கியது என்னவென்றால், பத்துக் கொம்புகளுக்கு மத்தியில் மூன்று கொம்புகளை பிடுங்கிப் போட்டு முளைத்து வல்லமை கொண்ட சின்னக்கொம்பு.



67

(வசனம்: தானியேல் 7:8)
இதோ அந்தக் கொம்பிலே மனுஷ கண்களுக்கு ஒப்பான கண்களும் பெருமையானவைகளைப் பேசும் வாயும் இருந்தது.


68

இந்த சின்னக்கொம்பு தானியேலை சஞ்சலம் செய்தது.



69

(வசனம்: தானியேல் 7:15)
தானியேலாகிய நான் என் தேகத்தினுள் என் ஆவியிலே சஞ்சலப்பட்டேன். என் தலையில் தோன்றின தரிசனங்கள் என்னை கலங்கப் பண்ணினது. தானியேல் 7:15


70

இந்த சின்னக் கொம்பை குறித்ததான விவரம் ஏன் தானியேலை ஆர்வம் கொள்ள வைத்தது.



71

(வசனம்: தானியேல் 7:21, 25)
... ஏனெனில், இந்தக் கொம்பு பரிசுத்தவான்களோடே யுத்தம் பண்ணி அவர்களை மேற்கொண்டது.

17  போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?

# 17 போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?




72

உண்ணதமானவருக்கு விரோதமான வார்த்தைகளை பேசி,




73

உன்னதமானவருடைய பரிசுத்தவான்களை ஒடுக்கி, காலங்களையும், பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான்.




74

அவர்கள் ஒரு காலமும், காலங்களும் அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவார்கள்.
தானியேல் 7:21, 25.



75

இந்த முன் குறிக்கப்பட்ட காரியங்கள் உலகப் பிரகாரமான சரித்திரத்தைப் பற்றியல்ல அது தேவனுடைய ஜனங்களைப் பற்றியது என்பதை தானியேல் உணர்ந்தார்.




76

இந்த சின்னக் கொம்பு உன்னதமான பரிசுத்தவான்களோடு யுத்தம் பண்ணி ஒரு குறிப்பிட்ட காலம் அவர்களை மேற்கொண்டான். உண்மையாகவே இது துன்புறுத்தும் வல்லமை. சாத்தானால் உபயோகிக்கப்படும் வல்லமை அல்லது பிரதிநிதி, தேவனோடு யுத்தம் செய்து, அவர் ஜனங்களோடு அவரின் சத்தியத்தோடு யுத்தம் பண்ணும்.




77

(வசனம்: தானியேல் 7:28)
இந்த நினைவுகளால் நான் சஞ்சலப்பட்டேன்.




78

என் முகம் வேறுபட்டது. இந்தக் காரியத்தை என் மனதிலே வைத்துக் கொண்டேன். தானியேல் 7:28. என்.ஐ.வி



79

யார் இந்தச் சின்னக் கொம்பு?



80

இந்தச் சின்னக் கொம்பு பற்றி வேதம் கூறும் விளக்கத்தை நாம் பரிசோதித்து, அதனுடைய நிறைவேறுதல் குறித்து சரித்திரம் பதிவு செய்திருப்பதை பார்ப்போம்.
தானியேல் நான்காம் மிருகத்தை அல்லது ரோம் ஆகிய நான்காவது உலக ராஜ்யத்தை.




81

(வசனம்: தானியேல் 7:7)
கடியும், பயங்கரமும் மகா பலத்ததுமாயிருந்தது, அதற்குப் பெரிய இரும்புப் பற்கள் இருந்தது... அதற்குப் பத்துக் கொம்புகள் இருந்தது.
தானியேல் 7:7.




82

(வசனம்: தானியேல் 7:24)
தானியேல் 7:24 நமக்கு சொல்லுகிறது. அந்தப் பத்துக் கொம்புகள் அந்த ராஜ்யத்திலே எழும்பும் பத்து ராஜாக்களாம்.


83

தானியேலின் தீர்க்கதரிசன பகுதியை சரித்திரம் உறுதிப்படுத்துகிறது. இன்னொரு சாம்ராஜ்யம், சரித்திரம் எனும் திரையில் தோன்றுவதற்கு பதிலாக, நான்காம் ராஜ்யம் விழுந்து, தீர்க்கதரிசி முன்னுரைக்கப்பட்டபடியே, ரோம சாம்ராஜ்யம் பிரிக்கப்படும். முடிவு - அவைகள் 10 பெலன்குன்றிய ராஜ்யங்கள்.



84

சரித்திர ஆசான்கள் நமக்குச் சொல்வது: கிறிஸ்துவுக்குப் பின் 476 ஆண்டுகளில் ரோம் பிரிக்கப்படும் என்பதாக அது நிறைவேறியது.
எட்வர்ட் எலியாட் எனும் ஆங்கில சரித்திர ஆசானின் கூற்றறுப்படி, ரோம சாம்ராஜ்யத்தின்மீது கிறிஸ்துவுக்குப் பின் 351 முதல் 476ல் தான் தோன்றி இனத்தவர் மேற்கொள்வார்கள் என ஹோரே - அப்போ களிப்பு என்ற தனது புத்தகத்தில் கூறுகிறார்.

17 ▯ போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?

# 17 போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?



85

(வீடியோ 20 வினாடிகள்) ஜெர்மானிர் இனத்தவரும், அவர்களின் இன்றைய நவீன கால மக்கள் பட்டியல் இங்கே கொடுக்கப்பட்டுள்ளது.
அலமெனேய் - ஜெர்மன்ஸ்
பர்கண்டியன்ஸ் - ஸ்விஸ்
ஃபிராங்க்ஸ் - பிரான்ஸ்
லம்பார்ட்ஸ் - இத்தாலியன்
ஷேக்கன்ஸ் - ஆங்கிலேயர்
சுவி - போர்ச்சுக்கீஸ்
விசிகாத்ஸ் - ஸ்பேனிஸ்
ஹெருளி - அழிந்துப் போனது
ஆஸ்ட்ரகாத்ஸ் - அழிந்துப் போனது
வாண்டல்ஸ் - அழிந்துப் போனது


86

தானியேல் கண்ட 10 கொம்புகள் உள்ள நான்காவது மிருகம் இதுவே.
தீர்க்கதரிசனத்தின்படி சின்ன கொம்பு 10 கொம்புகள் மத்தியிலிருந்து எழும்பி வல்லமை பெறும், இதுவே ரோம பேரரசின் பிரிவுகள்.




87

(வசனம்: தானியேல் 7:24)
அந்த 10 கொம்புகளும் அதிலிருந்து தோன்றுகிற 10 இராஜாக்களாம்.




88

அதற்கு பின்பு எழும்புகிறவை அந்த மூன்று இராஜாக்களையும் தள்ளும். தானியேல் 7:24.



89


493 கி.பி. பேரரசர் செனோ உதவியால் ஹெருளி மரணத்தை சந்தித்தார்.



90


மற்றொரு சக்கரவர்த்தி, ஜஸ்டினியன் 534ல் வாண்டல்களை வேரறுத்து, பிறகு 538ல் ஆஸ்த்ரகாத்சியரின் வல்லமையை முறித்தார்.

# 17 □ போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?




91

இங்ஙனம், தானியேல் தீர்க்கதரிசனத்தின் மூன்று கொம்புகள் வேருடன் பிடுங்கப்பட்டு, ரோமின் சபை உருவாக்கத்தை உண்மையாக்கின.




92

இந்த நேரத்தில் ஜஸ்டினியன் ரோமின் கண்காணி அல்லது போப்புவை, மேற்கு ரோமின் ஆன்மீக தலைவராக இருக்கக் கட்டளை பிறப்பித்தார். சின்னக்கொம்பு மற்ற ராஜ்யங்களை விட விததியாசமாயிருக்கும் என்றும் தானியேல் முன்னுரைத்தார்.




93

(வசனம்: தானியேல் 7:24)
... அவன் முந்தினவர்களைப் பார்க்கிலும் வேறாயிருந்து. தானியேல் 7:24. இந்த மிருகம் வேறுபட்டதாகா இருந்ததா? உண்மையிலே அப்படித்தான்!



94

மற்ற ராஜ்யங்கள் அரசியல் அதிகாரங்களாக இருந்தன. ஆனால் சின்னக்கொம்பு ஒரு சபையாக இருந்து அரசியல் அதிகாரத்தைத் திறமையாக கையாண்டது.




95

பிராட்டஸ்டண்ட் சீர்திருத்தவாதிகள் கூறியதுபோல, தானியேல் 7ன் சின்னக் கொம்பை மத்திய காலங்களின் ரோம சபையாக தீர்க்கதரிசன விரலானது பிழையின்றி சுட்டிக்காட்டுவது போல் காணப்படுகிறது. இந்தச் சின்னக் கொம்பின் வல்லமையை அடையாளம் காணும் மற்றோர் குணாதியத்தை தானியேல் கொடுத்துள்ளார்.




96

(வசனம்: தானியேல் 7:21)
இந்தக் கொம்பு பரிசுத்தவான்களோடே யுத்தம் பண்ணி, அவர்களை மேற்கொண்டது என்று கண்டேன். தானியேல் 7:21.




97

(வசனம்: தானியேல் 7:25)
பரிசுத்தவான்களை ஒடுக்கும் என்றும் இந்த வல்லமையைக் குறித்து தானியெல் சொல்லியிருக்கிறார். வசனம் 25.

# 17  போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?


98

மத்திய காலங்களில் இருந்த சபை உபத்திரவத்திற்கு உள்ளாகியதா?
துரதிஷ்டவசமாக, ஆம்.
பாப்புமதக் கோட்பாட்டை விட்டு விலகினவரை தண்டித்தல், சிலுவைப் போர்கள் கேகன்ஸிஸ், வால்தேனியர்கள், அல்பேனியர்கள், முப்பது வருடப் போர், சித்திரவதை, இருண்ட சிறை.


99

உயிரோடு இரத்த சாட்சிகளை எரித்தது போன்றவை எல்லாம் சரித்திர பூர்வமாக இந்த இருண்ட காலத்தில் சபையின் நிலையை காட்டுகிறது.
ஆனால் வேறு மிக முக்கியமான விசேஷ குணம் இந்தச் சின்னக் கொம்பு வல்லமைக்கு குறிப்பிட்டுள்ளதை நாம் காணலாம்.



100

(வசனம்: தானியேல் 7:25)
தீர்க்கதரிசனம் முன்னறிவிக்கிறது காலத்தையும் பிரமாணத்தையும் மாற்ற நினைப்பான். தானியேல் 7:25
மத்திய காலத்தில் இருந்த போப்பு மார்க்கம் தேவ கட்டளையை மாற்ற முயன்றதா?



101

ஆம், இது ஓய்வு நாள் மாற்றியதாகக் கூறுகிறது.
பாரம்பரியத்தை முக்கியப்படுத்தி சனிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றியதாகக் கூறுகிறது.


102


நாம் படிக்குப்போகும் இந்த கடைசி குணம், அந்த வல்லமை எப்போது தன் வல்லமையில், எவ்வளவு காலம் பரிசுத்தவான்களை ஒடுக்கும் என்பதை சுட்டிக் காட்டுகிறது.



103

(வசனம்: தானியேல் 7:25)
அவர்கள் ஒரு காலமும் காலங்களும் அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவார்கள்.
தானியேல் 7:25.
இங்கே அநேக வேத அடையாளங்களை பார்க்கலாம்.

# 17 ▯ போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?



104

காலம் என்பது ஒரு வருடத்தையும் காலங்கள் என்பது இரண்டு வருடத்தையும் அல்லது 720 தீர்க்கதரிசன நாட்களையும் குறிக்கும்.
அரைக்காலம் என்பது அதை வருடம் அல்லது 180 நாட்கள்.
இவைகளை நாம் கணக்கிடும்போது காலம் (360 நாட்கள்) காலங்கள் (720 நாட்கள்) அரைக்காலம் (180 நாட்கள்) ஆன 1260 தீர்க்கதரிசன நாட்கள் அல்லது வருடங்கள் கிடைக்கிறது.




105

(வசனம்: எசேக்கியல் 4:6)
எசேக்கியல் சொன்னபடி ஒரு நாள் என்பது ஒரு வருடம் ஆகும். ஒரு வருடத்துக்கு பதிலாக ஒரு நாளைக் கட்டளையிட்டேன். எசேக்கியல் 4:6,
கே.ஜே.வி. இந்த சின்னக் கொம்பு வல்லமை 1260 வருடம் வல்லமை கொண்டிருக்கும் சரித்திரம் இந்த சரியான கால நிர்ணயத்தை உறுதிப்படுத்தும்.




106

ரோம சபையை எதிர்த்த கடைசி இனமான ஆஸ்ட்ரகோத், பத்து இனத்தரின் கடைசியானது, அது கி.பி.538ல் வீழ்ச்சியடைந்தது. ரோம சபை, ஆன்மீக, அரசியல் கலந்த வல்லமையை தடையின்றி நிறைவேற்ற வல்லமை கொண்டது.





107

சரியாக 1260 வருடங்களுக்குப் பின் 1798ல் பெர்த்தியர் என்ற நெப்போலியனின் தளகர்த்தனரால் ரோம சபையின் அரசியல் வல்லமை உடைந்தது.



108

தானியேல் 7ம் அதிகாரத்தை நாம் படிக்கும்போது, நாலாம் மிருகத்தின் தலையிலிருந்து எழும்பிய சின்னக்கொம்பு, அது எந்த வல்லமை என்பதை நாம் அறிந்து கொள்ள, கீழ்காணும் அடையாளங்கள் கொடுக்கப்படுகின்றன. இந்த குறிப்புகளை சற்று பார்ப்போம்.



109

1. ரோமிலிருந்து பிரிந்துபோன வட ஐரோப்பாவின் பத்து ராஜியங்களிலிருந்து இந்த சின்னக்கொம்பு தோன்றும். தானியேல் 7:8.

# 17  போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?



110

2. மூன்று பழைய ராஜிய வல்லமைகளை மேற்கொண்டு இது வல்லமைக்கு வரும். அந்த மூன்று ராஜியங்கள். கெருலீ அஸ்ட்ரரோகத், வாண்டல் இந்த மூன்று நாடுகளும் ஆரிய மதக் கோட்பாடுகளை கைகொண்டு வந்தன. மேலும் போப் சபையின் தலைவர் என இந்த நாடுகள் ஏற்றுக்கொள்ளவில்லை.
தானியேல் 7:8.


111

3. தீர்க்கதரிசனம் கூறுகிறது இந்த சின்னக்கொம்பு மற்ற கொம்புகளின் மத்தியில் அவை நிலைநாட்டப்பட்டபின் எழும்பும் என்று. தானியேல் 7:20 இதன், பொருள். இந்த ராஜியம் கி.பி.476க்கு பின் நிறுவப்படும்.


112


4. மற்ற ராஜியங்களைக் காட்டிலும் இது வித்தியாசமான வல்லமைக்கு இருக்கும் இது அரசியலும், மதமும் கலந்த ராஜியம். தானியேல் 7:24.


113

(வசனம்: தானியேல் 7:21, 25)
5. சின்னக்கொம்பு - பரிசுத்தவான்களை ஒடுக்குதல். இந்தக்கொம்பு பரிசுத்தாவான்களோடே யுத்தம் பண்ணி அவர்களை மேற்கொண்டது என்று கண்டேன். தானியேல் 7:21, 25.


114


(வசனம்: தானியேல் 7:25)
6. இந்த வல்லமையானது, காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைத்தது.
தானியேல் 7:25.



115

(வசனம்: தானியேல் 7:25)
7. இந்த வல்லமை 1260 ஆண்டுகள் முதன்மையாக ஆட்சி புரியும் என்று தீர்க்கதரிசனம் குறிப்பிடுகிறது. வேதம் கூறுகிறது - அவர்கள் ஒரு காலமும், காலங்களும், அரைக்காலமும் செல்லுமட்டும் அவன் கையில் ஒப்புக் கொடுக்கப்படுவார்கள்.
தானியேல் 7:25.

# 17 □ போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?


116

இந்த உலகத்தில் சரியான நேரத்தில் சரியான இடத்தில் எழும்பி இந்த எல்லாக் கருத்துக்களையும் நிறைவேற்றின ஒரே வல்லமை உண்டு என்பதை இந்த தீர்க்கதரிசனத்தின் மூலம் நீங்கள் பார்க்கலாம். அதுதான் ரோமன் சபை.


117


தானியேலின் பெரிய தீர்க்கதரிசனத்தின் கடைசி கட்டத்திற்கு நாம் இப்போது போனால் தேவனுடைய மக்களுக்கு ஒரு மிக சந்தோஷமான முடிவு இருக்கின்றது.


118

தரிசனத்திலே, பூமியின் வல்லமைகள் மதம் மற்றும் அரசியல் ஆளுகையை கைப்பற்ற போராடுகின்ற தானியேல் கவனித்தான்.



119

அவனுடைய கவனம் பூமியில் இருந்து பரலோகத்திற்கு திடீரென மாற்றப்பட்டது.




120

(வசனம்: தானியேல் 7:9, 10)
நான் பார்த்துக் கொண்டிருக்கையில், சிங்கசானங்கள் வைக்கப்பட்டது. நீண்ட ஆயுசுள்ளவர் வீற்றிருந்தார்.



121

அவருடைய வஸ்திரம் உறைந்த மழையைப் போலவும், அவருடைய சிரசின் மயிர் வெண்மையாகவும் பஞ்சைப் போல துப்பரவாகவும் இருந்தது.



122

அவருடைய சிங்காசனம் அக்கினி ஜுவாலையும், அதின் சக்கரங்கள் எரிகிற நெருப்புமாயிருந்தது.




123

அக்கினி நதி அவர் சந்நிதியிலிருந்து புறப்பட்டு ஓடினது.



124

ஆயிரமாயிரம் பேர் அவரைச் சேவித்தார்கள்.




125

கோடானகோடி பேர் அவருக்கு முன்பாக நின்றார்கள். நியாய சங்கம் உட்கார்ந்தது, புத்தகங்கள் திறக்கப்பட்டது.
தானியேல் 7:9, 10.


126

தானியேல் பிதாவாகிய தேவனை பார்த்தான். இங்கே நீண்ட ஆயிசுள்ளவர் என்று அழைக்கப்படுகிறது. அவர் மகிமையான சிங்காசனத்தில் வந்து உட்கார்ந்தார்.




127

(வசனம்: தானியேல் 7:22)
தானியேல் எப்படி இந்த நிகழ்ச்சியை வர்ணிக்கின்றார் என்று கவனியுங்கள். நீண்ட ஆயுசுள்ளவர் வருமட்டாகவும். தானியேல் 7:22. இப்போது நியாய தீர்ப்பு ஆரம்பமாக நீதிமன்றம் ஆயத்தமாயிருக்கின்றது.



128

(வசனம்: தானியேல் 7:10)
... நியாய சங்கம் உட்கார்ந்தது. புஸ்தகங்கள் திறக்கப்பட்டது. தானியேல் 7:10.
சின்ன கொம்பாகிய பரிசுத்தவான்களோடு யுத்தம் பண்ணின வல்லமையின் நியாய தீர்ப்போடு பரலோக நியாய தீர்ப்பை தேவன் தானியேலுக்கு காட்டினார்.



129

(வசனம்: தானியேல் 7:26)
ஆனாலும் நியாய சங்கம் உட்காரும் மேலும் அவனுடைய ஆளுகையை நீக்கிப் போடுவார்கள்.



130

முடிவு பரியந்தம் அவனை சங்கரிக்கும்படியாகவும் அழிக்கும்படியாகவும்.
தானியேல் 7:26.

# 17 □ போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?


131

பிதாவானவர் உட்கார்ந்து நியாய தீர்ப்பு ஆரம்பிக்க ஆயத்தமானதற்கு பிற்பாடு ஏதோ மிக விசேஷமான மிக அழகான சம்பவத்தை பிறகு தானியேல் பார்த்தான்.



132

(வசனம்: தானியேல் 7:13)

இராத் தரிசனங்களிலே நான் பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ மனுஷகுமாரனுடைய சாயலான ஒருவர் வானத்து மேகங்களுடன் வந்தார்.



133

அவர் நீண்ட ஆயுசுள்ளவர் இடமட்டும் வந்து அவர் சமீபத்தில் கொண்டுவரப்பட்டார். தானியேல் 7:13.


134

யார் இந்த விசேஷமாக அழைக்கப்பட்ட நபர்? மனுஷகுமாரன் நித்திய நியாயாதிபதிக்கு முன்பாக பிரசன்னமாக்கப்பட்டவர்?



135

அவருடைய ஆச்சரியமான சீடர்களுக்கு இயேசு இது அவரைப்பற்றினது என்பதாக நாற்பது முறைக்கு மேலாக சொல்லியிருக்கிறார்.



136

(வசனம்: மத்தேயு 17:22, 23) அவர் சொன்னார். மனுஷகுமாரன் மனுஷர் கைகளிலே ஒப்புக் கொடுக்கப்படுவார்.



137

அவர்கள் அவரை கொலை செய்வார்கள். ஆகிலும் மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்திருப்பார்... மத்தேயு 17:22, 23.
இயேசு, யூதாஸ் என்னும் காட்டிக் கொடுக்கிற சீடரிடம் கேட்டார்.


17 □ போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?

# 17  போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?




138

(வசனம்: லூக்கா 22:48)
... முத்தத்தினாலேயா மனுஷகுமாரனைக் காட்டிக் கொடுக்கிறாய்.
லூக்கா 22:48.
ஆனால் மிக சிறப்பான வாக்கியம் இயேசுவின் போராட்டதின் போது நியாய் தீர்ப்புக்காக அமர்த்தப்பட்டவராகிய பிரதான ஆசாரியரிடம் கொண்டவரப்பட்டது.



139

(வசனம்: மத்தேயு 26:64)
...மனுஷகுமாரன் சர்வ வல்லவருடைய வலதுபரிசத்தில் வீற்றிருப்பதையும்,



140

வானத்தின் மேகங்கள் மேல் வருவதையும் இது முதல் காண்பீரகளென்று உங்களுக்குச் சொல்கிறேன்.



141

இயேசு கிறிஸ்து நியாயத்தீர்ப்பில் எல்லா பாவிகளின் பிரதிநிதியாக வழக்கறிஞராக நின்று வாதாடுவார். வழக்கறிஞர் நீதிமன்றத்தில் நின்று ஒரு வழக்கில் கூட தோற்றது கிடையாது. புத்தகங்கள் திறக்கப்பட்டது என வசனம் சொல்லுகிறது.



142

(வசனம்: தானியேல் 7:10)
... நியாய சங்கம் உட்கார்ந்தது. புஸ்தகங்கள் திறக்கப்பட்டது.
தானியேல் 7:10. (கடைசி பகுதி)


143

அந்த புத்தகங்களில் நம் வாழ்வில் செய்த தீய நன்மையான காரியங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கும். நம் வாழ்க்கையில் கிடைக்கப்பெற்ற எல்லா வாய்ப்புகளையும் அது எங்ஙனம் பயன்படுத்தப்பட்டது என்பதையும் கூட குறிக்கப்பட்டிருக்கும்.

# 17  போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?


144

கிறிஸ்துவை நம் இரட்சகராக எற்றுக் கொண்டிருப்போமானால், நம் வழக்கு ஆண்டவருக்கு முன்பு வரும்போதுஈ இயேசு தோன்றி அவருடைய மரணத்தின் மூலம் நம் வாழ்வின் எல்லா பாவங்களையும் நீக்குவார்.


145

பரலோக புஸ்தகங்கள் திறக்கப்படும் அந்நாளில் கிறிஸ்துவின் பாவமில்லா வாழ்க்கை நம் பாவ வாழ்க்கையை மூடி, கிறிஸ்துவின் பாவமில்லா வாழ்க்கை நம்முடைய கணக்கில் வைக்கப்பட்டு பரலோக பிதாவால் மன்னிக்கப்படும்.


146

நாம் செய்த நன்மையினால் நமக்கு நித்திய வாழ்வு கிட்டுவதில்லை. கிறிஸ்து இயேசுவின் சிலுவை மரணத்தினாலேயே நமக்கு கிட்டுகின்றது. தானியேல் அந்த சின்னக் கொம்பின் முழு நடவடிக்கைகளையும் அறிய ஆசைப்பட்டபோது, நுட்ப நியாய விசாரணையின் எல்லா நிலைகளையும் தேவன் வெளிப்படுத்தினார்.


147

பூமியில் வாழும் யார் நித்திய ராஜ்யத்திற்கு தகுதியுள்ளவர்கள் என்று கண்டவுடன், கிறிஸ்துவின் ராஜ்யம் வரும்.



148

(வசனம்: தானியேல் 7:14)
அவருக்கு கர்த்தத்துவமும், மகிமையும், ராஜரீகமும் கொடுக்கப்பட்டது.



149

சகல ஜனங்களும், ஜாதியரும் பாசைக்காரரும் அவரையே சேவிக்கும்படி.



150

அவருடைய கர்த்தத்துவம் நீங்காத நித்திய கர்த்தத்துவமும்.

# 17 □ போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?



151

அவருடைய ராஜ்யம் அழியாததுமாயிருக்கும். தானியேல் 7:14.
இந்த ராஜ்யத்தை குறித்து அதிக நல்ல செய்தியை தானியேல் கூறுகிறார்.



152

(வசனம்: தானியேல் 7:27)
ராஜரீகமும், ஆளுகையும் மகத்துவமும் உன்னதமானவருடைய பரிசுத்தவான்களாகிய ஜனங்களுக்கு கொடுக்கப்படும்... தானியேல் 7:27.
தேவனுடைய பரிசுத்தவான்கள் அவருடனே புத்திரர்களாய் இருந்து பரலோக ராஜ்யத்தை சுதந்தரித்து கொள்வார்கள்.




153

(வசனம்: தானியேல் 7:18)
... உன்னதமானவருடைய பரிசுத்தவான்கள் ராஜரீகத்தை பெற்று, என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும், ராஜ்யத்தை சுதந்தரித்து கொள்வார்கள். தானியேல் 7:18.



154

இந்த தீர்க்கதரிசன பகுதியானது, நெபுகாத்நேசரின் கனவில் கையால் பெயர்க்கப்படாத கல் சிலையின் பாதத்தை நொறுக்கியதற்கு ஒத்து செல்கிறது.



155

(வசனம்: தானியேல் 2:35)
... பெரிய பர்வதமாகி பூமி முழுவதையும் நிரப்பிற்று. தானியேல் 2:35.
தானியேல் பார்த்த சிலையின் தீர்க்கதரிசனத்துக்கும்.


156

தானியேல் கண்ட மிருகங்களின் காலமாகிய இரும்பும், களி மண்ணும் காலத்தில் வசிக்கிறோம், பூமியின் கடிகளின் காலம் முடிவடைந்துக் கொண்டிருக்கிறது. பெரிய தீர்க்கதரிசனத்தின் மூலம் இந்த செய்தியைத்தான் போதிக்க விரும்புகிறார்.

# 17 □ போலிகளை கண்டுபிடிப்பது எப்படி?


157

நாம் இப்பொழுது பாதங்களின் காலமாகிய இரும்பும், களி மண்ணும் காலத்தில் வசிக்கிறோம். பூமியின் குடிகளின் காலம் முடிவடைந்துக் கொண்டிருக்கிறது. பெரிய தீர்க்கதரிசனத்தின்மூலம் இந்த செய்தியைத்தான் போதிக்க விரும்புகிறார்.


158

எவ்வளவு எளிதாக உலக சரித்திரம் வேதத்தின் இரண்டே அதிகாரங்களில் விவரிக்கப்படுகின்றது. தானியேலுக்கு அந்த இரவில் பல ஆண்டுகளுக்கு முன் கொடுத்த தீர்க்கதரிசனம் அவருடைய பிள்ளைகள் மீது வைத்திருக்கும் பாசத்தை காட்டுகின்றதல்லவா?


159

பாருங்கள். எருசலேம் அழிக்கப்பட்டுபோயிற்று, இஸ்ரவேல் ஜனம் பாபிலோனுக்கு கொண்டு செல்லப்பட்டனர். ஆனால் தேவன் சரித்திரத்தை நான் கையில் வைத்திருக்கிறேன் என்பதை வெளிப்படுத்தினர்.



160

இராஜாக்கள் வருவார்கள். போவார்கள். இராஜ்யங்கள் எழும்பும், விழும். ஆனாலும் நான் என் பிள்ளைகளையும், என் திட்டங்களையும் மறப்பதில்லை. ஒரு நாள் எல்லாம் வெளியரங்கமாகும். நண்பர்களே ராஜ்யங்கள் வரும் ராஜாக்கள் வருபவர்கள், மறைந்து போவார்கள். இரட்டை தீர்க்கதரிசனங்களாகிய சிலுவையும், மிருகமும், சரித்திரத்தின் முழுமையை வெளிப்படுத்தினது. இயேசு கிறிஸ்து சீக்கிரம் வந்து உலக சரித்திரத்தில் ஆதாமும், ஏவாளும் இழந்த ராஜ்ய மகிமையை நிலை நிறுத்துவார்.


161

உலகில் வாழும் அனைவரும் அவருடைய ராஜ்யத்தின் பிரஜைகளாக வேண்டும் என விரும்புகின்றார். அவர்கள் இயேசுவின் வருகைக்கு ஆயத்தமாக வேண்டும் எனவும் விரும்புகின்றார். அந்த மகிமையான நாளில் நாம் கிறிஸ்துவை ராஜாவாக, தேவனாக பார்ப்போம்.



1

மிருக முத்திரை பெறாமல் தவிர்ப்பது எஞ்ஞனம்?


2

அது பெரிய நாள், மகத்துவமான நாள், அணி வகுப்போடும் உயர்ந்த வாத்தியங்களோடும் விசேஷமாக கொண்டாடப்பட அழைக்கப்பட்ட ஒரு நாள் நேபுகாத்நேசர் ராஜா ஆச்சரியப்பட்டார்.


3

பரந்த பாபிலோன் இராஜ்யத்தில் உள்ள எல்லா சிறப்பானவர்களையும் அழைப்புவிடுத்து வரவழைத்தார். அவர் ஜீவிக்கிற வரையிலும் மறக்கமுடியாத எதிர்ப்போடு எதிர்நோக்கியிருந்த ஒரு நாள்.


4

சில நேரத்திற்கு முன்பு இராஜா ஒரு வினோதமான கனவு பெற்றிருந்தார். அவர் ஒரு பெரிய இரும்பு சிலையை பார்த்தார்.


5

அது என்ன என்பதை அவர் ஞாபகப்படுத்த முடியவில்லை. எனவே தானியேல் அந்த கனவின் அர்த்தம் மட்டுமல்ல. அந்த கனவையும் வெளிப்படுத்த வேண்டியதாயிற்று. நேபுகாத்நேசரால் எதையும் நினைக்க முடியவில்லை.


6

அவன் தலையாகிய பொன்னாக இருந்தாலும் அவனுடைய இராஜ்யம் இந்த உலகத்தில் ஒப்பற்றதாக நின்றது. இப்பொழுது ஒவ்வொருவருக்கும் எப்படி மகா பாபிலோன் உண்மையிலே இருந்தது. எப்படி அவன் பெரியவனாக உண்மையிலேயே இருந்தான் என்பதை நன்கு புலப்படக்கூடிய விதத்தில் விவரிக்கலாம்.


7

அவன் எதிர்ப்பவனாக மாறி அவனுடைய வேலையாட்களை எல்லாம் பொன்னான ஒரு சிலை செய்ய ஆணையிட்டான்.

18 □ நித்திய அடையாளம்



8

இந்த சிலை தலைமட்டுமல்ல. ஆனால், உடல் முழுவதும் பொன்னாலானது. இந்த அழகான மின்னுகிற மகத்துவமான சிலையை பார்த்த ஒவ்வொருவரும் ஆச்சரியப்பட்டனர். இது அவனுடைய இராஜ்யம் என்றும் நிலைத்திருக்கும் என்பதற்கு அடையாளமாக ஏற்படுத்தினது.


9

நேபுகாத்நேசரின் பொன்னான சிலைக்கு பிரதிஷ்டை செய்வதை காண ஆயிரக்கணக்கான மதிப்புக்குரியவர்கள் இராஜாவின் இராஜியத்தில் அந்த நாளில் கூடியிருந்தனர்.


10

அந்த பெரிய ஜனக்கூட்டத்திலே திடீரென ஒரு நிசப்தம் ஏற்பட்டது. எக்காளம் ஊதப்பட்டது மேலும் இராஜாவின் கட்டியக்காரன் சத்தமாக சொன்னான்.



11

(வசனம்: தானியேல் 3:4-6) தானியேல் 3:4-6 சகல ஜனங்களும், ஜாதிகளும், பாஷைக்காரருமானவர்களே உங்களுக்கு அறிவிக்கப்படுகிறது. என்னவென்றால்.



12

எக்காளம், நாகசுரம், கின்னரம், வீணை சுரமண்டலம், தம்புரு முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தை நீங்கள் கேட்கும்போது,



13

நீங்கள் தாழ விழுந்து ராஜாவாகிய நேபுகாத்நேச்சார் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்ளக்கடவீர்கள்.



14

அந்த ராஜா நேபுகாத்நேசர் நிறுத்தின.



15

எவனாகிலும் தாழ விழுந்து அதை பணிந்து கொள்ளாமற்போனால்.



16

அவன் அந்நேரமே எரிகிற அக்கினிச் சூளையின் நடுவிலே போடப்படுவான்.
தானியேல் 3:4-6.


17

வாத்தியம் இசைக்கப்பட்டது. எல்லா மக்களும் அந்த சிலையை விழுந்து வணங்கினார்கள். எல்லா மக்களும் வணங்கினர்.


18

அந்தத பரந்த ஜனக்கூட்டத்தார் பணிந்துக் கொண்டிருந்தவர்களின் மத்தியிலே அந்த நிலையை வணங்கி தொழுது தேவனுக்கு கீழ்படியாமல் இருக்க மறுத்த மூன்று எபிரேயர்கள் சாத்ராக், மேஷாக், ஆபத்நேகோ நின்றனர்.



19

(வீடியோ 3 வினாடிகள்) அவருடைய நேரடியான கட்டளையை மறுக்கிற தைரியசாலியாராகிலும் அதிக கோபத்திற்குள்ளாவார்கள். நேபுகாத்நேசர் எதிர்ப்பவர்களை அவர் முன் கொண்டுவரும்படி கட்டளையிட்டார்.



20

(வீடியோ 3 வினாடிகள்) மூன்று எபிரேயர்களை ராஜா பார்த்த போது அந்நேரமே அவர் உணர்ந்தார். அவர்கள் மகா ஞானமும் அநேக தாலந்துள்ள கொண்ட சிறந்த வாலிபர்கள்.



21

(வீடியோ 2 வினாடிகள்)
அவர் கொடுத்த அநேக வேலைகளை முன்பு விசுவாசமாகவும் திறமையாகவும் செய்துமுடித்தார்கள். அவர்களிடம் இரக்கம் கொஞ்சம் காட்டி மறுபடியும் ஒரு தருனம் கொடுக்க தீர்மானித்தார். அவர்களை ஒவ்வொருவராக அழைத்து ராஜா சொன்னார்.

18  நித்திய அடையாளம்



22

(வசனம்: தானியேல் 3:15)
இப்போதும் எக்காளம், நாதசுரம்... முதலான சகலவித கீதவாத்தியங்களின் சத்தத்தையும் நீங்கள் கேட்கும்போது.



23

தாழ விழுந்து நான் பண்ணி வைத்த சிலையைப் பணிந்து கொள்ள ஆயத்தமாயிருந்தால் நல்லது, பணிந்து கொள்ளாதிருந்தீர்களேயாகில்,




24

அந்நேரமே எரிகிற அக்கினி சூளையின் நடுவே போடப்படுவீர்கள். தானியேல் 3:15.
ஒருமுறை ராஜா கட்டளை பிறப்பித்துவிட்டால் அவர் அதை திரும்பறெ வேண்டும் அல்லது மக்கள் அனைவருக்கும் முன்பு வெட்கமடைய வேண்டும்.


25


சாத்சாக், மேஷாக், ஆபேத்நேகோ அந்த பெரிய அக்கினிச் சூளையின் அக்கினியை பார்த்தனர். ராஜாவின் எண்ணத்தை குறித்து எவ்வித சந்தேகமுமில்லை.


26

அவர்கள் என்ன செய்திருக்க வேண்டும்? நீங்களாக இருந்தால் என்ன செய்திருப்பீரகள்?அவர்கள் தேவனுடைய நேரடி கட்டளையை மறுக்க முடியுமா? அவர் அருமையாக காரண காரியங்கள் சொல்லி, இந்த சூழ்நிலையில் சிலையை பணிந்து கொள்வதுதான் உத்தமம் என்று கூறியிருக்கலாம். அவர்கள் அந்நிய நாட்டில் இருக்கின்றனர். ராஜாவுக்கு மரியாதை கொடுக்க வேண்டாமா என்றெல்லாம் பேசியிருக்கலாம் அல்லவா?


27

ஆனால் வேதம் சொல்லும் வசனம். அப்படிப்பட்ட எந்த எண்ணங்களும் அந்த மூன்று பேர் மனதில் வரவில்லை. அதற்கு மாறாக அவர்கள் சிறு பிராயத்திலிருந்து கற்றுக்கொண்ட தேவனுடைய.




28

(வசனம்: யாத்திராகமம் 20:4,5)
ஒரு சொருபத்தையாகிலும், யாதொரு விக்கிரத்தையாகிலும், நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.



29

நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம்... யாத்திராகமம் 20:4, 5
எவ்வித தயக்கமுமின்றி, சலனமின்றி அவர்களிடமிருந்து வந்த பதிலைப் பாருங்கள்.



30

(வசனம்: தானியேல் 3:16-18)
நேபுகாத்நேசாரே, இந்த காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை.



31

நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினி சூளைக்கும்.



32

நாங்கள் ஆராதிக்கிற தேவன் எங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அவர் எரிகிற அக்கினி சூளைக்கும்.



33

விடுவிக்காமற்போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை.



34

நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்து கொள்வதுமில்லை என்கிறது, ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள். தானியேல் 3:16-18.
மீதமுள்ள கதைகள் உற்சாகமானவை. ராஜா கடுங்கோபங் கொண்ட சூளையை சாதாரணமாக சூடாக்குவதைப் பார்க்கிலும் ஏழு மடங்கு அதிகமாய் சூடாக்க உத்தரவிட்டான்.


35

சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ கட்டி எரிகிற அக்கினிச் சூளையிலே போடுவதற்கு கட்டளை கொடுத்தான்.
சூளை மிகவும் சூடாக இருந்தபடியால் இந்த மூன்று வாலிபர்களை தூக்கிக் கொண்ட போ ன வாலிபர்கள் எரிந்து மரித்துப் போனார்கள்.


36

அப்பொழுது ராஜா தீவிரமாய் எழுந்திருந்து தன் மந்திரிமகளை நோக்கி, இதோ நாலு பேர் விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிறதை காண்கிறேன். நான்காம் ஆளின் சாயல் தேவ புத்திரனுக்கு ஒத்திருக்கிறது.


37

நம்முடைய தேவன் அக்கினிச் சூளையின் நடுவிலே சென்றார். மூன்று வாலிபர்களுக்காக அக்கினியிலே நடந்தார். நம் தேவன் பெரிய விடுதலையை தருவார்.


38

நேபுகாத்நேச்சர் மூன்று வாலிபர்களையும் வெளியே வரச் சொன்னார். ஒவ்வொருவரும் ஆச்சரியப்படும் வண்ணம், அந்த மூவருடைய தலைமயிர் கருகாமலும், அவர்களுடைய கால்கள் சேதப்படாமலும் அக்கினி மனம் அவர்களிடத்தில் வீசாமலும் இருந்தது.
அந்த பெரிய சிலையை ராஜா மறந்தார். மிகப்பெரிய செய்தியாக இந்த மூன்று வாலிபர்களின் சரித்திரம் இன்றும் நிலை நிற்கிறது.


39

இவர்களின் தேவன் அக்கினி சூளையிலிருந்து காப்பாற்றினர்.
ஆண்டவருடைய அன்பையும் கரிசனத்தையும் அறிய எவ்வளவு பெரிய சாட்சி. எதிர்காலத்தில் நமக்கும் கூட எப்படி யாரை தொழுது கொள்ள வேண்டும் என்ற கட்டளை வரலாம் அல்லது கட்டாயமாக்கப்படலாம். இந்த மூன்று வாலிபர்களுக்கும் வந்த மரண தண்டனைப் போலவே நமக்கும் வரலாம்.


40

ஆம். இப்போது எனக்கு அப்படிப்பட்ட பிரச்சினையும் இல்லை என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் வருங்காலங்களில் அப்படி தொழுது கொள்ளாதவர் மரணத்தை சந்திக்க வேண்டும்.


41

வேதத்தில் தீர்க்கதரிசனத்தின் அடிப்படையில், நமக்கு பெரிய சவால் இருக்கின்றது. கடைசியில் நமக்கு முன்பு இருக்கக்கூடிய சவால் தொழுகைத்தான்.



42

அந்த மூன்று வாலிபர்கள் போலவே கடைசி காலத்தில் வாழ்கின்ற அனைவருக்கும் அப்படிப்பட்ட ஒரு சவால் எதிர்படும்.
அந்த நேரத்தில் உங்களின் முடிவு நித்தியத்தையே முடிவு செய்யுமா?


43

பாபிலோனின் வல்லமையான ராஜா, நேபுகாத்நேசர் ஒரு பெரிய சிலையை தேவனுக்கு சமமாக தொழுதுகொள்ள சொன்னார். அடிப்படை சவால் தொழுகைத்தான்.
இரண்டாம் கற்பனை சிலை வணக்கத்தை தடுத்ததோடு மட்டுமின்றி மெய்யான தெய்வத்திற்கு நம் தொழுகையா? அல்லது பொய்யான தேவர்களுக்கு தொழுகையா?
அக்கினி சூளை ஏழு மடங்கு சூடுபடுத்தப்பட்டது. அதே போல கடைசி கால உபத்திரம் அதிகமாயிருக்கும்.
கீழ்படியாதவர்களுக்கு அரசாங்கமும் சபையையும் கொடுக்கக்கூடிய தண்டனை மரணம்.
மறுபடியும், கடைசி நாளில் தேவன் வெளிப்படுத்தல் என்ற புத்தகத்தில் எவ்வாறு சபையும், அரசாங்கமும் ஒன்று சேர ஆளும் என்று கூறுகின்றது. ஒரு மையப் பிரச்சினை மறுபடியும் தொழுகைதான்.
அப்படிப்பட்ட கட்டளைகள் கடைசி காலத்தில் கர்த்தருடைய பிள்ளைகளுக்கு ஒரு பெரிய சவாலாக இருக்கும்.




44

பூமியில் வாழும் சகலருக்கும் எச்சரிப்பின் தூது வெளிப்படுத்தல் புத்தகத்தில் காணப்படுகின்றது.
அந்த செய்தி மிகவும் முக்கியமானது என்று தேவன் கூறுகின்றார்.



45


(வெளிப்படுத்தல் 13:9)
காதுள்ளவனைவனோ அவன் கேட்கக் கடவன்.
இந்த அவசர செய்திக்கு நாம் செவிமடுக்க வேண்டும்.



46


(வெளிப்படுத்தல் 14:9, 10)
.... மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கி தன் நெற்றிலாவது தன் கையிலாவது

18  நித்திய அடையாளம்





47

அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய அவருடைய உக்கிரமாகிய மதுவை குடித்து,




48

தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவை குடித்து




49

பரிசுத்த தூதர்களுக்கு முன்பாகவும்,
ஆட்டுக்குட்டியானவருக்கு முன்பாகவும் அக்கினியினாலும் கந்தகத்தினாலும் வாதிக்கப்படுவான்.
வெளிப்படுத்தல் 14:9, 10.



50

ஒவ்வொருவரும் இதை கவனமாய் வாசித்து மிருகத்தின் முத்திரையிலிருந்து தப்பித்துக் கொள்ள வேண்டும்.



51

தீர்க்கதரிசனத்தின்படி, கடைசி காலத்தில் பூமியின் குடிகள் யாவரும் இரண்டு குழுவாக பிரிக்கப்படுவர். தேவனுடைய கற்பனைக்கு கீழ்படியும் ஒரு கூட்டம், மிருகத்தை தொழுது கொண்டு அடையாளம் பெறுகின்ற கூட்டம்.




52

மிருகத்தை தொழுது கொள்ளாத முத்திரையை பெற மறுக்கின்ற கூட்டத்தின் மீது உபத்திரவம் திணிக்கப்படும்.
நேபுகாத்நேசரிடம் மூன்று சகோதரர்கள் பெற்ற தண்டனையை நாமும் பெறுவோம்.




53

(வெளிப்படுத்தல் 13:16, 17)
அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள் இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் கைகளிலாவது, நெற்றிகளிலாவது



54

அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்து கொள்ளுகிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும், விற்கவும் கூடாதபடிக்கும் செய்தது.
வெளிப்படுத்தல் 13:16, 17.


55

மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்க மறுக்கின்றவர்களுக்கு மரண தண்டனை கொடுக்கப்படும்.



56

வசனம். வெளிப்படுத்தல் 13:15) இரண்டாம் மிருகத்தைக் குறித்து வெளிப்படுத்தல் புத்தகம் என்ன சொல்லுகிறதெனில், மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யத் தக்கதாகவும், மிருகத்தின் சொரூபத்திற்கு ஆவியை கொடுக்கும்படி சத்துவம் கொடுக்கப்பட்டது.




57

மிருகத்தின் சொரூபத்தை வணங்காத யாவரையும் கொலை செய்யத்தக்கதாக.
வெளிப்படுத்தல் 13:15.


58

மனிதன் கூறுவதென்னவெனில், நீ மிருகத்தை வணங்கவில்லையெனில், உன்னிடத்தில் எதையும் வாங்கவும் மாட்டோம். விற்கவும் மாட்டோம். இறுதியில் கொலை செய்வோம்.


59

ஆனால் தேவன் கூறுவதென்னவினல், நீ மிருகத்தை வணங்கவில்லையெனில், உன்னிடத்தில் எதையும் வாங்கவும் மாட்டோம். விற்கவும் மாட்டோம். இறுதியில் கொலை செய்வோம்.


60

பூமியில் வாழும் சகலரும் இதில் மிக முக்கிய முடிவு எடுக்க வேண்டும். துன்மார்க்கர் மீது தேவனின் தண்டனை கொடுக்கப்படும்.
வெளிப்படுத்தல் அதற்காக பதிலை தருகின்றது.

18 □ நித்திய அடையாளம்



61

(வசனம் வெளிப்படுத்தல். 15:1)
பின்பு வானத்திலே பெரிதும் ஆச்சரியமான வேறொரு அடையாளம் காணப்பட்டது.



62

கடைசியான ஏழு வாதைகளுடைய ஏழு தூதரைக் கண்டேன். அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது.
வெளிப்படுத்தல் 15:1.


63


ஏழு வாதைகளில் மூன்று மிருகத்தை தொழுது கொள்கின்றவர்கள் மீது பாய்கின்றது.
தேவனுடைய தீர்ப்பு எச்சரிப்பின்றி மக்கள் மீது பாயாது.


64

அது தேவனுடைய அன்பை காண்பிக்கின்றது.
தேவன் போதுமான எச்சரிப்பு கொடுக்காத வண்ணம், மிருகத்தை தொழுதுகொள்ளுகின்ற மக்கள் மீது ஏழு வாதைகளை ஊற்றமாட்டார்.


65

அவருடைய கடைசி எச்சரிப்பு தூதிற்கு பின், தீர்க்கதரிசனம் வெளிப்படும் இதன் மூலம்.
ஆயத்தில்லாமல் இப்பிரச்சினையை சந்திக்க முடியாது.
ஆகையால் இந்த மிருகத்தின் வல்லமை என்ன? அதை எப்படி தவிர்க்கலாம்? என பார்ப்போம்.



66

வெளிப்படுத்தல் புத்தகத்திலுள்ள தீர்க்கதரிசனத்தை படித்து மிருகத்தின் வல்லமையை புரிந்துகொள்ளலாம்.



67

(வசனம். வெளிப்படுத்தல் 13:1-8) சீஷனாகிய யோவான் எழுதுகிறதாவது: பின்பு நான் கடற்கரை மணலின் மேல் நின்றேன். அப்பொழுது சமுத்திரத்திலிருந்து ஒரு மிருகம் எழும்பி வரக் கண்டேன்.



68

அதற்கு ஏழு தலைகளும் பத்து கொம்புகளும் இருந்தன. அதின் கொம்புகளின் மேல் பத்து முடிகளும்,



69

அதின் தலைகளின் மேல் தூஷணமான நாமமும் இருந்தன.



70

நான் கண்ட மிருகம் சிறுத்தையைப் போலிருந்து அதின் கால்கள் கரடியின் கால்களைப் போலவும்



71

அதின் வாய் சிங்கத்தின் வாயைப் போலவும் இருந்தன.



72

வலுசர்ப்பமானது தன் பலத்தையும், தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்கு கொடுத்தது.
வெளிப்படுத்தல் 13:1, 2.



73

அதின் தலைகளிலொன்று சாவுக்கேதுவாய் காயப்பட்டிருக்கக் கண்டேன்.



74

ஆனாலும் சாவுக்கேதுவான அந்த காயம் சொஸ்தமாக்கப்பட்டது. பூமியிலுள்ள யாவரும் ஆச்சரியத்தோடே அந்த மிருகத்தை பின்பற்றி...



75

அந்த மிருகத்திற்கு அப்படிப்பட்ட அதிகாரங் கொடுத்த வலுசர்ப்பத்தை வணங்கினார்கள்.



76

மிருகத்திற்கு ஒப்பானவன் யார் என்று சொல்லி மிருகத்தை வணங்கினார்கள்.

18 □ நித்திய அடையாளம்



77

அதினோடே யுத்தம் பண்ணத்தக்கவன் யார்?



78

பெருமையானவைகளையும், தூஷணங்களையும் பேசும் வாய் அதற்கு கொடுக்கப்பட்டது.



79

நாற்பத்திரண்டு மாதம் யுத்தம் பண்ண அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.
வெளிப்படுத்தல் 13:3-5.



80

அது தேவனை தூஷிக்கும்படி தன் வாயைத் திறந்து அவருடைய நாமத்தையும்,



81

அவருடைய வாசஸ்தலத்தையும், பரலோகத்தில் வாசமாயிருக்கிறவர்களையும் தூஷித்து.



82

மேலும் பரிசுத்தவான்களோடே யுத்தம் பண்ணி அவர்களை ஜெயிக்கும்படிக்கு



83

ஒவ்வொரு கோத்திரத்தின் மேலும், பாஷைக்காரர் மேலும், ஜாதிகள் மேலும் அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.



84

உலகத் தோற்ற முதல் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியினுடைய



85

ஜீவ புஸ்தகத்தில் பேரெழுதப்பட்டிராத பூமியின் குடிகள் யாவரும் அதை வணங்குவார்கள்.
வெளிப்படுத்தல் 13:6-8.


86

இந்த தீர்க்கதரிசனத்தை ஒன்றன் பின் ஒன்றாக கவனிக்க வேண்டும். உலகத்தை எச்சரிக்க ஆண்டவர் மறுபடியும் அடையாளங்களை பயன்படுத்துகின்றார்.


87

மிருகம் எதைக் குறிக்கிறது.
தானியேல் 7ல் மிருகம் ராஜ்யம் அல்லது ஆட்சி அதிகாரம்.
இங்கு வெளிப்படுத்தல் புத்தகத்தில் மிகவும் அதிசயத்தக்க விதத்தில் தானியேலில் சொல்லப்பட்ட நான்கு மிருகங்களையும் இணைத்து பேசப்படுகின்றது. இது நாம் இப்பபொழுது பார்க்கும் மிருகத்தின் குணநலன்களை புரிந்துகொள்ள ஏதுவாயிருக்கும்.




88

சிங்கம் எதைக்குறிக்கிறது? பாபிலோன்.




89

கரடி - மேதிய பெர்ஷியர்கள்



90

சிறுத்தை எதைக் குறிக்கின்றது. கிரேகக சாம்ராஜ்யம்



91

பத்து தலையுள்ள பயங்கர மிருகம். அது ரோம சாம்ராஜ்யத்தை குறிக்கும்.

18  நித்திய அடையாளம்


92

வெளிப்படுத்தல் 13ம் அதிகாரத்தில் பேசப்படுகின்ற முத்திரை, நான்கு ராஜ்யங்களையும் தொடரும் இங்கு நாம் ஒரு ராஜ்யம் மேலே கூறிய நான்கு ராஜ்யங்களின் குணாதிசயங்களையும் ஒரே தீர்க்கதரிசனத்தில் வெளிப்படுத்தப்படுகின்றது. வேதமும், உலக சரித்திரமும் ஒத்துப்போகின்றது. மிருகத்தைக் குறித்து பேசும் போது யோவான் கூறுகின்றார்.



93

(வசனம் வெளிப்படுத்தல் 13:2)
... வலுசர்ப்பமானது தன் பலத்தையும், தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் கொடுத்தது. வலுசர்ப்பம் சாத்தானுக்கு வேதத்திலே ஒப்பிடப்படுகின்றது.



94

(வெளிப்படுத்தல் 12:7-9)
வானத்திலே யுத்தம் உண்டாயிற்று....



95

உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும் சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது...
வெளிப்படுத்தல் 12:7-9.


96

சாத்தான் வெளிப்படையாக யுத்தம் செய்வதில்லை. அவன் திரைக்குப் பின்னால், அவனுடைய தூதுவர்கள் மூலம், அதிகாரங்கள் மூலம், மக்கள் மூலம் ஏமாற்றுகிறான். வெளிப்படுத்தல் சாத்தானுக்கும், சபைக்கும் நடக்கும் யுத்தத்தைக் குறித்து விவரிக்கின்றது.



97

(வெளிப்படுத்தல் 12:3-5)
அப்பொழுது வேறொரு அடையாளம் வானத்திலே காணப்பட்டது. சிவப்பான பெரிய வலுசர்ப்பம்.



98

ஏழு தலைகளையும், பத்து கொம்புகளையும், தன் தலைகளின் மேல் ஏழு முடிகளையுமுடைய....



99

..... அந்த ஸ்திரி பிள்ளை பெற்றவுடனே அவளுடைய பிள்ளையை பட்சித்துப் போடும்படிக்கு,



100

அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப் போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன் நின்றது.



101

சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும் ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்.



102

அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும், அவருடைய சிங்காசனத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது. வெளிப்படுத்தல் 12:3-5.


103

அந்த ஆண்பிள்ளை யார்?
அவர் இயேசுகிறிஸ்து.
திரைக்குப் பின்னால் சாத்தான் இயேசு கிறிஸ்துவை கொல்வதற்கு முயற்சித்தான். இயேசு பிறந்த நாட்டின் மூலம் பிசாசு திட்டத்தை தீட்டினான்.



104

உலக சரித்திரத்தைப் பார்த்தால் அஞ்ஞான ரோம ராஜ்யத்தில், சீசரின் ஆட்சிக் காலத்தில் இயேசுகிறிஸ்து பிறந்தார்.


105

ஏரோது பெத்லேகமிலே இரண்டு வயதுக்குட்பட்ட ஆண்பிள்ளைகளை கொலை செய்ய உத்தரவு பிறப்பித்தான்.


106

ரோம ஆளுநர் போந்தி பிலாத்து இயேசுவின் மரணத்திற்கு காரணமாயிருந்தான்.

18 □ நித்திய அடையாளம்


107


ரோம போர்ச் சேவகர்கள் இயேசுவை சிலுவையில் அறைந்தார்கள். ரோம முத்திரை கல்லறை முன் போடப்பட்டது. அஞ்ஞான ரோம ராஜ்யத்தின் மூலம் சாத்தான் இயேசுவை அழிக்க வகை தேடினான்.


108

தீர்க்கதரிசனத்தின் நிறைவேறுதலாக கிறிஸ்து உயிர்த்தெழுந்தார், பரலோகத்திற்கு பரமேறினார். இது உங்கள் விசுவாசத்தை பெலப்படுத்துகின்றதா?


109

தீர்க்கதரிசனம் மேலும் இந்த வல்லமை அஞ்ஞான ரோம் என்று வெளிப்படுத்துகிறது.



110

(வசனம் வெளிப்படுத்தல் 13:2)
.... வலுசர்ப்பமானது தன் பலத்தையும் தன் சிங்காசனத்தையும் மிகுந்த அதிகாரத்தையும் அதற்கு கொடுத்தது.
அஞ்ஞான ரோம் இந்த தீர்க்கதரிசனத்தை நிறைவேற்றினதா? அப்படியானால் யாருக்கு அது கொடுக்கப்பட்டது?


111

அநேக நூற்றாண்டுகளுக்கு ரோம சபை பயன்படுத்தின ஒரு பத்திரத்தின் கலைப்பு. கான்ஸ்சான்டின் நிதி ரோம நகரின் உரிமைகளின் அத்தாட்சியாக இந்த பத்திரம் பிற்பாடு ஒரு போலியானதாக நிறுவப்பட்டது. மேற்கு ரோம் கள உரிமையானது சபைக்கு அரசியலையும் தெய்வீகமாகவும் கொடுக்கப்பட்டது.



112

300 கி.பி.யில் பைசான்டியத்திலே தலைமையிடத்துக்கு கான்ஸ்டான்டின் சென்று அந்த நகரின் பெயரை மாற்றி அவனுடைய மதிப்பிற்காக கான்ஸ்டான்டின் நோபிள் என்று பெயர் சூட்டினார்கள்.


113

கொனஸ்தாந்து ராயன் முடிவில் தன் ஆட்சிபீடத்தை ரோமப் பாதிரியாரிடம் கொடுத்தான். ரோமப் பாதிரியார் சபையின் தலைவராகவும், அரியாசனத்தின் மேல் அரசராகவும் செயல்பட்டார். இறுதியாக சபை, அரசாங்கம் மத்தியில் ஐக்கியம் உருவாகி, சபை தேசத்தின் மீது ஆதிக்கம் செலுத்தியது.


114

பழைய ரோமப்பேரரசின் ஆட்சிப் பீடமாயிருந்த ரோம் நகரத்தின் மத்தியில் வாட்டிகன் நகரம் அமைந்துள்ளது.


115

ரோம சபையானது இன்றைக்கும் ஆன்மீக வல்லமையாக மட்டுமல்ல, அரசர்க வல்லமையாகவும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. ஏறக்குறைய உலகின் எல்லா தேசங்களும் தூதுவர்களை வாட்டிகனுக்கு அனுப்புகிறது.


116

தீர்க்கதரிசனமானது ஒரு ஸ்தாபனத்தை அல்லது ஒரு இறையியல் அமைப்பைப் பற்றிப் பேசுகிறது என்பதை மனதில் கொள்வது மிக முக்கியமானது. இது தனிநபர்களைக் குறிப்பிடுவது இல்லை.


117

உண்மையாய் தேவனைத் தொழுது கொள்ளும் திரளான ஜனங்கள் இருந்தாலும், இன்றைக்கு நீங்கள் வேதாக தீர்க்கதரிசனத்திலிருந்து கற்றுவருகிற இந்த வல்லமையைப் பற்றி அவர்கள் அறியாமல் இருக்கிறார்கள்.


118

வெளிப்படுத்தல் 13ல் மிருகவல்லமையை அடையாளங்காணும் குறிப்புகளைக் கவனமாக ஆராய்ச்சி செய்வதின் மூலம், அது நாம் முன்னமே படித்த தானியேல் 7ல் சின்னக்கொம்பாகக் காட்டப்பட்ட அதே வல்லமைதான் என்பது தெளிவாக விளங்கும்.



119

இந்த மிருக வல்லமை ஒரு விசேஷமான அடையாளத்தைக் கொண்டிருக்கும். உலகிலுள்ள ஒவ்வொருவர் மீதும் அதை வலுக்கட்டாயமாய் திணிக்க முயற்சிக்கும் என்று தீர்க்கதரிசி யோவான் கூறுகிறார்.

18 □ நித்திய அடையாளம்



120

(வசனம் வெளிப்படுத்தல் 13:16, 17)
அது சிறியோர், பெரியோர், ஐசுவரியவான்கள், தரித்திரர், சுயாதீனர், அடிமைகள், இவர்கள் யாவரும் தங்கள் வலதுகைகளிலாவது, நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும்.



121

அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக்கொள்கிறவன் தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கு செய்தது. வெளிப்படுத்தல் 13:16, 17.


122

தேவனுடைய வார்த்தையின்படி, இந்த முத்திரை தேவனுடைய அரசாங்கத்திற்கு விரோதமான அவிசுவாசம் அல்லது கலகத்தின் அடையாளமாக இருக்கும். மிருகத்தின் முத்திரையைத் தரிக்காமல் இருக்கும் மற்றொரு குழுவையும் வேதம் தெளிவாக விளக்குகிறது.



123

(வசனம் வெளிப்படுத்தல் 14:12)
தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்கிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும். வெளிப்படுத்தல் 14:12.



124

நீங்கள் தவறாக புரிந்துகொள்ளக்கூடாது, இந்த உலகிற்கு வருகிற மிகப்பெரிய பிரச்சினை தேவனுடைய கற்பனைகளுக்குக் கீழ்படிதல் என்பதை மையமாகக் கொண்டிருக்கும். ஒரு மக்கள் கூட்டம் மிருகத்தின் முத்திரையைத் தரிப்பார்கள். அதே நேரத்தில் மற்றவர்கள் அவருடைய எல்லாக் கற்பனைகளைக் கைக்கொள்வதின் மூலம் தேவனுக்கு உண்மையாயும், விசுவாசமாயும் இருப்பார்கள்.



125

தேவஜனங்களும் ஒரு முத்திரையைத் தரிப்பார்கள். ஆனால் தேவனுடைய அடையாளம், தேவனுடைய முத்திரையாக இருக்கும்.


126

அது அவருடைய பின்னடியார்களின் நெற்றிகளில் தரிப்பிக்கப்படும்.



127

(வெளிப்படுத்தல் 7:2,3)
ஜீவனுள்ள தேவனுடைய முத்திரைக் கோலையுடைய வேறொரு தூதன் சூரியன் உதிக்குந் திசையிலிருந்து ஏறிவரக் கண்டேன்.



128

அவன் பூமியையும், சமுத்திரத்தையும், சேதப்படுத்துகிறதற்கு அதிகாரம் பெற்ற அந்த நான்கு தூதரையும் நோக்கி:



129

.... பூமியையும், சமுத்திரத்தையும், மரங்களையும் சேதப்படுத்தாதிருங்கள் என்று மகா சத்தமிட்டுக் கூப்பிட்டான்.



130

நாம் நமது தேவனுடைய ஊழியக்காரரின் நெற்றிகளில் முத்திரைபோட்டுத் தீருமளவும் ....
வெளிப்படுத்தல் 7:2,3.



131

எனக்கு அந்த முத்திரை வேண்டும். உங்களுக்கு வேண்டாமா? அதைவிட மிக முக்கியமானது ஒன்றுமில்லை. உலக சரித்திரத்தின் கடைசிப் போராட்டம் தேவனுடைய முத்திரை அல்லது மிருகத்தின் முத்திரை என்பதன் மேல் உள்ளது. இது தேவனுடைய அடையாளத்திற்கும் மற்றும் ஒரு போலியான அடையாளத்திற்கும் சம்மந்தப்பட்டது. நாம் தேவனுடைய முத்திரையைக் கண்டுபிடிக்கும் போது, மிருக வல்லமை ஊக்குவிக்கும் போலியான முத்திரையைக் கண்டுபிடிப்பது எளிதாக இருக்கும்.

18  நித்திய அடையாளம்



132

(வசனம் எசேக்கியல் 20:12)
.... எனக்கும் அவர்களுக்கும் அடையாளமாய் இருப்பதற்கான என் ஓய்வுநாட்களையும் அவர்களுக்குக் கட்டளையிட்டேன். ....
எசேக்கியேல் 20:12.




133

(வசனம் யாத்திராகமம் 31:13)
மறுபடியும், தேவன் சொல்கிறார், நீ இஸ்ரவேல் புத்திரரை நோக்கி, நீங்கள் என் ஓய்வுநாட்களை ஆசரிக்க வேண்டும்.



134

இது உங்கள் தலைமுறைதோறும் எனக்கும் உங்களுக்கும் அடையாளமாயிருக்கும்.



135

உங்களை பரிசுத்தப்படுத்துகிற கர்த்தர் நான் என்பதை நீங்கள் அறியும்படிக்கு ....
யாத்திராகமம் 31:13.



136

ஓய்வு நாள் அவரது அடையாளம் அல்லது அதிகாரத்தின் முத்திரை என்று தேவன் சொல்கிறார். தனது அதிகாரத்தின் முத்திரையைப் பற்றி மிருகவல்லமை கூறுவது என்ன?



137

பின்வரும் மேற்கோள் ஒரு கத்தோலிக்க போதனை நூலிலிருந்து எடுக்கப்பட்டது. கேள்வி: பண்டிகை மற்றும் பரிசுத்த நாட்களைக் கட்டளையிட சபைக்கு வல்லமை உண்டு என்பதை நீங்கள் எப்படி நிரூபிப்பீர்கள்?




138

பதில்: ஓய்வுநாளை ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றிய அந்த முக்கிய செயலே போதுமானது. அதை புரட்டாஸ்தந்தர்களும் அனுமதிக்கின்றனர். ஆகையால் அவர்கள் ஆதரவாக




139

ஞாயிறு ஆசரிப்பை கண்டிப்பாக கடைபிடித்து மேலும் அந்த ஒரே சபையின் பிறப்பித்த மற்ற பல பண்டிகைகளை உடைப்பதினால் அவர்களுக்குள் முரண்படுதல்.




140

கேள்வி: பண்டிகைகளுக்கான உத்தரவுகளை நிறுவ சபைக்கு வல்லமை உண்டு என்பதை நிருபிப்பதற்கு வேறு வழி உங்களிடம் உண்டா?



141

பதில் : அப்படிப்பட்ட வல்லமை பெறாமல் இருந்திருக்குமானால், அவள் ஏழாம் நாள் சனிக்கிழமையின் அனுசரிப்பை வாரத்தின் முதல் நாள்




142

ஞாயிறு அனுசரிப்பாக மாற்றி இருக்க முடியாது. அந்த மாற்றதிர்க்கு பரிசுத்த வேதத்தில் அடிப்படை கிடையாது. அன் அப்ரிட்க்மென்ட் ஆப் த கிறிஸ்டியன் டாக்ட்ரின், ஹென்றி டுபர்வில்லெ, பக்கம் 58.




143

ஞாயிறு ரோமன் சபைகளின் மார்க்க அதிகாரத்தின் முத்திரை அவளுடைய சொந்த சாட்சியின் மூலம் அவள் ஆராதனையின் நாளை சனிக்கிழமையில் இருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றினதை அவள் உடனே ஏற்றுக்கொள்கிறாள்.


144

இந்த செய்கை அவளுடைய சபையின் வல்லமை மற்றும் அதிகாரம் என்று அவள் கூறுகிறாள். (லெட்டர் ப்ரம் சி.எ.ஃப். தாமஸ், சான்சலர் டு கார்டினல் கிப்பன்ஸ், அக்டோர் 28, 1895)

ஏன் தேவனுடைய நாளை இழிவுபடுத்தி அதைவிட்டுவிட்டது என்பதை காட்ட ரோமன் சபை புரட்டாஸ்டாண்டுகளுக்கு சவால் விடுகிறது.



145


(வீடியோ பிரிவு 2)

ஒரு நாளை கடைபிடிக்க நிறுவகிக்கப்பட்ட வேத ஓய்வுநாள்.



146

(வீடியோ 5 வினாடிகள்)
பழக்கம் பாரம்பரியம் மற்றும் ரோமசபை



147

(வசனம் தானியேல் 7:25)
இந்த மிருகத்தின் வல்லமை காலங்களையும் பிரமாணங்களையும் மாற்ற நினைப்பான் என்று தானியேல் வெளிப்படுத்தியுள்ளான்.
தானியேல் 7:25.



148

(வசனம்: தானியேல் 8:12)இந்த வல்லமை சத்தியத்தை தரையிலே தள்ளிற்று. அது கிரியை செய்து அனுகூலமடைந்தது.
தானியேல் 8:12.



149

எல்லாரும் அந்த மிருகத்தின் முத்திரையை பெற சாத்தான் வற்புறத்த முயற்சிப்பான் என்று யோவான் வெளிப்படுத்தியுள்ளான்.



150

(வசனம்: வெளிப்படுத்தல் 13:16, 17)
அது சிறியோர், பெரியோர், ஐசுவரியான்கள், இவர்கள் யாவரும் தங்கள் தங்கள் வலது கையிலாவது நெற்றிகளிலாவது ஒரு முத்திரையைப் பெறும்படிக்கும்.



151

அந்த மிருகத்தின் முத்திரையையாவது அதின் நாமத்தையாவது அதின் நாமத்தின் இலக்கத்தையாவது தரித்துக் கொள்கிறவன். தவிர வேறொருவனும் கொள்ளவும் விற்கவுங் கூடாதபடிக்கு செய்தது.
வெளிப்படுத்தல் 13:16, 17.


152

இந்த எல்லா தீர்க்கதரிசனத்தையும் நிறைவேற்ற இந்த வல்லமைக்கு கடைசி நாட்களில் எல்லார் மேலும் அதன் அங்கீகரிக்கப்பட்ட முத்திரையை அமுல் செய்ய அது சமூக அரசை பயன்படுத்த முயற்சிக்கும். எப்படி தேவன் இந்த வல்லமையை அடையாளப்படுத்துகிறார் என்று கவனியுங்கள்.



153

(வசனம்: வெளிப்படுத்தல் 13:18)
இதிலே ஞானம் விளங்கும் அந்த மிருகத்தின் இலக்கத்தைப் புத்தி யுடையவன் கணக்குப் பார்க்கக்கடவன், அது மனுஷனுடைய இலக்கமாயிருக்கிறது.



154

அதனுடைய இலக்கம் அறுநூற்று அறுபத்தாறு. வெளிப்படுத்தல் 13:18.


155

அந்த மிருகத்தின் இலக்கம் என்றால் என்ன என்று நீங்கள் ஒரு வேளை கேட்கலாம். அநேக ஜனங்கள் அந்த கேள்வியை கேட்டிருக்கின்றனர்.



156

நாம் கத்தோலிக்க சபை பதிலளிக்க. லத்தின் தான் கத்தோலிக்க சபையின் அலுவலக மொழியாகும். கத்தோலிக்க மதத்தில் போய் தான் சபை முழுவதற்கும் தலைவர்.




157

போப்புகளின் ஒரு பட்டம் விக்காரி பிலி டய் என்று சொல்லப்படும் அதன் அர்த்தம். தேவகுமாரனுடைய பிரதிநிதி.



158

சபை, ஒரு காணக்கூடிய சமுதாயம் கண்டிப்பாக காணக்கூடிய தலைவர் இருக்க வேண்டும் என்று கத்தோலிக்கர்கள் சொல்கிறார்கள்.



159

(வீடியோ 9 வினாடிகள்) லத்தீன் எழுத்துகளின் எண்ணிக்கையின் மதிப்புகளை எண்ணி கணக்கிடுவதை நீங்கள் பார்க்கலாம் ரோமன் சபை ஒரு வெளி 13 இன் மிருக வல்லமை என்று இங்கே தெளிவான காணக்கூடிய குறிப்பு உள்ளது.



160

நாம் கர்த்தருடைய வார்த்தையின் தீர்க்கதரிசனங்கள் படிப்பதன்மூலம் எள்ள முடிவு செய்கிறோம்? நேரம் வருகிறது. அது வெகு தூரம் அல்ல, அப்போது எல்லாரும் வாரத்தின் முதலாம் நாளை கடைபிடிக்க நேரடியாக தேவனுடைய கற்பனை மீற செய்யும்.



161

தற்போதைய ஒரு நேரடியான தலைப்பு அப்போஸ்தல கடிதம் பரிசுத்த பிதாவாகிய டொமினி, ஜான்பால் 2 பிசப்புகளுக்கும், குருமார்கள் மற்றும் சபையின் விசுவாசமுள்ளவர்களுக்கும், தேவனுடைய பரிசுத்த நாளை அனுசரிக்கின்ற, ஞாயிறு-ஓய்வின் நேரமாகவும் ஆராதனைக்கு நேரமாகவும் அனுசரிக்க வலியுறுத்தி அச்சிட எல்லா சபை தலைவருக்கும் அனுப்பப்பட்டது. வேத ஓய்வை விட ஞாயிறு ஆசரிப்பு சட்டத்தை அவர்களுக்கென வகுத்து அந்த கடிதம் என்பதாக இருக்கக்கூடுமா.




162

இது உண்மையாக்க அவர்கள் சமூக சட்டமியற்றுபவரோடு வேலை செய்து அரசாங்க சட்டமாக்க முயல்வார்கள் என்று சொல்லப்படுகின்றது. அது கேட்பதற்கு நன்றாக இருப்பது போலில்லையா? தீர்க்கதரிசனம் சொன்னதுபோலவே.



163

அநேக ஜனங்கள் கேட்கிற கேள்வியாவது, யாராவது ஒருவர் இப்பொழுது மிருகத்தின் முத்திரை பெற்றுள்ளரா? இல்லை. ஒரு நபர்கூட இன்னமும் மிருகத்தின் முத்திரையை பெறவில்லை. தேவன் உண்மையான பின்னடியார்களை எல்லா சபையிலும் வைத்துள்ளார்.




164

மிருகத்தின் முத்திரை சமூக சட்டத்தினால் அமுலாக்கப்படும்போது ஒவ்வொரு நபரும் அப்பொழுது தேவனோடு தொடர்பு கொண்டு தேவனுடைய கற்பனை கடிகாரம்படி ஓய்வுநாளை கடைபிடிப்பர். அல்லது மிருகத்திற்கு தொடர்பு கொண்டு மனிதனுடைய அதிகாரத்தோடு அதற்கு பதிலாக மற்றொரு நாளை கடைப்பிடிப்பர். அப்பொழுதுதான் எவரும் மிருகத்தின் முத்திரையை பெறுவர். இந்த கடினமான சோதனை எல்லா ஆத்துமாவுக்கு வரும். தேவனுக்கு கீழ்படிவதா அல்லது மனிதனுக்கு கீழ்படிவதா?



165

(வசனம்: ரோமர் 6:16)
பவுல் எழுதுகிறார். எதற்கு கீழ்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக் கொடுத்திருக்கிறீர்களோ.



166

யாருக்கு கீழ்படிகிறீர்களோ நீங்கள் அதற்கு ஒருமுறை அடிமையாகயிருந்தீர்கள். மரணத்துக்கேதுவான பாவத்துக்கானாலும் நீதிக்கேதுவான கீழ்படிதலுக்கானாலும்.



167

ஆண்டவரை மதித்து, அவர் முத்திரையை பெற்றவர்களுக்கு ஒரு நற்செய்தி உண்டு.
ரோமர் 6:16.



168


பூமியில் வசிப்பவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு மிக பயபக்தியான நேரம் சீக்கிரம் நிகழும். மிருகத்தின் முத்திரையை பெறாத ஒருவரும் வாங்கவும் அல்லது விற்கவும் முடியாது.


169

மரண ஆணை பிறக்கும் முன் துற்பிரவேசம் வரும். யாருக்கு? மிருகத்தின் முத்திரையை பெறுபவர்களுக்கு ஏழு கடைசி வாதைகள்.



170

ஆண்டவரை மதித்து, அவர் முத்திரையை பெற்றவர்களுக்கு ஒரு நற்செய்தி உண்டு.




171

(வசனம்: ஏசாயா 33:16)
அவன் அப்பம் அவனுக்கு கொடுக்கப்படும் அவன் தண்ணீர் அவனுக்கு நிச்சயமாய் கிடைக்கும்.
ஏசாயா 33:16.




172

(வசனம்: சங்கீதம் 91:5-8)
பூமியிலே வாதை ஊற்றப்படுவதை குறித்து சொல்லும்போது இருளில் உண்டாகும் பயங்கரத்திற்கும் மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்திற்கும் பயப்படாதிருப்பாய்.



173

இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்திற்கும்.




174

ஆயிரம் பேர் உன் பக்கத்திலும், பதினாயிரம் பேர் உன் வலது புறத்திலும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது.



175

ஆயிரம் பேர் உன் பக்கத்திலும், பதினாயிரம் பேர் உன் வலது புறத்திலும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது. சங்கீதம் 91:5-8. மேலும் இதை எண்ணி ஆச்சரியப்பட்டால் வேதம் எண்ண நடக்கும் என்பதை கூறுவதைக் கேளுங்கள்.




176

(சங்கீதம் 91:9-11)
எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய்.



177

(சங்கீதம் 91:9-11)
எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய். பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அனுகாது.




178

உன் வழிகளலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.
சங்கீதம் 91:9-11.
அவரைப் பின்பற்றத் தெரிந்து கொள்பவர்களுக்கு தேவன் அதிசயமான வாக்குத்தத்தம் கொடுக்கிறார்.




179

(தானியேல் 12:1)
உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்.



180

(தானியேல் 12:1)
யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்கால மட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்:



181

அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாகக் காணப்படுகிறள உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்.
தானியேல் 12:1.
மிருகத்தின் மேல் ஜெயங்கொண்டோரைப் பற்றிய ஒரு தரிசனத்தை யோவான் கண்டார்.




182

(வசனம் வெளிப்படுத்தல் 15:2)
அன்றியும், அக்கினி கலந்த கண்ணாடிக் கடல் போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின், இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள்.



183

அன்றியும், அக்கினி கலந்த கண்ணாடிக் கடல் போன்ற ஒரு கடலையும், மிருகத்திற்கும் அதின் சொரூபத்திற்கும் அதின் முத்திரைக்கும் அதின் நாமத்தின், இலக்கத்திற்கும் உள்ளாகாமல் ஜெயங்கொண்டவர்கள்.



184

தேவ சுரமண்டலங்களைப் பிடித்துக் கொண்டு அந்தக் கண்ணாடிக் கடலருகே நிற்கிறதையும் வெளிப்படுத்தல் 15:2.
இப்பொழுதும், போலியான ஆன்மீக அமைப்புகளை விட்டு வெளியேறி, தம்முடைய உண்மையையை முற்றிலும் தம்மை பின்பற்றும்படி தேவன் வேண்டிக்கேட்கிறார்.



185

(வசனம். வெளிப்படுத்தல் 18:4) என் ஜனங்களே, நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும் .... அவளைவிட்டு

18  நித்திய அடையாளம்



186

அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு, .... வெளிப்படுத்தல் 18:4.


187

தேவனைப் பின்பற்றத் தெரிவு செய்வதென்பது விலைமதிப்பிட முடியாத காரியம். அந்த மூன்று நிச்சயமான மரணத் தருவாயிலும், யோசனை செய்வதில் தாமதம் செய்யாமல், தேவனுக்காக நினைவு கூர்வீர்களா?


188

தேவன் பரிசுத்த ஆவியானவர் மூலமாக இக்கூட்டங்களில் உங்களுடனே பேசிக்கொண்டிருக்கிறார். மாண்டு கொண்டிருக்கும் இவ்வுலகிற்கு அவருடைய வருகைக்கு முன்பாக தன் கடைசி அழைப்பை கொடுக்கின்றார். தன்னை வாழ்நாள் முழுவதும் பின்பற்றின பிள்ளைகளை அவருடைய இல்லத்திற்கு அழைத்து செல்ல மறுபடியும் வருகின்றார். நீங்களும் கூட அந்த மூன்று எபிரேய வாலிபர்களைப்போல தேவனுக்காக இந்த இரவில் சாட்சியாய் நிற்பீர்களா?

# 19  இழக்கமுடியாத மூலதனம்.



1

எப்படி உங்கள் பணம் பாதுகாப்பானது என்று உறுதிபடுத்த முடியும்?


2


இயேசு பணத்தைப்பற்றிப் பெரிதாக பேசியுள்ளார். முப்பத்தெட்டு உவமைகளில் பதினாறு உவமைகள் எப்படி பணத்தையும் உடமையும் கையாளுவது என்பதை பற்றியதாகும். நாறு சுவிசேஷங்களில் மத்தேயு, மாற்கு, லூக்கா மற்றும் யோவானில் பத்து வசனங்களுக்கு ஒன்றும் அல்லது 288 வசனங்கள் எல்லாம் நேரடியாக பணத்தையும் நம்முடைய உடமைகளையும் பற்றியதாகும். ஏறக்குறைய 500 வசனங்கள் வேதத்தில் ஜெபத்தைப்பற்றி மற்ற 500 வசனங்கள் விசுவாசத்தைப் பற்றியும், ஆனால் 2,000 வசனங்கள் பணத்தையும் உடமைகளையும் பற்றியது. ஆச்சரியம். தேவனுக்குப் பணம் ஒரு முக்கியமாக பகுதி நாம் அதைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம் என்று நினைக்கிறார். நம்முடைய தேவைகளை சந்திக்க நாம் அவரை நம்ப வேண்டும்.


3

அநேக ஜனங்கள் அதிகமான நேரத்தைப் பணப்பிரச்சனையைப் பற்றியே செலவிடுகின்றனர். எப்படி தங்களுக்குத் தேவையான பொருட்களுக்கு பணம் செலுத்துவது என்பதை பற்றி கவலைப்படுகின்றனர். அவர்கள் எதிர்காலத்தை பற்றியும் கவலைப்படுகின்றனர்.


4

ஓய்வுபெறும் போது ஜீவியத்துக்குப் போதுமானது இருக்கின்றதா? அவர்களுக்கு அதிய வயதானால் அல்லது அதிக சுகவீனமானால் வேலை செய்ய முடியாவிட்டால் என்ன நடக்கும்? மக்கள் உறுதியான நிலையானதை தேடுகிறார்கள். ஆனால், எங்கே இன்றைக்கும் எதிர்காலத்துக்கும் பாதுகாப்பை பெற முடியும்?


5

தற்காலத்தைக் குறித்தும் எதிர்காலத்தைக் குறித்தும் நீங்களும் நானும் கவலைப்படவேண்டாம் என்று தேவன் வலியுறுத்துகிறார். நாம் தேவனை நம்பினால் கவலைப்பட வேண்டியது இல்லை.

19  இழக்கமுடியாத மூலதனம்.

# 19 □ இழக்கமுடியாத மூலதனம்.



6

(வசனம்: மத்தேயு 6:31, 32)
ஆகையால், என்னத்தை உண்போம், என்னத்தைக் குடிப்போம், என்னத்தை உடுப்போம் என்று கவலைப்படாதிருங்கள்.



7


... இவைகளெல்லாம் உங்களுக்கு வேண்டியவைகள் என்று உங்கள் பரமபிதா அறிந்திருக்கிறார்.
மத்தேயு 6:31, 32.
நமக்கு தேவனுடைய நித்திய பாதுகாப்பின் திட்டத்தை சற்று பார்ப்போம்.


8


இது முன்பு ஏதேன் தோட்டத்திலேயே ஆரம்பமானது.


9

கிரகமாகிய பூமி சிருஷ்டிகரின் காரங்களிலிருந்து உன்னதமான, நேர்த்தியான, மகிமையாதாக வர்ணிக்க முடியாதவாறு வந்தது.


10

அந்த எஜமானின் ஓவியம் ஒவ்வொரு திருப்பத்திலும் கண்ணை கவருகிறது. மகத்துவமான சூரிய உதயம் சூரிய மறைவினால் வெளிப்பட்டது ஈடு இணையற்றதாகிறது.


11

அமைதியான ஏரிகள் மலைகளின் இடையே அமைந்திருக்கின்றன.


12

அலங்காரமான மலர்களின் ஒவ்வொரு வர்ணமும் சிந்தையை கவர்கின்றனது.


13

மரங்கள் எல்லா வகையான சுவையான பழங்களையும் கொடுக்கின்றன.

# 19 ▯ இழக்கமுடியாத மூலதனம்.


14

பாடும் பறவைகள் இனிமையான பாடல்களால் காற்றை நிரப்பின. மிருகங்கள் புல்வெளியில் பயம் இல்லாமல் விளையாடின. ஓடைகளும் ஏரிகளும் அழகான வர்ண மீன்களால் உயிர்பெற்றிருந்தன. ஒருமுனை முதல் மறுமுனை வரை எவ்வளவு அருமையான சொர்க்கம்.


15

எவ்வளவாய் ஆதாமும் ஏவாளும் தேவன் அவர்களுக்கு படைத்த நேர்த்தியான உலகத்தில் சந்தோஷமாக இருந்திருக்க வேண்டும்.




16

(வசனம்: ஆதியாகமம் 2:8)
தேவனாகிய கர்த்தர் கிழக்கே ஏதேன் என்னும் ஒரு தோட்டத்தை உண்டாக்கி தாம் உருவாக்கின மனுஷனை அதிலே வைத்தார்.
ஆதியாகமம் 2:8.


17

ஆச்சரியமான மற்றும் அழகான உலகத்தின் மத்தியிலே, ஒரு இடத்தில் தேவன் தோட்டமாகிய வீட்டை ஆதாம் ஏவாளுக்கு அமைத்தார்.


18

பூமியில் அதிக வசதியான வீடும் கூட தோட்டமாகிய இந்த வீட்டிற்கு ஒப்பிட முடியாது. அருமையான இல்லத்தை தேவன் அவர்களுக்கு கொடுத்தது மட்டுமின்றி அவர்களுக்கு ஆச்சரியமான உணவையும் கொடுத்தார்.



19

(வசனம்: ஆதியாகமம் 1:29)
... பூமியின்மேல் எங்கும் விதை தரும் சகலவிதப் பூண்டுகளையும் நான் உங்களுக்குக் கொடுத்தேன்.



20

விதை தரும் கனிமரங்களாகிய சகல விருட்சங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன். அவைகள் உங்களுக்கு ஆகாரமாயிருக்கக்கடவது.
ஆதியாகமம் 1:29.

# 19 ▯ இழக்கமுடியாத மூலதனம்.



21

ஆதாமும், ஏவாளும் வாடகை செலுத்த வேண்டியதில்லை. கவலைப்படுவதற்கு வரிகளும் இல்லை. பூட்டுகளும், சாவிகளும் இல்லை. வழிப்பறிக்காரர்களும், திருடர்களும் இல்லை, மருத்துவமனைகளும், மருந்துக் கடைகளும் இல்லை.


22

அவர்கள் பூரண ஆரோக்கியத்தையும், முடிவில்லா இளமையையும், ஒருவருக்கொருவர் அழியாத அர்ப்பணிப்பையும் தேவனுக்கென்று அளவற்ற அன்பையும் கொண்டு மகிழ்ந்திருந்தனர். இந்த ஆசீர்வாதங்களை அவர்கள் பெற தேவன் விரும்பினார். அதனால் அவர் சொன்னதாவது.



23

(வசனம்: ஆதியாகமம் 1:28)
... நீங்கள் பலுகிப்பெருகி, பூமியை நிரப்பி, அதைக் கீழ்ப்படுத்தி ... ஆண்டு கொள்ளுங்கள்...
ஆதியாகமம் 1:28.




24

நாம் தேவனுடைய உடமைக்கு உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம்.



25

ஒரு பெரிய, மகிழ்ச்சியான, ஆரோக்கியமான குடும்பம் கிரகமாகிய பூமியில் குடிகொள்ள வேண்டும் என்பது தேவனுடைய திட்டமாக இருந்தது. மனித இனம் செயலாற்ற பணி வேண்டும் என்றும், நிறைவேற்றி மகிழ்ந்திருக்க வேலைகள் வேண்டும் என்றும் தேவன் அறிந்திருந்தார்.



26

(வசனம்: ஆதியாகமம் 1:28)
சமுத்திரத்தின் மச்சங்களையும், ஆகாயத்துப் பறவைகளையும், ஆண்டு கொள்ளங்கள்.



27

பூமியின் மேல் நடமாடுகிற சகல ஜீவஜந்துக்களையும்.

# 19 இழக்கமுடியாத மூலதனம்.



28

(வசனம்: ஆதியாகமம் 2:15)
தேவனாகிய கர்த்தர் மனுஷனை ஏதேன் தோட்டத்தில் அழைத்துக்கொண்டு வந்து, அதைப் பண்படுத்தவும், காக்கவும் வைத்தார்.
ஆதியாகமம் 2:15.


29

உலகத்திலுள்ள எல்லாம் தேவனுக்குச் சொந்தமாயிருக்கும்போது, பூமியைக் கண்காணிக்கும் பொறுப்பை அவர் மனித இனத்திடம் நம்பி ஒப்படைத்தார். தேவன் தான் உரிமையாளர். நாம் தேவனுடைய உடமையை மேற்பார்வை செய்கிற உக்கிரணக்காரர்களாக இருக்கிறோம்.




30

(வசனம்: சங்கீதம் 24:1)
வேதம் சொல்கிறது. பூமியும் அதன் நிறைவும், உலகமும், அதிலுள்ள குடிகளும் கர்த்தருடையது.
சங்கீதம் 24:1.




31

(வசனம்: சங்கீதம் 50:10, 11)
மறுபடியும், தேவன் சொல்கிறார். சகல காட்டு ஜீவன்களும், பர்வதங்களில் ஆயிரமாயிரமாய்த் திரிகிற மிருகங்களும் என்னுடையவைகள்.



32

மலைகளிலுள்ள பறவைகளெல்லாம் அறிவேன், வெளியில் நடமாடுகிறவைகளெல்லாம் என்னுடையவைகள். சங்கீதம் 50:10, 11.


33

பணத்தை சம்பாதிக்கும் சாமர்த்தியத்தை தேவனே நமக்குக் கொடுக்கிறார். நமக்கு உண்மையிலே சொந்தமாக எதுவுமே இல்லை. நமது சிருஷ்டிகராயிருக்கிற தேவனுக்கு நம்முடைய உடைமைகள் மேலும், நமது ஜீவியத்தின் மேலும் உரிமை உண்டு.



34


(வசனம்: உபாகமம் 8:18)
உன் தேவனாகிய கர்த்தரை நினைப்பாயாக. அவரே ஐசுவரியத்தைச் சம்பாதிக்கிறதற்கான பெலனை உனக்குக் கொடுக்கிறவர்.

# 19  இழக்கமுடியாத மூலதனம்.



35

உன் பிதாக்களுக்கு ஆணையிட்டுக் கொடுத்த தம்முடைய உடன்படிக்கையை உறுதிப்படுத்தும்படி, இந்நாளில் உனக்கு உண்டாயிருக்கிறதுபோல.
உபாகமம் 8:18.



36

இன்னொருவருக்காக நிதியையும், உடமையையும் மேற்பார்வையிடுகிறவனாக செயல்படுகிறவனே உக்கிராணக்காரன் என்று வெப்ஸ்டரின் புதிய உலக அகராதி விளக்குகிறது. இன்றைக்கு ஒரு நபர் உக்கிரணத்துவ உறவில் பிரவேசிக்கும்போது, தன்னிடமிருந்து உரிமையாளர் என்ன எதிர்பார்க்கிறார் என்று அிற அவன் விரும்புகிறான். இப்படித்தான் தேவன் ஆதாமைப் புரிந்து வைத்திருந்தார். வேதம் உரைப்பதாவது.



37

(வசனம்: ஆதியாகமம் 2:16, 17)
.. நீ தோட்டத்திலுள்ள சகல விருட்சத்தின் கனியையுமத் புசிக்கவே புசிக்கலாம்.



38

ஆனாலும் நன்மை தீமை அறியத்தக்க விருட்சத்தின் கனியைப் புசிக்க வேண்டாம்.



39

அதை நீ புசிக்கும் நாளில் சாகவே சாவாய்.
ஆதியாகமம் 2:16, 17.

# 19 □ இழக்கமுடியாத மூலதனம்.



40


(வீடியோ 20 வினாடிகள்) தேவன் மனிதனின் அன்பையும், அவனின் உண்மையையும் பரிசோதித்தார். தோட்டத்திலுள்ள மற்ற எல்லா மரங்களின் கனியையும் ஆதாமும், ஏவாளும் புசிக்கலாம். ஆனால் அவர்கள் அந்தக் குறிப்பிட்ட மரத்தின் கனியைப் புசிக்கக்கூடாது. ஆண்டவருக்குக் கீழ்ப்படிவதின் மூலம் அவர்கள் தேவன் தான் உரிமையாளர் என உணர வேண்டும். அவர்கள் உண்மையான உக்கிராணக்காரர்களாக, தேவனோடு தங்களுக்குள்ள, தொடர்பைத் தெரிந்துக்கொள்வார்களானால், பரலோகைப் போன்ற உலகில் என்றென்றும் வாழ்ந்திருப்பார்.
ஆதாமும், ஏவாளும் தேவன் தங்களுக்கு நியமித்திருந்த சிறிய சோதனையில் வீழ்ந்தனர். அவர்கள் உண்மையற்ற உக்கிராணக்காரர்களாக எல்லாவற்றையும் அவர்கள் இழந்தனர். தோட்ட வீட்டை, சாவாமையை, தெளிவான மனசாட்சியை முகமுகமாக தேவனைப் பார்த்துப் பேசும் நிலையை இழந்தனர்.


41

அவர்கள் மேன்மையிலிருந்து அடிமைகளாக வீழ்ந்தனர். இவை எல்லாவற்றுக்கும் பின்னால் சாத்தான் மிகத் திருப்தியடைந்தான். கலகம் செய்த தூதன் பூமியை முழுக்கட்டுக்குள் கொண்டு வர நம்பிக்கை கொண்டான்.


42

அநேக நூற்றாண்டுகளக்குப் பின் சாத்தானின் இந்த ஆளுகை கிறிஸ்துவின் வருகையால் சுக்கு சுக்காக நொறுங்கியது.


43

ஆதாம் ஏவாளை ஏமாற்றியது போல, சாத்தான் கிறிஸ்துவையும் எளிதாக ஏமாற்ற நினைத்தான். இயேசு நாற்பதுநாள் உபவாசம் இருக்கும் வரை காத்திருந்தான்.



44

(வசனம்: மத்தேயு 4:8, 9)
மறுபடியும் பிசாசு அவரை மிகவும் உயர்ந்த மலையின் மேல் கொண்டுப்போய்.

# 19 இழக்கமுடியாத மூலதனம்.



45

உலகத்தின் சகல ராஜ்ஜியங்களையும் காண்பித்தான்.



46

அவன் அவரிடம் சொன்னான். நீர் சாஷ்டாங்கமாய் விழுந்து, என்னைப் பணிந்துக் கொண்டால், இவைகளையெல்லாம் உமக்குத் தருவேன் என்று சொன்னான்.
மத்தேயு 4:8, 9.


47

இந்த உலகின் ராஜ்ஜிங்களை வைத்து சாத்தான் இயேசுவை ஏமாற்ற நினைத்தான். ஆனால் அவன் வெற்றி பெறவில்லை. அவன் கிறிஸதுவுக்கு தருவேன் என்று சொன்னவைகள் அவனுடையது அல்ல. அவைகளை அவன் ஏமாற்றி வஞ்சித்து திருடிக்கொண்டான். இயேசு இந்த உலகின் சம்பந்துக்காக மகிமைக்காக தான் பிதாவோடு கொண்டிருந்த உறவை விற்க விரும்பவில்லை.


48

கடைசியாக சாத்தானின் விதியானது கல்வாரியில் நித்தியமாக முத்திரையிடப்பட்டது. கிறிஸ்துவின் கல்வாரி மரணத்தால் சாத்தான் தோற்கடிக்கப்பட்டான். கிறிஸ்துவின் மரணம் பூமியை பழைய நிலைக்கு கொண்டுவருவது சாத்தியமானது.


49

நமக்குரிய, நமக்குண்டான யாவையும் பெற்றுக்கொள்வது, கிறிஸ்து மனுக்குலத்திற்கு கொடுத்த பரிசால் சாத்தியமானது. நாம் அவரை நேசித்தாலும் சரி, நேசிக்காவிட்டாலும் சரி, நம்முடைய வாழ்வும் நம்முடைய உடமையாவும் அவருடைய சொத்து.



50

அவர் நம்முடைய சிருஷ்டிகர் மாத்திரமல்ல. அவர் நம்முடைய மீட்பருமானவர். ஆதாம், ஏவாள்போல், அவர் நம்மிடம் ஒப்படைத்தவைகளுக்கு உக்கிராணக்காரர்களாக இருக்கிறோம். எனவே எதை அவர் நம்மிடம் எதிர்பார்க்கிறோம்?

# 19  இழக்கமுடியாத மூலதனம்.




51

(வசனம்: 1 கொரிந்தியர் 4:2)
உக்கிராணக்காரன் உண்மையுள்ளவன் என்று காணப்படுவது அவனுக்கு அவசியமாம்.
1 கொரிந்தியர் 4:2.



52

தேவனின் பரிசான அன்புக்கு நாம் உக்கிரணக்காரர். நமது ஜீவியமே தேவன் கொடுத்த மிகப்பெரும் பரிசு. பவுல் அப்போஸ்தலர் அறிவிக்கிறார்.




53

(வசனம்: அப்போஸ்தலர் 17:24, 25)
உலகத்தையும், அதிலுள்ள யாவற்றையும் உண்டாக்கின தேவன்...




54

எல்லாருக்கும் ஜீவனையும், சுவாசத்தையும் சகலத்தையும் கொடுக்கிற அவர்.
அப்போஸ்தலர் 17:24, 25.


55

நம்முடைய ஜீவன் அவரிடத்திலிருந்தே உருவானது. அதை அவர் பாதுகாக்கிறார். ஒவ்வொரு இதய துடிப்பும், ஒவ்வொரு மூச்சுக் காற்றும், ஒவ்வொரு உடலின் திசுவும் தேவனிடம் இருந்து கிடைத்த பரிசு.



56

(வசனம்: ரோமர் 12:1)
பவுல் எழுதுகிறார். நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக் கொடுக்க வேண்டுமென்று தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு வேண்டிக்கொள்கிறேன்.



57

இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை. ரோமர் 12:1.
ஜீவபலி என்றால் முழுமையான ஒப்படைத்தல் அல்லது கிறிஸ்துவுக்கும் அவருடைய தலைமைக்கும் நமது ஜீவியத்தை அர்ப்பணிப்பது.

# 19 இழக்கமுடியாத மூலதனம்.



58

(வசனம்: அப்போஸ்தலர் 10:38)
கிறிஸ்து நன்மை செய்கிறவராகவே சுற்றித்திரிந்தார்.
அப்போஸ்தலர் 10:38.


59

அவர் நம் மாதிரி, அவருடைய சுயநலமற்ற சேவையை நாம் பின்பற்ற வேண்டும்.


60

தேவன் நமக்குக் கொடுக்கும் நேரத்துக்கு நாம் உக்கிராணக்காரர். பணத்துக்கு மாத்திரம் உக்கிராணக்காரர் அல்ல, நேரத்துக்கும் உக்கிராணக்காரர். ஒருவர் சொன்னார். வாழ்க்கை என்பது நேரத்தால் கட்டப்பட்ட ஒன்று. சங்கீதக்காரன் தேவனிடம் கேட்டது.



61

(வசனம்: சங்கீதம் 90:12)
நாங்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி, எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்.
சங்கீதம் 90:12.



62

(வீடியோ 6 விநாடிகள்) நேரத்தை வீணாக்குவது என்பது வாழ்க்கையை வீணாக்கி, தேவன் தாமே ஒவ்வொரு ஆணுக்கும், பெண்ணுக்கும் கொடுத்திருக்கிற தாலந்தை வீண் செலவு செய்வது ஆகும். ஒவ்வொருவருக்கும் ஒரே மாதிரியான நேரங்களையும், ஒரே மாதிரியான நிமிடங்களையும் செலவிட தெரிந்து கொள்ளும் முறைகள் பற்றி நாம் கணக்குக் கேட்கப்படுவோம்.



63

பொதுவாக, நமது நேரத்தை ஞானமாக நாம் உபயோகிக்க வேண்டுமென தேவன் எதிர்பார்கிறார். அவரே நமது சிருஷ்டிகர் என்ற விசுவாசத்தை வெளிப்படுத்துவதற்காக, வாரத்தின் ஏழாம் நாளாகிய ஓய்வு நாளுக்கென்று ஒரு சிறப்பான நேரத்தை நாம் ஒதுக்க வேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கிறார்.

# 19  இழக்கமுடியாத மூலதனம்.


64

நமது நேரமெல்லாம் தேவனுக்கு சொந்தமாயிருக்கையில், அவருடன் ஐக்கியத்தில் ஈடுபாடு கொண்டு, அவரது வார்த்தையில் இளைப்பாறி, அவரது வாக்குத்தத்தங்களிலிருந்து புத்துணர்ச்சியைப் பெற்றுக் கொள்ள ஏழாம் நாள் ஓய்வுநாளை ஆசரிக்கும்படி அவர் கேட்கிறார். வாரத்தின் வேலை அழுத்தங்கள், கடைக்குச் செல்லுதல் மற்றும் உலகத் தொழில்கள் ஆகியவற்றை ஒரு புறம் ஒதுக்கி, நமது சிருஷ்டிகரும், மீட்பருமாகிய அவரை நினைக்கும்படி அவர் நம்மை அழைக்கிறார்.


65

தேவன் நமக்குக் கொடுத்திருக்கிற தாலந்துகளுக்கு நாம் உக்கிராணக்காரர்கள். நல்லது, தேவனுடைய உக்கிராணக்காரர்களாக நாம் பொறுப்புடனிருப்பதற்கு என்ன விசேஷ தாலந்துகள் இருக்கின்றன? எனக்கு எந்த தாலந்துகளும் இருப்பதாக தெரியவில்லை என்று நீங்கள் சொல்லலாம்.


66

இன்று, நன்றாகப்பாடுவது, இசைக்கருவி இசைப்பது, படம் வரைவது, துணி தைப்பது, எழுதுவது அல்லது ஒருங்கிணைக்கிற திறமையை வழக்கமாக தாலந்து என்ற வாாத்தையில் கூறுகிறோம்.


67

நிச்சயமாக இவைகள் தாலந்துகள்தான். ஆனால் தேவனுடைய எண்ணப்படி தாலந்துகள் என்பது இவைகள் மாத்திரமல்ல. தேவனுடைய உக்கிராணக்காரர்களாக, வாழ்க்கை, நேரம், திறமைகள், உடைமைகள் சொத்து, அவர் நமக்குக் கொடுக்கிற எல்லாவற்றிற்கும் நாம் பொறுப்பாக இருக்கிறோம். நாம் வளமடைய, நமது எண்ணங்கள், ஏக்கங்கள் திருப்தியடைய அல்லது நாம் மற்றவர்களை ஆசீர்வதிக்க தேவன் நமக்கு உதவுவார். என்னைப்பின் பற்றி வா என்று இயேசு சொன்னார். தன்னலமற்று அவர் வாழ்ந்தார்.



68

(வசனம்: அப்போஸ்தலர் 10:38)
... நன்மை செய்கிறவராக சுற்றித் திரிந்தார். என்று வேதம் இயேசுவைப் பற்றி கூறுகிறது. அப்போஸ்தலர் 10:38 நம்மில் அநேகர் சுற்றித் திரிவதில் மாத்திரம் திருப்தியடைகிறோம்.

# 19 இழக்கமுடியாத மூலதனம்.


69

மனிதருடைய புகழ்ச்சிக்காகவோ, தேவனிடமிருந்து நற்பெயர் பெறுவதற்கோ நமது தாலந்துகள் பயன்படுத்தப்படக்கூடாது. மற்றவர்களை ஆசீர்வதிப்பதற்கு அவைகள் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது.



70

(வசனம்: 1 கொரிந்தியர் 4:7)
பவுல் எழுதினார். ... உனக்கு உண்டாயிருக்கிறவைகளில் நீ பெற்றுக் கொள்ளாதது யாது?




71

நீ பெற்றுக் கொண்டவனானால் பெற்றுக் கொள்ளாதவன்போல் ஏன் மேன்மை பாராட்டுகிறாய்? 1 கொரிந்தியர் 4:7.



72

தேவன் நமக்குத் தரும் பணத்திற்கு நாம் உக்கிராணக்காரர்கள்.



73

(வசனம்: மத்தேயு 6:33)
தேவன் நமக்குத் தரும் பணத்திற்கு நாம் உக்கிராணக்காரர்கள். (மத்தேயு 6:33) தேவனுடைய ஆசீர்வாதங்கள் நம்மேல் பொழிவதை நாம் காணலாம்.



74

நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிற நேரத்தை அர்ப்பணம் செய்வதுடன் அவருடைய பொருளாதார ஆசீர்வாதங்களில் ஒரு பகுதியை அவருக்குத் திரும்ப செலுத்துவதையும் உண்டாக்கியுள்ளது என்று வேதத்தில் நாம் காண்கிறோம்.

# 19  இழக்கமுடியாத மூலதனம்.



75

(வீடியோ 11 வினாடிகள்)
ஒரு நாள் ஆபிரகாமின் சகோதரனுடைய மகனாகிய லோத்துவும், அவன் குடும்பத்தாரும் சோதோமிலுள்ள தங்கள் வீட்டிலிருந்து ஒரு எதிராளியால் சிறைபிடிக்கப்பட்டனர். இச்செய்தி ஆபிரகாமை அடைந்தபொழுது, அவன் லோத்துவையும், மற்றவர்களையும் மீட்கத் தீர்மானித்தான். தேவன் தன்னோடிருந்து, வெற்றியை கொடுக்கும்படி அவன் ஜெபித்தான். தேவன் அவனோடிருந்தார். லோத்துவும் அவன் குடும்பமும் மீட்கப்பட்டு, பொக்கிஷங்களும் திருப்பிக் கொண்டுவரப்பட்டன.


76

ஆபிரகாம் சோதோமை நெருங்கினபோது, ராஜா அவனை சந்திக்க புறப்பட்டு வந்து, பொக்கிஷங்களை நீர் எடுத்துக்கொள்ளும், ஜனங்களை மாத்திரம் எனக்குத்தாரும் என்று அவனிடம் கேட்டான். ஆனால் எதையும் தனக்காக எடுத்துக்கொள்ள ஆபிரகாம் மறுத்துவிட்டான். தேவனுடைய ஆசாரியனாகிய மெல்கிசேதேக்கு ஆபிரகாமுக்கு உணவு கொடுத்து, அவனை ஆசீர்வதித்தான்.



77

(வசனம்: ஆதியாகமம் 14:20)
பின்பு ஆபிரகாம் ... இவனுக்கு எல்லாவற்றிலும் தசமபாகம் கொடுத்தான்.
ஆதியாகமம் 14:20.


78

தேவனுடைய உரிமைத்துவத்தையும், ஆசீர்வாதங்களையும் ஒப்புக்கொண்டு, லோத்துவை விடுவித்துப்பாதுகாப்பதில் தேவன் உதவியதற்காக ஆபிரகாம் தன்னுடைய பாராட்டை வெளிப்படுத்த விரும்பினான்.


# 19  இழக்கமுடியாத மூலதனம்.


79

நூற்றைம்பது ஆண்டுகளுக்குப்பின், ஆபிரகாமுடைய பேரன் அதேபோல் தேவனுக்கு தன் நன்றியை வெளிப்படுத்தினான். தனது மூர்க்க சகோதரனிடத்திலிருந்து ஓடும்போது, யாக்கோபு முற்றிலும் தனிமையையும், பயத்தையும் உணர்ந்தான். தேவனுடைய பாதுகாப்பை அதிகமாக வாஞ்சித்தான். ஆனால் தன் சகோதரன் ஏசாவை ஏமாற்றினதால் குற்ற உணர்வடைந்து, தேவன் அவனைக் கைவிட்டுவிட்டதாகவும், அவனை மன்னக்கமாட்டார் என்றும் அவன் பயந்தான்.


80

மிகவும் வருத்தத்தோடு, யாக்கோபு தன் தவறுகளை தேவனிடத்தில் அறிக்கையிட்டு, களைப்புடன் தரையில் படுத்துத் தூங்கினான்.




81

(வசனம்: ஆதியாகமம் 28:12, 22)
அவன் அங்கே ஒரு சொப்பனங் கண்டான். இதோ, ஒரு ஏணி பூமியிலே வைக்கப்பட்டிருந்தது. அதின் நுனி வானத்தை எட்டியிருந்தது.



82

அதிலே தேவதூதர்கள் ஏறுகிறவர்களும் இறங்குகிறவர்களுமாயிருந்தார்கள். ஆதியாகமம் 28:12.
யாக்கோபு எழுந்தபோது, தேவனின் வழி நடத்துதலையும், பாதுகாப்பையும் வாக்குத்தத்தம் பண்ணி பேசினதை அவன் அறிந்தான்.



83

அவன் நன்றியுணர்வுடன் வாக்கு செய்வதாவது, .. நீர் எனக்குத் தரும் எல்லாவற்றிலும் உமக்குத் தசமபாகம் செலுத்துவேன். வசனம் 22.


84

அதேபோல் தாவீதும் உணர்வடைந்து சொன்னதாவது.

# 19 □ இழக்கமுடியாத மூலதனம்.



85

(வசனம்: சங்கீதம் 116:12)
கர்த்தர் எனக்குச் செய்த எல்லா உபகாரங்களுக்காகவும், அவருக்கு என்னத்தைச் செலுத்துவேன்? சங்கீதம் 116:12. தேவனுடைய நன்மைக்காக, வாழ்க்கை, குடும்பம், ஆரோக்கியம், பொருளாதார ஆசீர்வாதங்கள் என்ற ஈவுக்காக அவருக்கு எப்படி நன்றி செலுத்துவது என்று நீங்கள் நினைத்ததுண்டா? உமக்கு நன்றி என்று சில நேரங்களில் நீங்கள் சொன்னால் மட்டும் போதுமா? தேவனுடைய எல்லா உபகாரங்களுக்கும் அவருக்கு நமது நன்றியைத் தெரிவிக்கும் ஒரு உறுதியான உக்கிராணத்துவ விதியை வேதம் அளித்திருக்றிது.


86

தன்னுடைய தாத்தா ஆபிரகாம் செய்ததுபோல, தான் பெற்ற எல்லாவற்றிலும் பத்தில் ஒன்றை அல்லது தசமபாகத்தை தேவனுக்குத் திரும்பச் செலுத்துவேன் என்று யாக்கோபு சொன்னார்.


87

தசமபாகம் அல்லது கர்த்தரிடத்திற்கு பத்தில் ஒன்றை திரும்பச் செலுத்துவது பற்றி முதல் எழுதப்பட்ட போதனை, லேவியராகமம் புத்தகத்தில் பதிவாகியிருக்கிறது.



88

(வசனம்: லேவியராகமம் 27:30)
தேசத்திலே நிலத்தின் வித்திலும், விருட்சங்களின் கனியிலும், தசமபாகம் எல்லாம் கர்த்தருக்கு உரியது.



89

அது கர்த்தருக்குப் பரிசுத்தமானது.
லேவியராகமம் 27:30.


90

கர்த்தருடைய தசமபாகத்தை நாம் செலுத்தும்போது, தேவனே சிருஷ்டிகர், எல்லா ஆசீர்வாதத்திற்கும் காரணர் என்ற சத்தியத்தைத் தொடர்ந்து உணர்கிறோம். தசமபாகம் எப்படிப் பயன்படுத்தப்பட வேண்டும்?

# 19 இழக்கமுடியாத மூலதனம்.



91

(வசனம்: எண்ணாகமம் 18:21)
எண்ணாகமம் ஒரு தெளிவான விளக்கத்தைக் கொடுக்கிறது. இதோ லேவி புத்திரருக்கு (தேவனுடைய சேவை செய்யும் ஊழியர்கள்) அவர்களுடைய வேலைக்காக, இஸ்ரவேலருக்ககுள்ளவை எல்லாவற்றிலும் தசமபாகத்தை அவர்களுக்குச் சுதந்தரமாகக் கொடுத்தேன்.




92

ஆசரிப்புக் கூடாரத்தின் பணிவிடை.
எண்ணாகமம் 18:21.



93

தசமபாகம் எப்பொழுதும் தேவனுடைய சேவையைத் தாங்கியது என்பதை வேதம் முழுவதிலும் நாம் காண்கிறோம்.




94

(வசனம்: 1 கொரிந்தியர் 9:13, 14)
புதிய ஏற்பாட்டில பவுல் விளக்குகிறார். ஆசாரிய ஊழியஞ்செய்கிறவர்கள் தேவாலயத்துக்குரியவைகளில் புசிக்கிறார்களென்றும் அறியீர்களா?



95

பலிபீடத்தை அடுத்துப் பணிவிடை செய்கிறவர்களுக்குப் பலிபீடத்தில் உள்ளவைகளில் பங்கு உண்டு என்றும் நீங்கள் அறியீர்களா?



96

அந்தப்படியே சுவிசேஷத்தை அறிவிக்கிறவர்களுக்கு சுவிசேஷத்தினாலே பிழைப்பு உண்டாகவேண்டுமென்று கர்த்தரும் கட்டளையிட்டிருக்கிறார்.
1 கொரிந்தியர் 9:13, 14.


97

தசம பாகத்தைக் குறித்து கிறிஸ்து வலியுறுத்துகின்ற அதே வேளையில் பரிசேயர் மற்றும் சதுசேயர்களுடைய குறுகிய மத எண்ணத்தை கடிந்து கொண்டார்

# 19  இழக்கமுடியாத மூலதனம்.





98

(வசனம்: மத்தேயு 23:23)
... நீங்கள் ஒந்தலாமிலும், வெந்தையத்திலும், சீரகத்திலும் தசமபாகம் செலுத்தி, நியாயப்பிரமாணத்தில் கற்பித்திருக்கிற விசேஷத்தவைகளாகிய.



99

நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டுவிட்டீர்கள். இவைகளையும், செய்யவேண்டும். அவைகளையும் விட்டுவிடாதிருக்க வேண்டும். மத்தேயு 23:23.


100


உங்கள் வருமானத்தில் பத்தில் ஒரு பகுதியை எப்படிக் கர்த்தருக்குக் கொடுக்க முடியும் என்று நீங்கள் ஒரு வேளை திகைத்துக் கொண்டிருக்கலாம்? அநேக மக்கள் அப்படி திகைத்தது உண்டு. ஆனால் எப்படியோ தேவனுடைய நடத்துதலையும், ஞானத்தையும் நம்பவும், தசமபாகத்தை அவருக்கு செலுத்தவும் தீர்மானம் எடுத்திருக்கிறார்கள்.


101

சில வாரங்களுக்குப்பின், அதே நபர்கள் தங்கள் வாழ்க்கையில் நடந்த அற்புதத்திதை ஆர்வத்துடன் சாட்சியாகக் கூறியிருக்கின்றனர். எப்படியோ, அவர்களது வருமானத்தில் பத்தில் ஒன்பது பாகம் எப்பொழுதும் போல் அல்லாமல் பத்து பாகத்துக்கும்மேல் கூடியிருக்கிறது. நிதி பாதுகாப்பிற்கான இரகசியம் இங்கே இருக்கிறது.


102

தசமபாகம் யூதர்களுக்கு மட்டுமல்லவா? என்று சில மக்கள் கேட்பார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு நாங்கள் கேட்பது, பரலோக ஆசீர்வாதங்கள் யூதர்களுக்கு மட்டும்தானா?


103

ஜிம் தசமபாகத்தை ஒதுக்கினான். ஆரம்பத்திலே அது கடினமாய்த் தோன்றினாலும், பின்னர் அவரது சொந்தத்தொழிலில் செழிப்பையும், நிதி பாதுகாப்பையும் ஆசீர்வாதமாக பெற்றுக் கொண்டார்.



104

இப்பொழுது தனது நிதிநிலையில் உண்டான வெற்றிக்கான புகழ்ச்சியை தேவனுக்கு அவன் செலுத்தி, கர்த்தருடைய வேலை முன்னேற்றமடைய கொடுப்பதில் மகிழ்ச்சியாயிருக்கிறான்.

# 19  இழக்கமுடியாத மூலதனம்.


105

உதாரணமாக, எட் என்பவரை எடுத்துக் கொள்ளுங்கள். மற்ற நாட்களை காட்டிலும் ஓய்வு நாளில் தான் அதிக வேலைகள் இருக்கும். இருப்பினும், எப்படியும் தேவன் மற்ற ஆறு நாட்களில் தன் வியாபாரத்தை அதிகப்படுத்துவார் என்று நம்பி, விசுவாசத்தோடு ஓய்வுநாளில் தன் வியாபாரத்தை மூடிவிட முடிவுசெய்தான். தேவன் வாக்குதத்தத்தை காக்கும் தேவன்




106

அப்படிப்பட்ட கிறிஸ்தவர் மல்கியாவில் கூறப்பட்டிருக்கிற முதன்மையான ஆசீர்வாதங்களைப் பெற்றிருக்கின்றனர்.



107

(வசனம்: மல்கியா 3:10)
என் ஆலயத்திலே ஆகாரம் உண்டாயிருக்கும் படிக்குத் தசமபாகங்களையெல்லாம் பண்டசாலையிலே கொண்டு வாருங்கள்.




108

சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். நான் வானத்தின் பலகணிகளைத் திறந்து.



109


இடங்கொள்ளாமற்போகமட்டும் உங்கள் மேல் ஆசீர்வாதத்தை வருஷிக்கப்ப பண்ணுவேன். மல்கியா 3:10.



110


சகலத்திலும் பத்தில் ஒரு பகுதி அவருக்குப் பரிசுத்தமானது என்று கர்த்தர் சொல்கிறார். அவரது உரிமைத்துவத்தை ஏற்று, கணப்படுத்துகிறோமா என்பதைக்காணவும், நமது உக்கிராணத்துவத்தை சோதிக்கும்படியாகவும், அவரிடத்திலேயே, நமது உக்கிராணத்துவத்தை சோதிக்கும்படியாகவும், அவரிடத்திலேயே அதைத் திரும்ப செலுத்தும் பாக்கியத்தை அவர் நமக்குக் கொடுத்திருக்கிறார்.

# 19 இழக்கமுடியாத மூலதனம்.



111

அதைச் செய்ய நாம் மறுதலித்தல், வேதத்தின் பிரகாரமாக மெய்யாகவே நாம் அவரை வஞ்சிக்கிறோம்.



112

(வசனம்: மல்கியா 3:8)
... எதினாலே உம்மை வஞ்சித்தோம் என்கிறீர்கள்? தசமபாகத்திலும், காணிக்கைகளிலுந்தானே.
மல்கியா 3:8.


113

தேவனுக்குச் சொந்தமான, ஏற்கனவே அவருக்காக உரியதாயிருக்கிற தசமபாகம் அல்லது நமது வருமானத்தில் பத்தாம் பாகம் என்ற பகுதிக்கும் அப்பால், இன்னும் அபரிமிதமாகக் கொடுப்பதற்கு நாம் அழைக்கப்பட்டிருக்கிறோம். நமது உதாரத்துவம் எவ்வளவு தூரத்திற்கு இருக்கிறது என்பதைத் தீர்மானிக்க, காணிக்கை வழங்குவது நம் ஒவ்வொருவரிடமும் விடப்பட்டிருக்கிறது.



114

(வசனம்: லூக்கா 6:38)
இருப்பினும், வேதத்தில் சில விதிமுறைகள் உள்ளன. இயேசு சொன்னதாவது, கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும். அமுக்குக் குலுக்கி சரிந்து விழும்படி நன்றாய் அளந்து உங்கள் மடியிலே போடுவார்கள்...
லூக்கா 6:38.


115

பூமியில் தனது பணிக்கு தேவையான நிதிக்காக தேவனின் திட்டம் எளிதானது. அழகானது. தமது ஜனங்கள் தங்களுடைய இருதயத்திலிருந்து கொடுக்கும்படி அவர் கேட்கிறார். தங்கள் சொந்த தேவைகள் பற்றி ஒருபோதும் பயப்படாதிருந்தால் இறுதியில் அவைகள் எதிர்பார்ப்புக்கும் அப்பால் சந்திக்கப்படும்.

# 19 இழக்கமுடியாத மூலதனம்.


116

தேவன் பொன், வெள்ளி, மிருக ஜீவன்கள், தேசம் மற்றும் நம் அனைவரையும் சொந்தமாகக் கொண்டிருப்பவரானால், எனது பணம் அவருக்கு ஏன் தேவை என்று நீங்கள் ஒரு வேளை யோசித்துக் கொணடிருக்கலாம். தசமபாக முறை என்பது பூமியில் தனது பணியின் நிதிக்கான தேவனுடைய திட்டமாகும்.


117

சபையானது குலுக்கல் சீட்டுகள், பிங்கோ விளையாட்டுகள் மற்றும் பரிசு சீட்டுகள் மூலம் நிதியைப் பெறட்டும் என தேவன் ஒரு போதும் நினைத்ததில்லை, ஊழியத்தை தாங்க தசமபாகம் செலுத்துவதும் ஒரு பொறுப்பான வழியல்லவா?



118

ஒவ்வொரு நபரும் தான் பெறுகிற பிரகாரமாக கொடுக்கிறான்.



119

நீங்கள் ஆயிரம் ரூபாய் சம்பாதிப்பீர்களானால்.



120

தேவனுக்கு நூறு ரூபாயைத் திரும்பச் செலுத்த வேண்டும்.



121

நீங்கள் நூறு ரூபாய் சம்பாதிப்பதால்.



122

நீ பத்து ரூபாய் செலுத்து இதை விட அனுகூலம் வேறு இருக்க முடியுமா?

# 19  இழக்கமுடியாத மூலதனம்.


123

எதெல்லாம் கடவுளுக்கு கொடுக்கின்றோமோ அவர் நமக்கு அதிகமாக கொடுக்கின்றார். நாம் எப்போதும் கொடுப்பதைவிட அதிகமாகவே பெறுகிறோம். நாம் பத்தில் ஒரு பங்கை கடவுளுக்கு கொடுக்கும்போது அவர் நமக்கு என்ன செய்தாரோ அதற்கு நாம் பாராட்டை தெரிவிக்கின்றோம். மேலும் நாம் தன்னலம் குறை, பேராசையற்றவர்களாய் மாறுகிறோம்.


124


நாம் அதிகமாக பிறர் மேல் அக்கறைப்படுகிறவராகிறோம். மேலும் நாம் நம்முடைய ஆசீர்வாதங்களை அவர்களோடு பகிர்ந்துக்கொள்வதினாலே நாம் அன்பிலும் இரக்கத்திலும் வளர்ந்து அதிக அதிகமாக இயேசுவை போல ஆகிறோம். இயேசு அவருடைய போதனையில் அழகான கதைகளை உவமைப்படுத்தி யுள்ளார்.


125

இங்கே ஒரு ஆர்வமான, ஊக்கமான, தொழில் சம்பந்தமான விவசாயி கடினமாக வேலை செய்து அதிகமான பயிர்கள் அறுவடைக்கு வைத்திருந்தான். அறுவடை மிகுதியானதால் அவனுடைய களஞ்சியம் கொள்ளாமல் போயிற்று. அவைகள் ஏற்கனவே நிறைந்து இருந்தது. அவன் என்ன செய்வான்? அது ஒரு குழப்பம். தீர்மானத்திற்காக போராடினான். அதிகமானதைத ஏழைகளுக்கு கொடுப்பதா? ஆனால் அது அவனுடையது.


126

அவன் கவனமாக திட்டம் தீட்டி, தன்னுடைய ஞானத்தை பயன்படுத்தி மேலும் விவசாய திறமையினால் பள்ளத்தாக்கிலேயே பிரகாசமான வயல்கொண்டது நான் அல்லாவ? என்ன செய்ய வேண்டும் என்று யோசுத்து,



127

(வசனம்: லூக்கா 12:18-21)
நான் ஒன்று செய்வேன். என் களஞ்சியங்களை இடித்து பெரிதாகக் கட்டி, எனக்கு விளைந்த தானியத்தையும் என் பொருள்களையும் அங்கே சேர்த்து வைத்து.



128

பின்பு ஆத்துமாவே உனக்காக அநேக வருஷங்களுக்கு அநேகம் பொருள்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கிறது. நீ இளைப்பாறி, புசித்துக் குடித்து, பூரிப்பாயிரு. லூக்கா 12:18, 19.

19  இழக்கமுடியாத மூலதனம்.

# 19  இழக்கமுடியாத மூலதனம்.


129

தேவனோ அவனை நோக்கி மதிகேடனே, உன் ஆத்துமா உன்னிடத்திலிருந்து இந்த இராத்திரியிலே எடுத்துக் கொள்ளப்படும்.


130

அப்பொழுது நீ சேகரித்தவைகள் யாருடையதாகும்?


131

தேவனிடத்தில் ஐசுவரியனாயிராமல் தனக்காகவே பொக்கிஷங்களைச் சேர்த்து வைக்கிளவன் இப்படியே இருக்கிறான் என்றார்.
லூக்கா 12:20, 21.


132

இந்த பணக்கார விவசாயி எங்கேயிருந்து அவனுடைய ஆசீர்வாதங்களை வந்தது என்பதை அறியவில்லை. அவனுடைய சிருஷ்டிகரை அவன் அறியமுடியவில்லை. அல்லது அவனின் உக்கிராணவத்தின் கட்டாயத்தை அறியவில்லை. அவன் ஏழைகளையும், அனாதைகளையும், விதவைகளையும் வீடு இல்லாதவர்களையும் முழுவதுமாக மறந்தான். அவனை மட்டும்தான் அவன் நினைத்தான். இந்த மனிதன் இருதய பிரச்சனை உடையவன்.


133

(வசனம்: மத்தேயு 6:21)
இயேசு சொன்னார். உங்கள் பொக்கிஷம் எங்கியிருக்கிறதோ, அங்கே உங்கள் இருதயமும் இருக்கும்.
மத்தேயு 6:21.
நம்முடைய பொக்கிஷங்களைப் பற்றிய காரித்தில் இயேசு அதிக கவனமாக இருக்கிறார். இயேசுவிடம் கொடுக்காவிட்டால் அவைகள் நம்மை கடவுளைவிட்டு தூரமாக வழி நடத்தும், அது மட்டும் அல்ல, நித்திய வாழ்வையும் இழக்க செய்யும்.

# 19 □ இழக்கமுடியாத மூலதனம்.



134

(வசனம்: மத்தேயு 16:26)
மனுஷன் உலகம் முழுவதையும் ஆதாயப்படுத்தியக் கொண்டாலும், தன் ஜீவனை நஷ்டப்படுத்தினால் அவனுக்கு லாபம் என்ன?...
மத்தேயு 16:26.


135

நாகரீக மனிதனின் பிரச்சனை என்னவெனில் அவன் வாழ்க்கை சிக்கலாக மாறிவிட்டது. மேலும் எப்பொழுதும் சுறுசுறுப்பாக இருப்பதால் ஒன்று மறக்கிறான். அல்லது அவனுடைய ஆசீர்வாதம் எல்லாம் எங்கேயிருந்து வருகின்றது என்பதை நினைக்க நேரமே இல்லை.



136

(வீடியோ 6 வினாடிகள்) அவனுடைய பாவத்திலிருந்து மீட்க செலுத்தப்பட்ட விலையை அவன் நினைக்க மறந்தான். அதன் விளைவாக அவனுடைய நேரம், தாலந்து, பொக்கிஷங்களால் தேவனை கனம் பண்ண மறந்தான். நம்மில் ஒவ்வொருவரும் தினமும் அதை நினைப்பது அவசியம்.



137

நாம் நேசித்து, இருதயத்துக்கு உகந்ததாக பற்றிக் கொண்டிருக்கும் காரியங்கள்.



138

அவைகள் நம்முடையது அல்ல, கடனாக வாங்கப்பட்டவைகள்.



139

அவைகளை உபயோகித்து நமது வாழ்வை ஒளிமயமாக்க மட்டுமே இயேசு நமக்கு அனுமதி கொடுக்கிறார்.



140

எனவே எங்களுக்கு ஞாபகமூட்டும், எங்களுக்கு ஞாபகமூட்டும், அன்பு கர்த்தாவே. டோட்டி ராம்போ என்பவர் எழுதிய ஞாபகமூட்டும் கர்த்தாவே.

# 19  இழக்கமுடியாத மூலதனம்.


141

நம்மிடம் உள்ள எல்லாமேம தேவனிடத்திலிருந்து வரும் ஈவு, நமது ஜீவியம் தேவனிடத்திலிருந்து வரும் ஈவு. நமது ஆரோக்கியம் தேவனிடத்திலிருந்து வரும் ஈவு. நாம் எடுக்கிற ஒவ்வொரு மூச்சும் தேவனுடைய ஈவு. நாம் உண்ணும் உணவு,  உடுக்கும் உடை, தங்குகின்ற வீடு - தேவனுடைய ஈவுகள். எனக்கு நீர் கொடுத்திருக்கிறவைகளுக்காக உமக்கு நன்றி. கர்த்தாவே எனது நிதி காரியங்களில், என் வாழ்க்கையில் ஒவ்வொரு பகுதியிலும் உம்மை முதன்மையாக வைக்க விரும்புகிறேன்.  என்று நீங்கள் சொல்வீர்களா? அப்படிச் செய்வீர்களானால், நாம் ஜெபிக்கையில் உங்கள் கரத்தை உயர்த்துவீர்களா?



1

எங்கே இன்று நாம் அதை கண்டுபிடிப்பது?


2

உண்மையை கண்டுக்கொள்ள வேண்டும் என வாஞ்சித்த ஒரு மனிதனைப் பற்றிய கதை ஒன்று சொல்லப்படுகிறது. அந்த பட்டணத்திலேயே மிகவும் ஞானமுள்ளவன் என்று சொல்லப்பட்ட ஒரு மனிதனை, இவன் சந்தித்தான். வாலிபன் வயதான அந்த மனிதனைப் பார்த்து, ஞானமுள்ளவரே, உண்மையை நான் கண்டுபிடிப்பதுத எப்படி? அதற்கு என்னை நீங்கள் வழி நடத்த முடியுமா? எனக் கேட்டான். வயதான மனிதன் எழுந்து நடக்க ஆரம்பித்தார். வாலிபனும் அவரைத் தொடர்ந்துசென்றான். இருவரும் அந்த பட்டணத்தின் தெரு வழியாக கடற்கரைக்கு நடந்து சென்றனர். வயதான மனிதர் கடல் தண்ணீரில் தொடர்ந்து நடந்துக் கொண்டிருந்தார், இப்படி அவர்கள் இடுப்பளவு தண்ணீருக்கு வந்தபோது வாலிபன் தன் கையை தலைமேல் வைத்துக் கொள்ளும்படி பெரியவர் சொன்னார். வாலிபனைப் பிடித்து, பெரியவர் தண்ணீருக்குள் அமுக்கினார். மூன்றுமுறை வாலிபன் தண்ணீருக்கு மேலே வந்து, காற்றை சுவாசிக்க தவித்தான். ஆனால் மூன்று முறையும் பெரியவர் வாலிபனை தண்ணீருக்குள் பிடித்துத்தள்ளினார். மூன்றாம் முறை அந்த வாலிபன் அலறி, எனக்கு வேண்டியதெல்லாம், உண்மயை எப்படி காற்றுக்காக தவிக்கிறாயோ, அதேபோல் உண்மையை அறிந்துகொள்ள நீ வாஞ்சித்தால், உண்மையை கண்டுபிடிக்கலாம் என்று பெரியவர் கூறினார். சத்தியத்தை தேவன் நம்மிடமிருந்து எடுத்துவிடவில்லை. எரேமியா தீர்க்கதரிசி சொல்கிறார்...



3

(வசனம்: எரேமியா 29:13)
உங்கள் முழு இருதயத்தோடும் என்னைத் தேடினீர்களானால், என்னைத் தேடுகையில் கண்டுபிடிப்பீர்கள். எரேமியா 29:13
ஆனால் சில மனிதர்கள் தவறான இடத்தில் தேடுகிறார்கள்.

20  சத்தியத்தால் விடுதலை.


4


இதை பாாக்கும்போது நாம்பெற்றிராத சில காரியங்களுக்காக சொல்லமுடியாத ஆவல் கொள்கிறோம். ஆனால் நமக்கு தெரியும் எது நமக்கு வேண்டும், எது அவசியம் என்று.


5

நிம்மதியில்லாத, ஓய்வில்லாத நம்முடைய ஜீவியத்தின் வெறுமையை புகழ், அதிர்ஷ்டம், மருந்துகள், மதுபானம், பதவிகள் மற்றும் ஓய்வு நேரம், செயல்கள் இகைளால் நிரப்ப விரும்புகிறோம். ஆனால் பரிசுபெற்ற பிறகுதான் அவைகள் நிரந்தர திருப்தியை கொடுக்க முடியாதவை என உணர்கிறோம்.



6

மேலும் சீக்கிரத்தில் அல்லது சிறிது காலத்துக்குள், தனிமைகளில், தூக்கமற்ற இரவுகளில் பழங்கால தீர்க்கதரிசியின் கேள்விகள் தான் நம்மை ஆட்டிப்படைத்துக் கொண்டிருக்கிறது.



7

(வசனம்: ஏசாயா 55:2)
நீங்கள் அப்பமல்லாததற்காக, பணத்தையும், திருப்தி செய்யாத பொருளக்காக உங்கள் பிராயத்தையம் செலவழிப்பானேன்?
ஏசாயா 55:2
பொருள்கள் தற்காலியமான திருப்தியைத்தான் தர முடியும் என இயேசு அறிந்திருக்கிறார்.




8

(வசனம்: லூக்கா 12:15)
ஒருவனுக்கு எவ்வளவு திரளான ஆஸ்தி இருந்தாலும் அது அவனுக்கு ஜீவன் அல்ல என்றார்.
லூக்கா 12:15.


9

இன்று மக்கள் தங்களுக்கு வெளியே ஒரு வல்லமை தேவை என்று உணர்கின்றனர். இது புதுமை ஒன்றும் அல்ல.


10

ஏதேன் தோட்டத்தில் மனிதன் தன்னுடைய சொந்த வழியை தேர்ந்தெடுத்துக் கொண்டதிலிருந்து ஒரு வலித வெறுமையை உணர்ந்தான் அந்த வெறுமையை தேவன் மாத்திரமே நிரப்பமுடியும்.


11

தேவன் இஸ்ரவேல் ஜனங்களை வனாந்திரத்தில பட்டினியடைவதற்காக அலைந்து திரியவிட்டார். ஏனெனில் அவர்கள் அவருடைய தேவையை அறிந்துக்கொள்ள வேண்டும். தேவன் மோசே மூலமாக இஸ்ரவேலரிடம் சொன்னார்.



12

(வசனம்: உபாகமம் 8:3)
அவர் உன்னைச் சிறுமைப்படுத்தி, உன்னை பசியினால் வருத்தி,



13

மனுஷன் அப்பத்தினால் மாத்திரம் அல்ல, கர்த்தருடைய வாயிலிருந்து புறப்படுகிற



14

ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான் என்பதை உனக்கு உணர்த்தும்படிக்கு...
உபாகமம் 8:3.


15

உதாரணமாக தேவனிடம் நாம் சேரவும் அவர் நம்முடைய ஏக்கங்களைத் திருப்பதியாகவும், தேவன் நம்முடைய உள்ளான பசியையும், மற்றும் ஓய்வின்மையும் உணர அனுமதிக்கின்றார்.



16

பல விதமான மதங்களில் இன்று மனிதர்கள் ஆர்வம் காட்டி வருகின்றனர் இன்றைக்கு மதங்களை இனைப்பதற்கும் மதங்களின் இடையே உள்ளப்பிரிவினைச் சுவர்களைத் தகர்ப்பதற்கும் மிக ஆர்வம் ஏற்பட்டுள்ளது. மதங்களைப் பற்றியும் சபைகளைக் குறித்தும் படிப்பதற்கும் யோசிப்பதற்கும் மிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.


17

புதிய சபைகள் உலகமுழுவதிலும் வேகமாக எழும்பி வருகின்றது. அவைகள் ஒவ்வொன்றும் பூமியிலுள்ள ஒவ்வொருவருக்கும் சத்தியத்தின் தூதைக் கொண்டுள்ள தேவனின் சபை என்று உரிமை பாராட்டிக் கொள்கின்றனர். இவைகளை சீர்தூக்கிப்பார்க்கும் போது அவர்கள் கூறுவது எல்லாம் சரி என்று சொல்லமுடியாது.

20  சத்தியத்தால் விடுதலை.




18

தங்கள் கொள்கைகளுக்கு வேதமே அஸ்திபாரம் என அவைகள் ஒவ்வொன்றும் கூறிக்கொள்கின்றன. ஆனால் அவர்களது உபதேசங்கள் மிகவும் வேறுப்பட்டதாக இருக்கிறது.


19

எப்படி, எது உண்மையான சத்தியம் என்று கண்டறிந்து கொள்வது? கிறிஸ்தவ உலகில் தேவன் விசேஷித்த எந்த வகுப்பையாவது தெரிந்து கொண்டு அதை அவருடைய சபையாக அங்கீகரித்து இருக்கின்றாரா? பவுல் ஆணித்தரமாக எழுதுகிறதைப் பாருங்கள்.



20

(வசனம்: எபேசியர் 4:4)
உங்களுக்கு உண்டான அழைப்பினாலே நீங்கள் ஒரே நம்பிக்கைக்கு அழைக்கப்பட்டதுபோல ஒரே சரீரமும் ஒரே ஆவியும் உண்டு.




21

ஒரே கர்த்தர், ஒரே விசுவாசமும் ஒரே ஞானஸ்தானமும்.




22

எல்லோருக்கும் ஒரே தேவனும் பிதாவும் உண்டு. எபேசியர் 4:4-6.



23

(வசனம்: 1 தீமோத்தேயு 3:15)
பவுல் தன் நண்பர் தீமோத்தேயுக்கு எழுதியது. தேவனுடைய வீட்டிலே நடக்க வேண்டிய வகையை நீ அறியும்படி இவைகளை உனக்கு எழுதுகிறேன்.



24

அந்த வீடு ஜீவனுள்ள தேவனுடைய சபையாய்ச் சத்தியத்திற்குத் தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. 1 தீமோத்தேயு 3:15.
பவுல் தெளிவாகச் சொல்கிறார். தேவனுடைய சபை சத்தியத்துக்கு தூணும் ஆதாரமுமாயிருக்கிறது. ஆனால் எப்படி,எந்த சபை உண்மையான சத்தியத்தை உடையது என்று கண்டுபிடிப்பது.



25

மத உலகில் ஏராளமான மார்க்கப் பிரிவுகள், குரோதமான மற்றும் குழப்பமான போதனைகள் காணப்படுகின்றன.



26

நண்பர்களே, வேதத்தின்படி கிறிஸ்து இவ்வளவு குழப்பங்களும், பல மார்க்கப் பிரிவுகளும் இருக்க வேண்டும் என விரும்பினவர் அல்ல, சிலுவையில் அறையப்படுவதற்கு சற்று முன்பு, இயேசு இவ்வாறு ஜெபித்தார்.




27

(வசனம்: யோவான் 17:21)
நீர் என்னிலேயும், நான் உம்மிலேயும் இருக்கிறதுபோல அவர்களெலலோரும் நம்மில் ஒன்றாயிருக்கவும் வேண்டிக் கொளகிறேன்.




28

அவர்களெல்லாரும் ஒன்றாயிருக்கவும், பிதாவே, நீர் என்னை அனுப்பினதை உலகம் விசுவாசிக்கிறதற்காகவும் வேண்டிக்கொள்கிறேன். யோவான் 17:21.
இயேசு அவருடைய பின்னடியார்கள் சமாதானமாகவும், அன்பாகவும் இவ்வுலகில் வாழ வேண்டுமென விரும்பினார். கிறிஸ்து அவருடைய சபையில் எந்த பிரிவினைகளும் இருப்பதை விரும்பவில்லை.





29

(வசனம்: 1 கொரிந்தியர் 12:25)
பவுல் அப்போஸ்தலன் எழுதும்போது சரீரத்தில் பிரிவினையுண்டாயிராமல்...
1 கொரிந்தியர் 12:25.



30

ஆனால் பவுல் அப்போஸ்தலன் சத்திய மாறுபாடு ஏற்பட்டு, பிரிவினையும் உண்டாகும் என்று கூறியிருக்கிறார்.




31

(வசனம்: அப் 20:28-30)
தமது சபையை மேய்ப்பதற்குப் பரிசுத்த ஆவி உங்களைக் கண்காணிக்களாக வைத்த மந்தை முழுவதையும் குறித்து எச்சரிக்கையாயிருங்கள்.

20 □ சத்தியத்தால் விடுதலை.



32

நான் போனபின்பு மந்தையை தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்.



33

உங்களிலும் சிலர் எழும்பி, மாறுபாடானவைகளைப் போதிப்பார்கள்.



34

சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக் கொள்வார்கள். அப்போஸ்தலர் 20:28-30.


35

நாம் சபைச் சரித்திரத்தின் பக்கங்களைத் திரும்பிப் பார்க்கும் போது, என்ன நடந்தது என்ற உண்மையைக் கண்டுபிடிக்கலாம். கள்ளப்போதகர்கள் எழும்பினார்கள், அவர்களின் தவறுகளை சிலர் ஏற்றுக்கொண்டார்கள். சபையைவிட்டு விட்டார்கள். சிலர் குழப்பமடைந்தனர். கிறிஸ்துவின் உபதேசத்திலிருந்து சிறிதாக பின்வாங்கிப்போய், சீடர்களும் இழுத்துக் கொள்ளப்பட்டனர்.


36

நான் என் வாழ்நாள் முழுவதும் எல்லா மார்க்க உபதேசங்களையும் படித்துத் தேவனுடைய உண்மை சபை எது எனக் கண்டுபிடிப்பேன் என்று. சில மக்கள் சொல்கின்றனர். ஆனால் மிகவும் எளிமையான வழி ஒன்று உள்ளது தேவனுடைய வழி.


37

அரசாங்க அதிகாரத்துவம் நமக்குச் செல்வது என்னவென்றால், உண்மை ரசீது எதுவென்றும், பொய் ரசீது எதுவென்றும் வேறுபடுத்துவது வெகு எளிதுத ன்று நாம் பார்க்கலாம். அவர்கள் உண்மைப் பத்திரத்தின் உண்மைத் தோற்றங்களை ஆழமாகப் படித்திருக்கிறார்கள்.


38


(பணத்தாளின் குறிப்பு) உண்மையான பணத்தாளின், வரிசை எண், சரியான ஒழுங்குமுறை, சின்னம், அச்சடிக்கப்படும் மையின்வன்மை அந்த, தாள்களின் தன்மை இவைகளை அவர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். பணத்தாளைக் கண்டதும், உண்மைக்கும், அதன் சாயலுக்கும் உள்ள வித்தியாசத்தை ஒத்துப்பார்த்து அடையாளம் காணுவார்கள். இவைகளில் ஒன்று குறையுமானாலும் அது போலியானது.


39

சத்தியத்திற்கான காரியத்திலும் இதை ஒத்துப் பார்க்க வேண்டும்.


40

வேதாகமத்தில் சொல்லப்பட்டுள்ள தேவனுடைய உண்மையான சபையில் குணாதிசயங்களை அறிந்துக் கொள்ளும்போது, மற்ற எல்லா சபை உபதேசங்களையும் நீண்ட மணிநேரங்கள் படிக்க வேண்டிய அவசியமில்லை. மனிதன் யூகித்து நடக்கட்டும் எனதேவன் விட்டு விடாமல், உண்மைகளை நமக்கு தமது வார்த்தையில் கொடுத்திருக்கிறார்.



41

(வசனம்: ஆமோஸ் 3:7)
கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்கு, தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார். ஆமோஸ் 3:7.



42

வேதாகமத்திலுள்ள எல்லா தீர்க்க தரிசனங்களுக்கும் வெளிப்படுத்தின புத்தகம் ஒரு சுருக்க உரைபோன்றது. அது கடைசி நாட்களில், மக்களுக்கு ஒரு விசேஷித்த வெளிச்சத்தைத் தருகிறது. கடைசி நாட்களில், இவ்வையத்தின் சரித்திரத்தில் ஏற்படும். மார்க்கவீழ்ச்சி மற்றும் குழப்பங்களும் வெளிப்படுத்திக்காட்டகிறது. வெளிப்படுத்தின விசேஷம், கிறிஸ்துவினுடைய சபைக்கும், சாத்தானுக்கும் உள்ள போராட்டத்தை முன்னறிவிக்கிறது. வெளிப்படுத்தின விசேஷம் 12-ம் அதிகாரம் கிறிஸ்துவினுடைய நாட்களிலிருந்து உலக முடிவுரையுள்ள சபைச் சரித்திரத்தின் ஓர் பரந்த காட்சியை கொடுக்கிறது.

20 □ சத்தியத்தால் விடுதலை.




43

(வசனம் வெளிப்படுத்தல் 12:1, 2)
அன்றியும் ஒரு பெரிய அடையாளம் வானத்திலே காணப்பட்டது. ஒரு ஸ்திரீ சூரியனை அணிந்திருந்தாள்.




44

அவள் பாதங்களின் கீழே சந்திரனும், அவள் சிரசின் மேல் பன்னிரண்டு நட்சத்திரங்களுள்ள கிரீடமும் இருந்தது.



45

அவள் கர்ப்பவதியாயிருந்து, பிரசவ வேதனையடைந்து, பிள்ளை பெறும்படி வருத்தபட்டு அலறினாள். வெளிப்படுத்தல் 12:1, 2.


46

வெண்ணிறத்தில் தோன்றிய பெண் சூரியனை ஆடையாகவும், சந்திரன் மீது நின்றகொண்டு, 12 நட்சத்திரங்களை கிரீடமாக தன் தலையில் சூடப்பட்டிருந்ததுமாக தேவன் காட்டும் படம் போன்ற காட்சியின் அர்த்தம் என்ன? வேதாகம தீர்க்கதரிசனத்தில், கற்புள்ள பெண் என்பது தேவனுடைய மக்களை, அல்லது அவரின் சபையைக் குறிக்கிறது. எரேமியா தீர்க்கதரிசி எழுதுவது.



47

(வசனம் எரேமியா 6:2)
செல்வமாய் வளர்ந்த ரூபவதியான சீயோன் குமாரத்தியைப் பாழாக்குவேன்.
எரேமியா 6:2.
சீயோன் என்பது யார்? ஏசாயா மூலம் தேவன் சொல்வது.



48

(வசனம் ஏசாயா 51:16)
சீயோனை நோக்கி நீ என் ஜனம் ஏசாயா 51:16. இந்த இரண்டு வசனங்களை பார்க்கும் போது, தமது மெய்யான திருச்சபையைக் குறிப்பதற்கு கற்புள்ள ஸ்திரீயைப் பயன்படுத்தினார் என்பது விளங்குகிறது. அப்போஸ்தலனாகிய பவுல் கொரிந்து சபையை விளக்குவதற்கும் அதே வார்த்தையைப் பயன்படுத்துகிறார்.

# 20 □ சத்தியத்தால் விடுதலை.




49

(வசனம் 2 கொரிந்தியர் 11:2)
நான் உங்களை கற்புள்ள கன்னிகையாகக் கிறிஸ்து எனும் ஒரே புருஷனுக்கு ஒப்புக்கொடுக்க நியமித்த படியால்.
2 கொரிந்தியர் 11:2.




50

(வசனம் வெளிப்படுத்தல் 17:3-5)
வெளிப்படுத்தல் 17ல் யோவானுக்குக் காட்டப்பட்ட ஒரு ஸ்திரீயைக் குறித்த வர்ணனை ... தூஷணமான நாமங்களால் நிறைந்ததுமான சிவப்பு நிறமுள்ள மிருகத்தின் மேல் ஒரு ஸ்திரீ ஏறியிருக்கக் கண்டேன்.




51

அந்த ஸ்திரீ இராத்தாம்பரமும் சிவப்பான ஆடை யுந்தரித்து, பொன்னினாலும், இரத்தினங்களினாலும், முத்துக்களினாலும்.




52

தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள்.





53

அவள் நெற்றியில் ஒரு பெயர் எழுதப்பட்டிருந்தது.





54

மேலும் இரகசியம், மகா பாபிலோன் வேசிகளுக்கும், பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய்.
வெளிப்படுத்தல் 17:3-5.



55

பொய் சபையானது, பரிசுத்தம்றற ஸ்திரீ என வர்ணிக்கப்பட்டு அடையாள மொழியிடப்பட்டுள்ளது. விழுந்துபோன சபை கிறிஸ்துவுக்கு விசுவாசமற்றதாகவும், வேத சத்தியத்திற்கு உடன்படாததாகவும் காணப்படுகிறது. தேவனுடைய உபதேசத்திற்கு விலகி, உலகத்தோடு இணைந்த நிலையை யாக்கோபு இதே வார்த்தைகளைக் கொண்டு விவரிக்கிறார்.



56

(வசனம் யாக்கோபு 4:4)
விபசாரரே, விபசாரிகளே, உலக சிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான்.
யாக்கோபு 4:4.



57

விழுந்துப்போன ஸ்திரீ - விழுந்துப்போன பொய் சபைக்கு அடையாளம். உண்மையான ஸ்திரீ, உண்மை சபைக்கு அடையாளம். உண்மை ஸ்திரீயைக் குறித்தத் தீர்க்கதரிசனத்தை மீண்டும் பார்ப்போம். உண்மை ஸ்திரீ, உண்மை சபை, பொய் ஸ்திரீ, பொய்யான சபை.



58

(வசனம் வெளிப்படுத்தல் 12:2, 4)
.... அவள் கர்ப்பதியாயிருந்து, பிரசவ வேதனையடைந்து, பிள்ளை பெறும்படி வருத்தப்பட்டு அலறினாள்.



59

அவளுடைய பிள்ளையைப் பட்சித்துப் போடும்படிக்கு அந்த வலுசர்ப்பம் அவளுக்கு முன்பாக நின்றது.



60

அந்த ஸ்திரீ பிள்ளைப்பெற்றவுடனே வெளிப்படுத்தல் 12:2,4. அந்த ஸ்திரீக்கு, முன்பாக நின்ற அந்த வலுசர்ப்பம் யார்?



61


(வசனம் வெளிப்படுத்தல் 12:7-9)
வானத்திலே யுத்தமுண்டாயிற்று.
மிகாவேலும் அவனைச் சேர்ந்த தூதர்களும் வலுசர்ப்பத்தோடே யுத்தம் பண்ணினார்கள்.
வலுசர்ப்பமும் அதைச்சேர்ந்த தூதரும் யுத்தம் பண்ணியும் ஜெயங்கொள்ளவில்லை.



62

வானத்தில் அவர்கள் இருந்த இடமும் காணப்படாமற்போயிற்று.

# 20 □ சத்தியத்தால் விடுதலை.



63

உலகமனைத்தையும் மோசம் போக்குகிற பிசாசு என்றும், சாத்தான் என்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய பெரிய வலுசர்ப்பம் தள்ளப்பட்டது.



64

அது பூமியிலே விழத்தள்ளப்பட்டது. அதனோடே கூட அதைச் சேர்ந்த தூதரும் தள்ளப்பட்டார்கள். வெளிப்படுத்தல் 12:7-9.



65

(வசனம் வெளிப்படுத்தல் 12:5)
வெளிப்படுத்தல் குழந்தையைக் குறித்தும் பேசுகின்றது. சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும் ஆண்பிள்ளையை அவள் பெற்றாள்.



66

அவளுடைய பிள்ளை தேவனிடத்திற்கும் அவருடைய சிங்காசனத்திற்கும் எடுத்துக்கொள்ளப்பட்டது. வெளிப்படுத்தல் 12:5.



67

இவ்வுலக சரித்திரத்தில் ஒரே ஒரு பிள்ளை, சகல ஜாதிகளையும் இருப்புக்கோலால் ஆளுகை செய்யும். மேலும் தேவனுடைய சிங்காசனத்திற்கு எடுத்துக்கொள்ளப்படுவது இயேசு ஒருவரே. இயேசுவின் இரண்டாவது வருகையைக் குறித்துப் பேசும் போது.



68

(வசனம் வெளிப்படுத்தல் 19:15)
இரும்புக்கோலால் அவர்களை அரசாளுவார்..... வெளிப்படுத்தல் 19:15. பவுல் கிறிஸ்துவைக் குறித்து பேசும்போது.



69

இரும்புக்கோலால் அவர்களை அரசாளுவார்..... வெளிப்படுத்தல் 19:15.

20 □ சத்தியத்தால் விடுதலை.

# 20 □ சத்தியத்தால் விடுதலை.



70

(வசனம் எபேசியர் 1:20)
தேவன் அவரை உன்னதங்களில் தம்முடைய வலது பாரிசத்தில் உட்காரும்படி செய்து.
எபேசியர் 1:20.


71

பரலோகத்தில் தொடங்கின அந்த யுத்தம் பூமியையும் அசைத்தது. அஞ்ஞான மார்க்கம் மூலம் சாத்தான் இயேசுவை பிறப்பிலேயே அழிக்க முயற்சித்தான். ஏரோது, ரோம ஆளுநர், இரண்டு வயதுக்குட்பட்ட எல்லா ஆண்பிள்ளைகளையும் கொல்லுவதற்கு உத்தரவு கொடுத்தான். ஆனால் தேவன் மரியாளையும் யோசேப்பையும் எச்சரித்து எகிப்துக்குத் தப்பிச்செல்லும்படி செய்தார்.


72

பிசாசு இயேசுவை சோதித்து இரட்சிப்பின் திட்டம் இவ்வுலகில் நிறைவேறாவண்ணம் இருப்பதற்கு முயற்சித்தான்.
இயேசுவின் சரீரத்தை சிலுவையில் தொங்கவைத்தது ஒரு வெற்றி என்று சாத்தான் நினைத்தாலும், கல்லறையிலிருந்து இயேசு உயிர்த்தெழுந்த போது அவன் தோற்றுப்போனான்.


73

இயேசு உயிர்த்தெழுந்து பரலோக பிதாவின் சிங்காசனத்திற்கு சென்றார். தீர்க்கதரிசனம் உரைத்தபடியே நிறைவேறினது. கிறிஸ்துவை அழிப்பதிலேத் தோற்றுப்போன சாத்தான் ஸ்திரீயானவள்மேல் கோபம் கொண்டு சபையை அழிக்க முயற்சித்தான்.


74

இயேசுவின் சீஷர்கள் இரத்த சாட்சியாய் மரித்தார்கள். பெற்றோர்களைப் புண்படுத்த விரும்பினால் நீங்கள் என்ன செய்வீர்கள். அவர்களின் குழந்தைகளுக்கு தீங்கு விளைவிப்பார்கள் அல்லவா? சாத்தான் இயேசுகிறிஸ்துவை தொந்தரவு செய்ய இயலவில்லை. அவர் பரலோகத்தில் இருந்தார். ஆதலால் இயேசுவின் பின்னடியார்களை தொந்தரவு செய்கிறான்.


75

பவுல் அப்போஸ்தலா் ரோமாபுரியின் அலங்கங்களுக்கு வெளியே சிரச்சேதம் செய்யப்பட்டார். கிறிஸ்தவா்களில் அநேகா் உபத்திரவப்படுத்தப்பட்டு, சிறைச்சாலைகளில் அடைக்கப்பட்டனா். அநேகா் இரத்தசாட்சியாய் மரித்தனா்.


76

சீஷா்கள் உயிரோடிருக்கும் மட்டும், சபை சத்தியத்திற்காக உறுதியாய் இருந்தது. சீஷா்கள் மரித்தபின், விசுவாச துரோகம் செய்வதினிமித்தம், கள்ள உபதேசம் சபையில் நுழைந்தது.




77

இரண்டாம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியில், அநேக சபைகள் ஒரு புதிய அமைப்பை உருவாக்கிக்கொண்டது.



78

பழைய சீஷா்கள் தங்கள் பிரேதக்குழிகளில் ஓய்வெடுக்கச் சென்ற மாத்திரத்தில், சபையின் ஆதி எளிமை மறைந்தது.
சபையைக் குறித்த ஆராய்ச்சி, பக்கம் 51.


79

நான்காம் நூற்றாண்டில், கொனஸ்தாந்து ராயன் அஞ்ஞானிகளையும், கிறிஸ்தவா்களையும் ஒரு மத அமைப்பின் கீழ் இணைத்து ரோமப்பேரரசாக ஆக முயற்சித்தார். அதன் விளைவாக, கிறிஸ்தவம் மிகப்பிரபலமாயிற்று. அஞ்ஞான ஜனங்கள் சபைக்குள்ளாக ஞானமுழுக்குக் கொடுக்கப்பட்டு, தங்கள் கொள்கைகளையும், பழக்கவழக்கங்களையும் தங்களோடு கொண்டுவந்தனா். சபை இந்தத் தவறுகளை தழுவிய போது, அது தன் நோக்கத்தை இழந்தது.



80

அவா்கள் கிறிஸ்தவா்களாக மாறினும், எண்ணத்திலும், பழக்கங்களிலும் அஞ்ஞானிகளாகவே இருந்தனா். அந்தப்பழைய அஞ்ஞான மார்க்கத்தாரிடமிருந்து சபைகள் அஞ்ஞானமார்க்கத்தை துடைத்தழிக்க முடியவில்லை.

20  சத்தியத்தால் விடுதலை.



81

மாறாக, ஞானமுழுக்குப் பெற்ற அஞ்ஞான மார்க்கத்தாராகிய நாடோடி இனத்தவர்கள் ஒருங்கிணைக்கப்பட்ட கிறிஸ்தவத்தின் நீதிநெறி ஆற்றல்களை செயலிழக்கும் அளவுக்கு அஞ்ஞானமார்க்கம் வீரியம் குறையச் செய்திருக்கிறது என்று கருதினர். -செஞ்சூரிஸ் ஆப் கிறிஸ்துவம். சுருக்க வரலாறு, பக்கம் 58.


82

இருந்தபோதிலும், பல கிறிஸ்தவர்கள் தேவனுடைய சத்தியங்களுக்கு உண்மையாயிருந்து, சபைக்குள் நழுவி வந்திருக்கும் மாற்றங்களைக் கண்டனம் செய்தனர். தங்கள் நிலையிலிருந்து சமரசமாக அவர்கள் மறுதலித்தனர், அவர்களின் உறுதித் தன்மைக்காக அநேகர் துன்புறுத்தப்பட்டனர்.

அரசு சபையின் தவறான பழக்கங்களைப் புறக்கணிப்பது மரண தண்டனைக்குரிய குற்றமாகக் கருதும் கட்டளைகளை ரோமச் சக்கரவர்த்திகள் உடனே பிறப்பித்தனர்.



83

(வசனம் வெளிப்படுத்தல் 12:13)
இதையெல்லாம் முன் அறிந்து, யோவான் எழுதினார், வலுசர்ப்பமானது ..... அந்த ஆண்பிள்ளையைப் பெற்ற ஸ்திரீயைத் துன்பப்படுத்தினது.
ஸ்திரீக்கு என்ன ஆயிற்று?



84

(வசனம் வெளிப்படுத்தல் 12:6)
ஸ்திரீயானவள் ..... வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள். தேவனால் ஆயத்தமாக்கப்பட்ட இடம் அவளுக்கு உண்டாயிருந்தது.



85

அங்கே ஆயிரத்திருநூற்றறுபது நாளளவும் அவளைப் போஷிப்பதற்காக.
வெளிப்படுத்தல் 12:6.
தனது ஜனங்கள் துன்புறுத்தப்பட வேண்டிய கால அளவை தேவன் வெளிப்படுத்துகிறார். கவனியுங்கள். 1260 நாட்கள்.
வேதாகம தீர்க்கதரிசனத்தில் ஒரு நாள் ஒரு வருட கால அளவுக்குப் பொருந்தும் என்பதை நாம் ஏற்கனவே கண்டுபிடித்துவிட்டோம்.



86

(வசனம் எசேக்கியேல் 4:6)
எசேக்கியேல் எழுதினார் ..... ஒவ்வொரு வருஷத்துக்குப் பதிலாக ஒவ்வொரு நாளை உனக்குக் கட்டளையிட்டேன்.
எசேக்கியேல் 4:6.
கே.ஜே.வி


87

எனவே தேவனுடைய உண்மையுள்ள ஜனங்களை ஒடுக்குதல் 1260 வருடங்கள் தொடரும் என்று வெளிப்படுத்தலில் முன்னுரைக்கப்பட்டிருக்கிறது.



88

சரித்திரம் வேதாகம தீர்க்கதரிசனத்தை மிகத் துல்லியமாக உறுதிப்படுத்துகிறது.
ரோமில் உள்ள சபையை எதிர்த்த கடைசி இரண்டு ஆரிய வல்லமைகளை அழிக்கும்படி ரோமச் சக்கரவர்த்தி ஜஸ்டினியன் ரோமப் படைத் தளபதி பெலிசாரியசுக்குக் கட்டளை கொடுத்தார்.



89

கி.பி 538ல் இந்த வல்லமைகளில் கடைசியானது முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது. ரோமப் பாதிரியாரை சபையின் தலைவர், மதப்புரட்டுக்களை உண்மையும், செம்மையுமாய் சரி செய்பவர் ஆக இருக்கும்படி ஜஸ்டினியன் அறிவித்தார்.


90

தேவ வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் சத்தியங்களைத் தொடர்ந்து கைக்கொள்ளும் உண்மையுள்ள கிறிஸ்தவர்கள் தங்கள் விசுவாசத்தைக் காத்துக்கொள்ள ஒரே வழி வெளிப்படுத்தலில் முன்னுரைக்கப்பட்டது போல ஓடுவதே சிறந்தது என கண்டுபிடித்தனர்.
ஸ்திரீயானவள் வனாந்தரத்திற்கு ஓடிப்போனாள்.

20 □ சத்தியத்தால் விடுதலை.

# 20 □ சத்தியத்தால் விடுதலை.


91

வால்தென்சியர்கள், ஆல்பிஜென்சியர்கள் மற்ற உண்மைக் கிறிஸ்தவர்கள் வட இத்தாலியின் ஆல்ப்ஸ் மலைகளிலும், தெற்கு பிரான்சுக்கும் ஓடிப் போனார்கள். ஹியூகனாட்ஸியர்கள் பிரான்சு முழுவதும் சிதறினர். தனிமையான பள்ளத்தாக்குகளிலும், ஆளரவமற்ற குகைகளிலும், உயர்ந்த மலைகளிலும் அவர்கள் தங்கினர். பொதுக் குற்றவாளிகள் போல் அவர்கள் வேட்டையாடப்பட்டனர். அநேகர் கொல்லப்பட்டனர். அவர்கள் குற்றம் என்ன? இயேசுவின் போதனைகளை அவர்கள் விட விரும்பவில்லை என்பதே.


92

விசுவாச சமரசம் செய்வதைவிட, லட்சக்கணக்கான கிறிஸ்தவர்கள் மரித்தனர்.
ஐந்து கோடிக்கும் மேற்பட்டவர்கள் இறந்திருக்கலாம் என்று சில வரலாற்று ஆசிரியர்கள் கணக்கிட்டிருக்கின்றனர்.
தாங்கள் தேவ சித்தம் செய்வதாக விசுவாசித்த மற்ற கிறிஸ்தவர்கள் என்று என்னப்பட்டவர்கள் அவர்களை இரத்த சாட்சிகளாக மரிக்கச் செய்தனர்.


93

தேவனுடைய சத்தியம் முடிவில் வென்றது. வேதாகமம் மக்களின் மொழிகளுக்கேற்றாற் போல் மொழி பெயர்க்கப்பட்டது. அச்சு இயந்திரத்தின் கண்டுபிடிப்பால் இப்பொழுது உலக முழுவதும் வேதம் பரவியிருக்கிறது. தேவனுடைய சத்தியம் இனி ஒருக்காலும் மறைத்து வைக்கப்படாது. அது இப்பொழுது வெளிப்படுத்தப்பட வேண்டியதாயிருக்கிறது.


94

துணிவுள்ள சீர்த்திருத்தவாதிகள் தைரியமாக தேவனுடைய வார்த்தையைப் பறைசாற்றினர். ஹஸ் மற்றும் ஜெரோம் போன்ற சிலர் மரத்தில் கட்டப்பட்டு எரிக்கப்பட்டனர்.


95

லூத்தர், விக்ளிஃப் மற்றும் டின்டேல் போன்ற மற்றவர்கள் வேட்டையாடப்பட்டு, துன்புறுத்தப்பட்டனர்.



96

இருந்தபோதிலும், அமெரிக்கா கண்டுபிடிக்கப்பட்டதோடு, துன்புறுத்தப்பட்ட ஐரோப்பிய கிறிஸ்தவர்களுக்கு புதிய விடுதலையும், ஒரு புதிய அடைக்கலமும் அளிக்கப்பட்டது.



97

புதிதாய்ப் பிறந்த தேசத்தின் கரைகளிலே, அரசாங்க ஆன்மீக சுதந்தரத்திற்கான அஸ்திபாரம் இடப்பட்டது.




98

(வீடியோ 10 வினாடிகள்)
வெளிப்படுத்தல் 12ல் முன்னுரைக்கப்பட்ட சமரசம் மற்றும் துன்புறுத்தலின் காலம் கடைசியாக 1798ல் ஒரு முடிவுக்கு வந்தது. துன்புறுத்தலின் காலம் 538ல் தொடங்கி சரியாக 1260 ஆண்டுகளுக்கு பின், நெப்போலியன் தனது தளபரி பெர்த்தியரை அனுப்பிப் போப்புவைக் கைது செய்தபோது முடிவடைந்தது.



99

இந்த தீர்க்கதரிசன காலம் ஒரு முடிவுக்கு வந்தபோது, வேதத்தையும், அதன் போதனைகளையும் சார்ந்திருக்கும் ஒரு உண்மையுள்ள விசுவாசிகள் கூட்டம் இன்னும் தேவனுக்கு இருந்தது.
இந்த தீர்க்கதரிசன காலத்திற்குப் பின் மீந்திருக்கிற தேவ சபையின் மீது சாத்தான் தன் உக்கிர கோபத்தைத் திருப்புவான் என்ற தீர்க்கதரிசனம் முன் கூறியிருக்கிறது.




100

(வசனம் வெளிப்படுத்தல் 12:17)
அப்பொழுது வலுசர்ப்பமானது ஸ்திரீயின் மேல் கோபங்கொண்டு, அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம் பண்ணப் போயிற்று.




101

தேவனுடைய கற்பனையைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களும்.
வெளிப்படுத்தல் 12:17.

20 சத்தியத்தால் விடுதலை.


102

பெரிய துணியிலிருந்து கடைசியாக இருக்கும் சிறு துணியைத் தான் மீதியானது என்று சொல்லுவார்கள். அதுபோலவே, தேவனுடைய சபையில், கடைசிப் பகுதியில் இருப்பவர்களே மீதமானவர்கள் அந்த சபை, இயேசு மீண்டும் இந்த பூமிக்கு வரும் கடைசி காலத்திற்கு முன்புவரை இருக்கும் சபை.



103

இந்த வார்த்தையை அப்படியே மொழிப்பெயர்த்து நாம் சொல்வோமென்றால், சாத்தான் கோபங்கொண்டு கடைசி கால சபையோடு யுத்தம் பண்ணப்போனான். என்று சொல்லலாம்.
தேவனுடைய ஜனம் இந்தக் கடைசி காலம் வரை சத்தியத்தைக் கடைபிடிப்பதைக் கண்டு, சாத்தான் மிகவும் எரிச்சலடைகிறான்.



104

இந்தக் கடைசி கால சபையை அறிந்து கொள்ள, யோவான் இரண்டு அடையாளங்களைச் சொல்கிறார். வலுசர்ப்பமானது ஸ்திரீயின் மேல் கோபங்கொண்டு, அவளுடைய சந்ததியான மற்றவர்களுடனே யுத்தம் பண்ணப்போனது.



105

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்கள், இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்கள்.
வெளிப்படுத்தல் 12:17.
இந்த மீதமானவர்கள், எல்லாக் கற்பனைகளையும் கைக்கொள்ளுகிறவர்கள்.



106

இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்கள்.


107

ஆனால் தேவனுடைய கட்டளைகளுக்குக் கிறிஸ்தவர்கள் கீழ்ப்படிய வேண்டும் என்று ஒவ்வொரு சபையும் போதிக்கிறதா?
சரியாக இல்லை. ஆனால் பல மத அமைப்புகள் தங்கள் உறுப்பினர்கள் ஏதோ ஒரு வழியில் தேவனுடைய அறிவுரைகள் சிலவற்றிற்குக் கீழ்ப்படியாதிருப்பதற்கே போதனை செய்கின்றன. உதாரணமாக சில வழிபாட்டுக் கூட்டங்களில் சிலைகளுக்கு முன் வணங்குவதற்குக் கற்றுக் கொடுக்கப்படுகிறார்கள்.
மற்றவர்கள் தேவனுடைய நாமத்தின் புனிதத் தன்மையைப் புறக்கணிக்கின்றனர்.



108

(வசனம் யாத்திராகமம் 20:8-10)
நான்காம் கற்பனையில் விளக்கப்பட்டுள்ள சிருஷ்டிப்பின் சின்னம் குறித்த தெளிவை ஆன்மீக உலகம் அநேகமாக இழந்துவிட்டிருக்கிறது.




109

ஆறு நாளும் நீ வேலை செய்து, உன் கிரியைகளையெல்லாம் நடப்பிப்பாயாக.




110

ஏழாம் நாளோ உன் தேவனாகிய கர்த்தருடைய ஓய்வுநாள். யாத்திராகமம் 20:8-10.



111

(வசனம் வெளிப்படுத்தல் 12:17)
தேவனுடைய மீதமானவர்கள் அல்லது கடைசிகால சபை, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்வது மட்டுமல்ல. ஆனால் தீர்க்கதரிசனம் சொல்கறிது. அது இயேசுகிறிஸ்துவைப் பற்றிய சாட்சியை உடையதாயிருக்கும்.
(வெளிப்படுத்தல் 12:17).



112

(வசனம் வெளிப்படுத்தல் 19:10)
வெளிப்படுத்தல் 19:10 சொல்கிறது. இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசன ஆவியாயிருக்கிறது.



113

தேவனுடைய கடைசிகால சபையானது, தீர்க்கதரிசன ஆவியுடன் சேர்த்து, ஆவியின் வரங்களைக் கொண்டிருக்கும்.
இந்த விசேஷ வரத்தை இன்னும் விளக்கமாக பிற்காலத்தில் நாம் படிப்போம்.
அவருடைய கடைசி கால சபைக்கானத் தேடுதலில் நமக்கு உதவ, தேவன் மற்றும் சில குணாதிசயங்களைக் கொடுத்திருக்கிறார்.
அவரது ஜனங்கள் சுவிசேஷத்தால் இந்த உலகத்தை சந்திக்கும் பணியில் ஈடுபட்டிருப்பார்கள். அவர் தமது சபைக்கு கொடுத்தப் பணியாவது.




114

(வசனம் மத்தேயு 28:19, 20)
ஆகையால் நீங்கள் புறப்பட்டுப் போய், சகல ஜாதிகளையும் சீஷராக்கி,



115

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே அவர்களுக்கு ஞானஸ்நானம் கொடுத்து,



116

நான் உங்களுக்கு கட்டளையிட்ட யாவையும் அவர்கள் கைக்கொள்ளும்படிக்கு அவர்களுக்கு உபதேசனம் பண்ணுங்கள், இதோ,



117

உலகத்தின் முடிவு பரியந்தம், சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன். ஆமென். மத்தேயு 28:19,20.


118

அகிலமெங்கிலும் நித்திய சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் கட்டளையானது வெளிப்படுத்தல் 14ல் மூன்று தேவதூதர்கள் வானத்தில் பறப்பதாக அடையாளமாகக் காட்டப்பட்டுள்ளது.




119

(வசனம் வெளிப்படுத்தல் 14:6,7)
பின்பு, வேறொரு தூதன் வானத்தின் மத்தியிலே பறக்கக் கண்டேன்.



120

அவன் பூமியிலே வாசம் பண்ணுகிறவர்களுக்கு அறிவிக்கத் தக்கதாக நித்திய சுவிசேஷத்தை யுடையவனாயிருந்து,



121

சகல ஜாதிகளுக்கும், கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும்



122

மிகுந்த சத்தமிட்டு: தேவனுக்குப் பயந்து, அவரை மகிமைப்படுத்துங்கள். அவர் நியாயத் தீர்ப்புக் கொடுக்கும் வேளை வந்தது.



123

வானத்தை யும், பூமியை யும், சமுத்திரத்தை யும், நீரூற்றுக்களை யும் உண்டாக்கினவரையே தொழுது கொள்ளுங்கள் என்று கூறினான்.
வெளிப்படுத்தல் 14:6,7.



124

பூமியின் கடைசி மணி நேரங்களிலே வாழ்பவர்களுக்கு நியாயத் தீர்ப்பின் நாள் வந்துவிட்டது என்பதை நினைப்பூட்ட இது ஒரு எச்சரிக்கை ஆகும்.
தேவனுடைய சிருஷ்டிக்கும் வல்லமையின் மிகப்பெரிய சின்னமாகிய ஏழாம் நாள் ஓய்வுநாளை யும் இது நினைப்பூட்டுகிறது.
முத்தூதின் இரண்டாம் பாகமானது வசம் 8ல் உள்ளது.



125

(வசனம் வெளிப்படுத்தல் 14:8)
வேறொரு தூதன் பின்சென்று, பாபிலோன் மாநகரம் விழுந்தது! விழுந்தது!.

20  சத்தியத்தால் விடுதலை.




126

தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே! என்றான். வெளிப்படுத்தல் 14:8.
தேவனுடைய மெய்ய ஜனங்கள் குழப்பமான ஆன்மீக உலகிலிருந்து பிரிந்துவரும்படி இச்செய்தி அழைக்கிறது. கடைசி மற்றும் மிகவும் வல்லமையான எச்சரிக்கை இந்த தீர்க்கதரிசனத்தின் மூன்றாம் பகுதியில் கொடுக்கப்பட்டிருக்கிறது.



127

(வசனம் வெளிப்படுத்தல் 14:9,10)
அவர்களுக்கு பின்னே மூன்றாம் தூதன் வந்து, மிகுந்த சத்தமிட்டு,



128

மிருகத்தையும், அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது, தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக் கொள்ளுகிறவனெவனோ,




129

அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட அவருடைய உக்கிரமாகிய மதுவைக் குடிப்பான். வெளிப்படுத்தல் 14:9,10.




130

மிருகத்தையும், அதின் சொரூபத்தையும் வணங்குவதற்கும், அதின் முத்திரையைத் தரித்துக்கொள்வதற்கும் எதிராக இந்த உலகம் எச்சரிக்கப்பட வேண்டும்.



131

(வசனம் யோவான் 10:16)
இந்தத் தொழுவத்திலுள்ளவைகளல்லாமல் வேறே ஆடுகளும் எனக்கு உண்டு. அவைகளையும் நான் கொண்டுவர வேண்டும்.



132

அவைகள் என் சத்தத்துக்குச் செவி கொடுக்கும். அப்பொழுது ஒரே மந்தையும் ஒரே மேய்ப்பனுமாகும். யோவான் 10:16.


133

தேவனுக்கு எல்லா சபைகளிலும் உண்மையான விசுவாசிகள் இருக்கின்றனர். ஆனால் ஒரு காலம் வரப்போகிறது. அப்போது அவையெல்லாம் ஒரே மந்தையும் ஒரே சபையும் ஆகும்.
தேவனுடைய வேதப் போதனைகளின்படி சரியாக நடக்காத மந்தைகளில் உள்ள அவருடைய ஆடுகளை அவர் அழைப்பார் என்று இயேசு சொன்னார்.



134

(வசனம் வெளிப்படுத்தல் 18:4)
வெளிப்படுத்தின புஸ்தகத்தை எழுதின யோவான் அந்தக் காலத்தை முன்னறிவிக்கிறார்.
பின்பு வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அது என் ஜனங்களே, நீங்கள் அவளை விட்டு வெளியே வாருங்கள்.



135

நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் இருக்கும்படிக்கு.
வெளிப்படுத்தல் 18:4.
கடைசி காலத்தில் நிலவியிருக்கும் தவறுகளிலிருந்தும், குழப்பங்களிலிருந்தும் தேவனின் உண்மையான விசுவாசிகள் அழைக்கப்படுவார்கள்.
கிறிஸ்துவின் வருகைக்கு சற்று முன் சபைகளிலுள்ள குழப்பங்களிலிருந்து அழைக்கப்படும் பிள்ளைகளை வேதம் எவ்விதம் விவிரிக்கிறது என நீங்கள் அறிய வேண்டுமா?



136

(வசனம்: வெளிப்படுத்தல் 14:12, 14)
தேவனுடைய கற்பனைகளையும் இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக் கொள்ளுகிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும்.



137

பின்பு நான் பார்த்தபோது, இதோ வெண்மையான மேகத்தையும், அந்த மேகத்தின் மேல் மனுஷகுமாரனுக்கு ஒப்பானவராய்.

20 □ சத்தியத்தால் விடுதலை.




138

தமது சிரசின் மேல் பொற்கிரீடத்தையும், தமது கையிலே கருக்குள்ள அரிவாளையுமுடைய ஒருவர் உட்காந்திருக்கிறதையும் கண்டேன்.
வெளிப்படுத்தல் 14:12, 14.




139

வேதாகமத்தில் சொல்லப்பட்ட கடைசிகால தேவனுடைய சபையின் பிரத்தியேகமான குணங்களை சுருக்கமாக பார்க்கலாம்.




140

1798ல் முடிந்த பயங்கர உபத்திரவத்திற்கு பின் தேவனுடைய மீதமான சபை தோன்றும்.




141

இயேசுகிறிஸ்துவின் மேலுள்ள விசுவாசத்தை உடையவர்களாக இருப்பார்கள். அது அவர்களை அவருடைய எல்லாக் கற்பனைகளுக்கும் கீழ்படிய வழிநடத்தும்.



142

இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு ஜனங்களை ஆயத்தப்படுத்தும் படியான விசேஷமான எச்சரிப்பின் தூதுகளை அறிவிப்பவர்களாக இருப்பார்கள்.



143

ஆவியின் வரத்தை உடையவர்களாக அதிலும் விசேஷமான தீர்க்கதரிசன வரம் உடையவர்களாக இருப்பர்.


144

முதல் பார்வையில் எல்லா சபைகளும் ஒன்று போல் தான் தோன்றும்.


145


ஆனால் அவருடைய பரிசுத்த வார்த்தையில் மெய்த் திருச்சபை பற்றிய தேவனுடைய விளக்கத்தைப் படித்தால், இந்த வேத குணாதிசயங்கள் கொண்டிராத எவரையும் முற்றிலும் அறிந்துகொள்ளலாம்.இன்றைய ஆன்மீக உலகின் குழப்பத்தில், தேவனுடைய கடைசிகால சபையை காண, நீங்கள் ஒரு வேளை ஆராய்ந்து, அவைகளிலிருந்து மாற முயற்சித்துக் கொண்டிருக்கலாம். ஒரே ஒரு மெய்த்திருச்சபை மட்டுமே உண்டு என்பதை நான் நம்புகிறேன். அது வேதத்தை விசுவாசிக்கிற, கிறிஸ்துவை மையமாகக் கொண்ட ஓய்வுநாளை ஆசரிக்கின்ற, ஒரு உலகாளவிய அட்வெந்து இயக்கம் ஆகும். அதனால் தான் நான் ஒரு ஏழாம்நாள் அட்வெண்டிஸ்டாக இருக்கிறேன். இந்த திருச்சபை எல்லா குணாதிசயங்களையும் உடையதாயிருக்கிறது என்று நம்புகிறேன்.


146

நாம் இந்தக் குறிப்பிடத்தக்க தீர்க்க தரிசனத்தைப் படித்ததில் இருந்து, தேவன் ஒரு சிறப்பான செய்தியை வைத்திருக்கிறார். ஒரு சிறப்பான மக்கள் அச்செய்தியை முழு உலகத்திற்கும் கொண்டு செல்ல வேண்டும் என்பதை வேதம் தெளிவாக கூறுகின்றது. ஆனால் இந்த வேதாகம உண்மைகளை அறிந்தால் மட்டும் போதாது.


147

இயேசு கிறிஸ்துவோடு முழுமையாய் நடப்பதில் கிடைக்கும் சமாதானம் மற்றும் சந்தோஷத்தோடு, தேவனுடைய வார்த்தையில் வெளிப்படுத்தப்பட்டிருக்கிற சத்தியத்தைப் பின்பற்றுவதும் அவசியமாகிறது.



148

(வசனம்: யோவான் 13:17)
நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால், இவைகளைச் செய்வீர்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள்.
யோவான் 13:17.

20 சத்தியத்தால் விடுதலை.

## 20 சத்தியத்தால் விடுதலை.



149

உங்கள் வாழ்க்கையில் நீங்கள் மிக முக்கிய தீர்மானம் ஒன்றை எடுக்க தேவன் உங்களை அழைத்திருக்கிறார். இந்த தொடர் கூட்டத்தில் தேவனுடைய வார்த்தை பிரசங்கிக்கப்பட்டதை விசுவாசிக்கிறீர்களா? இந்த தொடர் கூட்டத்திலே தேவனுடைய வார்த்தை அறிவிக்கப்பட்டதை நீங்கள் கேட்டதாக விசுவாசிக்கிறீர்களா? இந்த தொடர்கூட்டத்திலே பரிசுத்த ஆவி உங்கள் இருதயத்தை உணர்த்தியதை விசுவாசிக்கிறீர்களா? நாம் தேவனுடைய சத்தியத்தை கேட்கும்போது ஒரு தீர்மானம் எடுக்க பரிசுத்த ஆவியானவர் நம்மை உணர்த்துகிறார். இதுவே தீர்மானத்திற்கான நேரம் ஆம் கர்த்தாவே உமது சத்தியத்தை நான் கைக்கொள்ள விரும்புகிறேன். ஆம் இயேசுவே பரிசுத்த ஆவியானவரின் செயலுக்கு நான் இணங்குகிறேன். எல்லா வழியிலும் இப்பொழுதே நான் உம்மைப் பின்பற்றுவேன். சத்திய வழியில் நடக்க நான் தெரிந்து கொள்கிறேன் என்று நீங்கள் சொல்கிறீர்களா? இது உங்கள் தீர்மானமாயிருக்குமானால், நான் ஜெபிக்கும்போதும் இந்நேரத்திலே நீங்கள் எழுந்திருப்பீர்களா?

# 21 □ நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.



1

தேவன் இன்னும் தமது தீர்க்கதரிசிகள் மூலமாகப் பேசுகிறார்.


2

உலகின் பல்வேறு பகுதிகளில், விஞ்ஞானிகள் பயன்படுத்துகிற சக்திவாய்ந்த வானொலி தொலை நோக்கிகள் விண்வெளியிலிருந்து சப்தங்களைக் கவனிக்கின்றன.


3

மற்ற உலகத்திலிருக்கிற அறிவு ஜீவிகளிடத்திலிருந்து ஒரு செய்தியை என்றாவது ஒரு நாள் கேட்போம் என்று அவர்கள் எதிர்பார்க்கின்றனர்.


4

இதுவரைஆயிரக்கணக்கான ஆண்டுகளாக ஒரு செய்தி பூமிக்கு பளிச்சிட்டுக் கொண்டிருக்கிறது என்பதற்கான சான்று உண்டு. ஆனால் வெகுசிலரே அதைக் கவனிக்கின்றனர். இந்தக் கிரகத்திற்கு சிருஷ்டிகரிடத்திலிருந்து, தமது கலகக்கார பிள்ளைகளை மறுபடியும் வெல்ல முயற்சிக்கும் தேவனிடத்திடத்திலிருந்து வரும் அன்பின் செய்திதான் அது.


5

தேவனுக்கும், மனித இனத்துக்கும் இடையிலான இந்தப்பிரிவினை எப்பொழுதும் இருந்ததில்லை. கிரகத்திற்கு பூமியில் எல்லாமே அழகாக தொடங்கினது. தேவனுடைய சாயலில் படைக்கப்பட்ட இரண்டு பரிபூரண மக்களுக்காக ஒரு பரிபூரண உலகம்.




6

(வீடியோ 7 வினாடிகள்)
அவர்களுடைய தோட்ட வீட்டிலே, தேவன் வந்து முகமுகமாக அவர்களோடு உலாவி உரையாடினார். குளிர்ச்சியான மாலையிலே அவர்கள் ஒன்றாக உலாவுகிறதை சற்றுக் கற்பனை செய்துப்பாருங்கள்.

# 21  நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.


7


ஐக்கியமாக அழகான உறவு - இப்படித்தான் தேவன் திட்டமிட்டிருந்தார். அவர்களை வெவ்வேறாகப் பிரிப்பதற்கு ஒன்றுமே இல்லை. அவைகள் ஒன்றிணைந்த மகிழ்ச்சியான சந்திப்புகளாக இருந்திருக்கும்.


8

ஆனால் சொல்ல வருத்தமாயுள்ளது. இந்த அன்பு, ஐக்கிய உறவு, வேதத்தின் இரண்டு அதிகாரங்களுக்கு மட்டுமே நீடித்தது.


9

ஆதியாகமம், அதிகாரம் 3 ஒரு துயரமான கதையைக் கூறுகிறது. ஆதாம், ஏவாள் பாவம் செய்தனர்.


10

தேவனுடைய பரிபூரண அன்பின் விதிமுறைக்கு விரோதமாக அவர்கள் கலகம் செய்தனர். பாவம் பிரிக்கிறது. பாவமும், தேவனும் முரண்பாடுள்ளது. ஆதாமும், ஏவாளும் தேவனோடுள்ள, நேரடித் தொடர்பில், ஐக்கியத்தில் நீடித்திருக்க முடியவில்லை.


11

அவர்கள் (லூசிபர்) சர்ப்பத்துக்கு செவிசாய்த்து, தேவனுக்குப் பதிலாக அவனுக்குக் கீழ்ப்படிந்தனர். அதுதான் பாவம்.



12

(வசனம்: ஆதியாகமம் 3:8)
பகலில் குளிர்ச்சியான வேளையிலே தோட்டத்தில் உலாவுகிற தேவனாகிய கர்த்தருடைய சத்தத்தை அவர்கள் கேட்டார்கள் என்று வேதம் கூறுகிறது.



13

அப்பொழுது ஆதாமும் அவன் மனைவியும் தேவனாகிய கர்த்தருடைய சந்நிதிக்கு விலகி, ஒளிந்துக் கொண்டார்கள்.



14

தோட்டத்தின் விருட்சங்களுக்குள்ளே.
ஆதியாகமம் 3:8.
ஆதாமும், ஏவாளும் மறைந்து கொண்டனர். தேவனுடைய முகத்தைக் காண அவர்கள் விரும்பவில்லை. அவர்கள் மறைந்துக் கொள்ள மாத்திரம் விரும்பினார்கள். பாவமும் அதைத்தான் செய்கிறது.



15

அது பிரிக்கிறது. தேவனுக்கும், மனிதனுக்கும் இடையிலான, மனிதனுக்கும், மற்றவர்களுக்கும் இடையிலான அன்பின் உறவுகளை உடைத்துவிடுகிறது.



16

(வசனம்: ஏசாயா 59:2)
உங்கள் அக்கிரமங்களே உங்களுக்கும், உங்கள் தேவனுக்கும் நடுவாகப் பிரிவினை உண்டாக்குகிறது.



17

உங்கள் பாவங்களே அவர் முகத்தை உங்களுக்கு மறைக்கிறது. ஏசாயா 59:2. ஆம், பாவம் தேவனிடத்திலிருந்து நம்மைப் பிரித்துவிட்டது. ஆனால், அவருடைய அன்பிலிருந்து நம்மைப் பிரிக்கவில்லை. பாவம் நிறைந்த மனிதனோடு தொடர்பு வைத்துக் கொண்டிருக்க தேவன் ஒரு வழியைக் கண்டுபிடித்தார்.


18

பூமியில் உள்ள தம் பிள்ளைகளோடு தொடர்பு கொண்டு, வழிகாட்ட, போதிக்க, தமது திட்டங்களை வெளிப்படுத்த தேவன் மற்றொரு வழியை நிறுவினார். தமது அன்பு, திட்டங்களை மனித இனத்துடன் பகிர்ந்து கொள்ள, தம்மால் நம்பத்தகுந்த தமது வாயாக செயல்படக்கூடிய ஆண்களை, பெண்களை அவர் தெரிந்தெடுத்தார்.


19

அவர் தெரிந்தெடுத்தவர்களில் மோசே, மிரியாம், சாமுவேல், எலியா, உள்தாள், தெபோராள், ஏசாயா, எரேமியா மற்றும் பலர் அடங்கியிருந்தனர்.

21 □ நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.

# 21  நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.


20

தீர்க்கதரிசிகள், தீர்க்கதரிசினிகள் தேவனுக்காகப் போகிற மக்களாக இருந்தனர்.



21


நான் உன்னை நேசிக்கிறேன். நான் உன்னைப்பற்றி அக்கறை கொள்கிறேன். உனக்கு உதவ நான் ஒரு திட்டம் வைத்திருக்கிறேன். இவ்வாறு தேவன் கூறுவது போல் இருந்தது.


22

கர்த்தருக்கும், வெவ்வேறு வேத கதாபாத்திரங்களுக்கும் இடையிலான அநேக உரையாடல்கள் வேதத்தில் பதிவாகியிருக்கிறது. ஆனால், அது ஆதாமும், ஏவாளும் ஏதேன் தோட்டத்தில் மகிழ்ந்து களிகூர்ந்த, அந்த உரையாடல்கள் அந்நியோன்னியம் போன்றதாக இருக்கவில்லை.


23

சில நேரங்களில் தேவன் பரிசுத்த ஆவி மூலமாக பேசினார், சில நேரங்களில் பரிசுத்த தூதர்களை கொண்டு சில நேரங்களில் தூதுவர்களாக இருக்கும்படி தாம் தெரிந்து கொண்ட மக்கள் மூலமாகவும் பேசினார். நாம் கண்டுபிடிக்க கூடுமானவரை, மனித சரித்திரத்தின் முதல் 2,500 ஆண்டுகளில் தேவனிடத்திலிருந்து எந்த எழுத்தாலான வெளிப்பாடும் இல்லை. தேவனால் கற்பிக்கப்பட்டவர்கள் தேவன் தங்களுக்கு சொன்னதை வாய்வழியாக பகிர்ந்து கொண்டிருக்கலாம். இருப்பினும் தேவன் தம் மக்களோடு அடிக்கடி தொடர்பு கொள்ள தெரிந்துகொண்ட வழி என்னவென்றால் பரிசுத்த ஆவியின் அசைவாடுதலால் தேவனுக்காகப் பேசின மனிதர்களும், பெண்களுக்கான தீர்க்கதரிசிகளும் தீர்க்கதரிசிகளுமே ஆவர்.



24

(வசனம் ஆமோஸ் 3:7)
இது அதிக ஆச்சரியமானதாக இருக்கக் கூடாது. வேதம் தெளிவாக உரைப்பதாவது.
கர்த்தராகிய ஆண்டவர் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார். ஆமோஸ் 3:7.

# 21 □ நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.


25

இந்த தீர்க்கதரிசிகள் தங்கள் செய்திகளை எப்படிப் பெற்றுக் கொண்டார்கள் என்பதை நாம் பார்ப்போம்.



26

(வசனம்: 2 பேதுரு 1:21)
தீர்க்கதரிசனமானது ஒரு காலத்திலும் மனுஷருடைய சித்தத்தினாலே உண்டாகவில்லை.



27

தேவனுடைய பரிசுத்த மனுஷர்கள் பரிசுத்த ஆவியினாலே ஏவப்பட்டுப் பேசினார்கள்.
2 பேதுரு 1:21.
உண்மையாகவே, நோவா காலத்தின் மிகப்பெரிய ஜலப்பிரளயத்திற்கு முன்பாகவே தேவன் தீர்க்கதரிசிகளைக் கொண்டிருந்தார்.



28

(வசனம்: யூதா 14)
கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை ஏனோக்கு அறிவித்தார். ஆதாமுக்கு ஏழாந்தலைமுறையான ஏனோக்கும், இவர்களைக் குறித்து முன்னறிவித்தாவது.



29

இதோ, ஆயிரமாயிரமான தமது பரிசுத்தவான்களோடுங்கூட கர்த்தர் வருகிறார்.
யூதா 14.
வேதாகமத்தில் குறிப்பிட்டுள்ள முதல் தீர்க்கதரிசன் வரம் பெற்றவர் ஏனோக் மற்றவர்களும் இருந்தனர்.



30

(வசனம்: அப் 3:21)
வேதம் சொல்லுகிறது. உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகளெல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள். அப்போஸ்தலர் 3:21.
மற்றொரு தீர்க்கதரிசியாகிய நோவா வெள்ளத்தால் ஏற்படும் உலக அழிவை அது நடப்பதற்கு 120 ஆண்டுகளுக்கு முன்பே முன்னுரைத்தார்.

# 21 நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.


31

ஜலப்பிரளயத்திற்குப் பின் மிரியாம், தெபோராள், எரேமியா, ஏசாயா, எசேக்கியேல், இவர்களோடு அநேக தீர்க்கதரிசிகளையும் காணலாம். அவர்கள் நீதியைப் படிக்கிறவர்களாக இருந்தனர். அவர்கள் தேவனுக்காக பேசுகிறவர்களாக, ஒழுக்க ஆவிக்குரிய வழிகாட்டிகளாக இருந்தனர்.


32

சில நேரங்களில் தரிசனங்கள் மூலமாக, சில நேரங்களில் சொப்பனங்கள் மூலமாக, சில நேரங்களில் தேவ வார்த்தை மூலமாக, தேவன் தமது சித்தத்தை வெளிப்படுத்தினார். ஆனால் எப்பொழுதுமே பரிசுத்த ஆவியானவர் மூலமாக காரியங்களை வெளிப்படுத்தினார்.




33

(வசனம்: எண்ணாகமம் 12:6)
கர்த்தர் சொன்னார். உங்களுக்குள்ளே ஒருவன் தீர்க்கதரிசியாயிருந்தால், கர்த்தராகிய நான் தரிசனத்தில் என்னை அவனுக்கு வெளிப்படுத்தி.



34

சொப்பனத்தில் அவனோடே பேசுவேன் எண்ணாகமம் 12:6
சில நேரங்களில் தேவனுக்காகப் பேசும்படி, தேவனுடைய தூதர்கள் போதிக்கப்பட்டார்கள். சில நேரங்களில் தேவனிடத்திலிருந்து வரும் செய்தியை அவர்கள் எழுத அல்லது பதிவு செய்ய வேண்டும். உண்மையாக, வேதம் என்பது தீர்க்கதரிசிகளின் ஊழியத்தில் உருவான ஒரு தயாரிப்பு ஆகும். ஒவ்வொரு ஆசிரியரும் தேவனுடைய திட்டத்தில் ஒரு பங்கு ஆவார்.



35

அவருடைய ஆவியின் ஏவுதலால், எல்லோரும் அவருக்காகப் பேசினார்கள். அல்லது எழுதினார்கள். அவர்கள் மூலமாக ஒரு அன்பின் கடிதத்தை தேவன் பூமியிலிருக்கும் தமது பிள்ளைகளுக்கு அனுப்பினார்.



36

நான் உன்னை நேசிக்கிறேன், நான் உன்னோடு தொடர்புகொள்ள வாஞ்சிக்கிறேன், விசேஷமாக நாம் அறிய வேண்டும் என்று அவர் வாஞ்சிப்பது என்னவென்றால் நாம் முகமுகமாக ஐக்கியத்தில் இணையும் அந்நேரத்திற்காக அவர் ஏங்குகிறார் என்பதே.

# 21 நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.


37

புதிய ஏற்பாட்டின் எல்லா ஆசிரியர்களும், மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான், பவுல், யாக்கோபு, பேதுரு மற்றும் யூதா அந்தத் திட்டத்தில் ஒரு பகுதி ஆவர். அனைவரும் தீர்க்கதரிசனவரம் பெற்றிருந்தனர் உண்மையிலே அந்த காலத்தில் தேவனுக்காகப் பேசின மற்றவர்களும் உண்டு. சிமியோன், அகபு, பர்னபா, அன்னாள்.



38


(வசனம்: அப் 21:9)
மற்றும் பிலிப்புவின் நான்கு குமாரத்திகள் ... அவர்கள் தீர்க்கதரிசனம் சொன்னார்கள். அப் 21:9. தமது சித்தத்தை வெளிப்படுத்த, ஆதிக் கிறிஸ்தவத் திருச்சபையை உற்சாகப்படுத்த தேவன் எல்லாரையும் கருவிகளாகப் பயன்படுத்தினர்.


39

பின்பு தேவன், எப்படிப்பட்டவர் என்பதை ஆள்தத்துவத்தில் வார்த்தைகளினாலும், செயல்பாடுகளினாலும் விளக்கிக்காட்ட இயேசு வந்தார். தேவ அன்பையும், அக்கறையும், அநேக திறமையோடு பகிர்ந்தளிப்பவரை உலகம் ஒருபோதும் கண்டதில்லை.


40

கல்வாரியிலிருந்து பத்தொன்பது நூற்றாண்டுகள் கடந்துவிட்டன. ஆனால் ஆடவரும், பெண்டிரும் பையன்களும், பிள்ளைகளும் சிலுவையின் அடியில் முழந்தாளிட்டு அழியாதத விசுவாசத்தையும், பக்தியையும் உலக இரட்சகருக்கு இன்றும் வாக்குறுதிகள் செய்கிறார்கள். இயேசு பரலோகம் திரும்பிய பொழுது, வேதம் சொல்கிறது. அவர் மனிதர்களுக்கு வரங்களைக் கொடுத்தார். அந்த வரங்கள் அவரது பின்னடியார்களை பலப்படுத்தி உற்சாகப்படுத்தும்.



41

(வசனம்: எபேசியர் 4:8)
ஆதலால் அவர் உன்னதத்திற்கு ஏறி, சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி, மனுஷர்களுக்கு வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார். எபேசியர் 4:8.
அந்த வரங்கள் என்னென்ன?

# 21 நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.



42

(வசனம் எபேசியர் 4:11-15)
வேதம் சொல்கிறது. அவர் சிலரை அப்போஸ்தலராகவும், சிலரைத் தீர்க்கதரிசிகளாகவும், சிலரைச் சுவிசேஷகராகவும், சிலரை மேய்ப்பராகவும், போதகராகவும் ஏற்படுத்தினார். எபேசியர் 4:11.



43

திருச்சபைக்கு வரங்களைக் கொடுக்க இயேசு தெரிந்துகொண்டது ஏன்? வசனம் 12 சொல்கறிது. பரிசுத்தவான்கள் சீர்பொருந்தும் பொருட்டு, சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும், கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காகவும்.



44

எவ்வளு காலம் இந்த வரங்கள் திருச்சபையில் நிலைத்திருக்கும்? நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பட்டவர்களாகி, பூரண புருஷராகும் வரைக்கும்.




45

கிறிஸ்துவினுடைய நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத் தக்கதாக வசனம் 13. இந்த வரங்கள் சபையை உறதிப்படுத்தி, மக்களையும் பெலப்படுத்தும், என்று வேதம் சொல்கிறது.




46

நாம் இனிக் குழந்தைகளாயிராமல், பலவித போதகக் காற்றினாலே அலைகளைப் போல அடிப்பட்டு அலைகிறவர்களாயிராமல்,



47

மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள .... வசனம் 14, பவுல் அழைக்கும் ஆவிக்குரிய வரங்கள் என்ற பட்டியலில் தீர்க்கதரிசன வரம் எங்கே நிற்கிறது என்பதைக் கவனியுங்கள்.



48

(வசனம் 1 கொரிந்தியர் 12:28)
தேவனானவர் சபையிலே முதலாவது அப்போஸ்தலரையும், இரண்டாவது தீர்க்கதரிசிகளையும் ... ஏற்படுத்தினார்.
1 கொரிந்தியர் 12:28.

# 21 □ நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.



49

அப்போஸ்தலத்துவத்திற்கு அடுத்த இரண்டாம் இடத்தை தீர்க்கதரிசன வரம் வகித்தது. ஆனால் சபை சீராக செயல்பட உதவுவதற்கு இது மிகவும் முக்கியமாக அவசியமான வரம் ஆகும்.



50

பவுல் ஆவியின் வரங்களை மனித சரீரத்தின் வெவ்வேறு பாகங்களுக்கு ஒப்பிட்டிருக்கிறார். சரீரமானது ஒத்திசைவாக, ஆற்றலுடன் செயல்பட கண்கள், தலை, வாய், மற்ற சரீர உறுப்புகள் எல்லாம் அவசியம் என்பதை அவர் காண்பித்தார். சபையோரும் அப்படித்தான். தரிசனம் இல்லாமல், உதாரணமாக சபையானது குருடாயிருக்கிறது.




51

(வசனம் நீதிமொழிகள் 29:18)
தீர்க்கதரிசனமில்லாத இடத்தில் ஜனங்கள் சீர்கெட்டுப் போவார்கள். வேதத்தைக் காக்கிறவனோ பாக்கியவான். நீதிமொழிகள் 29:18.



52

ஆனால் கிறிஸ்து பரலோகம் சென்றபிறகு, அவருடைய சீஷர்களெல்லாரும் மரித்த பிறகு, தீர்க்கதரிசன வரம் என்னவாயிற்று? என்று நீங்கள் கேட்கிறீர்கள்.



53

சபையானது அக்கறையற்றதாக, சமரசத் தன்மையுடன், தேவனுக்கும், அவரது வேதத்திற்கும் உண்மையற்றவர்களாக ஆகும் வரை அநேக சந்ததிகள் கடந்துவிடவில்லை. இஸ்ரவேலர் குறிப்பிட்ட காலத்தில் மருளவிழுந்தபோது என்ன ஆயிற்று என்று எரேமியா பதிவாக்கியிருக்கிறார்.




54

(வசனம் புலம்பல் 2:9)
வேதமுமில்லை, அவன் தீர்க்கதரிசிகளுக்குக் கர்த்தரால் தரிசனம் கிடைக்கிறதுமில்லை.
புலம்பல் 2:9.



55

ஆதித் திருச்சபை அஞ்ஞான சடங்குகளையும், பழக்க வழக்கங்களையும் தத்தெடுத்து வேதத்தின் அடிப்படை சத்தியங்களை விலக்கினதால், ஆவியின் வரங்கள் ஒவ்வொன்றாக நிறுத்தப்பட்டது.

21 □ நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.

# 21  நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.


56

சபையின் மருளவிழுகையின் காலம் அல்லது இருண்ட காலங்களின்போது, வேதாகமங்கள் துறவிமட மேடைகளில் கட்டப்பட்டிருந்தது. பொதுவாக அவைகள் எபிரேயு, கிரேக்கம் மற்றும் லத்தீனில் எழுதப்பட்டிருந்தது.


57

சாதாரண ஜனங்கள் வேதத்தை சொந்தமாக் கொள்ளவோ அல்லது வாசிக்கவோ தடை செய்யப்பட்டிருந்தனர். ஆசாரியர்கள் மாத்திரம் வேதத்தை வாசிக்கவும், வியாக்கியானம் செய்யவும் அனுமதிக்கப்பட்டனர். சில உண்மை கிறிஸ்தவர்கள் வேதத்தையும், அதன் சத்தியங்களையும் கைக்கொண்டனர். துன்புறுத்தல் இருந்தபோதும், அவர்கள் ஊழிய வேலையை செய்து, தாங்கள் கொண்டிருந்த வேதத்தின பகுதிகளைப் பகிர்ந்தளித்தனர். விக்ளி, மார்டின் லூத்தர் மற்றும் ஹஸ் ஆகியோருக்கு வெகு முன்பாகவே, இவர்கள் சீர்த்திருத்த விதைகளை விதைத்து விட்டனர்.



58

(வீடியோ 8 நொடிகள்) மார்ட்டின் லூத்தர், மற்றவர்கள் வேதத்தை மக்களின் பொதுவான மொழிகளில் மொழிப்பெயர்த்தனர். துன்புறுத்தல் வந்தது. ஆனால் அது தேவனுடைய வார்த்தைக்கான ஆவலை அதிகரிக்கத்தான் செய்தது.


59

மக்கள் வேதத்தை ஜாக்கிரதையுடன் ஆராயத் தொடங்கியதால், நூற்றாண்டுகளாக மறைந்திருந்த பழைய சத்தியங்கள் கண்டறியப்பட்டன. இந்த சத்தியங்கள் மக்களின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. மாபெரும் ஆன்மீக எழுச்சி முடிவாக கிடைத்தது.


60

இந்த காலக்கட்டத்தில் ஒரு புதிய ஆன்மீக இயக்கம் உருவானது. அர்ப்பணிக்கப்பட்ட கிறிஸ்தவர்களாகிய ஒரு குழு பாப்திஸ்துக்கள் சில மெத்தடிஸ்ட்டுகள், சில பிரஸ்பிட்டேரியன்கள், மற்றவர்கள் வேதத்தை ஆராய்ந்து வெளிச்சத்திற்காக ஜெபித்தனர்.



61

அவர்கள் வேதத்தை ஆராய்ந்ததால் நினைப்பாயாக என்று தேவன் தமது ஜனங்களிடத்தில் கேட்ட நாள் அவரது சிருஷ்டிப்பின் மாபெரும் சின்னம் நான்காம் கற்பனையில் இருப்பதை கண்டறிந்தனர். அவர்கள் வெளிப்படுத்தல் புத்தகத்தை வாசித்து தேவனுடைய கடைசிகால ஜனங்கள் பற்றிய விளக்கத்தைப் பார்த்தனர்.



62

(வசனம் வெளிப்படுத்தல் 14:12).
தேவனுடைய கற்பனைகளையும், இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தையும் காத்துக்கொள்கிறவர்களாகிய பரிசுத்தவான்களுடைய பொறுமை இதிலே விளங்கும். வெளிப்படுத்தல் 14:12.
அவர்கள் மற்ற வசனங்களையும் வாசித்து ஆராய்ந்த போது, தேவனுடைய கற்பனைகளைக் கொள்வதென்பது வேதாகம ஓய்வுநாளைக் கைக்கொள்வதையும் உள்ளடக்கியது என்று கண்டு உணர்த்தப்பட்டனர்.



63

அவர்கள் இந்த சிருஷ்டிப்பின் சின்னத்தை ஏற்றுக்கொண்டு ஓய்வுநாள் சத்தியத்தை உலகத்திற்கு பறைசாற்றினர்.



64

(வீடியோ 11 வினாடிகள்), தீர்க்கதரிசன வரத்தைப் பற்றி என்ன? இந்த கடைசிகால ஓய்வு நாள் ஆசரிக்கும் மக்கள் மத்தியிலே தேவன் விசேஷ தீர்க்கதரிசன வரத்தை எழுப்புவாரா? தேவன் ஏதாவது விசேஷமாக வைத்திருக்கிறாரா? இந்த தலைமுறைக்கு தேவன் ஏதோ விசேஷமானதை வைத்திருக்கலாம் என்ற முடிவுக்கு வருவது சரிதானா? இன்றைக்கும் ஜீவனோடிருக்கிற தேவன் தமது அன்பினிமித்தம் நம்மோடு தொடர்பு வைத்திருக்க வாஞ்சிருக்கிறாரா?



65

(வசனம் யோவேல் 2:28,31)
அதற்குப் பின்பு நான் மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன்.


21  நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.

# 21 நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.



66

அப்பொழுது உங்கள் குமாரரும், உங்கள் குமாரத்திகளும் தீர்க்கதரிசனஞ் சொல்லுவார்கள். உங்கள் மூப்பர் சொப்பனங்களையும், உங்கள் வாலிபர் தரிசனங்களையும் காண்பார்கள்.




67

.... கர்த்தருடைய பெரிதும், பயங்கரமுமான நாள் வருமுன்னே.
யோவேல் 2:28, 31.


68

கர்த்தருடைய பெரிதும், பயங்கரமுமான நாள் அல்லது கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு சற்று முன்னதாக இது நடைபெறும் என்று தேவன் சொன்னதைப் பாருங்கள். பூமியின் சரித்திரத்தின் முடிவு நேரங்களில் வாழும் தேவஜனங்கள் தீர்க்கதரிசன வரத்தைத் தங்கள் மத்தியிலே கொண்டிருக்க வேண்டும். கொரிந்துவில் உள்ள சபைக்கு எழுதும் போது, பவுல் தேவனுடைய பின்னடியார்கள் குறித்து சொன்ன வாக்கியம் என்னவென்றால்,



69

(வசனம் 1 கொரிந்தியர் 1:7)
அப்படியே நீங்கள் யாதொரு வரத்திலும் குறைவில்லாதவர்களாய், நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து வெளிப்படுவதற்குக் காத்திருக்கிறீர்கள்.
1 கொரிந்தியர் 1:7.



70

கடைசிக்காலத்தில் கர்த்தருடைய ஜனங்களின் குணாதிசயங்கள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசுகிறிஸ்துவைக் குறித்து சாட்சியை உடையவர்களும்.
வெளிப்படுத்தல் 12:17.



71

பரிசுத்தவான்களின் பொறுமை.


72

தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுவார்கள்.


73

இயேசுவைக் குறித்த சாட்சியை உடையவர்கள்.




74


(வசனம் வெளிப்படுத்தல் 19:10)
இயேசுவைப் பற்றின சாட்சி தீர்க்கதரிசனத்தில் ஆவியாயிருக்கிறது.
வெளிப்படுத்தல் 19:10.
மறுபடியும் சொல்லப்போனால் இயேசுவைக் குறித்த சாட்சி என்பது தீர்க்க தரிசன வரத்தின் மூலம் இயேசுவுக்கு சாட்சியாய் இருப்பது. வெளிப்படுத்தின விசேஷம் உரைப்பது போல் கடைசிக்காலத்தில் தேவன் மனிதனோடு தொடர்புகொள்ள வைத்திருக்கும் சபையானது - இயேசுவைக் குறித்த சாட்சியையும் எல்லாக் கற்பனைகளைக் கடைப்பிடித்தலையும் தீர்க்கதரிசன வரத்தைவுடையதாயும் இருக்கும்.


75

ஆம். ஆண்டவர் இன்றும் நம்முடன் தொடர்புள்ளவராக இருக்க விரும்புகிறார். இன்னும் இந்த சந்ததிக்குச் சில காரியங்களைச் சொல்ல இருக்கிறார்.


76

ஆனால் நீங்கள் ஒன்று கேட்கலாம். ஏமாற்றத்தைப் பற்றி என்ன? கர்த்தருடைய உண்மையான தீர்க்கதரிசிக்கும், கள்ள தீர்க்கதரிசிக்கும் உள்ள வித்தியாசத்தை நாம் எவ்வாறு அறிய முடியும்?



77

ஏமாற்றம் என்றும் வியாபித்திருக்கிறது. சரித்திர நெடுகிலும் கள்ள, உண்மையான தீர்க்கதரிசிகள் இருந்து வந்துள்ளனர். உண்மையான தீர்க்கதரிசிகளை எப்படித் தெரிந்துகொள்வது என்பதை அறிந்திருப்பதால், கள்ளத்தீர்க்கதரிசிகளைப் பற்றி கவலைகொள்ள வேண்டாம்.

21 □ நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.

# 21 நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.




78

வேதாகமம் உண்மையான தீர்க்கதரிசிக்குரிய குணலட்சணங்களை அடையாளப்படுத்திக் காண்பிக்கிறது.




79

ஒரு உண்மையான தீர்க்கதரிசியின செய்தி ஆண்டவருடைய வசனத்திற்கும் அவரது கற்பனைகளுக்கும் ஒத்ததாக இருக்கும்.



80

(வசனம் ஏசாயா 8:20)
வேதத்தையும் சாட்சி ஆகமத்தையும் கவனிக்க வேண்டும். இந்த வார்த்தையின் படியே சொல்லாவிட்டால், அவர்களுக்கு விடியற்காலத்து வெளிச்சமில்லை.
ஏசாயா 8:20.




81

உண்மையான தீர்க்கதரிசியின் முன்னறிவிப்புகள் எப்பொழுதும் நிறைவேறும்.



82

(வசனம் எரேமியா 28:9)
அந்த தீர்க்கதரிசி சொன்ன வார்த்தையின்படியே வந்தால், அப்பொழுது அவன், கர்த்தர் மெய்யாய் அனுப்பின தீர்க்கதரிசியாய் விளங்குவான்.



83

உண்மையான தீர்க்கதரிசி சபையின் பக்தி விருத்திக்காக தீர்க்கதரிசனம் உரைக்கிறார். தீர்க்கதரிசன வரத்தை கர்த்தர் கொடுப்பதற்கு பல காரணங்களில் ஒன்று - அவருடைய சபையை கட்டி எழுப்புவதற்காகும். நாம் உண்மையான வரத்தைக் கண்டுபிடித்தால், உண்மையான சபையைக் கண்டுகொள்வோம். இரண்டும் ஒன்றுக்கொன்று தொடர்புடையது.



84

(வசனம் 1 கொரிந்தியர் 14:3,4)
தீர்க்கதரிசனம் சொல்லுகிறவனோ மனுஷருக்கு பக்திவிருத்தியும், புத்தியும், ஆறுதலும் உண்டாகப் பேசுகிறான்.

# 21  நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.



85

தீர்க்கதரிசனம் சொல்லுகிறவனோ சபைக்கு பக்திவிருத்தி உண்டாகப் பேசுகிறான்.
1 கொரிந்தியர் 14:3,4.



86

உண்மையான தீர்க்கதரிசியானவன் கிறிஸ்துவை உயர்த்தி, அவரைத் தேவகுமாரன் என்றும், மனுஷக்குலத்திற்கு இரட்சகர் என்றும் அறிவிப்பான்.



87

(வசனம் 1 யோவான் 4:1.2)
பிரியமானவர்களே, நீங்கள் எல்லா ஆவிகளையும் நம்பாமல், அந்த ஆவிகள் தேவனால் உண்டானவைகளா என்று சோதித்தறியுங்கள்.




88

ஏனென்றால் உலகத்தில் அநேகம் கள்ளத்தீர்க்கதரிசிகள் தோன்றியிருப்பதினால்.




89

மாமிசத்தில் வந்த இயேசுக் கிறஸ்துவை அறிக்கை பண்ணுகிற எந்த ஆவியும் வேனால் உண்டாயிருக்கிறது.
1 யோவான் 4:1,2.
கே.ஜே.வி



90

ஒரு உண்மையான தீர்க்கதரிசி அல்லது தீர்க்கதரிசினி அவர்களுடைய வாழ்க்கையாலும், செய்கையாலும் அறியப்படுவர்.



91

(வசனம் மத்தேயு 7:16,18)
அவர்களுடைய கனிகளினாலே அவர்களை அறிவீர்கள்
.....



92

நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்க மாட்டாது. கெட்ட மரம் நல்ல கனிகளைக் கொடுக்கமாட்டாது.
மத்தேயு 7:16,18.

21  நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.

# 21 நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.



93

இந்த வேத வசனங்களைத் தழுவி நாம் பார்க்கும் போது - தெளிவாகத் தெரிகிறது. தீர்க்கதரிசி போலத் தெரிபவர்களெல்லாம், கர்த்தரின் உண்மையான தீர்க்கதரிசிகள் ஆகிவிட முடியாது.


94

ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் செய்தியாவும், அவருடைய வாழ்க்கை, நடத்தை வேதத்திலுள்ள தீர்க்கதரிசிகள் செய்திகளுக்கொப்பவும், ஆண்டவருடைய பரிசுத்த வசனங்களுக்கு ஒப்பாகவும் இருக்க வேண்டும். ஆண்டவருக்காக பேசுகிறவர்கள் பேசட்டும். அவர்களிடம் இந்த பரிசோதனைகளைச் செய்யலாம். சரியானவர்களாக இருப்பின் - கர்த்தருக்கு நன்றி சொல்வோம். சரியல்லவென்றால் - கிறிஸ்துவின் எச்சரிக்கையை அவர்களுக்குக் கூறுங்கள்.


95

தேவன் எங்ஙனம் அவருடைய பிள்ளைகளை தொட்டார் என்ற கதையை உங்களிடம் சொல்லட்டும். பல நூற்றாண்டுகளாக மறைக்கப்பட்டிருந்த சத்தியத்தைக்குறித்து தீர்க்கமாக பேசப்பட்ட ஒரு காலம். ஒரு பெரிய மத எழுச்சி ஏற்பட்ட 19ம் நூற்றாண்டின் காலம். வேதத்தைக்குறித்தும், ஜெபத்தைக் குறித்தும் மிக உற்சாகம் பிறந்த காலம். தானியேல் மற்றும் வெளிப்படுத்தல் புத்தகங்கள் அதன் தீர்க்கதரிசனங்கள் மக்களை வெகுவாக கவர்ந்தன.


96

உண்மையான வேத மாணாக்கர்கள் இத்தகைய தீர்க்கதரிசனங்களை வாசித்து, கிறிஸ்து அவர்களின் காலத்திலேயே இப்பூமிக்கு திரும்பி வருவார் என் நம்பினர்.



97

தொடர்ந்து வேதத்தை படித்து அக்டோபர் 22, 1844 ம் ஆண்டு இயேசுவின் வருகை என தீர்மானித்தனர். ஆனால் அக்டோபர் 22 சென்றது இயேசுவின் அந்த மகிமையான இரண்டாம் வருகை நடைபெறவில்லை.


98

அது அவர்களுக்கு மிகவும் கசந்த அனுபவமாக இருந்தது. அது அவர்களை மற்றவர் ஏளனம் செய்யவும், பரியாசம் பண்ணவும், தவறாகப் புரிந்து கொள்ளவும் காரணமாயிற்று.



99

(வீடியோ 8 வினாடிகள்) அதற்கு பிற்பாடு அதிக ஜெபம், அதிக வேத ஆராய்ச்சிக்குப் பின், அந்த குழுவினர் ஒரு முடிவுக்கு வந்தனர். அதாவது அவர்கள் குறித்த நாள் சரியே - நிகழ்ச்சி மட்டும் தவறானது என்று கண்டுபிடித்தனர். அவர்கள் பூமியில் உள்ள கூடாரம் என்று தவறாக புரிந்துகொண்டனர், பரலோக ஆசரிப்பு கூடாரத்தில் பரிசுத்த ஸ்தலம் சுத்திகரிக்கப்பட வேண்டும் என நம்பினர். இது ஆண்டவருடைய குணலட்சனத்தையும், அரசையும் நியாயப்படுத்தும் கடைசி நிகழ்ச்சி எனவும் நம்பினர்.


100

மக்கள் நெருக்கப்பட்டனர். அவர்களுடைய கசப்பான அனுபவத்தை சகிக்க முடியவில்லை. ஆனால் அன்புள்ள கடவுள் ஒரு போதும் சத்தியத்தை உண்மையாய்த் தேடுகிறவர்களைக் கைவிடுவது இல்லை. ஆகையால் இந்த அட்வெந்து விசுவாசிகளை கைவிடவில்லை. அவர்களுக்கு உதவி செய்ய வல்லவராய் இருக்கிறார் என்பதை அவர்கள் அறிய, அவர் விரும்பினார். இப்படியாக ஆண்டவர் தீர்க்க தரிசனத்தை தம் மக்களுக்கு அருளினார். இது ஆரம்பத்திலிருந்து பார்த்தால் ஒரு நல்ல கதையாகும்.


101

17 வயது நிரம்பிய ஒரு வாலிபப் பெண்ணை கர்த்தர் தெரிந்தெடுத்தார். எலன் என்ற அந்தப் பெண்ணிற்கு, இந்த கசப்பான அனுபவத்திற்கப்புறம் டிசம்பர் 1844ல் முதலாவது தரிசனத்தைக் கொடுத்தார். தரிசனத்தில் பரலோகத்தின் வெளிச்சத்திலே அட்வெந்து மக்கள் பரலோகத்தை நோக்கி உயர்ந்து செல்லும் சாலையில் பிரயாணம் செய்வதைக் கண்டார்கள்.


102


இந்தச் செய்தி சிறியதாகவும், சிதறிக்கிடக்கிற கூட்டத்திற்கு நல்ல உற்சாகத்தைத் தருவதாகவும் அமைந்தது. இந்த அட்வெந்துக் கூட்டத்தினர் பிற்காலங்களில் ஏழாம் நாள் அட்வெந்து சபையினர் என அழைக்கப்பட்டனர்.

21  நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.

# 21  நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.


103

பின்னாட்களில் எலன் ஒயிட் என்றழைக்கப்பட்ட இந்த இளப்பெண், அட்வெந்தின் முன்னோடியான ஜேம்ஸ் ஒயிட் என்பவரை மணந்து தன் அழைப்புக்கு உண்மை உள்ளவராக இருந்தார். 70க்கும் அதிகமாக வருடங்கள், எழுதி, போதித்து தேவனுக்காக ஆலோசனை சொன்னார். இவரின் ஊழிய நோக்கம் சாமர்த்தியசாலிகளையும் பிரமிக்க வைப்பதாக இருந்தாலும் அவரின் மிக முக்கியமான வேலை, அவர்கள் சொல்வது போல் ஆணையும் பெண்ணையும் பெரிய வெளிச்சமாகிய வேதத்திடம் நடத்துவதே.




104

அவர் எழுதுகிறார்.
வேதத்திற்கு சிறிது கவனமே கொடுக்கப்படுகிறது. தேவன் ஒரு சிறிய வெளிச்சத்தைக் கொடுத்து, ஆணையும் பெண்ணையும் பெரிய வெளிச்சத்துக்கு நடத்துகிறார்.
கோல்போட்டர் மினிஸ்ட்ரி, பக்கம் 125.



105

மூல உபதேசங்களைக் குறித்து எழும், எல்லாக்கேள்விகளுக்கும் பரிசுத்த வேதாகமத்தின் முடிவே முடிவானது என பரிந்துரை செய்கிறார். தேவ வார்த்தையை ஏளனம் செய்யும் சிலருக்கு அவர் எழுதுவது.



106

வேதத்தைப் பற்றிக் கொண்டிருங்கள். அவைகளை வாசிக்கும் போது வேதத்தின் உண்மையைக் குறித்துக் குறை கூறுவதை நிறுத்திவிட்டு, அதற்கு கீழ்ப்படியுங்கள்.



107

உங்களில் ஒருவரும் விடப்பட மாட்டீர்கள்.
செலக்டட் மெசேஜஸ், புத்தகம் 1, பக்கம் 18.

# 21  நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.


108

எந்தப் பெண் எழுத்தாளரும் எலன் ஒயிட் வேதத்தைக் குறித்து, புத்தகங்கள் எழுதினது போல எழுதியதில்லை, பத்தரிக்கைகள், கைப்பிரதிகள், தனிப்பட்ட கடிதங்கள் இப்படி எத்தனையோ எழுதினார். அவர் தேவனிடமிருந்து பெற்ற ஆலோசனைகள், கடிந்து கொள்ளுதல், அவர்கள் வாழ்நாளில் தேவனுடைய பிள்ளைகள் மத்தியில் பகிர்ந்து கொள்ளப்பட்டது.


109

அவருடைய எழுத்துக்கள், வெற்றியான கிறிஸ்துவ வாழ்க்கை, உணவு, ஆரோக்கியம் பிரசவத்திற்கு முந்திய கவனித்தல், போதைப் பொருட்கள், வீடும் திருமணமும், குழந்தைகளின் வழிகாட்டுதல், கல்வி இவை போன்ற அநேக ஆலோசனைகளை உள்ளடக்கி யுள்ளன.

நூறு வருடங்களுக்கு மேலான அவருடைய எழுத்துக்கள் பேராசிரியர்களாலும், மருத்துவர்களாலும் விமர்சர்களாலும் அதிகாரம் உள்ளவர்களாலும் பலதுறைகளில் தற்போது உபயோகப்படுத்தப்படுகின்றன.




110

டாக்டர். க்ளைவ் எம். மெக்கே, கோர்னல் பல்கலைக்கழகத்தில், சத்துணவுத் துறையின் பேராசிரியராக இருக்கும் இவர் சொல்கிறார்.
எலன் ஜீ ஒயிட் எழுதியவை எடுத்துக்காட்டுகளாக உபயோகிக்கப்பட்டுள்ளன. ஏனெனில் அவை மனிதனின் முழு உடலுக்கும் போதுமான சத்துணவு ஆலோசனைகளாக அமைந்திருக்கின்றன.
- நேச்சுரல் ∴புட் அண்டு பார்மிங், மே 1958



111


1864க்கும் முன்னால் எலன் ஒயிட் எழுதினார்.
புகையிலை, விஷங்களிலேயே மிக மோசமான ஏமாற்றும் விஷத்தின் வகையை சாா்ந்தது.



112

புகையிலை மிக ஆபத்தானது, ஏனெனில் அது உடலில் மெதுவாக, உணர்ந்து கொள்வதில் அபூர்வமானதாக கிரியை செய்கிறது.

21  நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.


113

ஆனால் 1957ல் அமெரிக்க புற்றுநோய் சங்கமும், அமெரிக்க இருதய இயக்கமும் இணைந்து புகையிலை புகைப்பது, நுரையீரல் புற்றுநோய்க்குக் காரணம் என கண்டுபிடிக்கும் வரை இதன் தீமை அறியப்படாமல் இருந்தது.
அவருடைய ஜீவிய நாட்களில், மருத்துவத் துறையில் இருந்தவர்கள் இவரை சந்தேகித்தனர். ஏனெனில் அன்றைய நாட்களில் புகைபிடிப்பது, நுரையீரல் நோய்களை குணமாக்கும் என எண்ணியிருந்தனர்.



114

1905ல் ஒயிட் புற்றுநோய் கிருமிகள் இருக்கின்றன என்றும், ஆனால் ஜனங்கள் புற்றுநோய்க்கிருமிகளும், காசநோய்க்கிருமிகளும் உள்ள மாமிச உணவை தொடர்ந்து உண்கிறார்கள் என்றும் எழுதினார்.




115

காசநோய், புற்றுநோய் மற்றும் பல கொடிய நோய்கள் இவ்விதமாகவே பரவுகின்றன.
- மினிஸ்ட்ரி ஆப் ஹீலிங், பக்கம் 313.




116

இன்று மிக சரியாக தொற்றுநோய் கிருமிகள் என்ற வார்த்தையை உபயோகிக்கிறோம். 93 வருடங்களுக்குப் பிறகு, நியூஸ் வீக் பத்திரிக்கை, தொற்றுநோய் கிருமிகள் தான் புற்றுநோய்க்குக் காரணம் என்ற தலைப்பில் ஒரு கதை எழுதியது.




117

டாக்டர் வெண்டெல் ஸ்டேன்லி கலிபோர்னியா பல்கலைக்கழக தொற்றுநோய் ஆய்வாளரும், நோபல் பரிசு பெற்றவர்.



118

எவ்வித கல்வித் தகுதிகளும் இல்லாமலேயே அவர், தொற்றுநோய்க் கிருமிகள் தான் மனிதனின் எல்லா புற்றுநோய்க்கும் காரணம் என்று கூறினார்.
- நியூஸ் வீக், ஜூன் 18, 1956.


119

1902ல் சான் பிரான்சிஸ்கோவும் ஒக்லேண்ட்டும் சோதோம் கொமாரா போல் ஆகிவிட்டபடியால், அவைகளைக் கர்த்தர் சந்திப்பார் என்று ஒயிட் அவர்கள் எச்சரித்தார். கையெழுத்துப் பிரதி 1902, பக்கம் 114.

# 21  நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.



120

ஏப்ரல் 18, 1906ல் காலை 5.12 மணிக்கு மிகப் பெரும் சான் பிரான்சிஸ்கோ நிலநடுக்கம் ஏற்பட்டது. சொன்ன தீர்க்கதரிசனம் உண்மையானது. முன்னறிவித்த அழிவு சொன்ன பிரகாரமாகவே நடைபெற்றது. திருமதி. ஒயிட் அவர்கள் பெற்ற சாதனைகளின் இடையில் அவர்களை நசுக்கும்படியான தடைகள் செயல்படமுடியா நிலை, அவரின் வாழ்நாள் முழுவதும் இருந்ததை பார்க்கும் போது, நம்மை ஆச்சரியப்பட வைக்கிறது.



121

சிலர் இந்த எலன் ஒயிட் யார், எப்படிப்பட்டவர் என ஆச்சரியப்படலாம்? அதற்கு பதில் நம்மை நவம்பர் 26, 1827க்குப் பின் கொண்டு போகிறது.


122

அந்த நாளில் எலசபெத், எலன் என்ற இரட்டை குழந்தைகள், கோர்காம் என்ற சிறு கிராமத்தில் வாழ்ந்த யூனிஸ் மற்றும் ராபர்ட் ஹார்மென் தம்பதியருக்குப் பிறந்தனர். எட்டு குழந்தைகளில் எலன் தான் கடைசி.


123

ஒன்பதாவது வயதில் அவர் வாழ்வில் நடந்த சிறு விபத்து அவருடைய வாழ்க்கையையே மாற்றியது. பள்ளியிலிருந்து வீட்டிற்கு திரும்பும் வழியில் பள்ளித் தோழி வீசிய கல் ஒன்று இவளை மிக மோசமாக காயப்படுத்தியது.


124

மூன்று வாரங்கள் மயக்க நிலையில் இருந்தார். பள்ளிக்கு மீண்டும் போக முடியாத நிலை, மரித்துப் போவார் என்று எண்ணும் அளவுக்கு இருந்தது. அவள் அதற்கு மேல் படிக்க முடியாதவளாக இருந்தாள்.


125

பின்னாளில் எலன் தன் ஒன்பது வயதில் நடந்ததை ஒரு குழப்பமான உணர்வோடு பார்த்தார். உண்மையாகவே, பள்ளிக்கு போக முடியாது, ஓடியாடி விளையாட முடியாது. தன் சகோதரிகளோடு, சகோதரர்களோடு விளையாட முடியாது என்பது உள்ளத்தை உடைக்கும் நிகழ்ச்சியே. ஆனால் வாழ்வின் ஒரு பகுதி முடிந்து மறு பகுதி ஆரம்பமானது. எலன் வேதாகமத்தை பேரார்வத்துடன் படிக்கும் ஒரு மாணவியானாள், அவள் முகாம் கூட்டங்களுக்கும், எழுப்புதல் கூட்டங்களுக்கும், குடும்ப கூட்டங்களுக்கும் போய் வந்தாள்.

21  நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.

# 21  நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.


126


பாக்ஸ்டன் என்ற இடத்தில் நடந்த மெத்தடிஸ்ட் முகாம் கூட்டத்திற்கு பின், 1842ல் ஜூன் 26ல் எலன் ஞானஸ்நானம் பெற்றார். அவள் மெத்தடிஸ்ட் சபையின் ஒரு அங்கத்தினரானார்.


127

அதற்குப்பின் இவர் தன் குடும்பத்தோடு போர்ட் லேண்டில் நடந்த சில கூட்டங்களுக்கு போனார். அந்தக் கூட்டம் வில்லியம் மில்லர் என்ற முன்னாள் காலாற்படை தளபதியும், வேதத்தை ஊக்கமாக படித்தவருமான ஒருவரால் நடத்தப்பட்டது. இவர் கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையை அறிவித்தபடியால், இவரும் இவருடைய பின்னடியார்களும் அட்வென்டிஸ்ட் அல்லது மில்லரைட்ஸ் என்று அழைக்கப்பட்டனர். ஹார்மன் குடும்பம், மில்லரின் உண்மையான அந்த செய்தியை ஏற்றுக்கொண்டார்.


128

அக்டோபர் 22, 1844ல் பெற்ற பெருத்த ஏமாற்றத்துக்குப் பின் அவர்கள் சிதறிப் போனார்கள்.
எலன் மிக ஏமாற்றமடைந்தாள். அவள் அழுதாள். ஜெபித்தாள். பதிலுக்காக வேதத்தை நன்கு படித்தாள். அநேக அட்வென்டிஸ்ட் விசுவாசிகளும் வேதத்தைப் படித்தனர். பிறகு தேவன் இவரை தன் தீர்க்கதரிசியாக அழைத்தார். சரீரப் பிரகாரமாக நாம் எதிர்பார்ப்பது போல் இவள் தீர்க்கதரிசி போல் காணப்படவில்லை. அவள் 17 வயதுள்ள சிறுமி, காசநோயாலும் இருதய நோயாலும் அவதிப்படுபவள். ஆனாலும் 1844ல் தேவன் தரிசனம் மூலம் அவளோடு பேசினார். அவர் தன் சொந்த வார்த்தைகளால் ஏற்பட்ட மாற்றத்தை சொல்கறிார்.



129

நான் தரிசனத்தைக் கண்டபின், தேவன் வெளிச்சத்தைக் கொடுத்தார். அதை அறிவிக்கும்படி என்னை தூண்டினார். ஆனால் நான் தயங்கினேன். நான் சிறியவள். என்னிடமிருந்து அதை மக்கள் பெற விரும்பமாட்டார்கள் என எண்ணினேன்.
- எலன் ஜீ ஒயிட், கடிதம் 3, 1847.


130

தேவன் அழைத்த அழைப்பின் காரியங்களை நிறைவேற்றுவதற்கு அவசியமான உணர்வுகள் இல்லாமலும், சரீரப் பிரகாரமாக அவைகளை நிறைவேற்ற முடியாத நிலையில் இருந்தாலும், தன் ஜீவியகாலம் முழுவதும் இருக்கும்படி விசுவாசத்தோடு அவைகளை அவள் ஏற்றுக்கொண்டாள்.


131

தேவன் கொடுத்த வெளிச்சத்தை எலனும் அவர் கணவர் ஜேம்ஸ் ஒயிட் அவர்களும் சேர்ந்து பகிர்ந்துகொண்டனர்.


132

அவர்களின் வெற்றியும், தியான வாழ்க்கையையும் தன் எழுத்துக்கள் மூலம் பகிர்ந்து கொண்டார். தன் ஜீவிய காலம் முழுவதும் எலன் ஒயிட் ஒப்புக்கொடுக்கப்பட்ட கிறிஸ்தவளாகவே இருந்தார். சோர்வற்ற தேவனின் ஊழியக்காரியாய், நல்லதொரு தாயாய் விளங்கினார். அவன் தன் கணவர் குடும்பத்தினர் மற்றும் அவரைச் சூழ்ந்த ஆயிரக்கணக்கானரோரால் நேசிக்கப்பட்டார்.



133

ஆகஸ்ட் 6, 1881ல் எலன் அவர்களின் கணவர் பேட்டல் கிரீக், மெக்சிக்கன் என்ற இடத்தில் மரித்தார். கணவன் கல்லறையின் அருகில் நின்று கொண்டு தாங்கள் இருவரும் 35 வருடமாக, தியாகத்தோடும், கடினமாகவும் செய்த வேலையை தொடர்ந்து செய்ய பிரதிக்கினை செய்துகொண்டார்.


134

இந்த தேதிக்குப் பின்புதான், இவரின் அழகான, எழுப்புதலூட்டும் எழுத்துக்கள் சில வெளிவந்தன. தனிமையாக மீண்டும் 34 வருடங்கள் உழைத்தார். அவருடைய தீர்க்கதரிசன ஊழியங்கள் அநேக நாடுகளுக்கு எடுத்துச் சொல்லப்பட்டது. வழிகாட்டி புத்திமதி கூறி, ஆலோசனை சொல்லி தேவன் தன்னை நடத்தியவிதமாகவே விசுவாசிகளையும் நடத்தினார்.

# 21  நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.



135

எலன் கோல்டு உவைட்டின் வாழ்வும், பாடுகளும் ஜூலை 16, 1915ல் முடிவடைந்தன. என்பத்தேழாவது வயதில் அவர் மறைந்தார். மிக்சிகனில் உள்ள பேட்டில் கிரீக்கிலுள்ள ஒக்ஹில் கல்லறைத் தோட்டத்தில் அவரது கணவருக்குப் பக்கத்தில் அவரை அடக்கம் செய்தார்கள். அவரது மறைவுக்கு சில வாரங்களுக்குப் பின், ஒரு செய்தித் தாளில் இவ்வாக்கியம் காணப்பட்டது.




136

அவர்கள் ஆவிக்குரிய அகந்தையைக் காண்பிக்கவில்லை. அசுசியான ஆதாயத்தை யும் தேடவில்லை. அமெரிக்காவின் மிகவும் மெச்சத்தக்கப் பணியான ஒரு சிறந்த தீர்க்கதரிசியின் பணியைச் செய்து வாழ்வை யும் வாழ்ந்து காட்டினார்கள்.
- தி நியூயார்க் இன்டிபெண்டன்ட், ஆகஸ்ட் 23, 1915.



137

ஆம். அவரது சப்தம் நிசப்தமாக்கப்பட்டுவிட்டது. அவரது எழுத்தாணி யும் ஓய்வில் இருக்கிறது. ஆனால் தேவனுடைய உண்மை யுள்ள பிரதிநிதியாகிய அவரது விலைமதிப்பற்ற ஆலோசனை, கடிந்துரை, படிப்பினை மற்றும் உற்சாக வார்த்தைகள் தொடர்ந்து தேவனுடைய ஜனங்களைக் கடைசி வெற்றிக்கு வழி நடத்தும்!




138

(வீடியோ 6 வினாடிகள்) நம்மிடம் அன்புகூர்ந்த, இன்றும் நம்மிடம் தொடர்பு வைத்துக்கொள்ள வேண்டுமென்று கிறிஸ்து வரும் வரை விரும்புகின்ற தேவனிடமிருந்து வரும் செய்தியை அவர் விட்டுச் சென்றுள்ளார். கிறிஸ்துவின் மகிமையான சமூகத்தில் நாம் முகமுகமாகச் சந்திக்கும் போது, அந்ம மகிமையின் பிரகாசத்தில் இந்தச்சிறிய ஒளி மங்கிப்போகும்.

# 21 □ நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.



139

அநேக ஆண்டுகளுக்கு முன், தென் ஆப்பிரிக்காவில் பீச்சுவானாலேண்ட் என்ற இடத்திலுள்ள நீண்ட பாலவனத்தில்,
சுக்குபா என்ற மிகக் குள்ளமான, பழங்கால மனிதன் வாழ்ந்து வந்தான். தான் தோன்றித் திரியும் இனத்தில் ஒருவனாக தனிமையில் திரியும் இனத்தில் ஒருவனாக தனிமையில் வாழ்ந்து வந்தான். ஒரு மழைக்கால இரவில் தன் குடிசையில் நுழைந்து தூங்குவதற்கு ஆயத்தம் செய்தான். ஆனால் திடீரென்று அந்த இரவு பகலைவிட வெளிச்சமானது. ஒரு ஒளிவீசும் ஜீவன் தோன்றி புத்தகத்தின் ஜனங்களை கண்டுபிடிக்கும் படி கூறினர். அவன் தேவனை வணங்கும் ஜனங்களை கண்டுபிடிக்க வேண்டும். சுக்குபாவுக்கு சரியாக அதன் அர்த்தம் விளங்கவில்லை. என்ன புத்தகம்? அதைக் கண்டுபிடித்தால் அதை எப்படி அவன் வாசிப்பான்? இந்த குள்ள மனிதர்களின் பாஷை சப்தங்களைக் கொண்டதாகவே இருந்தது. அது மற்ற ஆப்பிரிக்க இனத்தவர்களைப் போன்றது அல்ல. அந்த பாஷை எழுதும் நிலைக்கு வரவில்லை. ஆனால் ஒளிவீசும் ஒருவர் என்று சுக்குபாவால் அழைக்கப்பட்ட, சுக்குபாவிற்கு காட்சி தந்த தூதன், அந்த புத்தகம் பேசும், நீ அதைப் படிக்க முடியும் என்றார்.
சுக்குபா அந்தப் புத்தகத்தைத் தேடி குடும்பத்தோடு அநேக நாள் பிரயாணம் செய்தார். அவர் சில பாண்டு விவசாயிகளின் குடிசையை அடைந்து அவர்களுக்கு இந்த புத்தகத்தின் மக்களைக் குறித்து தெரியுமா எனக்கேட்டார். இந்த மலை ஜாதியினர் சுக்குபா என்ற குள்ள மனிதன் ஓரளவு தங்கள் பாண்டு பாஷையில் பேசுவதை கேட்டனர். ஒருவர் உடனே சுக்குபாவை தன் போதகரிடம் அழைத்துச் சென்றார். அந்தப் போதகர் சுக்குபாவின் கதையால் மிகவும் தொடப்பட்டார். அவர் சொன்னார். உன் பயணம் முடிந்தது என்று. சுக்குபா மிகவும் சந்தோஷப்பட்டான். ஆனால் அன்று இரவு மீண்டும் அந்த ஒளி வீசும் நபர் அவனுக்குத் தோன்றி, அவன் தேடும் மனிதர்கள் இவர்களல்ல என்றார். அவன் ஓய்வுகளை ஆசரிக்கும் சபையை, போதகர் மோயியை தேட வேண்டும் என்றார். மோயிடம் ஒரு புத்தகம் உண்டு. அதுவும் இல்லாமல் இளஞ்சிவப்பு கலரில் உள்ள நான்கு புத்தகங்கள் உண்மையில் ஒன்பது புத்தகங்களை உள்ளடக்கியது. அடுத்த நாள் சுக்குபா ஒரு அடையாளத்தைக் கேட்டான் தான் எந்த திசையில்

செல்ல வேண்டும் என்பதை அறிய விரும்பினான். அவன் அப்படி செய்த போது ஒரு மேகம் வானத்தில் தோன்றியது. சுக்குபா அதைப் பார்த்துக்கொண்டே ஏழு நாள் அதை தொடர்ந்து பயணம் செய்தான். அது ஒரு குறிப்பிட்ட கிராமம் வந்தவுடன் மறைந்து போனது. அங்கு போதகர் மோயியைக் குறித்து விசாரித்தார். உடனே அவரின் வீட்டிற்கு வழி நடத்தப்பட்டான். சுக்குபா தன் கதையை அந்த ஊர் பாணியில் சொன்ன பின்பு போதகர் மோயி தன் கிழிந்து போன வேதாகமத்தை கொண்டு வந்தார். இது தான் அது, சுக்குபா இது தான் அது என்று ஆச்சரியத்தோடு சொன்னார். உண்மையில் ஒன்பது புத்தகங்கள், அந்த நான்கு புத்தகங்கள் எங்கே?

அநேக ஆண்டுகளுக்கு முன்பு எலன் ஒயிட் அவர்கள் ஒன்பது பகுதிகள் கொண்ட, தேவனுடைய சபைக்கு ஆலோசனைகளை எழுதினார். அவை டெஸ்டமொனிஸ் டு சர்ச் என்று அழைக்கப்படுகிறது. இவை தான் பிறகு நான்கு புத்தகங்களாக சேர்க்கப்பட்டது. சுக்குபாவின் தேடுதல் முடிந்தது. அவர் அந்தப் புத்தகங்களில் ஜனங்களை கண்டுபிடித்தார். தேவனுடைய ஓய்வுகளை கடைபிடிக்கும், தீர்க்கதரிசன வரத்தை ஆசீர்வதிக்கப்பட்ட ஜனங்களை கண்டு கொண்டார். அதன் மூலம் அவரும் அவருடைய குடும்பமும் ஞானஸ்நானம் பெற்றனர். அதன்பின் அவர் தன் ஜனங்களுக்கு ஊழியரானார். தேவன் தன் உண்மையான திருச்சபைக்கு ஆணையும் பெண்ணையும் வழி நடத்த ஆச்சரியமான விதத்தில் செயல்படுகிறார். இப்போது நீங்கள் கதையின் மூலம் கேட்ட உண்மை ஏதோ ஒரு எதிர்பராவிதமாக நடந்தது அல்ல. சுக்குபாவைப் போல நீங்களும் வழிநடத்தப்படுகிறீர்கள், தேவன் தன் சத்தியத்திற்கு உங்களை வழி நடத்துகிறார். தேவன் வருங்காலத்தை சந்திக்கும்படியான தைரியத்தை உங்களுக்குத் தருகிறார்.

ஒரு வேளை, அநேக ஆண்டுகளாக, உண்மையைத் தேடுகிறவர்களாக நீங்கள் இருக்கலாம். நான் விசுவாசிக்கிறேன். உங்களுடைய தேடுதல் முடிவுக்கு வந்துவிட்டது. இந்த இலக்கை அடைய நீங்கள் தெய்வீகமாக நடததப்பட்டுள்ளீர்கள். இது தான், தேவனுடைய சபை, தேவனுடைய கற்பனைகளைக் கைக்கொள்ளுகிறவர்களும், இயேசு கிறிஸ்துவைக் குறித்துச் சாட்சியை உடையவர்களுமாகிய இவர்களுடன்

நீங்களும் இணை விரும்பவில்லையா? தேவனுடைய கடைசிகால ஜனங்களோடு நீங்கள் சேர விரும்பவில்லையா? இந்த ஒப்படைத்தலை கவனமாக கவனியுங்கள். இதுதான் நீங்கள் உங்கள் வாழ்வில் எடுக்கும் மிக முக்கியமான தீர்மானம்.

21 □ நட்சத்திரங்களுக்கு அப்பாலிருந்து செய்திகள்.



1

சரியான சபையை கண்டுகொள்வது எப்படி?


2

ஏன் இப்படி அநேக வித்தியாசமான சபைகள் இருக்கின்றன என்று நீங்கள் ஆச்சரியப்பட்டதுண்டா? சாதாரண மனிதன் குழம்பிப் போகிறான். அநேக சபைகள் தங்களிடம் தான் சத்தியம் இருக்கிறது என உபதேசிக்கின்றன. உண்மையாகவே எந்த சபை தேவனை விசுவாசித்து அவைகளைப் போதிக்கிறது என்று நீங்கள் வியந்தது உண்டா?


3

நண்பர்களே, வேதாகமம் நமக்கு பதில் வைத்துள்ளது. குழப்பம் நிறைந்த உலகில், எது உண்மை எது பொய் என்று வேறுபடுத்திக் காண்பதற்கு வேதம் மாத்திரமே நம்ப தகுந்த ஒன்று ஆகும்.



4

எனவே இந்த வேளையில் நாம் படிக்க இருக்கும் பொருளின் தலைப்பு ஏன் இத்தனை திரளான சபைகள்?




5

(வசனம் : ஆமோஸ் 3:7)
கர்த்தராகிய தேவன் தீர்க்கதரிசிகளாகிய தம்முடைய ஊழியக்காரருக்குத் தமது இரகசியத்தை வெளிப்படுத்தாமல் ஒரு காரியத்தையும் செய்யார்.



6

(வீடியோ 4 வினாடிகள்) தேவனுடைய வார்த்தைக்குப் போவோம். நான் என்ன எண்ணுகிறேன் என்பதல்ல. வேதத்தில் அப்படி இருந்தால் என்ன செய்து? அப்படி இருந்தால், அதை நான் விசுவாசிப்பேன். அது வேதத்தில் இல்லை என்றால் அது எனக்கு அல்ல.


7

நம் பாடத்தை ஆரம்பிக்க, வேதத்தின் கடைசி புத்தகமான வெளிப்படுத்தலில் இருந்து துவங்குவோம். வெளிப்படுத்தல், ஆறாம் அதிகாரம் நான்கு குதிரை வீரர்கள் பற்றிச் சொல்கிறது.

22 ☐ தெரிந்துக்கொள்ளக்கூடியது அநேகம்




8

அந்த நான்கு குதிரை வீரர்களும், கிறிஸ்தவ சபை சரித்திரத்தின் வெவ்வேறு காலங்களைக் குறிக்கும். இந்தக் காலகட்டத்தில் தான் இன்று நாம் காணும் வெவ்வேறான சபைகள் தோன்றின.




9

(வசனம் வெளிப்படுத்தல் 6:1)
ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளில் ஒன்றை உடைக்கக் கண்டேன்.



10

அப்போது நான்கு ஜீவன்களில் ஒன்று என்னை நோக்கி, நீ வந்து பர் என்று இடி முழக்கம் போன்ற சத்தமாய் சொல்லக் கேட்டேன்.
வெளிப்படுத்தல் 6:1.
கிறிஸ்தவ சபை சரித்திரம் இங்கு, இந்த ஆறாம் அதிகாரத்தில் வெளிப்படுத்தப்படுகிறது.




11

(வசனம் வெளிப்படுத்தல் 6:2)
நான் பார்த்தபோது, இரோ ஒரு வெள்ளளைக் குதிரையைக் கண்டேன். அதின்மேல் ஏறி இருந்தவன் வில்லைப் பிடித்திருந்தான். அவனுக்கு ஒரு கிரீடங்கொடுக்கப்பட்டது.



12

அவன் ஜெயிக்கிறவனாகவும் ஜெயிப்பவனாகவும் புறப்பட்டான்.
வெளிப்படுத்தல் 6:2.


13

எனவே, முதலாவது சபை, வெற்றி கொள்ளும் விசுவாசம் கொண்ட சபை, இது ஒரு வெள்ளைக் குதிரை. வெள்ளளை தூய்மையான விசுவாசத்தைக் குறிக்கும்.


14

இயேசுவின் பரமேறுதலுக்குப் பின் முதலாம் நூற்றாண்டில் வாழ்வது என்பது மிக உத்வேகம் கொள்ளும் காலமாக இருந்தது.


15

சீஷர்கள் தைரியத்தாலும், மிகுந்த விசுவாசத்தாலும் நிறப்பப்பட்டிருந்தனர், ஏனெனில் அவர்கள் இயேசுவோடு நடந்து, அவரோடு பேசினவர்களாக இருந்தனர். அவர்கள் இயேசு உயிர்தெழுந்ததை பார்த்தவர்கள். அவர் பரலோகத்துக்கு ஏறிப்போனதைக் கண்டவர்கள். அவர் மீண்டும் வருவார் என அறிந்திருந்தனர். தங்கள் முழு இருதயத்தோடு அவரின் வாக்குறுதிகளை நம்பினார்.


16

அவர்கள் இந்த உலகம் முழுவதற்கும் நற்செய்தியை, சுவிசேஷத்தை மிகுந்த உற்சாகத்துடனும், மிகுந்த பூரிப்புடனும் பகிர்ந்து கொண்டனர்.



17

(வசனம் கொலோசெயர் 1:21-23)
அன்று அறியப்பட்டிருந்த உலகின் எல்லாப் பகுதிகளுக்கும், இரட்சிப்பின் நற்செய்தியானது பிரசங்கிக்கப்பட்டது. பவுல் சொல்கிறார். முன்னே அந்நியராயும், துர்க்கிரியைகளினால் மனதிலே சத்துருக்களாயும் இருந்த உங்களை



18

இப்போது ஒப்புரவாக்கினார்.



19

அவருடைய மாமிச சரீரத்தில் அடைந்த மரணத்தினாலே, உங்களை பரிசுத்தராக,



20

குற்றமற்றவர்களாயும், கண்டிக்கப்படாதவர்களாயும்,



21


அசையாமல், ஸ்திரமாயும் உறுதியாயும் விசுவாசத்திலே நிலைத்திருப்பீர்களானால்,

22  தெரிந்துக்கொள்ளக்கூடியது அநேகம்



22

நீங்கள் கேட்ட சுவிசேஷத்தினால் உண்டாகும் நம்பிக்கையை விட்டு அசையாமல்,




23

அந்த சுவிசேஷம் வானத்தின் கீழிருக்கிற சகல சிருஷ்டிகளுக்கும் பிரசங்கிக்கப்பட்டு வருகிறது. அதற்கென்றே பவுலாகிய நான் ஊழிக்காரனானேன். கொலோசெயர் 1:21-23.



24

(வசனம் அப்போஸ்தலர் 5:14)
திரளான புருஷர்களும், ஸ்திரீகளும் விசுவாசமுள்ளவர்களாகிக் கர்த்தரிடமாக அதிகமதிகமாய் சேர்க்கப்பட்டார்கள்.
அப்போஸ்தலர் 5:14.
அப்போஸ்தலர் புத்தகம் சொல்கிறது ஆயிரக் கணக்கான பேர் அனுதினமும் ஞானஸ்நானம் பெற்றனர்.



25

(வசனம்: அப்போஸ்தலர் 2:47)
... இரட்சிக்கப்படுகிறவர்களைக் கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். அப்போஸ்தலர் 2:47.
சபை கிறிஸ்துவின் சரீரமாயிருக்கிறது.


26

ஜனங்கள் கிறிஸ்துவுக்குள் ஞானஸ்தானம் பெற்றனர். சரீரம் என்ற அவருடைய சபையிலே அவர்கள் ஞானஸ்தானம் பெற்றனர். இயேசுவுக்கு விசுவாசமாயிருப்பது, ஆரம்ப நாட்களில் சீஷர்களுக்கு மிக முக்கியமாகதாக இருந்தது. இயேசுவின் நாமத்தில் போதகம் செய்யக்கூடாது அன்று சீஷர்கள் எச்சரிக்கப்பட்டபோது வேதாகமம் சொல்கிறது.



27

(வசனம் அப்போஸ்தலர் 5:29)
அதற்குப் பேதுருவும், மற்ற அப்போஸ்தலரும்: மனுஷருக்கு கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும் தேவனுக்குக் கீழ்படிவதே அவசியமாயிருக்கிறது.
அப்போஸ்தலர் 5:29.
தேவன் சொன்னதைச் செய்வது மிக முக்கியமானதாக இருந்தது, மனிதர்களின் பாரம்பரியங்களுக்கு கீழ்படிவதைக் காட்டிலும் என்று பார்க்கிறோம்.


28

எனவே, அவர்களிடம் தூய்மையான விசுவாசம் இருந்தது, ஏனெனில் அவர்கள் இயேசுவோடு இருந்தனர். இயேசு எதை விசுவாசித்தாரோ அதை அவர்கள் விசுவாசித்தனர். இயேசு போதித்ததை போதித்தனர்.


29

இன்று நமக்குத் தேவையானது இந்த வகையான விசுவாசம் தான், சாதாரண தூய்மையான கிறிஸ்துவின் இரண்டாம் வருகையை எதிர்நோக்கி இருந்த நண்பர்களும், அக்கம்பக்கத்தாருக்கும் இரட்சிப்பின் நற்செய்தியை பரப்புவதை எதிர்ப்பார்ந்திருந்த விசுவாசம், உலகமுழுவதும் இயேசு கொடுத்த சுவிசேஷ கட்டளையை நிறை வேற்றுதலை முன் வைத்த விசுவாசம்.
அதுதான் தூய்மையான விசுவாசம். அதுதான் முதலாம் நூற்றாண்ட சபை விசுவாசிகள் கொண்டிருந்த விசுவாசம்.



30

முதுலாம் வெற்றி கொள்ளும் சபை வெள்ளை குதிரையாக குறிப்பிடப்பட்டுள்ளது.
இந்த காலகட்டம் கி.பி.100ல் முடிகிறது.


31

இரண்டாம் முத்திரையை இயேசு உடைத்த போது யோவான் எதைப்பார்த்தார்?



32

(வசனம்: வெளிப்படுத்தல் 6:4)
அப்பொழுது சிவப்பான வேறொரு குதிரை புறப்பட்டது, அதின் மேல் ஏறியிருந்தவனுக்கு சமாதானத்தை பூமியிலிருந்து எடுத்துப் போடும்படியான அதிகாரம் கொடுக்கப்பட்டது.



33

பூமியிலுள்ளவர்கள் ஒருவரை ஒருவர் கொலைசெய்யத்தக்கதாகவும், ஒரு பெரிய பட்டயமும் அவனுக்குக் கொடுக்கப்பட்டது. வெளிப்படுத்தல் 6:4
எனவே இங்கு இரத்தம் தோய்ந்த விசுவாசம் அடையாளப்படுத்தப்படுகிறது.


22 □ தெரிந்துக்கொள்ளக்கூடியது அநேகம்


34

நாம் அறிந்த கி.பி.100க்கு பின் கிறிஸ்தவர்கள் கைது செய்யப்பட்டு ரோமுக்கு கொண்டு செல்லப்பட்டனர். அங்கு அவர்கள் கொலை செய்யப்பட்டனர், சிலர் ரோமைச் சுற்றி யுள்ள பெரிய அரங்கங்களில் சிங்கங்களுக்கு இரையாகப் போடப்பட்டனர்.


35

கிறிஸ்துவ சபைக்கு அது எவ்வளவு பயங்கரமான காலம். ஆனாலும் சபை வளர்ந்தது. ஒரு சபை சரித்திர ஆசிரியர் கிறிஸ்தவர்களின் இரத்தம் விதைபோல் இருந்தது என்று. கூறுகிறார். ஜனங்கள் மரித்து தங்கள் ஜீவனை கிறிஸ்துவுக்காகக் கொடுத்தனர். அது விதைக்கப்பட்ட விதைபோல இருந்தது, அநேகர் தோன்றி அவர்கள் இடத்தை நிரப்பினர். இரட்சிப்பின் நற்செய்தி ரோம சாம்ராஜ்ஜியம் எங்கும் பரவியது. அறியப்பட்ட உலகின் எல்லாப் பகுதிகளுக்கும் சென்றது.



36

எனவே அந்த சிவப்பு குதிரை, இரத்தம் தோய்ந்த விசுவாசத்தைக் குறிப்பிடுகிறது. இரண்டாம் முத்திரை கி.பி.100 முதல் கி.பி.323 வரை இருந்த கிறிஸ்தவ சபை.




37

(வசனம்: வெளிப்படுத்தல் 6:5)
இப்போது கிறிஸ்து மூன்றாம் முத்திரையை உடைக்கிறார். மூன்றாம் காலகட்ட கிறிஸ்தவசபை. அவர் மூன்றாம் முத்திரையை உடைத்தபோது மூன்றாம் ஜீவனானது நீ வந்து பார் என்று சொல்லக்கேட்டேன்.



38

நான் பார்த்தபோது, இதோ ஒரு கறுப்புக்குதிரையைக் கண்டேன். அதின்மேல் ஏறியிருந்தவன் ஒரு தராசைத் தன் கையிலே பிடித்திருந்தான்.
வெளிப்படுத்தல் 6:5.


39

இந்த கருப்புக் குதிரை தவறுகளை ஒத்துக் கொள்ளும் விசுவாசத்தைக் குறிக்கிறது.



40

(வசனம்: அப்போஸ்தலர் 20:29, 30)
நான் போன பின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்.



41

உங்களில் சிலர் எழும்பி, சீஷர்களைத் தங்களிடத்தில் இழுத்துக்கொள்ளும்படி மாறுபாடானவைகளைப் போதிப்பார்களென்று அறிந்திருக்கிறேன். அப்போஸ்தலர் 20:29, 30.
கிறிஸ்துவ சபையில் இது வருந்ததக்க காலம்.


42

இது தவறுகளை ஒத்துக்கொள்ளும் விசுவாசக் காலம் - அஞ்ஞானம் கிறிஸ்துவத்தோடு இணைந்தநேரம் தானியேல் இதை முன்னறிவித்திருக்கின்றார்.



43

(வசனம்: தானியேல் 8:12)
பாதகத்தினிமித்தம் அன்றாட பலியோடு கூட சேனையும் அதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டது.




44

அது சத்தியத்தைத் தரையிலே தள்ளிற்று. அது கிரியை செய்து அனுகூலமடைந்தது.
தானியேல் 8:12.


45

இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தினாலேயே இரட்சிப்பு என்ற சத்தியமானது இந்த காலத்தில் அழிந்தது. கிறிஸ்துவின் மூலம் இரட்சிப்பு என்பது சபையின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவதின் மூலம்தான் என்றானது.



46

நாம் முன்பு படித்ததுபோல, வேதத்தைப் பொறுத்தவரை இரட்சிப்பு என்பது இலவச பரிசு என்பதை நாம் அறிவோம். அது ஒரு பரிசு, ஏனெனில் நாம் எல்லோரும் பாவம் செய்து, அதைப் பெற்றுக்கொள்ள தகுதியற்றவர்களாக மாறினோம். நாம் சாவுக்கு உரியவர்கள், ஏனெனில் பாவத்தின் சம்பளம் மரணம். ஆனால் தேவனின் கிருபை வரமோ நித்திய ஜீவன்.

22  தெரிந்துக்கொள்ளக்கூடியது அநேகம்





47

நாம் பாவிகளாகயிருக்கையில், கிறிஸ்து நமக்காக மரித்தார். அதுதான் சாதாரண சுவிசேஷம்.





48

அந்த இலவச பரிசை பெற, நாம் இயேசுவை நம் உள்ளத்தில் வரவழைக்க வேண்டும்.




49

அப்போது அவர் நம் பாவம் அனைத்தையும் மன்னிப்பார்.




50

இரண்டாவதாக, பாவம் செய்வதை நிறுத்த அவர் பெலன் தருவார். அவரின் அடிச்சுவடுகளில் நடக்க அவர் பெலன் தருவார்.




51

ஆனால் இந்த சாதாரண இரட்சிப்பின் உண்மை, இயேசுவினால் நிறைவேற்றப்பட்ட உள்ள சாதாரண சுவிசேஷமும் இந்தக் காலக்கட்டத்தில் விசுவாசம் விட்டுக் கொடுக்கப்பட்ட மீண்டும் சபையின் எதிர்பாாப்புகளை நிறைவேற்றுதலுக்கு மாற்றப்பட்டது.



52

தைரியமாக தேவனின் சிங்காசனத்தை அடைந்து அவரின் கிருபையையும், பாவ மன்னிப்பையும் பெறுவதற்கு பதிலாக, வேதத்தில் சொல்லியபடி பாவத்தை அறிக்கை செய்வதற்கு பதிலாக, தங்கள் பாவங்கள் மன்னிக்கப்பட விலை கொடுக்க வேண்டம் என்று கிறிஸ்தவர்களுக்குச் சொல்லப்பட்டது.




53

(வசனம்: 1 யோவான் 1:9)
ஆனால் வேதம் சொல்கிறது. நம்முடைய பாவங்களை நாம் அறிக்கை செய்தால் பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மை சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார். 1 யோவான் 1:9.


54


குருவானரிடம் செல்லவேண்டும் என்று கிறிஸ்தவர்களுக்கு கூறப்பட்டது. ஒரு மனிதனிடம் அவர்கள் செல்ல வேண்டம். தைரியமாக தேவ சிம்மாசனத்தண்டை இனி போக முடியாது. இரட்சிப்பு இப்போது மிகவும் குழப்பமாக மாறினது இப்போது ஜனங்கள் இந்த சபையின் ஒப்புரவையும் ஏற்றுக்கொண்டனர். ஏனெனில் அவர்களிடம் தேவவார்த்தை இல்லை.


55

தேவனுடைய வார்த்தையை கொண்டிருப்பது இந்த நாட்களில் சட்டத்துக்கு புறம்பானது என்று கூறப்பட்டது. அதுவரை அச்சடிக்கும் இயந்திரம் கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே வேதத்தின் சிறுபகுதியை காண்பதும் மிக அரிதாக இருந்தது. அநேக மக்கள் சபை என்ன சொன்னதோ அதை ஏற்றுக்கொண்டனர். கிறிஸ்தவ விசுவாசம் கறைப்பட்டதாக மாறியது.


56

இரண்டாவது, வேதசத்தியத்தை புறக்கணித்ததினிமித்தம் சபை ஆராதனையும் வெகுவாக பாதித்தது. தேவனை தொழுகொள்வதற்கு பதிலாக மரத்தால், கல்லானவைகளை தொழுகொள்ளலாயினர். தேவன் பத்துக் கற்பனைகளில் சொல்கிறார்.



57

(வசனம்: யாத்திராகமம் 20:4, 5)
மேலே வானத்திலும், கீழே பூமியிலும், பூமியின் கீழ் தண்ணீரிலும், உண்டாயிருக்கிறவைகளுக்கு ஒப்பான



58


ஒரு சொரூபத்தையாகிலும், யாதொரு விக்கரத்தையாகிலும் நீ உனக்கு உண்டாக்க வேண்டாம்.



59

நீ அவைகளை நமஸ்கரிக்கவும் சேவிக்கவும் வேண்டாம். உன் தேவனாகிய கர்த்தராயிருக்க நான் எரிச்சலுள்ள தேவன்.

22 □ தெரிந்துக்கொள்ளக்கூடியது அநேகம்



60

என்னைப் பகைக்கிறவர்களைக் குறித்துப் பிதாக்களுடைய அக்கிரமத்தை பிள்ளைகளிடத்திலும் மூன்றாம், நான்காம் தலைமுறை மட்டும் விசாரிக்கிறவராயிருக்கிறேன்.
யாத்திராகமம் 20:4, 5.


61

இந்த காலத்தில்தான் விக்கிரகம் சபைக்குள் வந்தது. தேவனைத்தவிர வேறு எதையும் வணங்குவது தவறு என்று பத்துக் கற்பனை கூறுகிறது.


62

மூன்றாவது விட்டுக்கொடுக்கப்பட்ட வேத சத்தியம் என்னவென்றால், அது நாலாம் கற்பனையைப் பற்றியது, ஆராதனை நாள், வேதாகமம் தானியேலுக்கு என்ன கூறியது?



63

(வசனம்: தானியேல் 7:15)
தானியேலாகிய நான் என் தேகத்தினுள் என் ஆவியிலே சஞ்சலப்பட்டேன். என் தலையில் தோன்றின தரிசனங்கள் என்னைக் கலங்கப் பண்ணினது.
தானியேல் 7:15.


64

கொனசந்திராயன் எவ்விதம் முதல் ஞாயிறு கட்டளையை கட்டாயப்படுத்தினார் என்று அறிந்திருக்கிறீர்கள். ஆராதனைக்குரிய ஏழாம் நாளான சனிக்கிழமையிலிருந்து வாரத்தின் முதல் நாளான ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றப்பட்டது.



65

(வசனம்: யோவான் 14:15)
இயேசு சொன்னதை நினைவு கூறுவோம் நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளைக் கைக்கொள்ளுங்கள்.
யோவான் 14:15. விசுவாசம் விட்டுக் கொடுக்கப்பட்ட இந்த காலத்தில் இயேசுவின் மேலுள்ள அன்பு குறைந்தது, அநேகர் தேவனைக்காட்டிலும், அவருடைய வார்த்தையைக் காட்டிலும் பாரம்பரியத்தை பின்பற்றினர்.



66

ஓய்வுநாள் காரியத்தில் சபை விட்டுக்கொடுத்து ஆராதனை நாளை மாற்ற நினைத்தது. மே21, 1995 புனித கேத்தரினிஸ் கத்தோலிக்க சபை செனடில் சொன்னது.




67

முதலாம் நூற்றாண்டில் சபை மிக தைரியமாக இதுவரை செய்திராத புரட்சிகரமான மாற்றத்தை செய்தது. அந்த பரிசுத்த நாள்.





68

ஓய்வுநாள் சனிக்கிழமையிலிருந்து ஞாயிற்றுக்கிழமைக்கு மாற்றப்பட்டது. வேதத்தில் சொல்லப்பட்ட முறைப்படி அல்ல, சபையின் சொந்த விருப்பப்படி.




69

வேதந்தான் முழு அதிகாரம் கொண்டது என்று எண்ணும் மக்கள் கிரமமாக ஏழாம் நாள் ஓய்வுநாளான சனிக்கிழமையை அனுசரிக்கும், ஏழாம்நாள் அட்வென்டிஸ்ட் ஆக மாறுவர்.




70

வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையை ஆராதனை நாளாக கொள்வது வேதாகமத்தில் இல்லாதது. உலகை சுற்றியுள்ள அனைத்து வல்லுநர்களும் இதை ஏற்றுக்கொள்வர்.



71

இந்த மாற்றம் ரோம சக்கரவர்த்தியான கொனசந்திராயன் என்பவரால் கி.பி.320ல் கொண்டுவரப்பட்டது. அதை சபை ஏற்றுக்கொண்டது.



72

வேதாகமம் சொல்கிறபடி செய்யவேண்டம் என விரும்புவீர்களானால், நாம் ஏழாம் நாள் அட்வென்டிஸ்ட் ஆக இருக்க வேண்டும். இந்த விட்டுக் கொடுத்தல் காலத்தில் தான் அஞ்ஞான சூரிய நாளானது வேதத்தின் பரிசுத்த நாளுக்கு மாற்றானது.

22 தெரிந்துக்கொள்ளக்கூடியது அநேகம்



73

கிழக்கத்திய சபை சரித்திரம் பக்கம் 184 சொல்கிறது. கான்ஸ்டென்டைன் காலத்திய நாணயம் ஒரு பக்கம் கிறிஸ்துவின் உருவத்தையும் மறுப்பக்கம் சூரிய தெய்வத்தின் உருவமும் கொண்டதாக இருந்தது.



74

இது, தான் தேவனை மகிமைப்படுத்துவது போலவும் அதே வேளையில் தன் பெருமையை விட்டுக் கொடுக்காமலும்.


75

தேவன், தமது கட்டளைகளில் மிகவும் வெளிப்படையாய் சொல்வது.




76

(வசனம்: யாத்திராகமம் 20:11)
கர்த்தர் ஆறுநாளைக்குள்ளே வானத்தையும் பூமியையும் சமுத்திரத்தையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் சிருஷ்டித்தார்.



77

ஏழாம் நாளில் ஓய்ந்திருந்தார்: ஆகையால் கர்த்தர் ஓய்வுநாளை ஆசீர்வதித்து, அதைப் பரிசுத்தமாக்கினார். யாத்திராகமம் 20:11.


78

அவருடைய பிள்ளைகள் ஏழாம் நாளை பரிசுத்த நாளாய் ஆசரிக்க வேண்டம் என விரும்புகிறார். வேதத்தின் துவக்கத்தில் கூறும்போது.



79

(வசனம்: ஆதியாகமம் 2:3)
தேவன் நாம் சிருஷ்டித்து உண்டு பண்ணின தம்முடைய கிரியைகளையெல்லாம் முடித்த பின்பு அதிலே ஓய்ந்திருந்தபடியால்,



80

தேவன் ஏழாம் நாளை ஆசீர்வதித்து அதை பரிசுத்தமாக்கினார்.
ஆதியாகமம் 2:3



81

தேவன் சிருஷ்டிகரானால்.



82

ஆசீர்வதிக்கப்பட்ட நாள்.



83

தேவன் ஒரு நாளை பிரத்யேகப்படுத்தினால்.




84

தேவன் ஒரு நாளை மற்ற நாளைக்காட்டிலும் பிரத்தியேகப்படுத்தினால் மனிதனுக்கு அந்த நாளை மாற்றுவதற்கு அதிகாரமில்லை. இது ஆராதனைக்கும், மனிதனுடைய கீழ்படிதலுக்கும் ஒரு சவால். நாம் மனிதனுடைய பழக்கவழக்கங்களை பின்பற்றுகிறோமா? அல்லது தேவன் கூறியதை ஏற்கிறோமா?



85

இது ஒரு சத்தியத்தை விட்டுக்கொடுத்த காலம். நம் சபையின் விசுவாசத்தை விட்டுக்கொடுத்த காலம். கி.பி.323லிருந்து கி.பி.536 வரை.


86

நாம் இப்பொழுது நான்காம் கால திருச்சபையின் சரித்திரத்திற்க செல்வோம் - மங்கின நிறமுள்ள குதிரை.



87

(வசனம்: வெளிப்படுத்தல் 6:7, 8)
அவர் நாலாம் முத்திரையை உடைத்தபோது, நாலாம் ஜீவனானது நீ வந்து பார் என்று சொல்லும் சத்தத்தை கேட்டேன்.

22 தெரிந்துக்கொள்ளக்கூடியது அநேகம்



88

நான் பார்த்தபோது, இதோ மனிதன் நிறமுள்ள ஒரு குதிரையைக் கண்டேன். அதன் மேல் ஏறியிருந்தவனுக்கு மரணம் என்று பெயர். பாதாளம் அதன் பின் சென்றது.



89

பூமியின் காற்பங்கிலுள்ளவர்களைக் கொலை செய்யும்படியான அதிகாரம் அவைகளுக்கு கொடுக்கப்பட்டது.




90

பஞ்சத்தினாலும், சாவினாலும் பூமியின் துஷ்டமிருகத்தினாலும் வெளிப்படுத்தல் 6:7, 8.



91

செத்த விசுவாசம் - நான்காம் முத்திரை. இது சபையும், தேசமும் ஒன்று சேர்ந்த காலம். பரிசுத்த ரோம் நன்கு வளர்ச்சியடைந்த காலக்கட்டம், மேலும் மதச்சடங்கு சாரங்களில் மாத்திரமல்ல, அரசியல் ரீதியாகவும் வளர்ந்து சபையும், அரசியலும் ஒன்றாகக் கலந்தன.




92

கிறிஸ்தவ மார்க்கம் ஒரு அங்கீகரிக்கப்பட்ட மதமாக ரோம் பேரரசில் உருவெடுத்து அஞ்ஞான மார்க்கத்துக்கு ஈடானது.



93

இந்த இருண்ட காலகட்டத்தில் கிறிஸ்தவ மதம் ஞானஸ்தானம் எடுத்த அஞ்ஞான மார்க்கம் என்று அழைக்கப்பட்டது.
சபை வரலாறு, 2ம் நூற்றாண்டு, அத்தியாயம் 2, பாகம் 7.


94

இந்த காலகட்டத்தில் மக்களுக்கு வேதப்புத்தகம் கிடைக்கவில்லை. அச்சு இயந்திரம் கண்டுபிடிக்கப்படாத காலகட்டத்தில், வேதத்தை சொந்தமாக, வைத்திருப்பது சட்டத்திற்கு புறம்பானது.


95

மக்கள் தொன்றுதொட்டு வந்த பழக்கவழக்கங்களை பின்பற்றினர். அஞ்ஞான மார்க்கங்களின் சடங்குகள் சபையில் நுழைந்தது. இந்த வரலாற்று உண்மைகளைத்தான் உங்களோடு பகிர்ந்துகொள்கிறேன்.



96

(வீடியோ 7 வினாடிகள்)
ரோமச்சபைதான் சபை என்று அழைக்கப்பட்டது. நாம் யாரையும் தனிப்பட்ட முறையில் குற்றம் சாட்டவில்லை. ஒரு கொள்கை அல்லது அமைப்பைக் குறித்து பேசுகிறோம். உலகில் அநேக கத்தோலிக்க பாதிரியார்களும் கன்னியாஸ்திரிகளும், கத்தோலிக்க சபை விசுவாசிகளும் இயேசுவை நேசிக்கின்றனர். தேவனுடைய சத்தியத்தை தேடுகின்றனர். நாம் ஏன் இங்கு இருக்கிறோம்? எங்கு இருக்கிறோம்? என்பதை அறிந்துகொள்வது அவசியம்.



97

ஒரு பயங்கரமான விட்டுக் கொடுக்கப்பட ஒரு காலம். தேவனுடைய பிள்ளைகளை உபத்திரவப்படுத்தின காலம்.




98

அதனால்தான் இது இருண்ட காலம் என அழைக்கப்படுகின்றது. 5 கோடி கிறிஸ்தவர்கள் அவர்களின் விசுவாச் உறுதிக்காக கொலை செய்யப்பட்டனர்.




99

இங்கே சத்தியத்தை எப்படி விட்டுக்கொடுத்திருக்கின்றார்கள்.



100

பழக்க வழக்கங்கள்



101

பரிகாரங்கள்

22  தெரிந்துக்கொள்ளக்கூடியது அநேகம்



102

பணம் கொடுத்து இரட்சிப்படைதல் என்ற கொள்கை சபைக்குள் நுழைந்தது. பணத்தை கொடுத்து நம் உறவினர்கள் உத்தரிக்க ஸ்தலத்திலிருந்து மீளவோ அல்லது நாம் உத்தரிக்க ஸ்தலத்தில் கஷ்டப்படாமல் இருக்கவோ செய்யலாம்.



103

வேதத்தில் உத்திரிக்கிற ஸ்தலம் என்ற ஒன்று கிடையாது. சபையில் சிலை வணக்கம், சபைத் தலைமையில் ஏற்றத்தாழ்வுகள், சபைக் குறிப்பிடங்கள் தவிர்க்க முடியாத கொள்கையாகிவிட்டன. தேவனுடைய சத்தியம் தள்ளப்பட்டதா? முடிவில்லை. ஏனெனில் சத்தியம் இருளிலும் பிரகாசிக்கும். இருண்ட காலத்தில் மறைக்கப்பட்ட சத்தியங்கள் எல்லாம், மறுபடி கண்டுகொள்ளப்பட்டு சபை சீரமைக்கப்பட்டது.



104

மறுமலர்ச்சியின் காலத்தில் தேவனின் மீது விசுவாசம் மறுபடியும் உறுதிப்படுத்தப்பட்டது.


105

வால்டன்சிஸ் சகோதரர்கள்தான் முதன் முதலில் இருண்ட காலத்திலிருந்து சத்தியத்திற்காக வெளி வந்தவர்கள்.


106

அவர்கள் தேவனுடைய வார்த்தையாகிய வேதத்தை முக்கியப்படுத்தினர் வேதம் மாத்திரம் நமக்கு கிடைக்கவில்லையென்றால் வாழ்க்கைக்கு நமக்கு ஒரு வழிகாட்டி கிடைக்காமல் போயிருக்கும். இந்த அன்பின் கடிதம் இல்லாமல் இருந்திருக்கும்.


107

வட இத்தாலியில் வேதத்தை நேசித்த வால்டன்சிஸ் மக்களின் சரித்திரத்தை காணலாம். வால்டன்சிஸ் வேதத்தின் பகுதிகளை எழுதி தமது பள்ளிகளுக்கு, எழுதப்பட்ட வரிகளை உடைகளில் தைத்து நகரின் முக்கிய விதிகளில் நடக்க செய்வர்களாம். அந்த வசனங்களை அவர்கள் நண்பர்களிடத்திலும், சந்தைகளிலும் கல்லூரிகளிலும் பகிர்ந்து கொள்வார்கள்.


108

எப்படியாருப்பினும், அவர்கள் படிபட்டால் உயிருடன் எரிக்கப்படுவர் உயிர் நீத்தாலும், வால்டன்சிஸ் சகோதரர்கள் தேவனுக்கு செய்யும் ஊழியமாக கருதினர்.


109

வால்டன்சிஸ்க்கு பிறகு ஜான் ஹாஸ் தோன்றினார், இவர் பிரேகு பல்கலைக்கழகத்தில் பயின்ற வேத மாணவன். ஹஸ் அவருடைய நண்பர் ஜெரோமுடன் சபையில் உள்ள மனிதர்களுக்கும், சபைக்கும், கீழ்ப்படிவதைக் காட்டிலும், சத்தியத்திற்கு கீழ்ப்படிவது தான் முக்கியம் என கருதினர்.


110

அவர்களுடைய கீழ்ப்படிதலினாலும், தேவன் அவர்களை செய்ய சொன்ன காரியத்திற்கு கீழ்படிந்ததினாலும் எரிக்கப்பட்டனர். அவர்களுடைய சரீரத்தின் சாம்பல் மத்திய தரைக்கடலில் கலக்கப்பட்டது. அதே போல் அந்த மறுமலர்ச்சியும் மத்திய தரைக்கடல் பகுதி முழுவதும் பரவியது.


111

ஹஸ், ஜெரோம் உயிருடன் எரிக்கப்பட்ட பிற்பாடு ஜெர்மனியிலிருந்து மார்டின் லூத்தர் வேதத்தை ஆராய்ந்து இரட்சிப்பு கிருபையினால் தான் என்பதை கண்டுபிடித்தார்.


112

ஏன் மார்ட்டின் லூத்தர் இருண்ட காலத்தில் புறக்கணிக்கப்பட்ட எல்லா சத்தியத்தையும் கண்டுபிடிக்கவில்லை எனக்கேட்கின்றனர். வேதம் சொல்லுகிறது.



113

(வசனம் யோவான் 16:12)
இன்னும் அநேகங் காரியங்களை நான் உங்களுக்கு சொல்ல வேண்டியதாயிருக்கிறது. அவைகளை நீங்கள் இப்பொழுது தாங்க மாட்டீர்கள்.
யோவான் 16:12.

22 □ தெரிந்துக்கொள்ளக்கூடியது அநேகம்



114

வேத சத்தியத்தங்களை மீட்டெடுப்பது என்பது தொடர் முயற்சியாகும். இருண்ட காலங்களில் இயேசுவின் விசுவாசத்தை அவர்கள் கைவிடுவதற்கு நூற்றுக்கணக்கான ஆண்டுகள் பிடித்தது.
அதே போல் மீட்டெடுப்பதற்கும் பல ஆண்டுகள் பிடிக்கும்.


115


லூத்தர் மரித்தவுடன், லூத்தரன் சபை என்று தொடங்கினர். லூத்தருடைய மரணத்தோடு மறுமலர்ச்சியும் முடிந்துபோனது.


116

ஜெர்மனியிலிருந்து நாம் இப்போது ஜெனீவா, சுவிட்ஸர்லாந்திற்கு செல்வோம். அங்கு ஜான்கால்வின் என்ற வேத மானாக்காரை பாாக்கின்றோம்.


117

அவருடைய வேத கல்வியில் கிறிஸ்தவர்கள் கிருபையையும் மன்னிப்பையையும் மாத்திரம் பெற்றுக் கொள்வதில்லை, கிறிஸ்துவில் வளருதல் முக்கியம் என கண்டார்.


118

கால்வின் கிறிஸ்தவ வளர்ச்சியைக் குறித்து பேசினார். சிலர் இதை பரிசுத்தமாக்கப்படுதல் என்கின்றனர். இயேசு கிறிஸ்துவை ஆண்டவராக ஏற்றுக்கொள்ளும்போது பாவத்தை மேற்கொள்ள நமக்கு அவர் பெலம் தருகின்றார்.


119

ஜான் கால்வின் அவர்கள் மரித்த பிற்பாடு அவருடைய பின்னடியார்கள் பிரிஸிபட்டேரியன் என்ற சபையை தொடங்கினர்.
சத்தியம் இருண்ட காலங்களில் மறைக்கப்பட்டாலும், மறுபடியும் கண்டுபிடிக்கப்பட்டது.


120

கால்வினுக்கு பிற்பாடு வட ஐரோப்பாவில் உள்ள கிறிஸ்தவர்கள் வேதத்திலிருந்து கற்று, ஞானஸ்நானம் குழந்தைகளுக்கு தெளித்தலை விட கிறிஸ்துவின் மாதிரியைப் பின்பற்றி, முழுக்கு ஞானஸ்நானம் பெற வேண்டும்.



121

மேலும் முதியவர்களுக்கு அவர்களுடைய விருப்பத்தின்படி முழுக்கு ஞானஸ்நானம் கொடுக்கப்பட வேண்டும் என போதித்தனர். அவர்கள் அனபாப்திஸ்தர்கள் என அழைக்கப்பட்டனர்.




122

இருண்ட காலத்தில் மறைக்கப்பட்ட ஞானஸ்நானத்தில் மனிதன் முழுமையாக தண்ணீரில் மூழ்கடிக்கப்பட்டு, கிறிஸ்துவைப் போல பாவத்துக்கு மரித்து தேவனுக்கு உயிர்ப்பிக்க வேண்டும் என்ற சத்தியம் மறுபடியும் நிலைநிறுத்தப்பட்டது.





123

(வசனம் ரோமர் 6:3,4)
அவருடைய மரணத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்றதை அறியாமலிருக்கிறார்களோ?




124

மேலும் பிதாவின் மகிமையினாலே கிறிஸ்து மரித்தோரிலிருந்து எழுப்பப்பட்டது போல நாமும் புதிதான ஜீவனுள்ளவர்களாய் நடந்து கொள்ளும்படிக்கு,




125

அவருடைய மரணத்திற்குள் ஞானஸ்நானத்திலே கிறிஸ்துவுடனே கூட அடக்கம் பண்ணப்பட்டோம். ரோமர் 6:3.4.





126

கிறிஸ்து இயேசுவுக்குள்ளாக ஞானஸ்நானம் பெற்ற நம் அனைவரும்




127

நாம் அவரைக் குறித்து அறிந்து கொள்ள வேண்டும்.




128

பாவத்தை அறிக்கை செய்ய வேண்டும்.



129

மேலும் கிறிஸ்துவை சொந்த இரட்சகராய் ஏற்றுக் கொள்ள வேண்டும். கிறிஸ்துவைப் போல நாம் அனைவரும் முழுக்கு ஞானஸ்நானம் பெற்றுக் கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினபடியால் அநேகர் இரத்த சாட்சிகளாய் மரித்தனர்.


130

இந்த சிறு ஆரம்பத்தில் தான் பாப்டிஸ்ட் சபை உற்பத்தியானது.



131

(வசனம் மத்தேயு 28:18,19)
கிறிஸ்து சொன்னது என்னவெனில் வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமும் எனக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது.



132

நீங்கள் உலகமெங்கும் போய் சகல ஜாதிகளையும் சீஷராக்கி,



133

பிதா, குமாரன், பரிசுத்த ஆவியின் நாமத்தினாலே ஞானஸ்தானம் கொடுங்கள். மத்தேயு 28:18,19.


134

இயேசு அவருடைய சபையை சீஷராக்கி ஞானஸ்தானம் கொடுங்கள் என்ற கட்டளையைக் கொடுத்தார். இன்றிருப்பது போல மறுமலர்ச்சி காலத்தில் கானப்பட்ட பாப்டிஸ்தியர்கள் அந்த கட்டளையை ஏற்றிருந்தனர்.


135

இருண்ட காலங்களில் மறைக்கப்பட்ட சத்தியங்களை ஒவ்வொரு மறுமலர்ச்சியாளர்களும் மறுபடியும் கண்டுபிடித்தனர். அப்படி கண்டுபிடித்த சத்தியங்களை பின்பற்றினவர்களை அவர்களுடைய பின்னடியார்கள் இனைத்து லூத்தரன், பிரஸிபிட்டரியன்கள், பாப்டிஸ்தியர்கள் என்று பெரிய மறுமலர்ச்சி சபைகளாக மாற்றினர்.


136

கடைசியாக இங்கிலாந்தைச் சேர்ந்த ஜான் வெஸ்லி என்பவர் வேதத்தை படிக்க ஆரம்பித்தார்.


137

அவருடைய சகோதரர் சார்லஸ் கிறிஸ்துவைப்பற்றி அழகான பாடல்களை எழுதி சபையில் பாட வேண்டும் என வாஞ்சித்தார். மேலும் இலவச ஈவாகிய இரட்சிப்பை பெற்றுக்கொண்டால் மட்டும் போதாது, அதேவேளையில் தேவனுக்கு கீழ்படிவதும், ஞானஸ்தானம் பெற்று கிருபையில் வளர்வதும், வேதத்தின் அடிப்படையில் பரிசுத்த வாழ்க்கை வாழ்வதும் மிக முக்கியம் என் கண்டனர். ஜான் வெஸ்லி என்ற சமய சீர்திருத்தக்காரர் மரித்தவுடன் அவருடைய பின்னடியார்களும் மற்றவர்களுமாக சேர்ந்து மெத்தடிஸ்ட் சபை என்ற இயக்கத்தை ஆரம்பித்தனர்.




138


உலகின் மற்ற பாகங்களாகிய தென் அமெரிக்கா, வட அமெரிக்கா, ஐரோப்பா போன்ற நாடுகளில் உள்ள மக்கள் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையைக்குறித்த படிக்கலாயினர்.


139

வட அமெரிக்காவிலிருந்த வில்லியம் மில்லர் என்பவர் கிறிஸ்து யோவான் 14 ம் அதிகாரத்திலுள்ள வாக்குத்தத்தை படித்தார். மேலும் தானியேல் வெளிப்படுத்தல் போன்ற தீர்க்கதரிசனங்களையும் படித்து இயேசு சீக்கிரம் வருகின்றார் என்ற சத்தியத்தை புரிந்து கொண்டார்.



140

ஆகவே, இவைகளின் அடிப்படையில்


141

வால்டன்ஸிஸ் பரிசுத்த வேதத்தைக்குறித்து போதித்தார்கள்.


22 □ தெரிந்துக்கொள்ளக்கூடியது அநேகம்


142


ஹஸ் கீழ்படிதலைக்குறித்து போதித்தார்


143


மார்ட்டின் லூத்தர் கிருபையைக் குறித்து போதித்தார்.


144

கால்வின் பரிசுத்தம் அல்லது கிறிஸ்தவ வளர்ச்சியைக்குறித்து போதித்தார்.


145

அனபாப்டிஸ்தியர்கள் ஞானஸ்தானத்தைக்குறித்து போதித்தனர்.


146

வெஸ்லி போதித்த பரிசுத்தம் என்ற சத்தியத்தோடு, வில்லியம் மில்லர் கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையை குறித்த சத்தியத்தையும் சேர்த்து போதித்தார்.


147

மில்லருக்கு பிறகு அட்வெந்து இயக்கம் தொடர்ந்தது. அவருடைய நன்பர்கள் மேலும் மனிதன் எப்போழுது மரிக்கிறான், எப்பொழுது கிறிஸ்துவுக்குள் நித்திரையடைகின்றார்கள்? எப்பொழுது உயிரடைய காத்திருக்கின்றார்கள்? வேதம் தெளிவாக சொல்லுவதுபோல நாம் உயிர்த்தெழுதலின்போது கல்லறையிலிருந்து எழும் வரைக்கும் கிறிஸ்துவுக்குள் நித்திரையாயிருக்கின்றோம். நாம் இழக்கக்கொடுத்த நம்முடைய உறவினர்களோடு மறுபடியம் சேரும் நாள் எவ்வளவு ஆனந்தபாக்கியமான நாள்!



148

ஆதி அட்வென்டிஸ்தர்கள் வேதத்திலிருந்து இவையெல்லாவற்றையும் உறுதிப்படுத்தினர்.




149

1 மரணம் நித்திரைக்கு ஒப்பாயிருந்தது.




150

2 கிறிஸ்து இயேசு சீக்கிரம் வருகிறார்.




151

3 மரித்துப்போனவர்களை உயிரோடெழுப்புவார்.




152

(வசனம் 1 தெசலோனிக்கேயர் 4:16)
கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும் பிரதான தூதனுடைய சத்தத்தோடும் தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து, இறங்கி வருவார். அப்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்
1 தெசலோனிக்கேயர் 4:16. .



153

(வசனம் யோவான் 14:15)
வில்லியம் மில்லருக்கு பின்பு கிறிஸ்துவின் அதிசீக்கிர வருகையை விசுவாசிக்கும் விசுவாசிகள் கிறிஸ்துவின் மற்றொரு முக்கிய வார்த்தையையும் கண்டுபிடித்தனர். யோவான் 14:15.
நீங்கள் என்னிடத்தில் அன்பாயிருந்தால் என் கற்பனைகளை கைக்கொள்ளுங்கள்.
நாம் அவரில் அன்பு செலுத்துவதால் அவருடைய எல்லா கற்பனைகளையும் பின்பற்றுகிறோம்.



154

(வசனம் மத்தேயு 15:9)
கிறிஸ்துவின் வார்த்தைகளை மத்தேயு 15:9ல் கவனியுங்கள்.
மனுஷருடைய கற்பனைகளை உபதேசங்களாய்ப் போதித்து, வீனாய் எனக்கு ஆராதனை செய்கிறார்கள். இது எவ்வளவு உண்மையானது. மனித கட்டளைகளை சத்தியத்தைப் போல போதிக்கின்றார்கள்.



155

மனிதன் என்ன பேசுகிறான், சொல்லுகிறான் என்பது முக்கியமல்ல, தேவன் என்ன சொல்லுகிறார் என்பது தான் முக்கியம்.




156

ஆராதனை என்று வரும் போது, தேவன் நமக்கு பிரத்தியேகப்படுத்தின ஓய்வுநாளை ஆசரிக்க வேண்டும். தேவன் நமக்கு கொடுத்த விசேஷித்த நான் இந்த மகத்துவமான சத்தியத்தைக் கண்டுபிடித்து ஏற்றுக்கொண்டவர்கள், ஏழாம் நாள் திருச்சபை என்ற சபையை ஏற்படுத்தினர்.
ஏசாயா 58:13,14 விட்டுப்போன தேவனுடைய கற்பனையை திரும்ப உறுதிப்படுத்த தேவன் அழைக்கிறார். வேத வசனம் இந்த சிறப்பான நாளை வலியுறுத்திப் பேசுகின்றது.



157

(வசனம் ஏசாயா 58:13,14)
என் பரிசுத்த நாளாகிய ஓய்வு நாளிலே உனக்கு இஷ்டமானதைச் செய்யாதபடி உன் காலை விலக்கி



158

ஓய்வுகளை மனமகிழ்ச்சியின் நாளென்றும், கர்த்தருடைய பரிசுத்த நாளை, மகிமையுள்ள நாளென்றும், சொல்லி, மகிமையாக எண்ணுவாயானால்,



159

உன் வழிகளின் படி உனக்கு இஷ்டமானதை செய்யாமலும் உன் சொந்த பேச்சை பேசாமலிருந்து



160

அப்பொழுது கர்த்தரில் மனமகிழ்ச்சியாயிருப்பாய்.



161

பூமியின் உயர்ந்த இடங்களில் உன்னை ஏறியிருக்கும்படி பண்ணி



162

உன் தகப்பனாகிய யாக்கோபுடைய சுதந்தரத்தால் உன்னை போதிப்பேன்.


163

தேவன் இந்த நாளிலே யாதொரு வேலையும் செய்யக்கூடாது என கூறுகின்றார். நம்முடைய சொந்த நலனை அந்த நாளில் தேடக்கூடாது.


164

அது பரிசுத்தமான நாள். அந்த நாளில் தேவனை நாம் முன்னிறுத்தினால் நம்முடைய அனுபவம் மகிழ்ச்சியாயிருக்கும். ஓய்வு நாள் மிக உணர்ச்சி பூர்வமான நாள். அந்த நாளில் தேவன் சிசேசித்த ஆசீர்வாதத்தை நமக்கு அருளி உயர்ந்த இடங்களில் ஏறியிருக்கும்படி பண்ணுவேன் என்று கூறுகின்றார். நாம் அவரை முதன்மையாக்கினால் அவர் அதிகமான ஆசீர்வாதத்தைத் தருவார்.



165


தேவன் வேதத்தில் கூறியிருக்கிற ஒவ்வொரு சத்தியத்திற்கும், சாத்தான் ஒரு பொய்யான சத்தியத்தையும் கொண்டு வருகிறான்.


166

நாம் மரித்தபின்பு கல்லறையில் நித்திரையிலிருக்கிறோம் என்று வேதம் கூறுகிறது. ஆனால் பிசாசு பரலோகத்திற்கோ, உத்திரிக்கிற, ஸ்தலத்திற்கோ செல்கிறான் என்று கூறுகிறான்.


167


தேவன் ஞானஸ்நானம் என்பது முழுக்குதல் என்று கூறுகிறார். ஆனால் பிசாசோ தெளித்தல் என்கிறான். தேவன் சுகாதார விதிகளை கொடுத்திருக்கிறார். சாத்தான் அவைகளை மீற உதவி செய்கிறான். ஒவ்வொரு சத்தியத்திற்கும், ஒரு பொய்யான சத்தியத்தை சொல்லி குழப்புகிறான்.



168

(வசனம் வெளிப்படுத்தல் 18:2)
வெளிப்படுத்தல் புத்தகம் இதைக்குறித்து தெளிவாய் பேசுகிறது. அவன் பலத்த சத்தமிட்டு மகா பாபிலோன் விழுந்தது! விழுந்தது!

22  தெரிந்துக்கொள்ளக்கூடியது அநேகம்




169

அது பேய்களுடைய குடியிருப்பும், சகலவித அசுத்த ஆவிகளுடைய காவல் வீடும், அசுத்தமும் அருவருப்புமான சகலவித பறவைகளுடைய கூடுகளுமாயிற்று.
வெளிப்படுத்தல் 18:2.
தீர்க்கதரிசி காலத்தில் பாபிலோன் என்பதற்கு மதக்குழப்பம் என்று அர்த்தம். இங்குள்ள ஆலோசனையை கவனியுங்கள். பேய்களுடைய குடியிருப்பு, அசுத்த ஆவிகளுடைய காவல் வீடு, அசுத்தமும் அருவருப்புமுள்ள சகலவித பறவைகளுடைய கூடுமாயிற்று.



170

(வசனம் வெளிப்படுத்தல் 18:4)
பின்பு வேறொரு சத்தம் வானத்திலிருந்து உண்டாகக் கேட்டேன். அவளைவிட்டு வெளியே வாருங்கள்.




171

நீங்கள் அவளுடைய பாவங்களுக்கு உடன்படாமலும், அவளுக்கு நேரிடும் வாதைகளில் அகப்படாமலும் ....
வெளிப்படுத்தல் 18:4.



172

தேவன் அவருடைய பிள்ளைகளை குழப்பத்திலிருந்தும் பாவத்தில் பங்குபெறாமலும் இருக்க அழைக்கிறார். நண்பர்களே, இயேசு இப்போதே உங்களை அழைக்கிறார். கிறிஸ்துவுக்காக எழுந்து நில்லுங்கள்.



173

(வசனம் அப்போஸ்தலர் 2:47)
தேவனுடைய வார்த்தையை கேளுங்கள். தேவனை துதித்து, ஜனங்களெல்லாரிடத்திலும் தயவு பெற்றிருந்தார். இரட்சிக்கப்படுகிறவர்களை கர்த்தர் அனுதினமும் சபையிலே சேர்த்துக் கொண்டு வந்தார். அப்போஸ்தலர்கள் 2:47.



174

(வசனம் 1 கொரிந்தியர் 12:13) நாம் யூதராயினும், கிரேக்கராயினும், அடிமைகளாயினும், சுயாதீனராயினும், எல்லோரும் ஒரே ஆவியினாலே ஒரே சரீரத்துக்குள்ளாக ஞானஸ்நானம் பண்ணப்பட்டு.



175

எல்லோரும் ஒரே ஆவிக்குள்ளாகவே தாகந்தீர்க்கப்பட்டோம்.
1 கொரிந்தியர் 12:13.



176

(வசனம் 1 கொரிந்தியர் 1:18)
சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப்போகிறவர்களுக்கு பைத்தியமாயிருக்கும்.



177

இரட்சிக்கப்படுகிற நமக்கு அது தேவ பெலனாயிருக்கிறது.
1 கொரிந்தியர் 1:18.


178

இந்த இரவில் நமக்கு கிறிஸ்துவின் வாழ்க்கையினாலும், போதனையினாலும், சத்தியத்தை வெளிப்படுத்தி, நாம் அதை பின்பற்ற வேண்டும் என்கின்றார்.
சத்தியத்திற்கும், சபைக்கும் நடைபெறுகின்ற யுத்தத்தையும், உபத்திரவங்களையும் பயன்படுத்தி மாய சத்தியத்தையும், அநியாயத்தையும் சபையில் சாத்தான் நுழைந்தான். இப்படியிருந்தும் வரலாற்றின் நெடுகிலும், தேவன் அவருடைய பிள்ளைகளை மெய்யான சபைக்கு கொடுத்த சத்தியத்திற்குள் எப்படி மறுபடியும் கொண்டு வந்து சேர்த்தார் என்பதையும் பார்த்தோம். தேவன் சத்திய குழப்பத்திலிருந்து வெளியே வரச்சொல்லி அழைக்கிறார். அப்பொழுதே என் ஜனங்களை வெளியே வாருங்கள் என்று அழைக்கின்ற தேவ தூதர்களுக்கு மாறுத்தரம் சொல்ல விரும்புகின்றீர்களா? இப்பொழுதே தேவனுடைய கற்பனையை கைக்கொள்ளும் சபையில் அங்கமாக விரும்புகின்றீர்களா?
பாபிலோனிலிருந்து வெளியே அழைக்கப்பட்டு நீதியைச் செய்ய தேவன் கூறுகின்றார். இயேசுவை நேசிக்கின்றாயா? அவர் சீக்கிரம் வருகிறார். அவர் சீக்கிரம் வந்து நம்மை அவர் ஆயத்தம் பண்ணும் அந்த பரலோக ராஜ்யத்திற்கு அழைத்துச் செல்ல விரும்புகிறார். அவரை பின்பற்ற விரும்புகிறீர்களா?

22  தெரிந்துக்கொள்ளக்கூடியது அநேகம்

# 23 □ வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்





1

கடைசி ஏழு வாதைகளில் தப்பித்துக் கொள்வது எப்படி.


2

எகிப்திய நாகரீகத்தின் மிக உண்ணதமான நகரம். க. மு. 1445, கிட்டத்தட்ட 215 ஆண்டுகள் இஸ்ரவேல் ஜனம் அடிமைத்தனத்தில் கஷ்டப்பட்டனர். யோசப்பை அறியாத பார்வோன்கள் ஆண்டு வந்த காலம்.


3

புதிய ஆட்சியாளர், பெருகிவரும் இஸ்ரவேலர்கள், அந்நாட்டு பாதுகாப்புக்கு அச்சுறுத்ததலாகவும், ஒரு யுத்தம் ஏற்பட்டால் இஸ்ரவேலர் எகிப்தின் விரோதிகளோடு சேர்ந்து நம்மை தாக்குவார்கள் எனவும் பயந்து, இஸ்ரவேலரை சிறைப்படுத்தினார்கள். அடிமைகளாக கொடுமைப்படுத்தினார்கள்.



4

(வசனம்: யாத்திராகமம் 1:12)
...அவர்களை எவ்வளவு ஒடுக்கினார்களோ,




5

அவ்வளவாய் அவர்கள் பலுகிப்ப பெருகினார்கள்.



6


(வசனம்: யாத்திராகமம் 2:23, 24)
... இஸ்ரவேல் புத்திரர்கள் அடிமைதனத்தின் காரணமாக புலம்பினார்கள்.



7

அவர்கள் அடிமைத்தனத்தினால் தவித்து முறையிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள் அடிமை தனத்திலிருந்து முறையிடும் சத்தம் தேவ சந்நிதியில் எட்டினது.

# 23 வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்



8


தேவன் அவர்கள் பெருமூச்சைக் கேட்டு, தாம் ஆபிரகாமோடும், ஈசாக்கோடும், யாகோபோடும் யெ்த உடன்படிக்கையை நினைவு கூர்ந்தார்.
யாத்திராகமம் 2:23, 24.


9

ஆண்டவர் ஆபிரகாமோடு 400 ஆண்டுகளுக்கு முன்பு உடன்படிக்கை பண்ணியிருந்தார். அந்த நாள் வந்தது. தேவன் ஆயத்தமாக இருந்தார், அவர்களின் மீட்பர் ஆயத்தமாக இருந்தார்.


10

ஆண்டவரும் மோசேயும் சந்தித்தனர். அரண்மனையிலோ, பெரிய பிரமிடுகளின் அடிவாரத்திலோ சந்திக்கவில்லை. ஆனால் எரிகிற செடியின் அருகில் சந்தித்தனர்.




11

(வசனம் யாத் 3:7-8)
ஆண்டவர் சொன்னார் எகிப்திலே உள்ள என் ஜனங்களின் உபத்திரவத்தை நான் பார்க்கவே பார்த்தேன்.




12

ஆளோட்டிகளினிமித்தம் அவர்கள் இடுகிற கூக்குரலைக் கேட்டேன். அவர்கள் படுகிற வேதனைகளையும் அறிந்திருக்கிறேன்.



13

அவர்களை விடுதலையாக்குவதற்காக நான் வந்திருக்கிறேன்.
யாத்திராகமம் 3:7,8.
மோசேயிடம் தேவன் பேசி சொன்னது



14

(வசனம் யாத்திராகமம் 3:10)
இப்பொழுது வா, நான் உன்னை பார்வோனிடத்தில் அனுப்புகிறேன்.



15

(வசனம் யாத்திராகமம் 3:10)
இப்பொழுது வா, நான் உன்னை பார்வோனிடத்தில் அனுப்புகிறேன்.


16

மோசே எகிப்தை விட்டுப்போய் 40 ஆண்டுகள் ஆகி இருந்தது. அவர் எகிப்திய மொழி பேசி 40 ஆண்டுகள் ஆகியிருந்தது. உண்மையில் அந்த 40 ஆண்டுகளில் தனிமையில் ஆடுகளை வனாந்திரத்தில் மேய்த்துக்கொண்டு இருந்தார். பெருமை நிறைந்த எகிப்தின் இளவரசனாக அரண்மனையில் சுற்றித்திரிந்த போது இருந்த தன்னம்பிக்கை விலகிப்போய் இருந்தது. வேதாகமம் சொல்கிறது.



17

(வசனம் அப்போஸ்தலர் 7:22)
மோசே எகிப்தியருடைய சகல சாஸ்திரங்களிலும், கற்பிக்கப்பட்டு, வாக்கிலும் செய்கையிலும் வல்லவனானான்.
அப்போஸ்தலர் 7:22.


18

ஆனால் வனாந்திரத்தில் மோசே தாழ்மையை அதிகமாக கற்றுக்கொண்டான். ஆடுகளை பராமரிப்பதின் மூலம் பொறுமையையும், சாந்தத்தையும் கற்றுக்கொண்டான். இப்பொழுது தேவ ஜனங்களை மீட்க மோசே ஆயத்தமானான். இஸ்ரவேலை மீட்டு ஒரு தகப்பன் நடத்துவது போல அவர் ஜனங்களை நடத்தினான். மோசே தாழ்மையாக கர்த்தருடைய போதனைகளுக்கு கீழ்படிந்து, அப்பொழுது பார்ப்பதற்கு கூடாத வேலையாக தோன்றினும் அதனை ஏற்றுக் கொண்டான்.


19

மோசேக்கு உதவி செய்வதற்காக கர்த்தர் எகிப்திலே உள்ள ஆரோனை ஏற்படுத்தி இந்த உன்னதமான ஊழியத்தை நிறைவேற்ற, அனேக ஆண்டுகள் மோசே எகிப்தின் பாஷையை அறிந்திருந்ததால் மோசேயின் வாயாகவும் இருக்க ஆரோனுக்கு தேவன் அறிவுறுத்தி இருந்தார்.

23  வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்

# 23  வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்


20

தேவனால் அனுப்பப்பட்ட தூதுவர்கள் என்ற உறுதியோடு பார்வோனின் அரன்மனைக்கு இந்த இரண்டு சகோதரர்களும் சென்றனர். அவர்கள் தேவனுடைய நாமத்தினால் அவருடைய வல்லமையை குறித்து பேசினர். இந்த வித்தியாசமான காட்சியை அகந்தையான ராஜா நோக்கியிருக்க கூடும். ஒரு எளிமையான ஆட்டு இடையன், மற்றொருவன் சாதாரன எபிரேய அடிமையாக இருவரும் ராஜாவுக்கு முன்பாக நின்றனர். இருவரும் அவர்கள் சேவிக்கும் தேவனின் வல்லமையைக்குறித்து பேசினர். பார்வோன் தேவனுடைய பிள்ளைகளை விடுவிக்க வேண்டும் என்ற செய்தியுடன் வந்த ஆரோனை கண்டவுடன் பார்வோன் மிகுந்த கோபம் கொண்டூான்.



21

(வசனம் யாத்திராகமம் 5:2)
நான் ஆண்டவருக்கு கீழ்படிந்து இஸ்ரவேலை போகவிடுவதற்கு அவர் யார்?



22

நான் கர்த்தரை அறியேன், நான் இஸ்ரவேலை போகவிடுவதில்லை என்றான். யாத்திரகாமம் 5:2. ஆயிரக்கணக்கான அடிமைகளோடும், அவர்கள் பொருட்களோடும், இலவசமான வேலையைவிட்டுப் பிரிந்து செல்வது பார்வோனின் விருப்பம் இல்லை. ஆரோனுடைய விண்ணப்பம் நிலையாய் எதிர்க்கப்பட்டது. இராஜா அவர்கள் வேலைப் பலுவை அதிகமாக்கினான்.


23

ஆனால் சீக்கிரத்தில் தேவன் பார்வோனுக்கு தேவன் யார் என்றும் அவரின் மகத்தான வல்லமையை பற்றியும் அறிய வைத்தார். அடிமைத்தனத்திலிருந்த அவருடைய ஜனங்களை விடுவிக்கும் வரையில் தேவன் ஒரு வாதைக்குப் பின் மற்றொரு வாதையை அனுப்புவேன் என்று மோசே மற்றும் ஆரோன் மூலம் எச்சரித்தார். பின்பு பார்வோனுக்கு தேவனுடைய செய்தி என்னவென்றால்.



24

(வசனம் யாத்திராகமம் 7:17)
இதன் மூலம், நானே கர்த்தர் என்பதை அறிந்து கொள்வாய் என்றார்.
யாத்திராகமம் 7:17.

# 23 □ வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்


25

வாதை விழுவதற்கு அனேக காலங்களுக்கு முன்பு பத்து என்பது பூரணமானது. ஒவ்வொரு வாதையின் முன்பும், மோசேவும், ஆரோனும், பார்வோன் ஜனங்களை போகவிடுவான், அதன் மூலம் தன்னையும் தனது ஜனங்களையும் காப்பான் என அறிந்து வரபோகிற நியாயத் தீர்ப்பை குறித்து எச்சரித்தனர். ஆனால் பார்வோன் தொடர்ந்து தன் செயல்கள் மூலம் தன் இருதயத்தை கடினப்படுத்தினான். தேவன் கூறியபடியே விநோதமான ஆபத்துகள் எகிப்தை சந்தித்தன.




26

(வீடியோ 9 வினாடிகள்) எகிப்தியர்கள் நைல் நதியை தெய்வமாக வணங்கினார்கள். ஆரோன் கோலை வைத்து அடித்தான், தண்ணீர் இரத்தமாக மாறியது. மீன்கள் செத்தது. எகிப்தில் உள்ள மற்ற எல்லா நீர்நிலையும் இரத்தமாக 7 நாள் இருந்தது. ஆனாலும் பார்வோன் தேவனுடைய ஜனங்களை போகவிடவில்லை.




27

பின்பு அத்தேசத்தை தவளைகளால் வாதித்தார். அவைகள் லட்சக்கணக்கில் உணவிலும், படுக்கையிலும் எங்கும் இருந்தது. ஆனாலும் பார்வோன் அவர்களை போகவிடாமல் வைராக்கியம் கொண்டான்.



28

பின்பு பேன்களின் வாதை வந்தது. அகந்தையான அரசன் ஜனங்களை போகவிட மறுத்தான். எப்படியாயினும், முதல் மூன்று வாதைகள் எபிரேயர், எகிப்தியர்கள் மேல் விழுந்தது. மற்ற ஏழு வாதைகள் எகிப்தியர் மேல் மட்டும் விழுந்தது.



29

(வசனம் யாத்திராகமம் 8:22-23) உன் ஜனத்திற்கும், என் ஜனத்திற்கும் வித்தியாசம் காட்டுவதற்காக ஒரு அடையாளத்தை நாளை காட்டுவேன் என்றார்.




30

அவர்கள் மத்தியிலே நானே தேவன் என்று நீ அறியும்படிக்கு

23 □ வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்

# 23  வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்



31

உன் ஜனத்திற்கும், என் ஜனத்திற்கும் வித்தியாசம் காட்டுவதற்காக ஒரு அடையாளத்தை நாளை காட்டுவேன் என்றார்
யாத்திராகமம் 8:22,23.


32

அடுத்து பார்வோனின் வீடு முழுவதும் வண்டுகளால் நிறைந்தது.


33

வண்டுகளுக்குப் பிறகு, அந்த தேசத்தை கொடியதான கொள்ளை நோய் பிடித்து, பயிர் வெளியில் உள்ள மிருகங்களையும் அழித்து போட்டது. பார்வோன் கவனமாக நோக்கினான். மோசே சொன்னது போல எபிரேயர்களின் மிருகங்கள் அழிக்கப்பட்டதா? அல்லது பாதுகாக்கப்பட்டதா?



34

(வசனம் யாத்திராகமம் 9:7)
இஸ்ரவேலர்களின் மிருக ஜீவன்களில் ஒன்றும் மரித்துப் போகவில்லை என்பதை பார்வோன் ஆட்களை அனுப்பி, கண்டுகொண்டான்.



35

பார்வோனின் இருதயம் கடினப்பட்டது. அவன் இஸ்ரவேலர்களை போகவிடவில்லை. யாத்திராகமம் 9:7.



36

ஆறாம் வாதை, மிருகங்களின் மேலும் மனிதர் மேலும் கொப்பளங்கள் உண்டானது. ஆனாலும் கடின மனதுள்ள அரசன், ஜனங்களை போகவிடவில்லை.


37

தீர்க்கதரிசனம் அடுத்து, கல்மழை என்று முன்னுரைத்தது.



38

(வீடியோ 8 வினாடிகள்) இருப்பினும் தேவனுடைய வாக்குத்தத்தம் என்னவென்றால் தங்களை பாதுகாத்துக்கொள்பவர்களின் மிருகங்கள் மரிப்பதில்லை. இந்த செய்தி எகிப்து தேசம் முழுவதும் பரவி அவர்களையும், மிருகங்களையும் காப்பாற்றினர். இடி, மின்னலுடன் கூடிய கல்மழை வந்த, தங்களை ஆயத்தம் செய்யாதவர்கள் மரித்துப்போனார்கள்.



39

(வீடியோ 18 வினாடிகள்) எகிப்தியர்கள் அனைவரும் பூமி முழுவதும் ஜீவனுள்ள தேவனின் கண்காணிப்பில்தான் இருக்கின்றது, இதிலிருந்து தப்ப அத்தேவனுக்கு கீழ்படிவதுதான் பாதுகாப்பு என் உணர்ந்தனர். பார்வோன் வாதையை பார்க்கும்போது தேவனுக்கு கீழ்படிவதுபோலவும், அது விலகும்போது மறுபடியும் இருதயத்தை கடினப்படுத்துவதுமாக இருந்தான்.



40

(வீடியோ 19 வினாடிகள்) மோசே, பார்வோனை எச்சரித்தது, நீர் ஜனங்களை போகவிட மறுத்தால் அடுத்து பயங்கரமான வெட்டுக்கிளிகளால் வாதைவரும் என்றார். நிறைய வாதைகள் வரும் என பயந்து பார்வோனின் ஆலோசகர்கள், ஜனங்களை அனுப்பி விடும்படி சொன்னார்கள். ஆனால் ராஜா மறுத்தான். எனவே, வெட்டுக்கிளிக் வந்தன.


41

பின்பு மிகவும் கொடிய இருள் வந்தது, ஆனால் எதிராளியான பார்வோன் தொடர்ந்து பரலோக தேவனின் வார்த்தைக்கு எதிர்த்து நின்றான்.


42

அலட்சியம் செய்ய முடியாத, கடைசி வாதை ஒன்று வரும் என்று மோசே கூறினார். அழிவின் தூதன் எகிப்து தேசம் எங்கும், மிருகம் மினதன் எல்லாவற்றின் முதல் பிறப்பையும் அழிக்க நடுராத்திரியில் நடந்து போனார்.


23 □ வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்

# 23  வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்





43

(வீடியோ 15 வினாடிகள்)
மீண்டும் இஸ்ரவேலர் காக்கப்பட்டனர். ஆனால் இந்த முறை காக்கப்பட்ட எபிரேயர்களாக அல்லது கோசேன் நாட்டில் வசிப்பவராக மட்டும் இருந்தால் போதாது, அவர்கள் தங்கள் தேவன் மேல் கொண்டுள்ள விசுவாசத்தையும் உண்மையையும் வெளிக்காட்ட, ஒவ்வொரு குடும்பமும் ஒரு ஆட்டுக்குட்டியை அடித்து, அதின் இரத்தத்தை தங்கள் கதவு நிலைகால்களில் தெளிக்க வேண்டும். மேலும் தேவன் வாக்களித்தார்.




44

(வசனம்: யாத்திராகமம் 12:13)
அந்த இரத்தத்தை நான் கண்டு உங்களைக் கடந்து போவேன்.




45

நான் எகிப்துத தேசத்தை அழிக்கும் போது அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும். யாத்திராகமம் 12:13.



46

என்ன அருமையான காட்சி அன்று இரவு நடைபெற்றது. ஆயிரக்கணக்கான இஸ்ரவேலரும், அவர்கள் செய்வதைப் பார்த்து தங்கள் வீடுகளின் நிலைகால்களில் இரத்தத்தை தெளித்த எகிப்தியரும், வாசலில் நின்று பார்த்துக் கொண்டிருந்தனர். அன்று மிக அக்கறையோடு பார்த்துக் கொண்டிருந்தவர்கள், முதல் பிறப்பானவர்களாகவே இருந்திருக்கலாம் என எவரும் கற்பனை செய்ய முடியும்.




47

(வசனம்: யாத்திராகமம் 12:29)
பார்வோனின் தலைப்பிள்ளை முதல் காவலர் கிடங்கிலிருக்கும் சிறைபட்டவனின் தலைப்பிள்ளை வரைக்கும்,




48

எகிப்து தேசத்தில் இருந்த முதற்பேறனைத்தும்

# 23 □ வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்



49

மிருக ஜீவன்களின் தலையீற்றனைத்தையும் கர்த்தர் அழித்தார்.
யாத்திராகமம் 12:29.


50

ஆனாலும், தேவன் சொன்னபடி தங்கள் வீடுகளின் நிலைக்கால்களில் இரத்தத்தை தெளிந்திருந்த ஒரு வீட்டில் கூட இந்த வாதை நிகழவில்லை.


51

அந்த பரந்த எகிப்து ராஜிய முழுவதும் பயங்கரக் கூக்குரல் கேட்டது. நடுங்கிய கால்களோடும், பெலவீனமடைந்த நரம்புகளோடும் தான் எவ்விதம் எபிரேயர்களின் தேவனை கேலி செய்தான் என்பதையும், மரியாதை குறைவாக நடந்து கொண்டான் என்பதையும் பார்வோன் நினைத்துப் பார்த்தான்.



52

(வசனம்: யாத்திராகமம் 5:2)
நான் இஸ்ரவேலைப் போகவிடக் கர்த்தரின் வார்த்தையைக் கேட்டதற்கு அவர் யார்?
யாத்திராகமம் 5:2. என்று அவன் கேட்டதை இப்போது உணர்ந்தான். தாங்களும் மரித்துவிடுவோமா என்று பயந்துபோன பார்வோனும் அவனுடைய ஆலோசகர்களும், தாழ்மையுடன் இரு எபிரேய சகோதரர்களையும் அழைத்தனுப்பி இஸ்ரவேல் ஜனங்களை உடனேயே எகிப்தை விட்டு அழைத்துச் செல்லும்படி துரிதப்படுத்தினர்.



53

(வீடியோ 11 வினாடிகள்)
அன்று நடுராத்திரியிலே தானே, தேவனை தங்கள் மீட்பராக தெரிந்து கொண்ட, தேவஜனம் விடுவிக்கப்பட்டனர். தேவன் சொன்ன வண்ணமாகவே அந்த நேரத்துக்காக ஆயத்தம் செய்திருந்தனர். கால்களில் பாராட்டை தொடுத்தவர்களாக, கச்சையை கட்டிக் கொண்டு பெரிய யாத்திரைக்கு ஆயத்தமாக இருந்தனர். வாக்குத்தத்தம் செய்த தேசத்திற்கு போகும் பாதையில் இருந்தனர்.

23 □ வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்

# 23 வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்


54

நல்லது, உற்சாகமான கதை என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் இந்த 21ம் நூற்றாண்டில் வாழும் மக்களுக்கு எந்த விதத்தில் இது முக்கியமானது? முக்கியமற்றது போலத் தோன்றலாம். ஆனால் அப்படியல்ல. ஒரு வேளை மிக முக்கியமானதாக இல்லாமல் இருக்கலாம்.


55

கடைசி நாட்களில் இந்த பூமியின் மேல் நடக்கும் காரியங்கள் பற்றி, புதிய ஏற்பாட்டில் மிக முக்கியமான தீர்க்கதரிசனங்களைக் காண முடியும். அந்த தீர்க்கதரிசனங்கள் மிகத் தெள்ளத் தெளிவாக, வாதைகள் வரும் என்றும் அவை இவைகளைக் காட்டிலும் மிகக் கொடிதாக இருக்கும் என்றும் கூறுகின்றன.


56

ஆம், வேதாகம தீர்க்கதரிசனப்படி, மறுபடியும் இதே காரியங்கள் திரும்பவும் நடக்கும். ஆனால் பத்து வாதைகள் அல்ல, ஏழுவாதைகள், தேவபிள்ளைகளின் விடுதலையை (மீட்பை) உச்ச கட்டத்துக்கு கொண்ட வரும். எகிப்திலிருந்து அல்ல, கலகம் செய்த இந்த கிரகத்திலிருந்து.


57

ஆனால் எப்படி, எகிப்தில் தேவபிள்ளைகள் தங்களின் உன்னத விடுதலைக்கு முன், எகிப்பதிலே வந்த வாதைகளுக்கு சாட்சிகளாக இருந்து, எப்படி உபத்திரவப் பட்டார்களோ.


58

அதே போல், கிறிஸ்துவின் வருகைக்கு முன் இந்த துன்மார்க்கமான பூமியின் மேல் ஏழுவாதைகள் வருவதைக் காண்பார்கள். இந்த உபத்திரவத்தைக் குறித்து தானியேல் விவரிக்கிறார்.



59

(வசனம்: தானியேல் 12:1)
உன் ஜனத்தின் புத்திரருக்காக நிற்கிற பெரிய அதிபதியாகிய மிகாவேல் அக்காலத்திலே எழும்புவான்.


# 23 □ வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்

23 □ வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்



60

யாதொரு ஜாதியாரும் தோன்றினது முதல் அக்காலமட்டும் உண்டாயிராத ஆபத்துக்காலம் வரும்.



61

அக்காலத்திலே புஸ்தகத்தில் எழுதியிருக்கிறவர்களாக காணப்படுகிற உன் ஜனங்கள் அனைவரும் விடுவிக்கப்படுவார்கள்.
தானியேல் 21:1.


62

நித்திய சுவிசேஷம் உலகெங்கும் பிரசங்கிக்கப்படும். பாபிலோனை அல்லது தவறான தொழுகையிலிருந்து வெளியே வாருங்கள் என்ற இரண்டாம் தூதனின் தூது கொடுக்கப்படும். பின்பு எல்லா மனிதர்களுக்கும் மூன்றாம் தூது அறிவிக்கப்படும்.



63

(வசனம் வெளிப்படுத்தல் 14:9-10)
மிருகத்தையும் அதின் சொரூபத்தையும் வணங்கித் தன் நெற்றியிலாவது தன் கையிலாவது அதின் முத்திரையைத் தரித்துக் கொள்கிறவன் எவனோ.



64

அவன் தேவனுடைய கோபாக்கினையாகிய பாத்திரத்திலே கலப்பில்லாமல் வார்க்கப்பட்ட மதுவைக் குடித்து. வெளிப்படுத்தல் 14:9-10
.



65

மனித இனத்துக்கு, வேதத்தின் மூலம் கொடுக்கப்பட்ட எச்சரிப்புகளிலேயே இதுதான் மிக பயங்கரமான எச்சரிப்பு. ஆனால் தேவனுடைய கற்பனைகளுக்கு கீழ்படிவதா, மனித கற்பனைகளுக்கு கீழ்படிவதா என்ற இரண்டுக்கும் இடையிலான தெரிந்து கொள்ளுதலை மிகத் தெளிவாக உணர்ந்து கொள்ளும் முன் எவரும் மிருகத்தின் முத்திரையை தரித்துக் கொள்வதோ தேகோபாக்கினையின் பாத்திரத்தில் குடிப்பதோ இல்லை.


66

ஆனால் இந்தக் காரியம் முடிந்தவுடன் தேவனின் கிருபையின் வாசல், எல்லா மனிதருக்கும் நித்தியமாக மூடப்படும்.

# 23 □ வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்



67

பின் அந்த உன்னதமான அறிவிப்பு அறிவிக்கப்படும் அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும். அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்.



68

நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும் பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும். வெளிப்படுத்தல் 22:11.


69


கிறிஸ்து நமது பிரதான ஆசாரியராகப் பணிபுரிவது முடிந்தது. ஒவ்வொரு வழக்கும், நித்திய வாழ்வுக்கு அல்லது நித்திய அழிவுக்கென்று தீர்மானிக்கப்பட்டாயிற்று. கிருபையின் வாசல் அடைபட்டது. இப்போது தானியேல் தீர்க்கதரிசி சொன்னது போல, பூமியின் குடிகள் மகா உபத்திரவத்தை அனுபவிக்கும் காலம் இது.


70

மேலும் நன்பர்களே, வாதைகள் முடியும் முன் தேவன் தன் ஜனத்தை எடுத்துக் கொள்ளப் போவதில்லை. அவர்கள் முடிவு மட்டும் இந்த பூமியில் இருப்பார்கள். இஸ்ரவேல் ஜனங்கள் காக்கப்பட்டது போல இவர்களும் வாதைகளுக்கு காப்பாற்றப்படுவார்கள். ஆனால் இவர்களுக்கு கஷ்டங்களும், துன்பங்களும் இல்லாமல் இருக்காது. எல்லா மனிதர்களுக்கும் அது உபத்திரவ காலமாக இருக்கும் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.


71

துன்மார்க்கர்கள் தேவனின் கலப்பில்லா கோபத்திற்கு உள்ளாகும் இந்த நேரம், இந்த பூமியின் உன்னதமான நலையை எட்டும் காலமாக இருக்கப்போவதில்லை. கிறிஸ்து இந்த பூமிக்கு வந்து தன் ஜனத்தை விடுவிப்பதற்கு சற்று முன், நிகழும் இந்த பயங்கரமான உபத்திரவத்தை குறித்து யோவான் விவரிக்கின்றார்.



72

(வசனம் வெளிப்படுத்தல் 15:1)
பின்பு, வானத்திலே பெரிதும், ஆச்சரியமுள்ள வேறொரு அடையாளத்தைப் பார்த்தேன்.



73

ஏழு வாதைகளையுடைய ஏழு தூதர்களைக் கண்டேன் அவைகளால் தேவனுடைய கோபம் முடிகிறது. யோவான் மறுபடியும் எழுதுகிறார். வசனம் வெளிப்படுத்தல் 15:1.



74

(வசனம் வெளிப்படுத்தல் 16:1)
அப்பொழுது தேவாலயத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ் சத்தம் அந்த ஏழு தூதருடனே நீங்கள் போய்.



75

தேவனுடைய கோப கலசங்களைப் பூமியின் மேல் ஊற்றுங்கள் என்று சொல்லக் கேட்டேன்.
வெளிப்படுத்தல் 16:1.




76

ஏழு தூதர்கள் மூலம் துன்மார்க்கர் மேல் ஊற்றப்படும் இந்த பயங்கர வாதைகள் என்ன? என்று நீங்கள் கேட்கலாம். அது நல்ல ஒரு கேள்வி தான். வாதைகள் பற்றி நாம் படிக்கும் போது, அவைகள் எகிப்தின் மேல் வந்த வாதைகளுக்கு ஒத்திருப்பதை பார்க்க முடியும். முதல் தூதன் பற்றி யோவான் என்ன சொல்கிறார் எனப் பார்ப்போம்.



77

(வசனம் வெளிப்படுத்தல் 16:2)
முதலாம் தூதன் போய், தன் கலசத்தில் உள்ளதை பூமியின் மேல் ஊற்றினான்.



78

உடனே மிருகத்தின் முத்திரையை தரித்தவர்களும்



79

அதின் சொருபத்தை வணங்குகிறவர்களுமாகிய மனுஷர்களுக்குப் பொல்லாத கொடிய புண் உண்டாயிற்று.
வெளிப்படுத்தல் 16:2.

23 □ வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்

# 23  வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்


80

எகிப்தியர்கள் ஏழாவது வாதையின் போது அனுபவித்த வேதனை நிறைந்த கொப்பளத்திற்கு ஒத்ததாக இந்த வாதை இருந்தது. அல்லது யோபு வேதனைப்பட்ட எரிகொப்பளங்கள் போல் இருக்கும்.


81

இப்படிப்பட்ட வாதைகளின் விளைவுகள் என்னவாக இருக்கும் என்று உங்களால் கற்பனை செய்ய முடிகிறதா? பள்ளிக் கூடங்கள் மூடப்படும்.


82

தொழிற்சாலைகள், கடைகள் திறக்க முடியாத நிலை.


83

அவசர சிகிச்சை பெற மருத்துவமனைகள் நிரம்பி வழியும். ஆனால் அநேக மருத்துவர்கள் நர்ஸ்மார்கள் இதே விதமான வேதனையால் அவதியுறுவார்கள். இப்படி ஜனங்கள் இந்த புண்களால் வேதனைப்பட்டுக் கொண்டிருக்கும் போதே வேறுவித ஆபத்து அவர்களைத் தாக்கும்.



84

(வசனம் வெளிப்படுத்தல் 16:3)
பின்பு, இரண்டாம் தூதன் தன் கலசத்தில் உள்ளதைச் சமுத்திரத்திலே ஊற்றினான், உடனே அது செத்தவனுடைய இரத்தம் போலாயிற்று, சமுத்திரத்திலுள்ள பிராணிகள் யாவும் மாண்டு போயின.
வெளிப்படுத்தல் 16:3.


85

கடற்கரையில் இப்படிப்பட்ட பிராணிகளால் பயங்கர துர்நாற்றம் வீசுவது எப்படிப்பட்ட காட்சியாக இருக்கும். பீச்சிலிருந்து ஓடுவதில் ஒருவர் மேல் ஒருவர் விழுவர். ஆனால் மூன்றாம் வாதை இரண்டாம் வாதையுடன் மிக நெருங்கிய தொடர்புடையதாகவே இருக்கும்.



86

(வசனம் வெளிப்படுத்தல் 16:4)
மூன்றாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆறுகளிலும், நீரூற்றுகளிலும் ஊற்றினான். உடனே அவைகள் இரத்தமாயின.
வெளிப்படுத்தல் 16:4.

# 23  வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்




87

நினைத்துப்பாருங்கள்! ஒரு மனிதன் தண்ணீருக்காக, குழாயை திறக்கிறான். அப்போது தண்ணீருக்குப் பதில் இரத்தம் வந்தால் எப்படி இருக்கும்? எப்படிப்பட்ட நாசம் விளைந்துள்ளது? இதைக்காட்டிலும் மோசமானது இருக்க முடியுமா? ஆனால், கடைசி ஏழு வாதைகள் கோரமானதாக, பயப்படும்படியானதாக இருக்கும். தேவனுடைய நீதி முழுமையாக நிலைநிறுத்தப்படும்.



88

(வசனம் வெளிப்படுத்தல் 16:5-6) தேவரீர் இப்படி நியாயந் தீர்க்க நீதியுள்ளவராயிருக்கிறீர்.




89

அவர்கள் பரிசுத்தவான்களுடைய இரத்தத்தையும், தீர்க்கதரிசிகளுடைய இரத்தத்தையும் சிந்தினபடியால்.



90

இரத்தத்தையே அவர்களுக்குக் குடிக்க கொடுத்தீர். வெளிப்படுத்தல் 16:5,6.
துன்மார்க்கர்கள் குடிப்பதற்கு இரத்தத்தை தவிர வேறு ஒன்றும் இல்லாமல் தாகத்தால் அழிந்து கொண்டிருக்கும் இந்த வேளையில், நீதியாய் நடக்கின்றவர்களுக்கு தேவன் வாக்குக் கொடுத்து உள்ளார்.



91

(வசனம்: ஏசாயா 33:16)
அவன் அப்பம் அவனுக்குக் கொடுக்கப்படும்; அவன் தண்ணீர் அவனுக்குக் நிச்சயமாய் கிடைக்கும். ஏசாயா 33:16.



92

(வசனம்: வெளிப்படுத்தல் 16:8-9)
பின்பு வேதம் சொல்கிறது, நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஊற்றினான். நான்காம் தூதன் தன் கலசத்திலுள்ளதை சூரியன் மேல் ஊற்றினான். தீயினால் மனுஷரை தகிக்கும்படி அதற்கு அதிகாரம் கொடுக்கப்பட்டது.

# 23  வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்




93

அப்போது மனுஷர்கள் மிகுந்த உஷ்ணத்தினால் தசிக்கப்பட்டு, இந்த வாதைகளாகச் செய்ய அதிகாரமுள்ள தேவனுடைய நாமத்தை தூஷித்தார்கள்.



94

அவரை மகிமைப்படுத்த மனந்திரும்பவில்லை.
வெளிப்படுத்தல் 16:8, 9.
அதன் பின்பு, ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின் மேல் ஊற்றினான்.




95

(வசனம்: வெளிப்படுத்தல் 16:10-11)
அதன் பின்பு, ஐந்தாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை மிருகத்தினுடைய சிங்காசனத்தின் மேல் ஊற்றினான். அப்பொழுது அதின் ராஜ்யம் இருளடைந்தது:



96

அவர்கள் வருத்தத்தினாலே தங்கள் நாவுகளைக் கடித்துக் கொண்டு.



97

தங்கள் வருத்தங்களாலும், தங்கள் புண்களாலும் பரலோகத்தின் தேவனைத் தூஷித்தார்களேயல்லாமல்



98

தங்கள் கிரியைகளை விட்டு மனந்திரும்பவில்லை.
வெளிப்படுத்தல் 16:10.




99

இந்த வசனத்தின் மூலம், இந்த வாதைகள் எல்லாம் உலகளாவியதாக இருக்காது. மேலும் அவைகள் உடனடியாக கொல்லக் கூடியதாகவும் இருக்காது, ஏனெனில் ஐந்தாம் வாதையின் போது இருக்கிறவர்கள், முதல் வாதையில் ஏற்பட்ட கொப்பளங்களால் அவதி யுற்றுக் கொண்டு இருக்கின்றனர். இந்த வாதைகள் ஒரே நேரத்தில் சம்பவியாதபடி, ஒன்றன் பின் ஒன்றாக நடந்து அதன் வேதனைகள் தொடர்ந்து இருக்கும். ஆறாம் வாதையின் போது உலகின் அதிபயங்கர யுத்தமான அர்மகெதோன் யுத்தன் வரும்.



100

(வசனம்: வெளிப்படுத்தல் 16:12-14)
ஆறாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஐபிராத்து என்னும் பெரிய நதியின் மேல் ஊற்றினான்.



101

அப்போது சூரியன் உதிக்கும் திசையிலிருந்து வரும் ராஜாக்களுக்கு வழி ஆயத்தமாகும்படி அந்தத நதியின் தண்ணீர் வற்றிப் போயிற்று.



102

வலுசர்ப்பத்தின் வாயிலும் மிருகத்தின் வாயிலும் கள்ளத் தீர்க்கதரிசியின் வாயிலுமிருந்து தவளைகளுக்கு ஒப்பான



103

மூன்று அசுத்த ஆவிகள் புறப்பட்டு வரக்கண்டேன்.



104

அவைகள் அற்புதங்களை செய்கிற பிசாசுகளின் ஆவிகள்.



105

அவைகள் பூலோகமெங்குமள்ள ராஜாக்களை

23 □ வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்

# 23  வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்



106

சர்வ வல்லமையுள்ள தேவனுடைய மகாநாளில் நடக்கும் யுத்தத்திற்கு கூட்டிச் சேர்க்கும் படிக்குப் புறப்பட்டு போகிறது.
வெளிப்படுத்தல் 16:12-14.
வெளிப்படுத்தல் 16:16 சொல்கிறது.



107

(வசனம்: வெளிப்படுத்தல் 16:16)
அப்பொழுது எபிரேயு பாஷையிலே அர்மகெதோன் எண்ணப்பட்ட இடத்திலே அவர்களைக் கூட்டிச் சேர்த்தான், உலக முழுவதும் இந்த கடைசி யுத்தத்தில் சம்பந்தப்பட்டிருக்கும். யோவான் எழுதும்போது:



108

(வசனம்: வெளிப்படுத்தல் 19:11, 14-15)
பின்பு பரலோகம் திறந்திருக்கிறதைக் கண்டேன். இதோ ஒரு வெள்ளைக் குதிரை காணப்பட்டது.



109

அதின் மேல் ஏறியிருந்தவர் உண்மையும், சத்தியமுள்ளவரேன்னப்பட்டவர். அவர் நீதியாய் நியாயந் தீர்த்து யுத்தம் பண்ணுகிறார்.



110

பரலோகத்திலுள்ள சேனைகள் வெண்மையும் சுத்தமுமான மெல்லிய வஸ்திரத்தரித்தவர்களாய், வெள்ளைக் குதிரைகளின் மேல் ஏறி, அவருக்கு பின் சென்றார்கள்.



111

அவருடைய வாயிலிருந்து கூர்மையான பட்டணம் புறப்படுகிறது.



112

அவர் சர்வ வல்லமையுள்ள தேவனுடைய உக்கிர கோபமாகிய மதுவுள்ள ஆலையை மிதிக்கிறார்.
வெளிப்படுத்தல் 19:11, 14, 15.

# 23 □ வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்



113

(வசனம்: வெளிப்படுத்தல் 16:17-18, 20-21)
ஏழாம் தூதன் தன் கலசத்திலுள்ளதை ஆகாயத்தில் ஊற்றினான். அப்பொழுது பரலோகத்தின் ஆலயத்திலுள்ள சிங்காசனத்திலிருந்து.




114

சிங்காசனத்திலிருந்து ஆயிற்று என்று சொல்லிய பெருஞ்சத்தம் பிறந்தது.



115

சத்தங்களும், இடி முழக்கங்களும், மின்னல்களும் உண்டாயின. பூமி மிகவும அதிர்ந்தது...



116

தீவுகள் யாவும் அகன்று போயின, பர்வதங்கள் காணப்படாமற் போயின.



117

தாலந்து நிறையான பெரிய கல் மழையும் வானத்திலிருந்து மனுஷர் மேல் விழுந்தது.



118

அந்த கல் மழையினால் உண்டான வாதையினிமித்தம் மனுஷர்கள் தேவனை தூஷித்தார்கள். அந்த வாதை மகா கொடிதாயிருந்து.
வெளிப்படுத்தல் 16:17-18,. 20-21.


119

ஒரு தாலந்து என்பது 57 பவுண்டு என்று ஞானிகள் சொல்லுகின்றனர். அப்படிப்பட்ட கல்மழை எவ்வளவு அழிவை ஏற்படுத்தியிருக்கும் என்று கற்பனை செய்துகூட பார்க்க இயலவில்லை.


120

ஆனால் வேதாகமம் சொல்கிறது தேவன் தாமே இந்த யுத்தத்தில் இடைப்பட்டு பரலோக சேனையுடன் வந்து, கலகம் செய்த கிரகமாகிய இந்த பூமியிலிருந்து தன் ஜனங்களை மீட்பார்.

23 □ வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்

# 23  வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்


121

ஆனால் வாதையிலிருந்து எப்படி விடுதலையளிக்கிறார் என்பதை எப்படி உறுதி செய்ய முடியும். ஒரே ஒரு வழிதான் உண்டு.


122


எகிப்தின் கடைசி அழிவிலிருந்து தப்பிவிக்க ஆட்டு இரத்தத்தை வீட்டின் நிலைக்காலில் பூசி ஆண்டவருடைய வார்த்தைக்கு கீழ்படிவதை விசுவாசத்தின் மூலம் நிலைப்படுத்தினார். சங்காரத் தூதன் கடந்து செல்லும் போது அழிவிலிருந்து காப்பாற்றப்பட்டனர்.
தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்ததோடு மட்டுமின்றி, தேவையான ஆயத்தத்தோடும் இருந்தனர்.


123

தேவனுடைய பிள்ளைகள் கடைசி நாளின் வாதையிலிருந்து காப்பாற்றப்பட வேண்டுமெனில் ஆட்டுக்குட்டியானவருடைய தியாகத்தை ஏற்றுக்கொண்டு அவருடைய இரத்தத்தினால் பாவத்திலிருந்து கழுவப்பட வேண்டும்.


124

நம்முடைய வாழ்வில் யார் பக்கம் இருக்கப் போகிறோம். தேவன் பக்கமா? பிசாசோடா? நண்பர்களே தீமையின் தூதன் தன் அழிவு வேலையைத் துவக்கிவிட்டான். காலம் கடத்தினால் நம் நிலையை மாற்றுவது கடினம். கிருபையின் காலம் முடிவடையும்.
அதற்கு முன்பு இயேசுவின் பக்கம் சாய்ந்து அவருடைய இரத்தத்தினால் பாதுகாப்பை தேடிக்கொள். மிகவும் வருத்தமான மனிதன் கூறக்கூடிய வார்த்தை எரேமியா 8:20ல் கூறப்பட்டிருக்கின்றது.



125

(வசனம் எரேமியா 8:20)
அறுப்புக்காலம் சென்றது, கோடைக் காலமும் முடிந்தது, நாமோ இரட்சிக்கப்படவில்லை.


126

ஆஸ்திரேலியா தேசத்தில் ஒரு மரம் வெட்டுபவர் தான் வசிப்பதற்காக ஒரு சிறிய குடில் செய்தார். பெரியதாக இல்லாவிட்டாலும் அது அவனுக்கு ஒரு வீட்டைப்போன்றிருந்தது. ஒரு நாள் அவர் வீடு திரும்பும் போது,

# 23  வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்

23  வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்


127

அந்த குடில் எரிந்து புகை வந்து கொண்டிருப்பதை கண்டு அதிர்ச்சியடைந்தான். கரிந்து போன சில மரத்துண்டுகளம், சில இரும்புகளும் கட்டைகளுமே மீந்திருந்தன. அங்கு எரிந்து போயிருந்த அவனுடைய கோழிக்கூண்டுகளை நோக்கி நடந்தான்.


128

அங்கு எரிந்து போன சாம்பல்களுக்கு மத்தியில் நடந்து சென்றவருக்கு கால்களுக்கிடையில் எரிந்து போன சிறகுகளுடைய குவியல் காணப்பட்டது, தன் கால்களால் அதை உதைத்து சிதறடைய செய்தார். என்ன நடந்திருக்கும் என்று நினைக்கிறீர்கள்.



129

நான்கு சிறிய கோழிக் குஞ்சுகள் தன் அன்பான தாயின் சிறகுகளாளல் காப்பாற்றப்பட்டு வெளியே உயிருடன் வந்தன.
வேதத்தில் சொல்லப்படுகின்ற அழகான, ஞானமுள்ள வார்த்தைகள் எப்படிப்பட்ட கொள்ளை நோயிலும் தேவன் அவருடைய அன்பான பிள்ளைகளை காப்பாற்றுவார் என்று விவரிக்கின்றன.




130

(வசனம்: சங்கீதம் 91:1, 4)
உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன்




131

சர்வ வல்லவருடைய நிழலில் தங்குவான்...



132

அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார் அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்.



133

அவருடைய சத்தியம் உனக்கு பரிசையும் கேடகமுமாகும்.
சங்கீதம் 91:1, 4. ஆம், ஆண்டவர் அவரைப் பின்பற்றுகிறவர்களுக்கு அப்படிப்பட்ட வாக்குத்தத்தத்தை தருகிறார்.

# 23 வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்





134

(வசனம்: சங்கீதம் 91:5-11)
இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும் பகலில் பறக்கும் அம்புக்கும்.





135

இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியாத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்.





136

உன் பக்கத்தில் ஆயிரம் பேரும் உன் வலதுபுறத்தில் பதினாயிரம் பேரும் விழுந்தாலும் அது உன்னை அணுகாது.





137

உன் கண்களில் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய்.





138

எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்கு தாபரமாய் கொண்டாய்.




139

ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது.  வாதை உன் கூடாரத்தை அணுகாது.




140

உனக்காக தம்முடைய தூதர்களுக்கு கட்டளையிடுவார்...
சங்கீதம் 91:1-11.

# 23 வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்



141

(வீடியோ 15 வினாடிகள்)
இதைக் காட்டிலும் உங்களுக்கு வாக்குத்தத்தம் வேண்டுமா? அந்த கொள்ளை நோய் உன்னை தாக்கும்போது அவருடைய செட்டைகளின் கீழ் அடைக்கலம் புக விரும்புகின்றாயா? பரலோக பிதா உங்களை காத்து ஆபத்தான வேளையில் காப்பாற்றுவார்.


142

கோழி தன் குஞ்சுகளை கூட்டிச் சேர்ப்பதுபோல் உன்னை அவருடைய சமூகத்தில் காப்பாற்றுவார். தீர்மானம் செய்ய வேண்டியது நீங்கள்தான். தேவனே நீங்கள் ஆண்டவர் பக்கம் நித்திய நித்தியமாய் இருக்க வேண்டும் என் உங்களுக்காக தீர்மானம் எடுக்கலாம். ஆனால் அவர் அப்படி எடுக்கமாட்டார். நீங்கள்தான் தீர்மானத்தை எடுக்க வேண்டும். தாமதிக்காதே. இப்போதே செய்.

23 வரக்கூடிய உபத்திரவத்திற்கு தப்பி பிழைத்தல்



1

பிசாசு இனி ஒரு போதும் உங்களை சோதிக்க முடியாது.


2

வடதுருவ, புதிய நிலக்கண்டுபிடிப்போர் கப்பல் பிரயாணம் செல்கையில் அவர்களுக்குத் தேவையான உணவு பொருட்கள் குறைத்துவந்த நிலையில், அவர்கள் தங்கள் கடைசி சிறு உணவை முடித்தனர். அவர்களுக்கு தேவையான எரிபொருளும் கப்பலில் குறைந்திருந்தது அத்துடன் வெட்பதட்பமும் குறைந்து, உறைந்துபோதும் நிலையை அடைந்தனர். மரணம் சீக்கிரம் வருகிறது என்பதை அறிந்திருந்த நிலையில், அவர்கள் தங்கள் நம்பிக்கையை வெகுவாக இழந்த சமயத்தில்,


3

மரித்துக்கொண்டிருக்கும் அவர்களில் ஒருவன் ஒரு, கப்பலின் பக்கத்தில் புகை மண்டலம் எழுவதைக் கண்டார். யாரோ ஒருவர் இவர்களின் கப்பலின் சைகைகளை பெற்று உதவி செய்ய வந்துகொண்டு இருந்தனர். அந்த புகை மண்டலம் அவர்களை மிகுந்த உற்சாகப்படுத்தியதுடன் மிகுந்த தைரியத்தையும் வரவரைத்தது சீக்கிரம் அவர்களின் அந்த பயங்கர நிலை மாறப்போகிறது, சீக்கிரம் அவர்கள் தங்களை காப்பாற்ற இருக்கும் கப்பலின் வெது வெதுப்பில் இருக்கப்போகிறார்கள், சீக்கிரமே அவர்கள் வீடு திரும்ப முடியும் என மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர்.


4


வேதத்தின் கடைசி புத்தகமான வெளிப்படுத்தல் புத்தகம் அப்படிப்பட்ட ஒரு உதவியின் மார்க்கத்தை, வெளிப்படுத்துகிறது. சீக்கிரமே நாமும் மீட்கப்படுவோம், நீண்ட கால பாவ பயங்கரம் நம்மைவிட்டு நீங்கப்போகிறது. நாம் பாவத்திலிருந்து விடுதலையாக்கப்பட்டு, கிறிஸ்துவை காண வானத்தில் எடுத்துக் கொள்ளப்படபோகிறோம். சாத்தான் சூழ்நிலை என்ற சங்கிலியால் கட்டப்படப்போகிறான். நித்திய வாழ்வு கிடைக்கப்போகிறது. சாத்தானும் அவனைச் சேர்ந்தவர்களும் நித்திய ஆக்கினையை அடைவார்கள்.

24  சங்கிலியில் கட்டப்பட்ட தீமையின் உருவம்



5

(வீடியோ 13 வினாடிகள்) சில சமயங்களில் நீதிபதிகள் குற்றவாளிகளின் கொடூர குற்றங்களின் நிமித்தம் மிக நீண்ட கால சிறை தண்டனை கொடுப்பது உண்டு, ஒரே தடவையாக ஏன் 99 வருட தண்டனைகூட இரண்டு மூன்று குற்றங்களுக்கு கொடுப்பதுண்டு, குற்றவாளி ஏற்கனவே ஓய்வு பெறும் நிலையில் இருந்தாலும், அவை கணக்கில் கொள்ளாமல், அவன் வாழ்நாள் முழுவதும் தண்டனை பெறுவதுபோல் தண்டனை கொடுப்பதுண்டு.


6

நீதிபதி கொடுக்கும் தண்டனை அந்த சமுதாயத்தில் அந்தக் குற்றமானது, எவ்வளவு கொடூரமானது என்பதை சுட்டிக்காட்டுவதாக இருக்கும்.



7

1000 ஆண்டுகளுக்கு நீதிபதி தண்டனை கொடுத்து, ஒவ்வொரு நாளும் அதை எண்ணி கலங்கும்படி தீர்ப்பு கொடுக்கும் வேளை அதிவிரைவில் வரப்போகிறது என்பதை அறிவீர்களா?



8

(வசனம்: வெளிப்படுத்தல் 20:1-3)
ஒரு தூதன் பாதாளத்தின் திறவுகோலையும் பெரிய சங்கிலியையும் தன் கையிலே பிடித்துக் கொண்டு வானத்திலிருந்து இறங்கி வரக்கண்டேன்.



9

பிசாசு என்றும் சாத்தானென்றும் சொல்லப்பட்ட பழைய பாம்பாகிய வலுசர்ப்பத்தை அவன்பிடித்து,



10

அதை ஆயிரம் வருடம் வரைக்கும் கட்டி வைத்து, அது ஜனங்களை மோசம் போக்காதபடிக்கு



11

அதைப் பாதாளத்தில் தள்ளியடைத்து, அதன் மேல் முத்திரை போட்டான்.



12

அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாக வேண்டும்.
வெளிப்படுத்தல் 20:1-3.



13

இந்த உலகம் இதுவரை கண்டிராத மிகக் கொடிய ஒரு குற்றவாளியை தேவன் நடத்தும் விதத்தை இங்கு பார்க்கிறோம். இவன் இந்த உலகில் அனுதினமும் நடக்கும். எல்லா பாவத்துக்கும் குற்றங்களுக்கும் நேரடியான தொடர்புள்ளவன். ஆனால் நாட்கள் வரப்போகிறது. அவன் 1000 வருடம் இந்த அண்ட சராசரத்திலேயே சிறை வைக்கப்பட போகிறான் இந்த காலக்கட்டத்தை மில்லினியம் என்று குறிக்கப்படுகிறது.




14

மில்லினியம் என்பது என்ன?




15

இந்த ஆயிரவருடக்காலம் மில்லினியம் என்பது இரண்டு லத்தீன் வார்த்தைகளான மில்லி என்றால் ஆயிரம் ஆனம் என்றால் வருடம்.


16

சாத்தான் சிறை வைக்கப்படுவான் என்று தீர்க்கதரிசனம் சொல்கிறது.



17

ஆயிரம் வருடம் முடிந்து சில காலம், இவன் சுயரூபத்தை உலகம் விளங்கிக் கொள்ள விடுவிக்கப்படுவான். 100 வருடம் கழித்தும் அவன் குணங்கள் மாறவில்லை. இந்த தீர்க்கதரிசனத்தை தெளிவாக புரிந்துக் கொள்ள எங்கு எப்படி தொடங்குகின்றது. எப்பொழுது முடிகின்றது. இடைப்பட்ட காலங்களில் என்ன நடக்கின்றது என்று புரிந்துக் கொள்ள வேண்டும்.

24 □ சங்கிலியில் கட்டப்பட்ட தீமையின் உருவம்



18

ஒரு சில வாக்கியங்களை சொல்லி அவை எப்படி வேதத்தில் நிறைவேறுகின்றன என்று பார்ப்போம். ஆயிரம் வருட அரசாட்சி இரண்டு உயிர்த்தெழுதல்களை அடிப்படையாக கொண்டது.



19

1) ஆயிரம் வருட தொடக்கத்தில் நடக்கும் உயிர்தெழுதல்.



20

மற்றும் 2) முடிவில் நடக்கும் துன்மார்க்கரின் உயிர்தெழுதல்.



21

(வசனம்: யோவான் 5:25)
மரித்தோர் தேவகுமாரானுடைய சத்தத்தைக் கேட்குங்காலம் வரும்.



22

அது இப்பொழுதே வந்திருக்கிறது. அதை கேட்கிறவர்கள் பிழைப்பார்கள்.
யோவான் 5:25
மரித்தோர் இயேசுவினுடைய சத்தத்தை கேட்பர். எல்லா மரித்தவர்களும் உயிர்த்தெழுவர். இது உங்களுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தலாம் ஏனெனில் நீங்கள் நீதிமான்கள் மாத்திரமேம உயிர்த்தெழுவார்கள் என்று எண்ணிக்கொண்டிருந்தீர்கள். இயேசு கிறிஸ்து இதை 28, 29 வசனத்தில் குறிப்பிட்டிருக்கிறார்.



23

(வசனம்: யோவான் 5:28, 29)
இதைக் குறித்து நீங்கள் ஆச்சரியப்பட வேண்டாம். ஏனென்றால் பிரேதக்குழிகளிலுள்ள அனைவரும் அவருடைய சத்தத்தை கேட்குங்காலம் வரும்.



24

அப்பொழுது நன்மை செய்தவர்கள் ஜீவனை அடையும்படி எழுந்திருக்கிறவர்களாகவும்.



25

தீமை செய்தவர்கள் அக்கினி அடையும்படி, எழுந்திருக்கிறவர்களாகவும் புறப்படுவார்கள். யோவான் 5:28, 29. கே.ஜே.வி.



26

(வீடியோ 4 வினாடிகள்)
இரண்டு உயிர்தெழுதலை கவனியுங்கள். முதலாவது நன்மை செய்கிறவர்களில் உயிர்தெழுதல். இரண்டாவது தீமை செய்கிறவர்களுடைய உயிர்தெழுதல்.



27

முதலாம் உயிர்தெழுதலைக் குறித்து வேதம் சொல்வதைக் கேளுங்கள்.



28

(வசனம்: வெளிப்படுத்தல் 20:5, 6)
இது முதலாம் உயிர்தெழுதல்



29

முதலாம் உயிர்த்தெழுதலில் பங்குள்ளவன் பாக்கியவானும் பரிசுத்தவானுமாயிருக்கிறான். இவர்கள் மேல் இரண்டாம் மரணத்திற்கு அதிகாரமில்லை.




30

இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியராயிருந்து அவரோடு கூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.
வெளிப்படுத்தல் 20:5, 6.


31


இவை பவுல் தெசதோனியருக்கு கூறியது போல் இசைந்துள்ளது. கிறிஸ்துவின் இரண்டாம் வருகை எவ்விதம் விவரிக்கப்பட்டுள்ளது பாருங்கள்.



32

(வசனம்: 1 தெசலோனிக்கேயர் 4:16, 17)
ஏனெனில் கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும், வானத்திலிருந்து இறங்கி வருவார்;

24  சங்கிலியில் கட்டப்பட்ட தீமையின் உருவம்




33

அப்போது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதுலாவது எழுந்திருப்பார்கள்.




34

பின்பு உயிரோடு இருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள் மேல் அவர்களோடு கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு,




35

இவ்விதமாய் எப்போதும் கர்த்தருடனேகூட இருப்போம். வசனங்கள் 16, 17



36

உயிர்தெழுதல் குறித்து எவ்வளவு மகிமையான விவரிப்பு. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது உயிர்தெழுவார்கள் என்று பார்க்கிறோம். பிறகு உயிரோடு இருக்கும் அவருடைய பின்னடியார்கள், மேகங்கள் மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு.




37

(வசனம்: யோவான் 11:25)
அந்த நாளில் இயேசு கூறிய அந்த வாக்குததத்தம் நிறைவேறும். என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்.
யோவான் 11:25.



38

ஆம், நீதிமான்கள் கிறிஸ்து வரும்போது கல்லறையிலிருந்து உயிர்தெழுவார்கள்.




39

(வசனம்: ஏசாயா 26:19)
ஏசாயா அந்த சந்தோஷமான நிகழ்ச்சியை குறிப்பிடுகின்றார். மண்ணிலே தங்கியிருக்கிறவர்களே, விழித்து கெம்பீரியுங்கள் ... மரித்தோரை பூமி புறப்படப்பண்ணும். எவ்வளவு மகிழ்ச்சியான சம்பவம்.
ஏசாயா 26:19


40

தாய்மார்கள் தங்கள் குழந்தையோடு இணைவார்கள். கணவர்கள் மனைவியோடே இணைவார்கள். குழந்தைகள் தங்கள் பெற்றோரோடு இணைவார்கள். அது எவ்வளவு மகிழ்ச்சியானது.



41

(வசனம்: யோவான் 14:2, 3)
வெகுகாலத்திற்கு முன் கிறிஸ்து செய்த அதிசயமான வாக்குத்தத்தம் அப்போது நிறைவேறும். நான் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணப்போகிறேன்.



42

நான் போய் உங்களுக்காக ஒரு ஸ்தலத்தை ஆயத்தம் பண்ணின பின்பு, நான் இருக்கிற இடத்திலே நீங்களும் இருக்கும்படி,




43

நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக் கொள்ளுவேன்.
யோவான் 14:2, 3.
இங்கே தான் மீட்கப்பட்டவர்கள் ஆயிரம் ஆண்டுகளைக் கழிப்பார்கள்.



44


(வசனம்: வெளிப்படுத்தல் 20:6)
நாம் என்ன செய்துக் கொண்டிருப்போம்? யோவன் நமக்குச் சொல்கிறார்?



45

இவர்கள் தேவனுக்கும் கிறிஸ்துவுக்கும் முன்பாக ஆசாரியாரயிருந்து அவரோடகூட ஆயிரம் வருஷம் அரசாளுவார்கள்.
வெளிப்படுத்தல் 20:6.
கிறிஸ்துவோடும், அவரது பின்னடியாரோடும் சொல்ல முடியாத ஐக்கியத்தின் சந்தோஷம் ஒருபுறம் இருக்க, ஆயிரம் ஆண்டுகளின்போது அவர்கள் என்ன செய்வார்கள் என்பது பற்றிய அதிக வெளிச்சத்தை யோவான் கொடுக்கிறார்.

24 ▯ சங்கிலியில் கட்டப்பட்ட தீமையின் உருவம்



46

(வசனம்: வெளிப்படுத்தல் 20:4)
அன்றியும் நான் சிங்காசனங்களைக் கண்டேன். அவைகளின்மேல் உட்காா்ந்தாா்கள். நியாயத்தீா்ப்புக் கொடுக்கும்படி அவா்களுக்கு அதிகாரம் அளிக்கப்பட்டது.
வெளிப்படுத்தல் 20:4.
விழுந்துபோன தூதா்களையும், இரட்சிக்கப்படாதவா்களையும், நியாயத்தீா்க்கும் பெருமிதமான பணியிலே, சா்வ ஞானமுள்ள, சா்வ வல்லமையுள்ள அண்டசராசரத்தின் தேவன், பெலவீன மனிதரையும் மற்றும் பெண்களையும் உட்படுத்தியிருக்கிறாா்.




47

(வசனம்: 1 கொரிந்தியா் 6:2, 3)
பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீா்ப்பாா்களென்று அறியீா்களா?



48

நாம் தூதா்களையும் நியாயந்தீா்ப்போம் என்று அறியா்களா?
1 கொரிந்தியா் 6:2, 3.


49

தேவன் நீதியுள்ளவா், நல்லவா் மற்றும் பாரபட்சமற்றவா் என்பது ஒரேடியாக எல்லாருக்கும் தெளிவாகிவிடும். தேவன் பாரபட்சமுள்ளவா். அன்பற்றவா் மற்றும் அநீதியுள்ளவா் என்ற குற்றச்சாட்டை ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக சாத்தான் சுமத்தி வருகிறான். ஆயிரம் ஆண்டுகள் இந்தக் கருத்தை அமா்த்திப்போட்டு, தேவனால் குணாதியத்தை சா்வலோகத்தின் முன் தேவன் நிலைநிறுத்துவாா். ஆனால் தீய தூதா்களையும், கொடியபாவிகளையும் நாம் நியாயந்தீா்க்க வேண்டியதாக அவசியம் ஏன்? கிறிஸ்து வருவதற்கு முன்பே அவா்கள் நியாயந்தீா்க்கப்படவில்லையா?


50

உண்மைதான். ஆனால் பரலோகத்தை அவனோ அல்லது அவளோ நீ எதிர்பார்த்த யாரோ ஒருவர் நித்யமாக இழந்துபோனதைப் பார்த்தால் உம்முடைய பின்விளைவு எப்படியிருக்கும் என்பதைக் குறித்து எப்போதாவது நீ ஆச்சரியப்பட்டதுண்டா? தேவனுடைய நீதியின் நேர்மைத்தன்மையைக் குறித்து நீ கேள்வி கேட்கலாம்.


51

ஆயிர வருட அரசாட்சியில் இரட்சிப்பை இழந்வர்களடைய கணக்குள் திறக்கப்படும். இதில் மிகவும் இரகசியமாக மறைத்து வைத்து காக்கப்பட்ட பல உண்மைகள் வெளிச்சத்துக்கு கொண்டு வரப்படும். இதனிமித்தம் தேவனுடைய நீதியும் அன்பும் உறுதிப்படுத்தப்படும்.



52

(வசனம்: வெளிப்படுத்தல் 16:7)
சர்வ வல்லமையுள்ள தேவனாகிய கர்த்தாவே,
உம்முடைய நியாயந்தீர்ப்புகள் சத்தியமும்
நீதியுமானவைகள்.
வெளிப்படுத்தல் 16:7.



53

கிறிஸ்து வரும்போது அவருடைய இரட்சிப்பை ஏற்றுக்கொள்ளாதவர்களின் கதி என்ன? வெளிப்படுத்தல் 19ம் அதிகாரம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில் இரட்சிக்கப்படாதவர்களின் அழிவைக்குறித்து பின் வரும் வசனம் கூறுகின்றது.



54

(வசனம்: வெளிப்படுத்தல் 19:21)
மற்றவர்கள் புறப்படுகிற பட்டயத்தால்
கொல்லப்பட்டார்கள்.



55

குதிரையின்மேல் ஏறினவருடைய வாயிலிருந்து...
வெளிப்படுத்தல் 19:21

24  சங்கிலியில் கட்டப்பட்ட தீமையின் உருவம்


56

இழந்துபோனவர்கள் வருகின்ற கிறிஸ்துவின் மகிமைக்கு முன், அவருடைய எல்லா பரிசுத்த தூதர்களோடும் வரும் அவருக்கு முன் நிற்கத் திராணியில்லாதவர்களாயிருப்பார்கள். வேறு வழியே இல்லை.



57

இயேசுவின் கல்லறைக்கு ஒரு தேவதூதன் வந்தான். ரோம சேவகர்கள் செத்த மனிதர் போலானார்கள்.



58

(வசனம்: எரேமியா 25:33)
அக்காலத்திலே பூமியின் ஒரு முனை துவக்கி பூமியின் மறுமுனைமட்டும் கர்த்தரால் கொலையுண்டவர்கள் கிடப்பார்கள்.



59


அவர்கள் புலம்பப்படாமலும், சேர்க்கப்படாமலும், அடக்கம் பண்ணப்படாமலும் பூமியின்மேல் எருவாவார்கள்.
எரேமியா 25:33.


60

கிறிஸ்துவின் இரண்டாம் வருகையில், நீதிமான்கள் உயிரோடு எழுப்பப்பட்டு, கிறிஸ்துவை மேகங்களில் சந்திக்க மறுரூபமாக்கப்படுவார்கள்.


61

இரட்சிக்கப்படாதவர்கள் அவரது வருகையின் பிரகாசத்தினாலே, அவருடைய வாயிலிருந்து புறப்படும் பட்டயத்தினாலே கொல்லப்படுவார்கள்.
பிரேதக்குழிகளில் இன்னும் இருக்கின்ற இரட்சிசக்கப்படாதவர்கள் பற்றி என்ன? என்று யாரோ ஒருவர் கேள்வி கேட்கப்போகிறீர்கள். வெளிப்படுத்தல் 20 ஆம் அதிகாரம், 5 ஆம் வசனத்தில் அதன் பதில் கொடுக்கப்பட்டுள்ளது.



62

(வசனம்: வெளிப்படுத்தல் 20:5)
மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை.


63

புதிர் ஒன்றாகப் பொருந்த ஆரம்பிக்கிறது. இயேசு கிறிஸ்து வரும்போது என்ன நடக்கும் என்பது பற்றி பெரிய படம் கவனத்திற்கு வருகிறது.


64

கிறிஸ்துவின் வருகையில் இடம்பெறும் சம்பவங்கள் இவைகளே.


65


1. இயேசு சகல பரிசுத்த தூதர்களோடுங்கூட வருவார். (மத்தேயு 25:31)


66

2. கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.
(1 தெசலோனிக்கேயர் 4:16)


67

3. உயிரோடுள்ள இரட்சிக்கப்பட்டோர், அவரை சந்திக்க ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுவர்.
(1 தெசலோனிக்கேயர் 4:17)


68

4. இரட்சிக்கப்பட்டோர் இயேசுவோடு இல்லம் சென்று, ஆயிரமாண்டுகள் அவரோடு அரசாளுவார்கள்.
(வெளிப்படுத்தல் 20:4, 6)


69

5. இரட்சிக்கபடாதோர் கிறிஸ்துவின் வருகையின் பிரகாசித்தினால் கொல்லப்படுவார்கள்.
எரேமியா 25:33.



70

6. மரித்த துன்மார்க்கர்கள் ஆயிரம் ஆண்டுகள் முடியும் வரை உயிருடன் எழுப்பப்படவில்லை. (வெளிப்படுத்தல் 20:5)

24 □ சங்கிலியில் கட்டப்பட்ட தீமையின் உருவம்


71

7. சோதிக்கவோ அல்லது அழிக்கவோ ஒருவரும் இல்லாதபடியால், சாத்தான் ஆயிரமாண்டுகள் சந்தர்ப்பங்களின் சங்கிலியால் கட்டப்பட்டிருக்கிறான்.


72

நீதிமான்கள் பரலோகத்தில் இருக்கிறார்கள். எல்லா துன்மார்க்கரும் மரித்துவிட்டார்கள். எல்லாரும் இல்லாமல் போய்விட்டார்கள். எவ்விடமும் பாழ்கடிக்கப்பட்டிருக்கிறது.
(எரேமியா 4:23-26).


73

பூமி பிசாசின் சிறைச்சாலை ஆகிறது. சாத்தான் ஆயிரம் ஆண்டுகளுக்குப் பாதாளத்தில் தள்ளப்பட்டான் என்று வேதம் கூறுகிறது. அவன் எப்படிக் கட்டப்பட்டிருக்கிறான்? ஆயிரம் ஆண்டுகளாக ஒருவரையுமே சோதிக்கவோ, அழிக்கவோ முடியாதபடி சந்தர்ப்ப சூழ்நிலைகள் என்ற சங்கிலி அப்படி ஆக்கியிருக்கிறது.


74

பூமியிலே தங்கள் வாழ்நாளில் சாத்தானைப் பின்பற்றியவர்கள் கிறிஸ்துவின் வருகையில் சங்ககரிக்கப்பட்டனர் அல்லது ஆயிரம் ஆண்டுகள் முடியும் வரை அவர்கள் பிரேதக்குழியிலே இருப்பார்கள்.


75

இரட்சிக்கப்பட்டவர்கள் எல்லாரும் கிறிஸ்துவோடு ஆயிரமாண்டுகள் இருக்கிறார்கள்.


76

சோதிப்பதற்கும், தவறாக நடத்துவதற்கும் பிசாசும் அவனது தீய தூதர்கள் மட்டுமே இருக்கிறார்கள். ஆறாயிரம் ஆண்டுகளுக்குப் பின், அவர்களும் அவனைப் போல் மோசமாகிவிட்டனர்.


77

பூமி அவனது சிறைக்கூடமாகிறது. தான் எப்படி உலகத்தை ஆளுவேன் என்பதைக் காண்பிக்கும், விதமாய், ஆதாம், ஏவாளை வஞ்சித்து ஆதிக்கத்தைப் பெற்றான். ஆனால் இப்பொழுது உண்மையிலேயே அவன் எப்படிப்பட்ட ஆட்சியாளன் என்பதை எல்லாரும் பார்க்க முடிகிறது.



78

(வசனம்: வெளிப்படுத்தல் 20:3)
வெளிப்படுத்தல் 20:3 சொல்வதை நீங்கள் ஞாபகம் வைத்திருப்பீர்கள்.
அந்த ஆயிரம் வருஷம் நிறைவேறும் வரைக்கும் அவன் ஜனங்களை மோசம்போக்காதபடிக்கு,




79

அவனைப் பாதாளத்திலே தள்ளியடைத்து, அதன்மேல் முத்திரைப்போட்டான்.



80

அதற்குப் பின்பு அது கொஞ்சக்காலம் விடுதலையாக வேண்டும். பாதாளக்குழி என்பதன் மூலவார்த்தை அபுஸ்ஸோஸ் ஆகும். தேவன் இந்த அழகான உலகத்தை படைக்கும்முன் உலகத்தின் தாறுமாறான நிலையை விளக்குவதற்கு பழைய ஏற்பாட்டிலே இதே வார்த்தை தான் பயன்படுத்தப்பட்டுள்ளது.



81

(வசனம்: எரேமியா 4:23).
அதே வார்த்தைதான் எரேமியா புத்தகத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. பூமியைப் பார்த்தேன். அது ஒழுங்கின்மையும், வெறுமையுமாயிருந்தது.
வானங்களைப் பாாத்தேன். அவைகளுக்கு ஒளியில்லாதிருந்தது.
எரேமியா 4:23.



82

ஆம், உலகம் ஒரு அபுஸ்ஸோஸ் அல்லது பாதாளக்குழி தான். அது ஒரு இருண்ட ஸ்தலமாக இருக்கப் போகிறது. இப்பொழுது, இக்காலக் கட்டத்தில் பூமியைப் பற்றி எரேமியா, மேலும் வேறென்ன சொல்ல இருக்கிறார். கவனியுங்கள்.



83


(வசனம்: எரேமியா 4:24, 25)
பர்வதங்களைப் பார்த்தேன் அவைகள் அதிர்ந்தன. எல்லாக்குன்றுகளும் அசைந்தன.

24 ⎕ சங்கிலியில் கட்டப்பட்ட தீமையின் உருவம்




84

பின்னும் நான் பார்க்கும்போது, மனுஷனில்லை. ஆகாசத்துப் பறவைகளெல்லாம் பறந்துபோயின. எரேமியா 4:24, 25. அங்கே மனுஷன் இல்லை என்று சொல்லியிருப்பதை நீங்கள் கவனியுங்கள்.




85

(வசனம்: எரேமியா 4:26)
மறுபடியும் எரேமியா சொல்கிறார். பின்னும் நான் பார்க்கும்போது, பயிர்நிலம் வனாந்தரமாயிற்று.



86

கர்த்தருடைய பிரசன்னத்தாலும், அவருடைய உக்கிர கோபத்தாலும், பட்டணங்களெல்லாம் இடிந்துபோயின. வசனங்கள் 26, 27.



87

ஆயிரம் ஆண்டுகள் விடுமுறைக்குச் செல்ல அது ஒரு அச்சம் தரும் இடமாகத் தொனிக்கிறது என்று நீங்கள் சொல்லமாட்டீர்களா? சாத்தானும், கொடிய தூதர்களும் ஒன்றும் செய்வதற்கில்லாமல், இருண்டதும், பாழாக்கப்பட்டதும். தனித்துவிடப்பட்டதுமான இப்பூமியிலே இங்கும் அங்கும் அலைந்து தேவனுக்கு விரோதமான கலகத்தின் விளைவுகளை மட்டும் யோசித்துக் கொண்டிருப்பார்கள்.



88

இப்பொழுது நாம், ஆயிரம் ஆண்டுகளின்போது நடைபெறும் சம்பவங்களை மறுபடியும் பார்ப்போம்.




89

1. பூமி பாழாக்கப்பட்டு, அழிக்கப்பட்டது.




90

2. இரட்சிக்கப்படாதவர்கள் இயேசுவின் வருகையின் பிரகாசத்தினால் கொல்லப்பட்டு மரிக்கின்றனர்.




91

3. இரட்சிக்கப்பட்டவர்கள் பரலோகத்தில் கிறிஸ்துவுடன் ஆளுகை செய்கின்றனர்.



92

4. தனது கலகத்தைக் குறித்துச் சிந்திக்க இந்த இருண்ட, பாழான பூமியிலே அவன் கட்டப்படுகிறான்.


93

சாத்தான் மாறுவானா? கலகத்திற்குள் அவன் வழி நடத்தின தூதர்களின் நிலை என்ன? மறுபடியும் அவனை பின்பற்ற அவர்கள் தெரிந்து கொள்வார்களா அல்லது அவர்கள் இப்பொழுது கிறிஸ்துவைப் பின்பற்றுவார்களா? தேவன் தனது கால அட்டவணையில் ஆயிரம் ஆண்டுகளைச் சேர்ப்பதற்கு தெரிந்துகொண்ட காரணங்களில் ஒன்று - பிசாசுக்கும், அவன் தூதர்களுக்கும், மற்றும் இந்தப் பூமியில் அவனைப் பின்பற்றத் தெரிந்து கொண்டவர்களுக்கும் மற்றொரு வாய்ப்பு கொடுக்கப்பட்டால், அவர்கள் மறுபடியும் அதே தீர்மானத்தை எடுத்து, அதே தலைவனையே தெரிந்து கொள்வார்கள் என்பதை விளக்கிக்காட்ட தேவன் விரும்பினார்.


94

இரட்சிப்பின் திட்டத்தை ஏற்றுக்கொள்ள அவர்களுக்கு ஆயிரம் வாய்ப்புகள் இருந்தபோதிலும், அதை ஏற்க மறுப்பார்கள்.


95

அவர்களின் தெரிந்தெடுப்புப் பற்றி வேதம் என்ன கூறுகிறது?



96


(வசனம்: வெளிப்படுத்தல் 20:7, 8)
பதில் வெளிப்படுத்தல் 20:7,8ல் கொடுக்கப்பட்டுள்ளது. அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி.

24 ▯ சங்கிலியில் கட்டப்பட்ட தீமையின் உருவம்



97

பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளை மோசம் போக்கப் புறப்படுவான்.



98

அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக் கொள்ளும்படிக்கும் புறப்படுவான். அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும்.
வெளிப்படுத்தல் 20:7, 8
இந்த யுத்தத்தில் இருக்கப்போகும் ஜனங்கள் எல்லாரும் எங்கேயிருந்து வருவார்கள் என ஒருவேளை நீங்கள் திகைக்கலாம்.



99

(வசனம்: வெளிப்படுத்தல் 20:5)
வெளிப்படுத்தல் 20 ஆம் அதிகாரம், வசனம் 5ல் நாம் வாசித்ததை ஞாபகப்படுத்துங்கள். மரணமடைந்த மற்றவர்கள் அந்த ஆயிரம் வருஷம் முடியுமளவும் உயிரடையவில்லை.


100

ஆம், மரித்த மற்றவர்கள் அல்லது இரட்சிக்கப்படாதவர்கள் ஆயிரம் ஆண்டுகளின் முடிவிலே ஆக்கினையின் உயிர்தெழுதலிலே உயிர்தெழுப்பப்படுகிறார்கள்.
ஆதாமின் காலத்திலிருந்து இரண்டாம் வருகை வரை ஒரு பெரிய எண்ணிக்கையுள்ள மரித்த துன்மார்க்கர் உயிரோடெழுப்பப்படுவார்கள். பார்ப்பதற்கு என்ன ஒரு காட்சி.



101

(வசனம்: வெளிப்படுத்தல் 20:8)
அவர்களுடைய தொகை கடற்கரை மணலத்தனையாயிருக்கும்.
வெளிப்படுத்தல் 20:8



102

அதே நேரத்தில், பரிசுத்த நகரம், புதிய எருசலேம், ஆயிரம் ஆண்டுகளின் முடிவில் கிறிஸ்துவோடும், இரட்சிக்கப்பட்டவர்களோடும் பூமிக்கு வரும் சாத்தானுடைய உக்கிர கோபத்தின் இலக்காக இந்த நகரம் காணப்படும்.




103

(வசனம்: வெளிப்படுத்தல் 20:7, 8)
அந்த ஆயிரம் வருஷம் முடியும்போது சாத்தான் தன் காவலிலிருந்து விடுதலையாகி.



104

பூமியின் நான்கு திசைகளிலுமுள்ள ஜாதிகளை மோசம்போக்கப் புறப்படுவான்.



105


அவர்களை யுத்தத்திற்குக் கூட்டிக் கொள்ளும்படிக்கும் புறப்படுவான்.
வெளிப்படுத்தல 20:7, 8.


106

இப்பொழுது சாத்தானும், அவனது தீய தூதர்களும் மறுபடியும் துன்மார்க்கரை வஞ்சிக்கப் புறப்படுகிறார்கள். அவன் ஒரு சிறுதுளி கூட மாறவில்லை.
இரட்சிக்கப்படாதோர் மறுபடியும் சாத்தானை தங்கள் தலைவனாக தெரிவு செய்கின்றனர். பிசாசு அவர்களை ஒரு மிகப்பெரிய சேனையாக்கி உத்வேகத்துடன் புதிய எருசலேமை எடுத்துக்கொள்ள வழிநடத்துகிறான்.


107

என்ன நடக்கும் என்பது பற்றி வேதம் கூறுவதைப் பார்ப்போம்.



108

(வசனம்: வெளிப்படுத்தல் 20:9)
அவர்கள் பூமியெங்கும் பரம்பி, பரிசுத்தவான்களுடைய பாளையத்தையும், பிரியமான நகரத்தையும் வளைந்து கொண்டார்கள்.



109

அப்பொழுது தேவனால் வானத்திலிருந்து அக்கினி இறங்கி அவர்களைப் பட்சித்துப் போட்டது.
வெளிப்படுத்தல் 20:9.

24  சங்கிலியில் கட்டப்பட்ட தீமையின் உருவம்


110

யுத்தம் முடிவடைந்தது! முற்றிலும் மாறுபட்டிருக்க வேண்டிய இது எப்படி வருத்தமான காரியமாகிவிட்டது. பிசாசின் முடிவு என்ன? வேதம் நமக்குச் சொல்கிறது.



111

(வசனம்: வெளிப்படுத்தல் 20:10, 14, 15)
அவர்களை மோசம் போக்கின பிசாசானவன் அக்கினியும், கந்தகமுமான கடலிலே தள்ளப்பட்டான்...



112

மரணமும், பாதாளமும் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டன. இது இரண்டாம் மரணம்.



113

ஜீவ புஸ்தகத்தில் எழுதப்பட்டவனாகக் காணப்படாதவனெவனோ அவன் அக்கினிக் கடலிலே தள்ளப்பட்டான்.
வெளிப்படுத்தல் 20:10, 14, 15.
பேதுரு இந்த அக்கினியை தரிசனத்தில் பார்த்து, எழுதியதாவது.



114

(வசனம்: 2 பேதுரு 3:10)
அப்பொழுது வானங்கள் மடமட என்று அகன்றுபோம், பூதங்கள் வெந்து உருகிப்போம்.



115

பூமியும், அதிலுள்ள கிரியைகளும் எரிந்து அழிந்துபோம்.
2 பேதுரு 3:10.
சாத்தான், அவனது தீய தூதர்கள் மற்றும் பாவிகள் அப்பொழுது என்றென்றுமாய் இல்லாமல் போவார்கள்.


116

நாம் அன்பாய் நேசிக்கிற நமது உறவினர்கள், நண்பர்கள் மற்றும் பழகினவர்கள் ஒரு வேளை என்றென்றுமாய் அழிந்து போகலாம்.
நிச்சயமாகவே, நாம் கண்ணீர் வடிப்போம். இதற்கான மாற்று வழி எப்படி?



117

(வசனம்: வெளிப்படுத்தல் 21:4)
ஆனால், நற்செய்தியானது. அவர்களுடைய கண்ணீர் யாவை யும் தேவன் துடைப்பார். இனி மரணமுமில்லை,



118

துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை; முந்தினவைகள் ஒழிந்து போயின. வெளிப்படுத்தல் 21:4.


119

இரட்சிக்கப்பட்டோருக்கு தேவன் வாக்களித்திருக்கும் மகிமையான நித்தியம்தான் என்னே!
தேவன் தன்னை நேசித்து, அவரை பின்பற்ற வாஞ்சையாயிருப்பவர்களுக்கு ஆயத்தம் செய்யும் பரலோகத்தின் மகிமையை யும், அழகை யும் மனிதத சிந்தை முழுமையாகப் புரிந்துகொள்ள முடியாது.
இதையெல்லாம் யோசிக்கும்போது, துன்மார்க்கர் சந்தோஷமாயிருந்திருக்கலாம். ஆனால் பலாபலனோ மிக உ யர்ந்தததாய்க் காணப்படுகிறது.
கிறிஸ்துவை தங்கள் இரட்சகராக, கர்த்தராக தெரிந்துகொள்ள அவர்கள் விருப்பமற்றிருந்தார்கள். என் நண்பனே, அந்த நாளிலே நீ எந்தக் குழுவில் இருப்பாய்?
அந்த நாள் வரும்போது, உங்கள் நிலையை மாற்றிக் கொள்ள அது மிகவும் தாமதமாயிருக்கும். இயேசு வரும்போது, ஆயிரம் ஆண்டுகளின் தொடக்கத்திலேயே அது மிகவும் தாமதமாயிருக்கும். திடீரென்று, எச்சரிக்கையின்றி நீ மரிப்பதும் கூட தாமதமாகவே இருக்கும்.
இன்றே இப்பொழுதே உன் இருதயத்தை யும், வாழ்க்கை முழுவதை யும் இயேசுவுக்குக் கொடுப்பதே, ஆயிரம் ஆண்டுகளின் முடிவில் முழு நிச்சயமாய் நீதிமான்களின் நடுவில் நீ இருப்பதற்கான ஒரே வழி.

24 □ சங்கிலியில் கட்டப்பட்ட தீமையின் உருவம்


120

உங்கள் வாழ்க்கையை இயேசுவுக்கு முற்றிலுமாய் கொடுக்க விரும்பினால், விசேஷ ஜெபத்திற்கு நீங்கள் முன்வரும்படி நான் அழைக்கிறேன்.
உங்கள் வாழ்க்கையிலே சில பிரச்சினை இருந்தால், இப்பொழுதே ஜெபத்திற்காக முன்வாருங்கள்.
நீங்கள் ஜெயங்கொள்ள வேண்டிய சில பழக்கம் இருக்குமானால், ஜெபத்திற்காக முன்வாருங்கள்.
இயேசு உங்களுக்கு செவி கொடுப்பார், பதில் அளிப்பார்.  நான் ஒரு நிமிடம் காத்திருப்பேன்.
வாருங்கள், இப்பொழுதே வாருங்கள்.

# 25 □ மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது



1

பரலோகம் மெய்யாகவே இருக்கிறது.


2

தன் வாழ்நாள் முழுவதும் பட்டணத்திலே வாழ்ந்த ஒரு சிறு பெண்ணைப் பற்றிய கதை சொல்லப்படுகிறது. வானத்தைப் பிரகாசிப்பிக்கும் அப்பட்டணத்தின் மின்னும் விளக்குகளால், நட்சத்திரங்களைப் பார்க்கும் ஒரு வாய்ப்பு அவளுக்குக் கிடைத்ததே கிடையாது. ஒரு கோடைகாலத்திலே, அவளுடைய தாய் அவளை விடுமுறைக்கு நாட்டுப்புறத்திற்குள் அழைத்துச் சென்றாள்.


3

சூரிய அஸ்தமனத்திற்கப் பின் மாலையிலே, இரவு வானத்திலே நட்சத்திரங்கள் வைரக் கற்கள் போல் மின்னின். சிறு பெண் ஆச்சர்யத்தோடு மேலே பார்த்தாள்.
நட்சத்திரம் நிறைந்த வானத்தின் கண்கூசச் செய்யும் அழகினால் அவள் உள்ளம் பொங்கி வழிந்தது.
அவள் மூச்சுத்திணறலோடு சொன்னதாவது, ஆஹா, அம்மா, தவறான பக்கத்திலே பரலோகம் மிக அழகாக இருக்குமானால், சரியான பக்கத்திலே அது எப்படி இருக்கும்?



4

(வீடியோ 5 வினாடிகள்)
நூற்றாண்டுகளாக் பரலோகம் என்ற தலைப்பு உலகம் முழுவதுமுள்ள ஆண்கள், பெண்கள் எல்லோருடைய கவனத்தையும் ஈர்த்திருக்கிறது. உண்மையிலேயே பரலோகம் எப்படியிருக்கும்?
அது இருக்கவும் செய்கிறதா?
அப்படியானால், அது எங்கேயிருக்கிற, அங்கே அது எதைப் போலிருக்கிறது?


5

சில மக்கள் பரலோகத்தை நம்புவதில்லை. மூன்று பரலோகங்கள் அல்லது ஏழு கூட உண்டு என்று மற்றவர்கள் சொல்கிறார்கள்.
நீ மரித்தவுடனே பரலோகம் போவாய் என்று சிலர் சொல்கிறார்கள்.

# 25 ▯ மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது


6

சிலர் சொல்கிறார்கள் - இல்லை, முதலிலே உத்தரிக்கும் ஸ்தலம் என்றழைக்கப்படும் இடத்திற்கு சென்று, பின்பு ஒருவேளை பரலோகம் செல்லலாம்.


7

பரலோகம் என்பது ஒரு உண்மையான இடமல்ல. ஆனால் அது ஒரு மனநிலை என்று சிலர் சொல்கிறார்கள்.


8

முடிவாக எல்லோருமே பரலோகத்தில் இருப்போம் என்று பலர் நம்புகிறார்கள். மிகக் கொஞ்ச ஜனங்களே அங்கே செல்வார்கள் என சிலர் சொல்கிறார்கள். மிகுதியான குழப்பம். அநேக கருத்துக்கள்.



9

(வீடியோ 7 வினாடிகள்)
பரலோகம் பற்றி பலவிதமான கருத்துக்கள் ஏன்? வேதம் இதைப் பற்றிப் பளிங்குபோல் தெளிவாக்கியிருக்கும் போது, இவ்விதமான வேறுபடும் கருத்துக்கள், மற்றும் கொள்கைகள் ஏன்?


10

உண்மையில், வேதத்தில் முழுவதும் பரலோகம் பற்றிய விவரங்கள் உள்ளது என்பது உங்களுக்குத் தெரியுமா? பரலோகம் எப்படிப்பட்டது என்பதை நாம் அறிய தேவன் ஆவலுள்ளவராயிருக்கிறார். பின்பு நாம் அங்கே இருப்பதற்கு தீர்மானிக்கலாமே. பரலோகம் என்பது தேவன் நம்மிடமிருந்து மறைத்திருக்கிற ஒரு ரகசிய ஸ்தலமல்ல.


11

அநேக பெரிய கட்டடங்களில், ஒவ்வொரு கதவுகளிலும் ஒவ்வொரு பூட்டுக்கும் பொருந்துகிற ஒரு சாவி உண்டு.



12

முதன்மை சாவி என்றழைக்கப்படும் அச்சாவி கட்டடத்தின் உரிமையாளரிடத்தில் இருக்கும். அது எல்லா கதவுகளுக்கும் பொருந்தும்.



13

பரலோகம் பற்றிய மா்மங்களைத் திறக்கிற
முதன்மையான சாவி தேவனிடம் உண்டு.
நாம் நம்புகிற செய்திகளின் பிறப்பிடமாகிய வேதமே
அந்த முதன்மையான திறவுகோல்.
அதிா்ஷ்டவசமாக, மனித கொள்கைகளையும்,
கருத்துக்களையும் நாம் சாா்ந்திருக்க வேண்டியதில்லை.
பரலோகம் பற்றிய மெய்யான சத்தியம் என்ன என்று
நாம் குழப்பமடைய வேண்டியதில்லை.




14

செய்திகளின் பிறப்பிடமாகிய இதுபற்றி
அப்போஸ்தலனாகிய பேதுரு எழுதுவதாவது.



15

(வசனம் 2 பேதுரு 1:19)
அதிக உறுதியான தீா்க்கதரிசன வசனம் நமக்கு
உண்டு. பொழுது விடிந்து விடிவெள்ளி உங்கள்
இருதயங்களில்



16

உதிக்குமளவும் இருளுள்ள ஸ்தலத்திலே பிரகாசிக்கிற
விளக்கைப் போன்ற அவ்வசனத்தைக் கவனித்திருப்பது
நாலமாயிருகக்கும்.
2 பேதுரு 1:19.



17

தேவன் தன் வாா்த்தையில் வெளிப்படுத்தியிருக்கிறாா்.
பரலோகம் எங்கே இருக்கும்?
பரலோகம் எதைப்போல் இருக்கும்?
அதன் தலைநகா் எங்கே இருக்கும்?
மக்கள் அங்கே என்ன செய்வாா்கள்?
மக்கள் அங்கே எப்படி இருப்பாா்கள்?
இரட்சிக்கப்பட்டவா்கள் எங்கே வாழ்வாா்கள்?
தலைநகரம் எதற்கு ஒத்திருக்கும்?



18

தேவன் தன் பின்னடியாா்களுக்கு ஆயத்தம்
செய்திருக்கிற மிக உண்மையான எதிா்காலம் பற்றி
தேவனுடைய முதன்மை திறவுகோலாகிய வேதத்தை
எடுத்து நாம் இப்பொழுது கண்டுபிடிப்போம்.

25  மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது

# 25 மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது


19

வேதத்தின் கடைசி புத்தகமாகிய, வெளிப்படுத்தலிலே, எதிர்காலம் பற்றிய படத்தைத் தேவன் தாமே யோவானுக்கு வெளிப்படுத்தியிருக்கிறார். யோவான் தான் பார்த்ததை விளக்குகிறார்.



20

(வசனம் வெளிப்படுத்தல் 21:1, 2)
பின்பு நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன். முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்து போயின.



21

சமுத்திரமும் இல்லாமற்போயிற்று



22

யோவானாகிய நான், புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரத்தை தேவனிடத்தினின்று பரலோகத்தை விட்டு இறங்கிவரக் கண்டேன்.



23

அது தன் புருஷனுக்காக அலங்கரிக்கப்பட்ட மணவாட்டியைப் போல ஆயத்தமாக்கப்பட்டிருந்தது. வெளிப்படுத்தல் 21:1,2.


24

மணவாட்டி தன் மணநாளுக்காக ஆயத்தமாவது போன்ற சில காட்சிகள் அப்படிப்பட்ட சந்தோஷத்தையும், அழகையும் அளிக்கின்றன.


25

இந்தப் பரலோக இல்லம் ஏதோ யோவான் மட்டும் தான் பார்த்தது கிடையாது. யுகங்கள் நெடுகிலும் எல்லா தேவனுடைய தீர்க்கதரிசிகளும் இதுபற்றி அறிந்திருக்கிறார்கள். கவனியுங்கள்.



26

(வசனம் அப்போஸ்தலர் 3:20, 21)
உங்களுக்கு முன்னே பிரசங்கிகப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும்படிக்கும்,

# 25 □ மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது





27

உலகத்தோற்ற முதல் தேவன் தம்முடைய பரிசுத்த தீர்க்கதரிசிகள் எல்லாருடைய வாக்கினாலும் உரைத்தவைகள்



28

எல்லாம் நிறைவெறித் தீருங்காலங்கல் வருமளவும் பரலோகம் அவரை ஏற்றுக்கொள்ள வேண்டும். அப்போஸ்தலவர் 3:20, 21.




29


மீண்டும் எதை தேவன் பழைய நிலைக்கு கொண்டு வரப்போகின்றார்? ஆதாம், ஏவாள் இழந்த எல்லாவற்றையும் தேவன் மீண்டும் பழைய நிலைக்குக் கொண்டுவரப் போகிறார்.
பூமி சிருஷ்டிகரின் கரங்களிலிருந்து வந்தபோது, வர்ணனைக்கும் அப்பால் மகிமையாக, பூரணமாக, அழகாக இருந்தது.


30

தேவன் தாமே ஏதேன் தோட்டமாகிய ஆதாம் ஏவாளின் இல்லத்தை ஒரு பரலோகமாக வடிவமைத்து அலங்கரித்திருந்தார்.
அவர்களுக்கு பூமியின் மீது ஆளுகையும் அவர் கொடுத்திருந்தார்.


31

அவர்கள் பரிபூரண ஆரோக்கியம், அன்பு, மகிழ்ச்சி, சந்தோஷம் மற்றும் தேவனுடன் முகமுகமான ஐக்கியம் கொண்டிருந்தார்கள். எல்லாமே சமாதானமாக, இசைவாக இருந்தது. தேவனுடைய ஆலோசனைகளுக்கு கீழ்ப்படிய அவர்கள் தெரிவு செய்தால் அவர்கள் ஒருபோதும் வியாதிப்படுவதில்லை. மரணமடைவதுமில்லை.


32

அவருடைய போதனைகள் என்னவென்றால், ஏதேன் தோட்டத்தில் இருந்த தடை செய்யப்பட்ட விருட்சத்தின் கனியைப் புசியாதே, புசித்தால் நீ மரிப்பாய்.

# 25 மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது


33

ஆனால் அவர்கள் அந்த மரத்திலிருந்து புசிக்கத் தெரிவு செய்தனர். அவர்கள் அன்பும், அக்கறையும் கொண்ட தேவனுக்கு செவிகொடுப்பதைவிட்டு, சாத்தான் என்னப்பட்ட கொடூரமும், வஞ்சிக்கும் தன்மையுள்ள கலகக்கார தூதனுக்கு செவி கொடுத்தனர்.


34

அதன்பின், தங்கள் வாழ்க்கையிலேயே முதன்முதலாக, வெட்கி, பயந்து, குற்ற உணர்வடைந்தனர். கோளமாகிய பூமியின் சரித்திரத்தில் அது ஒரு மிகவும் துக்ககரமான நாள். அவர்களுடைய கீழ்ப்படியாமையால், அவர்கள் எல்லாவற்றையும் இழந்தனர். அவர்களுடைய தோட்ட வீடு, பூமியின் ஆதிக்கம், ஜீவ விருட்சத்தின் மேல் அதிகாரம் - இவற்றையும் இழந்தனர். ஜீவ விருட்சத்திலிருந்து புசிக்க முடியாமையால், அவர்கள் முடிவிலே மரிக்க வேண்டும்.


35

நித்ய ஜீவனை அவர்கள் நீடித்துப் பெற முடியவில்லை. அவர்கள் மகிழ்ச்சி, அன்பு மற்றும் சிருஷ்டிகரோடுள்ள ஐக்கியம் முடிவடைந்தது. நமது பரிபூரண உலகம் பாவத்தின் சாபத்தால் கறைபடிந்தது. பூமி ஒரு துக்கத்தின், வேதனையின், வியாதியின் மற்றும் மரணத்தின் ஸ்தலமாக மாறியது. ஒரு போதும் எஜமான்களல்ல, ஆதாமும், ஏவாளும் அடிமைகளாக மாறினர்.



36

(வசனம் ரோமர் 6:16)
பவுல் சொன்னார். எதற்குக் கீழ்படியும்படி உங்களை அடிமைகளாக ஒப்புக்கொடுக்கிறீர்களோ.



37

ஆனால் அன்பும், அக்கறையும் உள்ள தேவன் புரிந்து கொண்டார். சர்ப்பம் ஆதாமையும், ஏவாளையும் வஞ்சித்தது. தவறிழைத்த தமது பிள்ளைகளை நம்பிக்கையின்றிவிட முடியாத அளவுக்கு தேவன் அவர்களை அதிகமாக நேசித்தார்.

# 25 மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது



38

தோட்டத்தின் வாயிலிலே, ஒரு நாள் தமது குமாரனும், ஸ்திரியின் வித்துமானவர் வந்து மரித்து அவர்களை தேவனுடைய குடும்பத்தோடும், நித்திய ஜீவனுக்கென்றும் மறுபடியும் இணைப்பார் என்று ஆதாம், ஏவாளுக்கு வாக்களித்தார்.




39

(வசனம் ஆதியாகமம் 3:15)
உனக்கும் ஸ்திரீக்கும், உன் வித்துக்கும் அவள் வித்துக்கும் பகை உண்டாக்குவேன்.




40

அவர் உன் தலையை நசுக்குவார். நீ அவர் குதிங்காலை நசுக்குவாய். ஆதியாகமம் 3:15.




41

சந்ததிகள் கடந்து, மனிதர்கள் பூமியின் மேல் பெருகின போது, பாவமும் பெருகினது. மனித இனம் ஏறக்குறைய தேவனையும் அவரது வாக்குத்தத்தையும் மறந்து போனது.




42

(வசனம் ஆதியாகமம் 6:5)
ஜனங்கள் தீயவர்களாக, ஒழுக்கமற்றவர்களாக மாறினர். மனுஷனுடைய அக்கிரமம் பூமியிலே பெருகினது என்றும்.




43

அவன் இருதயத்து நினைவுகளின தோற்றமெல்லாம் நித்தமும் பொல்லாததே என்றும் கர்த்தர் கண்டு. ஆதியாகமம். 6:5.



44

பூமியிலே ஜீவனைக் காப்பதற்கு, ஜலப்பிரளயத்தால் துன்மார்க்கரை அழிப்பது தேவனுக்கு முடிவாக அவசியமாய்ப்பட்டது. எட்டுப்பேர் மாத்திரமே உயிர்பிழைத்தனர். பெரிய ஜலப்பிரலயத்திற்குப்பின் ஜனங்கள் மறுபடியும் கெட்டுப்போவதற்கு முன் அநேக சந்ததிகள் இல்லை.

# 25 மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது


45

பூமியிலே பரிசுத்த ஜாதியைப் பாதுகாப்பதற்காக, தேவன் ஆபிரகாமையும், அவன் குடும்பத்தையும் கல்தேயர்களின் இழிவான, விக்கிரகப்பட்டணமான ஊரிலிருந்து அழைத்தார். அந்தப் பட்டணத்தில் அவனுடைய குடும்பம் தங்கியிருந்தால் அவர்களும் கொடியவர்களாயிருப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை.



46

(வசனம் ஆதியாகமம் 12:1, 2)
கர்த்தர் ஆபிரகாமை நோக்கி, நீ உன் தேசத்தையும் உன் இனத்தையும், உன் தகப்பனுடைய வீட்டையும் விட்டுப்புறப்பட்டு, நான் உனக்குக் காண்பிக்கும் தேசத்துக்குப்போ.



47

நான் உன்னை பெரிய ஜாதியாக்கி, உன்னை ஆசீர்வதித்து, உன் பேரை பெருமைப்படுத்துவேன். நீ ஆசீர்வாதமாய் இருப்பாய்.
ஆதியாகமம் 12:1,2.


48

தன்னுடைய சொகுசான கல்தேய வீட்டை விட்டுவிட ஆபிரகாம் ஆசையாயிருந்தார். தான் எங்கே போகிறேன் என்பது அவருக்குத் தெரியாது. ஆனால், தேவன் தனக்காகக் கருவூலத்தில் வைத்திருப்பது பற்றிய ஒரு தெளிவான பார்வை அவருக்கு இருந்தது.



49

(வசனம்: எபிரேயர். 11:9, 10)
விசுவாசத்தினாலே அவன் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்தில் பரதேசியைப்போல சஞ்சரித்து.



50

அந்த வாக்குத்தத்திற்கு உடன் சுதந்தரராகிய ஈசாக்கோடும், யாக்கோபோடும் கூடாரங்களிலே குடியிருந்தான்.




51

ஏனெனில், தேவன் தாமே கட்டி உண்டாக்கின அஸ்திபாரங்களுள்ள நகரத்துக்கு அவன் காத்திருந்தான்.
எபிரேயர் 11:9, 10.
ஆதாம் ஏவாள் இழந்த எல்லாவற்றையும் ஆபிரகாமுக்கும், அவளுடைய பிள்ளைகளுக்கும் கொடுக்க தேவன் வாக்குக் கொடுத்தார்.


52

எல்லாக் காரியங்களும் பழைய நிலைக்கு திரும்புவதை சகல யுகங்களின் தீர்க்கதரிசிகளும் விசுவாசித்து, எதிர்நோக்கினர்.
வேதத்தின் விசுவாச வீரர்களை தேவன் பட்டியலிடுகிறார்.



53

எபிரேயர், அதிகாரம் 11. ஆபிரகாம், ஏனோக்கு, நோவா, ஆபேல், ஈசாக்கு, ராகாப், தாவீது மற்றும் சாமுவேல் ஆகியோர் விசுவாசித்த சில முக்கிய விசுவாச மக்கள் ஆவர். இந்த விசுவாச வீரர்கள் பற்றி வேதம் கூறுவதை கவனியுங்கள்.



54

(வசனம்: எபிரேயர் 11:13, 16)
இவர்களெல்லாம் வாக்குத்தத்தம் பண்ணப்பட்டவைகளை அடையாமல், தூரத்திலே அவைகளைக் கண்டு, நம்பி அணைத்துக் கொண்டு...



55

அதையல்ல. அதிலும் மேன்மையான பரம தேசத்தையே விரும்பினார்கள். ஆகையால் தேவன் அவர்களுடைய தேவன் என்னப்பட வெட்கப்படுகிறதில்லை.




56

அவர்களுக்கு ஒரு நகரத்தை ஆயத்தம் பண்ணினாரே.
எபிரேயர் 11:13, 16.


57

மேசியா பற்றி உரைக்கும் தீர்க்கதரிசிகளில் பெரியவரான ஏசாயா, தேவன் ஆயத்தமாக்கியிருக்கும் ஆதி நிலைக்கு ஏகுதல் பற்றிய வியப்பூட்டும் விளக்கத்தை நமக்குக் கொடுக்கிறார். தேவன் ஏசாயாவுக்கு வெளிப்படுத்தின காரியங்களை நாம் ஒரு பார்வையிடுவோம்.



58

(வசனம்: ஏசாயா 65:17)
இதோ, நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் சிருஷ்டிக்கிறேன்.



59

முந்தினவைகள் இனி நினைக்கப்படுவதுமில்லை. மனதிலே தோன்றுவதுமில்லை.
ஏசாயா 65:17.



60

(வசனம்: ஏசாயா 60:18)
இனிக்கொடுமை உன் தேசத்திலும், அழிவும், நாசமும் உன் எல்லைகளிலும் கேட்கப்படமாட்டாது.



61

உன் மதில்களை இரட்சிப்பென்றும், உன் வாசல்களைத் துதியென்றும் சொல்லுவாய்.
ஏசாயா 60:18.



62

(வீடியோ 18 வினாடிகள்) சற்று யோசித்துப் பாருங்கள். அங்கே கொடுமையில்லை. சமாதானமும், இசைவும். நினைப்பதற்கே அதிசயமாயிருக்கிறதல்லவா? நம்மைக் காப்பதற்கும், பாதுகாப்பதற்கும் ஆயுதங்கள் அங்கே அவசியமில்லை. கெடுதல்காரர்கள், திருடர்கள் இல்லை. தாக்குவது குறித்தும், கொள்ளையடிப்பது குறித்தும் கவலையின்றி பொன்வீதிகளில் நடப்பது அதிசயமானதாயிருக்காதா? ஆனால் தீர்க்கதரிசி நமக்கு சொல்ல முடிந்தது இவைகள் மாத்திரமல்ல.



63

(வசனம்: ஏசாயா 11:6)
ஓனாய் ஆட்டு குட்டியோடே தங்கும். புலி வெள்ளாட்டுக் குட்டியோடே படுத்துக் கொள்ளும்...



64

ஒரு சிறு பையன் அவைகளை நடத்துவான்.
ஏசாயா 11:6.


65

இப்பூமி இறுதியாக பழைய அழகு நிலைக்கு கொண்டுவரப்படுவதைக் குறித்து வேதம் என்ன சொல்கிறது எனப்பார்ப்போம்.



66

(வசனம்: ஏசாயா 33:24)
வியாதிப்பட்டிருக்கிறேன் என்று நகரவாசிகள் சொல்வதில்லை.
ஏசாயா 33:24.
மாரடைப்பு இல்லை. புற்றுநோய் இல்லை. ஒவ்வாமை இல்லை. நித்தியமும் பூரணமான சுகாதாரம், இது ஒரு பெரிய நற்செய்தி இல்லையா?



67

(வசனம்: ஏசாயா 35:5)
அப்பொழுது குருடரின் கண்கள் திறக்கப்படும்... ஏசாயா 35:5.
குருடன் கண் திறந்தவுடனே முதலாவது பார்ப்பது ஏசுவின் முகம்தான். குருடராகயிருப்பவர்களுக்கு அது என்ன ஒரு ஆனந்தமான நாள்.



68

(வசனம்: ஏசாயா 35:5, 6)
... செவிடரின் செவிகள் திறவுண்டுபோம்.
ஏசாயா 35:5.



69

முடவன் மானைபோல துள்ளி குதிப்பான்... ஏசாயா 35:6. சக்கர நாற்காலி இருக்காது. எல்லாருடைய சரீரமும் பூரணமாயிருக்கும்.



70

(வசனம்: ஏசாயா 35:6)
...ஊமையன் நாவும் கெம்பீரிக்கும்.
ஏசாயா 35:6. பேசுவது மட்டும் அல்ல பாடுவார்கள். அந்த நாள் மகிழ்ச்சியான நாள். இதைக் காட்டிலும் அதிக ஆச்சரியமான செய்தி இதோ.



71

(வசனம்: ஏசாயா 35:1)
வனாந்தரமும் வறண்ட நிலமும் மகிழ்ந்து, கடுவெளி களித்து, புஷ்பத்தை போலச் செழிக்கும். ஏசாயா 35:1.

25  மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது

# 25  மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது



72

(வசனம்: ஏசாயா 65:21, 22)
அவர்கள் வீடுகளைக் கட்டி அவைகளில் குடியிருப்பார்கள். திராட்சை தோட்டங்களை நாட்டிஈ, அவைகளின் கனியைப் புசிப்பார்கள்.



73

அவர்கள் கட்டுகிறதும், வேறொருவர் குடியிருக்கிறதும், அவர்கள் நாட்டுகிறதும், வேறொருவர் கனி புசிக்கிறதும் இல்லை.



74

ஏனெனில் விருட்சத்தின் நாட்களைப்போல என் ஜனத்தின் நாட்களியிருக்கும். நான் தெரிந்து கொண்டவர்கள் தங்கள் கைகளின் கிரியைகளை நெடுநாளாய் அனுபவிப்பார்கள்.
ஏசாயா 65:21, 22


75

இது உண்மையாகவே பரலோகம் ஒரு இடமாகவும், மக்கள் உண்மையான காரியங்கள் செய்வதுமாக இருப்பார்கள் கூறுகிறதல்லவா? நமது உண்மையான பெயர்கள் அங்கிருக்கும், மக்கள் நம்மை அறிவர்.



76

(வசனம் ஏசாயா 66:22, 23)
நான் படைக்கப்போகிற புதிய வானமும் புதிய பூமியும் எனக்கு முன்பாக நிற்பது போல,



77

உங்கள் சந்ததியும் உங்கள் நாமமும் நிற்கும் என்று கர்த்தர் சொல்கிறார்.
ஏசாயா 66:22.



78

அப்பொழுது, மாதந்தோறும், ஓய்வுநாள் தோறும்



79

மாம்சமான யாவரும் எனக்கு முன்பாக தொழுது கொள்வார்கள் என்று கர்த்தர் சொல்கிறார். ஏசாயா 66:23. புதிய பூமியானது தேவனுக்கும், அவருடைய பிள்ளைகளுக்கும், மகிழ்ச்சியான, ஆனந்தமான இடமாக இருக்கும்.




80

ஏசாயா 35:10 கர்த்தரால் மீட்கப்பட்டவர்கள் திரும்பி, ஆனந்தக்களிப்புடன் பாடி சீயோனுக்கு வருவார்கள்.



81

நித்திய மகிழ்ச்சி அவர்கள் தலையின் மேல் இருக்கும், சந்தோஷமும் மகிழ்ச்சியும் அடைவார்கள். சஞ்சலமும் தவிப்பும் ஓடிப்போம்.
ஏசாயா 35:10.


82

மீட்கப்பட்டவர் ஒவ்வொரு ஓய்வுநாளிலும் பரிசுத்த நகரத்துக்கு மகிழ்ச்சியோடு பாடி தேவனை தொழவரும் வேளை, சந்தோஷமான கொண்டாட்டமாக இருக்கும்.


83

இயேசு சொன்னார். நமக்காக ஒரு மாளிகையை கட்டுகிறார். அவைகளில் நாம் மகிழ்வோம். ஆனால் ஏசாயா சொல்கிறார். நாமும் வீடுகளை கட்டுவோம். நாம் கட்டும் வீடு கிராம புறத்தில் இருக்கலாம். ஒவ்வொரு ஓய்வு நாளிலும் நாம் பட்டணத்திலுள்ள மாளிகைக்கு சென்று அதை பயன்படுத்துவோம்.



84

(வீடியோ 7 வினாடிகள்)
பரலோகைப் பற்றி வேதம் காட்டும் படம் தெளிவாக இருக்கிறது. தேவன் புதிய வானத்தையும் புதிய பூமியையும் படைப்பார். புதிய எருசலேமாகிய பரிசுத்த நகரம் பரலோகத்தை விட்டு இறங்கி வருகிறது. கலகத்தில் ஈடுபட்ட இந்த பூமி பாவத்தால் விழுந்துபோன இது, மீண்டும் அண்டசராசரத்தின் மையமாக மாறும். இந்த பூமி தான் மீட்கப்பட்டோரின் வீடாக இருக்கும். இது நம்மை ஆச்சரியப்பட வைக்கும். இயேசு இதைக் குறித்து சொல்லும் போது.

25 □ மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது

# 25 □ மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது



85

(வசனம் மத்தேயு 5:5)
சாந்த குணமுள்ளவர்கள் பாக்கியவான்கள். அவர்கள் பூமியை சுதந்தரித்துக் கொள்வார்கள். மத்தேயு 5:5. தேவன் இந்த பூமியை பழைய பரிபூரண நிலைக்கு கொண்டு வரப்போகிறார். எவ்வளவு மகிமையானதாக இந்த புதிய பூமி இருக்கப் போகிறது.

---



86

ஒருவேளை கிறிஸ்து பரமேறிப் போவதற்கு சற்றுமுன், தன் அப்போஸ்தலர்களுக்கும் பின்னடியார்களுக்கும் கொடுத்த ஆச்சரியமான வாக்குறுதிகள், உங்கள் ஞாபகத்திற்கு வரலாம்.

---



87

(மத்தேயு 14:1-3)
உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக, தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள். என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்.

---



88

என் பிதாவின் வீட்டில் அநேக வாசஸ்தலங்கள் உண்டு. அப்படியில்லாதிருந்தால் நான் உங்களுக்குச் சொல்லியிருப்பேன்...

---



89

நான் போய் உங்களுக்காக ஸ்தலத்தை ஆயத்தம்பண்ணினபின்பு, நான் இருக்கும் இடத்தில் நீங்களும் இருக்கும்படி,

---



90

நான் மறுபடியும் வந்து உங்களை என்னிடத்தில் சேர்த்துக்கொள்வேன்.
யோவான் 14:1-3.



91

மத்தேயு. 6:10.
இயேசு சீசர்களுக்குக் கற்றுக்கொடுத்த ஜெபத்தில், சொல்கிறார்.
உம்முடைய ராஜியம் வருவதாக, உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுவது போலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக. மத்தேயு. 6:10. இங்கு இயேசு எல்லாக் காரியங்களும் பழைய நிலைக்கு வருவதற்கு ஜெபிக்கும்படி கூறுகிறார்.


92

பத்மு தீவில் யோவான் தரிசனத்தில் கண்ட அந்த மகிமையான பட்டணத்தைப் பற்றி பார்ப்போம். அந்தப் பட்டணத்தைப் பற்றி விவரித்து சொல்ல, வார்த்தைகள் கிடைப்பது கடினமாகப் படுகிறது போல் தோன்றுகிறது. வேதாகமம் இப்படியாக சொல்கிறது.



93

1 கொரிந்தியர் 2:9.
தேவன் தம்மில் அன்பு கூறுகிறவர்களுக்கு ஆயத்தம் பண்ணினவைகளை,



94

...கண் காணவுமில்லை. காது கேட்கவுமில்லை. அவைகள் மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை.
1 கொரிந்தியர் 2:9. ஒரு நிமிடம் பொறுங்கள். நிறைய பேர் இதற்கு அடுத்த வசனத்தை கவனிக்க தவறுகின்றனர்.



95

(வசனம் 1 கொரிந்தியர் 2:10)
நமக்கோ தேவன் அவைகளைத் தமது ஆவியினாலே வெளிப்படுத்தினார்....


96

தேவன் இவைகளை தமது பரிசுத்த ஆவியினால், தன் தீர்க்கதரிசிகளுக்கு வெளிப்படுத்தினார்.
அவர்கள், இவைகளை நமக்காக எழுதினார். ஆனால் சந்தேகத்திற்கு இடமின்றி, அவைகளில் பாதி கூட சொல்லப்படவில்லை.

# 25 மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது


97

நண்பர்களே, இவ்விதமாகத் தானே யோவான், ஏசாயா, மற்ற எல்லா தீர்க்கதரிசிகளும், அவைகளில் பாதி கூட சொல்லவில்லை என்பது முழு உண்மை. யோவான் பரிசுத்த நகரைக் குறித்து விவரிக்க முயன்ற போது அவை நம்பமுடியாத கட்டுக்கதைப் போல் தோன்றியது. ஆனால் நமக்கு, தேவ வார்த்தை இருக்கிறது. இதோ யோவான் கண்டவை.



98

(வீடியோ 11 மனித்துளிகள்) யோவான் சொல்கிறார். நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன். சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. பின்பு பரிசுத்த நகரம் தேவனிடத்திலிருந்து பரலோகத்தைவிட்டு இறங்கி வரக்கண்டேன். பின்பு பட்டணத்தைப் பற்றி எல்லாவற்றையும் கூறுகிறார்.



99

(வசனம்: வெளிப்படுத்தல் 21:1-3, 11, 17, 21) யோவான் சொல்கிறார். நான் புதிய வானத்தையும், புதிய பூமியையும் கண்டேன். முந்தின வானமும் முந்தின பூமியும் ஒழிந்துபோயின; சமுத்திரமும் இல்லாமற் போயிற்று. வெளிப்படுத்தல் 21:1.




100

அது தன் மணவாளனுக்காக அலங்கரிக்கப்பட்டது போல் இருந்தது.
வெளிப்படுத்தல் 21:2.



101

மேலும் பரலோகத்திலிருந்து உண்டான ஒரு பெருஞ்சத்தத்தைக் கேட்டேன். அது, இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது.



102

இதோ மனுஷர்களிடத்திலே தேவனுடைய வாசஸ்தலமிருக்கிறது. அவர்களிடத்திலே அவர் வாசமாயிருப்பார். அவர்களும் அவருடைய ஜனமாயிருப்பார்கள். தேவன்தாமே அவர்களோடுகூட இருந்து அவர்களுடைய தேவனாயிருப்பார்.
வெளிப்படுத்தல் 21:3.



103

அதன் பிரகாசம் மிகவும் விலையுயர்ந்த இரத்தினக்கல்லைப்போலவும், பளிங்கொளியுள்ள வச்சிரக்கல்லைப்போலவும் இருந்தது. வெளிப்படுத்தல் 21:11.



104

அவன் அதன் மதிலை அளந்தான். அது 144 முழம். (66 மீட்டர்). வசனம் 17.



105

பன்னிரண்டு வாசல்களும், பன்னிரண்டு முத்துக்களாயயிருந்தன! (வசனம் 21).



106

(வசனம்: வெளிப்படுத்தல் 21:12, 21, 23)
பெரியதும் உயரமுமான மதிலும் ... அவைகளின் மேல் இஸ்ரவேல் சந்ததியாராகிய பன்னிரண்டு கோத்திரத்தாருடைய நாமங்களும் எழுதப்பட்டிருந்தது. (வசனம் 12).




107

.... நகரத்தின் வீதி தெளிவுள்ள பளிங்குபோலச் சுத்தப்பொன்னாயிருந்தது. (வசனம் 21).




108

நகரத்திற்கு வெளிச்சம் கொடுக்கச் சூரியனும் சந்திரனும் அதற்கு வேண்டுவதில்லை. தேவனுடைய மகிமையே அதை பிரகாசிப்பித்தது. ஆட்டுக்குட்டியானவரே அதற்கு விளக்கு. (வசனம் 23).



109

(வசனம்: வெளிப்படுத்தல் 22:1, 2, 5)
... பளிங்கைப்போல தெளிவான ஜீவத்தண்ணீருள்ள சுத்தமான நதி தேவனும், ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனத்திலிருந்து புறப்பட்டு வந்தது.



110

நதியின் இரண்டு கரையிலும் பன்னிரண்டுவிதமான கனிகளைத்தரும் ஜீவ விருட்சம் இருந்தது.

# 25 மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது



111

அங்கே, இராக்காலமிராது. வெளிப்படுத்தல் 22:5. தேவனுடைய சிங்காசனமும், ஆட்டுக்குட்டியானவரும், புதிய எருசலேமாகிய தலைநகரில் இருக்கும்.



112

(வசனம்: வெளிப்படுத்தல் 22:3)
இனி ஒரு சாபமுமிராது. தேவனும் ஆட்டுக்குட்டியானவரும் இருக்கிற சிங்காசனம் அதிலிருக்கும்.
வெளிப்படுத்தல் 22:3.
மிக ஆச்சரியமான பரிசு ஒன்று அங்கு இருக்கும்.
வெளிப்படுத்தல் 21:4.




113

(வசனம்: வெளிப்படுத்தல் 21:4)
அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார். இனி மரணமும் இல்லை. துக்கமுமில்லை.




114

அலறுதலுமில்லை. வருத்தமுமில்லை. முந்தினவைகள் ஒழிந்துபோயின. வெளிப்படுத்தல் 21:4. அது அவ்வளவு பெரிய பட்டணமாக இருக்குமா என் நீங்கள் ஆச்சரியப்படலாம்.



115

(வசனம்: வெளிப்படுத்தல் 21:16)
யோவான் பட்டணத்தின் அளவுகள் குறித்து துல்லியமாக கூறுகிறார். அந்த நகரம் சதுரமாயிருந்தது. அதின் அகலமும், நீளமும் சமமாயிருந்தது.



116

அவன் (தூதன்) அந்தக் கோலினால் நகரத்தை அளந்தான். அது பன்னிராயிரம் ஸ்தாதி அளவாயிருந்தது.
வெளிப்படுத்தல் 21:16.



117

(ஒரு பர்லாங் என்பது ஆங்கில மைலில் 1-8 பங்கு 12000 ஸ்தாதி என்பது 2400 கிலோமீட்டர்) பழங்கால பட்டணங்கள், அதின் மதில் சுவர்களைச் சுற்றியே அளக்கப்பட்டது. எனவே இந்தப் பட்டணம் சுமார் 600 கிலோமீட்டர், அல்லது ஒருபக்கம் 375 மைல் கொண்டதாக இருந்தது. இது இரட்சிக்கப்பட்டவர்களுக்கு போதுமானதாக இருக்குமா? என நீங்கள் ஆச்சரிப்படலாம்.


118

டோக்கியோ பட்டணம் 35,00,00,000 மக்களைக் கொண்டது.



119

பெரிய நியூயார்க் பட்டணம் 20,00,00,000 ஜனங்களை கொண்டதாக உள்ளது.


120

சியோல் பட்டணமும், மெக்சிக்கோ பட்டணமும் ஏறக்குறைய இதே 20,00,00,000 ஜனங்களைக் கொண்டது.



121

ஒரு கணக்கிடுவோன், புதிய எருசலேம் ஏறக்குறைய 2,00,000 ஜனங்களை உள்ளடக்கும் எனக் கணக்கிட்டுள்ளார். இன்னொருவிதத்தில் சொல்வது என்றால், யாரெல்லாம் அங்கு இருக்க வேண்டும் என நினைக்கிறார்களோ, அவர்களுக்கு எல்லாம் அங்கு இடம் இருக்கும். சரி, அங்கு நம்மை எது சுறுசுறுப்பாக வைக்கும்.



122

(வீடியோ 15 வினாடிகள்)
குற்றமில்லை. வியாதியில்லை. பசியில்லை. வியாதியில்லை. சமாதானமும், ஒருங்கிணைப்பும் எப்போதும் இருக்கும்.
அங்கு நிறைய காரியங்களை செய்வோம் எனத் தோன்றுகிறது. நமக்கு விருப்பமான வீட்டை கிராமப்புறத்தில் கட்டி, நம் சொந்த தோட்டத்தை உருவாக்குவோம்.

25 □ மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது

# 25 மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது


123

சிருஷ்டிப்பின் இரகசியத்தை நமக்கு சொல்ல இயேசு அங்கு இருப்பார். எப்போதும் புது புது காரியங்களை கற்றுக்கொள்வோம். நாம் நினைக்கும் போதெல்லாம் பிரயாணம் செய்யலாம்.


124

நம்முடைய நண்பர்களோடும், அன்பானவர்களோடும் செலவிட நேரம் இருக்கும். ஒவ்வொரு ஓய்வு நாளிலும் தேவனை ஸ்தோத்தரித்து, பாடி, தூதர்களோடும், தேவனோடும் மகிழ்ந்திருப்போம். தேவனோடு தொடர்பு கொள்ளும் விசேஷ நேரம் அது. எப்படி நிச்சயமாக நாம் அங்கு இருக்க முடியும் என நீங்கள் கேட்கலாம். பதில் மிக எளிது. வேதம், நம் தலையாய திறவுகோல் சொல்கிறது.



125

(வசனம் கலாத்தியர் 3:29)
நீங்கள் கிறிஸ்துவினுடையவர்களானால் ஆபிரகாமின் சந்ததியாராயும், வாக்குத்தத்தின்படியே சுதந்தராயும் இருக்கிறீர்கள்.
கலாத்தியர் 3:29.


126

வேறொரு விதமாக சொல்வது என்றால் இயேசுவை நம் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ளும் போது, ஆபிரகாமுக்கு தேவன் கொடுத்த வாக்குத்தத்தங்கள் நம்முஜடயது ஆகிறது. வேதத்தைப் படிக்கும் போது இவை நம்மை உற்சாகம் கொள்ள வைக்கின்றன.



127

முதல் மூன்று அதிகாரங்கள், தேவன் எப்படி இந்த உலகை சிருஷ்டித்தார். எப்படி ஆதாம் ஏவாளுக்குரிய, பரலோக வீட்டை உருவாக்கினார் என்று சொல்கிறது. ஆனால் ஆதாம் ஏவாள் அதை இழந்தனர்.



128

வேதத்தின் கடைசி மூன்று அதிகாரங்கள் ஆதாம் ஏவாள் இழந்து போனதை மீண்டும் எப்படி தேவன் திரும்ப கொண்டு வருகிறார் என்ற திட்டத்தை முன் வைக்கிறது. நாளைய அழகான, நம்முடைய கற்பனை எல்லாம் நிஜமாகும் வேளை.


129

அநேக வருடங்களுக்கு முன், ஆடுகளை ஏற்றிச் செல்லும் ஒரு படகு. வட கடலில் மூடு பனியில் சிக்கி தவித்தது. மூன்று நாட்களாக அந்தப்படகு இங்கும் அங்குமாக அலை மோதியது. படகில் இருந்த ஆடுகள் வைக்கோல் தின்ன மறுத்தன. படகின் ஒரு மூலைக்கு சென்று கத்த ஆரம்பித்தன. தொடர்ந்து அவை பே, பே, பே என்று கத்திக் கொண்டிருந்தன. கப்பல் தலைவனும் அதில் உள்ளவர்களும் இதைக் கண்டு ஆச்சரியப்பட்டனர். ஏன் இப்படிச் செய்கின்றன என வியந்தனர்? சீக்கிரமே மூடுபனி நீங்கியது. படகு ஸ்காட்டிஸ் துறையின் கரை வந்து சேர்ந்தது. ஆடுகள் ஸ்காட்டிஸ் நிலங்களில் இருந்து வந்த புதிய புல்லின் வாசனையை உணர்ந்ததால் தான் அவைகள் தங்கள் எஜமான்கள் கொடுத்த பழைய, அழுகிப் போன புல்லை உண்ண மறுத்தன.



130

(வீடியோ 7 வினாடிகள்) பரலோக வாசனையை நாம் முகர்ந்தால் நாம் முதலிடம் கொடுக்கும் காரியங்களை சரி செய்து கொள்வோம். நித்தியத்தின் வாசனையை நாம் உணர்ந்தால், மற்றவை எல்லாம் அதனதன் இடத்தில் வந்து சேரும். நாம் மற்ற தேசத்தை வாஞ்சிப்போம். நித்தியத்தின் கரையில் சேர நாம் விரும்புவோம். பரலோகத்தை குறித்ததான, வீட்டுக்கவலை வருகிறதா? அங்கு இருக்க வேண்டும் என விரும்புகிறீர்களா? கிறிஸ்துவோடு என்றும் வாழும் வாஞ்சை உங்கள் உள்ளத்தில் உண்டா? ஆம், ஆண்டவரே என்று சொல்ல விரும்புகிறீர்களா? உம்மோடு இருக்க வேண்டும் என்றென்றும் உம்மோடு இருக்க விரும்புகிறேன் என்று சொல்ல விரும்புகிறீர்களா?



131

(வெளிப்படுத்தல் 22:17)
தேவன் அந்த அழைப்பை உங்களுக்கு தருகிறார். ஆவியும் மணவாட்டியும் வா என்கிறார்கள். வெளிப்படுத்தல் 22:17.


132

அதை அணைத்துவிடாதே. நம்ப முடியாத தேவனின் நாளைய காரியத்தில் நீயும் ஒரு பாகமாக முடியும். அவரை உன் இருதயத்தில் வரவழை. பரலோகம் உன் வீடாகும்.

25  மிகச்சிறந்தது இனிதான் வர இருக்கிறது